நளவெண்பா

மூலமும் உரையும்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்,
அடையாறு, சென்னை-20.

சார்வரிஷ சித்திரைமீ

1980

T03193
R001H03

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடு 20.

ஆ

புகழேந்திப் புலவர்

இயற்றியருளிய

நளவெண்பா

மூலமும் உரையும்

★

பதிப்பாசிரியர்:

L. ஸ்ரீநிவாஸ ஐயர்

★

மகாமகோபாத்யாய டாக்டர்,

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்,

அடையாறு 1960 சென்னை.

விலை ரூ. 5.

சந்தியம் பிரஸ் (பிராஞ்ச்), 65, திருப்பள்ளித் தெரு, சென்னை-1

பொருளடக்கம்

		பக்கம்.
1.	நான்முகம்	v
2.	உரையில் எடுத்தாண்ட நூற்பெயர்களின் முதற் குறிப்பகராதி	ix
3.	நூல்	
	(1) பாயிரம்	1
	(2) சுயம்வரகாண்டம்	14
	(3) கலிதொடர்காண்டம்	151
	(4) கலிநீங்கு காண்டம்	279
	(5) பின்னுரை	349
4.	செய்யுள் முதற்குறிப்பகராதி	351
5.	அரும்பதம் முதலியவற்றின் அகராதி	356

நூன் முகம்.

நாமம் பலசொல்லி நாராய ணவென்று
நாமங்கை யாற்றெழுதும் நன்னெஞ்சே - வாமருவி
மண்ணுலக முண்டுமிழ்ந்த வண்டமிழையுந் தண்டுழாய்க்
கண்ணனையே காண்கநங் கண்.

(மூன்றாந் திருவந்தாதி: 8.)

நளவெண்பா என்னும் இந்நூல், 'வெண்பாவிற் புகழேந்தி' யென்று பாராட்டப் பெறும் புலவர் பெருந்தகையால் தமிழில் ஏறக் குறைய நானூறு வெண்பாக்களால் ஆக்கப்பெற்ற ஓர் அருந்தமிழ்க் காப்பிய மாகும். இது, 'காவிரி கீர்த்தி யாளன்' என்றும், 'காவிரி என்னைத் தப்பாக் கருணையான்' என்றும் கவிசார்வ பௌமரான ஸ்ரீவில்லிபுத்தூர் ஆழ்வார் அவர்களால் தம் மகாபாரத நூலிற் சிறப் பிக்கப்பெற்ற நளச் சக்கரவர்த்தியின் தெய்வத் திருக்கதையைச் சொற்சுவை பொருட் சுவை ததும்ப, சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் முதலான அழகுகள் பத்தும் அமையப்பெற்று, ஓதற் கெளிதாய், உணர்தற் கரிதாகித் திட்ப நுட்பங்கள் செறிந்த செஞ் சொற் கவியின்பம் தழையத் திகழும் ஓர் அருந்தமிழ் விருந்தாம் என்பது, நற்றமிழ்த் துறை போகிய நல்லோர் அனைவரும் நன் குணர்ந்த உண்மையே யாகும்.

இக் காப்பியத் தலைவனான நளனே, இராமாவதார காலத்திற்கும் முற்பட்டதும், துவாபரயுகத் தொடக்கத்ததுமான மிகப் புராதன காலத்தில், உலகம் முழுதும் ஒரு தனிச் செங்கோலோச்சி அறம் வளர்த்த அரசர்க்கரசனும், ஆட்வர் திலகனும், புண்ய ச்லோகிகளுள் முன் வைத்துப் பாராட்டப் பெறுபவனும் ஆவன். இச்சரிதத் தலைவியான தமயந்தியோ, 'ஆளுமே பெண்மை யரசு' (34.) என்ற படி, ஒப்புயர்வு இல்லாப் பெண்ணலங் கனிந்து திகழப்பெற்ற தனிப் பெருந் தகைமை வாய்ந்தவள்; அறக்கற்பின் அணிகலமாம் மிதிலை நாடியார் ஸ்ரீ சிதாப் பிராட்டியாரே பாராட்டிப் பரவிய பெருஞ் சிறப் பிற்கு உரியவள்; உலக சரித்திரத்தில் எங்கும் என்றுங் காணப் பெறுத, பொறுமைக்குங் கற்புக்கும் உறைவிட மானவள். ஆதலின், இக்காப்பியத் தலைவன் தலைவியர் ஆகிய இருவரும் ஆடவர் மகளிர் என்னும் இருதிறத்தார்க்கும் எடுத்துக் காட்டாய் அமைந்த அச்சு என்பதே பொருத்தமாகும். இவ்வரிய தலைவன் தலைவியரைக்

கொண்ட இக்காப்பியத்திற்கு முதனூல், ஸ்ரீவேத் வியாஸ் முனிவர் அருளிய, மறைநாலோ டைந்தென்று நிலை நிற்கும் வடமொழி மஹா பாரதத்தின் வன பருவத்திலுள்ள, நளோபாக்யானம் என்னும் பகுதியே ஆகுமென்பது, இந்நூல் தேற்றுவாயாய் அமைந்துள்ள பாயிரத்தால் அறியலாம்.

இந்நூல் ஆசிரியரோ, தம் இயற்பெயரை உலகம் அறியாது மறந்து போகு நிலையில், இக்காப்பியச் சிறப்பால் நல்லறிவாளர் இவர்க்குச் சூட்டிய புகழேந்தி என்னும் புகழ்ப் பெயரையே குன்றின் மேல் இட்ட விளக்காய் என்றும் சுடரொளி பரப்பக்கொண்ட தெவிட்டா வின்பச் செந்தமிழ்ப் பாவாணர் ஆவர். இவர் திருமாலைத் தாம் வழிபடும் முழுமுதற் கடவுளாகக் கொண்டவர் என்பது, இந்நூல் கடவுள் வாழ்த்துப் பாடலாலும், இந்நூலில் உள்ள சில அகச்சான்றுகளாலும் விளங்கும். இப்புலவர் பெருமான், பண்டைச் சங்கத்துச் செந்தமிழ்ப் பனுவல்களிலும், காப்பியங்களிலும், ஆழ்வார்கள் அருளிச் செயல்களான நாலாயிர திவ்யப் பிரபந்தங்களிலும், கல்வியிற் பெரியார், கவிச்சக்கரவர்த்தி ஸ்ரீகம்ப நாடர் அருளிய ஸ்ரீராமசரிதக் காப்பியப் பெருங்கடலிலும் தோய்ந்து படிந்து இன்புற்றுணர்ந்த நுண்ணறிவுடையவ ரென்பது இந்நூலில் ஆங்காங்குக் காணப்பெறும் சொற்றொடர்களாலும், பொருட் செறிவுகளாலும் நன்கு புலப்படுவது காணலாம். இத் தகைய அரிய காப்பியத்தை நம் தமிழெனும் நங்கைக்கு ஓர் அணி கலமாய் அணிவித்த ஆசிரியர் புகழேந்தியார் பூத உடம்புடன் உலகில் வாழ்வுற்றிருந்த காலம், இன்னதென்று தெள்ளிதிற் றுணிந்துகூற, தக்க ஆதாரங்கள் அடையப் பெறுதது நம் நாடு செய்த தவக்குறைவே என்னலாம்.

இவ்வாசிரியரை வெவ்வேறு காலத்தவர்களான ஔவைப் பிராட்டியார், ஒட்டக்கூத்தர், கம்பநாடர், முதலாம் பலரோடு, சம காலத்தவரெனப் பிணைத்து விநோத ரஸமஞ்சரி முதலிய பிற்கால நூல்கள், நகைச்சுவையுணர்த்தும் சில பாடல்களைக்கொண்டு, உண்மைக்கு மாறான கொள்கைகளையும் நிகழ்ச்சிகளையும் விரித்துரைப்பன காணலாம். அவை பெரும்பாலும் சரித்திர உண்மைக்குப் புறம்பானவை ஆதலின், அவை ஏற்றுக்கொள்ளத் தக்கன அல்ல. இனி, இந்நூலாசிரியர் காலம் இன்னதென்று துணிந்து கூறத்தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை யெனினும், பொதுவாக நோக்குமிடத்துத் தமிழ் நாட்டில், சோழ மன்னர்களின் ஆட்சி, வீழ்ச்சியுற்றபின், அதாவது கி. பி. பதினாலாம் நூற்றாண்டின் இறுதியிலோ, அல்லது

அதனை அடுத்தோ, இவர் வாழ்ந்திருந்தவர் ஆகக்கொள்ள வேண்டு மென்பதே ஒருவாறு பொருந்தும் என்னலாம். ஏனெனில், சோழ மன்னர் சிறப்புற்றேங்கி விளங்கிய காலத்தில் இப்புலவர் பெருந் தகையார் இருந்தவ ராலல், இவர் அவ்வேந்தரால் சீருஞ் சிறப்பும் எய்த ஆதரிக்கப் பெற்றிருப்பார் என்பதோடு, அச்சோழ மன்னரின் வீரம், வெற்றி, கொடை முதலிய மேம்பாடுகளைத் தம் தனிப் பாடல் களாலும் பிரபந்தங்களாலும், சிறப்பித்திருப்பார் என்பதும் திண் ணம். அவ்விதம் உறுதியாய் எடுத்துக் காட்டக்கூடிய இவர் இயற்றிய பாடல்களோ பிரபந்தங்களோ உள்ளனவாக இதுவரையில் தெரிய வில்லை. ஆனல், அரிச்சந்திரன் சுவர்க்கி என னும் சிற்றரசனே, மா னி லக் கிழவனே ஆன ஒருவனல் இவர் ஆதரிக்கப்பெற்றவர் என்பதும், அக்குரிசிலின் உதவிச் சிறப்பை மறவாத தம் கடப்பாட்டை அறி விக்கும் முறையில், அவன் பெயர் அழியாது உலகில் நிலை நிற்கும் வண்ணம், இந்நூலில் சில ஏற்ற இடங்களில் அவனை இவர் சிறப்பித் துள்ளார் என்பதும் இந்நூலால் அறியக்கிடக்கும்.

அச்சந்திரன் சுவர்க்கி என்பானைப் பற்றியும் வேறு வரலாறு கள் ஒன்றும் எங்குங் காணப்பெறுததும் ஒரு வருந்தத்தக்க செய்தியே ஆகும். இப்புலவர் பெருமான், தொண்டை மண்டலத் தைச் சார்ந்த களந்தை என்னும் பதியில் வாழ்ந்து வந்த ஒரு துளுவ வேளாளர் மரபினர் எனத் தொண்டை மண்டல சதகம் என்னும் பிற்கால நூல் கூறு நிற்கும். இவ்வாசிரியர், நளவெண்பா என்னும் இந்நூலைத் தவிர, இரத்தினச் சுருக்கம், உபமான சங்கிரகம் என்னும் சிறு நூல்களையும், அல்லியரசாணி மாலை முதலான சில நாடோடிப் பாடல்களையும் இயற்றியுள்ளார் என்பதுங் கன்னபரம்பரைச் செய்தி களே யாம். இஃது ஆராய்தற் குரியது. இனி, இவ்வாசிரியர், நூல் தொடக்கத்தில், நாடு நகர் முதலிய சிறப்புக்களைத் தனிப்பட விரித்துக் கூறுமல், சரித நிகழ்ச்சிகளின் இடையிடையே அமைத்துச் செல் வதும், சிற்சில செய்திகளைப் படிப்போர் ஊகித் துணருமாறு விட்டுச் செல்வதும் இக்காப்பியத்தை அவர் சுருங்கக் கூறும் முறையை மேற்கொண்டமையால் அமைந்தவையெனக் கொள்ளற்பாலதாம்.

இந்நூல், கலாசாலைகளிற் பயிலும் சிறு மாணவர் முதற் பல திறத்தினராலும் விரும்பிப் பயிலப்பெறும் ஒரு தனிச் சிறப்புடை மையால், மூலம் தனியாகவும், உரையுடன் கூடியும் இது காறும் பல பதிப்புக்கள் வெளி வந்துள்ளன. அவை அனைத்தும் முதலில் வெளிவந்த அச்சுப் பிரதியைப் பின்பற்றி அமைந்தவையே என்னலாம், அவற்றுள் மூல பாடங்களிலும், உரைகளிலும் சில

இடங்கள் பொருட் பொருத்த மின்றியும், சொற்பொருத்த மின்றியும் உள்ளமை காணலாம். யாங்கள் முதலில் இந்நூல் நிலைய ஏட்டுப் பிரதிகளையும், சென்னைச் சர்வ கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியராய் இருந்து காலஞ்சென்ற ஸ்ரீ வையாபுரிப் பிள்ளை அவர்கள் வீட்டு ஏட்டுப் பிரதிகளையும், சென்னை மர்ரே கம்பெனித் தலைவர் அவர்கள் விருப்புடன் உதவிய பாடபேதக் குறிப்புக்களையும், அடையாறு பிரும்மஞான சங்கத்து நூல் நிலைய அச்சுப் பிரதிகளையும், பிற சில அச்சுப் பிரதிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தும், பழமையும் சிறப்பும் அமைந்த சில ஏட்டுப் பிரதிகளிற் கண்ட அரிய பாடங்களை ஆராய்ந்தும் மூலபாடத்தை ஒருவாறு செப்பனிட்டு அமைத்துக் கொண்டு, ஒவ்வொரு பாட்டிற்கும் தெளிவான பதவுரையும், பண்டைத் தமிழ் நூல்களிலிருந்து ஒப்புமையாக எடுத்துக்கொண்ட மேற்கோள்களையும், இந்நூலுக்கு முதனூலாகிய வடமொழி மகாபாரதத்துள்ள நளோபாக்யானம், பின், அதிவீரராம பாண்டியர் இயற்றிய தமிழ் நைடதம், முதலான நூல்களிற் காணப்பெறும் ஒற்றுமை வேற்றுமைச் செய்திகளையும் ஆங்காங்குக் குறிப்பில் விளக்கியும், சில சொற்களுக்கு இலக்கணக் குறிப்புக்களை எடுத்துக் காட்டியும், செய்யுள்களிற் பயிலப்பெற்ற சில அணிகளையும், நயங்களையும் விளக்கியும், அச்சுப் பிரதிகளிலும், ஏடுகளிலும் காணப் பெற்ற சில அதிகப் பாடல்களை ஏற்ற பெற்றி அடியில் எடுத்துக் காட்டியும், சில குறிப்பான பாட பேதங்களை தனியே எடுத்து அடியிற் குறிப்பிட்டும் ஒரு விளக்கவுரை அமைத்துள்ளோம். செய்யுண் முதற்குறிப்பகராதி, அரும்பதம் முதலியவற்றின் அகராதி, உரையில் எடுத்தாளப்பெற்ற நூல்களின் முதற்குறிப்பகராதி என்பன இப்பதிப்பின் முன்னும் பின்னும் சேர்க்கைகளாக இணைக்கப்பெற்றுள்ளன.

சில ஏட்டுப் பிரதிகளில், இந்நூலினுள் இடைச் செருகல்களாய், இருநூற்றுக் கதிகமாய் உள்ள பாடல்கள் காணப் பெறுவனவும் உள. அவை, சிலர் தம் சமயச் சார்பு மேற்கொண்டு புகுத்தியவையும், சரிதப் போக்கின் இடையிடையே, பிறநூல்களில் கூறியுள்ள கருத்துக்களைத் தழுவி அமைத்துப் புகுத்தியவையு மாம். அப்பாடல்கள சொற்சுவை பொருட்சுவைகளிற் குறைந்தனவும், புகழேந்தியாரின் கவி இன்பச் சுவைக்கும், காம்பீரிய நடைக்கும் மாறுபட்டனவுமாய் உள்ளனவால், அவை இந்நூற்பதிப்பிற் சேர்க்கப் பெறுமல் விலக்கப்பெற்றன.

இப்பதிப்பைக் குறித்த காலத்தில், உரியமுறையில் அச்சிட்டுக் கொடுத்த சென்னை இரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்), அச்சகத்தார்க்கு எமது அன்புடைமை உரியதாகும்.

என் கவனக் குறைவாலும், மற்றியாலும், அறியாமையாலும் இப்பதிப்பிற் சில குறைபாடுகளோ, பிழைகளோ நிகழ்ந்திருக்கலாம். அவற்றை அறிவாளிக ளாவார் அன்புடன் அறிவித்தால், அன்னார் திறத்து யான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு; அவை மறுபதிப்பிற் றிருத்தம் பெறவும் இடமாகும்.

இவ்வருந்தமிழ்க் காப்பியப் பதிப்பை எளியேன் யான் மேற் கொள்ளத் துணிந்ததற்கு அடியிற் காணும் ஆழ்வார் அருளிச் செயலே ஒருவாறு ஊக்கமும் துணிவும் அளித்தது என்னலாம்.

நாம்பெற்ற நன்மையும் நாமங்கை நன்னெஞ்சத்
தோம்பி யிருந்தெம்மை யோதுவித்து—வேம்பின்
பொருணீர்மை யாயினும் பொன்னழி பாடென்
றருணீர்மை தந்த வருள். (இரண்டாந் திருவந்தாதி 58.)

இங்ஙனம்,

சென்னை,
அடையாறு
12—3—60.

L. ஸ்ரீநிவாஸன்,
பதிப்பாசிரியன்.

இப்பதிப்பில் எடுத்தாளப்பெற்ற நூல்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

1. அகநா - அகநானூறு.
2. அரிச்சந் - அரிச்சந்திர புராணம்.
3. அருணைக்கலம்பகம்.
4. அறநெறிச் - அறநெறிச் சாரம்.
5. ஆத்திசூடி.
6. இரத்தினச் சுருக்கம்.
7. உபமான சங்கிரகம்.
8. ஐந்திணை-ஐந்திணை ஐம்பது
9. கந்தபுரா - கந்தபுராணம்.
10. *கப்பற்கோவை.
11. கம்ப-அயோத் - கம்பராமாயண அயோத்யா காண்டம்.
12. *கம்ப. ஆரணிய. - கம்பராமாயணம் ஆரணிய காண்டம்.
13. கம்ப-உயுத்த - கம்பராமாயணம் உயுத்த காண்டம்.
14. கம்ப-கிட்கிந்தா - கம்பராமாயணம் கிட்கிந்தா காண்டம்.
15. கம்ப-பால - கம்பராமாயணம் பாலகாண்டம்.
16. கல்லாடம்.
17. கலிங்கத்துப் - கலிங்கத்துப் பரணி.
18. கலி - கலித்தொகை.
19. கஜேந்திரமோட்சம்.

20.*குலோத் உலா - குலோத் துங்க சோழனுலா.
21. குறள் - திருக்குறள்.
22. குறுந் - குறுந்தொகை.
23. சிலப் அடியார்க்-சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாள்
24. சிலப்-சிலப்பதிகாரம். [உரை.
25. சிறுபாண் - சிறுபாணாற்றுப் படை.
26. சீவக - சீவகசிந்தாமணி.
27.*சுந்தர-கம்ப. சுந்தரகாண்டம்.
28. சூடா - சூடாமணி நிகண்டு.
29. சேதுபுராணம்.
30. தனிப்பாடல் - தனிப்பாடற் றிரட்டு.
31. திரிகடுக - திரிகடுகம்.
32. திருச்சிற் - திருச்சிற்றம் பலக்கோவை.
33. திருஞான - திருஞான சம் பந்தர் தேவாரம்.
34. திருநாவுக் - திருநாவுக்கரசர் தேவாரம்.
35. திருவரங்கக் கலம்பகம்.
36. திருவள்ளுவமாலை.
37. திருவாசகம்.
38. திருவாய்மொழி.
39. திருவாரூர்த் தியாகராச லீலை
40. திருவெங்கைக் கோவை.
41. திருவேங்கடத்தந்தாதி.
42. திவா - திவாகரம்.
43. தொல்சொல் - தொல் காப்பியம் சொல்லதிகாரம்.
44. தொல்பொருள் - தொல் காப்பியம் பொருளதிகாரம்
45. நம்பி திருவிளையாடல்-பெரும் பற்ற புலியூர் நம்பி திரு
46. நல்வழி. [விளையாடல்.
47. நறுந்தொகை.
48. நன - நன்னூல்.
49. நன்னெறி.
50. நாச்சியார் திருமொழி.
51. நாலடி - நாலடியார்.
52. நாளுர்த்தத்தீபிகை.
53. நினைவு மஞ்சரி.
54. நீதிவெண்பா.
55. நைடதம்.
56. பட்டினத்தார் பாடல்.
57. பதிற்றுப்பத்து.
58. பரிபாடற்றிரட்டு.
59. பழமொழி நானூறு.
60. பாகவதபுராணம்-செவ்வைச் சூடுவார் பாகவதபுராணம்.
61. பால. கம்பராமயணம் பால காண்டம்.
62. பிங் - பிங்கள நிகண்டு.
63. பிரபுலிங்க - பிரபுலிங்கலீலை.
64. புறநா - புறநானூறு.
65. பு. வெ - புறப்பொருள் வெண்பா மாலை.
66. பெரிய திருமொழி.
67. பெரியாழ்வார் - பெரியாழ் வார் திருமொழி.
68. பெருங் - பெருங்கதை.
69. பெரும்பாண் - பெரும் பாணாற்றுப்படை.
70. பெருமாள் திருமொழி.
71. பொய்கையாழ்வார் - முதற் றிருவந்தாதி.
72. பொருந-பொருநாற்றுப்படை
73. ஸ்ரீ பாகவத புராணம்.
74. மணி - மணிமேகலை.
75. மதுரைக் - மதுரைக் காஞ்சி.
76. மலைபடு - மலைபடுகடாம்.
77. முத் - முத்தொள்ளாயிரம்.
78. மூதுரை.
79.*யாப்பருங்கலக்காரிகை.
80. வான்மீகம் - வான்மீக ராமா யணம்.
81.*விக்கிரம சோழனுலா.
82. வியாஸபாரதம் வனபருவம் நளோபாக்யானம்.
83. வி. பா. - வில்லிபுத்தூராழ் வார் பாரதம்.
84. வெங்கைக் கோவை.

* இக்குறியுள்ளவை இந்நூல் நிலைய வெளியீடுகள்.

நளவெண்பா

(மூலமும் உரையும்)

பாயிரம்

கடவுள் வணக்கம்.

1. ஆதித் தனிக்கோல மானு னடியவற்காச்
சோதித் திருத்தூணிற் றோன்றினன்—வேதத்தின்
முன்னின்ருன் வேழ முதலே யெனவழைப்ப
என்னென்ரு னெங்கட் கிறை.

ஆதி தனி கோலம் ஆனன் - முற்காலத்தில் ஒப்பற்ற வராக அவதாரம் எடுத்தவனும், *அடியவற்கு ஆ* - தன்னடியவனன *பிரகலாதாழ்வானுக்காக, சோதி திரு தூணில் தோன்றினன்* - ஒளியுடன் விளங்கிய ஓர் அழகிய தூணினின்றும் நரசிங்கமாக அவதரித்தவனும், *வேதத்தின் முன் நின்ருன்*-வேதங்கள் தோன்று வதற்கும் முன்னே நிலை பெற்றுள்ளோனும், *வேழம் முதலே என* அழைப்ப - கஜேந்திரன் என்னும் யானை, *'ஆதி மூலமே!' எனக்* கூவி அழைக்க, *என் என்ருன்* - *'ஏன்!'* என்று, ஓடி வந்து அதற்கு அருள் செய்தவனுமான திருமால், *எங்கட்கு இறை* - எங்களுக்குக் கடவுளாவர்.

கோலம் - பன்றி; (பிங்). இரணியகசிபுவின் சோதரனன இரணியாக்ஷன் என்னும் அசுரன் பூமியைச் சுருட்டிப் பாதாளத்திற்கு எடுத்துச் செல்லத் திருமால் ஒரு பெரும் (வராக) பன்றி உருவெடுத்துச் சென்று அவ்வசுரனைக் கொன்று புவியைத் தன் கோட்டில் எடுத்துவந்து அதனை மீண்டும் நிலை நிறுத்தினர் என்பது ஸ்ரீ பாகவதபுராண வரலாறு. தனிக்கோலம் - ஒப்பற்ற வலிமை வாய்ந்த வராகம். பிரகலாதன் திருமால் அடியார்களுள் சிறப்புடையவனுதலின், அடியவன் என்ற பெயராலேயே குறிக்கப் பெற்ருன்; இவன், 'பிரஹ்லாத நாரத பராசர புண்டரீக' என்று தொடரும் பரம்பாகவதர்களில் முன்வைத்துக் கருதும் சிறப்புடைய வன் ஆதலின் என்க. *சோதித் திருத்தூண்*: இரணியகசுபுவின் அரசவையில், பொன்னலும் மணியாலும் அமைந்து ஒளி வீசிய தூண். அன்னமாய் வேதங்களை அருளினவன் திருமாலே ஆதலால், அத்திருமால் வேதத்திற்கு மூலகாரணமாவன் என்பதாம்; திருமால

அன்ன உருவில் வேதங்களை அருளிச் செய்தது; கம்ப. ஆரணிய. விராதன்வதைப்; 60. என் என்றான்: என்: ஏன் என்பதின் குறுக்கல் விகாரம். ஏன் என்று சொல்லிக் கொண்டு வேகமாய் வந்தான் என்றலும் ஆம். இது, 'பங்கயத் திருவைப் பாரான், பணிமுடி நிழலைத் தேடான், சங்குசக் கரமு மேந்தான் தன்னெதிர் தொழுது நிற்கும், இங்கிதக் கருடன் மீதி லேறிடா னிபத்தைக் காக்கக், கங்கையைப் பெற்ற பாத சாரியாய்க் கடுகி வந்தான்'; (கஜேந்திர மோட்சம்) என்று ஆசிரியர் திருவடிதாளர் அருளிய செய்யுளாலும், திருமால் அடியார்க் கருள்புரிவதிற் கொண்டுள்ள ஆர்வமும் விரைவும் விளங்குவன காணலாம். மேலும் திருமால் பன்றியுருவெடுத்து இரணியாக்ஷனையும், சிங்கவுருவெடுத்து இரணியனையும் வதைத்து அருள் புரிந்த இவ்வருஞ் செயல்கள், 'வல்லெயிற்றுக் கேழலுமாய் வாளெயிற்றுச் சியமுமாய், எல்லையிலாத் தரணியையும் அவுணனையும் வென்றனூர்' (பெரியாழ்வார்: 4: 8: 8.) என்ற ஆழ்வார் அருளிச் செயலை அடியொற்றி யமைந்தது என்பதும் நோக்கத் தக்கதாம்.

பி - ம். 2. சோதித் தனித்தூணிற். (1)

அவையடக்கம்

2. வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
தந்துவினூற் கட்டச் சமைவதொக்கும்—பைந்தொடையில்
தேன்பாடுந் தார்நளன்றன் றெய்வத் திருக்கதையை
யான்பாட லுற்ற விது.

பைம் தொடையில் - புதிதான முறுக் கவிழாத மலர்களில், தேன் பாடும் - வண்டுகள் கூடி மொய்த்து ரீங்கார ஒலி இசைக்கும், தார் நளன் தன் - மாலை அணிந்த நளச் சக்கரவர்த்தியின், தெய்வ திரு கதையை - தெய்வத் தன்மை பொருந்திய, அழகிய சரிதத்தை, யான் பாடல் உற்ற இது - நான் பாடத் தொடங்கிய இச் செயல், வெம் தறுகண் - கொடுமையும் அஞ்சாமையும் உடைய, வேழத்தை-ஒரு யானையை, வேரி கமலத்தின் - நன் மணமுடைய தாமரையின், தந்துவினூல் - (தண்டிலுள்ள) நூலினால், கட்ட - கட்டி அடக்க, சமைவது ஒக்கும் - தொடங்குவதை ஒப்பர்கும்.

பசுமை - புதுமை; பசும்புண், பச்சிரத்தம், பசு மஞ்சள், என்பன போல; தொடை - மலர் முறுக்கு; 'தொடை யவிழ்தண் குவளை' (பு. வெ. 240); இனி, பைந்தொடையிற் றேன் பாடும்; ஒரு புதிய மாலை போலத் தொடர்ந்து வண்டுகள் பாடும் எனப் பொருள் கோடலும் அமையும். தெய்வத் திருக்கதை: இச்சரி

தத்தைப் படிப்போரும் கேட்போரும் கலியால் துயர் அடையாமல் தெய்வத் திருவருள் அடையும் சிறப்புடைய கதை; இச்சிறப்பு, இந்நூல், 'என் காலத்துன் சரிதம்' என்ற (390) செய்யுளால் அறியக்கிடக்கும். வெந்தறுகண் வேழம் : வெம்மையும் அஞ்சாமையும் யானைக்கு உரியகுணங்கள். வேரி - தேனும் ஆம். கமலம் - வடசொல்; நீரிற் பிறப்பது என்னும் பொருளது; அம்புஜம், நீரஜம், ஜலஜம் என்பனபோல, தந்து - நூல்; வடசொல். இச் செய்யுள் அவையடக்கம் கூறியதாகும். அவை யடக்கமாவது, கற்றுவல்ல பெரியோரும், அறிவுக்கு எல்லையில்லை ஆதலால், தம்மினும் வல்ல ஆன்றோர் பலர் உளர் என்ற அச்சமேற் கொண்டு, தம் அடக்கத்தை அறிவிக்கும் உயரிய தன்மை. இவ்வண்ணமே, கல்வியிற் பெரியாரும், தம் இராமாயணப் பெருங்காப்பியத் தொடக்கத்தில், பாயிரத்தில் 'ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றெரு', என்றது முதல் ஏழு பாசுரங்களால் அவையடக்கங் கூறியுள்ளமையும், பிற ஆசிரியர்கள் தத்தம் நூல்களில் கூறியுள்ளமையும் ஆங்காங்குக் காணலர்ம்.

பி - ம். 2. சமமெனக்கும்; சமமான்; செந்தொடையில்.
3. தெய்வச் செழுந்தையை, தெய்வக்கதையை.
4. யான் பாடவற்ற விது; வற்றதிது. (2)

இப்பாயிரப் பகுதியில் அச்சுப்பிரதிகளிலும், சில ஏட்டுப் பிரதிகளிலும் அடியிற்காணும் பாடல்கள் அதிகமாக உள்ளன. அவை, பழைய சிறந்த ஏட்டுப் பிரதிகளில் இல்லாமையால், இங்குப் பாட வரிசையில் கொள்ளாது தனியே கீழே குறிக்கப்பெற்றுள்ளன.

1 நேசரிதங் கூற நிலவலயஞ் தாங்குளன்
மாசரிதங் கூற வருந்துணையா—ஈசன்
கரியா னனத்தான் கருதுபுகழ் பூண்ட
கரியா னனத்தான் கழல்.

2 கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
உலாவு சடைமே லுறையும்—நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றர் நாகம்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு.

3 பாரார் நிடதப் பதிளன்சீர் வெண்பாவால்
பேரார் புகழேந்தி பேசினன்—தாரார்
செழியனையுஞ் சென்னியையுஞ் சேரத் திறைகொள்
மொழியின் சுவையே முதிர்ந்து.

நூல் வரலாறு.

யுதிட்டிரர் வனத்தில் இருந்தது.

3. பாண்டவரின் முன்றோன்றல் பார்முழுதுந் தோற்றருநாள்
ஆண்டகையே தூதுவனுய்ச் சென்றவனி—வேண்ட
மறுத்தா னிருந்தானே மண்ணெடும்போய் மாளப்
பொறுத்தா னிருந்தான் புலர்ந்து.

பாண்டவரின் முன் தோன்றல் - பாண்டவர் ஐவரில் முன் பிறந்தவரான யுதிட்டிரர் என்னும் தருமபுத்திரர், பார் முழுதும் தோற்று - தமக்கு உரிய நாடு முழுவதும் சூதாட்டத்தில் துரியோதனனிடம் தோற்றுவிட்டு, ஒரு நாள் - பின்னொரு நாள், ஆண்டகையே தூதுவனுய்ச் சென்று - ஆடவரிற் சிறந்த கண்ண பிரானே அப்பாண்டவ தூதுவனாக அத்துரியோதனனிடம் சென்று, அவனி வேண்ட - அப்பாண்டவர்க்கு உரிய நாட்டைக் கொடுக்கும் படிக் கேட்க, மறுத்தான் - கொடாது மறுத்த அவனுடைய, இரும் தானே மண் ஒடும் - அவனது பெரிய சேனைகள், பூமி இவற்றோடும், போய் மாள - அவனும் அழிந்து போக, புலர்ந்து - மேல் நேர்வதை எண்ணி மனம் வருந்தி, பொறுத்தான் இருந்தான் - பொறுமையோடு பொறுத்து இருந்து வனவாசம் செய்துகொண்டிருந்தார்.

ஒரு நாள்:—முன், சூதாட்டத்தில் ஏற்பட்ட நிபந்தனைப்படி, காடுறையும் ஆண்டுகள் பன்னிரண்டும், அஞ்ஞாதவாஸம் என்னும் கரந்துறையும் ஆண்டு ஒன்றும் முடித்தபின் ஒரு நாள். ஆண்டகை: புருஷோத்தமன் என்னும் வடமொழிப் பெயரின் பொருள் கொண்ட தமிழ்ச் சொல். ஆண்டகையே: ஏகாரம் தேற்றப் பொருளில் உயர்வு சிறப்பின் பாலது; கண்ணபிரான் தூது சென்ற இச் செயல் காரணமாகப் பாண்டவ தூதன் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பெறுவதும் காண்க. இருந்தானே மண்ணெடும் மறுத்தான் போய் மாள என இயைத்தும் கொள்ளலாம். தருமபுத்திரரது பொறுமை யின் பெருமையையும், அதன் பயனையும் உணர்த்து முறையில் ஆசிரியர் பின் நிகழப் போகும் செய்தியை முற்கூட்டி எடுத்து விளக்கினர் என்க. இதனால், 'பொறுத்தவர் பூமி யாள்வார்' என்ற பழமொழியின் நீதியைக் குறிப்பால் நம்மனோர்க்கு அறிவித்தது மாகும். மறுத்தான்: வினையாலணையும் பெயர். மாள: காரணப் பெருருட்டில் வந்த எதிர்கால வினையெச்சம். பொறுத்தான் இருந்தான் - பொறுத்திருந்தான் என்னும் எச்சப் பொருளில் வந்தது ஆதலின், இது முற்றெச்சம்.

பி - ம். 1. பார்முழுதுங் காத்தொருநாள்.
2. ஆண்டகையைத் தூதாகச். 3. மன்னெடு மாள. (3)

யுதிட்டிரரை மன்னர் பலர் சென்று கண்டது.

4. நாட்டின்கண் வாழ்வைத் துறந்துபோய் நான்மறையோர்
ஈட்டங்கள் சூழ விருந்தானைக்—காட்டில்
பெருந்தகையைக் கண்டார்கள் பேரெழிற்றோள் வேந்தர்
வருந்தகைய ரெல்லாரும் வந்து.

நாட்டின் கண் வாழ்வை துறந்து போய் - தன் நாட்டில் தான் அனுபவித்துவந்த அரச வாழ்க்கையை விட்டு நீங்கிச்சென்று, நான் மறையோர் ஈட்டங்கள் சூழ காட்டில் இருந்தானை - நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்த அந்தணர்களின் கூட்டங்கள் தன்னைச் சூழ்ந்திருக்க வனத்தில் போய் வசித்திருந்த, பெருந்தகையை - பெருந்தன்மை பொருந்திய தருமபுத்திரரை, வருந்தகையர் - அங்கு அவரை வந்து பார்த்து அளவளாவும் நட்புத் தன்மையுடைய வர்களான, பேர் எழில் தோள் வேந்தர் எல்லாரும்-பேரழகு வாய்ந்த தோள்களையுடைய அரசர்கள் யாவரும், வந்து கண்டார்கள் - வந்து பார்த்தனர்.

பாண்டவர் நாடிழந்து முதலில் சென்று தங்கியிருந்த வனம் காம்யவனம் என்பதும், அவ்விடத்தில் வேதமெறி வழுவாத அந்தணர் பலர் கூட்டமாக வந்து அப்பாண்டவருடன் தங்கியிருந்தனர் என்ப தும் மகாபாரதம் வன பருவம் முதல் இரண்டு பருவங்களால் அறியப் பெறுவன. இருந்தானை : வினையாலணையும் பெயர். பெருந்தகை : அன்மொழித் தொகை. வருந்தகையர் : துரியோத னன், அவனைச் சார்ந்த கர்ணன் முதலிய மன்னர்களையொழித்துப் பாண்டவர்கள் பால் அன்பு பாராட்டும் நண்பர்களான மன்னர்களைக் குறித்தபடி. பேரெழிற்றோள் வேந்தர் : அவ்வேந்தர்கள் அழகும் வீரமும் பொருந்திய தோள்வலி வாய்ந்தவர்கள் என்பதையும், பின் ஏற்படக் கூடிய மாபாரதப் போரில் அப்பாண்டவர்க்குப் பக்கத் துணையாய் உதவி புரியக்கூடியவர் என்பதையும் தோள் என்னுங் குறிப்பால் உணர வைத்ததாகும். (4)

யுதிட்டிரரிடம் பிரகதசுவர் என்னும் முனிவர் வந்தது.

5. கொற்றவேற் றோளைக் குருநாடன் பாலணைந்தான்
எற்றுநீர் ஞாலத் திருணீங்க—முற்றும்
வழிமுறையே வந்த மறையெல்லாந் தந்தான்
மொழிமுறையே கோத்த முனி.

(ஒருவாள்), எற்று நீர் ஞாலத்து இருள் நீங்க - மோதும் (கடலின்) அலை நீரையுடைய இப்பூமியில் உள்ள அஞ்ஞானமாகிய

இருள் நீங்கும் பொருட்டு, முற்றும் வழி முறையே வந்த - முழுவதும் ஆசிரிய சிட முறைவழியே வந்துள்ளனவான, மறை எல்லாம் - வேதங்கள் அனைத்தையும், தந்தான் - ஒழுங்குபடச் சீர்திருத்தி அமைத்துத் தந்தவனான வியாச முனிவரது, மொழி முறையே கோத்த - சொற்படியே கோவையாகத் சேர்த்தமைத்த, முனி - பிருகதசுவர் என்னும் முனிவர், கொற்ற வேல் தானை குருநாடன் பால் அணைந்தான் - வெற்றியைத் தரும் வேலேந்திய படைகளைப் பெற்றிருந்த குருநாட்டுக்கு உரிய அரசனான அத் தருமபுத்திரரிடம் வந்தடைந்தார்.

கொற்ற வேற்றானைக் குருநாடன் என்றது, தருமபுத்திரர் முன் அடைந்திருந்த சேனபலத்தைக் குறித்தபடியும் ஆம். ஞாலத்திருள்: 'இருளே வுலகத்தியற்கை'; (அறநெறிச் : 146.); ' இமிழ்திரைப் பரவை ஞாலம் ஏழைமை யுடைத்து மாதோ '; (கம்ப. பால. கோலங்காண் : 3). இருள் - அறியாமை ; அதாவது, அஞ்ஞானம். தமிழ் வீரர்களுக்கு வேற்படையே சிறந்த போர்க்கருவியாதலால், அத்தமிழ் வழக்கை மேற்கொண்டு கவிஞர் வேற்றானை எனச் சிறப்பித்தார். வேற்றானை: உபலக்ஷணத்தால் வாள், வில், தானைகளையும், கசரத, துரக்படைகளையும் கூட்டிக் கொள்க. வழி முறையே வந்த மறையெல்லாம் - திருமால் அன்னமாய் வந்து பிரமனுக்கு உபதேசம் செய்யப் பின் அப்பிரமன் மூலம் மற்றையோர்க்கு வழி முறையே வந்த வேதங்கள் அனைத்தையும் என்னலும் ஆம். தந்தான் என்பதைப் பிரமனுக்கும், கோத்த முனி என்பதை வியாஸ முனிவர்க்கும் இயைத்துப் பொருள் கூறினர் பலர். ஆனால், வந்த முனிவர் வியாஸர்தாம் என்பதற்கு இந்நூலில் எங்கும் தக்க ஆதாரங் காணப் பெறுமையாலும், இந்நூலுக்கு முதனூலான, வியாஸ முனிவர் அருளிய வடமொழி மகாபாரதம் வன பருவத்தின் ஒரு பகுதியான நளோபாக்யானத்தில் இந்நள சரிதத்தை யுதிட்டிரர்க்கு எடுத்துக் கூறியவர் பிருகதசுவர் என்னும் முனிவரே எனத் தெள்ளிதின் உரைத்துள்ளமையாலும் மேற்கூறிய வியாஸ முனிவர் இந்நள சரிதத்தை அறன் மைந்தற்குக் கூறினர் என்பது பொருந்தாதென்க. பிருகதசுவர் : இவர் வேத காலத்தில் பேசப்பெறும் பண்டை முனிவர்களுள் ஒருவர். இவர் குதிரைகளின் வரலாறுகளையும், அவற்றின் வகைகள் அவற்றிற்கு வரும் நோய்கள் அந்நோய்களுக்கு ஏற்ற சிகிச்சைகள் முதலான வற்றையும் விளக்கும் அச்வ சாஸ்திரம் என்னும் ஓர் அரிய நூலை இயற்றியருளியவர் என்பதும், அதன் காரணமாகவே அம்முனிவர்க்குப் பிருகதசுவர் என்ற பெயர் வழங்கலாயிற்று என்பதும் அறியப்

பெறும். இம் முனிவர் நளசரிதத்தையும் அரிச்சந்திரன் சரிதத்தை யும் கூறி, அவ்வறன் மைந்தரைத் தேற்றி ஆறுதல் அளித்த தோடு, சூதாடத்தில் வெற்றி பெய்தும் இராசசியம் அமைந்த அகஷ ஹிருதயம் என்னும் மந்திரத்தையும் அத்தருமருக்கு உபதேசித்துச் சென்றார் என்றும் அம் முதனூல் கூறும். குருநாடு : பாண்டவரின் முன்னோனும் அக்குலத்தலைவனுமான குரு என்னும் வேந்தன் இருந்து ஆட்சி புரிந்த நாடு. அந்நாட்டைக் குலமரபின் முறையே அடைந்தவர் ஆதலின், தருமபுத்திரரைக் குருநாடன் என்பது வழக்கு. துரியோதனனும் அம் மரபில் உதித்து ஆட்சி புரிந்தவன் என்னுங் காரணத்தால், குருநாடன் என்னும் பெயரால் அழைக்கப் பெறுவது முண்டு.

பி - ம். 2. ஞால மிருணீங்க; வைய மிருணீங்க.
3. மறையெல்லா மொன்றுய்ப்.

(5)

6. மறைமுதல்வ நீயிங்கே வந்தருளப் பெற்றேன்
பிறவிப் பெருந்துயர மெல்லாம்—அறவே
பிழைத்தேன்யா னென்றுனப் பேராழி யானை
அழைத்தேவல் கொண்ட வரசு.

அ பேர் ஆழியானை-அந்தப் பெருமை பொருந்திய சுதரிசனம் என்னும் சக்கராயுதத்தையுடைய கண்ணபிரானை, அழைத்து ஏவல் கொண்ட அரசு - அழைத்துத் தூதனுகத் துரியோதனன்பால் ஏவிய அரசரான தருமபுத்திரர், (அப்பிருகதசுவரை நோக்கி), 'மறை முதல்வ - வேதங்களை யுணர்ந்த முனிவர் பெருமானே! நீ இங்கே வந்தருள பெற்றேன் - நீவிர் இங்கே எழுந்தருளிய பாக்கியத்தை யான் அடைந்தேன்; (இதனால்) பிறவி பெரும் துயரம் எல்லாம் - பிறவி யெடுத்து (யான்) அடையக் கூடிய பெரும் துன்பங்கள் யாவும், அறவே - அற்று நீங்கவே, யான் பிழைத்தேன் என்றன் - யான் உய்ந்தேன்' என்று அம்முனிவர்க்கு முகமன் கூறி உபசரித்தார்.

அப் பேராழியானை : அ, உலகறி சுட்டு. பேராழியான் : பெருமை பொருந்திய பாற்கடலைத் தன் இருப்பிடமாகக் கொண்டு அங்குப் பள்ளிகொண்டருளும் திருமாலின் திருவவதாரமாய் வந்த கண்ண பிரான் என்றும் பொருள் கொள்ளலாம். பிறவிப் பெருந்துயரம் - 'பிறந்தோ ருறுவது பெருகிய துனபம்' (மணி. 2:64,) பிறவி கடத்தற் கரியது என்னும் கருத்தில் கடல் என்னப்பட்டது, 'பிறவிப்பெருங் கடல்'; (குறள் : 10) பிழைத்தல் - தப்பி உய்தல்; இது தயரதன் வாக்கில், 'பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்கலாகுமோ,' எனக்

கூறப் பெற்றமையுங் காண்க; (கம்ப. அயோத்: மந்திரப்: 21) பிழைத்தேன்: இது துணிவுபற்றிக் கூறிய காலவழுவமைதியாகும்.

பி - ம். [2] பிழைத்தேனே யென்றனப். (6)

7. மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர்வந் துற்றாலும்
ஒத்திருக்கு முள்ளத் துரவோனே—சித்தம்
வருந்தியவா வென்னென்றான் மாமறையா லுள்ளம்
திருந்தியவா மெய்த்தவத்தோன் றேர்ந்து.

மா மறையால் உள்ளம் திருந்தி - மாட்சிமை பெற்ற வேதங்களை ஓதியுணர்ந்தமையால் மனம் திருந்தப்பெற்று, அவாம் மெய்த்தவத்தோன் - விரும்பும் உண்மைத் தவத்தைச் செய்யும் அம்முனிவர், தேர்ந்து - (அத்தருமபுத்திரரை நோக்கி) ஆராய்ந்து, 'மெய்திரு வந்து உற்றாலும் - அழியாத பெருஞ் செல்வம் வந்தடைந்தாலும், வெம் துயர் வந்து உற்றாலும் - கொடிய துன்பம் வந்தடைந்தாலும், ஒத்து இருக்கும் - அவ்விரண்டு நிலையிலும் மாறுபடாமல் (ஒரே உணர்ச்சி) நிலையில் நிற்கும், உள்ளத்து உரவோனே - மன உறுதி கொண்ட யுதிட்டிரனே! சித்தம் வருந்திய ஆறு என் என்றான் - நீ இப்பொழுது மனம் வருந்தியது ஏன்' என்று கேட்டார்.

மெய்த்திரு - அழியாச் செல்வம்; வெந்துயர்: கொடிய வறுமை என்னலும் ஒன்றும்; 'கொடிது கொடிது வறுமை கொடிது' என ஔவை மூதாட்டியார் அருளியது காண்க. மா மறையர் உள்ளந் திருந்தி அவா மெய்த்தவத்தோன்: வேதம் ஓதியுணர்ந்தால் மனத் தூய்மை யடையலாமென்பதும், அவ்வாறு மனத் தூய்மை யெய்திய நிலையில் செய்யுந் தவந்தான் உண்மையான அழியாத மோட்ச நிலையை யடைவிக்கும் என்பதும் இதனுற் கிடைத்த உட்பொருள் என்னலாம்.

பி - ம். 1. வெந்துயரம் வந்தாலும். 2. உள்ளத் துறவோனே.
3. வருந்தியவா றென்னென்றான். (7)

8. அம்பொற் கயிலைக்கே யாகத் தரவணிவார்
தம்பொற் படைக்குத் தமியனுய்—எம்பியைமுன்
போக்கினே னென்றுரைத்தான் பூதலத்து மீதலத்தும்
வாக்கினே ரில்லாத மன்.

பூதலத்தும் - பூமியிலும், மீதலத்தும் - மேலே உள்ள வானுலகத்திலும், வாக்கில் நேர் இல்லாத மன் - உண்மை பகர்வதில்

தனக்கு ஒப்பு ஒருவர் இல்லாத அரசனை யுதிட்டிரர் (அம் மூனி வரை நோக்கி), 'அம் பொன் கயிலைக்கே-வெள்ளி மலையாகிய கயிலாய மலைக்கு, ஆகத்து அரவு அணிவார் தம் - தம் திருமேனியில் பாம்பு களை ஆபரணங்களாக அணிந்துள்ள சிவபெருமானுடைய, பொன் படைக்கு - சிறந்த பாசுபதாத்திரம் என்னும் படையைப் பெற்று வருவதற்கு, தமியனுய் - துணையின்றித் தனித்தவனுக, எம்பியை - என் தம்பியாகிய அருச்சுனனை, முன் போக்கினேன் என்று உரைத் தான் - முன்னம் போகச் செய்தேன்' என்று சொன்னர்.

'என் தம்பி அருச்சுனனைத் தனியே, முன் செல்லுதற்கு அரிய கயிலை மலைக்குக் கிடைத்தற்கரிய பாசுபதாத்திரம் என்னும் படை யைச் சிவபிரானிடமிருந்து பெற்று வருமாறு அனுப்பினேன்; அவன் நாட்கள் பல ஆகியும் ,இன்னும் திரும்பி வரவில்லை. அத் தம்பியின் பிரிவே தம் வருத்தத்திற்குக் காரணம்' என்பதை யுதிட்டிரர் கூறினர். கயிலைக்கே என்ற ஏகாரத் தேற்றம் யாவரும் அடைதற்கரிய கயிலை என்பதைக் குறிப்பிட்டபடி. ஆகத்து அரவணிவார்; இது காரணமாகவே, சிவபெருமானுக்கு அரவாபர ணன், என்ற ஒரு பெயரும் வழங்குவதாகும். அம்பொன் - அழகிய பொன்; இங்கு வெள்ளியைக் குறித்தது. எம்பி : என் தம்பி என் பதன் மரூஉ மொழி.

பி - ம். 2. தமியனு. (8)

9. காண்டா வனந்தீக் கடவுளுனைக் கைக்கணையால்
நீண்ட முகிறடுத்து நின்ருற்கு—மீண்டமரர்
தாளிரண்டு நோவத் தனித்தனியே யோடியநாள்
தோளிரண்டு மன்றே துணை.

காண்டாவனம் தீ கடவுள் உண - காண்டவ வனம் என்னும் காட்டை அக்கினி பகவான் உண்ணும்படி, கை கணையால் - தன் கையால் தூண்டப்பட்ட அம்புகளால், நீண்ட முகில் தடுத்து - பரந்து நீண்ட மேகங்களை மழை பெய்யாமல் தடுத்து, நின்ருற்கு - எதிர்த்து (வீறுடன்) நின்ற அந்த அருச்சுனனுக்கு, அமரர் - (அது கண்டு அவனை எதிர்த்துப் போரிட வந்த) தேவர்கள், தனி தனியே - ஒவ்வொருவரும் ஒவ்வொரு புறமாய், தாள் இரண்டும் நோவ - தத்தம் பாதங்கள் இரண்டும் நோவடைய, மீண்டு - அப் போர்க்களத்தை விட்டுத் திரும்பி, ஓடிய நாள் - அவர்கள் தோற்று ஓடின அக்காலத்தில், தோள் இரண்டும் அன்றே துணை - அவன்

தோள்கள் இரண்டுமே அல்லவோ அவனுக்குத் துணையாய் இருந்தன!

காண்டா வனம்: காண்டவ வனம் என்பதன் விகாரம். 'காண்டா வனமென்பதோர் காடு'; (பெரிய திருமொழி: 2, 4: 2). காண்டவ வனம் - இந்திரனுடைய வனம். காண்டவன் - இந்திரன். காண்டவ வனன் - இந்திரன். (பிங்); சேது புராணம், கத்துரு: 77. காண்டவன் என்பான் ஓர் அசுரன்; அவன் வனம் என்ற கூற்றுக்கு ஆதாரங் காணவில்லை. காண்டவ வனம் எரியுண்ட சரிதத்தின் விரிவை மகாபாரதம் ஆதிபருவம், காண்டவ தகன பருவத்திற் காண்க. 'அருச்சுனன் தோள் வலியிற் சிறந்த ஒப்பற்ற வீரன்; அவன் வெற்றியுடன் திரும்பி வருவன்; அவனைப்பற்றி நீ கவலையுற வேண்டாம்' என்று அம் முனிவர் தருமருக்கு ஆறுதல் கூறினர் என்பது இச்செய்யுளாற் போந்த பொருள் ஆகும்.

பி - ம். 2. மூண்டமரில், மூண்டமரர். (9)

10. பேரரசு மெங்கள் பெருந்திருவுங் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானஞ் சேர்தற்குக்—காரணந்தான்
யாதோவப் பாவென்ரு னென்றுந்தன் வெண்குடைக்கீழ்த்
தீதோவப் பார்காத்த சேய்.

என்றும் தன் வெண் குடை கீழ் நீது ஓவ பார் காத்த சேய் - எப்பொழுதும், தன் வெண்குடைக் கீழ் உலகம் துன்பங்கள் நீங்கி, இன்ப மெய்த ஆட்சி புரிந்த அரசரான தரும புத்திரர், அம்முனி வரை நோக்கி, 'அப்பா - ஐயனே! எங்கள் பேர் அரசும் - எங்களுக் குரிய பெரிய அரசாட்சியையும், பெரும் திருவும் - செல்வப் பெருக்கை யும், கை விட்டு - இழந்து, சேர்வு அரிய - சேர்வதற்கு அரியதான (அதாவது அடைய முடியாத), வெங் கானம் சேர்தற்கு - கொடிய இந்த வனத்தை யாங்கள் வந்து அடைந்திருப்பதற்கு, காரணம் யாதோ என்ரூன் - காரணம் என்னவோ?' என்று கேட்டான். தான்: அசை.

பேர்: பெருமை என்னும் பண்புச் சொற்களின் விகாரம். அப்பா என்றது, அன்பைக் குறித்து வந்த மரபுவழுவமைதி. ஓவுதல் - ஒழிதல் அல்லது நீங்குதல்; ஓவுதல் வேண்டுமொளி மாழ்குஞ் செய்வினை' (குறள். 653). சேய் - செம்மை என்னும் பண்பின் அடியாக வந்த சொல். இது, நிறத்தாலும் திறத்தாலும், வீரம், எழில், இளமை, அருள் முதலியவற்ரு லும் உயர்ந்த முருகக்

கடவுளுக்கு ஆகி, பின் மேற் கூறிய குணங்களில் ஒருவாறு சிறந்த அரசிளஞ் செல்வர்க்கும் பெருமைகருதி வழங்கி வரும் மரபின தாயிற்று என்க. சேய் என்ற சொல் அரசனைக் குறிப்பது இந் நூலில் மற்றும் பல இடங்களில் காணலாம்.

பி - ம். 2. சேர்வதற்குத். 4. தீதோடப். (10)

11. கேடில் விழுச்செல்வங் கேடெய்து சூதாடல்
ஏடவிழ்தார் மன்னர்க் கியல்பேகாண்—வாடிக்
கலங்கலீநீ யென்றுரைத்தான் காமருவு நாடற்
கிலங்கலீநூன் மார்ப னெடுத்து.

இலங்கு அலை நூல் மார்பன் - வெண்ணிறத்தால் விளங்கியதும், அசைவதுமான பூணூல் அணிந்த மார்பையுடைய அந்தப் பிருகதசுவ முனிவர், காமருவு நாடற்கு - சோலைகள் தழுவிச் சூழப் பெற்ற குரு நாட்டிறைவரான அந்த யுதிட்டிரருக்கு, 'கேடு இல் விழு செல்வம் - அழியாப் பெரும் செல்வமும், கேடு எய்து - அழிவை அடையக் கூடிய, சூது ஆடல் - சூதாடுவதானது, ஏடு அவிழ் தார் மன்னர்க்கு - இதழ்கள் மலர்ந்து விரியப் பெற்ற மாலையணியும் அரசர்களுக்கு, இயல்பே தான் - இயற்கையியுள்ள வழக்கமே ஆகும்; (ஆதலால்) நீ வாடி கலங்கலை - இதற்காக நீ வாட்டமுற்றுக் மனக் கலக்கங் கொள்ளவேண்டா;' என்று எடுத்து உரைத்தான் - என்று எடுத்துக் கூறி ஆறுதல் அளித்தார். காண்: முன்னிலை அசை.

இலங்கலை நூன் மார்பன், காமருவு நாடற்கு, 'மன்னர்க்கியல்பே காண், நீ வாடிக் கலங்கலை' என்று எடுத்துரைத்தான் என இயைத்துப் பொருண்முடிவு கொள்க. கேடில் விழுச் செல்வங் கேடெய்து சூதாடல்: மற்ற எந்தச் செயலாலும் அழியாத பெருஞ் செல்வம் சூதாட்டத்தில் அழிந்து போம் என்பதாம்; 'வண்மைத் திருவழிக்கும்' என இந்நூலிற்பின், (206) கூறப் பெறுவதுங் காண்க; 'ஒன்றெய்தி நூறிழக்கும்'; 'பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்'; (குறள். 932, 937) எனவும், பிற நூல்கள் பலவாறும் சூதால் வருங்கேட்டினை இடித்துரைத்துள்ளமை பரக்கக் காணலாம். இங்கு முனிவர், 'சூது கேடிழைப்பது; ஆனால், மன்னர்க்குச் சூதாட்டம் இயல்பு' என்று கூறி யுதிட்டிரரைத் தேற்றினர் என்க.

பி - ம். 1. கேடெய்தல் சூதாடல். 2. இயல்பே தான.
3. சாமருவு ணென்ன. 4. இலங்கலை. (11)

12. கண்ணிழந்து மாயக் கவருடிக் காவலர்தாம்
மண்ணிழந்து போந்து வனநண்ணி—விண்ணெழுந்த
மின்போலு நூன்மார்பா மேதினியில் வேறுண்டோ
என்போ லுழந்தா ரிடர்.

(அதற்கு யுதிட்டிரர்), விண் எழுந்த மின் போலும் நூல் மார்பா - மேகத்தில் தோன்றியெழுந்த மின்னலைப்போல ஒளிவீசும் பூணூல் அணிந்த மார்பையுடைய முனிவரே! கண் இழந்து (அறிவென்னும்) கண்ணை இழந்து, மாயம் கவறு ஆடி - மோசமான சூதாடி, மண் இழந்து - அதனால் தம் நாட்டைத் தோற்று, போந்து - அந்நாட்டை விட்டுப் போய், வனம் நண்ணி - காட்டை யடைந்து, என்போல் இடர் உழந்தார் - என்னைப் போலத் துன்பத்தில் வருந்தினோரான, காவலர்தாம் - அரசர்கள் தாம், மேதினியில் வேறு உண்டோ - உலகில் வேறு உள்ளாரோ? (என்று வினவினர்).

கண்: ஆகுபெயர். இங்கு அறிவுக்கு உருவகமாயிற்று. காவலர் தாம்; தாம் என்பதை அசையாகக் கொண்டாரும் உளர். பூணூலுக்கு மின்னல்; 'கார்மினோடு லாயதென நூல்கருலு மார்பன்'. (கம்ப. அயோத். கைகேசி சூழ்வினைப்: 96); 'சூனிறக் கொண்மூச் சுழித்திடை கிழிக்கும் மின்னென மார்பினூறுளங்க' (சுந்தர. 411); விண்மின்னென வலியும்புரி வெண்ணூலணி மார்பன்'; (அரிச்சந். காசி காண்டம்: 29). விண்: இடவாகு பெயராய் மேகத்தைக் குறித்தது; மேகத்தை வான் என்பதும் இக் கருத்தினதே. மேதினி - பூமி; மது என்னும் அசுரனின் மேதை (கொழுப்பு) பட்டு நிறைந்தமையால், பூமிக்குக் காரணப் பெயர்; (கம்ப. உயுத்த. அதிகாயன் வதைப்: 75). இப்பாடல், தருமபுத்திரர் முனிவரை நோக்கி வினவியது.

பி - ம். 1. கவருடிக் காவலர்க்குள். 2. விண்ணிழிந்த (மின்)
4. என்போ லிருந்த விடத்து, என்போ லுழல்வா ரிடர். (12)

முனிவர் நளசரிதங் கூறுதல்.

13. சேமவேல் மன்னற்குச் செப்புவான் செந்தனிக்கோல்
நாமவேற் காளை நளனென்பான்—யாமத்
தொலியாழி வைய மொருங்கிழப்பப் பண்டு
கலியால் வினைந்த கதை.

தனி செம் கோல் - ஒப்பற்ற செங்கோலையும், நாம வேல் - அச்சத்தை உண்டாக்கும் வேற்படையையுமுடைய, காளை - இடபம் போன்ற (பெருமிதம் வாய்ந்த), நளன் என்பான் - நளன் என்று

அழைக்கப்பெறும் மன்னன், யாமத்து ஒலி ஆழி வையம் - நள்ளிர வில் மிகுந்த ஓசையைச் செய்யும் கடல் சூழ்ந்த பூமியை, (அதாவது அவனது நாட்டை), ஒருங்கு இழப்ப - ஒருமிக்க முழுவதும் இழக்கும் படியாக, பண்டு - முன்னொரு (புராதன) காலத்தில், கலியால் விளைந்த கதை-கலி என்னும் சனைச்சரனால் உண்டான சரித்திரத்தை; சனைச்சரன் - மந்தமான நடையுடையவன், சேம வேல் மன்ன னுக்கு - நாட்டிற்கு நலம் தரும் காவலாக உள்ள வேல் ஏந்திய அரசனை அத்தருமருக்கு, செப்புவான் - அந்தப் பிரகதசுவ முனிவர் சொல்லத் தொடங்கினர்.

ஆடவரில், தோற்றத்தாலும் திறலாலும் சிறந்தவனைக் காளை என்று கூறுவது கவிமரபு. ஒப்பு. 'கைவரை யெனத் தகைய காளை' (பால. தாடகை. 47.); 'மால் விடையும் பொன் நாகமு நாகமும் நாண நடந்தான்'; (பால. கார்முகப் : 32.); விடையன்னதோர் நடையான்' (அயோத். கங்கைப் : 2) எனவும், மற்றும் 'மல்லன் மறுகின் மட நா குடனுகச் செல்லும் மழவிடைபோய் செம்மாந்து' (153) சென்றான், என நளனை இந்நூலிற் கூறியுள்ளமையுங் காண்க. வேற் காளை : இல் பொருள் உவமையில் வந்த ஆகுபெயர். யாமத் தொலியாழி : உலகம் ஒலியடங்கி உறக்கத்திலிருக்கும் நள்ளிரவில் கடலொலி நன்கு கேட்கப் பெறும் ஆதலால், அதனைக் கொண்டு இரவில் கடல் முழக்கம் மிகுதிப்படும் என்னலுமாம். 'பண்டு கலியால் விளைந்த கதை' என முனிவர் கூறியதால், இந்த நளசரிதம் மகாபாரத காலத்திற்கு மிகப் புராதன காலத்தில் நடந்தது என்பது விளங்கும். மேலும், வான்மீகி இராமாயணம் சுந்தர காண்டத்தில் சீதாபிராட்டியார் அசோக வனத்தில் இருந்து வருந்தியபோது, அத்தேவியார், காவல் அரக்கியர் அச்சுறுத்தலுக்கு அஞ்சாது தமக்குத்தாமே உறுதி கூறிக் கொண்ட இடத்து, உதாரணங்களா கப் பல உத்தம சதிபதிகளைச் சொல்லி அவர்களுள், தமயந்தியையும் நளனையும் குறிப்பிட்டுள்ளமையால், (வான்மீகம். சுந்தர : சருக்கம் 24) இந் நளசரிதம் இராமாயண காலத்திற்கும் முன்னர் அதாவது திரேதாயுகத்திற்கு முன்போ, அல்லது அதன் தொடக்கத்தோ நடந்ததாகும் எனத் தெரிவதால், இதன் தொன்மையின் சிறப்பும் தூய்மையும் புலப்படுவனவாம். (13)

பாயிரம் முற்றும்.

நூல்

1. சுயம்வர காண்டம்

நிடதநாட்டுச் சிறப்பு.

14. காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் றலையவிழப்—பூமடந்தை
தன்னூட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு.

சாகரம் சூழ் நல் நாட்டின் - கடல் சூழ்ந்த நல்ல நாடுகளில், முன் நாட்டு நாடு - முதலில் வைத்து மதிக்கப்பெறும் நிடதநாடு, காமர் கயல் புரள - அழகிய கயல் மீன்கள் புரண்டு புரண்டு சஞ்சரிப்பதனால், (நீர் நிலைகளில் உள்ள) காவி முகை நெகிழ - நீலோற்பல அரும்புகள் கட்டுத் தளர்வுற்று மலர்வதனாலும், தாமரையின் செம் தேன் தலை அவிழ-தாமரைகளின் சிவந்த தேன் நிறைந்த கட்டுக்கள் அவிழ்ந்து சொரிவதாலும், பூ மடந்தை தன் - ஓர் அழகிய மகளின், ஆட்டம் போலும் - நிருத்தனம் செய்வது போன்றதான, தகைமைத்து - சிறப்புடையதாய் விளங்கியது.

சாகரம்: சகரர்களால் தோண்டப் பட்டமையால், தத்திதாந்தமாகக் கடலுக்குப் பெயர் அமைவதாயிற்று; 'சகரர் தொட்டலர்ற் சாகரமெனும் பெயர் தழைப்ப' (கம்ப. பால. அகலிகைப்: 43). இங்கு, தாமரை என்னும் மடந்தையின் முகம் அதன் பூவாகவும், அங்குள்ள கயல்களும் காவி மலர்களும் அம் மடந்தையின் கண்களாகவும் கொண்டு ஒரு குமரி நடனம் செய்வதாகத் தற்குறிப்பேற்ற அணியில் சிறப்பிக்கப் பெற்றது. நடனம் செய்யும்போது அந் நடனமாதின் கண்கள் சலிப்பதும், முகம் அசைவதும் போல அங்குப் புரண்ட காவி மலர்கள், கண்களின் நிறமும் ஒளியும் காட்டி மிளிர்ந்தன; தாமரை மலர் முகம்போல அசைந்து தன் தேனுகிய இனியபாடலே இசைத்தது என்பதாம். இனி, கயல் புரள்வனவும், காவி முகை நெகிழ்வனவும், தாமரை மலர்ந்து செந்தேன் அவிழ்வனவும் ஆகக் கொண்ட நீர் வள நில வளங்கள் ஓங்கப் பெற்ற நிடதநாடு, புவிமாதின் கண்போன்ற சிறப்பையுடையது என அந் நாட்டுவளங் கூறியதும் ஆம்; பூ மடந்தை - புவி மகள்; நாட்டம் - கண். 'கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை யாதலின், நிடதநாட்டை அதன் சிறப்புநோக்கிப் புவிமாதின் கண்ணுக்கு உவமையாகக் கூறப்பெற்றது என்னலும் ஆம், மேலும், கயல் புரள்வதனால் உண்டான அதிர்ச்சி காரணமாகக்

காவியும் தாமரையும் மலர்ந்து தேனைச் சொரிந்தன எனக்கொண்டு, அந் நாட்டு நீர்வளத்தையும், மலர்கள் முதலியவற்றின் செழிப்பையும் விரித்துக் கூறியதும் ஆம். கயல்மீன்கள், நல்ல ஒளி வீசிப் புரண்டு சலிக்கும் இயல்பின ஆதலின், பெண்ணின் மருண்ட கண்களுக்கு உவமையாயின. இச் செய்யுள் தற்குறிப்பேற்ற அணியாகக் கொள்ளற்பாலது.

பி - ம். 1. காவிற்கிளி தூங்கத், காவிற் குளிர் தூங்கத், காவிற் குயில் கூவத்.
2. தாமரையின் செங்கட் டேனுவிழப்.
4. நன்னாட்டு முன்னாட்டும் நாடு. (1)

மாவிந்தநகர்ச் சிறப்பு.

15. கோதை மடவார்தங் கொங்கை மிசைத்திமிர்ந்த
சீத களபச் செழுஞ்சேற்றுல் — வீதிவாய்
மானக் கரிவழுக்கும் மாவிந்த மென்றுளதோர்
ஞானக் கலைவாழ் நகர்.

கோதை மடவார் தம் - பூமாலை அணிந்த இள மகளிரின், கொங்கை மிசை - தனங்களின் மீது, திமிர்ந்த - பூசிய, சீத களப செழும் சேற்றுல் - குளிர்ச்சியுள்ள கலவைச் சந்தனமாகிய சிறந்த குழம்பினால், வீதிவாய் - அந்நகர வீதிகளினிடத்து, மான கரி வழுக்கும் - பெரிய யானைகள் சறுக்கி விழப்பெறும், மாவிந்தம் - மாவிந்தம் என்ற பெயரோடு, ஞான கலை வாழ் ஓர் நகர் உளது - அறிவுக்கு உரிய கலைகள் சிறப்புற்று வாழப்பெறும் ஒரு நகரம் உள்ளது.

கோதை மடவார் : கோதை போன்ற மகளிர் என உவமைத் தொகையாகவும் கொள்ளலாம்; கோதை - மாலை; கோதை-கூந்தலும் ஆம்; 'மழைக் கோதை மானே' (145) என்றதும் காண்க. ஒப்பு :

மைந்தரோ டேடி மகளிர் திமிர்ந்திட்ட
குங்கும வீர்ஞ்சாந்தின் சேறிழுக்கி-எங்கும்
தடுமாற லாகிய தன்மைத்தே தென்னன்
நெடுமாடக் கூட லகம். (முத்.)

சீத களபம் - வடமொழித் தொடர். மான-வலிமையுள்ள என்னலும் ஆம்; (சூடா.) வாழ்தலாவது - சிறப்புடன் ஓங்குதல். கரி - யானை : (துதிக்கையாகிய கரத்தையுடையது).

பி - ம். 1. மடவார்தங் கோதின் மெயிற்றிமிர்ந்த; குலவு மெயிற்றிமிர்ந்த.
2. செழுஞ்சேற்றில் வீதியெலாம்.
3. மாவிந்த மென்பதோர், மாவிந்தை யென்பதே. (2)

16. நின்று புயல்வானம் பொழிந்த நெடுந்தாரை
என்று மகிழ்கமழு மென்பரால்—தென்றல்
அலர்த்துங் கொடிமாடத் தாயிழையா ரைம்பால்
புலர்த்தும் புகைவான் புகுந்து.

தென்றல் - தென்றல் என்னும் இளங்காற்று, அலர்த்து - அசையச் செய்யும், கொடி மாடத்து - கொடிகள் விளங்கும் அந்நகர மாளிகைகளில், ஆய் இழையார் - தேர்ந்து அணிந்த ஆபரணங்களை அணிந்த மகளிர், ஐம்பால் புலர்த்தும் புகை - தம் கூந்தலை உணர்த்த ஊட்டும் அகிற்புகை, வான் புகுந்து - வானத்தைப் போய் அடைந்து, நின்று - அங்குத் தங்கியிருந்து, (அதனால்), வானம் புயல் பொழிந்த - வானில் மேகம் பெய்த, நெடும் தாரை - நீண்ட மழை ஒழுக்குக்கள், என்றும் அகில் கமழும் என்பர் - எப்பொழுதும் அகில் மணம் வீசும் என்று சொல்வர் (ஆன்றோர்): ஆல்: அசை.

தென்றல்: தென் கற்று; ஐம்பால் - ஐந்துவிதமாக அலங்கரிக்கப்பெறும் மகளிர் கூந்தல்; ஐந்து விதமாவன: கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என்பன; நிவா. இது, தற்குறிப்பேற்ற அணி.

பி - ம். 1. நின்ற புயல் வானம். 4. புலர்த்தலம் புகையாற் புலர்ந்த. (3)

17. வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன—கஞ்சம்
கலங்குவ மாளிகைமேற் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு.

வெம் சிலையே கோடுவன - அங்குக் கொடிய விற்களே கோணலாக வளைந்து இருப்பனவாம்; மெல் குழலே சோருவன - அந்நகர மகளிர் மென்மையான கூந்தல்களே தளர்ந்த மென்மை நிலையுடையன; அம் சிலம்பே வாய்விட்டு அரற்றுவன - அந்நகர மகளிர் அணிந்துள்ள பர்தச் சிலம்புகளே வாய்திறந்து முறையிடுவன போல ஒலிப்பன; கஞ்சம் கலங்குவன - கைத் தாளங்களே அன்னார்பாடும் இசையொடு கலந்து ஒலிப்பன; மாளிகை மேல் காரிகையார் கண்ணே - மாளிகைகள்மீது உள்ள அந்நகர மகளிர் கண்களே, மெய் நெறியை விட்டு விலங்குவன - நேர்ப் பார்வை கொள்ளாமல் புரண்டு ஒதுங்கிய மருண்ட பார்வையுடையன.

இதிலுள்ள ஏகார இடைச்சொற்கள் பிரிநிலைப் பொருளன. மகளிர் கூந்தல், குழன்று தளர்ந்து மென்மையுடைமை சிறப் புடைத்து. கஞ்சம் என்பதற்கு நீர், தாமரை, கைத்தாளம், வெண் கலம் என்பன பொருள்களாம். இவற்றுள் நீர் கலங்குவன என்றூரும் உளர். கஞ்சம் என்பதற்குக் கைத்தாளம் என்பதே சிறப்புடன் பொருந் துவது என்னலாம். காரிகையார் : காரிகை - அழகு; இதனையுடைய மகளிர்க் காயிற்று. மகளிர் மேரே விழித்து நோக்குதல் சிறப்பின தன்று. இதனால், அங்ஙகரில் மேற்குறிப்பிட்டவை அன்றி மற்றை மாந்தர் யாவரும் நிலையிற் கோணுபவரும், சோர்வுறுவோரும், துய ரால் வாய்விட்டு அரற்றுவோரும், கலங்குறுவோரும், மெய்ம்மெறி கடந்தோரும் இலர் என அங்ஙகரச் சிறப்புக் கூறியதாகும்.

பி . ம். 3. மாளிகையிற் காரிகையார். (4)

18. தெரிவனநூ லென்றுந் தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே—ஒருபொழுதும்
இல்லா தனவு மிரவே யிகழ்ந்தெவரும்
கல்லா தனவுங் கரவு.

என்றும் நூல் தெரிவன - (அங்ஙகரில் உள்ளார்) என்றும் ஆராய்ந்து தெரிந்து கொள்வன சாத்திரங்களே ; தெரியாதனவும் - யாவருக்கும் தெரியாதவையும், வரிவளையார் தங்கள் மருங்கே - சித்திர வேலைகள் அமையப்பெற்ற வளையல்கள் அணிந்த மகளிர் தம் இடைகளே ; ஒரு பொழுதும் இல்லாதனவும் இரவே - அங்ஙகரில் எப்போதும் இல்லாதவையும் பிச்சைத் தொழில்களே ; எவரும் இகழ்ந்து கல்லாதனவும் - அங்குள்ளார் யாவரும் இழி வாகக் கருதிக் கற்றுக் கொள்ளாதவையும், கரவு - வஞ்சகச் செயல் களே.

தெரியாதனவும்.....மருங்கே : அங்கு வாழும் மகளிர் யாவரும் வடிவின் உத்தமலக்ஷணம் அமைந்தவராதலின், அன்னோர் இடை கள் நுட்பமாய் உள்ளமையால் பிறர் கண்களுக்குப் புலப்படா வாயின. ஒருபொழுதும்.....இரவே ; அங்ஙகரில் ஒளி மிகுதியால் இரவு என்றதே இல்லாதது போன்று விளங்கியது என்பாரும் உளர் ; இரவு இல்லாதது சுவர்க்கமே ஆதலால், அது பொரு ளன்று. அங்ஙகரில் உள்ளார் அனைவரும் சாத்திர ஆராய்ச்சியில் ஈடுபடும் அறிவினர் ; மகளிர் யாவரும் உத்தம லக்ஷணமமைந் தவர் ; அங்குப் பிச்சையெடுத்து வாழ்வார் இல்லை ; வஞ்சக் குணமுள்ளோரும் இல்லை என்பதாம். இதுவும் அங்ஙகரச் சிறப்பே.

ஒப்பு :—

1. நெறிக டந்து பரந்தன நீத்தமே
குறிய ழிந்தன குங்குமத் தோள்களே
சிறிய மங்கையர் தேயு மருங்குலே
வெறிய வும்மவர் மென்மலர்க் கூந்தலே.
(கம்ப. பால. நாட்டுப். 40)

2. அடிக்குரிய தமிழ்த்தொடைக ளலர்க்குரிய
[கடிப்பொழில்கள்
நடுக்குறுவ துகிற்கொடிகள் நஞ்சுறுவ வஞ்சியர்கண்
குடிப்பமது மதுகரங்கள் கோடுவன நீடுசிலை
வடுப்படுவ வுடுப்படுமா வஞ்சப்புறுவ நதிப்புதுநீர்.
(நம்பி திருவிளையாடல் ; திருநாட்டுச் : 12)

பி - ம். 2. ஒருவகையே. (5)

19. மாமனுநூல் வாழ வருசந் தீரன்சுவர்க்கி
தாமரையாள் வைகுந் தடந்தோளான்—காமருபூம்
தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி.

பார் ஆளும் வேந்தன் பதி - அந்த நிடத நாட்டை ஆண்ட அரசன் நளனுடைய தலை நகரமான மாவிந்தமென்னும் நகரம், மா மனு நூல் - மாட்சிமையுற்ற மனு தரும சாஸ்திரம் என்னும் நீதி நூல், வாழ - தழைத்தோங்க, வரு - வந்து தோன்றியவனும், தாமரையாள் வைகும் தடம் தோளான் - தாமரையில் வாழும் திருமகள் வந்து தங்கியுள்ள பெரிய தோள்களையுடையவனும், காமரு பூம் தாரான் - அழகிய பூமாலையுடையவனுமான, சந்திரன் சுவர்க்கி - சந்திரன் சுவர்க்கி என்னும் அரசனது, முரணை நகர் தான் என்று சாற்றலாம் - முரணை என்னும் தலைநகரமே என்று ஒப்புக் கூறலாம்.

ஆசிரியர் புகழேந்தியார் தம்மை ஆதரித்த சந்திரன் சுவர்க்கி என்னும் ஒரு சிற்றரசன் பால் தாம் கொண்ட அன்புடைமை காரணமாகவும், உபகார ஸ்மிருதியாகவும் அவனை இந்நூலில் சில அரிய இடங்களில் எடுத்துக்கூறி, அவ்வள்ளலின் பெயரை இந்நூலின் மூலம் உலகில் அழியாது நிலைநாட்டியுள்ளார். இவ்வாறே ஸ்ரீகம்பநாட்டாழ்வாரும், ஸ்ரீவில்லிபுத்தூராழ்வாரும், முறையே தாம் இயற்றியருளிய இராமாயணத்தும், மகாபாரதத்தும் தம்மை ஆதரித்த, சடையப்ப முதலியாரையும், வரபதியாட்

கொண்டான் என்னும் அரசனையும் சிறப்பித்துள்ளமை காணலாம். மேற்கூறப்பெற்ற சந்திரன்சுவர்க்கியைப் பற்றியும் அவனது முரணை நகரைப்பற்றியும் உள்ள வரலாறுகள் தெளிவாய்ப் புலப்படவில்லை. இவ்வரசன் அரிச்சந்திரன் சுவர்க்கி எனவும் கூறப்பெறுவான்; (57). தாமரையாள் வைகுந் தடந் தோளான்: இது, அரசனை லக்ஷ்மிபதியாகிய திருமால் என்று கூறும் மரபு கொண்டு உரைத்ததாகும். தோளைக் குறித்தமையால் அவனது வீரத்தைக் குறித்ததும் ஆகும். காமரு - காமர் என்ற சொல் உகரச்சாரியை பெற்றது.

பி - ம். 1. மாமறைநூல் வாழ.
2. தாமரையாள் வைகுந் தடமார்பன்; தேமரும், காமருவும்.
3. தானென்றுஞ் சாற்றலாம்; தானென்னச் சாற்றலாம்; நகரென்னச் சாற்றலாம்; நகரமென்னச் சாற்றலாம். (6)

அந்நாட்டு மன்னன் நளன் சிறப்பு

20. ஓடாத தானை நளனென் றுளனொருவன்
பீடாருஞ் செல்வப் பெடைவண்டோ—டூடா
முருகுடைய மாதர் முலைநனைக்குந் தண்டார்
அருகுடையான் வெண்குடையா னுங்கு.

ஆங்கு - அந்த மாவிந்தம் என்னும் நகரத்தில், பீடு ஆரும் செல்வ பெடை - பெருமை நிறைந்த தனது அழகாகிய செல்வத்தையுடைய பெண் (வண்டு), வண்டு ஓடு ஊடா - தன் காதலனுகிய ஆண் வண்டோடு பிணக்கங்கொள்ள, (அதனால் உண்டான அதிர்ச்சியால்), முருகு உடைய - பூக்களில் உள்ள தேன் உடைப்புண்டு, அருகு மாதர் முலை நனைக்கும் - தன்னருகேயுள்ள மகளிர்தம் தனங்களை அத்தேனால் நனையச் செய்யும், தண் தார் உடையான் - குளிர்ந்த பூமாலை யுடையவனும், வெண் குடையான் - வெள்ளைக்குடை யுடையவனும், ஓடாத தானை - பகைவர்க்கு அஞ்சியோடாது (எதிர்த்துப் போர் புரியும் வீரத்தன்மை மிக்க) சேனைகளை யுடையவனுமான, நளன் என்று ஒருவன் உளன் - நளன் என்று சொல்லும் வேந்தன் ஒருவன் இருந்தான்.

செல்வப் பெடை - ஆண் வண்டின் காதற் செல்வம்போன்று அழகுடன் விளங்கிய பெட்டை வண்டு என்னலும் ஒன்றும். ஊடல்: காதலன் காதலிய ரிடையே தோன்றும் சிறு பிணக்கம்.

ஊடுதல் காமத்தை வளர்க்கும் ஓர் இடை நிகழ்ச்சியாகும். 'ஊடுதல் காமத்திற் கின்பம்', (குறள். 1330). வெண்குடை - அரசனது தண்ணளிக்கும் கீர்த்திக்கும் அடையாளமாக உள்ளது; 'என்றுந்தன் வெண்குடைக் கீழ் தீதோவப் பார் காத்த சேய்' (10) என்றமை காண்க. மாதர் - பரிசன மகளிரும் ஆம். நளனுக்கு அருகே பரிசன மகளிர் இருந்தனர் என்பது; 25, 27, 29, 30, 31, 32, 33 பாடல்களாலும் பிறவற்றாலும் அறியலாம். மேலும் அரசனுடைய சிறப்பைக் கூறும் முறையில் அவனுக்குப் பல பரிசன மகளிர் இருப்பதாகச் சொல்வது கவி மரபும் ஆம். 'கோதையர்தங்.....மன்'; ஒப்பு. 20.

பி - ம். 3. முருகுடையான்; முக னணிக்குத் தண்டார். (7)

21. சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் றனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியு மாடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ வுலகு.

தாது அவிழ் பூம் தாரான் - மகரந்தங்கள் சொரியும் பூமாலையணிந்த (அந்) நளன், மாதர் - மகளிர், அருகு ஊட்டும் - சிறிது சிறிதாக (அன்புடன் பாலும் பழமுமாகிய உணவை) ஊட்டி வளர்க்கும், பைம் கிளியும் - பச்சைக் கிளியும், ஆடல் பருந்தும் - அக்கிளி முதலிய பறவைகளைக் கொன்று உண்ணும் பருந்தும், ஒரு கூட்டில் வாழ - சேர்ந்து உறவு கொண்டு ஒரு கூட்டினுள் வாழ்ந்து வரும்படி, சீதமதி குடைகீழ் - குளிர்ந்த தன் சந்திர வட்ட வெண்குடைக் கீழே, அறம் செம்மை கிடப்ப - தருமம் சிறப்புடன் தங்கியிருந்து வாழ, உலகு - உலகத்தை, தனி காத்தான் - ஒப்பற்ற முறையில் காத்து ஆண்டு வந்தான்.

மதிக்குடை - சந்திர வட்டக் குடை; குடை வெண்மையும் தண்மையும் உடைமையால், மதிக்குவமை; கம்ப. பால. அரசியற்: 9. ஆடல் - அடுதல் என்பதன் விகாரம். அருகூட்டுதல் - சிறிது சிறிதாக ஊட்டுதல்; அருகுதல் - சிறிதாகல் அல்லது குறைவாதல்; இக்கருத்தை, 'மொய்ம் மலரைத் தும்பி அருகுடைக்கும்' (336) என இந்நூலாசிரியர் பின்னும் கூறி இதனை விளங்க வைத்தமை காண்க. கிளியை மகளிர் அருகூட்டி வளர்த்தல்; கம்ப. பால. பூக்கொய்: 30; அயோத். தைலமாட்டுப்: 40. 'பைங் கிளியும்.....ஒரு கூட்டில் வாழ'; ஒப்பு: 'புலிப்போத்தும் புல்

வாயும், ஒரு துறையில் நீருண்ண வலகாண்டோ னுளனெருவன்"; (கம்ப. பால. குலமுறை : 5).

பி - ம். 1. யறங்கிடக்கத். 4. ஒரு கூட்டில் வாழு மூலகு. (8)

நளன் பூஞ்சோலை சென்றமை

22. வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனுடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

வண்டு - வண்டுகள், தேம் - இனிப்பான, குவளை தேன் ஆடி - குவளை மலரில் உள்ள தேனில் குளித்து, சிறகு உலர்த்தும் - தம் சிறகுகளை உலர்த்திக் கொள்ளும், நீர் நாடன் - நீர் வளம் மிக்க நிடத நாட்டரசனை நளன், பூ நாடி - பூக்களை அடைய விரும்பி, சோலை புக - (தனது நகர்ப்புறத்தேயுள்ள) பூஞ்சோலையில் புகுவதற்கு, வாங்கு வளை கையார் - கழன்றோடும் வளையல்களைக் கொண்ட கைகளையுடைய அந் நகர மகளிர், வதன மதி பூத்த - முகமாகிய சந்திரனிடத்துப் பூத்து விளங்கிய, பூம் குவளை காட்டு இடையே - குவளை மலர்க் காடுபோல் அடர்ந்து விளங்கிய அன்னோர் கண்களாகிய காட்டின் இடை வழியாக, போயினான் - சென்றான்.

மலர்களை அடையச் சோலைக்குச் சென்ற நளன், வழியில் அந்நகர மகளிர் பலர் திரண்டு அவனது வடிவழகில் ஈடுபட்டுத் தம் நோக்கிய கண்கள் இமையாமல் விரகதாப மேலீட்டால் உடல் மெலிவுற்றுத் தம் கை வளைகள் கழன்று வீழவும் அதனையுணராமல், அவனையே நோக்கி நின்றார் என்பதாம். மகளிர் பலர் திரண்டு நெருங்கவே எங்கும் அன்னோர் கண்கள் நிறைந்தமையால் அத்தோற்றம் குவளைக்காடு போல விளங்கியது. சோலையில் உள்ள பூக்களை நாடிச் சென்றவன், அடர்ந்த ஒரு பெரிய குவளைக் காட்டிடையே கடந்து செல்ல வேண்டியதாயிற்று. சிறிய சோலையில் உள்ள பூக்களை நாட, நளன் பெரிய குவளைக் காட்டைக் கடக்க வேண்டிய ஒரு நிலைக்குள்ளானான் என்ற கற்பனை நயம் வியக்கத்தக்கதாம். சோலை, சிறிது; காடு, பெரிது; ஆதலின், குவளைக்காடு என்னப்பட்டது. வாங்குவளை : கழலும் வளையல்; விக்கிரம சோழனுலா. 112. வதனமதி பூத்த பூங்குவளைக் காடு : மகளிர் முகங்களுக்கு முழுமதியும், அவர்கள் கண்களுக்குக்

குவளை மலர்களும் உவமைகள். மதியிடையே குவளைகள் மலர்ந்தன என்றது இல் பொருளுவமையான அதிசய நிகழ்ச்சி. இனி, வதனமதி என்பதை, நளனுடைய முகத்திற்கு ஆக்கி, அதனைக் கண்டு, மகளிர் கண்களாகிய குவளைகள் மலர்ந்தன என இயற்கை நயம் தோன்றப் பொருள் கூறுதலும் சிறப்புடைத்தாகும். காட்டிடையே; ஏகாரம், அக்காட்டின் பரப்பின் மிகுதியைக் குறித்தபடி. இச் செய்யுள்,

துண்ணெனுஞ் சொல்லாள் சொல்லச் சுடர்முடி துறந்து தூய
மண்ணெனுந் திருவை நீங்கி வழிக்கொளா முன்னம் வள்ளல்
பண்ணெனுஞ் சொல்லி னார்தந் தோளெனும் பணைத்த வேயும்
கண்ணெனுங் கால வேலு மிடைநெடுங் கானம் புக்கான்;

(கம்ப. அயோத். கைகேசி சூழ்வினைப் : 84) என்பதை அடியொற்றி அமைந்தது என்னலாம். ஒப்பு : கம்ப. ஆரணிய. 77. (9)

23. வென்றி மதவேடன் வில்லெடுப்ப வீதியெலாம்
தென்றன் மதுநீர் தெளித்துவர—நின்ற
தளவேனன் மீதலருந் தாழ்வரைசூழ் நாடற்
கிளவேனல் வந்த தெதிர்.

நின்ற தளவு - வளர்ந்தோங்கி நின்ற முல்லைக் கொடிகள், ஏனல் மீது அலரும் - தினைப் பயிரின்மீது படர்ந்து மலர்ந்து விளங்கும், தாழ்வரை சூழ் நாடற்கு - மலையடிவாரங்கள் சூழ்ந்த நிடத நாட்டையுடைய நளனுக்கு, எதிர் - எதிரே, வென்றி - யாரிடத்தும் வெற்றி கொண்டு விளங்கும், மத வேள் - மன்மதனாகிய வேள், வில் எடுப்ப - தன் கரும்பு வில்லை எடுத்துக் காவலாக முன் வரவும், வீதி எலாம் - வழி எங்கும், தென்றல் - தென்றல் காற்றானது, மது நீர் தெளித்து வர - தேனையே நீராகக் கொண்டு தெளித்து வீசி வரவும், இளவேனல் எதிர் வந்தது - இளவேனல் காலத்திற்கு உரிய வஸந்தன் (நளனை) எதிர் கொண்டழைக்க வந்தான்.

மதவேள் - மதன் ஆகிய வேள்; மதன் : மன்மதன் என்பதன் முதற்குறை; மதனன் என்ற வடசொல்லின் இடைக்குறையும் ஆம். வேள் - வடிவிற் சிறந்தோன்; மன்மதன் உருவிற் சிறந்தோன்; மத, என்னும் அடை, குமரவேளினின்று பிரித்துக் காட்ட. இனி, மதவேடன் - மதன் ஆகிய வேடன் என்னலும் அமையும்; காமுகரைத் தன் அம்புகளை எய்து வருத்தித்

தன் வசப்படுத்துபவ னுதலால். வீதி - வழி; 'கள்ள மூப்பி னந்தணன் கனிந்த மூப்பின் வீதியே' (சீவக. 2039) என்றதும் காண்க. மேலும், வசந்தன் நளனே எதிர்கொண்டழைத்ததாக உள்ள இடம் சோலை ஆதலின், வீதியெலாம் என்றதற்கு அச் சோலையின் வழி நெடுக என்பதே ஏற்ற பொருளாகும். மது நீர் - நறுமணங் கலந்த நீரும் ஆம். தளவு - முல்லை; இது தளவம் எனவும் வழங்கும். தளவு : முல்லை நிலக் கருப்பொருளு மாம். எனல் குறிஞ்சி நிலப் பொருள் ஆயினும் தாழ்வரை சூழ் நாடன் என்றமையால், முல்லையும் குறிஞ்சியும் கலந்துள்ள மலையடி வாரமான இடத்தைக் குறிப்பித்த திணை மயக்கமும் ஆம். இச் செய்யுள், ஒரு பேரரசனே மற்றொரு சிற்றரசன் தன் பரிவாரங்களோ டும் ஏற்ற சிறப்பில் எதிர் கொண்டழைத்து உபசரிக்கும் முறையில் கூறப்பெற்றுள்ளது. வசந்தன் எதிர் கொண்டழைத்தான் எனக் கூறியதால், அது வசந்தகால மென்பதோடு, அக்காலம் மங்களகர மான மண நிகழ்ச்சிக்கு உரிய பருவம் ஆதலின், நம் சரிதத் தலைவன் நளனுக்கு இனி நிகழக் கூடிய மணவினையைச் சூசகமாக நம்மனோர்க்கு முன்னெடுத் துரைத்தார் கவிஞர் பெருமான் என்க. வேனில் என்பது வேனல் எனவும் வழங்கும்; சீவக. 2578.

பி - ம். 1. வென்றி மதனவேள். 3. குளிர் வேனல்.
4. இளவேனில் வந்தெதிர்; வந்த தெதிர்ந்து. (10)

24. தேரிற் றுகளைத் தீருந்தீழையார் பூங்குழலின்
வேரிப் புனனனைப்ப வேயடைந்தான்—கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய் யோற்கொதுங்கிப்
புக்கிருந்தா லன்ன பொழில்.

கார் வண்டு - கரிய வண்டுகள், தொக்கு இருந்து - தொகுதியாகக் கூடியிருந்து, ஆலித்து உழலும் - ஒலித்துச் சுழன்று கொண்டிருப்பதும், தூங்கு இருள் - செறிந்த அல்லது அடர்ந்த இருளானது, வெய்யோற்கு ஒதுங்கி - சூரியனுக்கு எதிர்ப் பட அஞ்சி விலகி, புக்கு இருந்தால் அன்ன - புகுந்து இருந்தால் அது எவ்வாறு இருக்குமோ அது போன்றுள்ள, பொழில் - (இருண்ட) சோலையை, தேரில் துகளை - நளன் தன் தேர் செல்வ தால் உண்டாகிய தூசிகளை (அல்லது புழுதிகளை), திருந்து இழை யார் - தேர்ந்தெடுத்த (அல்லது சிறந்த) ஆபரணங்கள் அணிந்த, (அம் மன்னன் உடன் சென்ற) பரிசன மகளிர், தம் - தங்கள், பூம் குழலின் - பூக்கள் சூட்டப்பெற்ற கூந்தலிலிருந்து துளிக்கும், வேரி

புனல் நணைப்பவே - தேனுகிய நீர் நனைத்து அடக்கி விடவே, அடைந்தான் - சோலையிற் போய்ச் சேர்ந்தான்.

உழலும், அன்ன, பொழில், நணைப்ப, அடைந்தான் என இயைக்க. தூங்கிருள்.....பொழில்; 'பரிதியஞ் செல்வன் விரி கதிர்த்தானைக், கிருள்வகூப் புண்ட மருள்படு பூம் பொழில்'; 'வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்;' (மணி. 4. 1—2; 5.) என்றமை நோக்குக. திருந்திழையார்.....நணைப்ப; இதனுல் அரசனுடன் பரிசன மகளிரின் மிகுதியையும், அன்னுர் செல்வச் சிறப்புங் குறித்தபடியுமாம். இனி, தூங்கிருள்—புக்கிருந்தா லன்ன, கார்வண்டு தொக்கிருந்தா லித்துழலும் பொழில் என இயைத்துப் பொருள் கூறினுரும் உளர். இருள் புக்கிருந்தாலன்ன பொழில்; 'அல்லென்ற சோலையழகு' (175) என்றமையும் ஒப்பு நோக்குக.

பி - ம். 2. புயலடைய வெற்படைந்தான். (11)

சோலையில் அன்னப்புள் வந்ததும், அதனை மங்கையர் பற்றி அரசன்முன் வைத்ததும்

25. நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்தான்
முன்னப்புட் டோன்று முளரித் தலைவகும்
அன்னப்புட் டோன்றிற்றே யாங்கு.

ஆங்கு - அப் பூஞ்சோலையில், மாண் நிறத்தான் முன் - மாட்சியுடைய மார்பினனை அந்த நளன் எதிரே, அப்பு உள் - நீரின் உள்ளிருந்து, தோன்று - தோன்றி வளரும், முளரி தலை வைகும் - தாமரை மலரினிடத்தில் தங்கியிருக்கும் (இயல்புடைய), அன்னபுள் - ஓர் அன்னப்பறவை, நீள் நிறத்தால் - தனது நீண்டு பரவிய உடலின் வெண்ணிறத்தினுல், சோலை நிறம் பெயர - அந்தப் பூஞ்சோலையின் கருநிறமானது அதனிடம் விட்டு அப்புறம் அகன்றது போல மாறவும், தன் தாள் நிறத்தால் - தனது பாதங் களின் செந்நிறத்தால், நீடிய பொய்கை தலம் சிவப்ப - பரந்து நீண்ட அங்கிருந்த தடாகத்தின் இடம் சிவந்து தோன்றவும், தோன்றிற்று - தென்பட்டது. ஏ : ஈற்றசை.

மாணிறத்தான் முன், அன்னப்புள், பெயர, சிவப்ப தோன் றிற்று என இயைக்க. தாமரை, நீரில் உண்டாவதால் அப்புட் டோன்று முளரி எனப்பட்டது. முளரித்தலை வைகும் அன்னப்

புள்; 'நற்றுமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற் போல்' (மதுரை. 24); 'செங்கமல நாண்மலர் மேல் தேனுகரு மன்னம் போல்'; (நாச்சியார் திருமொழி. 7:7). பூவினிடையன்னம் (43);; 'பூமனிவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாம்' (39) என அவ்வன்னப் புள் வாய்மூலமாகவும் கூறப் பெற்றுள்ளமையால், அன்னப் புள் தாமரையில் தங்கியிருக்கும் என்பதும், அதன் உடலின் நிறம் வெண்மையும், தாள்களின் நிறம் செம்மையும் ஆம் என்பதும் விளங்கும். ஆடவருக்குத் தோள்வலியின் தோற்றமே சிறப் புடையதாகலின், நளன் இங்கு மாணிறத்தான் என்னப்பட்டான். நிறம் - மார்பு. சடாயுவின் உடல் நிறத்தோற்றத்தை ஸ்ரீகம்ப நாட்டாழ்வார், 'மானிற விசும்பொளி மறையத் தன்மணிக், கானிறச் சேயொளி கதுவக் கண்ணகல், நீனிற வரையினிற் பவழ நீள்கொடி, போனிறம் பொலிந்தெனப் பொலிகின் றுன்றனை', (ஆரணிய: 180) எனச் சிறப்பித்தமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

பி - ம். 2. மாணிறத்த. 4. அன்னப்புட் டோன்றிற் றருகு. (12

26. பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமல்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றுன் பெயர்ந்து.

மேதி குலம் - எருமைகளின் கூட்டம், ஏறி - நீரிலிருந்து கரையேறி, மென் கரும்பை - (அயலே இருந்த கொல்லையில் உள்ள) மென்மையான கரும்புகளை, கோதி கடித்து - மெதுவாய்ச் சிறிது சிறிதாகக் கடித்து, முத்து உமிழும் - அக்கரும்பினுள் இருந்த முத்துக்களை வாயினின்றும் வெளியே துப்பிவிடும், கங்கை நீர் நாடன் - கங்கை நதி பாயப் பெற்று நீர் வளமோங்கிய நிடத நாட்டு அரசனை நளன், (தன் அருகேயிருந்த மகளிருள் ஒருத்தியை நோக்கி), 'பேதை - பெண்ணே! மட அன்னம் தன்னை - இந்த இள அன்னத்தை, பிழையாமல் - தப்பி ஓடவிடாமல், பெயர்ந்து - நீ சென்று, பிடித்து தா என்றுன் - பிடித்து வந்து என்னிடம் கொடு' என்று கூறினன். தான்: அசை.

பேதை - பெண்; பெண்களுக்கு உரிய பேதைமைக் குணம் அமைந்தவள் என்னும் குறிப்பு; 'பேதைமை என்பது மாதர்க் கணிகலம்' என்றுராகலின். அண்மை விளியாதலின் பேதை என

இயல்பாய் நின்றது. பிழையாமல், என்றது, 'நீ பேதை ஆதலின் அதனை நீ தவிர விடுவாய்; அவ்வாறின்றிப் பிடித்துவா' என ஊக்கி அறிவுறுத்தியதும் ஆம். மென் கரும்பு - கடிப்பதற்கு மிருதுவாயும் சாறு நிரம்பியதுமான கரும்பு. முத்துப் பிறக்கும் இடங்கள் இருபதுள் கரும்பு ஒன்று என்பது இந்நூலாசிரியர் இயற்றியருளிய இரத்தினச் சுருக்கம் என்னும் நூல் குறிப்பதுங் காண்க. இச்செய்யுள் நிடத நாட்டின் நீர் நில வளங்களின் சிறப்புக்களைக் கூறியதும் ஆம்.

பி - ம். 3. முத்தரிக்குங் கங்கைசூழ் நாடன். (13)

27. நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வலைக்கின்ற தொப்பவே—நீடியநல்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தன்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து.

மட அன்னத்தை - அந்த அழகிய அன்னப்புள்ளை, நல்ல மயில் குழாம் ஓடி வலைக்கின்றது ஒப்பவே - அழகிய மயில் கூட்டம் ஓடி வலைக்கின்றது போலவே, நீடிய நல் - நீண்டு அழகாய் அமைந்த, பைம் கூந்தல் வல்லியர்கள் - செழித்த பசுமையான கூந்தலையுடைய கொடி போன்ற அப்பெண்கள். நாடி - நாடிச் சென்று, பற்றி கொடு போந்து - அதனைப் பிடித்துக் கொண்டு போய், தாழ்ந்து - வணக்கத்தோடு, தம் கோவின் முன் வைத்தார் - தம் அரசனை நளன் எதிரில் வைத்தார்கள்.

மடம் - அழகு, இளமையும் செழுமையும் ஆம்; பைம் - பசுமையான, அதாவது செழித்த. கொடு போந்து: கொடு, கொண்டு என்பதன் இடைக்குறை; 'பிறக்கும் பொழுது கொடு வந்ததில்லை'; (பட்டினத்தார் பாடல்). வைத்தார் தாழ்ந்து: தாழ்தல் ஆவது, அரசன்முன் காட்டவேண்டிய வணக்கத்துடன். அன்னத்தைப் பிடிக்க மயில் குழாம் சென்றன என்பது; பறவையைப் பிடிக்க வேறு பறவைகளை ஏவியது என்றும் சாதி ஒற்றுமை காட்டியவாறும். மகளிர்க்கு மயில்கள்; சாயலாலும், நடையாலு மென்க. அரசன் ஒருடெண்ணை ஏவப் பலர் சென்று பிடித்து வந்தது அவனது அருளைப் பெறும் ஆசையால் என்க.

பி - ம். 2. ஓடிவலைக்கின்ற வொக்கவே—நீடியசீர்.
3. பற்றியே தாமெடுத்துத்; பற்றிப் பிடித்தெடுத்துத். (14)

28. அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

அங்கு - அப்பொழுது, ஆய் இழையார் - தேர்ந்தணிந்த ஆபரணங்களையுடைய அம் மகளிர், அன்னம் தனை பிடித்து - அவ்வன்னப் புள்ளைப் பிடித்து, மன்னன் திருமுன்னர் வைத்தலுமே - அரசன் சங்கிதி முன்பு கொண்டுபோய் வைத்த வுடனே, அன்னம் - அந்த அன்னப் புள், மலங்கிற்று - மயக்க முற்றது; தன்னுடைய வான் கிளையை தேடி - தன்னுடன் இருந்த பெரும் சுற்றமாகிய மற்ற அன்னங்களைத் தேடிக் காணுமல், மன்னவனை கண்டு - நளனைத் தன்னெதிரே கண்டு, கலங்கிற்று - மனக்கலக்க முற்றது.

திரு: அரசனது பெருமை நோக்கி வந்த சிறப்புச் சொல். வைத்தலுமே: ஏகாரம் உடனிகழ்ச்சிப் பொருளது; மலங்கிற்றே, கலங்கிற்றே என்பனவற்றின் ஏகாரங்கள், அசை நிலைகள். மலங்குதல் - துயரத்தால் நினைவழிந்து மயக்க முறுதல்; கலங்குதல் செய்வகையறியாது குழப்ப முறுதல். மலங்குதல்: நினை வழிந்த தன்மையும், கலங்குதல் நினைவிருந்தும் செய்வகையறியாது தத்தளித்த நிலையும் ஆம். அங்கு: அவ்விடத்து என்று, இடத்தைக் குறித்தலும் ஆம்.

பி - ம். 2. திருமுன்பு வைத்தலுமே, வைத்ததற்பின்.
3. வான் கிளையைக் காணு. (15)

29. அஞ்சன் மடவனமே யுன்ற னணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகா ணென்ருன் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

களி வண்டு மாண பிடித்த தார் மன் - தேனைக் குடித்து மயங்கிய வண்டுகள் மிகுதியாகப் பற்றி மொய்த்திருக்கும் மாலை அணிந்த அரசனை நளன், (அதனை நோக்கி), 'மட அனமே - அழகிய அன்னமே! உன் தன் அணி நடையும் - உனது அழகிய நடையும், வஞ்சி அனையார் - வஞ்சிக் கொடி போன்ற இம் மகளிர்,

மணி நடையும் - சிறந்த நடையும், (ஆகிய இவற்றில்) விஞ்சியது காண - எது மேம்பட்டது என்பதைக் கண்டு அறிய, பிடித்தது காண் - உன்னைப் பிடித்ததாகும்; இதனை நீ தெரிந்து கொள்! ஆதலின், அஞ்சல் - நீ பயப்படாதே!' என்றான் - என்று அதற்கு அச்சம் தணிய ஆறுதல் கூறினான்.

மாண - மிகுதியாக; 'மலையினும் மாணப் பெரிது' (குறள். 124); இனி, மாட்சிமையுற, அழகுற எனலும் ஒன்றும். களி வண்டு.....மன் - அவன் மாலையில் வண்டுகள் வந்து நிறைய, அவை கொடுக்கும் இடரைக் கருதி அவற்றை விரட்டாமல் அருள் புரியும் அரசனது கருணைத் தன்மையை அன்னம் உணரக் குறிப்பிட்டபடியும் ஆம். கான் என்பதை, முன்னிலை அசையாகக் கொண்டாரும் உளர். அஞ்சல் என்ற சொல்லை முன் வைத்துக் கூறியது, விரைவில் அதன் அச்சத்தைப் போக்க வேண்டும் என்ற கருணையால் என்க. இது, 'கண்டேன் சீதையை' என்று அநுமன் இராமபிரானுக்குக் கூறியதை ஒக்கும். வஞ்சி - சிந்திற் கொடி; இது வானரம் என்ற வடமொழிப் பெயர் பெறும்; (பிங்).

பி - ம். 2. வஞ்சியிடையார் மடநடையும்; விஞ்சவே, நெஞ்சுறவே.
3. காணப்பிடித்ததா மென்றான். (16)

30. செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடித்த தனியன்னம்—வெய்ய
அடுமாற்ற மில்லா வரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான்.

செய்ய கமல திருவை - சிவந்த தாமரை மலர்மீது வாழும் திருமகளை, நிகர் ஆன - அழகில் ஒத்து விளங்கிய, தையல் பிடித்த தனி அன்னம் - அம் மடந்தை பிடித்து வந்த ஒப்பற்ற அன்னப்பறவை, வெய்ய - கொடிதான, அடு மாற்றம் இல்லா - கொல்லும் பகைமைத் தன்மை இல்லாத, அரசன் சொல் கேட்டு - மன்னன் நளனது அக்கருணை மொழிகளைக் கேட்டு, தான் தடு மாற்றம் தீர்ந்தது - தான் கொண்ட தத்தளிப்பு நீங்கிற்று. ஏ: அசை.

திருவை: அழகிற் சிறந்த பெண்ணைத் திருமகளுக்கு உவமிப்பது மரபு; தையல் - கட்டழகு உள்ள பெண்ணும் ஆம்; (திவா). மாற்றம் - பகைமை; மாற்றலர் என்பது பகைவர் என்னும் பொரு

ளுடைமை காண்க. தான் என்பதை அசையாகக் கொண்டாரும் உளர். சில சுவடிகளில் இச் செய்யுள் இல்லை.

பி - ம். 1. திருவை நிகரென்னும்.
3. கெடுமாற்ற மில்லாதான் றன்மாற்றங்கேட்டுத். (17)

அன்னம் தமயந்தியின் சிறப்புரைத்தமை

31. திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே யுன்றன்
இசைமுகந்த தோளுக் கிசைவாள்—வசையில்
தமையந்தி யென்றேதுந் தையலாண் மென்றோள்
அமையந்தி யென்றே ரணங்கு.

'திசை முகந்த - திசைகள் நான்கையும் தன்னுள் அடக்கிக் கொண்ட, வெண் கவிகை தேர் வேந்தே - வெண்கொற்றக் குடையையும் தேரையுமுடைய அரசனே! உன்றன் - உனது, இசை முகந்த - கீர்த்தியை முகந்து கொண்ட, தோளுக்கு - புயங்களுக்கு, இசைவாள் - பொருத்தமானவள், வசை இல் - குற்றமற்ற, தமயந்தி என்று ஓதும் தையலாள் - தமயந்தி என்று சொல்லப் பெறும் பெண் ஆவள்; (அவள்) மென்தோள் அமை அந்தி - மூங்கில் போன்ற அழகுள்ளவள் என்று சொல்லப்பெறும், ஓர் அணங்கு - ஒரு தெய்வப் பெண் போன்றவள்,' (என்று அவ் வன்னம் கூறிற்று).

இஃது அன்னம் நளனுக்கு உரைத்தது. முகத்தல் - மொள்ளுதல், அதாவது தன்னுள் அடங்குமாறு அள்ளி எடுத்துக் கொள்ளுதல்; முகத்தலளவை என்பதையும் நோக்குக. இசை முகந்த.....கிசைவாள்; இசை: மூன்னது கீர்த்தி, பின்னது பொருத்தம். வசை இல் - குற்றமற்ற; அதாவது, குணத்தாலும் எழிலாலும் குற்றமில்லாத. தமயந்தி என்ற சொல், இங்கு எதுகை நோக்கித் தமையந்தி எனத் திரிந்து வந்தது; தமனர் என்ற முனிவர் வரத்தின் அருளாற் பிறந்த காரணமாய்த் தத்திதாந்தமாக, தமயந்தி என்னும் பெயர் பெற்றவள்; (வியாஸ மகாபாரதம். வனபருவம்; நளோபாக்யானம்); (நைடதம் - அன்னத்தைத் தூது. 9). அந்தி - அந்தத்தை (அழகை) யுடையவள். அணங்கு - பெண் என்ற பொதுப் பெயர். அணங்கு, தையல் என்பன அழகைக் குறிக்கும் பெயர்களும் ஆம். (18)

32. அன்ன மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொள்ளச்—சொன்னமயில்
ஆர்மடந்தை யென்ரு னனங்கன் சிலேவளைப்பப்
பார்மடந்தை கோமான் பதைந்து.

அன்னம் மொழிந்த மொழி - அன்னம் சொன்ன அவ் வார்த்தைகள், புகா முன் - தன் செவியிற் புகு முன்னமே, கன்னி மன கோயில் புக்கு கை கொள்ள - அப் பெண் தமயந்தி, தனது மனமாகிய கோயினுட் புகுந்து அதனைத் தனக்கு உரிமையிட மாக்கிக்கொள்ள, அனங்கன் சிலே வளைப்ப - மன்மதன் (காம வேட் கையை உண்டாக்கத் தன் கரும்புச்) சிலேயை வளைத்து மலரம்பு களைத் தொடுக்கத் தொடங்க, பார் மடந்தை கோமான் - நில மகளின் தலேவனை அந்த நளன், பதைத்து - துடித்து, 'சொன்ன மயில் - நீ கூறிய மயில் போன்ற அப் பெண், யார் மடந்தை என்ரு ன் - யாருடைய புதல்வி?' என்று அவ்வன்னத்தைக் கேட்டான்.

அன்னமுரைத்த.....மனக்கோயில் கைக்கொள்ள : அன்னம் தமயந்தியைப்பற்றிக் கூறிய உடனே அப் பெண்ணின்பால் நளன் மனம் முற்றும் ஈடுபட்டது என்பதாம். மயில் : மயில் போன்ற சாயலுடைமையால் தமயந்திக்கு உவமையாகு பெயர். இனி, சொன்ன மயில் என்பதற்கு சுவர்ணத்தால் அமைந்த மயில் போன்றவள் எனப் பொருள் தொனிப்பதுங் காண்க. பூமிக்குத் தலேவனை அரசனேப் பார் மடந்தை கோமான் என்றும் கூறுவது கவிமரபு. அரசனேப் பிருதிவீபதி, பூபதி என்பனவும் நோக் குக. பதைத்தது தமயந்திபால் கொண்ட வேட்கை நோயால். ஆர் : 'ஆருமிலால்'; (69); 'ஆரே துயருடையா ராங்கு' (264) என்றமை நோக்குக. இது யார் எனவும் வரும். (19)

33. எழுவடுதோண் மன்னு விலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற் சாய்ந்த குவளே—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயு மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு.

(அதனேக் கேட்ட அன்னம்), 'எழு அடு தோள் மன்னு - தூணேத் (தன் உருவாலும், வலிவாலும்) வென்ற ஒத்த தோள்களே யுடைய அரசனே! இலங்கிழை - அப்பெண், உழுநர் - உழவர், ஏர் தூண்ட - வயலில் ஏரிற் பூட்டிய எருதுகளேத் தூண்டி ஓட்ட,

கொழு நுதியில் சாய்ந்த - அந்த ஏர்க் கொழுவின் நுனியிற்பட்டு வேரறுந்து சாய்ந்து விழுந்து கிடந்த, குவளை - கருநீலச் செடிகளை, மடை மிதிப்ப - உழுசாலான மடையில் அவர்கள் மிதித்துச் செல்ல, தேன் பாயும் - அந்தக் குவளைச் செடிகளில் இருந்த மலர் களிலிருந்து தேன் பெருக்கெடுத்துப் பாய்வதால், மாடு ஒலி - பக்கங்களின் ஒலியையுடைய, நீர் நாடன் - நீர் வளம்மிக்க நாட்டை யுடைய அரசனும், கொடை விதர்ப்பன் - கொடைத் தொழிலை யுடையவனுமான விதர்ப்ப ராஜனுடைய, கொம்பு - பூங்கொம்பு போன்ற அழகிய பெண் ஆவள்'; (என்று நளனுக்கு உரைத்தது).

எழு: கணையமரமும் ஆம், இல்லிங்கிழை - வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. மாடு - பக்கம்; தலை மாடு என்பதுபோல. கொடை விதர்ப்பன் என்றமை, அவன் தன் மகளை உனக்கு மணஞ் செய்து கொடுப்பான் என்னுங் குறிப்பை உணர்த்தியதுமாம். கொம்பு, பூங்கொம்பு போன்றவள்; உவமை ஆகுபெயர்; 'கொம்பினைக் காணுந் தோறுங் குரிசிற்கு மன்னதே யாம்'; (கம்ப. பால. கார்முகப்: 43). விதர்ப்பம் இப்போது பீஹார் என்று வழங்கப்பெறும் நாடு.

பி - ம். 1. எழில் படுதோண். 2. கொழுநுதியிற் சார்குந்தவளை—உழவர். 3. அடிமிதிக்கத், மடைமிதிக்கத். 4. கொடை விதர்ப்பன் பெற்ற கொடி. (20)

34. நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணி வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு.

நால் குணமும் - (அவளுக்கு அமைந்த, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும்) நால்வகைக் குணங்களும், நால் படை ஆ - தேர், கரி, பரி, காலாள் என்னும் சதுரங்க சேனைகளாக, ஐம் புலனும் - அவள் தன் மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து பொறிகளால் உணரப்பெறும் ஐவகை உணர்ச்சிகளும், நல் அமைச்சா - அறிவிற் சிறந்த நல்ல அமைச்சர்களாக, ஆர்க் கும் சிலம்பே - ஒலி செய்யும் அவள் அணிந்துள்ள பாதச் சிலம்பு களே, அணி முரசா - பெருமைக்குரிய முரசங்களாக, வேல் படை யும் வாளுமே - வேலாயுதங்களும் வாள்களும், கண்ணி - அவளு டைய கண்களே ஆக, வதன மதி குடை கீழ் - அவளது முகமாகிய

சந்திர வட்டக் குடையின் கீழே நின்று, பெண்மை - பெண்மை என்பது, அரசு ஆளும் - ஆட்சி புரிவதாகும்.

பெண்மையைக் காப்பன, அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு என்னும் நால்வகைக் குணங்களே ஆதலின் அவற்றை அவ்வரசி யலுக்கு உரிய நால்வகைப் படைகளாகவும், மெய் வாய் கண் மூக்கு செவி என்பன வழியே சிதற விடாமல் மனத்தை அறிவுறுத்தி அடக்கும் ஆதலின், அவ்வைம்புல உணர்ச்சிகளையே அமைச்சர்க ளாகவும், ஒலிக்கும் அவள் சிலம்புகளே அவ்வரசுக்குரிய முரசுகளாக வும், கண்களே வேலும், வாளுமாகிய போர்ப்படைக்கருவிகளாகவும், முகமே வெண்கொற்ற மதிக்குடையாகவும் கொண்டு பெண்மை என்பது அவளிடம் சிறந்து அமைந்து ஆட்சிபுரிகின்றது எனச் சிறப்பிக்கப்பெற்ற திறம் போற்றத் தக்கதாகும். மடம் - பெண் மைக்குரிய கொண்டது விடாமை என்னுங் குணம்; அதாவது; கண்டறியாதவற்றைக் கண்டுழியும், அது தன் மீதுபட்ட இடத் தும் உண்டாகும் ஓர் அருவருப்பான உணர்ச்சி; (பிங்,); தொல். பொருள்: சூ. 99 உரை காண்க. கண்ணே வேற்படையும் வாளுமா என முன்கூறிய முறையே இயைத்துப் பொருள் கொள்ளலாம். இனி, ஆளுமே பெண்மை யரசு என்பதற்குப் பெண்மை என்னும் உலகத்தைத் தமயந்தி ஆள்கின்றாள் என உரை கூறினுமாம். இது முதல் (37) முடிய உள்ள 4 பாடல்களால் அன்னம் தமயந்தியின் எழில் குணம் முதலான சிறப்புக்களைக் கூறியது காண்க.

பி - ம். 1. நாற்படையாய்; நல்லமைச்சாய்.
2. யணிமுரசாய்ப்—போர்க் கயலும். (21)

35. மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு—நாட்டேன்
அலம்புவார் கோதை யடியிணையில் வீழ்ந்து
புலம்புமா நூபுரங்கள் பூண்டு.

நூபுரங்கள் - சிலம்புகள், மோட்டு இளம் கொங்கை - உயர்ந்து வளர்ந்து வரும் அவளது இளங் கொங்கைகளை, இடை - அவளுடைய (நுண்ணிய) இடை, முடிய சுமந்து ஏற மாட்டாது என்று - முழுவதும் தாங்கிக் கரையேற முடியாது என்று, நாள் தேன் அலம்பு வார் கோதை - அன்று உண்டான புதிய தேன் ததும்பி அலம்பப்பெற்ற நீண்ட கூந்தலையுடைய அத்தமயந்தி யின், அடி இணையில் பூண்டு வீழ்ந்து - இரு பாதங்களில் பற்றிக்

கொண்டு நின்று, அங்கு வீழ்ந்து, புலம்புமாம் - வாய்விட்டு முறையிடுவன ஆம்.

நூபுரம் - சதங்கை. கிண்கிணி முதலிய பாத சாலங்களும் ஆம். நூபுரங்கள் அவளடியில் விழுந்து புலம்புகின்றன என்று, தற்குறிப்பேற்றமாகச் சிறப்பிக்கப் பெற்றது. அடியில் வீழ்தல் பணிவின் முதிர்ச்சியைக் குறிப்பது. மாட்டாது - வலிமையுடையது ஆகாது என்ற அணிவை உரைத்தபடி. வாய்விட்டுப் புலம்புவது - பேராபத்து வந்த நிலையை உணர்த்துவது. கோதை - மாலையும் ஆம். ஒப்பு :

"உபய தனமசையி லொடியு மிடைநடையை
யொழியு மொழியுமென வொண்சிலம்
பபய மபயமென வலர நடைபயிலும்
அரிவை மீர்கடைக டிறமினே.

(கலிங்கத்துப். கடைதிறப்பு : 38)

பி - ம். 3. —நாட்டில். 4. புலம்புமா பொற்சிலம்பு பூண்டு. (22)

36. என்று நுடங்கு மிடையென்ப வேழுலகும்
நின்ற கவிகை நிழல்வேந்தே—ஒன்றி
அறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசும்
சிறுகாற்றுக் காற்றாது தேய்ந்து.

'ஏழ் உலகும் நின்ற கவிகை நிழல் வேந்தே - ஏழு பெரும் பிரிவுகளாக உள்ள இவ்வுலகமெங்கும் நிலைபெற்று விளங்கிய வெண் கொற்றக் கொடையின் நிழலை உடைய அரசனே ! ஒன்றி - தனித்ததான, அறு கால் சிறு பறவை - ஆறு கால்களை யுடைய சிறு பறவையாகிய ஒரு வண்டு, அம் சிறகால் வீசும் - தனது அழகிய சிறகுகளால் வீசுகின்ற, சிறு காற்றுக்கு - சிறிய காற்றுக்கு, ஆற்றாது - தாங்கி நிற்கும் வலிமையின்றி, தேய்ந்து - தேய்வுற்று, இடை - அத்தமயந்தியின் இடையானது, என்றும் நுடங்கும் என்ப - எப்பொழுதும் தளர்ந்து அசைந்து கொண்டிருக்கும் என்று அறிந்தோர் கூறுவர்.

ஏழுலகு : இந்தப் பூமி, ஜம்பூத்வீபம் (நாவலந்தீவு) முதலாக உள்ள ஏழ் பெரும் பகுதியாகக் கூறப் பெறுவதால் என்க. ஏழுலகும்.....வேந்தே என விளித்தது, அந்நளன் உலக முழுவதும் ஒரு கோலோச்சிய சக்கரவர்த்தியாதலின். ஒன்றி - அருகில் வந்து, என்னலும் ஆம். ஒரு சிறு வண்டு தன் சிறகால் வீசும் காற்றுக்கு

ஆற்றுது தேய்ந்து வருந்துவது அவள் இடை என்பது, அதிசய உத்தி என்னும் உயர்வு நவிற்சியாகும். 'ஈக்காற்றுக் காற்று விடை'; (தனிப்பாடல்) என்றமையும் நோக்குக. வண்டுகள் ஆறு கால்களையுடைய சிறு உருவின ஆதலின்; அறுகாற் சிறுபறவை என்றது; 'அணிமலர் மேல் மதுநுகரும் மறுகால சிறுவண்டே' என்று ஆழ்வார் திருமங்கை மன்னன் அருளியதும் காண்க; (பெரியதிருமொழி 3. 6 : 2). 'பூணைக்கு ஆறுகால்' எனக் காளமேகப் புலவர் நகைச் சுவைபட எதுகைத் திருத்தத்தோடு கூறியதும் இங்கு நோக்கற்பாலதாம். அம் சிறகு - பல நிற ஒளியுடன் அழகாய் விளங்கும் சிறகு. தமயந்தியின் இடையின் நுண்மைக்குக் கூறிய இச்செய்யுளின் கற்பனை நயம் பின்னும், 'ஆடி வரிவண் டருகே பறக்கவே வாடி மெலிவாள்' (107) என விளக்கி வலியுறுத்தப் பெற்றமையுங் காண்க.

பி - ம். 1. கவிகை நிலவேந்தே. 4. காற்றுக் காகாது தேய்ந்து. (23)

37. செந்தேன் மொழியாள் செறியளக பந்தியின்கீழ்
இந்து முறியென் றியம்புவார்—வந்தென்றும்
பூவாளி வேந்தன் பொருவெஞ் சிலைசார்த்தி
ஏவாளி தீட்டு மிடம்.

'பூவாளி வேந்தன் - மலர்களை அம்புகளாகக் கொண்ட மன்மதனுகிய அரசன், பொரு வெம் சிலை சார்த்தி - போரிடும் தனது கொடிய வில்லை அருகே சாரவைத்து, ஏ வாளி தீட்டும் இடம் - தான் எய்யக்கூடிய அம்புகளைத் தீட்டிக் கூராக்குகின்ற இடமானது, செம் தேன் மொழியாள் - சிவந்த தேன் போன்ற இனிய மொழியையுடைய தமயந்தியின், செறி - அடர்ந்த, அளக பந்தியின் கீழ் - முன் உச்சி மயிர் வரிசையின் கீழே உள்ளதான, இந்து முறி என்று - சந்திரனுடைய ஒரு துண்டமான பிறை எனப்படும் நெற்றியென்று, இயம்புவார் - (அதனைக் கண்டோர் சிறப்பித்துக்) கூறுவர்'. (என்று அன்னம் கூறிற்று.)

அளக பந்தி; வடசொற்றொடர். பூவாளி - புஷ்ப பாணங்கள்; அவை, தாமரைமலர், மாம்பூ, அசோக மலர், முல்லை மலர், நீலோற்பலமாகிய குவளை மலர் என்பன; 'வனசஞ் சூதம சோக முல்லை குவளை காமன் கொலுமைங் கணையே' (பிங்). ஏவாளி - எய்யும் அம்பு; ஏ - ஏவுதல் அல்லது தூண்டுதல்; ஏமாண்ட நெடும் புரிசை' (பு. வெ. 90); என்பதையும் நோக்குக. இனி, ஏ, ஆகிய வாளி என ஒரு பொருட் பன்மொழியாகவும் கொள்ளலாம்;

ஏ - அம்பு : நெற்றியை இங்கு அம்பு தீட்டும் இடமாகவும், அத னருகேயுள்ள புருவங்களை வில்லாகவும் உவமித்த நயம் ஓர்க. அவள் கண்களையே கூர்மை, வடிவம் முதலியவற்றிற்கு ஒப்புப் பார்த்து அவள் நெற்றியைத் தீட்டும் இடமாகக் கொண்டான் மன்மதன் என்பதும் அமையும் ; 'ஏவாளி நாணின்மே லிட்டு' என்று (130) பின்னும் கூறியுள்ளமை காண்க.

பி - ம். 2. நியம்புவரால்—அந்தமிலாப். 3. சிலேசாத்தி. (24)

நளன் தமயந்திபாற் காதல் கொண்டது

38. அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்னுவி
உன்னவே சோரு முனக்கவளோ—டென்னை
அடைவென்ரு மற்றந்த வன்னத்தை முன்னே
நடைவென்ரு டன்பா னயந்து.

(அச்சொற்களைக் கேட்ட நளன்), அந்த அன்னத்தை முன்னே நடைவென்றுள் தன்பால் - அந்த அன்னப் புள்ளை முன்னரே நடையினால் வென்றவளான அத்தமயந்தியின் இடம், நயந்து - அன்பு மேலிட்டு, 'அன்னமே - ஏ அன்னமே ! நீ உரைத்த அன்னத்தை - நீ இதுகாறும் கூறிய அன்னம் போன்ற தமயந்தி என்னும் பெண்ணை, உன்னவே - நான் நினைக்கும்போதே, என் ஆவி சோரும் - என் உயிர் தளர்வுறுகின்றது ; உனக்கு அவ ளோடு அடைவு என்னை - உனக்கு அப்பெண்ணோடு ஏற்பட்ட சம்பந்தம் (அல்லது சேர்க்கை) யாது ?' என்றான் - என்று கேட் டான். மற்று : அசை.

அன்னத்தை - அன்னம் போல்வாளை ; இது, உவமை ஆகு பெயர். முன்னே நடைவென்றது ; பின் (39) அடுத்த செய்யுளில் அவ்வன்னமே, 'பைந்தொடியாள் பாத நடை கற்பான் வந்தடைந் தேம் நாம்', என்றதால் உறுதிப்படும். அடைவு - தொடர்வு, அல்லது சேர்க்கையும் ஆம்.

பி - ம். 3. வன்னத்தின் முன்னே. (25)

39. பூமனைவாய் வாழ்கின்ற புட்குலங்கள் யாமவடன்
மாமனைவாய் வாழு மயிற்குலங்கட்—காமன்
படைகற்பான் வந்தடைந்தான் பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வந்தடைந்தே நாம்.

(அதற்கு, அன்னம்), 'யாம் பூ மனை வாய் வாழ்கின்ற புள் குலங்கள் - நாங்கள் தாமரை மலராகிய வீட்டில் வாழும் பறவைக் கூட்டங்கள்; அவள் தன் - அந்தத் தமயந்தியினுடைய, மா மனைவாய் வாழும் மயில் குலம் கண் - கன்னிமாடமாகிய பெரிய மாளிகையில் வசிக்கும் மயில் கூட்டம் போன்ற மகளிர் முதலான இடத்து, காமன் படை கற்பான் வந்து அடைந்தான் - மன்மதன் தன் அம்புப் படையை எய்யும் விதம் எப்படி என்பதைக் கற்றுக் கொள்ள அங்கு வந்து சேர்ந்தான்; பைம் தொடியாள் பாத நடை கற்பான் - பசுமையான வளையல்கள் அணிந்த அத்தமயந்தியின் பாதங்களின் நடை அழகைக் கற்றுத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, நாம் வந்தடைந்தேம் - அன்னப் புட்களாகிய நாங்கள் வந்து அடைந்தோம்' (என்றது).

அன்னப்புள் தாமரையைத் தன் வாழிடமாகக் கொள்வது, (25) உரை நோக்குக. மயில் குலம் - உவமை ஆகு பெயராய் தமயந்தியின் பணிப் பெண்களைக் குறித்தது. 'அப் பணிப் பெண்கள் கண்களைப் பார்த்து அவை பாய்வன போல விரைவில் ஆழ்ந்து பாயுமாறு தன் அம்புகளைவிடக் கற்றுக் கொள்ளக் காமன் அங்குச் சென்றான். அன்னங்களாகிய யாங்கள் தமயந்தியின் அழகிய பாத நடையைக் கற்றுத் தெரிந்துகொள்ள அங்குச் சென்றோம். இதுவே எனக்கும் அவளுக்குமுள்ள தொடர்பு' என அன்னம் கூறியது. பணிப் பெண்களின் கண்களே காமன் அம்பினுங் கொடுமை, கூர்மை, விரைவிற் செல்லக்கூடிய சிறப்பு முதலிய அமைந்தன வென்றதால், தமயந்தியின் கண்களின் சிறப்பைச் சொல்லாமலே சிறப்பித்ததாகும். தமயந்தியின் நடை அன்ன நடையினும் அழகுஞ் சிறப்பும் அமைந்தது என்பது முன், 'அன்னத்தை முன்னே நடை வென்றாள் தன்பால் நயந்து' (38) என்ற இடத்து விளக்கியதுங் காண்க.

பி - ம். 1. யாம் வைகும். 2. மயிற்குலங்கள்.
3. படைகற்பான் சென்றடைந்தான். 4. சென்றடைந்தேன் நான்.

40. இற்றது நெஞ்ச மெழுந்த தீருங்காதல்
அற்றது மான மழிந்ததுநாண்—மற்றிலியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் றேர்ந்து.

(அதுகேட்ட) வெம் காம தீ உடைய நெஞ்சு உடையான் - கொடிய காமத் தியைத் தன் மனத்திடங் கொண்ட நளன், (அவ்

வன்னத்தை நோக்கி), 'நெஞ்சம் இற்றது - என் மனம் உடைந்து அழிந்த நிலையில் ஆயிற்று; எழுந்தது இரும் காதல் - (அப் பெண்ணின்பால் எனக்கு), பெரிய காதலன்பு எழுந்து ஓங்கியுள்ளது; மானம் அற்றது - என் பெருமையும் நீங்கியதாயிற்று; நாண் அழிந்தது - வெட்கமும் (எனக்கு) இல்லாமற் போய் விட்டது; மற்று - மேலும், இனி - இனிமேல், என்னுடைய வாழ்வு - என்னுடைய உயிர் வாழ்க்கையானது, உன் வாய் உடையது என்றான், தேர்ந்து - உன் பேச்சுத்திறத்தின் இடமே உள்ளதாகும்' என்று தீர்மானித்து முடிவாகக் கூறினான்.

காமத்திற் குள்ளானார், தம்பால் உள்ள எத்தகைய சிறப்புக் குணங்களும் அழிந்து வருந்துவர் என்பது இதனால் பெறப்படுவதாகும்; 'வன்மையை மாற்று மாற்றல் காமத்தே வதிந்ததன்றே' (கம்ப. ஆரணிய. 640) என்று கம்பநாடரும் கூறிப் போந்தமை இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும். காமம் தீயினுங் கொடிது;

அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினு மஞ்சப் படும்.

ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகும்—நீருள்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும்.

(நாலடி. 89, 90)

என்பனவற்றாலும் தெளிவாதல் அறியலாம். உன் வாயுடைய தென்னுடைய வாழ்வு; ஒப்பு; 'நும்வாய், உரையுளதாயி னென் மாட்டியிருள தாகு மென்றான்' (அரிச்சந்திர புராணம். விவாக: 21).

பி - ம். 2. மான மழிந்தது காண். 4. நெஞ்சினான் றேர்ந்து. (27)

அன்னம் நளனுக்கு ஆறுதல் கூறித் தமயந்திபாற் சென்றது

41. வீமன் றிருமகளாம் மெல்லியலை யுன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையா யென்றுரைத்து நீங்கியதே யன்னம்
ஒடுங்கிடையா டன்பா லுயர்ந்து.

(அது கேட்டு), அன்னம் - அந்த அன்னப்பறவை, 'சேம நெடும் குடையாய் - (உலகுக்கு) நன்மையளிக்கும் நீண்டு பரவிய வெண்கொற்றக் கொடையுடைய அரசனே! விமன் திரு மடந்தை - வீமராஜன் அழகிய பெண்ணை தமயந்தியாம், மெல் இயலை - மென்மை பொருந்திய பெண்ணை, உன்னுடைய - உனது, வாம நெடும் புயத்தே - அழகிய நீண்டுயர்ந்த தோள்களிலே, வைகுவிப்பேன் - பொருந்துமாறு செய்விப்பேன்;' என்று உரைத்து - என்று நளனுக்கு உறுதி கூறி, உயர்ந்து - மேலெழுந்து, ஒடுங்கு இடையாள் தன்பால் - ஒடுங்கி நுட்பமாய் விளங்கும் இடையையுடைய அத்தமயந்தி இருக்கு மிடத்துக்கு, நீங்கியது - அவ்விடம் விட்டுப் பறந்து சென்றது. ஏ, ஈற்றசை.

வாமம் - அழகு; அல்லது ஒளியும் ஆம்; (பிங்). வைகுவிப்பேன்; பிறவினை. சேம நெடுங்குடையாய்; நெடுங்குடையாய் சேமம் என மாற்றி, நெடிய குடையையுடைய மன்னனே! உனக்கு நலம் உண்டாவதாக!' என ஆசிமொழி பகர்ந்ததும் ஆம்.

பி - ம். 1. திருமடந்தை மென்மூலையை; நின்னுடைய
2. சோம. 3. நீங்கிற்றே. 4. டன்பாலுவந்து. (28)

நளனது விரகதாபம்

42. இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காத லியம்புங்கொல்—இவ்வளவில்
மீளுங்கொ லென்றுரையா வில்மினன் மும்மதநின்
றாளுங்கொல் யானை யரசு.

மும்மை மதம் நின்று ஆளும் - மூன்று வகை மதநீர்ப் பெருக்குகள் தன்னிடம் நிலை நிற்கப் பெற்று அவற்றையேற்று ஆள்கின்ற, கொல் யானை அரசு - கொலைத் தன்மையுடைய யானை போன்ற (வலியுடைய) அரசனை நளன், 'இ அளவில் செல்லும் கொல் - இந்நேர அளவில் அந்த அன்னம் தமயந்தியிடம் போயிருக்கும் போலும்! இ அளவில் காணும் கொல் - இந்நேர அளவில் அவளைக் கண்டிருக்கும் போலும்! இ அளவில் காதல் இயம்பும் கொல் - இந்நேர அளவில் (அது) என் காதலை அவளிடத்தில் கூறும் போலும்! இ அளவில் மீளும் கொல் - இந்நேர அளவில் அது திரும்பும் போலும்!' என்று உரையா - என்று பலவாறு சொல்லிச் சொல்லி, வில்மினன் - அதே கவலையாய்த் தேம்பி நின்றான்.

இச்செய்யுள், அன்னத்தை விடுத்த அரசன் நிலை கூறியது ஆகும். மும் மதம் - களிற்றுக்கு அதன் காது, கன்னம், கோசம் ஆகிய மூவிடங்களிலிருந்து பெருகி வரும் மதநீர்கள்; கொல்: இங்கு, அசை நிலையாகவும் கொள்ளலாம். மும்மத நின்ருளும் அரசு; மதயானை போன்ற வலிமையும் ஆளும் தன்மையுமுடைய அரசன் எனலும் ஆம். இங்கு அத்தகைய வலியமைந்த நளன் காம உணர்ச்சியால் அழிந்து ஏங்கி நின்ற அவல நிலை கூறப்பெற்றது. இதனல், காமம் எவ்வலிமையையும் வெல்லும் என்பதாம்.

பி - ம். 1. இவ்வளவிற் சேருங்கொல், எவ்வளவில்.
2. எவ்வளவிற் லென்றுரைத்த. 3. மும்மதத்தை. (29)

43. சேவல் குயிற்பெடைக்குப் பேசுஞ் சிறுகுரல்கேட்
டாவி யுருகி யயிந்தீட்டான்—பூவின்
இடையன்னஞ் செங்கா லிளவன்னஞ் சொன்ன
நடையன்னந் தன்பா னயந்து.

சேவல் குயில் பெடைக்கு பேசும் சிறு குரல் கேட்டு - (அப்பொழுது அச்சோலையில்) ஓர் ஆண் குயில் தன் பெண் குயிலினிடம் மெதுவாகப் பேசும் இனிய சிறு ஒலியைக் கேட்டு, பூவின் இடை அன்னம் - தாமரைப் பூவின் இடையே வாழும் அவ்வன்னப்புள், செம் கால் இள அன்னம் - சிவந்த கால்களை யுடைய இளமையான அவ்வன்னப்புள், சொன்ன - தன்னிடம் கூறிய, நடை அன்னம் தன் பால் நயந்து - நடையில் அன்னம் போன்ற அத்தமயந்தியிடம் அன்பு கொண்ட நிலையில், ஆவி உருகி அழிந்திட்டான் - (நளன்) தன் காம உணர்ச்சி மேலிட்டுத் தன் உயிர் உருகிச் சோர்ந்து செயலற் றிருந்தான்.

சேவல் - ஆண் பறவைக்குப் பொதுப் பெயர். சிறு குரல்: காம உணர்ச்சி வயப்பட்டோர் பிறர் அறியாது பேசும் மெது வான அன்பு கனியுங் குரல். அழிந்திட்டான்; இடு: துணைவினை. இச்செய்யுள் நினைப்பணியின் பாலது. (30)

44. அன்ன முரைத்த குயிலுக் கலசுவான்
மென்மயிறன் ரேகை விரித்தாட—முன்னதனைக்
கண்டாற்ரு துள்ளங் கலங்கினன் காமநோய்
கொண்டார்க்கீ தன்ரே குணம்.

அன்னம் உரைத்த குயிலுக்கு - அன்னப் புள் தன் ஒப்புக்கூறிய குயில் போன்ற குரலுடைய தமயந்தியின் பொருட்டு,

அலசுவான் - (காதலால்) தவிக்கும் மனநிலையுடைய அவ்வேந்தன்' மென் மயில் தன் தோகையை விரித்து ஆட - (அச் சோலையில் ஒரு) மென்மையான மயில் தன் (அழகிய) தோகையை விரித்து மகிழ்ந்து) ஆட, முன் அதனை கண்டு - தன் எதிரே அம்மயிலைப்) பார்த்து, ஆற்றாது - பொறுமல், உள்ளம் கலங்கினான் - தன் மனக் கலக்க முற்று வருந்துவானானான்; காம நோய் கொண்டார்க்கு - காமம் என்னும் பிணியைக் கொண்டவர்க்கு, ஈது குணம் அன்றே - இப்படி வருந்துவது இயல்பு அல்லவோ?

குயில்: உவமையாகு பெயர். அலசுதல் - வருந்தித் தள்ளாடுதல்; மென் மயில் தோகை விரித்து ஆடக்கண்டு உள்ளம் கலங்கியது; இம் மயில் போலத் தமயந்தியும் வனப்பும் மகிழ்ச்சியும் கொண்டு விளையாடி மகிழ்வாள் என்ற எண்ணங்கொண்டு என்க. ஈது: இது என்பதின் நீட்டல் விகாரம். இச்செய்யுளும் நினைப் பணியின் பாலதே.

பி-ம். 1. குயிலுக் கருகுவான். 4. கொண்டார்க் கிதன்றே குணம், கொண்டாற் கிதுவன்றே. (31)

45. வாரணியுங் கொங்கை மடவா ளுடங்கிடைக்குப்
பேருவமை யாகப் பிறந்துடையீர்—வாரீர்
கொடியா ரெனச்செங்கை கூப்பினா னெஞ்சம்
துடியா நெடிதுயிராச் சோர்ந்து.

(மேலும் நளன்), நெஞ்சம் துடியா - மனம் துடிப்புற்று, நெடிது உயிரா - நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டு, சோர்ந்து - தளர்ச்சி யடைந்தவனாய், 'கொடியார் - (அச் சோலையில் உள்ள பூங் கொடிகளைப் பார்த்து) கொடிகளே! வார் அணியும் கொங்கை - கச்சணிந்த தனங்களையுடைய, மடவாள் நுடங்கு இடைக்கு - பெண்ணுகிய தமயந்தியின் துவண்டு அசைவுறும் இடைக்கு, பேர் உவமை ஆக - சிறந்த உபமானமாக, பிறந்துடையீர் - நீவிர் பிறந்த பாக்கியத்தை உடையவர் ஆவீர்; (ஆதலின்) வாரீர் - நீவிர் என்னருகே வருவீராக!' என - என்று கூறி, செம் கை கூப்பினான் - தன் சிவந்த கரங்களைக் குவித்துக் கும்பிட்டு வணங்கி அவற்றை அழைத்தான்.

பிறந்துடையீர், வாரீர், கொடியார் என உயர்திணைப்பன்மை யிற் கூறியது உவப்பின் பாலாய் வந்த திணைவழுவமைதியும், எண் வழுவமைதியும் ஆம்.

இதன் பின், அச்சுப்பிரதிகளிலும் சில ஏட்டுப் பிரதிகளிலும்,

"கொங்கையிள நீராற் குளிர்ந்தவிளஞ் சொற்கரும்பால்
பொங்கு சுழியென்னும் பூந்தடத்தில்—மங்கைநறும்
கொய்தாம வாசக் குழனிழற்கீ ழாறேலே
வெய்தாமக் காம விடாய்."

என்றொரு பாடல் உள்ளது. சில பழைய ஏடுகளில் இஃது இல்லை.

பி - ம். 1. வாரணிந்த கொங்கை; மடவார் தடங்கிடைக்குப்.
3. கொடியரே யென்று.
4. தடியா நெடுதயராற் சூழ்ந்து. (32)

தமயந்தி அன்னத்தை நோக்கி விஞவியது

46. மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய—நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னுடல் சொல்லென்ரு ளீங்கு.

(இங்கு நளன் நிலை இவ்வாறிருக்க), மன்னன் விடுத்த - அரசனை நளன் தூதாக அனுப்பிய, வடிவில் திகழ்கின்ற - உருவத்தால் சிறந்து விளங்குகின்ற, அன்னம் போய் கன்னி அருகு அணைய - அன்னப்புள் தமயந்தி அருகே போய்ச் சேர, நல் நுதலும் - அழகிய நெற்றியையுடைய அவளும், தன் ஆடல் விட்டு - மற்ற மகளிரோடு தான் விளையாடிக் கொண்டிருந்ததை விட்டு நீங்கி, தனி இடம் சேர்ந்து - அன்னத்துடன் ஒரு தனி இடத்தை அடைந்து, ஆங்கு - அப்பொழுது, அதனை - அந்த அன்னத்தை நோக்கி, 'ஈங்கு என் நாடல் - இங்கு நீ எதை நாடி வந்தாய்? சொல் என்ருள் - அதனை எனக்குச் சொல்வாயாக!' என்று கேட்டாள்.

ஆங்கு; ஈங்கு என்பன செய்யுள் விகாரங்கள்; ஆங்கு என்பது காலத்தையும், ஈங்கு என்பது இடத்தையும் சுட்டி நின்றன.

இச் செய்யுள் சில சுவடிகளில் இல்லை.

பி - ம். 2. நன்னுதலாள். (33)

அன்னம் நளன் சிறப்புரைத்தல்

47. செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கையர்கள்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்
உளனென்பால் வேந்த னுனக்கு.

(அவ்வன்னம்), 'செம் மனத்தான் - மேலான நல்ல மன முள்ளவனும், தண் அளியான் - குளிர்ந்த அருள் உடையவனும், செங்கோலான் - (அறநெறிமாறாது) நேராக ஆட்சி செய்பவனும், மங்கையர்கள் தம் மனத்தை வாங்கும் தடம் தோளான் - மகளிர் தம் மனத்தைத் தன்பால் இழுக்கும் பெரிய உயர்ந்த தோள்களை யுடையவனும், மெய்ம்மை நளன் என்பான் - உண்மை பேசும் (ஸத் யவானான) நளன் என்னும் பெயருடையவனும், மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான் - வானுலகத்தும் இந்த மண்ணுலகத்தும் (யாவரினும்) மேம்பட்டவனும் (ஆன), வேந்தன் - அரசன், உனக்கு - உனக்கு ஏற்ற கணவனாக, என்பால் உளன் - என்னிடத்தில் இருக் கின்றான்;' என்று தமயந்திக்குக் கூறிற்று.

செம்மனத்தான் தண்ணளியான் என்றதால், நளன் குணச் சிறப்புக்களையும், செங்கோலான் என்றதால் அவனது முறை தவறாத அரசநீதிச் சிறப்பையும் செல்வச் செழிப்பையும், மங்கை யர்கள் தம்மனத்தை வாங்குந் தடந்தோளான் என்றதால், யாவற் றினும் சிறப்பாக மகளிர் விரும்பும் ஆடவனுக்கு ஏற்ற உருவின் சிறப்பையும், மெய்ம்மை நளன் என்றதால், அவன் சொன்மாறு ஸத்யஸந்தன் என்னும் உண்மை நிலையையும், மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான் என்றதால் தேவர்களிலும் பூலோகத்தவ ரினும் அவனுக்கு மேம்பட்டவரில்லை யென்பதையுங் கூறி, 'ஆண் மகனுக்குரிய அருங்குணங்கள் யாவும் அமையப்பெற்ற. அத் தகைய பெருமைகளுக்கு இடமானவனை யாடையக் கிடைப்பதே என்று நீ கவலையுற வேண்டாம்; அவன் என்னிடத்தே இருக் கின்றான்; நான் நினைத்தால் நீ அவனை உன் கணவனாக அடைய லாம்;' என்று படிப்படியாய் நளன் பெருமைகளைக் கூறி அவனை அடையும் வழி தன்னிடமே உள்ளது என அன்னம் கூறிய திறம் பெரிதும் போற்றத்தக்கதாம். இதில்,

> "பெண்ணுதவு காலைப் பிதா விரும்பும் வித்தையையே,
> எண்ணிற் றனம்விரும்பு மீன்றதாய்—நண்ணிடைவிற்
> கூறியநற் சுற்றங் குலம்விரும்பும் காந்தனது
> பேரழகு தான்விரும்பும் பெண்."
>
> (நீதி வெண்பா. 81)

என்ற ஆன்றோர் கருத்து பெரும்பாலும் ஒருங்கே இங்கு அமைந் துள்ளமை காண்க. மேலும், மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான் என்றது, அது தெய்வப்புள் ஆதலின்; இனி, 'அவனை மணக்கக் கருதித் தேவர்களும் வருவர், பூவுலக மன்னர்களும் வருவர்;

ஆயினும் அவர்கள் அனைவரினும் இந்த நளனே எல்லாவிதச் சிறப்புக்களாலும் உனக்கு ஏற்ற கணவனுவன்; அவனை அடைவதற்கு யானே வகை செய்ய வல்லேன்' என்று அன்னம் முன் கூட்டி அறிவித்தது என்பதுமாம். உளனென்பான் வேந்தனுக்கு எனப்பாடங் கொண்டு, என்பான் என்பதை அசையாகக் கொண்டாரும் உளர். இனி, 'உளனென்பான் மன்ன னுக்கு' என்ற பாடங் கிடைப்பின் சிறக்கும்.

பி-ம். 1. செம்மனத்தன் றண்ணளியன்.
2. மங்கைமார்—தடந்தோளன்.
3. நளனென்பான் னென்றெருவன் நானிலத்து மிக்கான்.
4. உளனென்பான் வேந்தன். (34)

48. அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியும்—திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரோப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு.

(மேலும், அது), 'அறம் கிடந்த நெஞ்சும் - தருமம் என்பது இருப்பிடமாகக் கொண்டு தங்கியிருந்த மனமும், அருள் ஒழுகு கண்ணும் - இரக்கம் என்பது பெருக்கெடுத்துப் பொழியும் கண்களும், மறம் கிடந்த திண் தோள் வலியும் - வீரம் தங்கியிருந்த உறுதியான தோள்வலிமையும்; (அமைந்துள்ளமை நோக்குமிடத்து), அவற்கு - அந்த நளனுக்கு, செம் கண் மால் அல்லனேல் - சிவந்த (தாமரை மலர் போன்ற) கண்களையுடைய (அதாவது புண்டரீகாக்ஷனை) திருமாலையே உவமை கூறலாம் அல்லாமல், அம் கண் மா ஞாலத்து - இட மகன்ற இந்தப் பெரிய புவியினிடத்து, தேர் வேந்தர் ஒப்பரோ - தேரூர்ந்து வாழும், வேறு அரசர்கள் ஒப்பு ஆவரோ?' (ஆகார் என்றபடி); என்று கூறிற்று,

அறங்கிடந்த நெஞ்சு: தருமத்திலேயே தங்கிக்கிடக்கும் சிந்தனையுள்ளவன்; அதாவது தருமாத்மா என்பதாம். அருளொழுகு கண்: 'கண்ணுக் கணிகலங் கண்ணோட்டம்'; (குறள். 575); என்றமையும், 'கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர்'; (குறள். 577) என்றமையும் நோக்குக. நளனுக்குச் செங்கண் மாலையே உவமை கூறலாமேயன்றி மற்றை மானிடராகிய மன்னர்களையோ, தேவர்களையோ உவமை கூறமுடியாது என்பதாம். இது பின் 'மையாழி யிற்றுயிலும் மாலனையான்' (400) என்று ஆசிரியர் நளனைச்

சிறப்பிப்பதாலும் உறுதியுறும். இது, திருமாலைத் தாம் வழி படும் தலைமைத் தெய்வமாகக் கொண்ட கவிஞர் பெருமான் புகழேந்தியார், தம் சமயப் பற்றும் தெரிவித்ததாகும். தேர்வேந்தர் என்றதை உபலக்ஷணமாகக் கொண்டு, நால்வகைப் படைகளையும் குறித்தபடியு மாம்.

பி - ம். 1. மருளொழுகுங் கண்ணும் ; மருள் கிடந்த கண்ணும்.
2. புறங்கிடந்த. (35)

தமயந்தி நளன்பாற் கொண்ட காதற்றிறம்

49. புள்ளின் மொழியினெடு பூவாளி தன்னுடைய
உள்ளங் கவர வொளியிழந்த—வெள்ளி
மதியிருந்த தாமென்ன வாய்ந்திருந்தாள் வண்டின்
பொதியிருந்த மெல்லோதிப் பொன்.

வண்டின் பொதி இருந்த - வண்டுகளின் கூட்டம் தங்கியிருந்த, மெல் ஓதி பொன் - மென்மையான கூந்தலையுடைய பொன் போன்ற தமயந்தி, புள்ளின் மொழியின் ஒடு - அன்னப் பறவை கூறிய சொற்களோடு, பூ வாளி - மன்மதனுடைய மல ரம்புகள், தன்னுடைய உள்ளம் கவர - தன் மனத்தை வலிந்து பற்றிக் கொள்ள, வெள்ளி ஒளி இழந்த - வெள்ளிய தன் பிரகா சத்தை இழந்த, மதி இருந்தது ஆம் என்ன - சந்திரன் இருந்த தோற்றம் போல, வாய்ந்து - நிறம் வெளிர்தலை யடைந்து, இருந்- தாள் - வருந்தியிருந்தாள்.

புள்ளின்.....உள்ளம் கவர : அன்னத்தின் மொழி கேட்ட போதே தமயந்தியிடம் மன்மதனுடைய பூவாளியும் புகுந்து அவள் உள்ளங்கவர்ந்தது என்றதால், அச்சொற்கள் காதில் வந்து விழுந்த விரைவைப் பூவாளியோடு, உடன் கூட்டப்பெற்ற நயம் ஓர்க. காம உணர்ச்சியால் உண்டான ஏக்கத்தால் உடல் வெளுத்த நிலை இங்குக் கூறப்பெற்றது. பூவாளி : பூ + ஆளி எனப்பிரித்து மலர்களை அம்புகளாகக் கொண்டு ஆளும் மன்மதன் எனவும் பொருள் தொனிக்க நின்றமை காண்க. பொன் ; நிறத் தாலும், பெருமை, அருமை, உயர்மதிப்பு நயம் முதலிய குண மேம்பாடுகளாலும் தமயந்திக்கு உவமை ; தமயந்தியைப் பொன் என்பது ; 54, 58, 151, 333. பொன் : திருமகள் போன்றவள் எனலும் ஒன்றும்.

காதலென்பது, ஒருவரை காணுமலே, ஒருவரையொருவர் கேட்டறிந்த மாத்திரத்திலேயும் அமையும் என்பதற்கு இவ் வரலாறு ஒரு சான்றாகும் என்க.

பி - ம். 2. வொளியிழந்து. 3. வந்திருந்தாள் வண்டின். (36)

50. மன்னன் மனத்தெழுந்த மையனே யத்தனையும்
அன்ன முரைக்க வகமுருகி—முன்னம்
முயங்கினள் போற்றன் முலைமுகத்தைப் பாரா
மயங்கினு ளென்செய்வாண் மற்று.

மன்னன் மனத்து எழுந்த - அரசனுடன் நளன் மனத்திலிருந்து உண்டான, மையல் நோய் அத்தனையும் - (அவள் பால்) கொண்ட காம நோய் அவ்வளவையும், அன்னம் உரைக்க - அன்னம் தமயந்திக்கு எடுத்துக்கூற, (அவள்) அகம் உருகி - மனம் உருகித் தளர்வுற்று, முன்னம் முயங்கினுள் போல் - முன்னமே தலைவனைத் தழுவி மகிழ்ந்த அன்புடைய ஒரு தலைமகளைப்போல, தன் முலை முகத்தை பாரா - தனது தனங்களின் இடம் அல்லது முகட்டை நோக்கிப் பார்த்து, மயங்கினுள் - மயக்கமுற்று நின்றாள்; மற்று என் செய்வாள் - வேறு அவள் என்ன செய்யக்கூடியவளாவாள்? (அதாவது வேறு செயலற்ற நிலையில் இருந்து வருந்தினாள் என்றபடி).

முன்னம் முயங்கினுள் போல் - தான் அந்நளனை முன்னம் தழுவி அணைந்தவள் போல உணர்ச்சி மேலிட்டவளாகி, எனலும் அமையும். முயங்கிய மகளிர் பின் தம் முலை முகத்தைப்பார்த்து மகிழ்தல்; கலிங்கத்துப் : கடைதிறப்பு : 6.

இதனால், அன்னம், தமயந்திபால் நளன் கொண்ட காதலையும் கூறியிருந்தது என்பது தெரிய வருகிறது.

பி - ம். 2. அன்ன முரைப்ப வகமுருக, அன்ன முரைப்ப வறிவழிந்து, வகமகிழ்ந்து, வகங்கிளர்ந்து. (37)

51. வாவி யுறையு மடவனமே யென்னுடைய
ஆவி யுவந்தளித்தா யாதியால்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி யென்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து.

(அவ்வன்னத்தை நோக்கி) பார் வேந்தன் பாவை - புவி மன்னனுகிய வீமன் மகளான அத்தமயந்தி, பதைத்து - அஞ்சி நடுக்கமுற்று, 'வாவி உறையும் மட அனமே - தடாகம் முதலிய நீர்த்தடங்களில் தங்கி வாழும் அழகிய அன்னமே! காவின் இடை - சோலையினிடத்து (என்னை நினைந்து வருந்திக் கொண்டிருக்கும்) தேர் வேந்தர்க்கு - தேரையுடைய அம் மன்னருக்கு, என் நிலைமை - (அவர் பால்) யான் கொண்டுள்ள காதல் நிலைமையை, சென்று உரைத்தி - நீ போய்ச் சொல்வாயாக! ஆவி உவந்து அளித்தாய் ஆதி - (அப்போது தான்), என் உயிரை எனக்கு நீ விரும்பி அளித்ததாக ஆவாய்' என்று உரைத்தாள்—என்று கூறினள்.

தேர் வேந்தன் - தேர் செலுத்தும் தொழிலில் வல்ல அரசனை நளன் என்றலும் அமையும். என் நிலைமை - யானும் அம்மன்னன் பாற் கொண்ட காதல் நிலைமை. உரைத்தி : முன்னிலை ஏவல் வினை முற்று. பதைத்தது : அம்மன்னனுக்கு ஏற்பட்ட மனத்துயரைத் தன் துயரினும் மேலாக மதித்ததால். ஆவி உவந்தளித்தாய் என்றது, அந்நளனையே தன் உயிராகக் கருதிய உத்தம கற்பின் உறுதியால். இவ்வாறே, நளனும், அன்னத்தை நோக்கி, 'உன்னுடைய வாயுடையுடனே என்னுடைய வாழ்வென்றன்' (40) என்று, முன்னும், 'என்னுயிரை மீளவெனக் களித்தாய்' (61) என்று பின்னும் கூறுவது காண்க. இச் செய்யுளில் நளதமயந்தியராகிய அவ்விருவரும் ஓர் உயிரினரான உயரிய தெய்வக் காதல் கொண்டனர் என்பது புலப்படுவது காண்க. மடவனம் : மடம் - மென்மையும், பேதமையும், இளமையும் ஆம்; அனம் : அன்னம் என்பதன் இடைக்குறை.

இதன்பின் சில பிரதிகளில்,

> மன்னன் புயநின் வனமுலைக்குக் கச்சாகும்
> என்ன முயங்குவிப்பே னென்றன்னம்—பின்னும்
> பொருந்தவன்பா லோதிமலர்ப் பூங்கணைகள் பாய
> இருந்தவன்பாற் போன தெழுந்து.

என்றொரு செய்யுள் காணப்பெறுகின்றது. இது பழைய ஏடுகளில் இல்லை.

பி - ம். 2. யுவந்தளித்தா யாதலால். (38)

தோழியர் தமயந்தியின் நிலை வேறுபாட்டைத் தாய்க்குரைக்க அவள் அரசனுக்கு அறிவித்தது

52. கொற்றவன்றன் றேவிக்குக் கோமகடன் றேழியர்கள்
உற்ற தறியா வளநடுங்கிப்—பொற்றொடிக்கு
வேறுபா டுண்டென்றார் வேந்தனுக்கு மற்றதனைக்
கூறினள் பெற்ற கொடி.

கோ மகள் தன் தோழியர்கள் - அரச குமாரியான தமயந்தியின் தோழிப் பெண்கள், உற்றது அறியா - தமயந்திக்கு ஏற்பட்ட காதல் நோயை அறிந்து, உளம் நடுங்கி - மனம் நடுங்கின வர்களாய் அஞ்சி, கொற்றவன் தன் தேவிக்கு - (தமயந்தியின் தாயாகிய) அரசன் தேவிக்கு, பொன் தொடிக்கு - பொன் வளைகள் அணிந்த அத்தமயந்திக்கு, வேறு பாடு உண்டு என்றார் - ஒரு மாறுபாடு ஏற்பட்டுள்ளது என்று கூறினர். அதனை - அச் செய்தியை, பெற்ற கொடி - அத்தமயந்தியைப் பெற்றதாயும், உணர்ந்து, வேந்தனுக்குக் கூறினள் - அரசனான வீமனுக்கு அறிவித்தாள். மற்று : அசை.

உளம் நடுங்கி : 'நீவிர் உடனிருக்க, இக்காதல் நோய் உண்டானது எவ்வாறு? இதனை ஏன் நீவிர் முன் உணர்த்தவில்லை' எனத் தேவி கோபிப்பளோ என்று. தேவிக்கு : ஏழாம் வேற்றுமை. நாலாம் வேற்றுமையில் மயங்கி வந்தது. தொடி : முன் கையில் பதிந்தாற் போல் மகளிர் அணியும் வளை; தோள் வளையும் ஆம். மற்ற வளைகள் கையிற் சுற்றளவுக்குச் சற்றுப் பெரியனவாய் ஒன்றோடொன்று அசைந்து ஒலிப்பன. வேறுபாடு : இஃது இடக்கரடக்கராக அவள் கொண்ட காதல் நோயைக் குறிப்பிட்டபடி. பொற்றொடி : அன்மொழித்தொகை. அரச குமாரிக்கு ஏற்பட்ட காதல் நோயை அறிந்து தோழியர், தாயாகிய அரசிக்கு அறிவிக்கத் தாய் அரசனுக்கு அறிவித்தாள் என்ற முறையின் இயற்கை நயம் உணரத்தக்கது. இஃது அறத்தொடு நிற்றல் என்னும் துறையின் பாற்படும்.

பி. ம். 1. தேவியர்க்கு.

2. உற்றதறியா வளநடுங்கிப், உற்ற தறிவிப்பா வளநடுங்கிப், உற்ற தறிவிப்ப; வண்ணடுங்கி.

வீமராசன் தமயந்தி மாளிகைக்கு வந்தது

53. கருங்குழலார் செங்கையினில் வெண்கவரிப் பைங்கால்
மருங்குலவ வார்முரச மார்ப்ப—நெருங்கு
புரிவளை நின்றேங்கப் போய்ப்புக்கான் பெற்ற
வரிவளைக்கை நல்லாண் மனை.

(அதுகேட்ட வீமராஜன்), கரும் குழலார் - கரிய கூந்தலை யுடைய பரிசன மகளிர், செம் கையினில் - சிவந்த தம் கைகளில் உள்ள, வெண் கவரி - வெண் சாமரங்களின், பைம் கால் - (வீசப் பெறும்) குளிர்ந்த இளங்காற்று, மருங்கு உலவ - இரு பக்கங்களி லும் இயங்க, வார் முரசம் ஆர்ப்ப - தோல் வாரினால் இழுத்துக் கட்டப்பெற்ற பேரிகைகள் ஒலிக்க, நெருங்கு புரி வளை நின்று ஏங்க - நெருங்கி விளங்கும் வரிசையாய் முறுக்கமைந்த சங்குகள் நின்று ஒலிக்க, பெற்ற - தான் பெற்ற, வரி வளை கை நல்லாள் - பல கோடுகளான பூவேலைகள் அமைந்த வளையல்கள் அணிந்த மகளான தமயந்தியின், மனை - கன்னிமாடத்தில், போய் புக்கான் - போய் அடைந்தான்.

இஃது அரசன் வருகையின் சிறப்பு உணர்த்தியது. கருங் குழலார்...பைங்கால் : இது வேறுபட்ட நிறங்கள் பல விரவி வந்த முரண்தொடை. வார் முரசம் - பெரிய பேரிகையும் ஆம். சங்கு களை அறுத்துப் பல வளையல்களாக அமைத்தணியும் வழக்கத் தால் முதலாகு பெயராய் வளை எனப்பட்டது ஆம். 'சங்கொடு சிலம்பும் நூலும் பாத சாலக முந்தாழ' (கம்ப. சுந்தர. 210) ; 'சங் கங்கேய் செங்கை நல்லார்' (வி. பா. நிவாத கவச : 76) சங்கு, வளை என்பன பல பெயர்த் திசிசொல்.

பி - ம். 1. கருங்குழலார் செங்கையினும். 2. மருங்குழல.
3. புரிவளைகின் மேலமிடப். (40)

தமயந்தி தந்தையை வணங்கியது.

54. கோதை சுமந்த கொடிபோ லிடைநுடங்கத்
தாதை திருவடிமேற் றுன்வீழ்ந்தாள்—மீதெல்லாம்
காந்தாரம் பாடிக் களிவண்டு நின்றரற்றும்
பூந்தாரம் மெல்லோதிப் பொன்.

களி வண்டு - தேனைக் குடித்துக் களிப்புற்ற வண்டுகள், காந்தாரம் பாடி நின்று மீது எல்லாம் அரற்றும் - காந்தாரம்

என்னும் பண்ணை இசைத்து நின்று மேலே ஒலியை உண்டாக்கும், பூம் தார் அ மெல் ஓதி பொன் - மலர் மாலை அணிந்த அழகிய மென்மையான கூந்தலையுடைய பொன்னைப் போன்று சிறந்த அத் தமயந்தி, கோதை சுமந்த கொடிபோல் - பூமாலை சுமந்த ஒரு கொடியைப் போல, இடை நுடங்க - தன் இடை (மென்மையால்) துவண்டு அசைய, தான் தாதை திருவடிமேல் வீழ்ந்தான் - தான் தன் தந்தையின் திருவடிகளின் மீது விழுந்து வணங்கினாள்.

காந்தாரம்: இது பிரிவின் துயரை உணர்த்தும் ஒருவகைப் பாலைப்பண்; சிலப். 8: 35 உரை. ஏழிசைகளுள் இது மூன்றும் இடத்து இசை. களிவண்டு, தமயந்தியின் கூந்தலில் உள்ள மலர் மாலையின் தேனை உண்டு களிமயக்குற்ற வண்டுகள். மேலெல்லாம் என்பதை மாலையில் மேலெங்கும் எனவுங் கொள்ளலாம். பொன் - பொன் போன்ற தமயந்தி; 49 உரை. கோதை - கூந்தல் என்றலும் ஒன்றும்; 'மழைக்கோதை மானே' (145) என்றதுங்காண்க; அவ்வாறு கொள்ளின், கோதை சுமந்த கொடி என்பது இல் பொருளுவமை ஆகும். ஓதி - கூந்தல்; 166, 308, 356. அம்மெல் ஓதி என்றும் கொள்ளலாம்.

பி - ம். 2. தாதை திருவடிமேற் சாற்றினாள்.
3. பூந்தார மெல்லளகப், பூந்தாம மெல்லளகப். பூந்தார மெல்லளப் போது. 4. பூந்தார மெல்லோதிப். (41)

வீமன் தமயந்திக்குச் சுயம்வரம் ஏற்படுத்தியது.

55. பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப் — பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளு மணம்.

பேர் அழகு - மிகுந்த அவளது அழகானது, சோர்கின்றது என்ன - வழிகின்றது என்று சொல்லும்படி, பிறை நுதல் மேல் - பிறைமதி போன்ற தன் நெற்றியின்மீது, நீர் அரும்ப - விரக நோயின் வெம்மையால் வியர்வைநீர் துளிக்க, நின்றாள் - தன் எதிரில் நின்ற தமயந்தியை, பாரா - பர்த்து, குலவேந்தன் - சிறந்த குலமன்னனான வீமன், கோ வேந்தர் தம்மை - சிறந்த அரசர்கள் தம்முள் ஒருவரை, மலர் வேய்ந்து - சுயம்வரத்தில் அவள் தேர்ந்து மாலையிட்டு, கொள்ளும்

மணம் - அடையக்கூடிய திருமணத்தை, சிந்தித்தான் - செய்விக்கக் கருதினன்.

அழகு சொட்டுகின்றது என்ற உலக வழக்கை இங்கு வியர்வை துளித்துச் சோர்வதற்கு ஆக்கிய நயம் அரிய திறத்தது. பிறை நுதல் - எட்டாம் நாள் தோன்றும் பிறை போன்ற, அதாவது பாதி மதி போன்ற நெற்றி. நீரரும்பியது, தந்தை முன் தன் காதல் நோய் தெரியலாயிற்றே என்ற நாணத்தாலும் அச்சத்தாலும் என்னலுமாம்.

பி - ம். 2. பாரில். 3. கோல்வேந்தர் தம்மை. (42)

56. மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரசம்
எங்கு மறைகென் றியம்பினன்--பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னுடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு.

பைம் கமுகின் கூந்தல் மேல் - பசிய பாக்கு மரங்களின் தோகைகள்மீது, கங்கை கொழுந்து ஒடும் நல் நாடன் - கங்கை நதியின் நீரின் நுனி ஓடி வீசப்பெறும் சிறந்த நீர்வளமுடைய விதர்ப்ப நாட்டரசனை வீமன், மங்கை சுயம்வரம் நாள் ஏழு என்று - தமயந்தியின் சுயம்வரத் திருமணம் இற்றைக்கு ஏழாம் நாள் என்று, வேந்தர்மேல் தூது ஓடவிட்டு - மற்ற அரசர்கள்பால் அன்னோர் சுயம்வரத்தை அறியுமாறு தம் தூதர்களை விரைந்து செல்லவிடுத்து, எங்கும் - தன் நாடெங்கும், 'வார்முரசம் அறைக என்று, பெரிய மண முரசு முழக்கி அதனை அறிவிப்பீராக!' என்று, இயம்பினன் - சொல்லிப் பணியாளர்க்குக் கட்டளையிட்டான்.

சுயம்வரம் : தானே தன் கணவனைத் தேர்ந்துகொள்ளுதல்; இது முற்காலத்து அரசர்குல மகளிர்க்கு உரிய உரிமை; ஸ்வயம்வரம் என்ற வடசொல்லின் திரிபு; இச்சொல் இந்நூலில் எதுகை ஒப்புமை நோக்கிச் சயமரம், சயம்வரம் எனச்சிதைந்து வருவதுங் காணலாம். வார்முரசம்; 53. அறைகென்று: அறைக என்று என்றதின் தொகுத்தல் விகாரம். பைங்கமுகு - இளங்கமுகும் ஆம். கூந்தல் - மட்டையில் உள்ள ஓலை. கமுகு : நீர்வளம் நிலவளம் நிறைந்த மருத நிலத்து மரம் ஆதலின், இது நாட்டின் வளச் சிறப்பைக் குறிப்பிட்டு அவ்வீமராஜனது பெருமை கூறியதாகும்.

பி - ம். 3. கொழுந்தோட்டு; நீர்நாடன். (43)

சுயம்வரத்திற்கு அரசர்களின் வருகை.

57. மாமுத்த வெண்குடையான் மால்களிற்றுன் வண்டிரைக்கும்
தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி—நாமத்தால்
பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம்.

மா முத்த வெண் குடையான் - பெரிய ஆணி முத்துக்களால் ஆன வெள்ளைக் குடையுடையவனும், மால் களிற்றுன் - பெரிய ஆண் யானைகளையுடையவனும், வண்டு இரைக்கும் - வண்டுகள் சூழ்ந்து ஒலிக்கும், தாமத்து - பூமாலையை அணிந்துள்ளவனும் ஆன, அரிச்சந்திரன் சுவர்க்கி - அரிச்சந்திரன் சுவர்க்கி என்னும் அரசனுடைய, நாமத்து ஆர் - பெயரால் சிறந்து விளங்கும், பா ஏய்ந்த - பாட்டுக்கள் பொருந்திய, செம் தமிழாம் என்ன - செந்தமிழே போல, கோ வேந்தர் செல்வ குழாம் - தலைமை பெற்ற அரசர்களுடைய செல்வச் சிறப்பு அமைந்த கூட்டம், பரந்தது - எங்கும் நிறைந்து வருவதாயிற்று. ஏ : ஈற்றசை.

முத்த வெண்குடை - முத்து, நிலவு போன்ற தண்ணிய ஒளியுடன் நிழல் தருவதால், அவற்றுல் அரசர்கள் தம் கொற்றக் குடையை அமைத்துக்கொள்வது மரபு; அரசன் தன் குடிகளைத் தண்ணளியோடு காப்பதற்கு இஃது ஓர் அடையாளமும் ஆகும்; வெண்மையைக் கீர்த்திக்கு அறிகுறி என்பது கவிமரபு. மால் களிற்றுன் - உபலக்ஷணத்தால் மற்றை, ரத துரக பதாதிகளையும் குறித்ததும் ஆம்; இனி பெரியபட்டத்து யானையை உடையவன் என்னலும், மயக்கம் அல்லது மதங்கொண்ட யானையையுடையவன் என்னலும் ஒன்றும். அரிச்சந்திரன் சுவர்க்கி; 18 உரையிற் கர்ண்க. இனி, பாவேய்ந்த, எனக்கொண்டு, பாக்களால் பூணந்து அணிந்த, என்றுங் கொள்ளலாம்.

பி - ம். 2. நாமத்தார். 3. பாவேந்தர் செந்தமிழா.

இதன்பின் சில பிரதிகளில்,

செந்தடையும் வண்டுறைதார் செய்யாள் வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத்தலைவாய்—வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளைப் பொன்னகரி லீண்டிற்றே
கோவேந்தன் மாதைக் குறித்து.

என்றொரு செய்யுள் காணப்பெறுகின்றது. இது பல பழைய ஏட்டுப் பிரதிகளில் இல்லை. (44)

58. புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமு மினிதுறைந்தார்—தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு.

(அவ்வாறு வந்தடைந்த கோவேந்தர்,) தெள் அரி கண் பூமகளை - தெள்ளி எடுக்கப் பெற்றதுபோன்ற நுண்ணியதான செவ்வரிகள் படர்ந்த கண்களையுடைய தாமரையில் வாழும் திருமகள் போன்றவளும், பொன்னை - பொன்னைப்போன்ற சிறப்பமைந்தவளும், பொரு வேல் விதர்ப்பன் தன் கோ மகளை - பகைவரைப் போரிட்டு அழிக்கவல்ல வேற்படை ஏந்திய விதர்ப்பராஜ குமாரியுமான தமயந்தியை, தம் மனத்தே கொண்டு - (அடையத்) தம் மனத்தில் எண்ணங் கொண்டவர்களாய், (அங்குள்ளவரின்) புள் உறையும் சோலைகளும் உள்ளும் - பறவைகள் தங்கி வாழும் சோலைகளின் உள்ளாகவும், பூம் கமல வாவிகளும் புறமும் - அழகிய தாமரைத் தடாகங்களின் வெளிப்புறங்களினிடமாகவும், இனிது உறைந்தார் - மகிழ்ச்சியோடு வந்து தங்கியிருந்தனர்.

முன் செய்யுளில் கூறப்பெற்ற கோவேந்தர் என்பது இங்கு எழுவாயாக வருவித்துக் கொள்ளப்பெற்றது. பூங் கமல வாவி - பூக்கள் நிரம்பிய தாமரைத் தடாகம் என்னலும் ஆம். புள்ளுறையும்..... மினிதுறைந்தார்; இது, கிரமாலங்காரம் என்னும் நிரனிறையணி. பொன்னை : பொன்; 54 உரையிற் காண்க.

பி - ம். 1. பூங்குமுத வாவிகளும். 2. உள்ளும் புறம்பும். (45)

நளன் அன்னம் திரும்பிவரக்கண்டது.

59. வழிமேல் விழிவைத்து வாணுதலா ணை
மொழிமேற் செவிவைத்து மோகச்—சுழிமேற்றன்
நெஞ்சோட வைத்தயர்வான் கண்டா னெடுவானின்
மஞ்சோட வன்னம் வர.

(இஃது இங்ஙனமாக, மாவிந்த நகரத்தில்), வழி மேல் விழி வைத்து - அன்னம் வரும் வழியின் மீது தன் கண்பார்வை பட வைத்து, வாள் நுதலாள் - ஒளி பொருந்திய நெற்றியையுடைய அத்தமயந்தியின், நாம மொழிமேல் செவி வைத்து - பெயரைச் சொல்லுமோ என்று அச்சொல்லினிடத்துத் தன் செவியைக் குறிப்பாக வைத்துக்கொண்டு, மோக சுழிமேல் தன் நெஞ்சு ஓட விட்டு - காதல் என்னும் நீர்ச்சுழியினிடத்துத் தன் மனம் ஓடிச்

சுழன்று அலையும்படிவிட்டு, அயர்வான் - வருந்திக்கொண்டிருந்த நளன், நெடு வானில் - நீண்ட வானத்தில், மஞ்சு ஓட - உள்ள வெண் முகில்கள் அதன் வேகத்தால் தாக்கப்பட்டு முன்னே ஓடும்படி (அவ்வளவுவேகமாக), அன்னம் வர - அவ்வன்னப்பறவை வர, கண்டான் - பார்த்தான்.

வழி மேல் விழி வைத்தல் - வரும் வழியை உற்று நோக்கி யிருத்தல். மொழிமேல் செவிவைத்தல் - அப்புள் தமயந்தியின் பெயர் கூறி நல்ல செய்தி சொல்லும் என்று எதிர்பார்த்துத் தன் செவி பிறிதொன்றை நாடாது வைத்திருத்தல். காமம் மனத்தைக் கவற்றி வருத்துமாதலால், மோகச் சுழிமேல் நெஞ்சோட விட்டயர் வான் என்னப்பட்டது; மஞ்சோடு அ அன்னம் வர எனக்கொண்டு, மேகமண்டலத்தோடு அந்த அன்னம் வானின் உயரத்தில் வர என்னலும் ஆம். இதில் அ அன்னம் அவ்வன்னம் எனப்பாலது, அவன்னம் எனச் செய்யுள் ஓசை நயம் நோக்கி நின்றது எனக் கொள்க. மஞ்சோடு என்பதற்கு அம்மேகத்தோடு கூடச்சேர்ந்து என்றும் பொருள் கொள்வர். வழிமேல்.....வைத்தயர்வான் என்றது முன், 'இவ்வளவிற்.....விம்மினன்' என்ற (42) செய்யு ளால் நளன்கொண்ட மன நிலைனய இங்கு மற்றொரு விதமாய்ப் புலப்படுத்தியதும் ஆம்.

பி - ம். 2. மொழிமேற் றனிவைத்த. 3. நெஞ்சோட விட்டயர்வான்.
4. மஞ்சோடு மன்னம் வர. (46)

60. முகம்பார்த் தருணைக்கி முன்னிரந்து செல்வர்
அகம்பார்க்கு மற்றுரைப் போல—மிகுங்காதல்
கேளா விருந்திட்டா னன்னத்தைக் கேளாரை
வாளால் விருந்திட்ட மன்.

கேளாரை வாளால் விருந்து இட்ட மன் - பகைவர்களைப் போரில் தன் வாளால் வீழ்த்தி அவர்கள் உடல்களைப் பேய் கழுகு, நரி முதலியவற்றிற்கு அப்பொருகளத்தில் விருந்து செய்த வீரனான நளன், செல்வர்-பொருட்செல்வம் பெற்றவர்களுடைய, முகம்பார்த்து-அவரது முகத்திற் காணப்பெறும் தோற்றத்தை நோக்கியும், அருள் நோக்கி - அவரது அருளை எதிர்பார்த்தும், முன் இரந்து - அவர் முன் சென்று யாசித்து. அகம் பார்க்கும் - அச்செல்வர் வீட்டை நோக்கி நிற்கும், அற்றுரைப்போல - செல்வம் அற்ற இரவலரைப் போல, அன்னத்தை - (நளனும்) அந்த அன்னத்தை (நோக்கி), மிகும்

காதல் - அது கூறும் தமயந்தியின் காதல் நிறைந்த சொற்களை, கேளா இருந்திட்டான் - கேட்க இருந்தவனுனன்.

அகம் பார்க்கு அற்றூர் என்பதற்கு அச்செல்வர் மனக்குறிப்பை நோக்கி நிற்கும் இரவலர் என்றும் கூறுவர். முகம் பார்த்தருள் நோக்கி என்றதாலேயே, 'அகத்தினழகு முகத்திற்றெரியும்' என்ற படி அவர் தம் உள்ளக் கருத்தை அன்னோர் முகத்தோற்றத்தாலே அறியக் கூடுமாதலால், மீண்டும் அகம்பார்க்கும் என்பதற்கு, மனம் நோக்கி என்று கூறியது கூறுமல், வீட்டை நோக்கி வெளியே நின்று கொண்டிருக்கும் வறிஞர் எனப்பொருள் கொள்ளப்பெற்றது. இனி மற்றுரைப் போல எனக்கொண்டு, செல்வரல்லாத மற்ற ஏழை களைப் போல என உரை கண்டாரும் உளர். அவ்வாறு கொண் டால், அவ்வடிக்கு, மோனை நயம் இல்லாமையோடு, கூறியது கூற லாகிய குற்றமும் ஆகும். செல்வர்பாற் சென்றிரக்கும் வறியோரின் தாழ்வும், பணிவும் பின் இந்நூலில் 'எனக்கதிர்வேற் கண்மடவாய்' என்று தொடங்கும் (236) செய்யுளால் நளன் வாயினுலேயே விளக் கப்பெற்றமையும் நோக்குக. இச்செய்யுளில் அன்னப்புள்ளைச் செல் வர் நிலையிலும், நளனை இரவலராகிய வறியோர் நிலையிலும், தமயந்தி கூறியதாக உள்ள உறுதியளிக்கும் காதல் மொழிகளை அவ்விர வலன் அடைய விரும்பும் பொருள் நிலையிலும் வைத்து உவமித்துக் காட்டிய சிறப்பு நோக்கத் தக்கதாகும்.

பி - ம். 1. முன்னிருந்த செல்வர். 3. விருந்திட்ட வன்னத்தைக் கேளாதே. 4. வாளா விருந்திட்ட மன், வாளா திருந்திட்ட. (47)

நளனது விழுமும் அன்னத்தின் மறுமொழியும்.

61. அன்னக் குலத்தி னரசே யழிகின்ற
என்னுயிரை மீள வெனக்களித்தாய்—முன்னுரைத்த
தேமொழிக்குத் தீதிலவே யென்றுன் றிருந்தாரை
ஏமொழிக்கும் வேலா னெடுத்து.

திருந்தாரை ஏம் ஒழிக்கும் வேலான் - பகைவரை அவர் தம் மகிழ்ச்சி அல்லது இறுமாப்பை அழிக்கவல்ல வேலையுடைய நளன், அவ்வன்னத்தை நோக்கி, 'அன்ன குலத்தின் அரசே - அன்னக்கூட்டத்திற்கு அரசனே! அழிகின்ற என் உயிரை - தம யந்திபால் யான் கொண்ட காதலால் அழிந்து போகும் நிலையில் உள்ள என் ஆவியை, மீள - அழியாது மீளுமாறு, எனக்கு அளித் தாய் ஆதி - எனக்கு நீ அருள்செய்து கொடுத்தனை ஆவாய்; முன்

உரைத்த - முன் நீ எனக்குச் சொன்ன, தேம் மொழிக்கு - தேன் போன்ற இனிய சொல்லையுடைய அத் தமயந்திக்கு, தீது இலவே என்ருன் எடுத்து - தீங்கு ஒன்றும் இல்லையன்ரே ?' என்று குறிப் பிட்டுக் கேட்டான்.

ஏம் - மகிழ்ச்சி ; கம்ப. சுந்தர : 148, 298, 559. தமயந்திக்குத் தீது இல்லையென்ருல், இப்பொழுது தளர்வுறும் தன் உயிர் நிலை பெறும் என்பதாலும், அவ்வன்னம் மேற்கொண்டு, 'வீமன் திரு மகளாம் மெல்லியலை யுன்னுடைய, வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்' (41) என்று உறுதி கூறிச்சென்ற செயலை முற்று விக்கும் திறலுடையது என்ற துணிவாலும், 'தேமொழிக்குத் தீதிலவே' என்ருன் என்க. திருந்தாரை ஏமொழிக்கும் வேலான்; நளன் சிறந்த வெற்றி அமைந்த போர் வீரனுயினும், அக்காமம் யாரையும் வென்று அடக்கும் ஆற்றலுடைய தென்பதையும் விளக்குவது காண்க ; ஒப்பு : கம்ப. பால. உண்டாட்டு. 44, 61 ; சுந்தர. 470. மீள வெனக் களித்தாய் : அன்னம் நற்செய்திகொண்டே திரும் பியது என்று அவன் உறுதியாய்க் கருதியதால் என்க. தீதிலவே : இஃது, அன்புற்ருரைப் பற்றி முதலில் நலம் உசாவும் இயல்பான வினு எனவும் கொள்க.

வீரருட் சிறந்த ஒரு சக்கரவர்த்தி காமவயத்தனுய் அதிற் கட் டுண்டு ஒரு புள்ளின் இடத்தில் குறை நயந்து தாழ்ந்து நிற்பது அவன் பெருமைக்குத் தகாதே எனின், அன்று ; அஃது ஊழ் அளித்த உயிரிய தெய்வக்காதல் என்பதோடு, அவன் ஆண்மையும் வீர வாழ்க்கையும் மிக்க ஓர் ஆடவர் பெருந்தகை என்பதையும் உடனே, திருந்தாரை ஏமொழிக்கும் வேலான், என்றதொடரால் சிறப்பித்து முடித்து நம் காப்பியத்தலைவனை இங்குப் புகழேந்த வைத்தார் நம் புகழேந்தியார் என்க.

பி - ம். 1. னரசே யளியேனுக். 2. மீட்டிங் கினிதளித்தாய்.
3. செம்மொழிக்குத் தீதிலவே ; தீங்கிலவே ; திருந்தார்தம்.
4. வெம்முனைக்கு மேலாய வேந்து ; வேலோ னெடுத்து. (48)

62. கொற்றவன்ற னேவலினுற் போயக் குலக்கொடிபால்
உற்றதுவு மாங்கவடா னுற்றதுவும்—முற்றும்
மொழிந்ததே யன்ன மொழிகேட் டரசற்
கழிந்ததே யுள்ள வறிவு.

அன்னம் - அது கேட்ட அவ்வன்னப்புள், கொற்றவன், தன் - அரசனுகிய அந்நளனது, ஏவலினுல் - கட்டளையின்படி, அ குல

கொடி பால் - அந்த நற்குலத்து உதித்த கொடிபோன்ற தமயந்தியி னிடத்து, உற்றதுவும் - தான் போய் அடைந்ததும், அவள் ஆங்கு தான் உற்றதுவும் - அங்கு நளனது உண்மைக் காதலைக் கூறிய விடத்து அத்தமயந்தி அவன்பாற் காதல் மீதுரப் பெற்று அவள் கூறியதும் ஆனவற்றை, முற்றும் - ஒன்றும் விடாமல் முழுவதும், மொழிந்தது - நளனிடம் எடுத்துரைத்தது; மொழி கேட்டு - அன் னத்தின் அம்மொழிகளைக் கேட்டு, அரசற்கு - அரசனான நளனுக்கு, உள்ள அறிவு - காதலால் முன் அழிந்தது போக எஞ்சியிருந்த அறிவும், அழிந்தது - காதல் முதிர்ச்சியால் அவனிடம் விட்டு நீங்கியது போலாயிற்று; அதாவது நளன் இன்ன செய்வதெனற அறிவின்றி யோசனையில் ஆழ்ந்து தன்னை மறந்திருந்தான் என்றபடி. ஏ : அசை.

அன்னம், முன் காதலால் அறிவிழந்தவன் போலச் சோர்ந் திருந்த நளனுக்குத் தமயந்தியும் அவன்பாற் கொண்ட காதல் நிலையைக் கூறியவுடன், அக்காம உணர்ச்சி மேலோங்கப்பெற்று அவன் தன் உணர்வு முற்றும் இழந்தவன் போலச் சோர்வுற்றான் என்க. குலக்கொடி - உயர்ந்த கொடிபோன்றவன் என்னலும் ஒன்றும். கொற்றவன்; வலிமை, வெற்றி மேம்பாடுஉற்று விளங்கும் காரணம்பற்றி அரசனுக்கு வழங்கும் பெயர். உற்றதுவும் என்ற சொல் ஈரிடத்தும் இங்குக் குற்றியலுகரம் கெடாமல் நின்றன; 'நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க நல்லார் சொற்கேட்பது வும் நன்றே (மூதுரை. 8)' என்றமை போல; மொழிந்ததே, அழிந்ததே என்பனவற்றின் ஈற்று ஏகாரங்கள், இரக்கத்தின் பாலாய் எழுந்த உணர்ச்சியை உணர்த்தும் இடைச்சொற்கள். இனி, அன்னமொழி கேட்டு - அத்தகைய சொற்களைக் கேட்டு எனப் பிரித்தும் பொருள் கொள்ளலாம்.

பி - ம். 1. ஏவலாய்த் தான் போய்க் 2. உற்றனவு மற்றவடா னுற்றனவு.

நளனது காதல் நோய் நிலை.

63. கேட்ட செவிவழியே கேளா துணர்வோட
ஒட்டை மனத்தோ டுயிர்தாங்கி—மீட்டும்
குழியிற் படுகரிபோற் கோமான் கிடந்தான்
தழலிற் படுதளிர்போற் சாய்ந்து.

கேட்ட - அன்னம் சொன்ன தமயந்தியின் காதன் நிலை யைக் கேட்ட, செவி வழியே - தன் காதுகளின் வழியாக, உணர்வு -

தன் அறிவு, கேளாது ஓட - தன்னைக் கேட்காமலே வெளியே ஓட, ஒட்டை மனத்து ஓடு - உடைந்து துவாரம் பட்ட பாண்டம் போலச் சூன்யமான மனத்தோடு, உயிர் தாங்கி - உயிரை மட்டும் ஒருவாறு தாங்கியிருந்தவனுகி, மீட்டும் - பிறகும், குழியில் படு கரி போல் - குழியில் விழுந்து வெளிவர முடியாமல் அதனுள் அகப்பட்ட யானையைப் போலவும், தழலில் படு தளிர்போல் - நெருப்பினுள் அகப்பட்ட இளந்தளிர் போலவும், சாய்ந்து - சோர்ந்துவாடி, கோமான் கிடந்தான் - அரசனுன நளன் செயலற்றுக் கிடந்தான்.

ஓட்டை மனம் - துவாரம் அல்லது புழைபட்ட பாண்டம் போன்ற மனம்; துவாரம் பட்ட பாண்டத்தின் உள்ளிருந்த நீர் தானே வடிந்துபோக, அது சூனியமாக இருப்பது போன்று உணர்ச்சி இழந்த மனம். மூன் (62) செய்யுளில் 'அழிந்தே யுள்ள அறிவு' என்றமையும் நோக்குக. குழியிற் படுகரி - குழியில் வீழ்த்தப்பட்ட யானை என்னலும் ஆம். காட்டு யானையைப் பிடித்துப்பழக்க விரும்புவோர் காட்டில் யானைகள் வருமிடத்தில் ஒரு பெரிய ஆழமான குழி வெட்டி, அதன் மேலே மெல்லிய மூங்கில்கள் குச்சிகள் முதலியவற்றைப் பரப்பி அங்கு யானை விரும்பும் தழை, பயிர் கரும்பு முதலியவற்றை நட்டு அதனைப் பயிர்நிலம் அல்லது தோட்டம் போல அமைத்து வைப்பர். யானை அப்பயிர் தழை முதலியவற்றைத் தின்னும் ஆவலில் விரைந்து வரவே, மேலே பரப்பப்பெற்ற அக் கொம்புகள் யானையைத் தாங்காமல் ஒடிந்து போக, யானை அக்குழியில் விழுந்து வெளிவர முடியாமற் கதறும். சில நாட்கள் அக்குழியிலேயே உணவின்றி அதனை வருந்தி வாடி வலிகுறையும் நிலையில் விட்டுப் பின், அதனைப் பிடிப்போர் அங்கு வந்து தம்மிடம் உள்ள பழகிய யானைகளையும், பிற உபகரணங்களையும் கொண்டு அக்குழியுட்கிடக்கும் யானையைப் பிணித்து வெளியேற்றி வந்து அதனை அடக்கித் தம் வயப்படுத்துவர், இச் செய்தி,

கன்று டைப்பிடி நீக்கிக் களிற்றினம்
வன்ரெ டர்ப்படுக் கும்வன வாரிசூழ்
குன்று டைக்குல மள்ளர் குழூஉக்குரல்
இன்று ணைக்களி யன்ன மிரிக்குமே.

(கம்ப. பால. நாட்டுப் : 32.)

என்றமையால் விளக்கமுறுவது காண்க.

பி - ம். 1. கேளா துணர்வோடி. (50)

வீமராசன் விடுத்த தூதர் நளனிடம் வந்தது.

64. கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப
ஏதமிலாக் காட்சியர்வந் தெய்தினர்—போதில்
பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாடன்
அடையாத வாயி லகம்.

போதில் - அன்று மலரும் தாமரை மலர்களில், பெடை ஓடு - தன் பெண் வண்டுகளோடு, வண்டு - ஆண் வண்டுகள், உறங்கும் - துயிலும், பேர் ஒலி நீர் நாடன் - பெரிய ஓசையையுடைய நீர்வளமுள்ள நிடத நாட்டரசனை நளனுடைய, அடையாத வாயில் அகம் - என்றும் மூடப்பெறாத அரமனை வாயிலினிடத்து, கோதை சுயம்வர நாள் - தமயந்தியின் சுயம்வர நாளை, கொற்றவனுக்கு - வெற்றிமிக்க அவ்வரசனுக்கு, உற்று உரைப்ப - எடுத்து சொல்லி அழைக்க, ஏதம் இலா காட்சியர் - குற்றமற்ற தோற்றப் பொலிவுள்ள தூதர்கள், வந்து எய்தினர் - வந்தடைந்தனர்.

கோதை - மாலை: மாலை போன்ற அழகு அமைந்தவள் தமயந்தி என்னும் பொருளில் உவமை ஆகுபெயர்; இங்குப் பெண் என்ற அளவிற் கூறியதாகக் கொள்க. அரசர் திருமுன் அணுகுவோர் அங்கவீனம் முதலிய குற்றமில்லாத நல்ல உருவப் பொலிவுடையராய் இருத்தல் வேண்டும் என்பது விதியாதலின், ஏதமிலாக் காட்சியர் என்னப்பட்டார். அடையாத வாயில்; வந்தடையும் யாசகர்களும், குறைகூறி நீதி கரண்போரும் தடையின்றி உட்புக எந்நேரமும் திறந் திருக்கும் வாயில்; 'பொருநர்க் காயினும் புலவர்க் காயினும், அரு மறை நாவி னந்தணர்க் காயினும், கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன, வடையா வாயில்' (சிறுபாண். 203 - 205) என்றமை காண்க.

பி - ம். 1. கொற்றவனுக் குற்றுரைப்பார், குற்றுரைப்பான்.
4. அடையாத வாச லகம். (51)

65. காவலன்றன் றூதர் கடைக்கா வலர்க்கறிவித்
தேவலிற்போ யீதென் றியம்புதலும்—மாவில்
பொலிந்ததேர் பூட்டென்றான் பூவாளி பாய
மெலிந்ததோள் வேந்தன் விரைந்து.

காவலன் தன் தூதர் - வீமராஜனுடைய அத்தூதர்கள், கடை காவலர்க்கு அறிவித்து - அரமனை வாயிற்காப்போர்க்குத் தாம் வந்த செய்தி தெரிவித்து, ஏவலில் போய் - அரசனுடைய கட்டளைப்படி உள்ளே சென்று, ஈது என்று இயம்புதலும் - தாம் வந்த காரியம்

இதுவென்று அவ்வரசன் நளனுக்குச் சொன்னவுடனே, பூ வாளி பாய மெலிந்த தோள் வேந்தன் - அத்தமயந்தியிடம் கொண்ட காதலால், மன்மதன் மலரம்புகள் பாயப் பெற்று அதனால் மெலிந்து வாடிய தோள்களையுடைய மன்னனன அந்நளன், (அங்கிருந்த தன் சாரதியை நோக்கி) 'மாவில் போலிந்த தேர் - குதிரைகளால் விளங்கும் தன் தேரை, விரைந்து பூட்டு என்றான் - விரைவில் பூட்டு' என்று உத்தரவிட்டான்.

அரச சமுகத்தைப் பிறர் அணுகும் முறையும், அங்குள்ள காவலும் இதில் விளக்கப் பெற்றன. வாளி - அம்பு; வாள்போன்று பிளக்கக்கூடிய கூர்மையும் ஒளியும் உடைமையால் கர்ணப்பெயர் என்னலும் ஒன்றும். விரைந்து பூட்டு என்றது, நளன், தமயந்திபாற் கொண்ட ஆசை மிகுதியால், அவளைப் பெற விரும்பிய அவன் உள்ளத்து வேகத்தைக் குறித்தது. நளனே தேர் செலுத்தும் கலையில் மேம்பட்டவனையினும், தான் அரசச் சிறப்புடன் சுயம்வரத் திற்குச் செல்ல விரும்பிச் சாரதியைத் தேர் பூட்டிவரப் பணித்தான் என்க. மா - குதிரை; இது மான் எனவும் வழங்கும்; 'மான்றேர்த் தொழிற்கும்' (338).

பி - ம். 1. காவலவன் றூதக். 2. ஏவலிற்கு ளெய்தி யியம்புதலும்.
4. வேந்தன் வியந்து, மெலிந்து. (52)

நளன் தேரூர்ந்து குண்டினபுரம் சென்றது.

66. கெட்ட சிறுமருங்குற் கீழ்மகளிர் நீள்வரம்பில்
இட்ட பசுங்குவளை யேரடித்த—கட்டி
கரையத்தே னூறுங் கடனாட னூர்க்கு
விரையத்தே ரூரென்றான் வேந்து.

கெட்ட - அழிந்துபோன (அல்லது இழந்ததான), சிறு மருங்குல் - சிறிய இடையையுடைய, கீழ் மகளிர் - தாழ்ந்த குலப் பெண்கள், நீள் வரம்பில் - நீண்ட வயற் கரைகளின் மீது, இட்ட - களைகளாகப் பறித்துப் போட்ட, பசும் குவளை - பசுமையான நீலோற்பலப் பூக்களின், தேன் - தேனனது, ஏர் அடித்த - (உழவர்) ஏரோட்டியதால் பெயர்ந்து கிடந்த, கட்டி - மண்ணின் கட்டிகள், கரைய - கரைந்து சேறுகுமாறு, ஊறும் - ஊறிக்குழை வாக்கும், கடல் நாடன் ஊர்க்கு - கடல் சூழ்ந்த விதர்ப்ப நாட்டரசனன வீமராஜன் தலைநகரமாகிய குண்டினபுரத்திற்கு, வேந்து - அரசனன நளன், 'விரைய தேர் ஊர் என்றான் - வேகமாய்த் தேரைச் செலுத்து' என்று தேர்ப்பாகனுக்குக் கூறினன்.

கெட்ட மருங்குல் : இது வடமொழி நடை ; கெட்ட - குறைந்து அழிந்து போன என்னலும் ஒன்றும். இச்செய்யுள் குவளை மலர் களைக் களையாகப் பறித்துப்போடும் வளமுடைய மருத நிலத்தையும், கடற்பகுதியாகிய நெய்தல் நிலத்தையுங் கூறியதால் விதர்ப்ப நாடு, அவ்விரு நிலப்பகுதிகளைக் கொண்டது என்பதாம். இனி, நெய்தல் நிலத்திலே குவளைப் பூக்கள் மலிந்த வயல்கள் உள்ளனவாகக் கொண்டு திணைமயக்கங் கூறியதும் ஆம். களைபறிப்போர். அக் களையை வரப்பின்மேல் எறிதல் ; குறுந். 309 : சிலப். 10 : 86 அடியார்க். கீழ் மகளிர் இடைகளே இல்லாது அவை அழிந்தன போன்றிருந்தனர் என்றதால், அந்நாட்டு மற்றை உயர் குலமகளிரின் இடை முதலிய அங்கலக்ஷணச் சிறப்புகள் கூறுமலே அமையும் என்பது நோக்கத் தக்கது. 'விரையத் தேர் ஊர்', என்றது: தமயந்தியை அடைய அந்நளன் ஆசையாற் கொண்ட விரைவை முன் (65) செய்யுளில் உள்ளதுபோல இங்கும் வலியுறுத்தியது என்க.

குறிப்பு :—இச் செய்யுள், மருதத்திணையைச் சிறப்பிப்பதாக உள்ள இடத்தில் கடலைனூர்க்கு என்று முடிவது பொருத்தமாக இல்லையாதலின், 'கட்டி கரையத்தே னூறுங் கரைநாடனூர்க்கு' என்பது போன்ற பாடம் இருக்க வேண்டுமெனத் தோன்றுகின்றது ; கரை - நிலப்பகுதி. மேலும், விதர்ப்பநாடு மத்தியப் பிரதேசத்தில் ஒரு பகுதியாகத் தெரிவதால், அங்குக் கடல் இல்லை. ஆதலின், இது நன்கு ஆராயத்தக்கது.

பி - ம். 1. மேல் வரம்பில. 2. ஏரடிப்ப, ஏரெடுத்த, 4. ரூக்கின்றன. (53)

67. சடைச்செந்நெல் பொன்வினைக்குந் தன்னாடு பின்னைக்
கடற்றானை முன்னைக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் பொற்றாம வீமன் றிருமகளாம்
நல்லியரும் வாழ் நகர்.

சடை செம் நெல் - சடைச் சம்பா என்னும் ஒருவகைச் செந்நெல், பொன் வினைக்கும் - பொன் போல அழகாக விளைந்து தோன்றும், தன நாடு பின்னை - தனது நிடத நாடு பின் இருக்கவும், கடல் தானை முன்னை - கடல் போன்று பரந்து விளங்கிய தன் சேனை கள் தனக்கு முன் செல்லவும், அடற்கு அமைந்த - போர் புரிவதற்கு ஏற்ற வீரமமைந்த, வில்லியரும் - வில்லேந்திய வீரர்களும், பொன் தாம - பொன் மாலைகள் அணிந்த, வீமன் திருமகளாம் - வீமராஜன்

அழகிய மகளாகிய தமயந்தி யென்னும், நல் உயிரும் - தனது சிறந்த உயிரும், வாழும் - வாழ்ந்து வரும், நகர் - குண்டினபுரி என்னும் நகரத்தை, கண்டான் - நளன் தன் எதிரே கண்டு அங்குப் போய்ச் சேர்ந்தான்.

சடைச் செந்நெல் - சடை பின்னியது போலப் பொன்னிறத்த அழகோடும் விளங்கும் கதிர்களையுடைய ஒருவகை நெல்; இது தஞ்சை, திருசிராப்பள்ளி மாவட்டங்களில் பயிராகும் சடைச்சம்பா என்னும் நெல். இவ்வகை நெற்பயிர் சடைபற்றியது போலத் தழைந்த கதிர்களால் நிறைந்து தானியம் வாசி காணும் ஆதலால் சடைச் செந்நெல் எனப் பெயர் பெற்றது. பொன் விளைக்கும் என்பதற்கு, அதன் விளையால் பொன்னின் வருவாய் அதிகம் உண்டாகும் எனப் பொருள் கொள்வாரும் உளர். ஆனால் முற்கூறியதிலுள்ள இயற்கை எழிலும் நயமும் அதில் சிறவாமை காண்க. வில்லியரை இங்குக் கூறியது, நகர்க்குப் படை, அரசன் பேருறுப்பர் தலின், என்க. இனி, புறப்பட்டு வரும் நளனுக்குப் பின்னே நிடதநாடும், முன்னே விதர்ப்ப நாடும் இருக்க அவனது சேனை முதலிய பரிவாரங்கள் இடைவழி யெங்கும் அடர்ந்துசென்றன என்னலும் ஆம். இது, சீதாபிராட்டியின் திருமணத்திற்குச் சென்ற தயரத சக்கரவர்த்தியின் பரிவாரத்தின் மிகுதியை,

'உழுந்திட விடமிலை யுலக மெங்கணும்
அழுந்திய வுயிர்க்கெலா மருட்கொம் பாயினன்
எழுந்தில னெழுந்திடைப், படருஞ் சேனையின்
கொழுந்து போய்க் கொடிமதின் மிதிலை கூடிற்றே.'

(கம்ப. பால. எழுச்சி : 23.)

என்று கல்வியிற் பெரியார் சிறப்பித்ததை எடுத்தாண்டுகொண்டார் நம் நூலாசிரியர் என்னலாம். இங்குத் தன் நாடு பின்னை என்றது, தன்னூட்டு மக்கள் பின்னே வரவும். எனக் கொள்ளலுமாம்.

இனி, 'உடற்கமைந்த வில்லுயரும் பொற்றும' என்ற பாடங் கிடைத்தால் அது, உடலுக்குப் பொருத்தமாக அமைந்தனவும், அவள் அழகின் ஒளியால் தம்மொளி உயரப் பெற்றனவுமான பொற்றும வீமன் திருமகளாம் எனப் பொருள் கொள்ளலாம்; அது பின் 'பூணுக் கழகளிக்கும் பொற்றெடி' (148) என ஆசிரியர் தமயந்தியைச் சிறப்பிப்பதற்கும் ஏற்றதாகவும் அமையும். நல்லுயிரும்; நளனுடைய உயிரினும் சிறந்த தமயந்தியும் எனக் கொள்க. அதாவது, நளனது உண்மையான உயிர் தமயந்தி என்பதாம். ஒப்பு: கம்ப. சுந்தர ; 525.

பி-ம். 2. உடற்கமைந்து, உடற்கமைந்த.
3. வில்லுயரும் பொற்றேரும்; வீமன் றிருமகளும். (54)

நாரதமுனிவர் வானுலகு சென்றது.

68. நெற்றித் தனிக்கண் ணெருப்பைக் குளிர்விக்கும்
கொற்றத் தனியாழ்க் குலமுனிவன்—உற்றடைந்தான்
தேனுடுந் தெய்வத் தருவுந் திருமணியும்
வானுடுங் காத்தான் மருங்கு.

நெற்றி தனி கண் - சிவபெருமானுடைய நெற்றியில் உள்ள ஒப்பற்ற கண்ணின், நெருப்பை - தீயின் கொடுமையை, குளிர்விக்கும் - குளிரும்படி அடக்குவிக்கும், கொற்ற தனி யாழ் குல முனிவன் - தாம் மேற்கொண்ட செயல்களில் வெற்றி பெறுபவரும், ஒப்பற்ற மகதி என்னும் வீணையையுடையவரும், முனிவர் தலைவரு மான நாரத முனிவர், தேன் நாடும் - வண்டுகள் தேடியடையும், தெய்வ தருவும் - தெய்வத் தன்மையுள்ள கற்பக விருக்ஷத்தையும், திருமணியும் - சிந்தாமணி என்னும் தெய்வத்தன்மை வாய்ந்த இரத் தினத்தையும், வான் நாடும் - வானுலகத்தையும், காத்தான் - தனக்கு உரிமையாகக் கொண்டு காத்து வந்தவனை இந்திரனது, மருங்கு - அருகே, உற்று அடைந்தான் - போய்ச் சேர்ந்தார்.

அனைத்துயிரையும் காமத்தீயால் எரிக்கும் மன்மதனையே எரித்த ஒப்பற்ற கண் ஆதலின், தனிக்கண் எனப்பட்டது. சிவபெருமா னது நெற்றிக் கண்ணின் கொடிய நெருப்பையும் நாரத முனிவரின் யாழிசை குளிர்வித்துச் சீதளமாக்கும் என்றதால், அதன் ஓசையின் இனிமையின் ஏற்றங் காரணமாகக் கொற்றத் தனியாழ் என்னப்பட் டதும் ஆம். பிரம குமாரரும், தேவரிஷியும் ஆதலால் குல முனிவன் என்னப்பட்டார். முனிவன் என்பதை, கொற்ற முனிவன், தனியாழ் முனிவன், குல முனிவன் என இயைக்க. கற்பகத் தரு, கேட்டதை அளிக்கவல்ல ஒரு தெய்வ விருக்ஷம்; சிந்தாமணி, நினைத்ததை அளிக்கவல்ல தெய்வச் சிறப்பமைந்த ஓர் அரதனம்; தருவும், மணி யும் வானுடும்: உம்மைகள் எண்ணுப் பொருளன: இங்கு நாரத ரோடு பர்வதர் என்ற முனிவரும் இந்திரனிடஞ் சென்றதாக முத னூல் நளோபாக்யானம் கூறும்.

பி-ம். 3. தானுடுந் தேவுந் தருவுந் திருமறையும்; தருவுந் திருவுறையும். (55)

இந்திரன் நாரதரை வினவியது.

69. வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்றார்
ஆரு மிலரா லென்றையுற்று—நாரதனர்
நன்முகமே நோக்கினு னகஞ் சிறகரிந்த
மின்முகவேற் கையான் விரைந்து.

நாகம் சிறகு அரிந்த - மலைகளின் சிறகுகளை அறுத்தொழித்த, மின் முக வேல் கையான் - மின்னல் போல ஒளி வீசும் நுனி (அல்லது) வர்யைக் கொண்ட வச்சிராயுதம் என்னும் படையையுடைய இந்திரன், வீரர் - போர்த் தொழிலிற் சிறந்த வீரர்களும், விறல் வேந்தர் - பராக்கிரமம் வாய்ந்த அரசர்களும், விண் நாடு சேர்கின்றார் ஆரும் இலர் ஆல் - இந்தச் சுவர்க்க நாட்டை வந்து சேருபவர் (இப்பொழுது) ஒருவருமே இல்லையே! என்று, ஐ உற்று - சந்தேகம் அடைந்து, நாரதனர் - அந்த நாரத முனிவருடைய, நல் முகமே - திரு முகத்தை, விரைந்து நோக்கினன் - விரைந்து பார்த்துக் கேட்டான்.

பகைவர்க் கஞ்சாது எதிர்த்துப் போரில் மாண்டவர் வீரசுவர்க்கம் என்னும் வானுலகப் பதவியை அடைவர். அவ்வாறு வீரர் ஒருவரும் இப்பொழுது அப் பதவிக்கு வராமையால் அதன் காரணம் யாதோ என்று ஐயுற்றுத் திரிலோக சஞ்சாரியாகிய நாரத முனிவரைக் கண்டு விரைந்து கேட்டான் இந்திரன் என்பதாம். வீரர் விறல் வேந்தர், என்பதை ஒரு தொடராகக்கொண்டு வேந்தருக்கே ஆக்கிப் பொருள் கூறினரும் உண்டு. முற்காலத்தில் மலைகள் யாவும் சிறகுகளுடையனவாய் இருந்து, ஓரிடமிருந்து மற்றோரிடத்துக்குப் பறந்து சென்று இறங்கி அங்குள்ள பிராணிகளுக்கும் மற்ற பொருள்களுக்கும் பெருங்கேடு விளைத்தமை கண்ட இந்திரன், அம் மலைகளின் சிறகுகளைத் தன் வச்சிரப்படையால் அறுத்து அவை இடம்விட்டுப் பெயராவண்ணஞ் செய்தான் என்ற புராணக் கதை இங்குக் குறிப்பிடப் பெற்றது. இச் செய்தி பின்னும், 72, 78 பாடல்களிலுங் கூறப்பெறுவது காண்க. நாகம்: சுவர்க்கம், பாம்பு, யானை, ஒரு மரம், மலை எனப் பல பொருள்களைக் குறிக்கும் ஒரு பெயர்த் திரிசொல். இங்கு, நாகம் சிறகரிந்த.....வேல் என்றது, மலைகளின் சிறகரிந்தது வச்சிரப்படையே எனினும், வேற்படையையே சிறந்த போர்க்கருவியாகக் கூறும் தமிழ் வழக்கைப் பின்பற்றி என்க. இச் செய்யுள் ஒரு பிரதியில் இல்லை.

பி-ம். 2. ஆரு மிலரேயென், ஆரு மிலையோவென்.
3. நாகச் சிறகறுத்த; சிறையரிந்த. (56)

நாரதர், தமயந்தி சுயம்வரத்தையும் அவளது எழிற் சிறப்பையும் கூறியது.

70. வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சயம்வரத்து—மாமன்னர்
போயினர் என்ருன் புரந்தரற்குப் பொய்யாத
வாயினன் மாதவத்தோர் மன்.

பொய்யாத வாயினன் - தவருத வாய்ச்சொற்களையுடைய வரும், மா தவத்தோர் மன் - பெரும் தவ முனிவர்களுக்குத் தலைவருமான நாரத முனிவர், 'புரந்தரற்கு - இந்திரனுக்கு, வீமன் மடந்தை - வீமராஜன் புதல்வி தமயந்தியின், மணத்தின் - திருமணத்தை முன்னிட்டு ஏற்படுத்தியுள்ள, சயம்வரத்து - சுயம் வரத்தில், விரை தொடுத்த - வாசனையோடு தொடுக்கப்பெற்ற, தாமம் புனைவான் - மணமாலையை அணியும் பொருட்டு, மா மன்னர்- பேரரசர்கள் யாவரும், போயினர் என்ருன் - போயுள்ளார்கள்' என்று கூறினர்.

நாரதர் தவசியருள் சிறந்தவராவர் ஆகலின். மாதவத் தோர் மன், என்னப்பட்டார். பொய்யாத வாயினன்: அவர் வாய்ச் சொல் என்றும் தவருது பலிக்கும் என்பது. சுயம்வரம் என்ற சொல் இங்கு மோனை ஒசையின் ஒற்றுமைச் சிறப்பு நோக்கி, சயம் வரம் என்ருயிற்று. (57)

பி - ம். 1. விரைந்தெடுத்த. 2. சயமரத்து.

71. அழகு சுமந்தினைத்த வாகத்தான் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீப மற்றவளே
காமன் திருவுக்கோர் காப்பு.

(மேலும் நாரதமுனிவர்) 'அவள் - அந்தத் தமயந்தி, அழகு சுமந்து இனைத்த ஆகத்தாள் - பெண்களுக்குரிய அழகை மிகுதி யாகச் சுமந்து, அதனல் இளைப்புற்ற சரீரத்தையுடையவள், வண்டு பழகும் கரும் கூந்தல் பாவை - வண்டுகள் விட்டு நீங்காது என்றும் தொடர்ந்து வந்துதங்கிப் பழகும் கரிய கூந்தலையுடைய ஒரு பதுமை போன்றவள்; மழ களிற்று - இளமைப் பருவத்து ஆண் யானை போன்ற, வீமன் - வீமராசனது குலத்துக்கு - மரபுக்கு, ஓர் மெய் தீபம் - ஓர் அழியாத விளக்குப் போன்றவள்; மற்று - மேலும், அவளே - அத்தமயந்தியே, காமன் திருவுக்கு - மன்மதனுடைய செல்வத்திற்கு, ஓர் காப்பு - ஓர் அரண் அல்லது பாதுகாப்பான இடம் போல்வாள்.

அழகு.....ஆகத்தாள் : அழகெல்லாம் வந்து தங்கியதால் அதனைத் தாங்க முடியாமல் இளைத்துப் போன சரீரத்தையுடையவள்; இது, ஸ்ரீ கம்பநாடர், 'அழகெலா மொருங்கே கண்டால் யாவரே யாற்ற வல்லார்' (கம்ப. பால. கோலங்காண். 20) என்றும்; 'நலம் பொறை கூர்தரு மயில்' (ஆரணிய. 1131) என்றும் பிராட்டி திறத்து அருளியவற்றை அடியொற்றி எடுத்தாளப் பெற்றது என்னலாம். வண்டு.....கூந்தல் : அவள் கூந்தலின் இயற்கை நறுமணத்தை நாடி வந்து வண்டுகள் நாளும் நுகரும் பழக்கத்தைக் கொண்டன என்பதாம். மெய்த்தீபம்; தூண்டாது என்றும் நின்றெரிரும் விளக்குப்போன்றவள்; தீபம் இவ்வுவமை இந்நூலில் தமயந்தி திறத்து, மேலும், 71, 193, 292 ஆகிய பல இடங்களிற் கூறப் பெறுவன காண்க. காமன்.....காப்பு : காமன் செல்வமான மகளிர் அழகுகளைச் சேமித்து வைத்த ஒரு கருவூலம் ஆவள் என்னலும் ஆம். அவளே; ஏகாரம் தேற்றப் பொருளது. (58)

அச்சுயம்வரத்திற்கு இந்திரன் முதலிய தேவர்கள் புறப்பட்டது.

72. மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் திருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து.

மால் வரையை - பெரிய மலைகளை, வச்சிரத்தால் - தனது வச்சிராயுதத்தினால், ஈர்ந்தானும் - பிளந்து சிறகு அரிந்த இந்திரனும், வானவரும் - மற்றை, யமன், வருணன் அக்னி ஆகிய தேவர்களும், கோல் வளை தன் மாலை குறித்து - அழகிய சித்திர வேலைகள் அமைந்த வளையல்கள் அணிந்த தமயந்தியின் சுயம்வர மணமாலையை அடையுங் கருத்தைக் கொண்டு, சால்பு உடைய விண்ணாடு நீங்கி - பெருமையையுடைய தம் வான நாட்டை விட்டு நீங்கி, மண் நாடு நோக்கி - பூவுலகை நோக்கி, விதர்ப்பன் திருநகர்க்கு - விதர்ப்ப நாட்டரசனது வீமன் அழகிய குண்டினபுரம் என்னும் நகருக்கு, மகிழ்ந்து எழுந்தார் - போக மனமகிழ்ச்சியுடன் எழுந்து புறப்பட்டனர்.

மால்வரையை.....வானவரும், கோல்வளை தன் மாலை குறித்து, சால்புடைய விண்ணாடு நீங்கி, விதர்ப்பன் திருநகர்க்கு, மண்ணாடு

நோக்கி மகிழ்ந்து எழுந்தார் என இயைத்துப் பெர்ருள் கொள்க. கோல்வனே (184); கம்ப. ஆரணிய: 203; 879. இங்கு இது பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய்த் தமயந்தியைக் குறிப்பது. (59)

பி - ம். 1. வச்சிரத்தா லீர்த்தானும்.
2. கோல்வனே தன்னைக் குறித்தெழுந்தார்; குறித்தெழுந்தே.
3. வீதர்ப்பன் நிருநகர்க்காய்; நிருநகரம், நிருமகட்காய்.
4. நன்னுடு நோக்கி நயந்த; மகிழ்த்த.

நளனைத் தேவர்கள் வழியிற் கண்டது.

73. பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற் போயினதன்
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான்—முந்தி
வருவான்போற் றோர்மேல் வருவானைக் கண்டார்
பெருவானிற் றேவர் பெரிது.

பைம் தெரியல் - புதிய மாலை யணிந்த, வேல் வேந்தன் - வேலேந்திய அரசனை நளன், பாவை பால் போயின - பதுமை போன்று அழகமைந்த தமயந்தியிடம் போன, தன் சிந்தை கெடுத்து - தன் மனத்தைத் தன்னைவிட்டு போக்கடித்து இழந்து, அதனை தேடுவான் - அம்மனத்தைத் தேடி அடையும் பொருட்டு, முந்தி வருவான் போல் - முற்பட்டு வருபவனைப் போல, தோர் மேல் வருவானை - ஓர் இரதமேறி வரும் அவ்னை, பெரு வானில் தேவர் - பெருமை பொருந்திய வானுலகில் வாழும் (மேற்கூறிய இந்திரன் முதலான) தேவர்கள், பெரிது கண்டார் - நன்ருய்ப் பார்த்தனர்.

பைம் - புதுமை; அழகும் ஆம். கெடுத்தல் - இழத்தல், கெட்டுப் போக விடுதல்; முந்தி ஒரு பொருளை இழந்தவன் அதனை முன்னதாகத் தேடச் செல்லும் இயல்பை இங்கு உயர்த்தியது ஆகும். பெருவான்: ஐம் பெரும்பூதங்களுள் பெரியதும், அவற்றின் முற்பட்டதும் அவற்றின் பிறப்பிடமாவதும் ஆகிய வான்; இதனை 'வானின் நிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பு'; (கம்ப. அயோத். 1); என்றதாலும் அறியலாம்.

பி - ம். 1. வேனளனும், வேய் நளனும்.
2. தேறுவான், தேடுவபோல், றேவர் பெயர்ந்து, (60)

இந்திரன் நளனைத் தமயந்திபால் தூதுசெல்ல வேண்டியது.

71. காவற் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோன்
ஏவற் றொழிலுக் கிசையென்றான்—ஏவற்கு
மன்னவனு நேர்ந்தான் மனத்தினுன் மற்றதனை
இன்னதென வோரா திசைந்து.

விண்ணவர் கோன்-தேவர்க்கரசனான இந்திரன், காவல் குடை வேந்தை கண் உற்று-உலகு காவலுக்கு ஓர் அடையாளமாகக் கொண்ட வெண்கொற்றக் கொடையையுடைய அரசனான நளனைக் கண்ணெதிரே கண்டு, 'ஏவல் தொழிற்கு இசை என்றான்-யாம் ஏவும் ஒரு செயலுக்கு நீ உடன்படுவாயாக' என்று கூறினான்; மன்னவனும்-நளராஜனும், அதனை இன்னது என மனத்தினால் ஓராது-அக் காரியத்தைத் தன் மனத்தால் இப்படிப்பட்டது என்று உணராமல், ஏவற்கு-அத்தேவராஜனுடைய கட்டளைக்கு, இசைந்து நேர்ந்தான்-மனம் ஒப்பி உடன்பட்டான்.

தேவேந்திரன் ஆதலின், அவன் ஏவும் தொழிலைத்தான் செய்வதே முறையும் பெருமையும் ஆம் எனக் கருதி இசைந்தான் என்க. கண்ணுறுதல்-நேரிற் காண்டல்; உறு, துணைவினை. (61)

75. செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
எங்களிலே சூட்ட வியல்வீமன்—மங்கைபால்
தூதாக வென்றனைத் தோகையைத்தன் னகத்தால்
கோதாக வென்றனைக் கோ.

(இந்திரன் நளனை நோக்கி), 'செம் கண் மத யானை தேர் வேந்தே - சிவந்த கண்களையும் மதப் பெருக்கையுமுடைய யானையையும் தேரையுமுடைய அரசனே! தேமாலை-தேனோடு கூடிய புதிய மண மாலையை, எங்களிலே சூட்ட - எங்களில் ஒருவருக்குச் சூட்டும் படி, இயல் வீமன் மங்கைபால் - சிறப்பு அமைந்த வீமராஜன் புதல்வியான தமயந்தியிடம், தூது ஆக என்றனை - நீ தூதனுகச் செல்வாயாக! என்று கூறினான்; (அது கேட்டு), அ கோ - அந்த நளனுகிய மன்னன், அ தோகையை - அந்த மயில் போன்று அழகமைந்த தமயந்தியை, தன் ஆகத்தால் - தன் மனத்தின் உறுதியால், கோது ஆக வென்றனை - சாரமற்ற சக்கையென எண்ணி அவள்பால் தான் கொண்ட காதலை வென்று, அதனைத் தன்னுள் அடக்கிக் கொண்டான்.

செங்கண் மதயானை : சினத்தால் சிவந்த கண்களையும் தருக்கையும் கொண்ட யானை என்னலும் ஆம்; சிவப்பு கோபத்தைக் குறிக்கும் சொல்; 'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள'; தொல். சொல். 372. தேமாலை தேம்மாலை என்பதில் மகரம் கெட்டது. இயல்-தகுதி அல்லது நேர்மையும் ஆம். ஆகம்-அகம் என்பதன் நீட்டல் விகாரம்; 'ஆகத் தெழுகனல் கண்வழியுக' (கம்ப. ஆரணிய: 458.) கோது - சக்கை: 'கோதென் றுண்டிலள்''. (கம்ப. பால. தாடகை வதைப் 56.)

பி - ம். 1. நாண்மாலை, 3. தூதேக; ஞகத்தே. (62)

76. தேவர் பணிதலைமேற் செல்லுந் திரிந்தொருகால்
மேவுமிளங் கன்னிபான் மீண்டேகும்—பாவில்
குழல்போல நின்றுழலுங் கொள்கைத்தே பூவின்
நிழல்போலுந் தண்குடையா னெஞ்சு.

பூவின் நிழல் போலும் தண் குடையான் நெஞ்சு-பூமிக்கு நீழல் அளிப்பது போன்று விளங்கும் குளிர்ந்த வெண்குடையையுடைய நளனது மனம், (அப்போது) தேவர் பணி தலைமேல் செல்லும்-இந்திரன் முதலிய அத்தேவர்களின் கட்டளையைத் தன் தலை மீது தாங்கிச் செய்யப் போவதாகும். ஒரு கால் - மறுபடியும் ஒரு முறை, திரிந்து - அங்கிலையிலிருந்து மாறி, மேவும் - தான் விரும்பியிருந்த, இளம் கன்னிபால் - இளமைப் பருவத்து அத்தமயந்தியிடத்து, மீண்டு ஏகும்-திரும்பி அன்புகொண்டு செல்லும், (ஆதலின்) பாவின் குழல் போல - நெசவுப் பாவு என்னும் நீண்ட நூல்களின் ஊடே அங்குமிங்குமாக மீண்டு மீண்டு செல்லும், குழல் போல - குறுக்கு நூல் உள்ள குழல்போல, நின்று உழலும் கொள்கைத்து - நின்று அலைவுறும் ஒரு செயலையுடையதாயிற்று. ஏ:அசை.

மேவும் இளங்கன்னி: இளமை மேவும் கன்னி எனவும் இயைத்துப் பொருள் கொள்ளலாம். பாவு-நீளமாய் நெசவுக்கு அமைந்த நூல்களின் பரப்பு. குழல்-குழலின் வழியே குறுக்காக அங்குமிங்கும் மாறிமாறிச் செல்லும் நூல்; அமைந்துள்ள குழல், இதனை 'நாடா' என இக்காலத்து வழங்குவர். பாவின் குழல்; கம்ப. பால. திருவவதாரப்: 130; பெரும். 4. 4 39; திருவாசகம். அடைக்கலப்: 8. பூ-பூமி: இது ஹூமி: என்ற வடசொல்லின் திரிபு: பூவுலகம், பூபாலர் என்பன போல, இனி, பூவின் நிழல் போலும் தண் குடையான் என்பதற்குத் தாமரை மலரின் நிழல் போன்ற குளிர்ச்சியுடைய குடையுடையவன் எனலும் அமையும். மேலும்; 'பூவின் நிழல் போலும் என்பதை நெஞ்சு என்பதோடு இயைத்தலும் ஏற்கும்.

பி-ம். 3. பூமென் னிழல். (63)

77. ஆவ துரைத்தா யதுவே தலைநின்றேன்
தேவர்கோ னேயத் திருநகரிற்—காவல்
கடக்குமா றென்னென்ருன் காமநீ ராழி
அடக்குமா றுள்ளத் தவன்.

காமம் நீர் ஆழி-காமமாகிய நீர் நிறைந்த கடலை, அடக்கும் - அடக்கக் கூடிய, மாறு-மாறிய, உள்ளத்து அவன் - மனவலிமை கொண்ட நளன், அவ்விந்திரனைப் பார்த்து ஆவது உரைத்தாய்-உமக்கு ஆக வேண்டியதை நீவிர் கூறினீர்; அதுவே தலை நின்றேன்; அந்த உங்கள் காரியத்தைத் தலைமையாகக் கொண்டு செய்ய நின்றவனானேன். (ஆனால்) தேவர் கோனே-தேவர்க்கரசனே; அ திரு நகரில் - யான் செல்ல வேண்டிய செல்வம் அல்லது அழகு நிறைந்த அந்தக் குண்டினபுரத்தில், காவல் கடக்கும் ஆறு என்-கன்னிமாடத்தில் உள்ள காவலை யான் கடந்து செல்லும் விதம் எப்படி? என்ருன்-என்று கேட்டான்.

தலை நின்றேன் என்றது முன் எவற்கு மன்னவனும் நேர்ந்தான் 74 என்ற உறுதிச் சொல்மாருமல். காமநீராழி: காமத்தைக் கடல் போற் பெரிதென்பது; குறள். 1164; கம்ப. சுந்தர: 470; சீவக: 2503; பெருங். 4. 13:83. அடக்கும் ஆறு உள்ளத் தவன் - அடக்கும் வழியையுடைய மனத்து நளன் என்னலும் ஏற்கும்.

பி - ம். 1. ஆவனிரைத்தாய்.
2. தேவர் கோவேயத், தேவர்க்குந்தேவ; திருநாரிற். (64)
4. அடக்குமா வுள்ளத் தவன்.

78. வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தான் மால்வரையைப்
போர்வெஞ் சிறகறுத்த பொற்ருளான்—யாருமுனைக்
காணர்போய் மற்றவனைக் காணென்ருன் கார்வண்டின்
பாணருந் தாரானைப் பார்த்து.

வார் வெம சிலை ஒழிய - நீண்ட பயங்கரமான தோற்ற முடைய, மைந்நாகம் என்னும் மலை கடலில் ஒளிந்த அது நீங்க, வச்சிரத்தால் - தனது வச்சிராயுதத்தால், போர் வெம சிறகு அறுத்த - (எழுந்து) வந்து போரிடவல்ல மற்ற மலைகளின் கொடிய சிறகுகளை அறுத்தொழித்த, பொன் தோளான் - அழகிய தோள்களையுடைய இந்திரன், கார் வண்டின் - கரிய வண்டுகளின், பாண் - பாட்டுக்கள், ஆரும் - நிரம்பி விளங்கும், தாரானை - மாலையணிந்த நளனை, பார்த்து - நோக்கி, 'யாரும் உனை காணர் - ஒருவரும் உன்னைப் பார்க்க மாட்டார், அவனை காண் என்ருன் - அந்தத் தமயந்தியை நீ போய்ப் பார்' என்று கூறினன். மற்று: அசை.

மைநர்கம் கடலில் ஒளித்த வரலாறு, கம்ப. சுந்தர். கடல்தாவு படலத்திற் காண்க. இந்திரன் நளனுக்கு அவனைப் பிறர் அறியா வண்ணம் மறைக்கவல்ல திரஸ்கரணி என்ற மந்திரத்தை உபதேசித்து அனுப்பினன் என வடமொழி நளோபாக்யானமும், தமிழ் நைடத முங் கூறும். பாண் : பண் என்பதன் திரிபு.

பி - ம். 2. கிலியொளியே; கிறையறுத்த. 3. நீயவனைக்.
4. பாணறுந் தாராளைப். (65)

நளன் தூதுசென்றதும், தமயந்தியைக் கண்டதும்.

79. இசைமுகந்த வாயு மியறெரிந்த நாவும்
திசைமுகந்தா லன்ன தெருவும்—வசையிறந்த
பொன்னூடு போந்திருந்தாற் போன்றதே போர்விதர்ப்ப
நன்னுடர் கோமா னகர்.

போர் விதர்ப்ப நல் நாடர் கோமான் - போரிற் சிறந்தவனும், விதர்ப்பம் என்னும் சிறந்த நாட்டினர்க்கு அரசனுமான பீம ராஜனுடைய, நகர் - தலைநகரமான குண்டினபுரம், இசை முகந்த வாயும் - கீர்த்திகள் அல்லது புகழ்களைத் தம்மிடம் அள்ளி அடக்கிக் கொண்ட வாயில்களாலும், இயல் தெரிந்த நாவும் - சாஸ்திரங்களை அறிந்துணர்ந்த நாவினரான மேலோர்களாலும், திசை முகந்தால் அன்ன தெருவும் - திசைகளையே தம்மிடம் அடக்கிக் கொண்டவை போன்று (பெரிதாய் விளங்கும்) தெருக்களாலும், வசை இறந்த - குற்றமற்ற, பொன் நாடு போந்து இருந்தால் போன்றது - சுவர்க்க நாடே அங்கு வந்து தங்கியிருந்தது போன்ற சிறப்புடன் விளங்கியது. ஏ : அசை.

போர் விதர்ப்ப நன்னுடர் கோமான் - போர்த் தொழிலிற் சிறந்த விதர்ப்ப நன்னாட்டினர் அரசனை வீமன என அந்நாட்டு மக்களின் போர் வலியைக் குறித்ததும் ஆம். இசை முகந்தவாய் - பிற நாட்டினர் கூறும் புகழ்களைத் தம்மிடங்கொண்ட வாயில்களையுடைய குண்டினபுரம் என்க; அதாவது அந்நாட்டுச் சிறப்பை நாடொறும் பிறநாட்டினர் வந்து பாராட்டுவர் என்பதாம். இனி, அந்நகர் வீட்டு வாயில்கள்தோறும் இன்னிசை முழங்கிக் கொண்டிருக்கும் எனவுங் கொள்ளலாம். இயல் தெரிந்த நாவும் - அந்நகர் மாந்தர் யாவரும் சாஸ்திர ஆராய்ச்சியில், அல்லது அவற்றில் உரையாடலில் வல்ல நாவலர்கள் என்பதாம்; 'தெரிவன நூல்' என்று, முன் (18) இல் கூறியுள்ளமையுங் காண்க. திசைமுகந்தா லன்ன தெரு: ஒப்பு.

'தேயத்தர்ர் தேயஞ்சேறல் தெருவிலோர் தெருவின் சேறல்'; என்ற பாடம் (கம்ப. சுந்தர. 130.)

பி-ம். 1. இசை பிறந்த நாவும்; இசைதிறந்த வாயும். இசைபிறந்த வாரி; மியலறிந்த நாவும்; இசை திறந்த வாயும்.

2. திசைதிறந்தா லன்ன, திசைதிறைந்தா லன்ன தெருவும்:...வகைதறந்த. (66)

80. தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே—ஆங்கு
மதுநோக்குந் தாரானும் வாணுதலுந் தம்மில்
பொதுநோக் கெதிர்நோக்கும் போது.

ஆங்கு - அந்நகர்க் கன்னிமாடத்தில், மது நோக்கும் தாரானும் - வண்டுகள் தேனை நோக்கி வரும் மாலையையுடைய நளனும், வாள் நுதலும் - ஒளிதங்கிய நெற்றியையுடைய தமயந்தியும், தம்மில்- தங்களுள், பொது நோக்கு எதிர்நோக்கும் போது - எதிர்பாராது இயல்பாய் ஏற்பட்ட பார்வையில் ஒருவர்க்கொருவர் நேரே கண்ட பொழுது, தேம் குவளை தன்னிலே - தமயந்தியின் தேனோடு கூடிய நீலோற்பலம் போன்ற கண்களில், செம் தாமரை மலர - நளனது செந்தாமரை மலர் போன்ற கண்கள் மலர்ந்து தோன்ற, (அதாவது நளன் முதலில் அவளைப் பார்க்க) பூம் குவளை - அழகிய குவளை மலர் போன்ற அவளது கண்கள், தாமரைக்கே - நளனது கண்களாகிய அத் தாமரை மலரைக் கண்ட நிலையிலே, பூத்தது - நோக்கி மலர்வதாயிற்று.

மது - தேன்; இங்கு அதனை நாடும் வண்டிற்கு ஆயிற்று. மதுகரங் என்பதின் கடைக்குறையாகவுங் கொள்ளலாம். தமயந்தியின் கண்களில் நளனது தாமரை மலர் போன்ற கண்களின் நோக்கஞ் செல்ல, தமயந்தி கண்களும் நளனது கண்களிற் புலப்படுவதாயின, அதாவது, நளன முதலில் தமயந்தியை நோக்க, அவளும் நளனை நோக்கினாள் என்பதாம். முதலில் நளன் தமயந்தியை நோக்கியதாகக் கூறியது, நற்குல மகளிர் ஓர் ஆடவனை முன் குறித்து நேர் நோக்குதல், அன்னோர் இயற்கை குணங்களுக்கு இயல்பில்லாமையும் புறம்பானதும் ஆம். 'இஃது இலக்கணம வகுத்துள்ள நெறியையும் உட்கொண்டதோடு, 'அண்ணலும் நோக்கினா ளவளும் நோக்கினாள்.' (கம்ப. பால.: மிதிலைக்காட்சி: 35) என்ற கல்வியிற் பெரியாரின் அருளிச்செயலைப் பின்பற்றியமைந்தது என்னலுமாம. மேலும், 'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள், என்ன பயனு மில'; (குறள். 1100) என்றபடி ஒருவர்க்கொருவர் நோக்கிய இந்

நோக்கமே அன்னோர் ஊழ்வினை கூட்ட வந்த தெய்வக்காதலில் ஒன்றிக் கலந்து உறவாடத் தொடங்கின என்க. தமயந்தியின் கண்ணுக்குக் குவளையும், நளன் கண்ணுக்குச் செந்தாமரையும் உவமைகள் ஆயின. குவளை இரவில் மலரும் பூவும், தாமரை பகலில் மலரும் போதும் ஆயினும், குவளை தாமரையைக் கண்டே மலர்ந்தது எனக் கூறியது, விரோதாலங்காரம் என்னும் முரணணியும், இல்பொருளுவமையும் ஆம். குவளையும் தாமரையும், இங்கு உருவகமாகக் கண்களைக் குறித்து நின்றன. பொது நோக்கு - முன் எதிர்பாராது தற்செயலாய் ஏற்பட்ட பார்வை.

பி - ம். 2. தாமரைமே லோங்கு. (67)

நளனைக்கண்ட தமயந்தி நிலை.

81. நீண்ட கமலத்தை நீலக் கடைசென்று
தீண்டு மளவிற் றிறந்ததே—பூண்டதோர்
அற்பின்ருழ் கூந்தலாள் வேட்கை யகத்தடக்கிக்
கற்பின்ருழ் வீழ்த்த கதவு.

பின் தாழ் அல் கூந்தலாள் - பின்னே தாழ்ந்து தொங்கிய இருள் போன்ற கரிய கூந்தலையுடைய தமயந்தி, பூண்டது ஓர் வேட்கை - (அன்னப்புள் நளனது சிறப்புக்களை எடுத்துக் கூறியதிலிருந்து அவன்பாற்) கொண்ட ஓர் ஆசையை, அகத்து அடக்கி - வெளிவிடாமல் தன் மனத்திற்குள்ளே அடக்கிவைத்து, கற்பின் தாழ் வீழ்த்த - கற்பாகும் தாழ்ப்பாளை உள்ளே பதியப்போட்ட, கதவு - அவ்வலிவு அமைந்த கதவு, நீண்ட கமலத்தை - நீண்ட தாமரை மலரிதழ் போன்ற நளனது கண்களை, நீல கடை சென்று - தமயந்தியின் நீல மலர் போன்ற கண்களின் நுனிகள் (அதாவது கடை விழிகள் போய்) தீண்டு மளவில் - தீண்டிய (நோக்கிய) அப்பொழுதே, திறந்தது - திறந்து கொண்டது. ஏ : ஈற்றசை.

இனி, தாழ் கூந்தலாள், பூண்டதோர் அற்பின் வேட்கை அகத்தடக்கிக் கற்பின்ருழ் வீழ்த்த கதவு, நீண்ட கமலத்தை நீலக்கடை சென்று தீண்டுமளவிற் றிறந்ததே என இயைத்துப் பொருள் கொள்ளலும் ஏற்கும்; அற்பு : அன்பு என்பதன் வலித்தல் விகாரம்; 'அற்புக் காழி யனனரிச் சந்திரன்' (அரிச்சந்திர. மயான : 47); 'அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழ்'; (குறள். 71) என்றமையும் இதனை வலியுறுத்துவது காண்க. கற்பின்ருழ் வீழ்த்த கதவு :—இது, 'காமக் கணிச்சி யுடைக்கும் நிறையென்

னும், நாணுத்தாழ் வீழ்த்த கதவு', (குறள். 1251) என்றதை அடியொற்றியமைந்தது. நளதமயந்தியின் கண்களுக்கு முன் (80)இல் கூறிய, தாமரை குவளை மலர்களைக் கொண்டே இங்கும் விளக்கப் பெற்றமை காண்க. மேலும், அல் பின் தாழ் கூந்தலாள், என்பதற்கு, இருள் பின்னே தாழ்ந்து தொங்குகின்ற கூந்தலாள் எனவும்; இருள் வெட்கிப் பினைவிட்டுத் தாழ்ந்த தொக்கும் கூந்தலாள் எனவும் பொருள் கூற இடமாதல் நோக்கத்தக்கது. இனி பின் - பின்னல் அல்லது சடையும் ஆம்; (பிங்); 'பின்னெடு முடித்த மண்ணு முச்சி' (அகநா. 73 - 1) என்பது காண்க, வீழ்த்தல் - ஆழ்ந்து பதியச் செய்தல், 'இரு நிலம் பிளக்கவோர் வீழ்க்கும்மே' (நறுந்தொகை); 'கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே' (புறநா. 109 : 6) என்பன போல. கொண்டு கூட்டு ஆகும்.

பி - ம். 3. அகத்தடைத்த. 4. கோத்த கதவு. (68)

82. உய்ஞ்சு கரையேற வொட்டுங்கொ லொண்டொடியாள்
நெஞ்சு தடவு நெடுங்கண்கள் — விஞ்சவே
நீண்டதோ வங்ஙனே யிங்ஙனே நீண்மலராள்
ஆண்டதோண் மன்ன னழகு.

நீள் மலராள் - நீண்டு வளரும் தாமரை மலர் மீதுள்ள திருமகள், ஆண்ட - தனது இடமாக ஆண்டுகொண்ட, தோள் மன்னன் - தோள்களையுடைய அரசனை நளனது, அழகு - அழகானது, விஞ்ச - மிகுந்து வளர்ந்து ஓங்க, ஒள் தொடியாள் - ஒளிபொருந்திய வளையல்களை அணிந்த தமயந்தியின், நெஞ்சு தடவும் நெடும் கண்கள் - கண்டோர் மனத்துள் ஊடுருவிப் புகுந்து தடவும் நீண்ட விழிகள், அங்ஙனே இங்ஙனே - (நளனது வலப்புறம் இடப்புறம் உள்ள இருதோள்களின்) அங்கும் இங்குமாக, நீண்டதோ - நீண்டு வளர்ந்து அத்தோள்களின் அழகைப் பார்த்து நின்றனவோ? உய்ஞ்சு கரை ஏற ஒட்டும் கொல் - அவ்வழகுக் கடலினின்று பிழைத்துக் கரையேறி வர (அவளால்) கூடியதாகுமோ! (ஆகாது என்றபடி.) ஏ : அசை.

நளனது தோளழகு, தமயந்தியின் கண்களால் பார்த்துத் திருப்தி அடைய முடியாதபடி, சிறந்து இருபுறமும் நீண்டு விளங்கியது; ஆதலின், அக்கண்கள் அவன் தோளழகாகிய கடலினின்றும் கரையேற முடியாதனவாகி அவன் தோள்களை வலம் இடம்

ஆகிய இருபுறங்களுமாக்ப் பார்த்துப் பார்த்து அவ்வழகிலேயே மூழ்கி ஆழ்ந்துகிடந்தன என்பதாம். இது, 'தோள் கண்டார் தோளே கண்டார்.....வாள் கொண்ட கண்ணுர் யாரே வடிவினே முடியக் கண்டார்'; (கம்ப. பால. உலாவியற்: 19) என்ற பாசுரத்தின் கருத்தை, இங்குக் காப்பியத் தலேவன் தலேவர்களாகிய நளன் தமயந்தியர்க்கு ஏற்ற பெற்றி அழகுற அமைத்துக் காட்டிச் சிறப்பிக்கப் பெற்ற தென்னலாம். உய்ஞ்சு: உய்ந்து என்பதில் இடைப்போலி. ஒட்டுதல்-சேருதல், கூடுதல். இச்செய்யுள் கொண்டு கூட்டுப் பொருள் கோளில் அமைந்துள்ளது.

பி - ம். 4. ஆண்டதோர் மார்ப னழகு, மார்பி னழகு. (69)

83. மன்னகத் துள்ளழுந்தி வாரணிந்த மென்முலையும்
பொன்னணும் புக்கொளிப்பப் புல்லுவனென் — றுன்னி
எடுத்தபே ரன்பை யிடையே புகுந்து
தடுத்ததே நாணந் தறி.

மன் ஆகத்து உள் அழுந்தி - அரசனுன அந்நளனது மார்பினுள் அழுந்தி, வார் அணிந்த மென் முலேயும் பொன் நாணும்-கச்சு அணிந்த மென்மையான தனங்களும் பொன சரடுகளும், புக்கு ஒளிப்ப - புகுந்து மறைந்து கொள்ளும்படி, புல்லுவென என்று - அழுந்த நான் தழுவிக் கொள்வேன் என்று, உன்னி - நினேத்து, எடுத்த பேர் அன்பை-தமயந்திக்குத் தோன்றி எழுந்த பேராசையை, நாண் ஆம் தறி - அவளுடைய வெட்கம் என்னும் கணேயமரம், இடையே புகுந்து - நடுவே புகுந்து குறுக்கிட்டு, தடுத்தது - தடை செய்து விலக்கியது. எ : ஈற்றசை.

தறி : துண், ஆப்பு, முட்டுக்கட்டை, தடை செய்யும் கணேய மரம் எனும் பல பொருள்களேக் குறிக்கும். இவை அனேத்தினும் கணேயமரம் என்ற பொருளே இங்கு ஏற்றதாகக் கொள்ளப்பட்டது. தறி: தறித்தல்-பிரித்துத் தடை செய்தல். வார்-கச்சு : 45. உன்னி : செய்யா என்னும் வாய்பாட்டு விளேயெச்சம். தலேவனே அணேந்து மகிழத் தலேவி பெரிதும் விரும்பி எங்கியிருந்தாலும், அத்தலேவனே நேரிற்கண்ட விடத்து அவ்வாறு முற்படாமல் நாணத்தால் பின்னிட்டு நின்றுள் ; இது பெண்மைக்குரிய இயல்பு. இது காமத்தை நாண்வென்றது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. கற்பின்றுழ் வீழ்த்த கதவைக் (81) காதல் திறக்கக் கருதினுலும், அதனே நாணந் தறி (83) தடுத்தது என இயைத்து முடிக்க.

ஒப்பு :

(1) மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணக்கா லாயிரமுஞ் சொல்லுவேன் - கண்டக்கால்
பூணகந் தாவென்று புல்லப் பெறுவேனே
ஈரணை டுடன்பிறந்த நான். (முத்தொள்ளாயிரம்).

(2) வரிமுலை யோடுந் தோன்றி வளர்தொறும் வளர்ந்து வீங்கிப்
பெருகுநாண் சுமக்க லாற்றாப் பெய்மலர்க் கொம்பு போல்வாள்
திருமுகஞ் சிறிது கோட்டிக் கயிற்புற மதனிற் றேன்கொள்
விரிமலர்க் கூந்த ருழ மின்னென நுடங்கி நின்றாள்.
(நைடதம். மணம்புரி : 32)

பி - ம். 1. மன்னுகத் தின்னழுந்தி, மன்னுகத் தள்ளெழுந்த ; தள்ளழுந்த.
2. புல்குவமென். (70)

தமயந்தி நளனை யாவனென வினவியது.

84. காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்
யாவனே விஞ்சைக் கிறைவனே—தேவனே
உள்ளவா சொல்லென்ரு ளூசற் குழைமீது
வெள்ளவா னீர்சோர விட்டு.

ஊசல் குழை மீது - (தமயந்தி) ஊஞ்சலாடும் தன் குழை என்னும் காதணிகளின் மீது, வாள் வெள்ள நீர் சோர விட்டு - வாள் போன்ற கண்களினின்றும் பிரவாகம் அல்லது பெருக்காக நீரை ஒழுகவிட்டு, (அந்நளனை நோக்கி), 'காவல் கடந்து - இங்குள்ள காவல்களைக் கடந்து, எங்கள் கன்னிமாடம் புகுந்தாய் - எங்களுடைய கன்னிமாடத்தினுள் நீ புகுந்து வந்துவிட்டாய் ; யாவனே-நீ யாரோ ? விஞ்சைக்கு இறைவனே - மாயமந்திர வித்தையிற் றேர்ந்தவனே ? தேவனே-அல்லது ஒரு தேவன் தானே ? உள்ள வா சொல் என்ரு ள் - உள்ளபடி உண்மையைச் சொல் !' என்று கேட்டாள்.

குழை மீது கண்ணீர் விழவிடுதல், கண்கள் காதளவு நீண்டும் அகன்றும் இருந்தமையால் அக்கண்ணீர் காதில் அணிந்திருந்த குழையில் விழுந்து ஒழுகலாயிற்று என்க. 'குழை யொன்றிரண்டு விழியணங்கே'; (தனிப்பாடல்) என்றமையுங் காண்க. குழைமீது நீர் சோரவிட்டு என்றதால், தமயந்தியின் கண்களினின்று சோர்ந்த நீரே அவள் அந்நளன்பாற் கொண்ட ஆர்வத்தைப் புலப்படுத்தியது என்க. இஃது, 'ஆர்வலர் புன்கணீர் பூச றரும்' (குறள். 71) என்ற

பொய்யாமொழியின் கருத்தைத் தழுவியது என்னலாம். இவ்வாறு காவன் மிக்க கன்னிமாடத்துள் புகுவது ஆடவருக்கு முடியாது; இயல்பு மன்று; ஆதலின், யாவனே என்று முதலில் ஐயங் கொண்டு, பின் தான்கற்று வல்ல மந்திரவித்தையினால் காவலாளர்களே மயக்கியே உட்புகுந்திருக்கவேண்டும் என்று கருதி விஞ்சைக்கிறைவனே என்றும், அல்லது நினைத்தவாறே நினைத்தவிடத்திற் சேன்றக் கூடிய தேவர்களில் ஒருவனே என்றும் நளனே நோக்கி ஐயங்கொண்டாள் தமயந்தி என்க. விஞ்சைக் கிறைவன் வித்யாதரனும் ஆம். வாள் : வாள்போன்ற ஒளியும் கூர்மையும் உடைமையால் கண்ணுக்கு வாள் உவமை; அது இங்கு உவமை யாகுபெயராயிற்று. கண்ணுக்கு வாள், (37); கம்ப. பால. உலாவியற்; 19; இனி, வாள் வெள்ளநீர் - ஒளி பொருந்திய கண்ணீர்ப் பெருக்கு என்றலும் ஒன்றும்,

பி - ம். 4. வெள்ளவார் கைசோர விட்டு, வெள்ளவாள், வெள்ளவாய், வெள்ளவார். (71)

நளனது மறுமொழி.

85. தீராத காமத் தழலைத்தன் செம்மையெனும்
நீரா லவித்துக் கொடுநின்று—வாராத
பொன்னுட ரேவலுடன் போந்தவா சொல்லித்தன்
நன்னுடுஞ் சொன்ன னளன்.

தீராத காம தழலை - ஒழியாத அல்லது விட்டு நீங்காத காமமாகிய நெருப்பை, தன் செம்மை எனும் - தனது மேன்மையான குணம் எனனும், நீரால் அவித்து கொடு நின்று - தண்ணீரால் அணைத்துக் கொண்டு நின்று, வாராத - உலகில் வருவது இல்லாத, பொன் நாடர் - தேவர்களுடைய, ஏவலுடன் - கட்டளையோடு, போந்த வா சொல்லி - தான் அங்கு வந்த காரணத்தைக் கூறி (பின்) நளன் தன் நல் நாடும் சொன்னன் - நளன் தான் நிடத நாட்டரசன் என்பதையும் கூறினன்.

தீராத காமத்தழல் : காமம் என்னும் தீ, மற்று எதனாலும் தணிக்க முடியாத வெம்மையுடையது; இது, 'ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு நீரிற் குளித்து முயலாகும் - நீருள், குளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி, ஒளிப்பினுங் காமஞ் சுடும்,' (நாலடி. 90) என்றதால் அறியலாம். செம்மையெனும நீராலவித்து : காமத் தீயைச் சிறந்த செம்மைக் குணத்தால் தான் அழிக்கலாம். 'காமத்

தாற் கனலும் வெந்தீ சிலத்தா லவிப்ப தன்றிச் செய்யத்தா னுவ துண்டோ'; (கம்ப. ஆரணிய657); கற்றறி ஞான மின்றேற் காமத் தைக் கடக்க லாமோ; (கம்ப. ஆரணிய. 637). தீயை நீர்தான் அழிக்க வல்லது. 'நீர் வந்தா லாசை நெருப்பழியுங் காணுமே' (அருணைக்கலம்பகம். 63) என்று ஒரு தலைவன் தலைவியை நோக்கிச் சிலேடைப் பொருளில் கூறியதுங் காண்க. வாராத பொன் னுடர் : தெய்வமகளிர் மானிடரை நயந்து வந்தாரென வூர்வசி, மேனகை முதலினோர் சரிதங்களால் அறியப்பெறுவதன்றி, தேவ ஆடவர் மானிட மகளிரை நாடி வந்ததாக இல்லை ஆதலின். தன் னன்னுடஞ் சொன்னன் நளன். தமயந்தி நளனைக் கண்டு, 'யாவளை விஞ்சைக்கிறைவனை, தேவனை உள்ளவா சொல்லென்றாள்' (84) அவ்வாறே உண்மையை உள்ளவாறு ஒளிக்காமல் தான் இன்னான் என்பதையும் குறிப்பிட்டான் என்க. இவன் உண்மை உரைக்கும் உத்தமன் என்பது முன் (47)இல், 'மெய்ம்மை நளனென்பான்' என்றதால் விளக்கப்பெற்றமை காண்க. நன்னுடும் என்றதில் உம்மை, தான் இந்திரன் தூதாக வந்த செய்தியை உணர்த்துவதே தன் முதன்மைக் கடமையாகக் கொண்ட உயர்வைப் புலப்படுத்திய தோடு, தன்னைப்பற்றிய விவரம் இங்கு அத்துணைச் சிறப்பின தன்று; உண்மை கூறும் அளவில் மட்டும் உள்ளது என்பதையும் விளங்கவைத்தது என்க.

பி - ம். 1. காமக் கனலைத்.

3. பொன்னூட னேவலுடன், போந்தவாறுஞ் சொல்லி. (72)

86. என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகங் காக்கும் புரவலனே — மென்மாலை
சூட்டுவா யென்றுன் றெடையிற்றேன் றும்பிக்கே
ஊட்டுவா னெல்லா முரைத்து.

தொடையில் தேன் - தான் அணிந்துள்ள மாலையில் உள்ள பூக்களின் தேனை, தும்பிக்கே ஊட்டுவான் - அதில் வந்து மொய்க்கும் வண்டுகளுக்கே கொடுத்து அவற்றை உண்ணச் செய்யும் நளன், எல்லாம் உரைத்து - (அவனை நாடிவரும்) தேவேந் திரனது சிறப்புக்களையும், அதனால் அவள் அடையக் கூடிய பெறுதற்கரிய நலன்கள் யாவற்றையும் அவளறியுமாறு எடுத்துக் கூறி, என் உரையை - என் வார்த்தைகளை, யாது என்று - இது என்ன வென்று, இகழாது - நீ இகழ்ந்து தள்ளாமல், இமையவர் வாழ் - தேவர்கள் வாழும், பொன் உலகம் காக்கும் - பொன் மயமான

சுவர்க்கநாட்டைக் காத்து ஆட்சிபுரியும், புரவலனே - அரசனுகிய தேவேந்திரனே, மெல் மாலை சூட்டுவாய் என்றன் - உனது மென்மையான சுயம்வர மாலையைச் சூட்டுவாயாக என்று அறிவுறுத்தினன்.

என்னுரையை இகழாது :—தேவராஜன் விருப்பிற்குரிய மனைவியாய், அயிராணி போலச் சிறப்புடன் சுவர்க்க வாழ்வில் இருக்கலாம். அதனை இகழாதே என்பதாம். தொடையிற்றேன்..... ஊட்டுவான் : இது, தன் தீராத காதலையும் நீத்து இந்திரனுக்குதவ உடன்பட்டு வந்த அவன் வள்ளற்றன்மையைக் குறிப்பதும் ஆகும். ஒப்பு :—'தங்குறை தீர்வுள்ளார், தளர்ந்து பிறர்க்குறூஉம், வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள், கறையிருளை நீக்கக் கருதாதுலகின் நிறையிருளை நீக்குமே னின்று', (நன்னெறி. 10).

பி - ம். 1. யீதென்றிகழா ; நிகழா நிலையவரைப்.
2. பொன்னுலகம் போற்றும் புரவலரை.
4. னெல்லா முணர்ந்த. (73)

தமயந்தி கூறிய உறுதிமொழி.

87. இயமரநின் ருர்ப்ப வினவளைநின் றேங்க
வயமருதோண் மன்ன வகுத்த—சுயம்வரந்தான்
நின்பொருட்டா லென்று நினைகென்ரு னீள்குடையான்
தன்பொருட்டா னேவா டளர்ந்து.

நீள் குடையான் தன் பொருட்டால் - நீண்டு பரந்த வெண் குடையையுடைய நளன் பொருட்டு, நைவாள் - மனம் உருகி வருந்தும் தமயந்தி, தளர்ந்து-வாடி, (அவனைநோக்கி) வயம் மருதோள் மன்ன - வெற்றி பொருந்திய தோள்களையுடைய அரசனே ! இயமரம் நின்று ஆர்ப்ப - இயமரம் என்னும் ஒருவகை வாத்தியம் நின்று ஒலிக்க, இன வளை நின்று ஏங்க - கூட்டமாகச் சங்குகள் சேர்ந்து முழங்க, வகுத்த - ஏற்படுத்தப் பெற்ற, சுயம்வரம்தான் - இந்தச் சுயம்வரமானது, நின் பொருட்டால் என்று - உன்னை நான் மணந்து கொள்ளும் பொருட்டாலே தான் என்று, நினைகென்ரு ள் - நீ கருதுவாயாக ! என்று கூறினள்.

இயமரம் - ஒருவகை வாத்தியம் ; சீவக. 779 ; பெரும். 5, 6 : 63. நினைகென்ரு ள் : இது நினைகவென்ரு ள் என்பதில் அகரம் தொகுத்தல் விகாரம்.

பி - ம். 2. வயமருதேரண் மன்னர் தம் மன்ன - சயமரமும், சயமரந்தான். (74)

88. போதரிக்கண் மாதராள் பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவையகத்தே - சோதிச்
செழுந்தரள வெண்குடையாய் தேவர்களு நீயும்
எழுந்தருள்க வென்ரு ளெடுத்து.

(மேலும்) போது அரி கண் மாதராள் - தாமரை மலர் போன்று, செவ்வரி படர்ந்த கண்களையுடைய தமயந்தி, (நளனை நோக்கி) 'சோதி செழும் தரள வெண் குடையாய் - ஒளிவீசும் செழுமையான முத்துக்களால் ஆன வெண்கொற்றக் கொடையையுடையோனே! பொன்மாலை சூட்ட - அழகிய சுயம்வர மணமாலையை (யான் உனக்குச்) சூட்ட, ஆதரித்தார் தம்மோடு - விரும்பி வந்த அரசர்களோடு, தேவர்களும் நீயும் - அத்தேவர்களும் நீயும், அவை அகத்தே - அந்தச் சுயம்வர சபையிடத்தே, எழுந்து அருள்க என்ருள் எடுத்து - வந்தருள்வாயாக என்று குறிப்பிட்டுக் கூறினள்.

ஆதரித்தார் தம்மோடு - உன்னை நான் தேர்ந்தெடுத்து மணமாலை சூட்டுவதை விரும்பி ஏற்றவர்களோடு என்றும் பொருள் கொள்ளலாம்; ஆதரித்தல் - விரும்பி உதவி புரிதல். (223). மாதராள், மாதர் - அழகு, ஆள், பெண்பாற் பெயர் விகுதி. 'பூ வெனப்படுவது பொறிவாழ் பூவே' என்றமையால், போது என்பதற்குத் தாமரை மலர் என்றே கொள்ளப்பட்டது. எழுந்தருள்க என்று வியங்கோள்வினையிற் கூறியதால், தமயந்தி நளனை விரும்பி வேண்டிக் கொண்ட முறையை அறிவித்ததாகும். பொன் மாலை - அழகிய மாலை; (பொன் - அழகு) (151); 'பொன்மாலை பெற்ற தோளோடும் புறப்பட்டான் என்றதுங் காண்க.

பி - ம். 1. பொன்மாலை சூட்டுவான்.
2. எழுந்தருகென்ருன். (75)

(நளன் மீண்டு இந்திரனிடஞ்சென்று கூறியது)

89. வானவர்கோ னேவல் வழிச்சென்று வாணுதலைத்
தானணுகி மீண்டபடி சாற்றவே—தேன்முரலும்
வண்டார் நளன்போந்து வச்சிராயு தற்ருழுதான்
கண்டா ருவப்பக் கலந்து.

தேன் முரலும் வண் தார் நளன் - வண்டு ஒலிக்கப் பெற்ற செழுமையான மாலை அணிந்த நளன், வானவர் கோன் ஏவல் வழி

சென்று - தேவேந்திரனுடைய கட்டளையின்படித் தூதாகச் சென்று, வாள் நுதலி - ஒளி வீசும் நெற்றியையுடைய தமயந்தியை, தான் அணுகி - தான் அருகிற் சென்று கண்டு, மீண்டபடி - திரும்பி வந்த தன்மையை, சாற்ற - சொல்லுவதற்கு, கண்டார் - அவனைக் கண்ட அவ்வானவர், உவப்ப - மகிழ, போந்து கலந்து - அவர்களிடம் சென்று அணுகி, வச்சிராயுதன் தொழுதான் - வச்சிரப்படையையுடைய இந்திரனை வணங்கினன், ஏ : அசை.

தூது அனுப்பினவனும், தேவர் தலைவனும் இந்திரனே ஆதலால் அவனை வணங்கிச் சொன்னன். (76)

நளனுக்கு அத்தேவர்கள் அளித்த வரங்கள்.

90. விண்ணவர்த மேவலுடன் வீமன் றிருமகள்பால்
நண்ணு புகழ்நளனு நன்குரைத்த—பெண்ணணங்கின்
வன்மொழியுந் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியுஞ் சென்றுரைத்தான் மீண்டு.

விண்ணவர் தம் ஏவல் உடன் - தேவர்களின் ஏவலோடு, வீமன் திருமகள் பால் - வீமராசன் செல்வக் குமாரியான தமயந்தியிடத்து நண்ணு - போயடைந்த, புகழ் நளனும் - கீர்த்திக்குரிய நளனும், மீண்டு - திரும்பி, பெண் அணங்கின் - பெண்ணிற் சிறந்த அத் தமயந்தியின், நன்கு உரைத்த, வன்மொழியும் - தெளிவுடன் கூறிய உறுதி மொழிகளையும், தேவர் மனம் மகிழ-அத்தேவர்கள் மனம் மகிழுமாறு, தான் மொழிந்த மெல் மொழியும்-தான் அத்தேவர்களைப்பற்றிச் சிறப்பித்துக்கூறிய, மென்மொழிகளான இத வார்த்தைகளையும், சென்று உரைத்தான்-அத்தேவர்கள் முன்போய் நளன் கூறினன்.

பெண்ணணங்கின் வன்மொழி: சுயம்வரந்தான் 'நின் பொருட்டாலென்று நினை' என்று (90) கூறியது. தான் மொழிந்த மென்மொழி, 'என்னுரையை யாதென்.....சூட்டுவாய்' (86) என்றது. இதனால் தமயந்தியின் உறுதிப்பாடும், அவள் கொண்ட அவ்வுறுதியைத் தன்மொழிகளான் மாற்றமுடியவில்லை என்பதும், அந்நளன் தான் மேற்கொண்ட தூது முறையில் ஒரு சிறிதும் பிறழாது நடந்து கொண்ட சிறப்பும், 'நண்ணுபுகழ் நளனும்' என்ற சொற்றொடரால் விளங்க வைத்தது உணரத்தக்கதாகும். மென்மொழி : தேவர்களைப் பற்றி மகளிர் யாவரும் விரும்புத்தக்க முறையில் அவன் கூறிய இனிய வார்த்தைகள்.

பி - ம். 1. விண்ணவர்கோ னேவலுடன்.
2. நண்ணிப் புகழ் நளனும் நன்குரைப்ப; நண்ணிப் புகழ்ந்த நளனுரைக்கப். 3. தானுரைத்த மென்மொழியும். (77)

இதன்பின் சில ஏட்டுப் பிரதிகளில், 'அங்கி யமுதநீர்' (91) என்னும் பாட்டுக்கு மாறுக அடியிற்கண்ட பாடல்கள் காணப் படுகின்றன.

1. மாது பணித்ததனை வந்து நளனுரைப்பப்
போத மகிழ்ந்து புரந்தரனுந் - தார்தவிழ்தார்
அந்தகனும் வாருணனு மங்கியுமற் றவ்விடத்தே
வந்தவனுக் கீந்தார் வரம்.

2. நினைத்தபொருண் முன்னே நிறைந்திடவும் வீடும்
வனப்புடைய வானவர்கோ னீந்தான் - அனைத்துலகில்
சென்றிடவும் மீண்டிடவுந் தீக்கடவு டானீந்தான்
நன்றுடைய வேந்த னளற்கு.

91. அங்கி யமுதநீ ரம்பூ வணியாடை
எங்குநீ வேண்டினமற் றவ்விடத்தே – சங்கையறப்
பெற்றரு யெனவருண னுகண் டலன்றருமன்
மற்றேனு மீந்தார் வரம்.

(அவ்வாறு நளன் சொல்ல அவனுக்கு), வருணன் - வருண தேவனும், ஆகண்டலன் - இந்திரனும், தருமன் - தருமராசனன யமனும், மற்றேனும் - மற்றவனன அக்னிதேவனும், 'அங்கி - நெருப் பும், அமுத நீர் - அமுதத்திற்கு ஒப்பான நல்ல நீரும், அம் பூ - அழ கிய பூக்களும், அணி - ஆபரணங்களும், ஆடை - (நல்ல) ஆடைக ளும், நீ எங்கு வேண்டினை - நீ எங்கு அடைய விரும்புகிறாயோ, அ இடத்து - அவ்விடத்திலே, சங்கை அற - ஐயம் இன்றி, பெற்றாய் - பெறுவாய்', என - என்று, வரம் ஈந்தார் - வரம் அளித்தனர்.

ஆகண்டலன் - இந்திரன், (பிங்); ஆகண்டலன் என்பதற்கு மலைகளைச் சிறகறுத்தவன்; இடம் விட்டுப் பெயராமற் செய்தவன் எனப் பொருள் கூறுவர். அமுதநீர் என்பதற்கு, அமுதாகிய உண வும், நீரும் எனவும், அம் பூ அணியாடை என்பதற்கு அழகிய பூப் போன்றதும், அணியத்தக்கதுமான ஆடையெனவும் பொருள் கொள்வர். நளோபாக்கியானத்தில், தேவர்கள், நளதமயந்தியர்களின் திருமணத்திற்குப் பிறரு தாம் தம் வானுலகு செல்லும்முன் அவர் களுக்கு வரங்கள் அளித்துச் சென்றதாகவும், அவ்வரங்கள் மற்றும் பலவாகவும் காணப்பெறுகின்றன. பெற்றாய்: துணிவுப் பொருளில் வந்த கால வழுவமைதி. இதில் வரன் என்பது, கொண்டு கூட்டுப் பொருளில் அமைந்து நின்றது.

பி - ம். 2. எங்குநீ வேண்டினமற் றவ்விடமே. (78)

தமயந்தியின் துயர நிலை.

92. தூதுவந்த காதலனைச் சொல்லிச் செலவிடுத்த
மாதுவந்து பின்போன வன்னெஞ்சால்—யாதும்
அயிர்த்தா ளுயிர்த்தா ளணிவதன மெல்லாம்
வியர்த்தா ளுரைமறந்தாள் வீழ்ந்து.

தூது வந்த - தன்னிடம் தேவர் தூதாக வந்த, காதலனை - தான காதலித்த நளனை, சொல்லி செல விடுத்த - தனது உறுதி மொழியைக் கூறி அனுப்பிய, மாது - தமயந்தி, வந்து பின் போன வல் நெஞ்சால் - தன்னிடம் வந்து (தன்பால் காதல் அன்பு காட்டாமல்) பின் திரும்பிச் சென்ற அந்நளனது வலிய அல்லது கொடிய மனத்தின் போக்கினால், யாதும் அயிர்த்தாள்-முன் அன்னம் அவனைப்பற்றி யுரைத்த பெருமைகள் யாவற்றையும் பற்றிச் சந்தேகங் கொண்டாள்; உயிர்த்தாள் - பெரு மூச்செறிந்தாள்; அணி வதனம் எல்லாம் வியர்த்தாள் - அழகிய முகம் மற்றை அங்கங்கள் அனைத்தும் வியர்வை கொள்ள வருந்தினாள்; வீழ்ந்து உரை மறந்தாள் - கீழே சோர்ந்து விழுந்து பேச்சற்ற நிலையள் ஆனாள்.

மாது உவந்து பின் போன வல் நெஞ்சால் எனப்பிரித்து, தமயந்தி, மகிழ்ந்து அந்நளன் பின் போன தன் வலிய நெஞ்சினிடத்து எனப்பொருள் கொண்டார் ஒரு சாரார். அவ்வாறு கொண்டால் பின், யாதும் அயிர்த்தாள்.....வீழ்ந்து, என்ற துயர நிலையை அந்நெஞ்சின் மேலேற்றிக் கூறுவது; அத்துணைச் சிறப் பாகாமை காண்க. வதனம் எல்லாம் - முகம் முழுவதும் என்னலும் ஒன்றும். அயிர்த்தாள்.....வீழ்ந்து : இதில் உள்ள செயல்கள், ஒரு தலைவி, தான் கொண்ட காதல் கைகூடாதோர் என்ற அயிர்த்த நிலையில், தோன்றும மெய்ப்பாடுகள் இங்கு ஒன்றன்மேலொன்றாக அடுக்கி வந்து உணர்த்துவன காண்க. (79)

ஒரு பிரதியில் இப்பாடல் இல்லை.

பி-ம். 1. தூதுவந்த காவலனைச்; காதலனைச்.

93. உள்ளம்போய் நாண்போ யுரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்றளிர்போல்—பிள்ளைமீன்
புள்ளரிக்கு நாடன் றிருமடந்தை பூவாளி
உள்ளரிக்கச் சோர்ந்தா ளுயிர்.

பிள்ளை மீன்-மீன் குஞ்சுகளை, புள் அரிக்கும் - குருகு முதலிய நீர்வாழ் பறவைகள் தடவி மேய்ந்துண்ணும், நாடன் - நீர் நாட்டின்

அரசனுன வீமராஜனுடைய, திருமடந்தை - செல்வக் குமாரியான தமயந்தி, பூ வாளி உள் அரிக்க-மன்மதன் மலர் அம்புகள் தன் மனத்தைச் சிறிது சிறிதாக அரித்து வருத்த, உள்ளம் போய்-தன்னுடைய நினைவு அழிந்து, நாண் போய்-பெண்மைக்குரிய நாணம் என்னும் தன்மையும் நீங்கி, உரை போய் - பேச்சும் அற்று, வரி நெடும் கண் - செவ்வரி படர்ந்த தன் நீண்ட கண்களில் உள்ள, வெள்ளம் போய்-நீரும் வற்றிப் போய், வேகின்ற மென் தளிர் போல் - நெருப்பில் வீழ்ந்து வெந்து போகும். மென்மையான தளிரே போல வாடி, உயிர் சோர்ந்தாள்-தன் உயிர் சோர்வற்று வருந்தினுள்.

பூவர்ளி : 37 உரை நோக்குக- நாண்போய்: இதுவரை நாணத்தால் தன் காதல் வெளியிடாதிருந்த வலிமை இப்பொழுது தளர்ந்ததால். புள் அரிக்கும் : அரித்தல் இங்குத் தடவிச் சேர்த்து எடுத்தல் ; ஆறுகுளம் முதலிய நீர்நிலைகளின் துறைகளில் அரிப்புக் காரர் சல்லடை முதலிய கொண்டு மணல் முதலியவற்றைச் சலித்து அங்குப் பிறர் போக்கடித்த பொருள்களைத்திரட்டியெடுத்தல் போன்றது. வேகின்ற மென்றளிர் : 'தழலிற் படுதளிர் போற் சாயிந்து' (63) என்று முன் நளனுக்குக் கூறியதை இங்கு ஒப்பு நோக்குக. உள் - உள்ளே யுள்ள மனம். இடவாகு பெயர்.

பி - ம். 1. அரிநெடுங்கண், கருநெடுங்கண்.
2. வெந்ததோர் பைந்தளிர்போல், வேம்பைந் தளிர்போலப்.
4. உள்ளரிப்பச். (80)

94. பூவின்வாய் வாளி புகுந்த வழியேயென்
ஆவியார் போனலு மவ்வழியே—பாவியேன்
ஆசைபோ காதென் றழிந்தா ளணியாழின்
ஓசைபோற் சொல்லா ளுயிர்த்து.

அணி யாழின் - அழகிய யாழ் என்னும் இசைக்கருவியின், ஓசை போல் சொல்லாள் - ஒலிபோன்ற இனிய சொற்களையுடைய தமயந்தி, 'பூவின் வாய் வாளி - மலர்களால் அமைந்த மன்மத பாணங்கள், புகுந்த வழியே - என் உடலில் வந்து புகுந்த வழியின் இடமாகவே, என் ஆவியார் போனலும் - என் உயிர் நீங்கினாலும், பாவியேன் - பாவியாகிய எனது, ஆசை போகாது - அந்நளன்பால் யான் கொண்ட ஆசை இவ்வுடலை விட்டு நீங்காது ;' என்று உயிர்த்து அழிந்தாள் - எனக் கூறிப் பெருமூச்சுவிட்டு அறிவழிந்து சோர்ந்தாள்.

யாழ் : யாழ் வேறு, வீணை வேறு. ஆனால் யாழ் என்ற சொல் வீணை என்ற பொருளிலேயே மகதியாழ். மகர யாழ் என வழங்கப் பெறுவதும் உண்டு. ஆவியார் : ஆர், அருமை பற்றிய பன்மை விகுதி; திணைவழுவமைதியும், எண் வழுவமைதியும் ஆம். 'ஆவி போனாலும் ஆசை போகாது' என்பது பழமொழி; இஃது 'ஆவி யோயினு மாசையி னெய்விலாள்'; (கம்ப. ஆரணிய : 306); என்று, சூர்ப்பணகை கொண்ட காமத்திறத்தும், 'மூர்க்கன் முடித்தலை யற்ற போதன்றி யாசை யருதென்றான்'; (கம்ப. உயுத்த அங்கதன். தூது : 43); என இராவணன் திறத்தும எடுத்தாண்டு விளக்கப் பெற்றமை காண்க. (94)

பி - ம். 2. போனாலு மவ்வழியாற். 3. றறைந்தா, றயர்ந்தா.
4. கல்லா ஞயிர்த்த. (81)

சூரியன் அத்தமித்தல்

95. வையம் பகலிழப்ப வான மொளியிழப்பப்
பொய்கையு நீள்கழியும் புள்ளிழப்பப்—பையவே
செவ்வாய வன்றி றுணையிழப்பச் சென்றடைந்தான்
வெவ்வாய் விரிகதிரோன் வெற்பு.

வையம் பகல் இழப்ப - உலகம் பகற்பொழுதை இழக்கவும், வானம் ஒளி இழப்ப - ஆகாயம் வெளிச்சத்தை இழக்கவும், பொய்கையும் நீள் கழியும் புள் இழப்ப - நீர் நிலைகளும், உப்பங்கழிகளும் (அங்கு இரை தேடவந்த) பறவைகளை இழக்கவும், செம் வாய அன்றில் - சிவந்த வாயையுடைய (ஆண்) அன்றிற் பறவை, துணை இழப்ப - தன் துணையாகிய பெண் பறவையும், பெண் அதன் ஆண் பறவையும் விட்டு நீங்கவும், வெம் வாய் விரி கதிரோன் - வெப்பம் அமைந்த விரிந்த கிரணங்களையுடைய சூரியன், வெற்பு - (மேற்கே யுள்ள) அஸ்தகிரி என்னும் மலையை, பைய - மெல்ல, சென்று அடைந்தான் - போய்ச் சேர்ந்தான். பையவே : ஏ : அசை.

இது முதல் நான்கு பாடல்கள் மாலைப் பொழுதைச் சிறப்பிப்பன. இனி, தமயந்தியின் விரக தாபத்தைக் கூறத் தொடங்கும் கவிஞர் பெருமான், அவ்விரக நோய்க்கு அனுகூலமான சூரியாத்தமனத்தையும், மாலைப்பொழுதையும் முற்கூட்டி உரைப்பதானர். காம நோய், 'காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும்' (குறள். 1227) என்றமையால் என்க. தமயந்திக்கு

உண்டான துயரின் விளைவை, முன் 'உள்ளம் போய் நாண்போய்' என்ற (93) ஆம் செய்யுளால் வரிசைப்படுத்திக் கூறியதற்கு இணங்க, இங்கும், 'வையம் பகலிழப்ப' என்று தொடங்கும் பலவாற்றுல் மாலைப் பொழுதின் விளைவையும் வரிசைப்படுத்தி, அத்துயரை மேலும் உச்ச நிலையில் நிறுத்தினர் நம் ஆசிரியர் என்க. இதனல், இனிச் சரிதத் தலைவியின் விரகதாபத்தை விளக்க, ஆசிரியர் இடம் வகுத்துக் கொண்டார் என்னலுமாம்.

கழி : கடலிலிருந்து நிலத்தில் உள்ளிட்டுச் செல்லும் ஒடுக்கமான நீர்ப்பகுதி. அன்றில், ஆணும் பெண்ணும் இணைபிரியாமல் ஒன்றி வாழும் ஓரினப்பறவை. காமநோயால் பிரிந்து வருந்தும் தலைவன் தலைவியர்க்கு இப்பறவைகளின் பிரிவு நிலை, மேலும் துயர் தருவதாகும் என்பது நூன் மரபு. இவை சிவந்த தலையையும் வாயையும் உடையன எனவும், பனைமரங்களில் வாழும் இயல்பின எனவும் தமிழ் நூல்கள் கூறும். இதனைக் கிரௌஞ்சம் என வடநூலார் கூறுவர். இவ்வகை இயல்புடைய கடலில் வாழும் ஒருவகை நீர்ப்பறவையும் உண்டு. அது மகன்றில் எனக் கூறப்பெறும்; குறுந். 57.

பி - ம். 3. செவ்வாய் மகன்றிற், செய்யவா யன்றில்.
4. வெய்யவாய : செங்கதிரோன், வெங்கதிரோன். (82)

96. மாயிரு ஞாலத் துயிர்காண வானரங்கில்
பாயிரு ளென்னும் படாம்வாங்கிச்—சேய்நின்
றறைந்தா ரணம்பாட வாடிப்போய் வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை.

மா இரு ஞாலத்து - மிகப் பெரியதான இப்புவியில், உயிர் காண - வாழும் பிராணிகள் யாவும் பார்த்துக் கொண்டிருக்க, வான் அரங்கில் - ஆகாய மென்னும் நாடக மேடையில், பாய் இருள் என்னும் படாம் வாங்கி - பரந்த இருள் என்று சொல்லும் திரையைத் தள்ளி, சேய் நின்று - தூரத்தில் நின்று, அறைந்து ஆரணம் பாட - (மறையோர்) உரத்த குரலின் வேத ரிக்குக்களாகிய பாடல்களை இசைக்க, வெய்யோன் - சூரியனுகிய நடன், ஆடி போய் - நடன மாடிக்கொண்டே சென்று, குடபால் வரை மறைந்தான் - மேற்றிசையில் உள்ள அத்தகிரியிற் சென்று மறைந்தான்.

மாயிரு : ஒருபொருட் பன்மொழி; ஆயிடை என்பது போல யகர உடம்படு மெய்கொண்டது; இனி, மாட்சிமையுற்ற பெரிய

என்னலும் ஒன்றும். வெய்யோன், உலகத்து உயிர்கள் காண, வான் என்னும் நாடக மேடையில், (அந்தணர்கள்) சேய் நின்று வேத மந்திரங்களைப் பாட, நடனம் ஆடிப்போய், இருள் என்னும் திரையை நீக்கிக் குடபால் வரையில் மறைந்தான் என்பதாம்; (95) இல், 'சென்றடைந்தான்.....வெற்பு' என்றதையும் நோக்குக. இதில், 'ஆடல் பாடல் அவிநயம் அவற்றொடு, தாளம் இரதம் தழைப்பன நாடகம்' (பேரகத்தியம்) என்ற நாடக லக்ஷணத்திற்குரிய அனைத்தும் அமைந்திருப்பன கர்ண்க. சேய் நின்று என்றமையால், பாடுவோர் ஆடுவோன் அருகி லில்லாமல் பின்னே தூரத்தில் இருந்தே பாடவேண்டும் என்பது வெளியாதல் நோக்கத் தக்கது. இவ்வித நாடக லக்ஷணங்கள் ஒருங்கே அமையப் பெற்ற,

(1) 'தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.'

(கம்ப. பால. நாட்டுப் : 4.)

(2) எண்ணரிய மறையினெடு கின்னரர்கள்
இசைபாட வுலக மேத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரங்குவிப்ப வேலை யென்னும்
பண்ணுமணி முழவதிர வானரங்கின்
நடம்புரிவா ளிரவி யான
கண்ணுதல்வா னவன்கனகச் சடைவிரிந்தா
லெனவிரிந்த கதிர்க ளெல்லாம்.

(கம்ப. பால. மிதிலைக் : 152)

என்ற பாடல்கள் இங்கு ஒப்பு நோக்கி இன்புறத் தக்கன. இனி, இந்த வெண்பாவாலும், மேற்காட்டிய மேற்கோள்களாலும் நம் நாட்டுப் பண்டைக் காலத்து நாடக அரங்கம் எத்துணைச் சீர்பெற்று உயரிய நிலையில் விளங்கி இருந்தது என்பது உணரத்தக்கதாகும்.

பி - ம். 1. மாயிருண் மாஞாலத். 2. படாம் போர்த்த.
3. நிறைந்தா ரணம்பாட நீளொளிபோய். (83)

மாலைப்பொழுதின் வரவு.

97. மல்லிகையே வெண்சங்கா வண்டுத வான்கருப்பு
வில்லி கணைதொடுத்து மெய்காப்ப—முல்லையெனும்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

மல்லிகையே - மல்லிகை அரும்புகளே, வெண் சங்கு ஆ - வெண்மையான சங்க வாத்தியங்களாகக் கொண்டு, வண்டு ஊத - வண்டுகள் அச்சங்கு ஊதுவோர்போல அவற்றை அணுகி ஒலிசெய்ய, வான் கருப்பு வில்லி - சிறந்த கரும்பை வில்லாகவுடைய மன்மதன், கணை தொடுத்து - தன் மலர் அம்புகளைத் தக்கவாறு தேர்ந்தெடுத்துக் கொண்டு, மெய் காப்ப - மெய்காவலாளனைக அருகேயிருந்து காத்து வர, முல்லை எனும் மெல் மாலை தோள் அசைய - தான் அணிந்துள்ள முல்லை என்னும் மலர்மாலை தன் தோள்களில் அசைந்து ஆட, புன் மாலை அந்தி பொழுது - அற்பமான அதாவது சிறு பொழுதான அந்திப் பேர்து என்னும் தலைவி, மேல்ல நடந்தது - மெதுவாய் நடந்து வரலானாள்.

அந்தி : ஸந்தியா என்னும் ஒருபெர்முதிற் குரிய தெய்வம். இதனைப் பெண்பாலாகக் கூறுவது கவிமரபு; 'அந்தியென்னும் பசலைமெய் யாட்டி வந்திறுத்தனள்;' (மணி.5: 140). இஃது அடுத்த 98-ஆவது செய்யுளாலும் விளக்கமாவது காண்க. மல்லிகையே வெண் சங்கா: இஃது, 'எல்லியம்போது வண்டினங்கள் எம்பெருமான் குணம்பாடி, மல்லிகைவெண் சங்கூதும் மதிலரங்க மென்பதுவே' (பெரியாழ்வார் : 4. 8: 8) என்பதைப் பொன்னே போற் போற்றி எடுத்தாளப் பெற்றது என்க. மெல்ல நடந்ததே : அந்திமாலை சிறிது சிறிதாகப் படிப்படியாய் வருவதைக் குறித்தபடி. முன் 95 இல் கதிரோன், மாலையில், பையவே சென்றடைந்தான் என்றதுபோல, இங்கு அந்திப் போதும் மெல்ல நடந்தது என்னப்பட்டது. இதனால், மேலே குறித்தபடி, அந்திமாலை என்னும் நாயகி, தன் பரிவாரங்கள் சூழ மெதுவாக நடந்து வந்தாள் என்க. பகல் இரவுகள் போல மாலைப் பொழுது நீடிக்கர்த சிறுபொழுது ஆதலின், புன்மாலை என்றும், அதன் சிறுமைக்கேற்ப மெல்ல நடந்தது என்றுங் கொள்ளலாம். முன் சேர்லையில் நளனை எதிர்கொள்ள இளவேனல் வந்ததாக உள்ள, 'வென்றிமத வேடன்' (23) என்று தொடங்கும் செய்யுளிற் கூறிய சிறப்பே போல, இங்கு அந்தி என்னும் ஒரு தலைவி வந்த சிறப்பும் கூறப்பெற்றது.

பி - ம். 1. மல்லிகைவெண் சங்க மதவண் தே.

98. புற்கென்ரு ரந்தி புனைமலர்க்க ணீரும்ப
நிற்கின்ற தந்தோ நிலங்காப்பான்—முற்கொண்
டடைகின்ற வேந்தர்க்கு மாண்டஞ்சி னோர்க்கும்
இடைகின்ற காலம்போ லின்று.

நிலம் காப்பான் - பூமியைப் பாதுகாக்கும் பொருட்டு, முன் கொண்டு அடைகின்ற - முன்னேக்கி எதிர்த்து வருகின்ற, வேந்தர்க்கும் - முடி மன்னரான பெரு நில அரசர்க்கும், ஆண்டு - அப்போது, அஞ்சினோர்க்கும் - அவ்வரசர்க்குப் பயந்து நின்ற பகை மன்னர்க்கும், இடைகின்ற -துன்பந்தருகின்ற, காலம் போல - காலத் தைப்போல, இன்று - இன்றைக்கு, புற்கு என்று ஆர் அந்தி - கபிலநிறம் பொருந்திய அல்லது ஒளி மழுங்கிய அந்திப் போது, புனைமலர் கண் நீர் அரும்ப - அழகிய தாமரை மலர்போன்ற கண் களில் நீர் துளிக்க, நிற்கின்றது - நின்று வருந்துகின்றது; அந்தோ—இது பரிதாபம்!

பெருநிலவேந்தர் எதிர்க்கக் பகை மன்னர் அஞ்ச அவ்விரு திறத்தார்க்கும் இடையே வருந்திச் சோர்வுறும் காலம் போல அந்திப் போதும் கண்ணீர் விட்டு வருந்தி அழிகின்றது. என்பதாம். சிறு அந்திப் போதை ஓர் மங்கையாக உவமித்தார் என்க. அம் மங்கை அவ்விருதிறத்தார்க் கிடையே யார் தன்னைக் கொள்வாரோ என்று வருந்தும் நிலையில் இருப்பதாக அந்நிலை நோக்கி அந்தோ என்ற இரக்கமொழியாற் கூறினரும் ஆம். இது கவிக்கூற்று. புற்கு - கபில நிறம்; அதாவது பொன்நிறமும் கருநிறமுங் கலந்த ஒருவகை மங்கலான செந்நிறம்., புற்கு - கபில நிறம்; (திவா.). அந்திப் போது வெயிலும் இன்றி, இருளுமின்றி இடைப்பட்ட மங்கிய செந்நிறமாய்த் தோன்றுவதால், அதனைப் 'புற்கு என்று ஆர் அந்தி' யென்னப்பட்டது. கண் நீரரும்புதல் வருத்தத்தால் சோர்ந்த நிலை யில் தோன்றும் மெய்ப்பாடு. 'வாளற்றுப் புற்கென்ற கண்ணும்' (குறள். 1261) என்றமை நோக்குக. இடைதல் - சோர்தல், வருந்துதல்.

குறிப்பு: அடைகின்ற வேந்தற்கும், என்று ஒருமையிற் பாடம இருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

பி - ம். 1. புற்கென்றே ரந்தி; புனமயிற்கண்; நீர்தளும்ப.
3. ஆண்டஞ்சி னோர்க்கும். 4. இடைகின்ற. (85)

பிறையின் தோற்றம்.

99. பைந்தொடியா ளாவி பருகுவா னிற்கின்ற
அந்தி முறுவலித்த தாமென்ன—வந்ததால்
மையார்வேற் கண்ணுள் வனமுலைமே லாரழலைப்
பெய்வா னமைந்த பிறை.

மை ஆர் வேல் கண்ணுள் - மை எழுதப்பெற்றதும் வேல் போன்றதுமான கண்களையுடைய தமயந்தியின், வன முலைமேல் - அழகிய தனங்களின் மீது, ஆர் அழலை - நிறைந்த நெருப்பை, பெய்வான் - பெய்யும் பொருட்டு, அமைந்த - ஏற்பாடுடன் வந்த, பிறை - பிறைமதியானது, பைம் தொடியாள் - பசிய வளையல்களணிந்த அத்தமயந்தியின், ஆவி பருகுவான் - உயிரை அருந்தும் பொருட்டு, நிற்கின்ற - எதிர் வந்து நிற்கின்ற, அந்தி - அந்திப் போது (என்னும் அரக்கி), முறுவலித்தது ஆம் என்ன - புன சிரிப்புக் கொண்டது எனச் சொல்லத் தக்கவாறு, வந்தது - வந்து தோன்றிற்று. ஆல் : அசை.

வேற்கண் : கூர்மையாலும் அதன் ஒளியாலும், வடிவத்தாலும் வேல் கண் போன்றது.

அந்தியை அரக்கி என்றது, அதன் கருநிறத்தை மேனியாகவும், செந்நிறமான செவ்வானத்தை அவ்வரக்கியின் சிவந்த தலையிராகவும், பிறையை அவள்வாய்ந்த பல்லாகவும்கொண்ட உள்ளுறை உவமத்தால் என்க. அந்தி என்னும் அரக்கி, பிரிவால் வருந்தும் மகளிரை உணவாகக் கொள்ளுதல்; பின், 'மருண்மாலை யுண்டுபோ கட்ட வுயிர்க்கு' (116) என்றமையால் தெளிவாதல் காண்க. அந்தி முறுவலித்தது; தனக்கு உணவு கிடைத்தது என்ற மகிழ்ச்சியால். ஆரழலைப் பெய்வான் அமைந்த பிறை: பிறையின் நிலவு விரக தாபத்தில் வருந்துவோரை நெருப்பு எரிப்பது போல வருத்துமாதலால்; இஃது அடுத்த செய்யுளில் 'நீணிலா வெனனும் நெருப்பு' (100) எனறமையாலும் பின்வரும் 101, 102, 105, 109 என்ற பாடல்களாலும் விளக்கமுறுவது காண்க. இங்கு, அந்தியும் பிறையும் துன்புறுத்தின என்க.

பி - ம். 3. மையார்வேற் கண்ணி வனமுலைமேல் வான்றழலை; வார்தழலை; வனமுலைமேல். வானழலைக்.
4. பெய்வா னமைந்தோர் பிறை. (86)

100. கூட்டுமை போற்சிறந்த கூரிருளைக் கூன்கோட்டால்
கோட்டுமண் கொண்ட குளிர்திங்கள்—ஈட்டுமணிப்
பூணிலா மென்முலைமேற் போதச் சொரிந்ததே
நீணிலா வென்னு நெருப்பு.

கூட்டு மை போல் சிறந்த - கூட்டப்பெறும் மையைப் போல அடர்ந்த கருநிறத்தாற் சிறந்த, கூர் இருளை - மிகுந்து விளங்கும் இருட்டை, கூன் கோட்டால் - வளைந்த தன் நுனி முனையால், கோட்டு மண் கொண்ட - ஒரு வெட்டு மண்ணைக் கொண்டது போன்ற, குளிர் திங்கள் - குளிர்ச்சியான சந்திரன், நீள் நிலா என்னும் நெருப்பு - தன் நீண்ட நிலவு என்னும் நெருப்பை, ஈட்டு - தொகுத்து எடுக்கப் பெற்ற, மணி - இரத்தினங்களால் ஆன, பூண் நிலா - ஆபரணங்கள் ஒளிவீசுகின்ற, மென் முலைமேல் - தமயந்தியின் மென்மையான தனங்களின் மீது, போத - மிகுதியாக, சொரிந்தது - பொழிந்தது. ஏ : ஈற்றசை.

கூட்டுமை; மை கூட்டுதல் என்பது உலக வழக்கு; இஃது இங்குக் கூட்டப்பெற்ற மை போன்று, தொகுதியாய் அடர்ந்த இருளுக்கு ஒப்பாயிற்று; 'ஈட்டிருள் விழுங்கிய' (கம்ப. சுந்தர. 1069) என்றதையும் நோக்குக. கோட்டு - ஒருவெட்டு; (நிவா.) இது கொட்டு என்று குறுகி வழங்குவது காணலாம்; மண் வெட்டிக் கொட்டு என்ற வழக்கையும் காண்க. இங்குக் கூரிய நுனியையுடைய பிறை, வளைந்து கூர்மையாய் இருக்கும் மண் வெட்டுங் கருவியாகவும், இருள் மண்ணாகவும் கொள்ளப் பெற்றன. இவ்வாறின்றி, ஓர் எருது மதங்கொண்டு கரையில் உள்ள மண்ணைத் தன் கொம்பால் இடித்து ஏந்தியது போன்ற பிறையென உரை கூறினாரும் உளர். கோட்டு மண் கொள்ளல்: தொகுதியாய் இருப்பதிலிருந்து ஒரு சிறிது வெட்டி எடுத்துக்கொள்ளுதல் என்னும் பொருளில் வழங்கி வருவது எனத் தெரிகின்றது. 'கோட்டுமண் கொள்ளா முலை' (முத்தொள்ளாயிரம்);

"தோட்டுவண் டொலியன் மாலைத் துடியிடை மகளிர் ராய்ந்த
மோட்டுவெண் முத்த மின்னு முகிழ்முலை யமுதத் சாந்தம்
கோட்டுமண் கொண்ட மார்பங் கோதைவாள் குளித்து மூழ்கிக்
கோட்டுமண் கொள்ள நின்ரூன் குரிசின்மண் கொள்ள நின்ரூன்;"

(சீவக. 2294). இவ்விரு மேற்கோள்களாலும் தொகுதியாய் இருப்பதிலிருந்து ஒரு பகுதி பெயர்த்தெடுத்துக் கொள்வதைக் குறிப்பது காண்க; மேலும், இவ்வுவமை, "கோட்டுமண் கொண்டு வீங்குங் குவிமுலைக் களிகல் யானை" (நைடதம். மணம்புரி:34), என்றதாலும் விளக்குமுறுவது காண்க. நிலவுக்கு நெருப்பு; கம்ப.சுந்தர: 288.

(பி - ம்). 1. கூட்டுமையைப் போற்செறிந்த; கூரிருள்வாய்க்.

2. பூணுலா மென்முலைமேற். (87)

தமயந்தியின் துயர நிலை.

101. அன்னங்கா ணீங்களுமவ் வாதித்தன் ரூனும்போய்
மன்னும் படியகலா வல்லிரவின்—மின்னும்
மழைத்தாரை வல்லிருட்கும் வாடைக்கு நாங்கள்
பிழைத்தால்வந் தேனென்னும் பேர்.

(அப்பொழுது அவள்), 'அன்னங்காள் - அன்னப் பறவைகளே! நீங்களும் - நீங்களும், அ ஆதித்தன் தானும் - அந்தச் சூரியனும், போய் - இவ்விடம் விட்டுப்போய், மன்னும்படி - நிலையாய்த் தங்கியிருக்கும்படி, அகலா - விட்டு நீங்காதிருக்கும், வல் இரவில் - வலிய இந்த இராப்பொழுதில், மின்னும் - மின்னலை யுடன்கொண்டு ஒளிவீசும், மழை தாரை வல் இருட்கும் - மழைத்தாரைகளைச் சொரியும் வலிய இருட்டுக்கும், வாடைக்கும் - குளிர் காற்றுக்கும், நாங்கள் பிழைத்தால் - யானும் என்போன்ற விரகதாபத்தால் வருந்தும் பிறரும், தப்பிப் பிழைத்தோமானால், வந்து - நீங்கள் மீண்டும் வந்து, ஏன் என்னும் பேர் - எங்களை 'ஏன் க்ஷேமமா?' என்று விசாரிக்கும் பெருமையடையப் பெறுவீர் ஆவீர்."

'இவ்விருளும், மழையும், வாடையும், நீங்குவன அல்ல; யானும் என்போன்ற விரகத்துயரிலுள்ளோரும் பிழைப்போம் அல்லோம். இவை நீங்கிய பின் நீங்கள் வந்தால், எங்களை க்ஷேமம் விசாரிக்கும் பெருமை உங்களுக்கு இராது' என்று, அன்னங்களையும் ஆதித்தனையும் நினைத்துக் கூறினள் தமயந்தி. பேர் - பெருமை; 'பெறுவீர் ஆவீர்' என்பது வருவித்துக் கொள்ளப்பட்டது. ஆதித்தனால் இவ்வலிய இருளை, நீங்கி வரமுடியாது என்பதும், அன்னங்கள் இருட்டிலும் மழையிலும், வெளிப்படா என்பதுங் கருதிக் கூறினள் என்பதாம்.

இரவும், இருளும், மழையும், வாடையும் விரக நோயுற்றுரைப் பெரிதும் வருத்தும் என்பது, அகப்பொருட்டுறைகளில் பயிலப் பெறுவது காணலாம். இதுமுதல் 103 முடிய தமயந்தி கூறியவை.

(பி-ம்.) 1. வல்லிருளின். 2. பிழைத்தால்வந் தேனென்னும் பேர்ந்து. (88)

102. செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை—இப்பொழுது
மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயாற் றெரிந்து.

'செப்பு இளம் கொங்கைமீர் - சிமிழ் போன்ற உருவுள்ள இளமையான தனங்களையுடைய தோழியர்களே! திங்கள் சுடர்பட்டு - சந்திரனுடைய நிலவாகிய நெருப்பின் சுவாலை பட்டு, கொப்புளம் கொண்ட - கொப்புளம் பல கொண்டுள்ள, குளிர் வானை - (இயல்பாய் முன்) குளிர்ச்சியுடன் இருக்கும் வானத்தை, இ பொழுது - இப்போது, தேன் பொதிந்த வாயால் - தேன் நிறைந்தது போன்ற உங்கள் இனிய வாய்ச்சொற்களால், தெரிந்து - என் நிலைமையறிந்து, மீன் பொதிந்து நின்ற—(விண்மீன்கள் என்னும்) நட்சத்திரங்கள் நிறைந்து நின்ற, விசும்பு என்பது - (அழகிய) வானம் என்று விபரீதமாக நீவிர் கூறுவது, என் கொலோ - என்ன காரணங் கொண்டோ?

இது, தமயந்தி தன் தோழியரை நோக்கிக் கூறியது. கொங்கைக்குச் செப்பு : கம்ப. அயோத். சித்திரகூடப் : 29; ஆரணிய. 621; பெரியதிருமொழி. 1. 3. 7, உபமான சங்கிரகம். குளிர் வான் : வானுக்கு உள்ள இயல்புத்தன்மையைக் குறித்தபடி. கொப்புளங் கொண்டமை ; ஒப்பு : கம்ப. ஆரணிய: 1129, கலிங்கத்துப்: காடுபாடியது : 19. தேன் பொதிந்த வாயால் : எப்பொழுதும் நீவிர் என்னிடம் தேன்போன்று இனிய மொழி பயிலும் வழக்கமுடையீர் என்பதைக் குறித்ததோடு, அத்தகைய அன்புடைய நீவிர் இப் பொழுது இந்த விபரீத மொழிகளால் என்னை வருத்துவதும் ஏனோ என்று மனம் நொந்து கூறியதும் ஆம். கொல் : ஐயப் பொருளைக் குறித்து நின்ற இடைச்சொல்.

(பி - ம்). 1. கொங்கையீர், கொங்கையார். 2. குளிர் வானம்.
3. மீன்பொதிந்த திந்த, மீன் பரந்து நின்ற.
4. தேன்பொதிந்த வாயாற் றிகைத்து ; வாயாற் சிலர். (89)

103. கானுந் தடங்காவுங் காமன் படைவீடு
வானுந்தேர் வீதி மறிகடலும்—மீனக்
கொடியாடை வையமெலாங் கோதண்ட சாலை
பொடியாடிக் கொன்றதெல்லாம் பொய்.

'காமன் - மன்மதனுக்கு, கானும் தடம் காவும் படைவீடு - காடுகளும், நீர்த்தடங்களோடு கூடிய சோலைகளும், ஆயுதச் சாலைகள்; வானும் - ஆகாயமும், தேர் வீதி - அவன் தேர் செல்லும் வீதி; மறி கடலும் - அலைகள் மடங்கி விழும் கடலும், மீன கொடி ஆடை - அவன் மீன் உருவமைந்த துகிற் கொடி; வையமெலாம் - பூமி எங்கும், கோதண்டசாலை - அவனுடைய வில்லாகிய கரும்புத் தோட்டங்கள் ஆன விற்கூடங்களாய் நிறைந்துள்ளன; (ஆதலின்), பொடி ஆடி கொன்றது எல்லாம் பொய் - அந்த மன்மதனைச் சிவபிரான் நீறாக எரித்து அழித்ததாகக் கூறும் செய்தியெல்லாம் பொய்யேதான்.

காமன் அம்புகளிற் கோட்டுப் பூக்களாகிய, மாம்பூ, அசோக மலர், முல்லைமலர் ஆகிய இவை, காவிலும் கானிலும் உள்ளவை; மற்றைத் தாமரை மலரும், நீல மலரும் தடாகம் முதலிய நீர் நிலைகளில் உள்ளவை; ஆதலின், இவ்விரு இடங்களுக்கும் பொருந்தத் தடம் என்பதற்கு பொருள் கொள்ளப்பெற்றது. மேலும், காவோடு, தடாகம் இணைந்தே அமைப்பது மரபு; 'காவோ டகக் குளந் தொட்டானும்'; (திரிகடுகம். 70) என்ற இயையும் நோக்குக. மன்மதன் தேர் - தென்றல். அது இயங்குவது வானில் ஆதலின், அவ்வானை மன்மதன் தேர் செல்லும் வீதியென்றும், கடல், ஆடை போன்று பரந்துள்ளமையாலும், அதில் மீன் உள்ளமையாலும் அதனை மன்மதன் மீனத்துகிற் கொடியென்றும், கரும்பு மன்மதன் வில் ஆதலால், அக்கரும்புத் தோட்டம் உலகெங்கும் நிறைந்துள்ளமையால் அவை, அவன் வில்லைத் தொகுத்துவைத்திருக்கும் சாலைகள் என்றுங் கொண்டு, அவ்வாறு உபகரணங்கள் யாவும் நிறையப்பெற்று வீறுடன் ஆட்சி புரிந்துவரும் அம்மன்மதனைச் சிவபிரான் அழித்துச் சாம்பராக்கினர் என்ற செய்தி பொய்யே என்று தமயந்தி கூறினாள்.

(பி - ம்). 1. கானுஞ் செழுங்காவும். 2. வானஞ்சேர் வீதி.
4. பொடியாடிக் கொண்டதெலாம்.

104. கொள்ளுபோ கின்ற துயிரென்னுங் கோளரவின்
முள்ளெயிறே மூரி நிலாவென்னும்—உள்ளம்
கொடிதிரா வென்னுங் குழையுந் தழல்போல்
நெடிதிரா வாய்புலரா நின்று.

உயிர் கொள்ளு போகின்றது என்னும் - தமயந்தி, 'என் உயிர் கொள்ளு யடிக்கப்படுகின்றது' என்று கூறுவாள்; 'மூரி நிலா - இந்த வலிய பிறையின் நிலவு, கோள் அரவின் - இராது கேது என்னும் கோட்களாகிய பாம்புகளின், முள் எயிறே என்னும் - முட் போன்ற கூரிய விஷப்பற்களோ?' என்பாள்; 'இரா உள்ளம் கொடிது என்னும் - இந்த இரவின் மனம் மிகக் கொடியது!' என்பாள்; தழல் போல் - நெருப்புப் போல, இரா நெடிது - இரவு முழுவதும், வாய் புலரா நின்று - வாய் உலர்ந்து, குழையும் - வாடிச் சோர்வாள்.

கொள்ளு போதல் - ஒன்று விடாமல் எல்லாவற்றையும் அபகரித்துப் போதல்; கொள்ளு - மிகுதி; இது கொங்கு நாட்டுப் பெருவழக்கு; கோள் அரவு - வலிய அல்லது கொடிய அரவும் ஆம். இத்துணைத் துயர்களுக்குக் காரணமாய் இருத்தலால், இரா உள்ளங் கொடிது என்றுள் எனக் கூட்டிப் பொருள் கொள்ளலாம். புலரா நின்று - புலர்ந்து; ஆநின்று: நிகழ்கால இடைநிலை. நெடிதிரா வாய் புலராநின்று தழல்போல் குழையும் என இயைக்க.

பி - ப். 3. கொடிதிரா வென்னக் குழையும். 4. நெடிதயிரா. (91)

105. வெங்கதிரோன் றன்னை விழுங்கிப் புழுங்கியோ
கொங்கை யனலிற் கொளுந்தியோ—திங்கள்
விரிகின்ற வெண்ணிலவால் வேகின்ற தேயோ
எரிகின்ற தென்னை விரா.

'வெம் கதிரோன் தன்னை - வெப்பமான கிரணங்களையுடைய சூரியனை, விழுங்கி - எடுத்து விழுங்கி, புழுங்கியோ - அவ்வெப்பத்தால் உடல் புழுங்கி வெந்ததாலோ? (அல்லது), கொங்கை அனலிற் கொளுந்தியோ - எனது தனங்களில் உண்டான (காம) நெருப்பு தாக்கக் கொளுத்தப் பெற்றோ? (அல்லது), திங்கள் விரிகின்ற - சந்திரனிடமிருந்து விரிந்து வருகின்ற, வெண் நிலவால் - வெள்ளிய நிலாவினால், வேகின்றதேயோ - வெந்து போகின்றதோ? என்னை - வேறு எக்காரணத்தினாலோ, இரா எரிகின்றது - இவ்விரவு இவ்வாறு நெருப்புப்போல எரிகின்றது!' என்று தமயந்தி புலம்பி வருந்தினாள்.

காதல்நோ யுற்றார்க்கு இரவும் சந்திரனும், அதன் நிலவும் நெருப்புப் போல வெப்பத்தைத் தந்து துயருறுத்து மாதலின், தான் கொண்டதுபோல் அவ்விரவுங் காதலுற்றதாகத் தமயந்தி ஐயுற்று வருந்துவாளாயினள் என்க. கொங்கை ; இரவின் கொங்கையும் ஆம். மாலைப் போதும், இரவும், திங்களும், நிலவும் காமநோயுற்றாரை வருத்துவன என்பது முற்கூறிய, 97 முதல் உள்ள பாடல்களாலும், இனிப் பின்வரும் பிறபாடல்களாலும் அவற்றின் உரைகளாலும் ஆங்காங்கு விளக்க முறுவன காண்க.

பி - ம். 1. புழுங்கியதோ. 2. கொங்கை யழலிற் ; கொளுத்தியதோ. (92)

106. ஊழி பலவோ ரிரவாயிற் ரேவென்னும்
கோழி குரலடைத்த தோவென்னும்—ஆழி
துயிலாதோ வென்னுஞ் சுடர்மதியங் கான்ற
வெயிலா லுடலுருகா வீழ்ந்து.

சுடர் மதியம் கான்ற - தீச்சுடர்போல் விளங்கும் சந்திரன் கக்கிய, வெயிலால் - வெயில் பொன்ற வெப்பத்தைத்தரும் நிலவினால், உடல் உருகா - தமயந்தி உடல் உருகி, வீழ்ந்து - அதனால் சோர்ந்து கீழே விழுந்து, 'ஊழி பல ஓர் இரவு ஆயிற்ரே என்னும் - யுகங்களின் முடிவுக் காலம் பல ஒன்றுகச் சேர்ந்து இன்றுள்ள இந்த ஓர் இரவாக ஆனதோ?' என்பாள் ; 'கோழி குரல் அடைத்ததோ என்னும் - கோழிகள் கூவ முடியாமல் அவற்றின் குரல்கள் அடைத்துப் போயினவோ?' என்பாள் ; 'ஆழி துயிலாதோ என்னும் - கடல் தூங்காதோ?' என்றும் கூறி வருந்துவாள்.

ஊழி - பலயுக முடிவுகள் சேர்ந்த பிரளயகாலம் ; இரவை ஊழி என்றது, அது விடியாது நீடித்து வருத்துவதை நோக்கி ; ஒப்பு : 'மூல மாமலர் முன்னவன் முற்றுறும், கால மாமெனக் கங்குல் கழிந்ததே'; (கம்ப. ஆரணிய. 1056). 'ஓரிரா வன்றம்ம விவ்விரா வோர்திமத்தோன் பேரிரா வென்று பிணங்கினாள்' (குலோத். உலா : 265). கோழி குரலடைத்ததோ : 'கோழி கூவப் பொழுது விடியும்' என்ற பழமொழி கருதி ; அவை கூவாமையால் அவற்றின் குரல்கள், இவ்விரவின் வெப்பத்தால் கூவ முடியாமல் அடைத்துப் போயினவோ என்று ஐயுற்றாள் என்பதாம். ஆழி துயிலாதோ : கடல் இரவில் ஓசைமிக்கு ஒலிக்கும் ; அவ்வோசை காதலர்க்குத் துயர் தருவதாகும் என்பது நூல் வழக்கு ; கம்ப. ஆரணிய. 294 : திருவாய்மொழி, 2. 1 : 3 ; திருவரங்கக் கலம்பகம் : 21.

பி - ம். 1. பலவோ ரிராவா யிற்ரே. 3. மதியங் கான்ற. (96)

107. ஆடி வரிவண் டருகே பறக்கவே
வாடி மெலிவாள் வனமுலைமேல்—ஓடிப்
பொறையாகச் சோர்வாள் பொறுக்குமோ மோகத்
துறைவா யடங்காத் துயர்.

வரி வண்டு - கோடுகள் பல அமைந்த அழகிய வண்டு ஒன்று, ஆடி - விளையாடிக் கொண்டு, அருகே பறக்கவே - அவள் அருகிலே பறந்து வந்தாலுமே, வாடி மெலிவாள் - அவ்வண்டின் சிறகு வீசுவதால் உண்டாகும் காற்றுக்கே ஆற்றாது சோர்ந்து இளைப்பு அடைபவளும், வனமுலைமேல் - அவள் அழகிய தனங்களின் மீது, ஓடி - பறந்தோடி வந்து, பொறை ஆக - அவளுக்கு மேலும் பாரமாக (அவ்வண்டு தங்க), சோர்வாள் - அதனால் பெரிதும் தளர்பவளுமான அத்தமயந்தி, மோக துறைவாய் - இப்பொழுது அவள் அடைந்துள்ள காதல் இடமாக, அடங்கா துயர் - அடைந்த தணியாத பெருந்துயரை, பொறுக்குமோ - பொறுத்துக் கொள்ளும் வலிமையுடையவள் ஆவளோ? (ஆகாள் என்றபடி.)

இச்செய்யுள், 'என்றும் நடங்கும் இடை' என்ற இந்நூல் 36-ஆவது பாட்டின் கருத்தைத் தழுவி வந்தமை காண்க. "வனமுலை மேல் பொறை ஆக - அழகிய அவள் தனங்களில் அவ்வண்டு வந்து தங்கியதால் அத்தனங்களின் பாரத்தோடும் மேலும் அவளுக்கு அதிகபாரம் ஆகி அவளை வருத்த" என்பதாம்.

குறிப்பு :—கோவை முதலிய அகப்பொருள் நூல்களில், 'வண்டோச்சி மருங்கணைதல்' என்னுந் துறையில் இச்செய்யுளின் கருத்து அமையப் பல விதமாகச் சிறப்பிக்கப் பெறும் பாடல்கள் உள்ளமை காணலாம்.

பி - ம். 2. நீடு. 3. பொறையாற்று ஞள்ளம் பொறுக்குமோ காமத்.(94)

108. சர மதியே யிளநிலவை யிங்ஙனே
சோர்குழலின் மீதே சொரிவதெவன்—மாரன்
பொரவளித்தான் கண்ணி யுனக்குப் புலரா
இரவளித்தா னல்லனே வின்று.

'மதியே - சந்திரனே! மாரன் - மன்மதன், பொர - காதலுற்றோரை பொருது வருத்துவதற்காக, உனக்கு கண்ணி அளித்

தான் - நிலவாகிய வலையை அளித்துள்ளான்; (மேலும்) புலரா இரவு இன்று அளித்தான் அல்லனே - விடியாது நீடிக்கும் இரப்பொழுதையும் இன்று அளித்துள்ளான் அல்லனே? (அவ்வாறுக, அவை போதாமல்), இங்ஙனே - இவ்விதமாய், ஈர - பிளந்து வருத்த, இள நிலவை - இந்த இளம் நிலாவை, சோர் குழலின் மீதே - சோர்ந்த கூந்தலையுடைய ஓர் அபலைப் பெண்ணாகிய என் மீது, சொரிவது எவன் - நீ சொரிந்து வருத்துவது ஏனே? (இது தகாது என்றபடி.)

இச் செய்யுளின் முதலடி ஏட்டில் தெளிவுபடாதிருந்த நிலையில் 'இளநிலவை' என்று இருந்ததை, 'இளநிலவே' எனக்கொண்டு, அதையும் விளியாக்கிப் பொருட் பொருத்தமின்றி மயங்கி உரை கண்டார் பலர். மதி குளிர்ந்ததென்ற உணர்ச்சி காம நோயுற் றார்க்கு உண்டாகாது. ஆதலின், ஈர என்பதற்குப் பிளக்க எனப் பொருள் கொண்டு, சோர் குழலின்மீதே என்பதுடன் இயைத்துப் பொருள் கொள்ளப்பட்டது. கண்ணி - வலை; சந்திரன் நிலவை ஒரு வலையாகக் கொண்டு காதல் நோய் உற்றாரை வலித்துப் பிடித்து வருத்துவான் என்பது; 'நிலைக்கும் வானி னெடு மதி நீணிலா, வலைக்கு நீங்கு மிடுக்கிலள் மாந்துவாள்' (ஆரணிய 294) எனச் சூர்ப்பணகை திறத்தும், 'வெண்ணிற நிலவெனும் வலையை வீசினன்'; (கம்ப. உயுத்த. இலங்கைக் கேள்விப் : 6) என இராமபிரான் திறத்தும் விரகதாப நிலையிற் கூறப்பெற்றமை காண்க. 'காமநோய் கொண்டாரோடு போர் புரிய உனக்கு மாரன் நிலவைக் கண்ணி வலையாகவும், புலரா இரவை ஏற்ற பொழுதாகவும் அளித்துள்ளானே அவை போதாவோ? மேலும் இந்நிலவைக் கொண்டு சோரும் என்னைப் பிளக்கத் துணிந்தது என்னே! இது கொடுமை!' என்றுள் தமபந்தி. சோர்குழல், வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. எவன் என்ற சொல்லின் விகாரமே என் என்பது. ''சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்'' (குறள். 57.) என்பது போல. இனி, 'ஈரமதியே! - இயற்கையில் குளிர்ந்ததன்மையுடைய சந்திரனே!' என்றும், (உன் தன்மை மாறி), இளநிலவை - இளமையாய் இருந்தும் சுடும் கொடுமை கொண்ட உன்நிலவை, என்றும் பொருள் கொள்ளலும் ஒன்றும்.

பி - ம். 1. யிளநிலவே. 2. சொரிவதென், சொரிவதே;
3. பொரவினைத்தான் காணு மமக்குப். (95)

109. தாங்கு நிலவின் றழல்போய்த் தலைக்கொள்ளத்
தேங்குழல்சேர் வண்டு சிறைவெதும்ப—ஓங்குயிர்ப்பின்
தாமங் கரியாத் தனியே தளர்கின்றாள்
யாமங் கரியாக வின்று.

தாங்கும் நிலவின் - தான் அதுகாறும் தாங்கிப் பொறுத்துக் கொண்டிருந்த நிலாவின், தழல்-நெருப்பானது, போய் தலை கொள்ள - தன் இடமாக மேலேறித்தாக்க, அதனால், தேம் குழல் சேர் - அவளது மணங்கமழும் கூந்தலில் வந்து தங்கியுள்ள, வண்டு - வண்டுகள், சிறை வெதும்ப - தம் சிறகுகள் வெந்து நீய, ஓங்கு - மேலோங்கி எழும், உயிர்ப்பின் - அவளது பெரு மூச்சினால், தாமம் கரியா - அவள் புனைந்திருந்த மலர்மாலை தீய்ந்து கருகிப் போக, யாமம் கரியாக - தனக்கு அங்கு வேறு துணையின்றி அந்த நள்ளிரவே சாக்ஷியாக, இன்று - இற்றை இராப்பொழுதில், தனியே - தன்னந் தனியளாய்த் தான் மட்டும் இருந்து, தளர்கின்றாள் - தமயந்தி சோர்வுகின்றாள் ஆனாள்.

தலைக்கொள்ளல்: முற்றும் பற்றிக் கொள்ளலும் மிகுந்து பற்றி மூடிக்கொள்ளலும் ஆம்; 'காமச் செந்தீத்தலைக் கொளச் சாம்பினளே' (சீவக. 1259). தேம்-நறுமணம், பிங்; இனிமையும் ஆம். தேங்குழல் சேர்வண்டு: அவள் கூந்தலின் நறுமணத்தை நுகர்வதற்காக வண்டுகள் வந்து படிந்துள்ளன என்பதாம். நிலவின் வெம்மை தலைக்கொண்டமையால், குழலில் தங்கியிருந்த வண்டுகளின் சிறகுகள் வெதும்பிப் போகவும், அவள் விட்ட பெருமூச்சினால், அவள் அணிந்திருந்த மலர் மாலை கரிந்து போகவும் தமயந்தி அன்று பிறிது ஒரு துணையின்றி அந்நள்ளிரவே சாக்ஷியாக இருக்க வருந்துவாளாயினள். இதனால், அவ்விரவில் அவளது பரிசனங்களான மகளிரும், மற்றைக் காவன் மாக்களும் துயில் வுற்றார் என்பதாம், ஒப்பு: 'தனியுந் தானுமத் தையலு மாயினன்' (கம்ப. பால, மிதிலைக்காட்சிப்: 139). தாமங் கரியாக: கரி - சாக்ஷி; 'தனக்குக் கரியாவான் றானெய்' (பழமொழி: 316). இங்குக் கரி என்றது பல பொருள் குறித்த திரி சொல்லாய் வந்துள்ளது.

பி - ம். 1. நீங்கா நிலவின்; தலைப்பெய்த.
2. தேங்குழலில்; ஒங்கு மயில், எங்கு மயில்.
3. தாமங் கரியத். 4. எமங் கரியாக.

110. மையிட்ட கண்ணருவி வார வளைசோரக்
கையிற் கபோலத் தலம்வைத்து—மெய்வருந்தித்
தேனிருந்த பூங்கணையே தீயாகத் தேமொழியாள்
தானிருந்து செய்வா டவம்.

மை இட்ட கண் அருவி வார - மை எழுதப்பெற்ற தன் கண்களிலின்றும் அருவி போல நீர் ஒழுக, வளை சோர - கையில் அணிந்திருந்த வளைகள் நழுவி விழ, கையில் கபோல தலம் வைத்து - தன் கைகளில் கன்னங்களின் இருபுறமும் தங்குமாறு வைத்துக் கொண்டு, தேன் இருந்த பூம் கணையே - தேன் பொருந்தியிருந்த மன்மதன் மலரம்புகளே, தீயாக - ஐந்து நெருப்புக்களாக வளர்ந்து தன்னைச் சூழ்ந்து எரிய, தேம் மொழியாள் - தேன் போன்ற இனிய சொற்களையுடைய அத்தமயந்தி, தான் இருந்து - தான் அங்கு இருந்து, மெய் வருந்தி தவம் செய்வாள் - தன் உடல் வருந்தி வாடத் தவஞ் செய்பவள் போல் இருந்தாள்.

தவம் செய்வோர் கண்ணீர் சொரிதலும், உடன் மெலிதலும், கோணமல் பார்வையை ஒரே நிலையில் நிறுத்த யோகதண்டம் என்னும் கவைத் தண்டைக் கொண்டு முகத்தைத் தாங்கியிருத்தலும், பஞ்சாக்நி இடையே இருத்தலும், ஆகிய மெய்வருத்தங்களை மேற்கொள்வது போலத் தமயந்தி, தன் காதல் நோயால், கண்ணீர் சொரிதலும், வளைகள் கழல உடல் சோர்வுறுதலும், கையே யோக தண்டம் போலக் கன்னங்களை இருபுறமும் தாங்கவும், மன்மதன் மலரம்புகள் ஐந்துதீக்கள் போலத் தன்னைச் சூழ்ந்து எரிக்கவும் இருந்து வருந்தினளாதலின், தவஞ்செய்கிறவளானாள் எனக் கூறப் பெற்றது. மேலும் தவஞ்செய்வோர் கடவுள் அருளை நாடியிருத்தல் போலத் தமயந்தியும், கருத்திற் கொண்ட தன் ஆருயிர்த் தலைவனை நளனைக் கருதித் தவஞ் செய்வாள் போலிருந்தாள் எனக் கொள்க. ஐங்கணை 113; ஐங்கணைகளின் விளக்கம், 37 உரையிற் காண்க. ஐந்து தீ: கடுந்தவ வகைகளுள் நாற்புறங்களிலும் நான்கு தீக்குண்டங்களும், மேலே சூரிய வெப்பமும் பட இருப்பது; இதனைப் பஞ்சாக்நி என்பர்.

பி - ம். 1. மையுற்ற கண்ணருவியாடி வளைசரிந்த.
3. வெங்கணையே; மெல்லணையே; தேன்மொழியாள். (97)

இருளின் மிகுதியும் தமயந்தியின் துயரமும்.

111. அள்ளிக் கொளலா யடையத் திரண்டொன்றுய்க்
கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளாய்—உள்ளம்
புதையவே வைத்த பொதுமகளிர் தங்கள்
இதையமே போன்ற திரா.

இரா - அற்றை இராப்பொழுது, அள்ளி கொள்ளல் ஆய் - வாரி அள்ளி எடுத்துக் கொள்ளக் கூடியபடி, அடைய - முற்றிலும், ஒன்றுய் திரண்டு - ஒரே தொகுதியாகச் சேர்ந்து, கொள்ளிக்கும் விள்ளா கூர் இருளாய் - நெருப்பினாலும் பிளந்து பகுக்கமுடியாத நிறைந்த இருட்டாகி, உள்ளம் - தங்கள் எண்ணத்தை, புதையவே வைத்த - வெளிக்காட்டாது புதைத்து ஆழத்தில் வஞ்சகத்தால் மறைத்து வைத்த, பொது மகளிர் தங்கள் - பொது மாதர்கள் என்னும் வேசையரின், இதயமே பொன்றது - நெஞ்சம் போன்று ஆழ்ந்து இருண்டிருந்தது.

அள்ளிக் கொளல்; மிகுதியாக உள்ள தொகுதியிலிருந்து தன்னுற் கூடியதை வாரி எடுத்துக் கொள்ளுதல்; இஃது இரவின் தொகுதியின் பெருமை குறிப்பிட்டபடி. கொள்ளி - நெருப்பு; இதனைக் கொள்ளிக் கட்டை என்று பொருள் கூறினுமாம். கொள்ளிக்கும் விள்ளாக் கூரிருள்: பின் 'கருவிக்கு நீங்காக் காரிருள்' (117) என்றது போல; ஒப்பு:- "கரபத்திரப் பத்தியி னீர்ந்து, காண்டற் கரிதாய்" (கம்ப. ஆரணிய: 691). உள்ளம் புதையவே வைத்த பொது மகளிர் இதையம்: ஒப்பு: "பொன் விலை மகளிர் மனமெனக் கீழ்பேர்ய்" (கம்ப. பால. நகரப்; 14). இதையம்: இதயம் என்பது எதுகை ஓசை நோக்கித் திரிந்தது.

பி - ம். 4. இதயமே போன்ற இருள். (98)

112. ஊக்கிய சொல்ல ரொலிக்குந் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர்—காக்க
இடையாமங் காவலர்கள் போந்தா ரிருளின்
புடைவா யிருள்புடைத்தாற் போன்று.

ஊக்கிய சொல்லர் - அழுத்தி உச்சரிக்கும் சொற்களை யுடையவர்களும், ஒலிக்கும் - முழக்கும், துடி குரலர் - துடி என்னும் ஒருவகைப் பறையின் ஓசையை யுடையவர்களும், வீக்கிய கச்சையர் - இறுக அரையிற் கட்டிய வார் அல்லது சல்லட முடையவர்களும், வேல் வாளர் - வேலையும் வாளையும் உடையவர்களுமான, இடையாமம்

காவலர்கள் - நடு இரவில் அந்நகரைக்காக்குங் காவலாளர்கள், இருளின் புடைவாய் - இருட்டின் இடத்தே, இருள் புடைத்தால் போன்று - மற்றோர் இருள் முனைத்தெழுந்தாற்போல, போந்தார் - வந்தனர்.

துடி - உருவிற் பெரிதாய் உடுக்கை போன்றுள்ள ஒருவகைப் பறை. துடிக்குரலர் - துடிபோன்ற குரலோசையுடையவர் என்னலும் ஆம். இருள் புடைத்தாற் போன்று என்றதால், அக்காவலாளர் கரிய தோற்றத்தவர் என்பதாம். இக்காவலாளரின் தோற்றத்திற்குக் குகனும் அவன் பரிவாரங்களான வேடர்களும் கொண்டிருந்த தோற்றம் ஒப்பு நோக்கத்தக்கன ; கம்ப. அயோத். கங்கைப் : 29-35 ; குகப் : 9, இரவில் பறைமுதலியன ஒலிக்கக் காவலர் நகர் சுற்றி வருகைக்குப் பாரி வருதல் என்பது பண்டை வழக்கு ; கம்ப. சுந்தர: 253.

(பி - ம்). 1. ஊக்கிய சொல்லா லொலிக்குங்; துடிக்குரலால்; துடிக்கரத்தர். 3. காவலர் போந்தார். (99)

113. சேமங் களிறுபுகத் தீம்பாலின் செவ்வழியாழ்
தாமுள் ளுறைபுகுதத் தார்வண்டு—காமன்றன்
பூவாளி யைந்திற் புகத்துயில் புக்கதே
ஓவாது முந்நீ ருலகு.

களிறு - யானைகள், சேமம் புக - அவற்றின் காவற் கூடத்தைப் போய் அடையவும், தீம் பாலின் - மதுரமான பாலைப்போன்ற, செவ்வழி யாழ் தாம் - செவ்வழி என்னும் மாலைப் பண்ணை இசைத்த யாழ்களும், உள் உறை புகுத - உறைகளுள் புகவும், தார் வண்டு - பூமாலையில் மொய்த்திருந்த வண்டுகள், காமன் தன்-மன்மதனுடைய, பூவாளி ஐந்தில் புக - ஐந்து மலரம்புகளிற் புகவும், முந்நீர் உலகு - கடலாற் சூழ்ந்த இவ்வுலகம், ஓவாது - நீங்காது, துயில் புக்கது - தூக்கத்தை யடைவதாயிற்று. ஏ : அசை.

யானைகளும் தம் கொட்டில் அடைந்தன ; யாழ்களில் பயில்வோரும் அவற்றை உறையிலிட்டு அயர்ந்தனர் ; மன்மதன் மலரம்புகளுக்கும் அந்நள்ளிரவில் யாவரும் அயர்ந்து தூங்கவே வேலையின்மையாகவே, வண்டுகள் அம்மலர்களிற் போய்ப் புகுந்து துயில் கொண்டன. இவ்வாறாக உலகில் உயிர்கள் அனைத்தும் நித்திரையில் ஆழ்ந்தன. ஆனால், தமயந்தி மட்டும் தூங்கவில்லை என்பது இதனாலும், பின்வருஞ் செய்யுட்களாலும் விளங்குவது காணலாம். முந்நீர் - கடல் ; ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் மூவகைத் தொழில்களையுடைய நீரால் நிறைந்த கடல் என்றும், ஆற்று நீர், ஊற்று நீர்,

மேனீர் என மூவகை நீர்களைக் கொண்ட கடல் என்றும் கூறுவர்; (சிலப். அடியார்க்.); இனி, முன்னீர் எனப் பாடம் கொண்டு படைப்புக் காலத்தில் இப்புவிக்கு முன்தோன்றிய நீராகிய கடல் என்பாரும் உளர்; 'முன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப' (337). உலகு: உலகில் வாழும் பிராணிகள்; இடவாகு பெயர்.

(பி - ம்). 1. கனிபுக்க தீம்பாலின். 2. தாம முறைபுக்க.
3. பூவாளி பாயப் புறந்தயில்; புகுந்த தயில் புக்கதே.
4. ஓவாத முந்நீ ருலகு, முன்னீ ருலகு. (100)

சில பிரதிகளில் இச்செய்யுள் இல்லை. ஒரு பிரதியில் இச் செய்யுள் அடியிற் காணுமாறு மாறி உள்ளது.

சேமங் களிறுபுகத் தண்பாலின் செவ்வழியாழ்
தாமு முறைபுகத் தார்வண்டு—கோமகன்றன்
பூவாளி யைந்திற் புகுந்துதுயில் புக்கதே
ஓவாத முந்நீ ருலகு.

114. ஊன்றின் றுவகையா லுள்ள வுயிர்புறம்பே
தோன்றுங் கழுதுந் துயின்றதே—தான்றன்
உரைசோரச் சோர வுடல்சோர வாயின்
இரைசோரக் கைசோர நின்று.

ஊன் தின்று - மாமிசத்தைப் புசித்து, உவகையால் - அந்த மகிழ்ச்சியால், உள்ள உயிர் - உள்ளே அடங்கியிருந்த தன் மூச்சு, புறம்பே - வெளியில், தோன்றும் - காணும்படி விளங்கும், கழுதும் - பேய் கூட, தன் - அதன், உரை சோர - பேச்சுக்களும் தளர்ந்து போக, உடல் சோர - அதன் உடலும் சோர்வடைய, வாயின் இரை சோர - உண்ண வாயிற்கொண்ட உணவு உட்புகாமல் நழுவிக் கீழே விழ, கை சோர - அதன் கைகளும் ஓய்ந்துபோக, துயின்றது - தூங்கிப் போயிற்று. ஏ: தான் என்பன அசைகள்.

ஊன் தின்று.....தோன்றும்: அது காறும் உணவின்றி வாடியிருந்து உள்ளடங்கி ஓய்ந்த நிலையில் இருந்த பேயின் உயிர் இப்பொழுது உணவாகிய மாமிசங் கிடைக்க, அதனை உண்ட களிப்பால், அவ்வோய்ந்திருந்த உயிர், இருப்பது என்பது அதன் பெரு மூச்சினால் வெளியே தோன்றியது என்பதாம். அத்தகைய பேய், தன் சொற்களும் உடலும் சோரவும், வாயில் இட்ட உணவு நழுவி விழவும், அதன் கையும் சோர்ந்து போகவும் துயின்றது. இதில் தூக்கம் வந்த நிலையில், படிப்படியாய் நிகழும் மெய்ப்பாடுகள் நன்கு

விளக்கப்பெற்றமை காண்க. கழுதும்: இரவிலும் நெடுநேரம் தூங்காது அலையும் பேயும்; உம்மை, உயர்வு சிறப்பினது. பேய்கள் எப்போதும் பெரும் பசியால் வாடி இளைத்த நிலையில் இருப்பன வென்பதும், இரவில் தூங்காமல் அலைந்து கொண்டிருக்கும் என்பதும், ஊன் தின்னும் இயல்பின என்பதும் பிறவும், கலிங்கத்துப்பரணி, பேய்முறைப்பாடு என்ற பகுதியிலும், அரிச்சந்திரபுராணம், மயானகாண்டத்தும் காணலாம். துயின்றது என்றமையால் பேய்கள் நள்ளிரவில் சிறிது நேரம் தூங்கும் என்பது விளங்கும்; இது பின், "பேயுந் துயின்றதாற் பேரியாமம்" (262) என்றமையால் விளங்குவது காண்க. உயிர்: உயிர் இருக்கும் நிலையை அறிவிக்கும் மூச்சு; இஃது, உயிர்ப்பு என்பதின் முதனிலை, தொழிற்பெயர் ஆயிற்று.

(பி - ம்). 1. றுவகையா யுள்ள. 3. உரைசோரச் சோர வுயிர்சோர வாயின். 4. இரைசோரச் சோர விருந்து. (101)

115. அன்றி லொருகண் டுயின்றொருகண் ணாவத்தால்
இன்றுணைமேல் வைத்துறங்கு மென்னுஞ்சொல்—இன்று
தவிர்ந்ததே போலரற்றிச் சாம்புகின்ற போதே
அவிழ்ந்ததே கண்ணீ ரவட்கு.

அன்றில் - அன்றிற் பறவை, ஒரு கண் துயின்று - ஒரு கண்ணை மூடித் தூங்கி, ஒரு கண்-மற்றொரு கண்ணை, ஆர்வத்தால் - அன்பினால், இன் துணை மேல் வைத்து - தன் இனிய துணையாகிய பெட்டையின் மீது வைத்து நோக்கி, உறங்கும் என்னும் சொல் - தூங்கும் என்று உலகில் வழங்கும் சொல், இன்று தவிர்ந்ததே போல - இன்று நீங்கியதே போல, அரற்றி - வாய் விட்டுக் கூவி, சாம்புகின்ற போதே - சோர்ந்து ஒடுங்கிய போதே, அவட்கு - அத்தமயந்திக்கு, கண்ணீர் அவிழ்ந்தது - கண்ணீர் பெருகி யொழுகியது. அவிழ்ந்ததே என்பதில் ஏகாரம் ஈற்றசை.

அன்றிலின் அரற்றல் பிரிந்த தலைவியரை வருத்துதல்; (குறுந். 160.) 'அன்றி, லொருதரங் கத்தும் பொழுதும் பொரு ளென் னெருவல்லியே' (திருவேங்கடத்தந்தாதி; 9.) என்றபடி, பெண் அன்றில் ஒரு தரம் கூவ, அதன் துணையாகிய ஆண் அன்றில் வந்து அதனைச் சாராமையால் அப்பிரிவைப் பொறுக்காமல் அது சோர்ந்தது என்று தமயந்தி கருதி அதன் துன்பம் தன் துன்பத்திலும் மேலாகத் தன்னை வருத்தவே, அவள் கண்ணீர் சொரிந்து மேலும் வருந்தினாள் என்பதாம். இவ்விதம் தான் விரும்பும் நளனும், பின் னெருகால் தன்னைப் பிரியவும் கூடுமோ என்று எண்ணியும் வருந்தினாள் என்பது இதில் தொனிப்பது காண்க. அன்றிற்

பறவை தன் துணையை விட்டுப் பிரிந்திராது ; கம்ப. பால. கடி மணப் : 5. அன்றிலைக் கிரௌஞ்சம் என்பர் வடமொழியில்.

பி - ம். 2. வைத்திரங்கு மெல்லிக்கண்.
3. தவிர்த்தனவே, தவிர்த்தனபோல், தவிர்ந்ததே போலக்கண் சாம்புகின்ற போதத்து ; போதில் : போலத்தான்.
4. அவிழ்ந்தனவே. (102)

116. ஏழுலகுஞ் சூழிருளா யென்பொருட்டால் வேகின்ற
ஆழ்துயர மேதென் றறிகிலேன்—பாழி
வரையோ வெனுநெடுந்தோண் மன்னுவோ தின்னும்
இரையோ விரவுக் கியான்.

'ஏழ் உலகும்-ஏழு பிரிவுகளாக உள்ள இவ்வுலகம் முழுவதும் சூழ் இருளாய் - சூழ்ந்த இருளால் மூடுண்டு, என் பொருட்டால் - என் நிமித்தமாக, வேகின்ற - வெந்து கொண்டிருப்பதான, ஆழ் துயரம் ஏது என்று - ஆழ்ந்த இப்பெருந்துன்பத்திற்குக் காரண மென்னவென்று, அறிகிலேன் - யான் அறிய முடியாதவளா யிருக் கின்றேன் ; பாழி வரையோ எனும் நெடும் தோள் - பருத்த மலை களோ என்று சொல்லத்தக்க நீண்ட தோள்களையுடைய, மன்னுவோ - மன்னனை நளமகாராஜனே ! யான் - நான், இரவுக்கு - இந்த இராத் திரிக்கு, தின்னும் இரையோ - உண்ணும் உணவோ ?' என்று தமயந்தி ஏங்கிக் கூறினாள்.

தமயந்தி, தான் விரக நோயால் வெந்து வருந்துவதால் அவ் வெப்பம் உலக மெங்குமே தாக்கி வருத்துகின்றது என்று கருதி னாள். மன்னுவோ என்பதில் உள்ள ஈற்று ஓகாரம் : 'புலம்பலில் ஓவும் ஆகும்' (நன். சூ. 313.) என்றபடி ; ஒப்பு : மல்லார் திண்டோண் மாமாவோ மந்தாகினியாண் மதலாயோ ; (வி. பா. சூது போர்ச் : 233.) இரவுக்கியான்: உகரம், யகரம் வர இகரமாய்த் திரிந்தது; (நன். சூ. 93.)

பி - ம் 1. யென்பொருட்டா லீகின்ற.
2. .....வாழி வகையோ. (103)

117. கருவிக்கு நீங்காத காரிருள்வாய்க் கங்குல்
உருவிப் புகுந்ததா லுதை—பருகிக்கார்
வண்டுபோ கட்ட மலர்போன் மருண்மாலை
உண்டுபோ கட்ட வுயிர்க்கு.

கருவிக்கும் நீங்காத - எந்த ஆயுதத்தாலும் போழ்ந்து போக முடியாத, கார் இருள்வாய் - கரிய இவ்விருட்டின் இடத்தே, கார்

வண்டு கரியவண்டுகள், பருகி - தேனைக் குடித்து, போர்கட்ட - விட்டுச் சென்ற, மலர் போல் - பூவைப் போல, மருள் மாலை - மயக்கத்தைத் தரும் மாலைப்போது, உண்டு போகட்ட உயிர்க்கு - முன் உண்டு சாரமற்றதாய் விட்டுச் சென்ற என் உயிரை உண்பதற்கு, கங்குல் - இந்த இரவிலே, ஊதை - குளிர்காற்று, உருவி புகுந்தது - ஊடுருவி வந்து புகுந்து கொண்டது. ஆல் : அசை.

கருவிக்கு நீங்காத காரிருள் : முன் 'கொள்ளிக்கும் விள்ளாத கூரிருள்' (111.) என்றது போல. மாலையின் மலர்களில் உள்ள தேனை வண்டுகள் உண்டு இனிச் சாரமற்றது எனப் போட்டுச் சென்றன போல, மாலைப் பொழுதுண்டு சாரமற்றது எனப் போட்டுச் சென்ற என் உயிரை உண்ண, ஊதைக்காற்று வந்து புகுந்தீத என்று வருந்தினள் தமயந்தி என்பதாம். போகட்ட என்பது போட்ட என்பதின் பண்டை வழக்கு ; (சீவக. 93 உரை. அடிக்.) மாலை, இரவு ஆகிய நேரங்களும், இருளும், நிலவும், ஊதைக் காற்றும் காம நோய் உற்றுரை மேன்மேலும் வருத்துவன ஆம்.

பி - ம். 3. மலர்போற் பருகித்தேன். (104)

ஒரு சுவடியில் இச்செய்யுள் இல்லை.

118. எழுந்திருக்கு மேமாந்து பூமாண் டவிசின்
விழுந்திருக்குந் தன்னுடம்பை மீளச்—செழுந்தரளத்
தூணைடு சேர்க்குந் துணையேது மில்லாதே
நாணைடு நின்றழியு நைந்து.

எழுந்திருக்கும்-உட்கார்ந்திருந்த தமயந்தி இருப்புக் கொள்ளா மல் எழுந்திருப்பாள் ; ஏமாந்து - தான் நளன்பாற் கொண்ட காத லில் ஏமாற்றம் அடைந்தாகக் கருதி, பூ மாண் தவிசின் - பூக்கள் பரப் பப் பெற்றுச் சிறப்புற்ற மெத்தை அல்லது பீடத்தில், விழுந்திருக் கும் - ஒய்ந்து விழுந்து கிடப்பாள் ; மீள - மறுபடியும், தன் உடம்பை - தன் உடலை, செழும் தரள தூணைடு சேர்க்கும் - செழுமையான முத்துக்கள் பதித்து அங்கிருந்த தூணைடு சேர்த்து அணைத்துக் கொள்வாள் ; துணை ஏதும் இல்லாது - தனக்குத் துணை ஒன்றும் இல்லாமல், நாண் ஒடு நின்று அழியும் - தன் நாணத்தையே தன் துணையாகக் கொண்டு, தளர்ச்சியுற்று வருந்துவாள். ஏ. அசை.

ஏமாறுதல் - மயக்க முறுதலும் ஆம். தவிசு - மெத்தை (பிங்.). தரளத் தூணைடு சேர்த்தல், குளிர்ச்சி பெறக்கருதி ; நாணைடு

நின்றழியும் : அந்நாணமே அவள் உடன்பிறந்து அவளைப் பிரியாத் துணையாயிருந்து, அவள் கொண்ட காம நோயைப் பிறர் அறியா மல் அடக்கி வருகின்ற தாதலின். இதில் உள்ள வினைகள் எல்லாம் திணைவழுவமைதியில் வந்தவை எனக் கொள்க. அடுத்த, 119, 120-ஆம் செய்யுட்களும் இவ்வாறே திணைவழுவமைதியில் தமயந்தி கூற்றாக அமைந்துள்ளமையும் நோக்குக.

பி-ம். 1. பூமாந்தலிசின். 4. நின்றழியா னைந்து, நின்றயர்வா னைந்து. (105)

119. விரிகின்ற மெல்லமளி வெண்ணிலவின் மீதே
சொரிகின்ற காரிருள்போற் சோரும்—புரிகுழலைத்
தாங்குந் தளருந் தழலே நெடிதுயிர்க்கும்
ஏங்குந் துயரோ டிருந்து.

(அவள் மேலும்), விரிகின்ற மெல் அமளி - பரந்த மென்மையான படுக்கையில், வெண் நிலவில் மீதே சொரிகின்ற கார் இருள்போல் - வெண்ணிலாவின் மீது பொழிகின்ற கரிய இருள் போன்று, சோரும். அவிழ்ந்து நின்ற, புரி குழலை - சுருண்ட தன் கூந்தலை, தாங்கும் - ஏந்தி நிற்பாள்; தளரும் - சோர்வு அடைவாள்; தழலே நெடிது உயிர்க்கும் - நெருப்பைப் போலப் பெரு மூச்சுவிடுவாள்; துயரோடு இருந்து ஏங்கும் - துன்பத்துடனிருந்து ஏக்கமுற்று வருந்துவாள்.

அமளி, வெண்மை நிறத்தால் நிலவுக்கும், கூந்தல் கருமை நிறத்தால் இருளுக்கும் உவமைகளாயின. தாங்கும் என்றதால், அக் குழலின் அடர்த்தியையும் கனத்தையும், நீளத்தையுங் குறித்தபடி. தழலே நெடிது உயிர்த்தமை; 'ஓங்குயிர்ப்பின் தாமங் கரியாக' (109) என்று முன் கூறியதுங் காண்க. (106)

120. மயங்குந் தெளியு மனநடுங்கும் வெய்துற்
றுயங்கும் வறிதே யுலாவும்—வயங்கிழைபோய்ச்
சோருந் துயிலுந் துயிலாக் கருநெடுங்கண்
நீருங் கடைசோர நின்று.

வயங்கு இழை - விளங்கும் அணிகள் பூண்ட அத்தமயந்தி, மயங்கும் - மயக்கம் அடைவாள்; தெளியும் - சிறிது நேரத்தில் தெளிவு பெறுவாள்; மனம் நடுங்கும்-மன நடுக்கமுறுவாள்; வெய்து உற்று - வெம்மை அடைந்து, உயங்கும் - வாடுவாள்; வறிதே உலாவும் - வீணே அங்கு மிங்கும் நடப்பாள்; போய் சோரும் - மீண்டும் போய்ச் சோர்வடைவாள்; துயிலா கரும் நெடும் கண் நீரும்

கடை சோர நின்று - தூங்காத தன் கரிய நீண்ட கண்களின் கடைகளிலிருந்து நீர் தளர்ந்து பொழிய விட்டுக்கொண்டு, துயிலும் - அந்நிலையில் ஒருவாறு சிறிது உறக்கமும் கொள்வாள்.

இதுவும், முன் வந்தவை போலக் காமநோயுற்றோர் அடையும் பலவித துயரங்களையும், செயல்களையும், மெய்ப்பாடுகளையும் விளக்குவதாகும். நின்று துயிலும் என இயைத்துப் பொருள் கூறினரும் உளர். தமயந்தியின் இத்துயர நிலையில் அவளின் பல செயல்களை அடுக்கிக் கூறும் இச்செய்யுள், அசோக வனத்தில் சிறையிருந்து வருந்திய பிராட்டியின் சோகநிலையை,

'விழுதல் விம்முதன் மெய்யுற வெதும்புதல் வெருவா
எழுத லேங்குத லிரங்குத லிராமனே யெண்ணித்
தொழுதல் சோருத றுளங்குத றுயருமந் துயிர்த்தல்
அழுத லன்றிமற் றயலொன்றுஞ் செய்குவ தறியாள்;'

(கம்ப. சுந்தர. 334), என்று கல்வியிற் பெரியார் விளக்கிய பாசுரத்தை நினைப்பூட்டுகின்றது.

பி - ம். 2. தயங்கிழை போல். 4. கடை போக நின்று. (107)

121. உடைய மிடுக்கெல்லா மென்மேலே யோச்சி
விடிய மிடுக்கின்மை யாலோ—கொடியண்மேல்
மாகாதல் வைத்ததோ மன்னவர்த மின்னருளோ
ஏகாத தென்னே விரா.

'உடைய மிடுக்கு எல்லாம் - தான் அடைந்துள்ள வலிமை எல்லாவற்றையும், என் மேலே ஓச்சி - என்மீது வீசிச் செலுத்தி, விடிய மிடுக்கு இன்மை ஆலோ - இவ்விருளைக்கடந்து பொழுதானது விடிய அதனிடம் வலி இல்லாமையாலோ? கொடியள் மேல் - கொடிய வினையுடையளாகிய என்மீது, மா காதல் வைத்ததோ - அம்மன்னவனுன நளன் பெருங் காதல் வைத்ததாலோ? மன்னவர் தம் இன் அருளோ - அல்லது இவ்வாறு காதலுற்று வருந்தும் ஒரு பெண் மீது பராமுகமாய் இருப்பதுதான் அரசர்களுக்குள்ள இனிய அருளையோ? இரா ஏகாதது என்னே - இந்த இரவு விடிந்து போகாமல் இப்படி நீடிப்பது வேறு என்னகாரணமோ?

இதுவும் அடுத்த செய்யுளும் தமயந்தியின் கூற்று. இரவு விடியாதது, அதற்கு இனி இந்த இருளைக் கடக்கும் மிடுக்கின்மை யாலோ? கொடிய தீவினையினளான என் மேல் அந்நளன் பெரும் காதல் கொண்டதாலோ? அல்லது அரசர்கள் தம் இன்னருள் தான் இதுதானோ? வேறு எக்காரணத்தாலோ

என்று தமயந்தி பலவாறு எண்ணி அதன் வகை தெரியாது வருந் தினுள் என்க. இனி, கொடியன் மேல் என்ற பாடங்கொண்டு, 'கொடியன்', என்பதைத் தன்னை வருத்தும் நிசாபதியாகிய சந்திரன்மே லேற்றி, அவன்பால் அவன் தலைவியாகிய இரவு மாகாதல் வைத்து, அந்தக் காதன் மயக்கில் ஈடுபட்ட நிலையில் அவ்விரவுக்கு விடியும் நேரம் தெரியாமற் போயிற்றோ? என்று தமயந்தி கருதினுள் எனவுங் கொள்ளலாம். மேலும், தமயந்தி தன் காதலனை நளன் தனக்கிழைத்த கொடுமைகளையெல்லாம், தன் விண்ணப்பமாகவே எனக்கருதி, அவன் மீது சிறிதுங் குறைகூறுத, உலக சரித்திரத்தில் வேறு எங்குங் காணுத உயரிய அறக்கற்புடைய ளாதலின, அவள், மற்றும் பல பிரதிகளிற் காணுமாறு நளனை, 'கொடியன் மேல் மாகாதல் வைத்தனோ' என நிந்தித்தாள் எனச் சிலர் கொண்டது ஏற்றது ஆகாது; ஆதலின், கொடியண் மேல் என்பதைக் கொடியன் மேல் என மயங்கி எழுதப்பட்டது எனக் கொள்ளத் தக்கதாம். ஒரு பிரதியில், கொடியேன் மேல் என ஐயத் திற்கிடமின்றி இருப்பதையுங் காண்க.

பி - ம். 2. கொடியன் மேல், கொடியேன்மேல்.

3. மன்னவன்றன் னின்னருள்போல்; மாகாதல் தந்தருளு மன்னவனு ரின்னருளோ.; தண்ணருளோ. (108)

122. விழுது படத்திணிந்த வீங்கிருள்வாய்ப் பட்டுக்
கழுதும் வழிதேடுங் கங்குற்—பொழுதிடையே
நீருயிர்க்குங் கண்ணைடு நெஞ்சுருகி வீழ்வார்தம்
ஆருயிர்க்கு முண்டோ வரண்.

'விழுது பட திணிந்த - தோய்ந்த தொகுதிபோலக் கெட்டியான, வீங்கு இருளவாய்-மிகுந்த இருட்டில், பட்டு - அகப்பட்டு, கழுதும் வழி தேடும் - பேயும் வழி தெரியாமல் தேடியலையும், கங்குல் பொழுது இடையே - இராப் பொழுதினிடத்து, நீர் உயிர்க்கும் - நீரைச் சுரக்கும் அல்லது பெருகவிடும், கண் ஓடு - கண்களோடு, நெஞ்சு உருகி - மனம் குழைந்து, வீழ்வார் தம் - ஆசையில் என்போல் ஆழ்ந்து வருந்து வாருடைய, ஆர் உயிர்க்கும் - அரிய உயிர்க்கும், அரண் உண்டோ - ஒரு பாதுகாவல் ஏற்படுமோ? (என்று வருந்தினுள் தமயந்தி.)

விழுது - தோய்ந்து செறிந்தது; மாவின் விழுது, நெய்யின் விழுது என்பனபோல, இச்சொல் இழுது எனவும் வழங்கும்; 'உள்ளம் எரியி னிழுதாவ ரென்க' (நன்னெறி : 20); இங்கு விழுது என்பதற்கு ஆலம் விழுது போன்று என உரை கூறினரும்

உளர். கழுதும்: உம்மை உயர்வு சிறப்பினது; முன், 'கழுதும் துயின்றதே' (114) என்றது போல; இவ்வாறே பேய் இரவில் தூங்காது அலையும் இயல்பை இந்நூலிற் பின்னும், 'இளம் பேய்க்குந் தோன்ரு விருள்' (256) என்றும்; 'பேயுந் துயின்றதாற் பேரியாமம்' (262) என்றும் கூறப்பெறுமாற்ருல், பேய் இரவுக்கும் இருளுக்கும் அஞ்சாதது என்பதாம். வீழ்வார் - ஆழங்காற்பட்டு நிற்பார். இனி, வீழ்தல் - விரும்புதல் என்னும் பொருளிலும் வரும்; 'தாம் வீழ்வார் மென்ரோட் டுயிலி னினிதுகொல்'; (குறள். 1103). இச் செய்யுளைக் கவிக்கூற்ருகக் கொள்ளலும் ஆம்.

பி-ம். 1. விழுத படத்தூங்கும், விழுத படக்கண்டு, விழுத படத்தினிந்த. 2. கழுத வழிதேடும். 3. நீருருக்குங் கண்ணேடு; நெஞ்சுருக. (109)

பொழுது புலர்ந்தமை

123. பூசுரர்தங் கைம்மலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்
காசினியுந் தாமரையுங் கண்விழிப்ப—வாசம்
அலர்ந்ததேங் கோதையா ளாழ்துயரத் தோடு
புலர்ந்ததே யற்றைப் பொழுது.

பூசுரர் தம் - அந்தணர்களுடைய, கை மலரும் - கைகளாகிய மலர்களும், பூம் குமுதமும் முகிழ்ப்ப - அழகிய அல்லி மலர்களும் கூம்ப, காசினியும் தாமரையும் கண் விழிப்ப - புவியில் உள்ள பிராணிகளும் தாமரைப் போதுகளும் கண்விழித்தனபோல மலர்ந்து ஒளிர, வாசம் அலர்ந்த தேம் கோதையாள் - வாசனையோடு தேனையுடைய மலர்ந்த மாலையணிந்த தமயந்தியின், ஆழ் துயரத்தோடு - ஆழ்ந்த துன்பத்தோடு, அற்றை பொழுது - அன்றை இரவுப் பொழுது, புலர்ந்தது - விடிந்தது. ஏ : ஈற்றசை.

பூசுரர் - புவியில் தேவர் போன்றவர். அந்தணர் கைம்மலர் முகிழ்த்தல் - சூரியோதயத்திற்கு முன்னர் எழுந்து நீரோடி, உதிக்கும் சூரியனை நோக்கிக் கைகுவித்து, காலை உபஸ்தானம் என்னும் வேத மந்திரங்களைச் சொல்லி வழிபடுதல். கோதையாள் ஆழ்துயரமும் விடிந்தது, அற்றையிரவுப் பொழுதும் விடிந்தது என்பதை, உடனிகழ்ச்சியில் ஒன்றுகூட்டிப் புலர்ந்தது என்ற ஒரே வினைகொண்டு முடித்த திறம் நோக்கத்தக்கது. தாமரை இரவிற் கூம்பிப் பகலில் மலர்தலும், குமுதம் இரவில் மலர்ந்து பகலிற் கூம்புதலும் இயற்கை. இச் செய்யுள் தொடர்பணி. காசினி: இங்கு இடவாகு பெயர்.

பி-ம். 1. பூங்குமுத முங்குவிய. 2. கண்மலர. 3. மாதயரந் தீர, ஆழ்துயரம் தானும். (110)

சூரியோதயம்

124. வில்லி கணையிழப்ப வெண்மதியஞ் சீரிழப்பத்
தொல்லை யிருள்கிழியத் தோன்றினான்—வல்லி
மணமாலை வேட்டிடுதோள் வாளரசர் முன்னே
குணவாயிற் செங்கதிரோன் குன்று.

வில்லி கணை இழப்ப - கரும்பு வில்லையுடைய மன்மதன் தன் மலரம்புகளை இழக்கவும், **வெண் மதியம் சீர் இழப்ப** - வெண்மையான சந்திரன் தன் சிறப்பாகிய ஒளியின் அழகை இழக்கவும், **செம் கதிரோன்** - சிவந்த கிரணங்களையுடைய சூரியன், **தொல்லை இருள் கிழிய** - துன்பத்திற்கு இடமான இருள் கிழிபட்டது போல அழியவும், **வல்லி**-கொடிபோன்ற தமயந்தியின், **மணமாலை வேட்டிடு**-சுயம்வர மணமாலையை விரும்பிய, **தோள்** - தோள்களையுடைய, **வாள் அரசர் முன்னே**-ஒளிதங்கிய அரசர்கள் எதிரே, **குண வாயில் குன்று** - கிழக்குப் புறத்தேயுள்ள உதயகிரி என்னும் மலையிடத்து, **தோன்றினான்** - விளங்குவானானான்.

வில்லி: இங்குச் சரித நிகழ்ச்சிக்கு ஏற்பக் கரும்பு வில்லையுடைய மன்மதன் எனக்கொள்ளப்பட்டது. அதுகாறும் இரவில் தன் வெள்ளொளி பரப்பித் தன் நிலவால் விரகநோயுற்றுரை வாட்டித் தருக்குற்றிருந்த சந்திரன், சூரியோதயமானதும் தன் ஒளி குன்றிப் போனதால், சீரிழப்ப என்று கூறப்பெற்றது. **தொல்லை யிருள்**: இதுகாறும் தமயந்திக்கு நீங்காத கொடிய விரகத் துயரைத் தந்த இருள் என்னலும் ஒன்றும். **வாளரசர்** - வாளேந்திய வீர வாழ்க்கையுடைய அரசரும் ஆம். இச் செய்யுளில், வெண்மதி, தொல்லையிருள் செங்கதிர் எனப் பல குணப் பெயர்கள் இணைந்து வந்தமையால் இது முரண்தொடை அணி. இழப்ப, இழப்ப, கிழிய எனப் பலவினைகள் தொடர்ந்து வந்தமையால் முன் செய்யுளைப் போல இது தொடர்பணியின் பாற்படுதலும் ஆம்.

பி - ம். 2. யிருள்கழிய.
3. மணமாலை யீடுதோள்; யீடுகொள்ளும். வாளரசன் முன்னே.

(111)

125. முரைசெறிந்த நாளேழு முற்றியபின் கொற்ற
வரைசெறிந்த தோண்மன்னர் வந்தார்—விரைசெறிந்த
மாலை துவள முடிதயங்க வால்வளையும்
காலை முரசுங் கலந்து.

முரசு எறிந்த நாள் ஏழும் முற்றிய பின் - தமயந்தியின் சுயம் வரம் என்று மண முரசு ஒலிக்கச் செய்து அறிவித்த ஏழு நாட்களும் முடிந்த பின், கொற்ற வரை செறிந்த தோள் மன்னர் - வெற்றி பொருந்திய மலைகள் திரண்டன போன்ற தோள்களையுடைய பல தேயத்து அரசர்கள், விரை செறிந்த - வாசனை அடர்ந்த, மாலை துவள - அன்னோர் அணிந்திருந்த மலர் மாலைகள் நெகிழ்ந்து அசைய, முடி தயங்க - கிரீடங்கள் ஒளியால் விளங்க, வால் வளையும் - தூய சங்கங்களும், காலை முரசும் - காலையில் அடிக்கப் பெறும் பேரிகைகளும், கலந்து - சேர்ந்து ஒலித்துத் தொடர, வந்தார் - அக் குண்டினபுரியில் வந்து சேர்ந்தார்.

முரசு - முரசு எதுகை நோக்கி வந்த போலி. நாள் ஏழு: 56. வால் - தூய்மை; (பிங்); வெண்மையும், பெருமையும் ஆம். காலை முரசு என்றமையால் அவ்வரசர்கள் காலை நேரத்திலேயே வந்து சேர்ந்தனர் என்பதாம். வளையும் முரசும் கலந்து என்றமை அவற் றின் ஒலி கலந்து எனக் கொள்ள நிற்றலால் அவ்வளையும், முரசும் ஒலிகளுக்கு முதலாகு பெயர்கள் ஆயின. சங்கும், முரசும் அரசர்க் குரிய பெருமையைக் குறிப்பிட நிற்பதால், சிறப்பின்பாலாய் அவ் விரண்டையும் கூறி, மற்ற வாத்தியங்களை உபலக்ஷணத்தாற் பெற வைத்ததாம்.

பி - ம். 1. முரசறைந்த. 3. முடிதளங்க; வானகர. (112)

நளன் சுயம்வர மண்டபம் வந்தமை

126. மன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீலம்—முன்றில்
குறுவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய்.

முன்றில் - வீடுகளின் முன்புறத்தில், கன்று குதட்டிய - (கட்டப் பெற்றிருந்த) கன்றுகள் மென்று உமிழ்ந்த, கார் நீலம் - கரிய குவளை மலர்கள், குறு விழிக்கு நேர் நாடன் - மகளிர் குறுகிய கடை விழி களுக்கு ஒப்பாக விளங்கும் நீர் நிலவளம் மிக்க நிடத நாட்டையுடை யவனும், கோதை - தமயந்தியின், பெரும் கண்ணின் - பெரிய கண்களின், சிறு விழிக்கு - சிறிய கடை நோக்கத்திற்கு, நோற்று இருந்த சேய் - தவம் செய்திருந்த தலைவனை நளன், மன்றல் அம் தார் மன்னர் - (அங்கு வந்திருந்த) மணம் பொருந்திய அழகிய மாலை யணிந்த அரசர்களது, நடு - இடையே, அணைய - சேர்ந்து, வந்திருந்தான் - அச்சுயம்வர மண்டபத்தில் வந்திருந்தான்.

குதட்டுதல் - வாயால் மெல்லுதல்; இது குதப்புதல் எனவும் வரும். கன்று குதட்டிய நீல மலர் சுருண்டு உருவிற் சிறுத்தமையால், மகளிர் சுருக்கி நோக்குங் கடைவிழிக்கு ஒப்பாயிற்று. கன்று - ஆவின் கன்றும் எருமைக்கன்றும் ஆம். நோற்றிருந்தது: 'இவ் வளவிற் செல்லுங் கொல்' (42) என்ற செய்யுளாலும், 'வழிமேல் விழி வைத்து' (59) என்ற செய்யுளாலும் அறிக. சேய், முருகன் போன்றவனும் ஆம்.

பி - ம். 3. குறுவிச்சும் நீர்நாடன், குறுவிழிகொ ணீர்நாடன். (113)

தமயந்தி சுயம்வர மண்டபம் வந்தது

127. நித்திலத்தின் பொற்றோடு நீலமணித் தோடாக
மைத்தடங்கண் செல்ல வயவேந்தர்—சித்தம்
மருங்கே வரவண்டின் பந்தர்க்கீழ் வந்தாள்
அருங்கேழ் மணிப்பூ ணணங்கு.

அரும் கேழ் மணி பூண் அணங்கு - அரிய ஒளியுடைய இரத்தினங்களால் அமைந்த ஆபரணங்களைப் பூண்ட தெய்வப் பெண் போன்ற தமயந்தி, நித்திலத்தின் பொன் தோடு - முத்துக்கள் பதிப்பிக்கப் பெற்ற தனது பொன்னாலான தோடு என்னுங் காதணி, நீல மணி தோடு ஆக - நீல இரத்தினங்கள் பதித்த தோடு போல நிறம் மாறும்படி, மை தடம் கண் செல்ல - அவளது மை எழுதப் பெற்ற அகன்ற கண்கள் அத்தோடுகள் அளவும் நீண்டு விளங்கவும், வயம் வேந்தர் - அங்கு வந்துள்ள (வேட்கையுடைய) அரசர்களின், சித்தம் - மனம், மருங்கே வர - அவளைத் தொடர்ந்து அருகே வரவும், வண்டின் பந்தர் கீழ் - வண்டுகள் ஒரு பந்தல் அமைத்தாற் போலப் பரந்து அவளுக்கு மேலே சூழ்ந்து தொட்டர அதன் கீழாக, வந்தாள் - அந்தச் சுயம்வர மண்டபத்தில் நடந்து வருவாளாயினள்.

தமயந்தி கண்கள் அவள் காதுகள் வரை நீண்டு இருந்தனவால் அக்கண்களின் கருநிறம் பாய, அவள் காதுகளில் அணிந்திருந்த வெண்ணிற முத்துத்தோடுகள் நீல ரத்தினங்கள் பதித்த தோடுகள் போல நிறம் மாறின என்பதாம்; ஒப்பு: 'மையரி நெடுங்கணேக்கம் படுதலுங் கருகி வந்து, கைபுகிற் சிவந்து காட்டுங் கந்துகம் பலவுங் கண்டார்'; (கம்ப. பால. மிதிலைக்: 16). அவள் கண்கள் காது வரையில் நீண்டிருந்தமை; 'வார்குழைமே லோடு நெடுங்கண்' (130) மேலும், 165, 167 செய்யுள்களையுங் காண்க;

'குழையொன் றிரண்டு விழியணங்கே' (தனிப்பாடல்) என்றமை யும ஒப்பு நோக்குக. வய வேந்தர் சித்தம் மருங்கே வர : அங்குச் சுயம்வரம் நிமித்தம் வந்திருந்த மன்னர் தம் மனங்கள் அவள் அருகே ஆசையாற் சென்றன என்பதாம் ; வயம் - ஆசை ; திருச்சிற் : 383. வண்டின் பந்தர்க் கிழ் வந்தாள் : வண்டுகள் தமயந்தியின் கூந்த லின் நறுமணத்தையும், பூசிய கலவைச் சாந்தின் நறுமணத்தையும அணிந்த மலர்மாலையின் நறுமணத்தையும், தேனையும் உண்ண விரும்பி அவளுக்கு மேலே ஒரு பந்தல் விரித்தாற் போலத் திரண்டு தொடர்ந்து வந்தன என்க. பந்தர் - பந்தல் என்பதன் போலி. கேழ் - ஒளி அல்லது நிறம் ; (பிங்). அணங்கு : தன்னைக் கண்ட ஆடவர் மனத்தைத் தன் அழகால் வருத்தும் ஒரு தெய்வப் பெண் போன்றவள் என்பதும் ஆம்.

பி - ம். 2. செவ்வி வயவேந்தர். 3. வேய்ந்த பந்தர். (114)

128. பேதை மடமயிலைச் சூழும் பிணைமான்போல்
கோதை மடமானைக் கொண்டணைந்த—மாதர்
மருங்கின் வெளிவழியே மன்னவர்கண் புக்கு
நெருங்கினவே மேன்மே னிறைந்து.

பேதை மட மயிலை - இளமையான ஓர் அழகிய பெண் மயிலை, சூழும் பிணை மான் போல் - சூழ்ந்து வரும் பெண் மான்களைப்போல, கோதை மட மானை - மாலை அணிந்த அழகிய மான்போன்ற தமயந் தியை, கொண்டு அணைந்த - அங்கு அழைத்துக் கொண்டு வந்த, மாதர் - பெண்களின், மருங்குல் வெளி வழியே - இடைகளின் நடுவே தோன்றிய வெற்றிடங்களின் வழிகளின் ஊடே, மன்னவர் கண் புக்கு - அங்குக் கூடியிருந்த அரசர்களின் கண்கள் புகுந்து, மேல் மேல் நிறைந்து - மேன்மேலும் அதிகமாகத் தொடர்ந்து நிறைய வந்து, புகுந்து - அவ்விடை வழிகளிலே புகுந்து, நெருங்கின - நெருங்கி மொய்ப்பன ஆயின. ஏ : அசை.

மயில் தமயந்திக்கும், பிணை மான்கள் அவளை அழைத்துக் கொண்டு சூழ்ந்து வந்த மகளிர்க்கும் உவமைகள். தமயந்தியைச் சூழ்ந்து மகளிர் நெருங்கி வந்தமையால், அவளைக் காண வேறு இடம் பெறாமல் அரசர்களின் கண்கள் அங்கு உலாவி, அம்மகளிர் ஒடுங்கிய இடைகளின் இடையே தென்பட்ட சிறு இடைவெளித் துவாரங்களின் ஊடே அவளை நோக்க மேன்மேலும் அங்கு நெருங் கிப் புக்கன என்பதாம். இது, கவிச்சக்கரவர்த்தி தெய்வப்புலமை ஆழ்வார் ஸ்ரீ கம்பநாடர்,

"கருங்குழற் பாரம் வார்கொள் கனமுலை கலுகு முல்குல்
நெருங்கின மறைப்ப வான்றோர் நீக்கிடம் பெறுது விம்மும்
பெருந்தடங் கண்ணி காணும் பேரெழி லாசை தூண்ட
மருங்குலின் வெளிக ளூடே வள்ளலை நோக்கு கின்றார்."

(கம்ப. பால. உலாவியற் : 17) என்று அருளியதைக் கருத்திற் கொண்டு கூறியதாகும். மடம் - அழகு ; (சிலப். 17 : உரைப்பாட்டு மடை.)

பி - ம். 2. கொண்டீனந்தார், கொண்டீனந்து.
3. மருங்குல் வெளிவழியே.
4. நெருங்கின மேன்மே. மேன்மே னிரைத்து. (115)

129. மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

மின் நிறத்து - மின்னல் போன்ற (உடலின்) ஒளியையும், செய்ய தாள் - சிவந்த பாதங்களையும், வெள்ளை சிறை - வெண்மையான சிறகுகளையுமுடைய, அன்னம் - ஓர் அன்னப்பறவை, செம் கமல பொய்கை வாய் போவதே போன்று - செந்தாமரை மலர்கள் நிறைந்த ஒரு நீரோடையின் இடத்து நீந்திப் போகின்றதே போல, மன்னர் விழி தாமரை பூத்த - அங்கு வந்து கூடியிருந்த அரசர்களின் கண் களாகிய தாமரைப் பூக்கள் மலர்ந்து விளங்கிய, மண்டபத்தே - அந்தச் சுயம்வர மண்டபத்தினிடத்திலே, பொன்னின் மட பாவை - பொன்னால் ஆன அழகிய ஒரு பதுமை போன்ற தமயந்தி, போய் புக்காள் - போய்ப் புகுந்தாள்.

மண்டபத்தே : ஈற்று ஏகாரம் அசை. போவதே : ஈற்று ஏகாரம் தேற்றப் பொருளது. மின் நிறத்துச் செய்யதாள் வெள்ளைச் சிறை யன்னம் : இது முரண்தொடை. மடம் - அழகு ; 128. பொய்கை, மானிடராக்காது இயற்கையாய் அமைந்த நீர்நிலை ; 25 ; 95, 195. பாவை : உவமையாகு பெயர். அன்னம் பொய்கையிற் சென்றது என்ற உவமைக்கு ஏற்ப அந்தச் சுயம்வர மண்டபத்தை ஒரு பொய்கை யாகவும், மன்னர்களின் விழிகளை அங்கு நிறைந்து மலர்ந்து விளங்கிய தாமரை மலர்களாகவும், உவமிக்கப் பெற்றது

எனப் பூர்ண உவமையர்க்கிக் கொள்க ; ஒப்பு :-' பொய்கையங் கமலக் காணிற் பொலிவதோ ரன்ன மென்ன ' (கம்ப. பால. எழுச்சிப் : 64.) விழித்தாமரை - உபமானம் உபமேயப் பொருளில் வந்து சிறப் பெய்தியது.

பி - ம். 2. பொன்னின் திருப்பாவை. 3. சிறையன்னஞ் சேதாம்பல். 4. புக்கதே போன்று. (116)

130. வடங்கொள் வனமுலையாள் வார்குழைமே லோடும்
நெடுங்கட் கடைபார்த்து நின்ருன்—இடங்கண்டு
பூவாளி வேந்தன்றன் பொன்னவம் பின்னேயிட்
டேவாளி நாணின்மே லிட்டு.

பூ வாளி வேந்தன் - பூக்களே அம்புகளாகக் கொண்ட காம ராஜனை மன்மதன், தன் பொன் ஆவம் பின்னே இட்டு - தனது அழகிய அம்புப் புட்டிலைத் தன் முதுகின் புறத்தே அணிந்து, ஏ வாளி நாணின் மேல் இட்டு - தாண்டும் மலர் அம்புகளே வண்டு களாகிய தன் நாண்கயிற்றின் மீது பூட்டி, வடம் கொள் வன முலை யாள் - மணி வடங்கள் பூண்ட அழகிய தனங்களையுடைய தமயந்தி யின், வார் குழை மேல் ஓடும் - நீண்ட குழையென்னும் காதணிகளின் மீது ஓடிச் சேரும், நெடும் கண் கடை பார்த்து - நீண்ட கண்களின் கடைசெல்லும் இடத்தை நோக்கி, இடம் கண்டு - அக்கடை விழி நோக்கும் அங்குள்ள அரசர் இடத்தை எதிர்நோக்கி, நின்ருன் - (அங்கு) அம்புகளைத் தூண்டச் சமயம் பார்த்து நின்ருன்.

பூவாளி வேந்தன், ஏவாளி : இவற்றின் உரைகளை (37) இல் காண்க. வார் குழைமே லோடு நெடுங்கண் : இது முன், ' நித்திலத் தின் பொற்ருடுநீ ல மணித்தோடாக மைத்தடங்கண் செல்ல ' (127) என்ற கற்பனை நயத்தைத் தழுவி வந்ததாகும் ; 165, 167 செய்யுள் களையும் நோக்குக. பொன்னவம் : பொன் - அழகு ; (பிங்); பொன்னால் ஆகிய அம்புப் புட்டிலும் ஆம் ; ஆவம் - அம்புப் புட்டில் ; 141 ; " தாடகை தன், மெய்யாவம் நிகரென்ன வெஞ்சரத்தா லழுத்திய பின் " ; (வி. பா. பன்னிரண்டாம் போர்ச். : 1.)

பி - ம். 1. வடங்கொள் வனமுலைமேல் வார்குழைமே லோடு.
2. நெடுங்கண் கடைபரந்து நின்ருன். (117)

தோழி தமயந்திக்கு, அங்கு வந்திருந்த அரசர்கள் ஒவ்வொருவரையுங் குறிப்பிட்டுரைத்தல்

131. மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து.

இயல் அணங்கு - திறமை வாய்ந்த ஒரு பெண், தேர் வேந்தர் தம்மை தெரிந்து - அங்கு வந்திருந்த தேரையுடைய அரசர்கள் தம் விருத்தாந்தங்களை அறிந்து கொண்டு, மன்னர் - அந்த அரசர்களில் ஒவ்வொருவருடைய, குலமும் - வம்சம் அல்லது குடிப்பிறப்பும், பெயரும் - டையரும், வளநாடும் - ஆளும் செழு நாடும், இன்ன பரிசு என்று - இன்ன இன்ன தன்மையது என்று, தார் வேந்தன் பெற்ற தனி கொடிக்கு - மாலை அணிந்த பீமராஜன் பெற்ற ஒப்பற்ற பூங்கொடி போன்ற அத்தமயந்திக்கு, முன் நின்று - எதிரில் நின்று, காட்டினாள் - குறிப்பிட்டுக் காட்டிச் சொன்னாள்.

இயலணங்கு : வடமொழி மகாபாரதம், நளோபாக்யானத்திலும், தமிழ் நைடதத்திலும் கூறியுள்ளபடி, கலிமகள் என்றும் கொள்ளலாம். அவ்வாறு கொண்டால், பின், 'காவலரைத் தன்சேடி காட்ட' (147) என்று வந்துள்ளமையால், அவ்வியலணங்காகிய கலிமகள், தமயந்திக்கு அருள் செய்யும் பொருட்டு, அவள் சேடியருள் ஒருத்தி வடிவந்தாங்கி, அங்கு வந்து இருந்தாள் எனக்கொள்ளற் பாலதாம். முன்னின்று - ஒவ்வொரு அரசர் முன்னும் சென்று நின்று என்றலும் ஆம்.

பி - ம். 1. மன்னர் பெயருங் குலமும். 2. இன்ன படியென் றெடுத்துரைத்த.
3. காட்டினாள், சாற்றினாள். (118)

சோழ மன்னன்

132. பொன்னி யமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவுந் திருநாடன்—பொன்னின்
சுணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழமரிற் றுன்னூர்
கணங்கவிழ்ந்த வேலனிவன் காண்.

'பொன்னின் - பொன்னிறம் போன்று, சுணங்கு அவிழ்ந்த - தேமல் பரவி விளங்கும், பூண் முலையாய் - ஆபரணங்களை அணிந்துள்ள தனங்களையுடைய தமயந்தியே! சூழ் அமரில் -

தன்னைச் சூழ்ந்த போரினிடத்து, துன்னர் - பகைவர்களின், கணம் - கூட்டம், கவிழ்ந்த - குப்புற வீழ்ந்ததற்குக் காரணமாய் நின்ற, வேலன் இவன் - வேல் ஏந்திய இம்மன்னன், பொன்னி அமுத புது கொழுந்து - காவிரி நதியின் தேவாமிருதத்திற்கு ஒப்பான புது வெள்ளத்தின் நுனி, பூம் கமுகின் சென்னி தடவும் - பூக்களோடு விளங்கும் பாக்கு மரங்களின் உச்சியைத் தடவிச் செல்லும்படியான, திருநாடன் - நீர்வள நிலவளச் செல்வச் சிறப்பு மிக்க அழகிய சோழ நாட்டு மன்னன்,' காண் : முன்னிலை அசை.

" தண்ணீருங் காவிரியே, தார் வேந்தன் சோழனே, மண்ணு வதுஞ் சோழ மண்டலமே " (தனிப்பாடல்) என்று ஔவைப்பிராட்டி யார் அருளியபடி நீர் நிலவளங்களுக்குக் காரணமான தெய்வப் பொன்னி யென்னும் காவிரி நதியினுடையவும், அந்நாட்டை ஆண்ட மன்னனை சோழனுடையவுமான சிறப்புக்களை நோக்கி அம் மன்னனை முன் எடுத்துக் கூறினர் நம் கவிஞர் பெருமான் புகழேந்தியார் என்க. மேலும், அச் சோணாடே ஆசிரியர் பிறந்து வாழ்ந்த நாடாகலின், ஈன்ற தாயும், தான் பிறந்து வளர்ந்து வந்த நாடும் துறக்கத்தினும் சிறந்ததாகக் கருதும் அன்பும் உரிமையு மேலிட்டு, சோணாட்டை முற்கூறினர் எனலும் ஒன்றும். இனி தொண்டை மண்டலமே, ஆசிரியர் புகழேந்தியாரின் பிறந்தநாடு எனக்கொண்டாலும், அத்தொண்டை மண்டலமும் சோணாட்டின் ஒரு பகுதியாகவே அக்காலத்திருந்தமை அறியப்பெறுவதால், அதுவும் சோழநாடே என்க.

பி - ம். 4. கணங்கவிழ்த்த. (119)

பாண்டிய மன்னன்

133. போர்வாய் வடிவேலாற் போழப் படாதோரும்
சூர்வாய் மதரிக்கட் டோகாய்கேள் — பார்வாய்ப்
பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற் செண்டால்
திரித்தகோ விங்கிருந்த சேய்.

' போர் வாய் - போர்க்களத்தில், வடி வேலால் - கூர்மையான வேலாயுதத்தால், போழ படாதோரும் - பிளக்கப்படாத வீரர்களும், சூர் வாய் - கண்டு அச்சங்கொள்ளுவதற்கு இடமாய் அமைந்த, மதர் அரி கண் - செழித்து விளங்கும் செவ்வரி படர்ந்த கண்களை யுடைய, தோகாய் - (மயில் போன்ற) பெண்ணே ! கேள் - யான் கூறும் இதனைக் கேட்பாயாக ! இங்கு இருந்த சேய் - இங்கு வீற்றிருக்கும்

இந்த அரசகுமாரன், பார் வாய் - பூமியினிடத்து, பருத்தது ஓர் மால் வரையை - பெரியதான ஒப்பற்ற மேரு மலையை, பண்டு ஒருகால் முன்னொரு காலத்தில், செண்டால் - தன் செண்டு என்னும் ஓர் ஆயுதத்தால், திரித்த கோ - சுழலுமாறு அடித்த (பாண்டிய) அரசனுவன்.'

இது பாண்டிய மன்னனைக் குறித்துக் கூறியது. உக்கிர குமார பாண்டியன் என்னும் மன்னன், முன், தனது செண்டு என்னும் ஆயுதத்தால் மேரு மலையைச் சுழல அடித்து, அதுவரை யுள்ள வடநாடுகளைத் தான் வென்று கொண்டதற்கு அடையாள மாக, அம்மேரு வெற்பின்மீது தன் மீனக் கொடியையும் பொறித்து வந்தான் எனத் திருவிளையாடற்புராணம் கூறுவது காணலாம். அப்புராணச் செய்தியைச் சுயம்வரத்திற்கு வந்திருந்த பாண்டியன் மேலேற்றிக் கூறியதாகும். இனி, இது கரிகாலன் என்னும் சோழ மன்னன் திக்விஜயமாக வடநாடு சென்று வென்றி கொண்டு பெரிய இமயமலையில் தன் செண்டு என்னும் ஆயுதத்தால் தன் புலிக் கொடியைப் பொறித்து வந்த செய்தியைக் கூறி, மீண்டும் அச்சோழ மன்னனையே சிறப்பித்தது எனக் கொண்டாரும் உளர்; அவ்வாறு கொண்டதிற்கு ஆசிரியர் சோழ மன்னன்பாற் கொண்ட அபிமானம் அல்லது பெருமதிப்பினால் இரு பாக்களால் சிறப்பித்தார் என்பர். ஆனால், இக்கொள்கை அத்துணைச் சிறப்பினதன்று என்பதும், கூறியது கூறல் என்னும் குற்றத்திற் கிடமாகுமென்பதும் ஆம். யாம் அறிந்த அளவில் பின், 'ஆழிவடிம்பலம்ப' என்ற பாடலும் ஐயத்திற்கு இடமாய் இருத்தலாலும், (அது பின்னர் விளங்கப் பெறும்) இச்செய்யுள் பாண்டியனையே குறிப்பது என்பது தெளி வாகும். செண்டு என்ற படையின் வரலாறுகளை, மகாமகோபாத் யாய டாக்டர், ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்கள் செண்டலங்காரர் என்ற தலைப்பில், நினைவு மஞ்சரி முதற்பாகத்தில் விரிவாக எழுதி வெளி யிட்டுள்ளமை காண்க.

பி - ம். 3. பண்டொருகைச் செண்டால். (120)

சேர மன்னன்

134. வென்றி நிலமடந்தை மென்முலைமேல் வெண்டுகில்போல்
குன்றருவி பாயுங் குடநாடன்—நின்றபுகழ்
மாதே யிவன்கண்டாய் மானத் தனிக்கொடியின்
மீதே சிலையுயர்த்த வேந்து.

'நின்ற புகழ் - நிலைபெற்ற புகழோடு கூடிய, மாதே-பெண்ணே! இவன் - இவ்வேந்தன், வென்றி நில மடந்தை - வெற்றிக்குரிய பூமியாகிய மாதின், மெல் முலைமேல் - மென்மையான தனங்களின் மீது, வெள் துகில் போல் வெண்மையான ஆடை போல, குன்று அருவி பாயும் - மலைகளிலிருந்து அருவிகள் பாயப்பெற்ற, குட நாடன் - குடநாட்டுக்கு உரியவனும், மான தனி கொடியின் மீது - தனது பெருமைக்குரிய ஒப்பற்ற கொடியின் மீது, சிலை உயர்த்த - வில் உருவம் ஏற்றிவைத்த, வேந்து - அரசனான சேரன் ஆவன்.' மீதே : ஏ : ஈற்றசை. கண்டாய் : முன்னிலை அசை.

நின்ற புகழ் - என்றும் அழியாது நிலை பெற்றிருக்கும் புகழ்; தமயந்தியின் கற்பின் சிறப்பும் பெண்மைக்கு ஏற்ற குணம் அழகு முதலியவற்றுல் அடைந்துள்ள புகழுமாம். குன்றுகளின் மீது தவழ்ந்து தோன்றும் அருவிக்கு மகளிர் தனங்களின்மீது போர்த்த உத்தரீயம்: கம்ப. சுந்தர. 421. சேரன் மலைநாடன் ஆதலால், மலையின் சிறப்பால் அவனைக் குறிப்பிட்டது என்க. கொடியின் மீதே சிலை யுயர்த்தது; இது சேரனின் வில்கொடியைக் குறித்தது; இனி, சிலைமீது கொடியுயர்த்தது என்று மாற்றி, சேரன் இமயத்தில் வில் பொறித்த செயலைக் குறித்ததாகவுங் கொள்ளலாம்.

பி - ம். 3 வானத் தனிக்கொடி.

இதன் பின்,

ஆழி வடிம்பலம்ப நின்ருனு மன்ருருகால்
ஏழிசைநூற் சங்கத் திருந்தானும் - நீள்விசும்பின்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்ருனுங் கண்டாயிச் சேய்.

என்றொரு பாடல், பல அச்சுப் பிரதிகளிலும், சில ஏடுகளிலும் காணப் பெறுகின்றது. இது பாண்டியனைக் குறிப்பது என்றும், வடமதுரை ஆண்ட யதுகுல மன்னனைக் குறிப்பது என்றும், பிற வாறும் உரை கூறினரும் உளர். இப்பாடல், பாண்டியனைக் குறிப்பிடு வதானுல், கூறியது கூறல் என்னும் குற்றத்திற்கு இடமாவதோடு, இராமாயண காலத்திற்கு முன்னதாக நிகழ்ந்த இந்நளசரிதத்தில், அவ்விராமாயண காலத்திற்குப் பெரிதும் பிற்பட்டு நிகழ்ந்த பாரதப் போர்க்கு உதவி செய்ததாக உள்ள பாண்டியனை இங்குச் சிறப்பிப் பதால், சரிதத்தின் காலத்தொடர்புக்கு முற்றும் முரண்படுவதா

கின்றது. ஆதலின், இப்பாடல் பாண்டிய மன்னன் மீது அபிமன்னங் காரணமாகவோ, வேறு எக்காரணங்கொண்டோ வேறு ஒருவரால் சரித காலங்கழ்ச்சி கருதாது, பின் இயற்றப் பெற்று, இந்நூலில் இடைச் செருகலாகச் சேர்க்கப் பெற்றது என்பது தெள்ளிதில் விளங்கும். ஆதலின், இது, பாட வரிசையில் தொடர் எண் கொடுத்துச் சேர்க்கப்பெறுது விடப்பெற்றது. (121)

குரு நாட்டரசன்

135. தெரிவை யிவள்கண்டாய் செங்கழுநீர் மொட்டை
அரவின் பசுந்தலையென் றஞ்சி—இரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புட் டாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன்.

'தெரிவை - பெண்ணே! இவன் - இந்த அரசன், செம் கழுநீர் மொட்டை-செங்கழுநீர் அரும்பை, அரவின் பசும் தலை என்று அஞ்சி-பாம்பின் பசுமை நிறமான தலை என்று எண்ணிப் பயந்து, இரவு எல்லாம் - இரா முழுவதும், பிள்ளை குருகு இரங்க - நாரையின் இளங் குஞ்சுகள் வருந்தி அழ, பேதை புள், (தாயாகிய) பெண் நாரைப் பறவை, (அவ்விரவுப் பொழுது முழுவதும் அவற்றின் அருகே இருந்து) தாலாட்டும் - தாலாட்டி அதன் அச்சத்தை மாற்றிக் கொண்டிருக்கும், வள்ளை குரு நாடர் மன் - வள்ளைக் கொடிகள் படர்ந்திருக்கின்ற (மருதவளம் பெருகிய) குரு நாட்டினருடைய அரசனுவன்.' கண்டாய் : முன்னிலை அசை.

இரங்குதல் - அழுதல்; (திவா.). குழந்தை அழுகையை நிறுத்தித் தூங்கச் செய்வதற்குத் தாய் அதன் தொட்டிலின் அருகேயிருந்து தாலாட்டும் மாண்டத்தாயின் செயலை அந்நாரையின் மேலேற்றிக் கூறப் பெற்றது. இது தற்குறிப்பேற்ற அணி. தாலாட்டு என்பது, தாராட்டு எனவும் வரும்.

ஒப்பு : சேலுண்ட செங்க ணரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளின்ப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா ராட்டும் பண்ணை.

(கம்ப. பால. நாட்டுப் : 13.)

பி - ம். 1. தெரியி லிவன், தெரிய லிவன்.
3. பேதைப்புட் டாராட்டும். (122)

மத்திர நாட்டரசன்

136. தேமருதார்க் காளை யிவன்கண்டாய் செம்மலர்மேல்
காமருசங் கீன்ற கதிர்முத்தைத்—தாமரைதன்
பத்திரத்தா லேற்கும் படுகர்ப் பழனஞ்சூழ்
மத்திரத்தார் கோமான் மகன்.

'தே மரு தார் காளை இவன் - தேன் பொருந்திய மாலை அணிந் துள்ள இடபம் போன்ற இவன், செம் மலர் மேல் - செந்தாமரை மலர்களின் மீது, காமரு - அழகிய, சங்கு ஈன்ற - சங்குகள் பெற்ற, கதிர் முத்தை - ஒளி வீசும் முத்துக்களை, தாமரை - தாமரைக் கொடி கள், தன் பத்திரத்தால் ஏற்கும் - தம் இலைகளால் தாங்கிக் கொண்டு நிற்கும், படுகர் பழனம் சூழ் - படுகைகளையுடைய வயல் கள் சூழப்பெற்ற, மத்திரத்தார் - மத்திரதேசத்தாருடைய, கோமான் மகன் - அரசனது குமாரன் ஆவன்.' கண்டாய் : முன்னிலை அசை.

காளை-எருது. காளை போன்ற பெருமிதமும் வலிமையும் உடை யவன். பத்திரம்-பத்ரம் என்ற வடமொழித் திரிபு. படுகர்-படுகை என்பதன் போலி. படுகை - ஆற்றோரமாய் உள்ள செழுமைமிக்க நிலம். காமர் என்ற சொல் உகரச் சாரியை பெற்றுக் காமரு என்றுயிற்று. இச்செய்யுள், மருதத்திணை வளங்கூறியதாகும்.

பி-ம். 4. மத்திரத்தார் கோமானிம் மன். (123)

மச்ச நாட்டரசன்

137. அஞ்சாயன் மானே யிவன்கண்டா யாலிவாய்
வெஞ்சாறு பாய விளைந்தெழுந்த—செஞ்சாலிப்
பச்சைத்தாண் மேதிக் கடைவாயிற் பாலொழுகும்
மச்சத்தார் கோமான் மகன்.

'அம் சாயல் மானே - அழகிய மேனி அல்லது ஒளியையுடைய மான் போன்றவளே! இவன் - இவள், ஆலி வாய் - கரும்பாலி யினிடத்து, வெம் சாறு - (பெருகி ஓடும்) விரும்பத்தக்க (மதுரமான) கருப்பஞ் சாறு, பாய - பாய்வதால், விளைந்து எழுந்த - வளர்ந்து ஓங்கிய, செம் சாலி - சிவப்புச் சம்பாப்பயிரின், பச்சை தாள் - பசுமை யான தாள்களின், பால் - பசுங்கதிர்களின் பால், மேதி கடை வாயில் - எருமைகள் (கடித்து மெல்லுவதால்) அவற்றின் கடைவாய்களி லின்றும், ஒழுகும் - வழிந்து கீழே ஒழுகும்படியான வளமிக்க, மச்சத் தார் கோமான் மகன் - மச்ச நாட்டவரின் அரச குமாரன் ஆவன்.'

கரும்பு ஆலைகளில் வழிந்து வெளியே ஓடிய இனிய கருப்பஞ் சாறு அருகேயுள்ள வயல்களில் பாய, அவ்வயல்களிற் பயரிடப் படும் சிவப்புக் சம்பாப் பயிர்களை அங்குள்ள எருமைகள் கறித்து மெல்ல, அவற்றின் இரு கடைவாய்களின் வழியே அச்சம்பாப் பயிர்களின் முற்றாத இளங்கதிர்களிலிருந்து பால் வழிந்தோடும் வளச் சிறப்புடையது மச்சநாடு என்பதாம். எருமை, கரும்பு, சம்பாப் பயிர் முதலியன, நல்ல நீர்வள நிலவளமிக்க மருத நிலத்திற்கு உரிய கருப் பொருள்கள்.

பி - ம். 3. பாகொழுகும். (124)

அவந்தி நாட்டரசன்

138. வண்ணக் குவளை மலர்வெளவி வண்டெடுத்த
பண்ணிற் செவிவைத்துப் பைங்குவளை—உண்ணுந்
தருங்கடா நிற்கு மவந்திநா டாளும்
இருங்கடா யானை இவன்.

'இவன் - இந்த அரசன், வண்டு-வண்டுகள், வண்ண குவளை மலர் வவ்வி - அழகிய நீலோற்பல மலர்களைப்பற்றி, அவற்றில் உள்ள தேனைப்பருகி, எடுத்த பண்ணில் - களிப்பினால் ஒங்கிப்பாடிய பாட்டில், செவி வைத்து - தம் காதுகளை வைத்து உற்றுக்கேட்டு, (அவ்விசையில் ஈடுபட்டனவால்), அ பைம் குவளை உண்ணுது - அந்தப் பசுமையான நீலமலர்களை மென்று தின்னுமல், அரும் கடா-அரிய எருமைக்கடாக்கள், நிற்கும்-அசைவற்று நிற்கும், அவந்தி நாடு ஆளும் - (இசைச் சிறப்பும், நிலவளமும் வாய்ந்த) அவந்தி தேசத்தை ஆட்சி புரியும், இரும் கடா யானை - பெரும் மதயானை போன்றவன் ஆவன்.'

வண்டுகள் ஒலித்த இசையிற் செவி வைத்து அதில் ஈடு பட்ட எருமைக்கடாக்கள், அந்நீலோற்பல மலர்களை மென்று தின்னுமல், அங்கு அசைவற்று நிற்கும் இயல்புடையன; விலங்குகள் இசைக்கு ஈடுபடுதல்; 'மருண்டு மான்கணங்கள் மேய்கை மறந்து மேய்ந்த புல்லுங் கடைவாய் வழி சோர, இரண்டு பாடுந் துலுங்காப் புடைபெயரா வெழுது சித்திரங்கள் போல நின்றனவே;' (பெரியாழ். 3 : 6). எருமைக் கடாக்களே இசையில் இவ்வாறு ஈடுபட்டன வென்பதால், அந்நாட்டு மக்களின் இசை யுணர்வின் சிறப்பு உணர வைத்ததாகும். கடாயானை ஆண்யானை எனப் பொருள் கொண்டார் பலர். யானையைக் கடா என்ற சொல்லால் வழங்குவதும் மரபு அன்று; கடாம் என்பதை

சிறு குறைந்து கடா என நின்றது என்பதே பொருந்தும். இவ் வாறு கொள்வதில் நயம் மிளிர்வதோடு, 'கடாஅக்களிற்றின் மேற் கட் படாம்,' (குறள். 1087) என்றவிடத்து 'கடாஅக் களிறு' என் பதற்கு ஆசிரியர் பரிமேலழகர் மதக்களிறு என்றே பொருள் கூறியுள்ளமையும், 'கந்துநீத் துழிதருங் கடாஅ யானை' (மதுரைக். 383) என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியரும் கடாத்தையுடைய யானை என்றே உரை எழுதியுள்ளமையும் நோக்குக.

பி-ம். 1. மலர்வாவி வண்டெடுத்த. 2. பண்ணிற் செவிமடுத்தப். (125)

பாஞ்சால மன்னன்

139. விடக்கதிர்வேற் காளை யிவன்கண்டாய் மீனின்
தொடக்கொழியப் போய்நிமிர்ந்த தூண்டின்—மடற்கமுகின்
செந்தோடு பீறத்தேன் செந்நெற் பசுந்தோட்டில்
வந்தோடு பாஞ்சாலர் மன்.

'விட கதிர் வேல் - விஷம் ஊட்டப் பெற்றுச் சுடர் வீசுகின்ற வேலையுடைய, காளை இவன்-இடபம் போன்ற இந்த ஆண் மகன், மீனின் தொடக்கு ஒழிய - மீன் வந்து மாட்டிக் கொள்ள வைத்த கொக்கி அல்லது முள் அது பொருத்தப்பட்ட நிலையில் இருந்து விலக, போய் நிமிர்ந்த - அதனால் மேலே நிமிர்ந்து இளம்பி எழுந்த, தூண்டில்-மீன் பிடிக்கும்கோல், கமுகின் - அந்நீர்நிலையை யடுத்த தோட்டத்திலுள்ள (மட்டைகள் நிறைந்த) பாக்குமரத்தின், செம் தோடு பீற - சிவந்த பூக்கள் உள்ள பாளையைப் பிளக்க, அதனால், தேன் - (அப்பாளையில் உள்ள பூக்களின்), தேன், செம் நெல் பசும் தோட்டில் - அருகே உள்ள வயலின் சிவப்புச் சம்பாப்பயிர்களின் தாள்களில், வந்து ஓடும் - வந்து படிந்து ஓடும்படியான (வளம் பொருந்திய) பாஞ்சாலர்மன் - பாஞ்சால நாட்டினர் அரசனுவான்.' கண்டாய்: முன்னிலை அசை.

வேலுக்கு விடம் ஊட்டுவது; (கம்ப. பால. வரைக்காட்சிப்; 36; உண்டாட்டுப்: 11; கோலங்காண்: 37; பு. வெ. 262.) மீன் பிடிப்போர் தம் தூண்டில் நுனியிலுள்ள கொக்கி அல்லது முள், நீரில் அது மாட்டி வைத்திருந்த பூட்டினின்றும் விலகிப்போகவே, அதனால் அந்தத் தூண்டிற் கோல் விசையாய் மேற்கிளம்பி, அருகே இருந்த கமுகம் பாளையிற்ருக்கி அதனைப் பீற, அது உடைந்து அதனுள் தொடுக்கப்பட்டவைபோல் இருந்த பூக்களி னின்றும் தேன் வழிந்து பாய்ந்து ஓடி, வயலில் இருந்த செந்நெற்

பயிரின் தாள்களில் புகுந்து பாயும் வளம் பெறும் பாஞ்சால நாடு என்க.

பி - ம். 2. உடற்கிழிய. 3. செங்நெற் கதிரோடு ; செங்நெற் கருந்தோட்டின் ; பீறித்தேன் ; செந்தோடு தேன் கழியில் வீழ்ந்த. (126)

கோசல மன்னன்

140. அன்னந் துயிலெழுப்ப வந்தா மரைவயலில்
செந்நெ லரிவார் சினையாமை—வன்முதுகில்
கூனிரும்பு தீட்டுங் குலக்கோ சலநாடன்
தேனிருந்த சொல்லாயிச் சேய்.

'தேன் இருந்த சொல்லாய் - தேன் கலந்திருந்தது போன்ற இனிய சொற்களையுடைய தமயந்தியே ! இ சேய் - இவ்வரச குமாரன், அம் தாமரை வயலில் - அழகிய தாமரைகள் உள்ள வயல்களில் வாழும், அன்னம் - அன்னப் புட்கள், துயில் எழுப்ப - பயிரிடும் மள்ளர்களைத் துயிலினின்றும் தம்மொலியால் எழுப்ப, செம் நெல் அரிவார் - சிவந்த சம்பாப் பயிர்களை வந்து அறுவடை செய்யும் அம் மள்ளர்கள், சினை ஆமை வன் முதுகில் - அங்குக் கருவுற்றிருந்த ஆமைகளின் வலிய முதுகுகளின்மீது, கூன் இரும்பு தீட்டும் - வளைந்த தம் அரிவாள்களைத் தீட்டிக்கொள்ளும், குல கோசல நாடன் - உயர்வுமிக்க கோசல நாட்டையுடையவனவன்.'

ஆமை முதுகில் கூனிரும்பு தீட்டுதல் ; (புறநா. 379 : 3-5). கூனிரும்பு - வளைந்த கருக்கரிவாள் ; (நைடதம் ; நாட்டுப். 10) ; இது கூனிற்குயம் எனவும் வழங்கும் ; (பொருந. 242. உரை ; சிலப். 16 : 30) குயம் - அரிவாள். சினையாமை - பருத்த ஆமையும் ஆம்.

பி - ம். 1. கயிலுணர. 3. நாட்டுத். 4. தேன்விரும்பு சொல்லாயிச் சேய் ; தேனிருந்த தாரானிச் சேய்.

மகத நாட்டரசன்

141. புண்டரிகந் தீயெரிவ போல்விரியப் பூம்புகைபோல்
வண்டிரியுந் தெண்ணீர் மகதர்கோன்—எண்டிசையில்
போர்வேந்தர் கண்டறியாப் பொன்னுலகம் பின்னுடைய
தேர்வேந்தன் கண்டாயிச் சேய்.

'தேர்வேந்தன் இ சேய் - தேரையுடைய இந்த அரசகுமாரன், எண் திசையில் - எட்டுத் திக்குக்களிலும் உள்ள, போர் வேந்தர் -

போரில் வல்லவரான அரசர்கள், கண்டு அறியா - பார்த்தறியாத, பொன் ஆவம் பின்னுடைய - பொன்னைான அல்லது அழகிய தன் அம்புப் புட்டிலைத்தன் பின்புற முதுகில் கொண்டுள்ளவனும், புண்டரிகம் - செந்தாமரைகள் மலர்கள், தீ எரிவ போல் - தீச்சுடர் கள் பற்றி எரிவன போல, விரிய - விரிந்து மலர, வண்டு - அம் மலர்களின்மீது வண்டுகள், பூம்புகை போல் இரியும் - அழகிய புகை போல கிளம்பிச் சுழன்று ஓடிக்கொண்டிருக்கும், மகதர் கோன் - மகதநாட்டவரின் அரசனும் ஆவன்.'

திசை, திக்கு என்பன செய்யுள் வழக்கில் பேதமின்றி வழங்கு வன காணலாம். போர்வேந்தர்.....பொன்னவம் பின்னுடைய என்றதால், இவன் போரிற் புறங்காட்டாத வீர வாழ்க்கையை யுடையவன் என்பதுமாம். பொன்னவம், (130). தாமரை மலர்கள் தீச்சுடர்கள் போலவும், அவற்றின் மீது வண்டுகள் சுழல்வன, அத்தீச் சுடர்களின் மீது படர்ந்து சுழன்றெழும் புகைப்படலம் போலவும் விளங்கும் தோற்றத்தன. புண்டரிகம் என்பது வெண்டாமரையே யெனினும், இனம்பற்றிச் செந்தாமரையையும் குறித்து வழங்கும். புணடரீகாக்ஷன், 'புண்டரிக மலரதன்மேல் புவனியெலாம் பூத்த வனே' (பெருமாள் திருமொழி 8 : 2.). தாமரைக்குத் தீ : 'சேரூர் சுனைத் தாமரை செந்தீ மலரும் திருவேங்கடம்' (திருவாய்மொழி. 6. 10 : 2); (கம்ப. கிட்கிந்தா. பம்பைப் : 8, உயுத்த மீட்சிப்: 85.)

அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப் - புள்ளினந்தம்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கௌவை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கிள்ளி நாடு. (முத்தொள்ளாயிரம்)

என்று செவ்வல்லி மலர்களையும் தீச்சுடர்க்கு ஒப்புக் கூறியது காண்க.

பி - ம். 2. வண்டிரியு நன்னீர் மகதையர்கோன் - எண்டிசையும்.
3. பொன்னவம் பின்னுடைய. (128)

அங்க நாட்டரசன்

142. கூன்சங்கின் பிள்ளை கொடிப்பவழக் கோடிடறித்
தேன்கழியில் வீழத் திரைக்கரத்தால்—வான்கடல்வந்
தந்தோ வெனவெடுக்கு மங்கநா டாளுடையான்
செந்தேன் மொழியாயிச் சேய்.

'செம் தேன் மொழியாய் - சிறந்த தேன் போன்ற மதுரமான சொற்களையுடைய பெண்ணே! இ சீய் - இந்த அரசிளஞ் செல்வன், கூன் சங்கின் பிள்ளை - வளைந்த சங்குகளின் குஞ்சுகள், (கடலிற் செல்லும் போது), பவழ கோடு இடறி - அங்குள்ள பவழக் கொடியின் கொம்பினால் தடுக்குற்று, தேன் கழியில் வீழ - அந்த வேகத்தால் அருகேயுள்ள தேன் நிறைந்த கடற்கரைக் கழியினிடத்து விழவும், வான் கடல் வந்து - பெரிய அக் கடல் அங்கு ஓடிவந்து, அந்தோ என திரை கரத்தால் எடுக்கும் - ஐயோ என்று வருந்தித் தன் அலைகளாகிய கைகளால் வாரி எடுத்துக்கொள்ளும் காட்சியை யுடைய, அங்க நாடு ஆள் உடையான் - நெய்தல் வளம் பொருந்திய, அங்க தேசத்தை ஆளும் உரிமையுடையவ னவன்.'

செந்தேன் - செந்நிறமான தேனும் ஆம். கடல் ஓடிவந்து சங்கின் பிள்ளையை எடுத்தது; அது தன்னிடம் பிறந்து வாழும் உரிமையாலும், சிறு பிள்ளை என்ற பரிவினாலும் என்க. தேன் கழி: நெய்தல் நிலப்பூக்களின் தேன் நிறைந்த கழி; கழி - கடலி லிருந்து தரையினுட் செல்லும் ஒடுங்கிய நீர்ப் பிரிவு. திரை கரத் திற்கு; ஒப்பு: "திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி, திரைக்கை யாலடிவருடப் பள்ளி கொள்ளுங் கருமணியைக்" (பெருமாள் திருமொழி. 1.1.); "திரைக்கை நீட்டிச் செவிலியி னூட்டினாள்" (கம்ப. அயோத். கங்கைப்: 22). இச்செய்யுள், நெய்தல் வளச் சிறப் பைக் கூறியது.

பி - ம். 4. செந்தேன்மென் சொல்லாய்தெளி. (129)

கலிங்கர் கோன்

143. வெள்வாளைக் காளைமீன் மேதிக் குலமெழுப்பக்
கள்வார்ந்த தாமரையின் காடுழக்கிப்—புள்ளோடு
வண்டிரியச் செல்லு மணிநீர்க் கலிங்கர்கோன்
தண்டெரியற் றேர்வேந்தன் ருன்.

'தண் தெரியல் தேர் வேந்தன் - குளிர்ந்த மாலையணிந்த தேரை யுடைய இந்த அரசன், வெள் வாளை மீன் காளை - வெண்ணிறமான ஆண் வாளை மீன்கள், மேதி குலம் எழுப்ப - அவை சஞ்சரிப்பதால் தாக்கி நீரில் மூழ்கிக்கிடக்கும் எருமைக் கூட்டத்தை எழுப்பி, கள் வார்ந்த தாமரையின் காடு உழக்கி - தேன் ஒழுகிய தாமரைக் காட்டைக் கலக்கி, புள் ஓடு - அங்குத் தங்கியிருந்த நீர் வாழ்பறவை

களோடு, வண்டு - வண்டுகளும், இரிய - அஞ்சி நிலைகெட்டு ஓடும் படியாக, செல்லும் - செல்கின்ற, மணி நீர் கலிங்கர் கோன் - நீலமணி போன்று தெளிந்த நீரையுடைய கலிங்க நாட்டவர் அரசனுவன்.' தான் : அசை.

எருமை, வாளை, தாமரை முதலியன மருதநிலத்து நீர் வளத் தைக் குறிப்பனவாம்; இங்கு வாளை மீன்கள் திரிவதால், அந்நீரில் அமிழ்ந்து கிடந்த எருமைகள் எழுப்பப்பட்டனவோடு, அங்குக்காடு போல அடர்ந்திருந்த தாமரைக் கொடிகள் கலக்கிக் குழப்பப் பெற்றன ; அத்தாமரையில் தங்கியிருந்த புள்ளினங்களும் வண்டு களும் அஞ்சி நிலைகெட்டோடின என நீர்வளம் சிறப்பிக்கப்பெற்ற தாகும். இனி மேதிக் குலம் எழும்பியதால் வாளைமீன் தாமரையின் காடுழகிப்.....செல்லும் மணி நீர் என இயைத்துப் பொருள் கொண்டாரும் உளர். எழுப்ப என்ற சொல் நீரில் ஆழ்ந்துகிடக்கும் இயல்புடைய எருமைகளையே வாளைகள் எழுப்பிக் தாமரைக் காடுழக் கிப் புள்ளொடு வண்டிரியச் சென்றன என்பதே சிறக்கும் ; மேலும் மேதிக் குலத்தை எழுப்பும் வலிமையும் பெருமையும் உடையன வாளைமீன்கள் என்பதனால் அந்நாட்டின் நீர்வளத்தின் சிறப்பு விளங்க வைத்தது மாகும். இனி, மணிநீர், உழக்கிச் செல்லும் எனவும் இயைக்கலும் ஒன்றும். மணி நீர் - நீலமணிபோன்ற நீர் ; 'மலர்ந்த பொய்கையுண் மணிநிறத் தெண்ணீர்' (பெரும். 1. 55 : 2) ; 'நெய்த னெடுவழி மணி நீர் வைப்பு ;' (சிறுபாண். 153). 'மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சி' (மணி. 4 : 7) என்பன நோக்குக. இச்செய்யுள் மருத நிலவளச் சிறப்பைக்கூறியது.

பி - ம். 1. தாவி விழ மேதிக் குலமஞ்சிக்.
3. கண்டிறைப்பச் செல்லுங் கய நீர்க்.
4. தண்டாளத் தார்வேந்தன். (130)

கேகயர் கோன்

144. அங்கை வரிவளையா யாழித் திரைகொணர்ந்த
செங்கண் மகரத்தைத் தீண்டிப்போய்க்—கங்கையிடைச்
சேல்குளிக்குங் கேகயர்கோன் றெவ்வாடற் கைவரைமேல்
வேல்குளிக்க நீன்ருனிவ் வேந்து.

'அம் கை வரி வளையாய் - அழகிய கைகளில் சித்திரக்கோடு கள் பல அமைந்த வளையல்களையுடைய பெண்ணே ! தெவ் ஆடல் - பகைவரை எதிர்த்துக் கொல்லவல்ல, கைவரைமேல் - யானை மீது,

வேல் குளிக்க - எதிர்த்துத் தாக்கிய தன் வேல் போய்ப் புகுந்து கொள்ள, நின்ருன் – போரில் அஞ்சாது எதிர்த்து நின்றவனை, இ வேந்து - இந்த அரசன், ஆழி திரை கொணர்ந்த - கடலின் அலைகள் உந்திக் கொண்டுவந்த, செம் கண் மகரத்தை - சிவந்த கண்களையுடைய சுருமீனை, தீண்டிட - தொட்டு (அதனல் தீட்டு அடையப் பெற்றதாகக் கருதி), சேல் - சேல் மீன், கங்கை இடை (அந்தத் தீட்டுத் தீரக்) கங்கை நதியின் இடத்தில், குளிக்கும் - குளித்துத் தன்னைப் புனிதமாக்கிக் கொள்ளும், கேகயர் கோன் - கேகய நாட்டினர் அரசனவன்.

தெவ் - பகைவருடைய; ஆடல் கைவரை எனலும் ஒன்றும்; கைவரை: யானை; இது பிற குறிப்பு: 'கைவரை யெனத் தகைய காணே' (தம்ப. பால. தாடகை: 47). யானைக்கு, கைம்மலை, நடமலை, மதமலை எனவும் பெயர்கள் உள்ளன காண்க. இனி, கை வரை என்பதற்குப் பகைவருடைய கைகளாகிய மலை எனப் பொருள் கூறினுரும் உளர்; போரில் எதிர்த்து வந்த யானையைத் தன் வேல் கொண்டு தாக்குவதே வீரத்தின் பேரெல்லை ஆகும்; 'கைவேல் களிற்றெறு போக்கி வருபவன், மேய்வேல் பறியா நகும்' (குறள். 774) என்ற வீரப் பெருமிதத்தையும் நோக்குக. மகரம் - புலால் நாற்றம் மிக வீசும் கடலில் வாழும் கொடிய சுருமீன்; அது, கடலின் திரை வழியே கங்கை நீர் வெள்ளத்தில் வந்து, அங்கிருந்த சேல் மீன் மீது பட்டுவிட்டது. அதனல், அச் சேல் மீன் தீண்டக்கூடாத ஒன்று தன்னைத் தொட்டதால் தீட்டு ஏற்பட்டதாகக் கருதித் தன்னை முன் போல் தூய்மையாக்கிக்கொள்ள அக் கங்கை நீரில் மறுபடியும் முழுகிற்று என்று, மீன் இயற்கையாய் நீரில் மூழ்கும் நிகழ்ச்சியை ஆசிரியர் சிறப்பித்தார் என்க.

பி - ம். 2. மகரத்தைத் தீண்டப் போய்க்.
3. தெவ்வர் மணிமார்பில், தெவ்வர் வருங்கை யரைமேல்; தெவ்வரிடை மார்பின்மேல்.
4. வேல்குளிப்ப வென்றனிவ் வேந்து. (131)

காந்தார வேந்தன்

145. மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேகு மன்னந் தனிக்கயிற்றில்—போநீள்
கழைக்கோ தையரேய்க்கும் காந்தார நாடன்
மழைக்கோதை மானேயிம் மன்.

'மழை கோதை மானே - மேகம் போன்ற கூந்தலையுடைய பெண்ணே! இ மன் - இவ்வேந்தன், மா நீர் நெடும் கயத்து - நீர் நிறைந்த பெரிய குளத்தில் உள்ள, வள்ளை கொடி மீது - வள்ளை என்னும் கொடியின் மேலே, ஏகும் அன்னம் - நடந்து செல்லும் அன்னப் பறவை, தனி கயிற்றில் போம் - (மேலே கட்டப்பட்ட) ஒற்றைக் கயிற்றின் மீது நடந்து செல்லும், நீள் கழை கோதையர் ஏய்க்கும் - நீண்ட மூங்கிலை நட்டு அதின் மீது ஏறிப் பலவித அரிய ஆடல்களைப் புரியும் கழைக்கூத்தாடிகள் என்னும் தொம்பர் மகளிரைப்போல (இயற்கை அழகு வாய்ந்த), காந்தார நாடன் - காந்தார நாட்டையுடையவன்'. தான் - அசை.

கழைக் கோதையர்: இங்குக் கோதை என்பது பெண் என்ற அளவில் நின்றது; கோதையர் மேலே கட்டப்பட்ட ஒரு கயிற்றின் மீது நடப்பது; ஒப்பு. 'பாடுசால் கயிற்றிற் பாய்ந்து பல்கலனெலிப்பப் போந்து, ஆடுகூத்தி யாடல் போன்ற' (சீவக. 66.); கூந்தலுக்கு மேகம்; பின், 'மாரி பொரு கூந்தன் மாதராய்' (310) என்றதுங் காண்க.

பி - ம். 2. போன. 4. மாதேயிம் மன். (132)

சிந்து நாட்டரசன்

146. அங்கை நெடுவேற்க ணாயிழையாய் வாவியின்வாய்ச்
சங்கம் புடைபெயரத் தான்கலங்கிச்—செங்கமலப்
பூச்சிந்து நாட்டேறல் பொன்விளைக்குந் தண்பணைசூழ்
மாச்சிந்து நாட்டானிம் மன்.

'அம் கை நெடு வேல் கண் - அழகிய கையில் ஏந்தும் நீண்ட வேல் போன்ற கண்களையுடைய, ஆய் இழையாய் - தேர்ந்தெடுத்த சிறந்த நகைகளை அணிந்த தமயந்தியே! இ மன் - இந்த அரசன், வாவியின் வாய் - தடாகத்தினிடத்து, சங்கம் புடை பெயர - சங்குகள் இடம் விட்டுச் செல்வதால், செம் கமல பூ - சிவந்த தாமரை மலர்கள், கலங்கி - ஆடிக் கலக்கமுற்று, சிந்தும் - சிந்துகின்ற, நாள் தேறல் - அன்று உண்டான புதுத்தேன், பொன் விளைக்கும் - பொன் விளைக்கும் - பொன்நிற நெற்கதிரை விளைவிக்கும், தண் பணை சூழ் - குளிர்ச்சி பொருந்திய வயல்கள் சூழ்ந்த, மா சிந்து நாட்டான் - பெருமை பொருந்திய சிந்து நாட்டை யுடையவனவன்.

அங்கை நெடுவேற்கண் ஆயிழையாய் - அழகிய கைகளையும் நீண்ட வேல் போன்ற கண்களையுமுடைய ஆயிழையாய் என்று

பொருள் கொள்ளலும் ஆம். தேறல் பொன் விளைக்கும், 'சடைச் செந்நெல், பொன் விளைக்கும்' (67) என்றது போல; இனி, பொன் நிறத்தைப் பரப்பும் என்று உரை கொள்ளலும் ஏற்கும்.

பி - ம். 1. அங்கண் ணெடுவேற்கண்; ஆயிரம்வெண், ஆவியின்வாய்.
2. புடைபெயரத் தாள்கலங்கிச்; தாளசைத்து. 4. நாடனிம் மன்.
(133)

தேவர்கள் நளனுருவில் இருக்கத் தமயந்தி கண்டு தியங்கியது

147. காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலான் மற்றவரைக் காணுநின்
றாசலா டுற்ற ளுளம்.

பூ வரைந்த - பூக்கள் சுற்றிப் புனையப்பெற்ற, மாசு இலா பூம் குழலாள் - குற்றமற்ற அழகிய கூந்தலையுடைய தமயந்தி, தன் சேடி - தன் தோழி, காவலரை காட்ட - இவ்வாறு அங்கு வந்திருந்திருந்த அரசர்களைச் சொல்லிக் காட்டிவர, ஈர் இருவர் தேவர் - இந்திரன் முதலிய முற்கூறிய நான்கு தேவர்களும், நளன் உருவா சென்று இருந்தார் - அங்கு நளன் வடிவினராய்ச் சென்று மாறி இருந்தனர்; அவரை - நளனது உருவில் இருந்த அவர்களை, காணுநின்று - கண்டு, உளம் ஊசல் ஆடுற்றுள் - தமயந்தி தன் மனம் ஊசலாடுவது போல ஒரு நிலையில் நில்லாமல் முன்னும் பின்னும் அலைந்து வருந்துவது ஆனாள். மற்று: அசை.

ஈரிருவர் தேவர்: இந்திரன், வருணன், யமன், அக்கினி என்னும் நான்கு தேவர்கள்; 72, 91 உரைகளைப்பார்க்க. காணுநின்று: ஆநின்று நிகழ்கால இடைநிலை. இனி, காணு - கண்டு, நின்று - நிகைப்புற்று நின்று எனப் பொருள் கொண்டாரும் உளர்.

பி - ம். 1. காவலரைச் சேடியர்கள்; காட்டியிட வவ்விடத்தே.
2. தேவர்களுந் தாம் நளனுய்ச் சென்றிருப்பப்; பூவலய.
3. மாசிலா வண்குழலார்; மற்றவர்க டங்களைக் கண்(டு); மற்ற வரைக் கண்டதற்பின்.
4. ஊசலாடு கின்ற ளுளம். (134)

148. பூணுக் கழகளிக்கும் பொற்றெடியைக் கண்டக்கால்
நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர்—நீணிலத்து
மற்றேவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து.

பூணுக்கு அழகு அளிக்கும் - ஆபரணங்களுக்கோர் அழகைத் தரும், பொன் தொடியை - பொன் வளைகள் அணிந்த தமயந்தியை, கண்டக்கால் - பார்க்குமிடத்து, நாணுக்கு நெஞ்சு உடைய நீள் நிலத்து நல் வேந்தர் - வெட்கத்திற்கே தம் மனத்தையுடைய வரான இந்தப் புவியில் உள்ள சிறந்த வரசர்கள், வாராதார் எவர் - அச்சுயம்வரத்திற்கு வராதவர் வேறு யாவரே யுள்ளார்? (எல்லோரும் வந்தனர் என்றபடி;). பொன் தேர் நளன் உருவாய் போந்து - அழகிய தேரையுடைய நளனது வடிவாகிச் சென்று, வானவரும் வந்திருந்தார் - தேவர்களும் அங்கு வந்திருந்தனர்.

ஆபரணங்கள் மற்றையோர்க்கு அழகைக் கொடுக்கும்; ஆனல், தமயந்தியோ ஆபரணங்களுக்கு அழகு அளிப்பவள் என்பதாம். இதனல், தமயந்தி பூண்டதால் ஆபரணங்கள் மேலும் அழகு பெற்றன என்க. இஃது, "அழகெனு மணியுமோ ரழகு பெற்றதே" (கம்ப. பால. மிதிலைக்: 34) என்று சீதாப் பிராட்டியின் திறத்துக் கவிச்சக்கரவர்த்தியார் அருளிய சிறப்பை இங்குத் தமயந்திக்கு ஏற்றிக் கூறினர் நம் ஆசிரியர் என்க. 'அணிபறித் தழகு செய்யு மணங்கு' (கம்ப. உயுத்த. அங்கதன்றூது: 18.) என்றதையும் இங்கு ஒப்பு நோக்கற் பாலதாம். நாணுக்கு நெஞ்சுடைய: தமயந்தியைக் காணுமுன் அத்தமயந்திக்கே நெஞ்சுடைய நல்வேந்தர், கண்டபின், 'இவ்வளவு அழகிற் சிறந்த இவள் நம்மை மணப்பளோ? நாமும் அழகுடைய ஆடவர் போல இங்கு வந்து விட்டோமே!' என்று வெட்கத்திற்கே தம்மனத்தை யுடையவரான நல்வேந்தர் என்பதாம். தமயந்திக்கு இடம் வைத்த தம் மனத்திற்கு அவளைக் கண்டபின் நாண் என்னும் பெண்ணுக்கே இடமளித்த நல்வேந்தர் எனை, ஓர் ஒற்றுமை நயந்தோன்ற, அதில் நகைச் சுவை மிளிர வைத்த சிறப்பு நோக்கத் தக்கதாம். இனி, நாண் உக்கு நெஞ்சு உடைய - நாணமும் சிந்தி, மனமும் உடைந்துபோகும் நிலையில் வந்து இருந்தனர்; எனலும் ஒன்றும். ஏவர்:-எவர் என்பதன் நீட்டல் விகாரம்; "மற்றவ ரொவ்வார்' (162) என்றது போல. பொற்றேர் நளன்: அழகிய தேர் ஓட்டுவதில் வல்ல நளன் என்றலும் ஏற்கும்; 340, 359. வானவரும்: உம்மை உயர்வு சிறப்பின் பாலது.

பி - ம். 1. பூணுக் கழகருளும். 2. நாணுக்க நெஞ்சுடைய,
4. பொற்றேர் நளனுய்ப் புகுந்து.

தமயந்தியின் சூளுரை

149. மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா னாகிற் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட வருளென்ருள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து.

(அப்போது தமயந்தி), சூழ் விதியின் மன்னவனை - யாவரையுஞ் சூழ்ந்துள்ள விதிக்குத் தலைவனை கடவுளை, தன் மனத்தே வைத்து - தன் மனத்தில் இருத்தித் தியானித்து, 'மின்னும் தார் வீமன் தன் - மின் போல ஒளி வீசும் மாலையணிந்த வீமராஜனுடைய, மெய் மரபில் - அழியாது நிலைபெற்று விளங்கும் குலத்தில், செம்மை சேர் கன்னி யான் ஆகில் - குணத்தாலும் ஒழுக்கத்தாலும் சிறப் பமைந்த பெண் யான் ஆவேனேல், அன்னம் தான் சொன்னவனை - அன்னப்புள் என்னிடம் கூறிய அந்நளமகராஜனை, சூட்ட அருள் - நான் இந்தச் சுயம்வர மணமாலையைச் சூட்ட அருள்புரிவாயாக!' என்ருள் - என்று வேண்டிக் கொண்டாள்.

சூழ் விதியின் மன்னவன் - கடவுள்; விதியின் வழியே வினை நடக்கப் பணிக்குந் தலைவன்; இராமபிரானை, 'விதிக்கு நாயகன்' (கம்ப. உயுத்த. அங்கதன்றூது: 21) என்றமை காண்க. மேலும், திருமாலின் ஆயிர நாமங்களுள், விதாதா என்ற பெயர் உண்மையும அறிக; விதாதா - விதியை அருளியவன். சூழ்விதியின் மன்னவன், நளன் எனலும் ஆம்.

பி - ம். 1. மின்னந்தார்; வேந்தன்றன் மென்மரபில், செம்மையோர், மெய்மைசேர்.
2. கன்னியே னாகில். 3. சூட்டி யருளென்ருள், சூழ்ந்தனைஞ்சி.

தமயந்தி நளனை அறிந்தமை

150. கண்ணிமைத்த லாலடிகள் காசினியிற் ரோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னாள்
அறிந்தா னளனென்றன்னை யாங்கு.

நறும் தாமரை விரும்பும் - மணம் பொருந்திய தாமரை மலரைத் தனது இருப்பிடமாக விரும்பியுறையும், நல் நுதலே அன்னாள் - அழகிய நெற்றியையுடைய திருமகளே என்று சொல்லக்கூடிய தமயந்தி, கண் இமைத்தலால் - (நளன் வடிவில் அங்கிருந்த ஐவரில் ஒருவனுக்கு மட்டும்) கண்களின் இமை கொட்டினமையாலும், அடி

கள் காசினியில் தோய்தலால் - பாதங்கள் பூமியில் படிந்திருந்தமையாலும், வண்ண மலர் மாலை வாடுதலால் - அழகிய பூமாலை வாடியிருந்தமையாலும், ஆங்கு - அவ்விடத்தில், நளன் தன்னை - இவனே நளன் என்று, எண்ணி - தீர்மானித்து, அறிந்தாள் - அறிந்து கொண்டாள்.

நன்னுதலே அந்நாள், என்ற பாடங்கொண்டு, அத் தமயந்தியே அன்று, என்றும் பொருள் கொள்ளலாம். தேவர்களுக்குக் கண்கள் இமையா, பாதங்கள் நிலந்தோயா, அவர்கள் அணிவது தெய்வ மலராமையின் அவை வாடா என்ற உண்மையை எண்ணியும், அவ்வாறில்லாமல், இமைக்குங் கண்களையும், நிலம் தோயும் அடிகளையும், வாடிய மலர் மாலையும் அவ்வைவருள் ஒருவனுக்கே இருந்தமையாலும், அவனே நளன் என ஊகித்தறிந்தாள் தமயந்தி என்பதாம். இதனால், தேவர்கள் வேற்றுரு எடுத்து வந்தாலும், அன்னோர், கண்கள் இமையாமலும், கால்கள் பூமியிற் படியாமலும், அணிந்த மாலைகள் வாடாமலும் பண்டை நிலையிலேயே இருக்கும்என்பது பெறப்பெற்றது. ஒப்பு : விக்கிரம சோழனுலா : 104-106. ஆனால், தமிழ் நைடதம் என்னும் நூலில், சேடியாக வந்து, அங்கிருந்த அரசர் சிறப்புக்களை எடுத்துக்கூறிய சரஸ்வதிதேவி, நளனையொழித்த மற்ற நான்கு தேவர்களை, நளனெனவும், தேவரெனவும் பொருள்பட இரட்டுற மொழிந்ததாலும், நளனுடைய மாலை மட்டும் வாடியிருந்ததாலும் நளன் இன்னன் என்பதைத் தமயந்தி ஊகத்தால் அறிந்து கொண்டாள் எனக் கூறுவது காணலாம் ; (நைடதம். சுயம்வரப் படலம். 169). இந் நூலுக்கு முதனூலாகிய வடமொழி மகாபாரதம் வனபருவத்தில் உள்ள நளோபாக்யானத்தில், தமயந்தி, நளன் வடிவில் இருந்த தேவர்களைக் கண்டு திகைத்து, 'நான் அன்னத்தின் சொல்லைக்கேட்டு அந் நளனையே எனக்குப் பதியாக வரித்தேன். அந்த ஸத்தியத்தைக் காக்கத் தேவர்கள் அவனையே இங்கு எனக்குக் காட்டக் கடவர். நான் புண்யச்லோகனை அந்த நளராஜனை அறிந்துகொள்ளும்படி அத்தேவர்கள் எனக்கு அருள்புரிவாராக!' என்று வணங்கிக் கேட்டுக்கொண்டாள். அவளது மனவுறுதியையும் உண்மைக் கற்புநெறியையும் கண்டு மகிழ்ந்த அத்தேவர்கள், தாம் கொண்டிருந்த அந்த நளவடிவிலேயே தாம் தேவர்கள் என்பதைக் குறிப்பிடுவதான அருளைப் புரிந்தனர். அதாவது தமயந்தி அத்தேவர்கள் நால்வரும், வியர்வை யற்றவர்களும், கண்ணிமையாதவர்களும், வாடாமலர் மாலையுடையவர்களும், பாதம் நிலந் தோயாத

வர்களுமாய் விளங்கியதைத் தெரிந்துகொண்டாள்' என்று கூறுவது காணலாம்.

2. வண்ண மதமாலே. 3. நன்னுதலாள் தானே ; யந்நாள்.
4. அறிந்தா னளன்றன்னே யாய்ந்து ; நளனேத்தா னுக்கு. (137)

தமயந்தி நளனுக்கு மாலே சூட்டியது

151. விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலே தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலே சூட்டினாள் பொன்.

விண் அரசர் எல்லாரும் வெள்கி மனம் சுளிக்க - தேவலோகத்து அரசர் யாவரும் வெட்கமடைந்து தம் மனம் நொந்து ஏங்கவும், கண் அகல் ஞாலம் களிகூர - இடமகன்ற இந்தப் புவியில் உள்ளோர் அனைவரும் மிக்க மகிழ்ச்சியடையவும், மண் அரசர்—அங்குச் சுயம்வரத்தை நாடி வந்த புவி மன்னர்கள், தம் மனத்தே - தம் மனத்திலே, வன் மாலே சூட - வலிய மயக்கமேற்கொள்ளவும், வய வேந்தை - வெற்றியுற்ற அந்நளராஜனுக்கு, பொன் - பொன்னே அல்லது திருமகளே யொத்த அத் தமயந்தி, பொன் மாலே சூட்டினாள் - அழகிய அந்தச் சுயம்வர மணமாலையைச் சூட்டினாள்.

விண் அரசர் எல்லாரும்: சுயம்வரத்திற்கு வந்திருந்த இந்திரன் முதலிய தேவரன்றி வானிலுள்ள மற்ற திக்பாலர்கள் முதலிய அரசர்களும் ஆம். ஞாலம் - உலகம்: இடவாகுபெயர்; உலகில் அரசர்கள் ஒழிந்த மற்றையோர். உலகினோர் களி கூர்ந்தது, இந்நள தமயந்தியர் இருவருமே ஏற்ற தம்பதிகளாவர் என்றும், இம் மண்ணுலகத்து நம்மவருள் ஒருவனை நளனே தமயந்தியைப் பெற்றான் என்ற மகிழ்ச்சியாலும் என்க. இது மகாவித்துவான், ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றியருளிய திருவாரூர்த் தியாகராசலீலை என்னும் நூலில், முசுகுந்த சக்கரவர்த்தியின் துதியாக அமைந்துள்ள,

தேமா நிலாப்பைந் துளவோனெடு தேவர் வேந்தன்
ஏமாறி நிற்ப வெளியோமிறு மாந்து நிற்பக்
கோமான் விடங்கப் பெருமானையிங் குக்கொ ணர்ந்த
மாமான் முசுகுந் தனைவாழ்த்தி வணங்கு வாமே.

என்ற செய்யுளை நினைப்பூட்டுகின்றது. மண் அரசர் வன் மாலே சூட: தாம் தமயந்தியை அடையலாம் என்ற எண்ணம் நிறைவே

ருமல் போனதால். ஆனல், ஆசிரியர் அவ்வேந்தர்கள் மனமயக் கத்தைக் கருதி, இரக்கங்கொண்டாற்போல, அவர்களுக்கும் தம் சொல்லணியால் ஒரு மாலே சூட்டிய திறம் பாராட்டற் குரியதாகும்; இது வஞ்சப் புகழ்ச்சி அணியும் ஆம். பொன் மாலே - அழகிய சுயம்வர மண மலர் மாலே; இஃது அடுத்த பாட்டில் பூமாலே பெற் றிருந்தபோது (159) என்பதால் விளக்கமாகும்; பொனமாலே (160) பொன் : தமயந்தியைப் பொன் என்றது; பொன்னுக்குள்ள சிறப்பு கள் பலவும் அவள் அமைந்தவள் ஆதலின் என்க; 59; 227; 329; பொன் உவமையாகு பெயர். வயவேந்தை - தான் விரும்பிய அரச னை நளனே, எனலும் ஆம் - வயம் விருப்பம்; (127) ஞாலம் இட வாகு பெயர்.

பி - ம். 1. வீண்ணரச ரெல்லாரும் மெய்யுருகி மால்கொள்ள, வீண்ணரசர் நால்வர்களும் வெட்கந் தலேச்சூட.
2. கண்ணகன்ற ஞாலங் களிசூட. 3. தம்மனத்தே சூட.
4. சூட்டினுள் பேய். (138)

மற்ற அரசர்களின் ஏமாற்ற நிலே

152. திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே—ஒண்டாைக்
கோமாலே வேலான் குலமாலே வேற்கண்ணுள்
பூமாலே பெற்றிருந்த போது.

ஒள் தாரை - ஒளிபொருந்திய நீர் வீழ்ச்சி முதலிய ஒழுக்குப் போன்ற, கோ மாலே வேலான் - சிறந்த மாலேயணிந்த வேலேயுடைய நளன், குல மரல் ஐ வேல் கண்ணுள் - சிறந்த பெரிய அழகிய வேல் போன்ற கண்களேயுடைய தமயந்தியின், பூ மாலே பெற்று இருந்த போது - பூக்களாலான சுயம்வர மாலேயை அடைந்திருந்தபோது, திண் தோள் வய வேந்தர் - (அங்கு வந்திருந்த) வலிய தோள்களே யுடைய வெற்றிமிக்க அரசர்களின், செம் தாமரை முகம் போய் - சிவந்த தாமரை மலர்போன்ற முகங்கள் நிறம் மாறிப்போய், வெண் தாமரையாய் வெளுத்த - வெள்ளேத் தாமரை மலர்களாய் வெளுப் படைந்தன. ஏ : ஈற்றசை.

தமயந்தியின் மணமாலே அடையாத ஏக்கத்தாலும், வெட்கத் தாலும் மற்றை அரசர்களின் செந் தாமரை போன்ற முகங்கள், ஒளியிழந்து வெளுப்புற்றன என்பதாம். தாரை : மழைத்தாரை, தலேதாரை என்பன போன்ற ஒழுக்கு. மாலே வேல் கண் - கண்

டோர்க்கு ஒரு மயக்கத்தைத் தரும், அழகிய வேல் போன்றதுமான கண் என்னலும் ஏற்கும்.

பி - ம். 1. செந்தா மரையதனம்.
2. வெண்டா மரையாய் வினங்கியே ; விளங்கிற்றே, வெளுத்ததே.
3. குலாமாலை வேற்கண்ணுள். 4. பூமாலை பெற்றணிந்த போது.

நளன் தமயந்தியுடன் சென்றமை

153. மல்லல் மறுகின் மடநா குடனுகைச்
செல்லு மழவிடைபோற் செம்மாந்து—மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலா னளன்.

நல் மாலை வேலான் நளன் - அழகிய மலர்மாலை யணிந்த வேலேந்திய நளன், மல்லல் மறுகில் - வளம்பொருந்திய வீதியில், மட நாகு உடன் ஆக - அழகிய பசு தன்னுடன் தொடர்ந்து வர, செல்லும் மழ விடை போல் - போகும் இளமையுள்ள இடபம் போல, செம்மாந்து - களிப்புடன் பெருமிதங்கொண்டு, மெல்லியலாள் - தமயந்தியின், பொன் மாலை பெற்ற தோளோடும் - அழகிய மணமாலை பெற்ற தோள்களோடும், புறப்பட்டான் - அந்தச் சுயம்வர மண்டபத்தினின்றும் தன் இருப்பிடத்திற்குப் புறப்பட்டுச் சென்றான்.

நன் மாலை வேலான் நளன் - அழகிய மாலையணிந்தவனும், வேலையுடையவனுமான நளன் என்னலும் ஒன்றும். தமயந்திக்கு மட நாகு, நளனுக்கு மழவிடை. நாகு என்பது, பசு, எருமை, மரை முதலியவற்றின் பெண் ; இங்குப் பசுவைக் குறித்து நின்றது. தொல். மரபியல் : 62. கம்பீரமான நடையும், தோற்றமும் உடைமையால் விடை ஆடவனுக்கு உவமை ; 'மால்விடை யும்பொன்னகமும் நாகமு நாண நடந்தான்' (கம்ப. பால. கார்முகப் : 32); 'விடையன்னதோர் நடையான்' (கம்ப. அயோத். கங்கைப் : 2); மேலும், சீவக. 942 ; பரிபாடற்றிரட்டு, 1 : 40 ; கப்பற்கோவை : 313.) நோக்குக. "செம்மாத்தல் - பெருமிதங்கொண்டு மகிழ்தல்;" செந்தாமரை மலர்மேற் செம்மாந்து வீற்றிருக்கும் ; (கம்ப. உயுத்த. இரணியன் வதைப் : 164).

பி - ம். 1. மல்லன் மறுகு. 2. செல்லு மழவிடை. (140)

தேவர்கள், கலி எதிர்வரக் கண்டது

154. வேலை பெருவமுதம் வீமன் றிருமடந்தை
மாலை பெருதகலும் வானுடர்—வேலை
பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறியி லாக்கும்
இருங்கலியைக் கண்டா ரெதிர்.

வேலை பெரு அமுதம் - பாற்கடல் அடையப் பெறுத அமுதம் போன்ற, வீமன் திரு மடந்தை - வீமராஜன் அழகிய பெண்ணை தமயந்தியின், மாலை பெருது அகலும் - சுயம்வர மாலையை அடையாமல் அவ்விடம் விட்டேகும், வான் நாடர் - தேவ நாட்டு இந்திரன் முதலினோர், வேலை பொரும் - கரையை வந்து மோதும், கலி நீர் ஞாலத்தை - ஒலியுடைய கடல் நீரையுடைய இவ்வுலகத்தில் உள்ள மக்களை, புல் நெறியில் ஆக்கும் - கீழான வழியிலே செலுத்தும், இரும் கலியை - வலிய அல்லது கரிய கலி என்னும் சனிபகவானை, எதிர் கண்டார் - தம் எதிரே வரக்கண்டனர்.

வேலை பெரு அமுதம் - பாற்கடல் பெறுத; அதாவது அப் பாற் கடல்பெற்ற அவ்வமுதினும் தனிச்சிறப்பு வாய்ந்த அமுதம் போன்றவள்; ஒப்பு :—

> 'குன்றம் மாடக் கோவி னளிக்குங் கடலன்றி,
> அன்றம் மாடத் தும்ப ரளிக்கு மமுதன்னாள்'
>
> (கம்ப. பால. மிதிலைக் : 26) :

'அலையிடைப் பிறவா வமிழ்தே யென்கோ' (சிலப். 2.78). வேலை : கரை, கடல், வேலை, வேளை எனப் பல பொருள் கொண்ட ஒரு பெயர்த் திரிசொல். வேலை பொரும் கலிநீர் : வேலை பொரும் என இயல்பாய் நின்றது, (நன். சூ. 255) சிறப்பு விதியால். இருங்கலி : இருமை - கருமை; சீவக. 1171. உரை; இரும்பு என்றதையும் நோக்குக. கலி : கலிகாலத்திற்கு உரிய தேவன். இவன் ஒன்பது கோள்களுள் ஒன்றான சனீச்சரன் என்பவன்; இவன் கொடுமையும், வலிமையும் மிக்கவன் என்பது, 'ஞாலத்தைப் 'புன்னெறியி லாக்கும்' என்பதால் முன்னறிவித்ததாகும். இது, 'தீங்கு தருகலியும் செப்பினான்' என்ற அடுத்த (155)-ம் செய்யுளாலும், இச்சரிதத்தில் பின் நிகழ்ச்சிகளாலும் தெள்ளிதின் அறியக் கிடக்கும்.

குறிப்பு : இந்திரன் முதலிய தேவர்கள், தம் எதிரில் கலியோடு, துவாபரன் என்ற ஒருவனும் வரக்கண்டதாக நளோபாக்யானம் கூறும். துவாபரன் கலியின் தமயன். துவாபரன் சூதாட்டம்

முதலிய வஞ்சகச் செயலுக்குரிய தேவன்; இவனே பின் சூதாடு கருவியாய் இருந்து நளனைத் தோற்கச் செய்தானும், கானில் பொற்புள் வடிவாய் வந்து நளன் ஆடையைக் கவர்ந்து சென்ரு னும் ஆவன் என நளோபாக்யானம் கூறும். மேலும், 212-ம் பாட லில், 'தமயனெடுங் கூடிக் கவருப்புரண்டான் கலி' என்பதில், தமயன் என்றது அத்துவாபரனையே குறித்ததாகும் எனக் கொள்வதும் ஏற்கும்.

பி - ம். 3. புன்னெறியே யாக்கும். (141)

இந்திரன் கலியின் வரவு விளம்பியதும், கலியின் மறுமொழியும்

155. ஈங்குவர வென்னென் றிமையவர்தங் கோன்வினவத்
தீங்கு தருகலியுஞ் செப்பினான்—நீங்கள்
விருப்பான வீமன் றிருமடந்தை யோடும்
இருப்பான் வருகின்றேன் யான்.

இமையவர் தம் கோன் - தேவர்களுக்கு அரசனான இந்திரன், 'ஈங்கு வரவு என்' என்று வினவ - 'இங்கே நீ வருவதற்குக் காரணம் என்ன' என்று கலியைக் கேட்க, தீங்கு தரு கலியும் - தீமைகளை உண்டாக்கும் அக்கலியும், 'நீங்கள் விருப்பான - உங்கள் விருப்புக் குக் காரணமான, வீமன் - வீமராஜன், திருமடந்தையோடு இருப் பான் - தன் அழகிய பெண் தமயந்தியோடு சுயம்வரத்திற்காகக் காத்துக் கொண்டிருப்பான்; வருகின்றேன் யான் - அதன் காரண மாக யான் வருகின்றேன்' என்று கூறினான்.

'விருப்பான' என்பதை, 'திருமடந்தையோடும்' என்ப துடன் இயைத்துக் கொள்ளலும் சிறக்கும். வீமன் (எனக்காக) இருப்பான்; (போய்) வருகின்றேன் யான்: எனத் தான் சுயம் வரத்தை நாடிச் செல்லும் விரைவைப் புலப்படுத்தித் தானே, தமயந்தியை அடைவது திண்ணம் எனக்கொண்டு சொன்னான் கலி எனப் பொருள் படுமாறு சொற்கள் அமைந்துள்ளமையுங் காண்க. இனி, வீமன் திருமடந்தையோடு இருப்பான வருகின் றேன் யான், வீமராஜன் திருமடந்தையாகிய தமயந்தியோடு மணஞ் செய்து மகிழ்ந்திருக்கும் பொருட்டு யான் வருகின்றேன் எனப் பொருள் கூறினரும் உளர்.

பி - ம். 1. ஈங்குவர வென்கொலோ வென்றிமையோர்; றிமையவர்கோன் முன்வினவித்; கோன்வினவத்.
2. நீங்கா. 3. விருப்பாய வீமன். (142)

156. மன்னவரில் வைவே னளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டான்—உன்னுடைய
உள்ளக் கருத்தை யொழித்தே குதியென்றான்
வெள்ளைத் தலியானை வேந்து.

(அது கேட்டு), வெள்ளை தனி யானை வேந்து - வெண்ணிற மான ஐராவதம் என்னும் ஒப்பற்ற யானையையுடைய தேவராச னான இந்திரன், (அக்கலியை நோக்கி), 'மன்னவரில் - அங்குச் சுயம்வரத்திற்கு வந்திருந்த அரசர்களில், வை வேல் நளனே - கூரிய வேல் ஏந்திய நளன் என்பவனே, மதி வதன கன்னி - முழு மதி போன்ற முகத்தையுடைய அப்பெண்ணின், மண மாலை - சுயம்வர மணமாலையை, கைக்கொண்டான் - அடையப் பெற்றான்; (ஆதலின்) உன்னுடைய உள்ளம் கருத்தை - நீ உன் மனத்திற் கொண்டுள்ள எண்ணமாகிய ஆசையை, ஒழித்து ஏகுதி என்றான் - விட்டுத் திரும்பிச் செல்வாயாக!' என்று கூறினான்.

மதிவதனம் - உவமைத் தொகை. வெள்ளைத் தனி யானை - வெண்ணிறமும், மற்ற யானைகளைவிடத் தனிச் சிறப்புக்களுமுடைய யானை; 'யானைக் கமர ரும்பல்'; (திருவள்ளுவமாலை : 36) என்றமை காண்க. வேந்து : அஃறிணைச் சொல் உயர்திணைப் பொருளில் வந்த திணை வழுவமைதி; அரசு, அமைச்சு, குடி என்பன போல.

பி - ம். 1. மன்ன ரவையு ணளனே.
2. மாலை கைப்படுத்தான், மனக்கோயில்.
3. யுரைத்தே குதியென்றான்.
4. வெள்ளைக் களியானை வேந்து, வெள்ளைக் கரியேறும் வேந்து.

157. விண்ணரசர் நிற்க வெறித்தேன் மணமாலை
மண்ணரசற் கீந்த மடமாதின்—எண்ணம்
கெடுக்கின்றேன் மற்றவடன் கேள்வனுக்குங் கீழ்மை
கொடுக்கின்றே னென்றான் கொதித்து.

(அது கேட்ட கலி), கொதித்து - கோபத்தினால் கொதிப் பேறினவனாகி, 'விண் அரசர் நிற்க - வானுலகத் தரசர்களான நீவிர் விரும்பி வந்திருக்க உங்களை விட்டு, வெறி தேன் மணமாலை - நறுமணமும் தேனும் பொருந்திய தன் சுயம்வர மணமாலையை, மண் அரசற்கு ஈந்த - இந்தப் புவியில் உள்ள (அற்பமான) ஓர் அரசனுக்கு அளித்த, மட மாதின் - அறிவற்ற பெண்ணின்,

எண்ணம் - எண்ணத்தை, கெடுக்கின்றேன் - நிறைவேறுமல் அழிக்கின்றேன்; மற்று - அஃதன்றி, அவள் தன் கேள்வனுக்கும் - அவளுடைய கணவனை நளனுக்கும், கீழ்மை கொடுக்கின்றேன் - தாழ்வான நிலையைக் கொடுக்கின்றேன்,' என்றான் - என்று கூறினான்.

விண்ணரசர் நிற்க: இஃது இடவழுவமைதியாகக் கொள்ளற் பாலது; அன்றேல் தேவர்கள் வந்திருக்க அவர்களை விடுத்து ஒரு மண்ணரசனைத் தேர்ந்து கொண்ட எனப்பொதுவாகக் கூறியதும் ஆம். மற்று: வினைமாற்றுப் பொருளில் வந்த இடைச்சொல். கேள்வன்: உறவிற் சிறந்தோனை கணவன். கீழ்மை - தாழ்வான துயர நிலை; வறுமையும் ஆம். கலி, தனக் குண்டான ஏமாற்றத் தால் மனம் கொதிப்புற்று, அக்கொதிப்பை அவன் இந்திரன் முதலினோருக்குப் பரிந்து பேசுவது போல மாற்றிக் கூறியது இங்கு நோக்கத்தக்கது.

பி - ம். 1. விண்ணரசன் நிற்க; வெறித்தண் மணமாலை; மலர்மாலை.
2. மடமானை, மடமானின்.
4. னென்றான் குறித்து. (144)

158. வாய்மையுஞ் செங்கோல் வளனு மனத்தின்கண்
தூய்மையு மற்றடந் தோள்வலியும்—பூமான்
நெடுங்கற்பு மற்றவற்கு நின்றுரைத்துப் போனான்
அடுங்கொற்ற வச்சிரத்தா னுங்கு.

அடும் கொற்ற வச்சிரத்தான் - பகைவரை அழிக்கும் வலிமை யுள்ள வச்சிராயுதத்தையுடைய இந்திரன், (கலியின் கோப மொழி களைக் கேட்டு) ஆங்கு - அப்போது, அவற்கு - அந்தக் கலிக்கு, அவன் - அந்த நளனுடைய, வாய்மையும் - சத்திய மேம்பாட்டை யும், செங்கோல் வளனும் - நீதி தவறா ஆட்சியின் வலிமையையும், மனத்தின் கண் தூய்மையும் - அவன் மனத்தின் பரிசுத்த நிலையை யும், மல் தடம் தோள் வலியும் - அவன் மல் போரில்வல்ல தோளாற்றலையும், பூமான் - தாமரையில் வாழும் திருமாது போன்ற தமயந்தியின், நெடும் கற்பும் - பெரும் கற்பின் உறுதியையும், நின்று உரைத்து போனான் - அமைதியுடன் நின்று அக்கலிக்கு எடுத்துக்கூறித் தன் வானுடு சென்றான். மற்று: அசை.

ஆங்கு - அவ்விடத்தில் எனவும் பொருள் கொள்ளலாம். நளன் வாய்மை முதலிய நற்குணங்கள் அமையப் பெற்றவன் ஆதலின், அவனிடம் கலியின் கருத்து நிறைவேறாது என்றதைக் குறிப்பிற் கூறினன் இந்திரன். இக்கருத்து, வசிட்ட முனிவர் இராமபிரானுக்கு அரசர்க்குரிய உயர்குண வொழுக்கங்களை எடுத்துக்கூறுமிடத்து உள்ளனவான, (கம்ப. அயோத். மந்திரை சூழ்ச்சிப் : 18–20) செய்யுட்களின் கருத்து நளனுக்கு உள்ளனவாகத் தொகுத்துக் கூறப்பெற்றமை ஒப்பு நோக்கத்தக்கது. பூமான் - தாமரையில் உள்ள மான் போன்ற திருமகள் என்பதற்கு ஆகிப் பின் இருமடியாகு பெயராய் இங்குத் தமயந்திக்கு ஆயிற்று. பூமா நெடுங்கற்பும் என்ற பாடமும் உண்டு; பூமா - தாமரைப் பூவில் உள்ள திருமாது; (மா - திருமகள்). இனி, மற்றவர்க்கு நின்றுரைத்துப் போனன் என்றே பல ஏடுகளிலும், அச்சுப் பிரதிகளிலும் பன்மையிற் பாடம் காணப்பெறுவதால்; முன் (154)-ம் செய்யுள் உரைக்குறிப்பிற் கூறியது போலக் கலியுடன் வந்த துவாபரன் என்றவனையும் சேர்த்து அவ்விருவர்க்கும், எடுத்துக் கூறிச் சென்றான் இந்திரன் என்று கொள்ள இடந்தருவது காண்க. இக்கருத்து அடுத்த 159வது செய்யுளாலும் அதன் உரைக் குறிப்பாலும் நன்கு விளங்குவதும் காணலாம். வாய்மை முதலிய உள்ள வரிடத்தில் கலி புகவியலாது என்று குறித்ததும் ஆம்.

இதுவும் முன் செய்யுளும், பிரதிகளில் முன் பின்னாக மாறியுள்ளன.

பி - ம். 2. மற்றவன்றன் றோள்வலியும், மற்றவன் றோள்வலியும் பூமா (நெடுங்கற்பும்). 3. மற்றவர்க்கு. (145)

நளனைக் கெடுக்கக் கலி துவாபரனைத் துணைவேண்டியது

159. செருக்கதிர்வேற் கண்ணியுடன் றேர்வேந்தன் கூடி
இருக்கத் தரியே னிவரைப்—பிரிக்க
உடனே வென்று னுடனே பிறந்த
விடநாக மன்னன் வெகுண்டு.

உடனே பிறந்த விட நாகம் அன்னான் - தான் பிறக்கும் போதே தன்னுடன் கூடப் பிறந்த விஷத்தையுடைய நாகப்பாம்பு போன்ற (கொடிய) அந்தக்கலி, 'செரு கதிர் வேல் கண்ணியுடன் - போரில் கதிர்விட்டு ஒளிரும் வேல் போன்ற கண்களையுடைய தமயந்தியுடன், தேர் வேந்தன் - தேர்த்தொழிலிற் சிறந்த நளன்,

கூடி இருக்க - சேர்ந்து வாழ்வில் மகிழ்ந்திருக்க, தரியேன் - நான் பொறுக்கமாட்டேன்; (ஆதலின்), இவரை பிரிக்க - இந்த நள தமயந்தியராகிய இருவரையும் தனித்தனியே பிரித்து வருத்த, உடன் ஆக என்றான் - நீ எனக்குத் துணையாக அமைக!' என்று துவாபரனைக் கேட்டுக்கொண்டான்.

இச்செய்யுளில், கலி, 'உடனாக வென்றான்' என்றதற்கு அவன், தேவேந்திரனை இச்செயலுக்கு உடன்படுமாறு கேட்டுக் கொண்டான் என்று பலர் உரை கூறியுள்ளார். முன் (158)இல், 'நின்று பொருத்துப் போனான் அடுங்கொற்ற வச்சிரத்தான்' என்று விளை முடிவு செய்திருப்பதால், போன இந்திரனை மீட்டும் இழுத்துக் கூட்டி அவனைக் கலி துணைவேண்டினான் என்பது பொருந்துவ தன்று. ஆதலின், முதனூலாகிய நளோபாக்யானத்தில் உள்ளபடி, தான் கருதிய தீய செயலுக்கு உடனாகுமாறு முன் கூறியுள்ள, தன்னுடன் வந்த துவாபரனை தன் தமயனைக் கேட்டுக் கொண்டான் என்பதே பொருத்தமாகத் தோன்றுகின்றது. இக்கருத்துக் கியைய இதன் முன், வேறு ஒரு செய்யுள் இருக்கவேண்டும் எனத் தோன்றுகின்றது. இஃது ஆராயத்தக்கது. இனி உடனே பிறந்த - அத்துவாபரனுடனே தம்பியாகப் பிறந்த, விடநாகம் அன்னான் - விஷத்தையுடைய பாம்பு போன்ற கலி, எனப் பொருள் கொள்ளலாம். கலிக்குத் துவாபரன் தமயன் என்பது, 156ஆம் செய்யுள் உரையிற் காண்க. இஃதன்றி, நளனுக்குப் புட்கரன் தமயன் என்று அவ்விடங்களிற் பலர் தம் உரையிற் கூறியுள்ளார். நளோபாக்யானமும், தமிழ் நைடதக் காப்பியமும் புட்கரனை நளன் தம்பி என்றே கூறுவனவால், தமயன் என்பது புட்கரனைக் குறிக் காமல், கலிக்குத் தமயன் முறையில் உள்ளவனும், அக்கலியுடன் கூட வந்தவனுமான துவாபரனையே குறிப்பது எனக்கொள்ளத் தக்கதாம்.

பி - ம். 1. தேர்வேந்தன் போய்வீற் (றிருக்க);
தேர்வேந்தன் தான்வீற், தேர்வேந்தன் கூட. (146)

தரியோதயம்

160. வெங்கதிரோன் ரூனும் விதர்ப்பன் றிருமடந்தை
மங்கலநாட் காண வருவான்போல்—செங்குமுதம்
வாயடங்க மன்னற்கும் வஞ்சிக்கு நன்னெஞ்சில்
தீயடங்க வேறினான் றேர்.

வெம் கதிரோன் தானும் - வெப்பமான கிரணங்களையுடைய சூரியனும், விதர்ப்பன் திருமடந்தை - விதர்ப்ப ராஜன் செல்வப் புதல்வியாகிய தமயந்தியின், மங்கல நாள் காண வருவான் போல் - மங்களகரமான திருமணமுகூர்த்தத்தைக் காண வருபவனைப்போல, செம் குமுதம் வாய் அடங்க - சிவந்த அல்லிப் பூக்கள் தம் இதழ்கள் அடங்கிக் குவியவும், மன்னற்கும் வஞ்சிக்கும் - நளமன்னனுக்கும் வஞ்சிக்கொடி போன்ற தமயந்திக்கும், நல் நெஞ்சில் தீ அடங்க - நல்ல மனத்தில் உண்டான விரகத் தீ அடங்கவும், தேர் ஏறினன் - தன் தேரில் ஏறிப் புறப்படுவானானன்.

நாள் - முகூர்த்தம், (பிங்.) செங்குமுதம் வாயடங்க என்றது : முன், (123)-இல் கூறியதும் காண்க. வஞ்சி : உவமை ஆகுபெயர். நள தமயந்தியர் இருவரும் இன்பந் துய்த்தற்கு இடமான திருமண நிகழ்ச்சி ஆதலின், அன்னோர் இருவர் நெஞ்சில் இருந்து வருத்திய விரகநோய் ஆகிய தீ அடங்குவதற்கு அற்றைநாட் சூரிய உதயம் காரணமாயிற்று. தேர் - அச் சூரியனது ஓராழித் தேர். இச் செய்யுள் பிறிதினவிற்சியின் பால் வந்த தற் குறிப்பேற்றவணி.

பி - ம். 2. மங்கலங் காண.
3. கன்னிக்கும் மாதர்க்கும் ; நெஞ்சுதனில். (147)

தமயந்திக்குச் செய்த மணக்கோலம்

161. இன்னுயிர்க்கு நேரே யிளமுறுவ லென்கின்ற
பொன்னழகைத் தாமே புதைப்பார்போல்—மென்மலரும்
சூட்டினர் சூட்டித் துடிசே ரிடையாளைப்
பூட்டினர் மின்னிமைக்கும் பூண்.

இள முறுவல் இன் உயிர்க்கு நேரே என்கின்ற - தமயந்தியின் புன் சிரிப்பே, காணும் ஆடவர் இனிய உயிர் போன்று சிறப்பும் அருமையும் வாய்ந்தது என்று சொல்லத்தக்க, பொன் அழகை - தமயந்தியின் உயர்ந்த இயற்கை அழகை, தாமே புதைப்பார் போல் - (மேலும் அழகு செய்ய வந்த வண்ண மகளிர்) தாமே ஆழ மறைப்பவர் போல, துடி சேர் இடையாளை - உடுக்கை போன்ற நடு ஒடுங்கிய இடையையுடைய தமயந்திக்கு, மென் மலரும் சூட்டினர் - மிருதுவான மலர்களையும் சூட்டினர் ; சூட்டி, அவ்வாறு மலர்களைச் சூட்டியபின், மின் இமைக்கும் பூண் பூட்டினர் - ஒளி வீசும் அணிகலன்களை அணிவித்தனர்.

இன்னுயிர்க்கு நேர் முறுவல் : ஒப்பு :—'என் உயிரையும் முறுவ லுண்டதே' (கம்ப. பால. மிதிலைக் : 56). பொன்னழகு - பொன் போன்ற இயற்கை யழகும் ஆம். துடிசேர் : சேர் சொல்லுருபு. மின் இமைக்கும் - மின்னல் போல் விட்டுவிட்டு ஒளி வீசும் என்ற லும் ஏற்கும். பூண் : முதனிலைத் தொழிற் பெயர். இங்கு அழகு செய்வாரே, உள்ள அழகை மறைத்து விட்டார் எனப் பரிதாப உணர்ச்சியிற் கூறினர் ஆசிரியர் என்பதாம்.

இச் செய்யுள்,

'அமிழிமைத் துணைகள் கண்ணுக் கணியென வமைக்கு மாபோல்,
உமிழ்சுடர்க் கலங்க ணங்கை யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன வழகினுக் கழகு செய்தார்
இமிழ்திரைப் பரவை ஞால மேழுமை யுடைத்து மாதோ.'
(கம்ப. பால. கோலங்காண் : 3)

என்ற செய்யுளைத் தழுவி அமைந்தது என்னலாம்.

பி - ம். 1. நேரே யிரங்கி யிளமூலியின்.
2. புதைப்பார் போல் ; புதைப்பான் போல் ; மென்மாலை.
3. சூட்டினர் சூட்டத் துடியே ரிடையாளைப். (148)

நளதமயந்தியர் திருமணம்

162. கணிமொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தார்
அணிமொழிக்கு மண்ண லவற்கும்—பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன் னறைபுக்கார்
மற்றேவ ரொவ்வார் மகிழ்ந்து.

கணி மொழிந்த நாளில் - (கணித சாத்திர மென்னும்) சோதி டத்தில் வல்லவர் கூறிய நல்ல முகூர்த்த வேளையில், அணி மொழிக்கும் அண்ணல் அவற்கும் - அழகிய மொழி பேசும் தமயந் திக்கும் பெருமை பொருந்திய நளனுக்கும், கடி மணமும் செய்தார் - திருமணமும் செய்வித்தனர் ; மற்று ஏவர் ஒவ்வார் - பிறர் யாரும் ஒப்பு ஆக முடியாத அந்நள தமயந்தியர், பணி மொழியார் - ஏவன் மொழி கேட்டு நடக்கும் மகளிர், (அதாவது பணிப்பெண்கள்), குறு ஏவல் செய்ய - சிறு பணிவிடைகளைப் புரிய, மகிழ்ந்து - மகிழ்ச்சி யுற்றோர்களாய், கொழும் பொன் அறை புக்கார் - செழும் பொன் னால் அமைந்த பள்ளியறை புகுந்தனர்.

கணி : நேரம் அல்லது காலத்தைக் கணக்கிட்டுக் கூறும் சோதிடர் ; கோட்களின் நிலையைக் கணித்தறிந்து கூறுபவர் ;

கணிப்பவனைக் கணி என்றது முதனிலைத் தொழிற் பெயராகும். கடிமணமும் : உம்மை இறந்தது தழுவியதாய் முன் நடந்த சுயம் வரத்தோடும் என்பதைக் குறிப்பது. மற்றேவ ரொவ்வார் : அவர் களுக்கு நிகர் அவர்களே என்பதாம் ; 'இரு திறத்தார்க்குஞ் செய்த வரம்பிவ ரிருவர்' (கம்ப. ஆரணிய : 279) என்றது போல. ஏவர் - எவர் என்பதன் விகாரம் ; 'மற்றேவர் வாராதார்' (148) என்றுற் போல. பணி மொழியார் ; மொழி பணியார் என இலக் கணப் போலியாகவும் கொண்டு, சொன்ன சொற்கேட்டு நடக்குர் ஏவலாளர் எனக் கொள்ளலும் ஆம்.

சில சுவடிகளில் இச் செய்யுள் இல்லை.

பி - ம். 4. மற்றெவரு மொவ்வார் மகிழ்ந்து. (149

நளதமயந்தியர் கூடிமகிழ்ந்தமை

163. செந்திருவின் கொங்கையினுந் தேர்வேந்த னகத்தும்
வந்துருவ வார்சிலையைக் கால்வளைத்து—வெந்தீயும்
நஞ்சுந் தொடுத்தனைய நாம மலர்வாளி
அஞ்சுந் தொடுத்தா னவன்.

செம் திருவின் கொங்கையிலும் - சிறந்த திருமகள் போன்ற தமயந்தியின் தனங்களிலும், தேர் வேந்தன் ஆகத்தும் - தேரூர்ந்து செல்வதில் வல்லவனை நளனுடைய மார்பினிடத்தும், வந்து உருவ - வந்து ஊடுருவிச் செல்லும்படி, வார் சிலையை கால் வளைத்து - நீண்ட தன் கரும்பு வில்லை இரு நுனிகளையும் வளைத்து, வெம் தீயும் நஞ்சும் தொடுத்து அனைய - கொடிய நெருப்பையும் விஷத்தையும் சேர்த்துத் தொடுத்து விட்டாற் போல, நாம - அச் சத்தைத் தரும், மலர் வாளி அஞ்சும் - தனது மலர்க்கணைகள் ஐந்தையும், அவன் - அந்த மன்மதன், தொடுத்தான் - தூண்டி னன்.

தேர் வேந்தன் : தேரை யுடைய அரசன் என்பதினிலும், தேர் ஓட்டுவதில் தனிச் சிறப்புடைய நளன் என்பதே பொருத்தமாகும். கால் வளைத்தல் ; இரு நுனிகளையும் இழுத்து வளைத்து நாண் பூட்டுதல் ; கால் - நுனி : 'காணு நெடுஞசிலை கால்வலி தென்பார்' (கம்ப. பால. கார்முகப் : 28). அஞ்சு : ஐந்து என்பதன் போலி. வாளி அஞ்சு : (37) உரையிற் காண்க. அஞ்சும் : உம்மை இனைத் தென் றறிபொருளில் வந்த முற்றும்மை. மலர் வாளி ஐந்தும்

என்ற குறிப்பால் அவன் மன்மதன் என்பது, அறிதற் கிடமா யிற்று. அவன் என்பது பண்டறி சுட்டு.

பி - ம். 1. மார்பகத்தும். 2. செந்தீயும்.
3. நஞ்சுந் தொடுத்தானே நாடம் பலர்வானி.
4. தொடுத்தானம் மன். (150

164. ஒருவ ருடலி லொருவ ரொதுங்கி
இருவ ரெனுந்தோற்ற மின்றிப்—பொருவெம்
கனற்கேயும் வேலாலுங் காரிகையுஞ் சேர்ந்தார்
புனற்கே புனல்கலந்தாற் போன்று.

பொரு வெம் கனற்கு ஏயும் வேலானும் - போரிட வல்லதும் கொடிய நெருப்புக்கு ஒப்பானதுமான வேலையுடைய நளனும், காரிகையும் - அழகிய தமயந்தியும், ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி - ஒருவர் உடன்மீது மற்றொருவர் தங்கி, இருவர் எனும் தோற்றம் இன்றி - இரண்டு பேர்கள் தனித்தனியேயுள்ளார் என்று தோன்ற இடமில்லாமல், புனற்கே புனல் கலந்தால் போன்று - நீரிலே நீர் கலந்தாற் போல வேற்றுமையின்றி, சேர்ந்தார் - கலந்து இன்பந் துய்த்தனர்.

காரிகை - அழகு; அழகுடைய மகளிர்க்குக் குணவாகு பெயராய் வந்தது; பொதுவாகப் பெண்களை அழகுடையவர் எனக் கூறுவது கவிமரபு; நல்லார் என்பது போல. வேறுபாடற்ற ஒற்றுமைக்கு, நீரோடு நீர் கலப்பதை உவமையாகக் கூறுவது மரபு.

இச் செய்யுளுக்கு,

'தூமப் பணிகளொன் றித் தோய்ந்தா லெனவொருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து—நாமம்
தொலையாத வின்பமெலாந் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போ னின்று.'

(சிலப்: 2. ஈற்று வெண்பா)

என்பது ஒப்புடைமையாதல் காண்க.

பி - ம். 1. ரொருவ ரொடுங்கி.
2. இருவ ரெனுந்தோற்ற மெஞ்சப்; தோற்றங்க ளின்றிப்.
3. காரிகையுந் தம்மிற். (151)

165. குழைமேலுங் கோமா னுயிர்மேலுங் கூந்தல்
மழைமேலும் வாளோடி மீள—விழைமேலே
அல்லோடும் வேலா னகலத் தொடும்பொருதாள்
வல்லோடுங் கொங்கை மடுத்து.

(தமயந்தி), குழை மேலும் - தன் காதுகளில் அணிந்திருந்த குண்டலங்கள் மீதும், கோமான் உயிர் மேலும் - அரசனை நள னுடைய உயிர் மீதும், கூந்தல் மழை மீதும் - தனது கூந்தலாகிய மேகத்தின் மீதும், வாள் ஓடி மீள - வாள் போன்ற தன் கண்கள் விரைந்து ஓடிச்சென்று மீண்டு வர, அல் ஓடும் வேலான் அகலத்து ஓடும் - இருள் அஞ்சி ஓடும் ஒளிபொருந்திய வேலையுடைய நளனது மார்போடும், விழை மேலே - விருப்பம் மேல் ஆக, வல் ஓடும் கொங்கை மடுத்து - சூதாடு கருவியும் வெட்கிப் பின்னிட்டோடும் அழகு வாய்ந்த தன் கொங்கைகளைப் புதையச் சேர்த்து, பொரு தாள் - காமப்போர் செய்தாள்.

தமயந்தியின் கண்கள் குழையைத் தழுவி நிற்கும் நீளமும் பெருமையும் உடையன. கூந்தல்: அவள் முகத்தின் இரு புறமும் படிந்துள்ள கூந்தல். கூந்தலுக்கு மழை அல்லது மேகம் உவமை; 45, 65, 66, 78, 82, 309. வல் - சூதாடும் காய்; இது மகளிர் கொங்கைக்கு உவமை; (உபமானசங்கிரகம்). குழைமேல்கண் ஓடுதல், 127, 130, 167-ஆம் செய்யுள்களையும் அவற்றின் உரைகளையும் நோக்குக.

பி - ம். 3. மல்லாடுந் தோளான் மருமத் தொடும்பொருதாள்.
4. வல்லோடுங் கையை மடுத்து; வல்லாகுங் கொங்கை மடுத்து; வல்லாகுங் கொங்கை மயில். (152)

166. வீரனகல் செறுவின் மீதோடிக் குங்குமத்தின்
சர விளவண்ட லிட்டதே—நேர்பொருத
காரா ருமெல்லோதிக் கன்னியவள் காதலெனும்
ஓராறு பாய வுடைந்து.

நேர் பொருத - நளனுக்கு ஒப்பாக அவனோடு கலவிப் போர் செய்த, கார் ஆரும் மெல் ஓதி கன்னி - மேகம் போல விளங்கும் மென்மையான கூந்தலையுடைய தமயந்தி, அவள் காதல் எனும் - அவளது ஆசை என்கின்ற, ஓர் ஆறு பாய - ஒரு நதி வெள்ளப் பெருக்கெடுத்துப் பாய, உடைந்து - அவ்வாற்றின் கரை உடைந்து, வீரன் அகல செருவின் மீது ஓடி - போர் வீரனுகிய நளனது மார்பு

என்னும் வயலின் மீது ஓடிப்பாய்ந்து, குங்குமத்தின் ஈர இள வண்டல் இட்டது - தமயந்தி தன் தனங்களில் அணிந்திருந்த குங்குமக் கலவையின் இளகிய வண்டலை அதிற்படியச் செய்தது. ஏ : ஈற்றசை.

ஓதி - கூந்தல்; கூந்தலுக்குக் கார் : 165 உரை. தமயந்தியின் காதல் என்னும் நதி, பெருக்கெடுத்து ஓடி அதன் கரையுடைந்து, நளன் மார்பு என்னும் வயலில் புகுந்து பாய்ந்து, தமயந்தி அணிந்திருந்த குங்குமச் சேறுகிய வண்டலை அவ்வயலில் (எருவாக) இட்டது. மலையில் பிறந்து ஓடும் நதி, பெருக் கெடுத்துத் தன் கரையை உடைத்துக் கொண்டு வயலிற் புகுந்து அவ்வயலுக்குத் தான் திரட்டி ஈர்த்துக் கொண்டுவந்த வண்டலை எருவாகப் படியச் செய்யும் இயல்பை இங்கு உருவக அணியிற் சிறப்பித்ததாகும். செறு - வயல்; சேறு நிரம்பிய இடம்; இது முதனிலை திரிந்த தொழிற் பெயர். ஈர இள வண்டல் - புணர்ச்சியில் உண்டான வெயர்வையால் ஈரமாய் இளகிய வண்டல் என்க. மேலுங் காமப் பயிர் வளர்வதற்கு இங்கு எருவிட்டது என்றதால், அன்னோர் காம இன்பத்தில் ஈடுபட்டு மகிழ்ந்தார் என்பதைக் குறிப்பிட்ட தாகும். இதுபின், (168)-ல் 'புணர்ந்தான் நெடுங்காலம் புக்கு' என் பதால் விளங்குவது காண்க. கன்னியவள் காதல் ஆறு என்றமை யால், அதுகாறும் காவலில் அடைபெற்றிருந்த காதல் என்னும் ஆற்று வெள்ளம் இப்பொழுது பெருக்கெடுத்து ஓடி வீரன் அகலச் செறுவில் பாய்ந்தது என்ற நயம் ஓர்க. ஓராறு : ஒப்பற்ற ஆறும் ஆம்.

பி - ம். 1. செறுவின் மேலோடிச்; மென்மூலைமேற் குங்குமத்தின்; னகலச் செறுவின் மேற்.
2. லிட்டாற்போ லாநவே.
3. கன்னிக் கரையென்னும், கன்னியரை யன்பென்னும். (153)

167. கொங்கை முகங்குழையக் கூந்தன் மழைகூலையச்
செங்கையற்க ணோடிச் செவிதடவ—அங்கை
வளபூச லாட மடந்தையுடன் சேர்ந்தான்
விளபூசற் கொல்யானை வேந்து.

விளை பூசல் - உண்டான போரில், கொல் - பகைவரைக் கொல் லும், யானை வேந்து - யானை போன்ற அரசனான நளன், மடந்தை

உடன் - தமயந்தியோடு, கொங்கை முகம் குழைய - அவளுடைய தனங்களின் இடம் அல்லது மேற்புறம் தளர்வுற, கூந்தல் மழை - கூந்தலாகிய மேகம், குலைய - கட்டவிழ்ந்து புரள, செம் கயல் கண் ஒடி செவி தடவ - சிவந்த கயல் மீன்கள் போன்ற கண்களின் ஒளி ஓடி அவள் செவியளவும் சென்று தடவுவது போல் விளங்க, அம் கை வளை பூசல் ஆட - அழகிய கைகளில் அணிந்திருந்த வளைகள் ஒலிசெய்ய, சேர்ந்தான் - கூடி மகிழ்ந்தான்.

பூசல், போர் என்ற பொருளிலும், ஓசை என்ற பொருளிலும் வந்துள்ளது. பூசல் - ஒலி : 'பூசல் வண்டரற்றும் கூந்தல்', (கம்ப. : ஆரணிய : 266.) யானை வேந்து - யானைப்படையையுடைய வேந்து என்னலும் ஒன்றும். இதில், புணர்ச்சியில் தலைவியிடம் உண்டாகும் மெய்ப்பாடுகளின் நிகழ்ச்சிகள் கூறப்பெற்றன. கண் செவி தடவுதல் ; 127, 130, 165.

பி - ம். 1. கொங்கை முகம்நெரியக் ; முகனெரியக் கூந்தன் மழை சொரிய, மலர் சொரிய.
2. ஞடிச் செவிதடவச்—சங்க.
4. கொல்லியானை வேந்து. (154)

168. தைய றளிர்க்கரங்க டன்றடக்கை யாற்பற்றி
வைய முழுது மகிழ்தூங்கத்—துய்ய
மணந்தான் முடித்ததற்பின் வாணுதலுந் தானும்
புணர்ந்தான் நெடுங்காலம் புக்கு.

தையல் - தமயந்தியின், தளிர் கரங்கள் - தளிர் போன்று மென்மையான கைகளை, தன் தட கையால் பற்றி - தனது அகன்ற கையினாற் பிடித்து, வையம் முழுதும் மகிழ் தூங்க - உலகின் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியில் மூழ்கி விளங்க, துய்ய - பரிசுத்தமான, மணம் தான் முடித்தற்பின் - திருமணச் சடங்கு செய்து முடிந்த பிற்பாடு, வாள் நுதலும் தானும் - ஒளிதங்கிய நெற்றியையுடைய தமயந்தியும் நளனும், நெடுங்காலம் - பல காலம், புக்கு - அப்பள்ளியறை புகுந்து, புணர்ந்தான் - சேர்ந்து மகிழ்ந்திருந்தான்.

தையல் தளிர்க்கரங்கள்.....பற்றி ; இது விவாகத்தில் பாணிக்கிரஹணம் என்னும் வைதிகச் சடங்கைக் குறித்தபடி ; 'தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான்' (கம்ப. பால. திருமணப் : 90.)

என்றதையும், 'வந்தெனைக் கரம் பற்றிய வைகல்வாய்'; (கம்ப. சுந்தர : 640) என்றதையும் நோக்குக. துய்ய மணம் : சாஸ்திர முறைப்படியான திருமணம். வாணுதலும் தானும்.....புக்கு ; ஒப்பு : 'தானுந்தன் தையலுந் தாழ்சடை யோ ணுண்டிலனேல்' என்றது போலத் தலைவனுக்குள்ள சிறப்புத்தோன்றப் புணர்ந்தான் என வினையை நளன்பாலேற்றிக் கூறப்பெற்றது. இது, பால், எண் முதலின மயங்கி வந்த வழுவமைதிகள் என்னலும் ஒன்றும். இதனால், திருமணம் நிகழ்ந்தபின் பல நாட்கள் நளன் தமயந்தியோடு குண்டினபுரியில் தங்கி மகிழ்ந்திருந்தான் என்பது பெறப்படும்.

இச்செய்யுள், சில பழைய ஏட்டுப் பிரதிகளில் இல்லை. (155)

சுயம்வர காண்டம் முற்றும்.

2. கலிதொடர் காண்டம்

நளன் தமயந்தியுடன் தன் நாடு சென்றமை

169. தவளத் தனிக்குடையின் வெண்ணிழலுந் தையல்
குவளைக் கருநிழலுங் கொள்ளப்—பவளக்
கொழுந்தேறிச் செந்நெற் குலைசாய்க்கு நாடன்
செழுந்தேரி லேறினன் சென்று.

பவள கொழுந்து - பவழக் கொடியின் கொழுந்தின் நுனி, ஏறி - மேலே படர்ந்தேறி, செம் நெல் குலை சாய்க்கும் - சிவப்புச் சம்பா நெற்பயிரின் குலை போன்ற கதிர்களைச் சாய்ந்து வளையும்படி முதிர்ந்து விளைதலைச் செய்கின்ற, நாடன் - நிடத நாட்டையுடைய நளன், தவள தனி குடையின் - வெண்ணிறமான தன் ஒப்பற்ற குடையின், வெண்ணிழலும் - வெண்மையான ஒளியும், தையல் - தமயந்தியின், குவளை கரு நிழலும் - கண்களான நீலோற்பல மலர்களின் கரிய ஒளியும், கொள்ள - தன்னைச் சூழ்ந்து கவிந்து கொள்ள, சென்று - போய், செழும் தேரில் ஏறினன் - தன் நகர் செல்ல அழகிய தேரில் ஏறினன்.

பவளம் - பிரபாளம் என்ற வடசொல்லின் திரிபு : இது பவழம் எனவும் வழங்கும். நெய்தல் நிலத்துக் கடலுக்குரிய பவழக்கொடி, கடல் அலைகளால் உந்தப் பெற்று, அந்நெய்தலையடுத்த மருத நிலத்து வயலிற் புகுந்து அங்குள்ள செந்நெற்பயிரின் மீது ஏறி, அதனால் அச்செந்நெற் பயிரின் கதிர்கள் சாய்ந்து விளங்குவ தாயின என்பதாம். இது நெய்தலும் மருதமும் கலந்த திணை மயக்கம் ஆகும். இனி, பவழ நிறமாக முற்றி உள்ள நெற்பயிரின் நுனி வளர்ந்து படிய, அதனால், அச்செந்நெற் கதிர்கள் சாய்ந்து நிற்பதைக் குறித்தது என்னலும் ஆம். செழுமை - அழகு ; (பிங்.). நிழல் - ஒளி ; கம்ப. சுந்தர : 197, 493, 543. நளனது கொற் றக்குடையின் வெண்மையில் தமயந்தியின் கண்ணெளியாகிய கருமை படர்ந்ததால் கறையோடு விளங்கும் முழுமதிபோல் அக் குடை விளங்கியது எனத் தொனிப்பது காண்க.

பி - ம். 2. குவளைக் கருநிறமும். 3. கொழுந்தேறச் செந்நெற் குலைசாயு.

அச்சுப் பிரதிகளிலும் சில ஏட்டுப்பிரதிகளிலும், இக்காண்டத் தொடக்கத்தில் இதற்குமுன், அடியிற் காணும் இரு செய்யுள்கள்

கடவுள் வாழ்த்துப் பாடல்களாக உள்ளன. அவை, சிறந்த பழைய ஏடுகளில் இல்லை.

திருமால்

1. முந்தை மறைநூன் முடிவெனலாந் தண்குருகூர்ச்
செந்தமிழ் வேதச் சிரமெனலாம்—நந்தும்
புழைக்கைக்கு நேயப் பொதுவர் மகளிர்
அழைக்கைக்கு முன்செல் லடி.

சிவபிரான்

2. செக்கர் நெடுவானிற் றிங்க ணிலாத் துளும்பி
உக்கதெனச் சடைமே லும்பர்நீர்—மிக்கொழுகும்
வெள்ளத்தான் வெள்ளி நெடுங்கிரியான் மெய்யன்பர்
உள்ளத்தா னெங்கட் குளன்.

நளன் தமயந்திக்கு வழியில் பல காட்சிகளைக் காட்டுதல்

170. மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வந்தடையப்
பொங்கி யெழுந்த பொறிவண்டு—கொங்கோ
டெதிர்கொண் டணைவனபோ லேங்குவன முத்தின்
கதிர்கொண்ட பூண்முலையாய் காண்.

'முத்தின் கதிர் கொண்ட பூண் முலையாய் - முத்துக்களின் ஒளிகளைத் தம்மிடம் கொண்டுள்ள ஆபரணங்களை அணிந்த தனங்களையுடைய தமயந்தியே! மங்கையர்கள் வாசம் மலர் கொய்வான் வந்து அடைய - பெண்கள் வாசனையுள்ள பூக்களைப் பறிப்பதற்கு வந்து சேர, பொங்கி எழுந்த - (அவர்கள் வரவின் அதிர்ச்சியால்) மேலே கிளம்பி எழுந்த, பொறி வண்டு - புள்ளிகளையுடைய வண்டுகள், கொங்கு ஓடு - தேன் ஆகிய காணிக்கைப் பொருளோடு எதிர்கொண்டு, அணைவனபோல் - அம்மங்கையரை எதிர்கொண்டழைத்து வரவேற்பனபோல, ஏங்குவன - ஒலிக்கின்ற அவற்றை, காண் - நீ பார்.'

இது, தம்மிடம் வந்த பெரியோர்க்குத் தேன் பழம் முதலியன மந்தர பூர்வகமாய் அளித்து உபசரித்தல் நம்மவர் வைதிக மரபு; இதனை மதுபர்க்கம் அளித்தல் என்பர். விவாகத்திற்குமுன் வந்த மணமகனுக்கு இவ்வித உபசரணை செய்வதுங் காணலாம். இங்கு வண்டுகள் வந்த மங்கையரை நறுமணங்கமழும் தேனைக் கொண்டு, தம் இசையாகிய மந்திரங்களுடன் உபசரித்தன என்க; சீவக. 2463 உரை நோக்குக. ஏங்குதல் - ஒலித்தல்; இசைத்தல்;

கம்ப. : சுந்தர. 893 ; சீவக. : 1197. நளன் திருமணத்திற்குப் பின், தன் மனைவி தமயந்தியோடு, தேரேறித் தன் நகரம் நோக்கிச் சென்ற காலை, இடையே வழியில் இருந்த பல காட்சிகளை அத் தமயந்திக்குக் காட்டிச் சென்றான். இவ்வாறு காட்டிச் செல்வது மணமகளுக்கு வழியிடையே களைப்புத் தோன்றி திருப்பதற்கும், பலவிதக் காட்சிகளால் மனங் களிப்புறுவதற்கும் ஆகும். திருமணத்திற்குப் பின், காப்பியங்களிற் பெரும்பாலும் இவ்விதக் காட்சிகள் கூறப்பெறுவன காணலாம். திருமணம் ஆனபிறகு அன்று மாலை, மணமகன் மணமகளைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வதாகவும், வழியிடையே பல காட்சிகளைக் காட்டிச் செல்வதாகவும் உள்ள பல செய்திகள் மந்திர பூர்வகமாகச் சொல்லப் பெறுவது, வைதிக விவாகச் சடங்குகளில் ஒன்றாகக் கொண்டுள்ளமையும் காணலாம். இங்கு, வரைக்காட்சி, சோலைச்சிறப்பு, நீர் விளையாடல், போது கொய்தல் உண்டாட்டு முதலிய சிறப்புக்கள் கூறப் பெறுவன உண்டு. இவ்வாறு கூறுவது பெருங் காப்பிய லக்ஷணமும் ஆகும். இவ்வித நிகழ்ச்சிகளைக் கம்பராமாயணம் பால காண்டத்தில் பிரட்டிக்கும் இராமபிரானுக்கும் நிகழ்ந்த திருமணத்திற்கு முன்னதாகவே, வரைக்காட்சிப் படலம் பூக்கொய்படலம், புனல் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம் எனத் தனித்தனியே மிக விரிவாகக் கூறியுள்ளமையோடு, அயோத்யா காண்டம் சித்திரகூடப் படலத்திலும் சுருக்கமாகவும் விளக்கப்பெற்றுள்ளன காணலாம். மேனாட்டினருள் திருமணத் திற்குப் பின்பு, புதுமணத் தம்பதியர் பற்பல இடங்களுக்கு உல்லாசப் பிரயாணம் சென்று மகிழ்வுறுவதும் இத்தகையதே என்னலாம். இது முதல் 176 முடிய உள்ள பாடல்கள் போது கொய்தல் என்னும் பகுதியைக் குறிப்பனவாம்.

பி-ம். 3. ஏகுவன. (2)

171. பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே
பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு—மேவியவர்
பொன்னடியிற் சூழ்ந்தனவே பூங்குழலாய் காணென்றான்
மின்னெடுவேற் கையான் விரைந்து.

மின் நேடு வேல் கையான் - ஒளி பொருந்திய நெடிய வேலேந்திய கையையுடைய நளன், (தமயந்தியை நோக்கி), 'பூங்குழலாய் - பூக்கள் முடித்த கூந்தலையுடையவளே! பாவையர் கை தீண்ட - பெண்கள் தம் கைகளால் தொட, பணியாதார் யாவரே - அவர்க்குப்

பணிந்து நடவாதவர் யாரே உள்ளார்? (ஒருவரும் இல்லை என்ற படி); அ பூம் கொம்பு - அதோ தெரியும் அந்தப் பூக்களோடு கூடிய மரக்கொம்பு, பூவையர் கை தீண்டலும் - அப்பெண்களின் கைகள் பட்டவுடனே, அவர் பொன் அடியில் மேவி தாழ்ந்தன - அவர் களுடைய பொன்னிறமான அடிகளையடைந்து வணங்கினபோலத் தாழ்ந்துள்ளன; விரைந்து காண் என்றான் - அக்காட்சியை நீ விரைந்து பார்ப்பாயாக!' என்று தமயந்திக்குக் குறிப்பிட்டுக் காட்டினான் நளன். ஏ: ஈற்றசை.

பூவை, பாவை என்பன உவமை ஆகுபெயர்களாய் அம் மங்கையரைக் குறிப்பன. பாவை - சித்திரப்பதுமை; பூவை - நாகணவாய்ப் புள் என்னும் பறவை. பொன்னடி - அழகிய பாத மும் ஆம்.

ஒப்பு :—

நஞ்சினுங் கொடிய நாட்ட மமுதென நயந்து நோக்கிச்
செஞ்சவே கமலக் கையாற் றீண்டலு நீண்ட கொம்பர்
தஞ்சிலம் படியின் மென்பூச் சொரிந்துடன் சூழ்ந்த வென்சூல்
வஞ்சிபோன் மருங்கு லார்மாட் டியாவரே வணங்க லாதார்
(கம்ப. பால. பூக்கொய்: 7).

பி - ம். 1. பாவையர்கள் தீண்ட; பணியாதார் யார்கொலோ.
2. பூவையரைத் தீண்டலுமே, பூவையர்கள் தீண்டலுமே.
3. சூழ்ந்தனமென் பூங்குழலாய்; சூழ்தலுமே, தீண்டலுமே.
4. வியந்து. (3)

172. மங்கை யொருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்தைப்
பங்கயமென் றெண்ணிப் படிவண்டைச்—செங்கையால்
காத்தாளக் கைம்மலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தானைக் காணென்றான் வேந்து.

'மலர் கொய்வாள் மங்கை ஒருத்தி - பூப்பறிப்பவளாகிய ஒரு பெண்ணின், வாள் முகத்தை - ஒளி பொருந்திய முகத்தை, பங்கயம் என்று எண்ணி - செந்தாமரை மலர் எனக்கருதி, படி வண்டை (அவள் முகத்தல் வந்து) மொய்க்கின்ற வண்டினை, செம் கையால் காத்தாள் - (அவள்) தனது சிவந்த கையினால் அதனைத் தடுத்துத் தன்னைப் பாதுகாத்தாள்; அ கை மலரை - அவளுடைய தடுத்த அக் கையாகிய மலரை, காந்தள் என - செங்காந்தள் பூ என்று (அவ்வண்டு எண்ணி), பாய்தலும் - அதன் மீது

பாய்ந்து மொய்த்த உடனே, வேர்த்தாளே - அச்சமுற்று வெயர்வை அரும்ப நின்று வருந்தின அவளே, வேந்து - அரசனை நளன், காண் என்றான் - நீ பார்ப்பாயாக!' என்று தமயந்திக்குக் காட்டிக் கூறினன்.

வண்டு மங்கையின் முகத்தைப் பங்கயமாகவும், கையைக் காந்தளாகவும் கருதி மயங்கியது; இது மயக்க வணி. முகத்திற்குப் பங்கயமும் கைக்குக் காந்தளும் உவமைகள்.

பி.ம். 1. மலர்கொய்ய வாண்முகத்தை.
2. படிவண்டு ; செங்கையினுல்.
3. காத்தாளைக் கைம்மலரைக் ; கையுமருங் காந்தளென்று. (4)

173. புல்லும் வரிவண்டைக் கண்டு புனமயில்போல்
செல்லு மடந்தை சிலம்பவித்து—மெல்லப்போய்
அம்மலரைக் கொய்யா தருந்தளிரைக் கொய்வாளைச்
செம்மலரிற் றேனே தெளி.

'செம் மலரில் தேனே - செழுமையான தாமரைமலரில் உண்டாகும் தேன்போன்ற சுவை பொருந்திய சொல்லுடையவளே! புன மயில் போல் செல்லும் மடந்தை - காட்டில் (இயற்கையாய்ச்) சஞ்சரிக்கும் மயில் போன்ற ஒரு பெண், புல்லும் வரி வண்டை கண்டு - தன் பேடையைத் தழுவி மகிழும் பல கோடுகள் அமைந்த ஒரு வண்டைப் பார்த்து, சிலம்பு அவித்து - தன் காலில் அணிந்துள்ள சிலம்புகளே ஓசை உண்டாகாமல் அடக்கிக் கொண்டு, மெல்ல போய் - மெதுவாக நடந்து சென்று, அ மலரை கொய்யாது - வண்டுகள் கூடியிருந்த அந்தப் பூவைப் பறிக்காமல், அரும் தளிரை கொய்வாளை - அரிய தளிர்களே மட்டும் பறிப்பவளே, தெரி - நீ தெரிந்து கொள்வாயாக!' (என்று நளன் தமயந்திக்குக் கூறினன்).

மயில் போன்ற சாயலும் நடையும் உடைமையால் மயில் அம்மடந்தைக்கு இயலாலும், செயலாலும் உவமை ஆயிற்று. சிலம்பவித்து மெல்லச் சென்றது, கூடி மகிழும் வண்டுகளுக்கு இடையூறு உண்டாக்க விரும்பாமல். செம்மலரிற் றேனே : செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் போன்றவளே எனவும் கூறலாம்; தேன், தாய்மையையும் இனிமையையுங் கருதி, தமயந்திக்குஉவமை ஆக்கப்பெற்றது. இச்செய்யுளில் பெண்மைக் குரிய இயற்கை இயல்பு கூறப்பெற்றமை காண்க.

இச்செய்யுள் சில ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

பி - ம். 1. புனமான் போல். 2. சிலம்பொதுக்கி.
3. தருந்தணையைச் சேர்வானேச். (5)

174. கொய்த மலரைக் கொடுங்கையி னலணைத்து
மொய்குழலிற் சூட்டுவான் முன்வந்து—தையலாள்
பாதார விந்தத்தே சூட்டினன் பாவையிடைக்
காதார மின்மை யறிந்து.

(ஒரு தலைவன்), கொய்த மலரை - தான் பறித்த மலர்களை, கொடும் கையினல் அணைத்து - தன் வளைந்த முன் கைகளால் தழுவி அணைத்து எடுத்து, மொய் குழலில் சூட்டுவான் முன் வந்து - தன் தலைவியின் அடர்ந்த கூந்தலிற் சூட்டும் பொருட்டு அவள் எதிரில் வந்து, பாவை இடைக்கு ஆதாரம் இன்மை அறிந்து - அப் பெண்ணின் நுண்ணிய இடைக்கு வேறு ஆதரவு இல்லாத நிலையைத் தெரிந்து கொண்டு, தையலாள் - அப்பெண்ணின், பாதாரவிந்தத்தே சூட்டினன் - பாதமாகிய தாமரைகளின் மீதே அம்மலர்களைச் சமத்தி அணிவித்தான். (இதை நீபார்! என்று நளன் தமயந்திக்குக் கூறினன் என்பதை வருவித்து கொள்க).

கொடுங்கையினல் அணைத்து எடுத்து வந்தது தன் உள்ளங் கைகளில் அம்மலர்களை ஏந்திவர முடியாது அவை மிகுதியா யிருந்தமையால். கொடுங்கை - வளைந்த கை; 'மன்னர் மன்னவன் கொடுங்கை மேற் றுயின்றனன்' (நைடதம். கான்புகு : 21). பூவை மிகுதியாய்க் கொய்தது, தன் தலைவிமேற் கொண்ட ஆசை மேலீட்டால். பூக்களை மிகுதியாகப் பறித்து வந்த தலைவன் தலைவியின் அருகே வந்து அவளது இடையின் மென்மையையும், பூக்களின் தொகுதியின் மிகுதியையும் நோக்கி, இயல்பாகவே அவளது கூந்தல் முதலான மேலுள்ள அங்கங்களின் பாரம் தாங்காமல் வருந்தும் அவளது நுண்ணிய இடையின் நிலையைக் கண்டு அஞ்சிக் கூந்தலில் அப்பூத் தொகுதியைச் சூட்டிப் பின்னும் பாரத்தை மிகுதிப்படுத்த விரும்பாலும், அம்மலர்களை அவள் இடைக்கு ஓர் ஆதாரமாக, அதாவது அடிப்பாரமாய் இருக்கக் கருதியும் அவற்றை அவள் பாதங்களின் மீது சூட்டினன் என்க. ஆதாரம் - பற்றுக் கோடு அல்லது அஸ்திவாரமும் ஆம்.

பி - ம். 3. தாவினன், சாற்றினன். 4. மில்லா தறிந்து. (6)

175. ஏற்ற முலையார்க் கிளஞ ரிடும்புலவித்
தோற்ற வமளியெனத் தோற்றுமால்—காற்றசைப்ப
உக்க மலரோ டுயிர்த்தவனீ முத்தமே
எக்கர் மணன்மே லிசைந்து.

காற்று அசைப்ப - காற்று வீசி அலைத்தமையால், உக்க மலரோடு - சிந்திய பூக்களோடு, வனீ உயிர்த்த முத்தமே - சங்குகள் ஈன்ற முத்துக்களே, எக்கர் மணல் மேல் இசைந்து - நீர் நிலையின் அலைகளால் ஒதுக்கப்பட்ட மணல் மேடுகளின் மீது பொருந்தி, ஏற்ற முலையார்க்கு - தாங்கிய தனங்களையுடைய தம் தலைவியர்க்கு, இளஞர் - இளமைப் பருவத்துத் தலைவர்கள், இடும் - உண்டாக்கிய, புலவி - ஊடலில், தோற்ற - தோற்றுப் போன நிலையில் (அலங்கோலமாய்க் கிடந்த), அமளி என - படுக்கைபோல, தோற்றும் - காட்சி அளிக்கும் : ஆல் : ஈற்றசை.

நீர் நிலையை அடுத்துள்ள மணற்பரப்பின் மீது காற்று அசைத்ததால் பூக்களும், சங்குகள் ஈன்ற முத்துக்களும் பொருந்திக்கிடப்பவை, ஊடலில் தம் தலைவியரைத் தணிவிக்க முடியாது தலைவர்கள் தோற்றுப் போன நிலையில் அலங்கோலமாக விளங்கும் படுக்கைகள் போன்றன என்பதாம். எக்கராகிய மணற்பரப்பு அமளியும், பூக்களும் முத்துக்களும் ஆங்காங்குக் கிடப்பன, ஊடலில் தலைவியர் வெறுத்து நீக்கிய பூக்களுக்கும் முத்துக்களுக்கும் உவமை : மகளிர் ஊடலில் தாம் அணிந்திருந்த மலர்களையும் அணிகளையும் வெறுத்து நீத்தல்; நைடதம். நாட்டு : 27; கம்ப. பால : மிதிலைக் : 5. எக்கர் - இடு மணல்; 'எக்கர் மணலிலும் பலரே' (மலைபடு. 556); எக்கர் : எக்கல் என்பதின் ஈற்றுப்போலி. ஏற்ற முலையார் - தாங்கிய தனங்களையுடையவர்; இதனால் அவற்றின், பெருமையும் பாரமும் குறித்தபடி; இனி, ஏற்றமான அதாவது உயர்ந்தெழுந்த முலையார் என்றும், ஒன்றுக்கொன்று தாழ்வு உயர்வு இன்றிச் சமமான வளர்ச்சியுடைய முலையார் என்றும், பருவத்திற்கேற்ற வளர்ச்சியுடைய முலையாரென்றுங் கொள்ளலாம்.

பி - ம். 1. இளையா ரிரும்புவி, இளையாரிடுங் கலவி.
3. டுகுத்தவனீ முத்தமே.
4. எக்கல் மணல்மே லிசைந்து. (7)

176. அலர்ந்த மலர்சிந்தி யம்மலர்மேற் கொம்பு
புலர்ந்தசைந்து பூவணிமேற் புல்லிக்—கலந்தொசிந்த
புல்லென்ற கோலத்துப் பூவையரைப் போன்றதே
அல்லென்ற சோலை யழகு.

அல் என்ற சோலை அழகு - இருள் என்றே கூறத்தக்கதாய் அடர்ந்த இச் சோலையின் அழகு, அலர்ந்த மலர் சிந்தி - அலர்ந்து போன மலர்களைக் கீழே சிந்தி, அ மலர் மேல் - அந்த மலர்களின் மீது, கொம்பு - மரத்தின் ஒரு பூங்கொம்பானது, புலர்ந்து அசைந்து - வாடியசைந்த நிலையில் இருந்து, பூ அணிமேல் புல்லி கலந்து - மலர்ப்பள்ளியின் மீது தன் தலைவனைத் தழுவிச் சேர்ந்து அக்கலவியால், ஒசிந்த புல் என்ற கோலத்து - தளர்ந்து சாய்ந்த ஒரு (நாணற்) புல் கிடப்பது போன்ற நிலைமையையுடைய, பூவை யரை - மகளிரை, போன்றது - ஒத்து விளங்கியது, ஏ : ஈற்றசை.

அல்லென்ற சோலை : 'தூங்கிருள் வெய்யோர்க் கொதுங்கிப் புக்கிருந்தா லன்ன பொழில்' என்று முன் (24)இல் கூறியுள்ளதை ஒப்பு நோக்குக. கீழே சிந்திக் கிடந்த மலர்களின் மீது அம்மரத் தின் பூங் கொம்பு ஒன்று படிந்து, வாடியசைந்த நிலையிற்கிடந்த தோற்றம், தன் தலைவனோடு சேர்ந்த கலவியாற் சோர்வுற்ற தலைவியைப் போன்றிருந்தது என்பதாம். கொம்பு பூவையரைப் போன்றது என இயைக்க. இச்சோலையின் அழகு இத்தகைய தாய் உள்ளது என முடிவுகூறலும் அமையும். ஒசிதல் - சாய்தல் ; சீவக. 989 ; சிலப். 17 ; உள்வரி வாழ்த்து, புல்லென்ற கோலத்து - அற்பமான அதாவது குறைந்த அழகோடு கூடிய எனப் பொருள் கூறினுமாம். சிந்திக்கிடந்த பூக்கள் படுக்கையில் தூவப் பெற்ற மலர்களுக்கும், கொம்பு புல்சோர்ந்த நிலையிலிருக்கும் பூவையர்க்கும் உவமைகளாயின. பூவையர் : 171.

பி - ம். 2. புலர்ந்தசைந்து மெல்லணிமேற் புல்லிக் கலந்தொசித்து.
3. புல்லின்ற கோலத்துப். (8)

177. கொங்கை முகத்தணையக் கூட்டிக் கொடுங்கையால்
அங்கணைக்க வாய்நெகிழ்ந்த வாம்பற்பூ—கொங்கவீழ்தேன்
வார்க்கின்ற கூந்தன் முகத்தை மதியென்று
பார்க்கின்ற தென்னலாம் பார்.

(ஒரு பெண் நீராடும் போது அத்தடாகத்திலிருந்த அல்லிப் பூவை), 'கொங்கை முகத்து அணைய கூட்டி - தன் கொங்கைகளின் உச்சியில் தழுவுமாறு சேர்த்து, கொடும் கையால் அங்கு அணைக்க - தன் வளைந்த முன் கைகளால் (அவ்வல்லிமலரை அத்தனங்களில் சேர்த்து) அணைத்துக் கொள்ள, வாய் நெகிழ்ந்த ஆம்பல் பூ - அதனுல் வாய் திறந்து மலர்ந்த அவ்வல்லி மலர், கொங்கு அவிழ் தேன் வார்க்கின்ற - மணம் விரிந்த தேனை யூற்றுகின்ற, கூந்தல் முகத்தை - கூந்தலையுடைய அம்மகளின் வதனத்தை, மதி என்று - முழுச்சந்திரன் என்று, பார்க்கின்றது என்னலாம் - நோக்குகின்றது என்று சொல்லக்கூடியது ஆகும்; பார் - இதனை நீ காண்பாயாக!' (என்று, நளன் தமயந்திக்குச் சொல்லி அதனைக் காட்டினன்).

'ஒரு பெண் தடாகத்தில் இறங்கி நீராடும் போது அங்கிருந்த அல்லி அரும்பைத் தன் கொங்கை முகத்தோடு சேர்த்துத் தன் கொடுங் கைகளால் அணைக்க, அந் நெருக்கத்தால் அவ்வரும்பு வெடித்து மலர்ந்தது. அவ்வாறு மலர்ந்த தோற்றம், அப் பெண்ணின் முகத்தைச் சந்திரன் என்று எண்ணி அது மலர்ந்தது என்று சொல்லத் தக்கதாய் இருக்கின்றது. இதனை நீ நோக்குவாயாக!' என்று நளன் தமயந்திக்குக் கூறினன். சந்திரனைக் கண்டால் மலரும் ஆம்பலின் இயற்கையை இங்கு மயக்க அணியிற் கூறப்பெற்றது. இனி, நாயகன் தன் கரங்களால் அணைக்க அதனுல் மகிழ்ந்து மலர்ந்த தலைவியின் வாய் இதழுக்கு அல்லி மலர் உவமையாயிற்று என்னலுமாம். சந்திரன் ஆம்பலின் நாயகன் என்பது கவிமரபு. கொங்கவிழ் தேன் வார்க்கின்ற கூந்தல்: இஃது அன்மொழித் தொகையாய் ஒரு மங்கையைக் குறிப்பது. கொடுங்கை: (174); குடங்கை என்ற பாடமும் ஏற்கும்; குடங்கை - உள்ளங்கை. இது முதல், 184 முடிய உள்ள பாடல்கள் புனல் விளையாட்டு என்னும் பகுதியுள் அடங்கும்.

பி-ம். 1. குடங்கையால்.
2. அங்கணைய வாய்மலர்ந்த; கொடுங்கொடுதேன். (9)

178. கொய்த குவளை கிழித்துக் குறுநுதன்மேல்
எய்தத் தனிவைத்த வேந்திழையாள்—வையத்தார்
உண்ணக் கடுவிடத்தை யுண்ட வொருமூன்று
கண்ணனைப் போன்றனளே காண்.

'கொய்த குவளை கிழித்து - தான் பறித்த நில மலரைப் பிய்த்து, (அதன் இதழ் ஒன்றை) குறுநுதல் மேல் எய்த - தன் குறுகிய நெற்றியிற் பொருந்த, தனி வைத்த - சிறப்பாக வைத்துக் கொண்ட, ஏந்திழையாள் - ஆபரணங்கள் அணிந்த ஒரு பெண், வையத்தார் - உலகத்து மக்கள் யாவரும், உண்ண - உண்ணக் கூடாததான, கடு விடத்தை - கொடிய ஆலகால விடத்தை, உண்ட - முன் உண்டு உலகங்களைக் காப்பாற்றிய, ஒரு மூன்று கண்ணனை - ஒப்பற்ற மூன்று கண்களையுடைய சிவபெருமானை, போன்றனள் - ஒத்திருந்தனள், காண் - இதனை நீ காண்பாயாக!' (என்று நளன் கூறினன்.)

போன்றனளே: ஏகாரம் ஈற்றசை. குவளை மலர் இதழ்: இங்குக் கண்ணுக்கு உவமை. குறுநுதல் - மகளிர் நெற்றி குறுகி விளங்கும் இயல்பினது; இது நெற்றியின் முன்புறம் அளகத்தால் மறைந்து குறுகித் தோன்றும் இயல்பைக் குறித்தபடி. வையத்தார் உண்ணக் கடுவிடம். இங்கு வையத்தார் என்றது, உபலக்ஷணமாக வானகத்தார் முதலிய அனைவரையுங் குறிக்கும். கடுவிடம்: ஒருபொருட் பன்மொழியாகவுங் கொள்ளலாம். பாற் கடலில் உண்டான கொடிய விஷத்தைச் சிவபிரான் உண்டு தேவர்களையும் பிறரையும் காத்தருளிய புராணச் செய்தியை இச்செய்யுள் தழுவி அமைந்தது. இனி, 'கண்ணனை' எனப் பாடங் கொண்டு தேவியைக் குறிப்பதாகவுங் கொள்ளலாம்.

பி - ம். 2. எய்த தனில் வைத்த.
3. உண்ணை வாலத்தை யுண்ட.
4. கண்ணனை யொத்தவனைக், யொத்தவள் காண். (10)

179. கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் கூசிச்
செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள்—கெழுமியவக்
கோமகற்குத் தானினைந்த குற்றங்க ளத்தனையும்
பூமகட்குச் சொல்லுவாள் போல்.

கொழுநன் கொழும் தாரை நீர் வீச - (ஒருத்தி) தன் கணவன் கொழுமையான அதாவது அடர்த்தியான நீர்த்தாரையைத் துருத்தியால் தன் மீது விளையாட்டில் வீச, கூசி - அதனால் கூச்ச மடைந்து, கெழுமிய - அன்பின் மிக்க, கோமகற்கு - அத்தலைவனுக்கு, தான் நினைந்த - தான் கருதிய, குற்றங்கள் அத்தனையும் - குற்றங்கள் யாவற்றையும், பூ மகளுக்குச் சொல்லுவாள் போல் - பூவாகிய ஒரு தன் தோழிக்கு இரகசியமாய்க் கூறுபவள் போல,

செழு முகத்தை - அழகிற் சிறந்த தன் முகத்தை, தாமரைக்கே சேர்த்தாள் - தாமரை மலரினிடத்தே சேர்த்து வைத்துக் கொண்டாள்.

நீர்த்தாரை படக் கூச்சமுற்று முகத்தைத் தாமரை மலரில் மறைத்துக் கொண்ட தோற்றம், தன் கணவன்பால் தான் எண்ணிய தவறுகளை மற்றொரு பெண்ணிடம் தனியே சொல்பவள் போன்று இருந்தது என்று சிறப்பிக்கப் பெற்றது. தன் குறைகளைத் தன் போன்ற ஒரு மகளிடம் சொல்லி ஆறிக்கொள்வது பெண்பால் இயல்பு என்பதை இஃது அறிவிப்பதாகும். பூமகட்கு என்பதற்குத் தாமரையில் உள்ள திருமகளுக்கு என உரை கூறினரும் உளர். அவ்வாறு கொண்டால் தான் தன் கணவன் பால் கொண்ட பிழையைப் பொறுத்தருளத் திருமகளிடம் சென்று வேண்டிக் கொண்டாள் எனலும் அமையும்.

பி - ம். 2. கெழுமியவள். 3. கோமகற்குத் தானிழைத்த.
4. பூமகட்குச் சொல்லுவாள் போன்று. (11)

180. பொய்தற் கமலத்தின் போதிரண்டைக் காதிரண்டில்
பெய்து முகமூன்று பெற்றுள்போல்—எய்த
வருவாளைப் பாரென்றான் மாற்றரை வென்றி
செருவாளைப் பார்த்துவக்குஞ் சேய்.

மாற்றரை வென்றி - பகைவரைப் போரில் வென்று, செருவாளை - தன் போர்வாட்படையை, பார்த்து உவக்கும் - நோக்கிப் பெருமிதத்தால் மகிழும், சேய் - தலைவனை நளன், 'பொய்தல் கமலத்தின் - உட்டொளையுள்ள தாமரையின், போது இரண்டை - இரு புஷ்பங்களை, காது இரண்டில் பெய்து - தன்னிரு காதுகளிற் பொருத்தி வைத்துக் கொண்டு, முகம் மூன்று பெற்றுள் போல் - மூன்று முகங்களை அடைந்தவள் போல, எய்த - பொருந்தியிருக்க, வருவாளை - அதோ வருகின்ற ஒரு பெண்ணை, பார் என்றான் - நீ பார்ப்பாயாக!' என்று நளன் தமயந்திக்குக் காட்டினன்.

பொய்தல் கமலம் - உள்தொளையுள்ள தாமரை; இது தாமரைத் தண்டினுள் துவாரம் உள்ளதைக் குறிப்பிட்டபடி; பொய்தல் - துளையுள்ள; அல்லது துளை செய்த; கம்ப. ஆரணிய: 459; சுந்தர. 912. அவ்வாறின்றி - விளையாட்டிற்காக என்று பொருள் கூறினர் சிலர்; பொய்தல் என்பது மகளிரின் ஒருவகை விளையாட்

டெனினும், அது நீர்நிலையோரத்து ஈர மணலைக் கொண்டு பல வகை உருவங்கள் அமைத்து விளையாடுவது. அதற்கும் இந்தச் செய்யுளிற் கூறும் விஷயத்திற்கும் இயைபு இன்மையால், மேலே கூறிய உரையே பொருந்துமா றுள்ளது காண்க. வீரர்கள் பகை வரை வென்று தம் வாளை நோக்கிப் பெருமிதத்தோடு மகிழ்தல்; கம்ப. சுந்தர. 479, 812; யுத்த. இரணியன்வதைப்: 146.

பி-ம். 2. பெற்றுப்போல்: 3. வருவாளைக் காணென்றான். (12)

181. பொன்னுடைய வாசப் பொகுட்டு மலரிலையத்
தன்னுடனே மூழ்கித் தனித்தெழுந்த—மின்னுடைய
பூணு டிருமுகத்தைப் புண்டரிக மென்றயிர்த்துக்
காணு தயர்வானைக் காண்.

'பொன் உடைய - பொன்னிறத்தைக் கொண்ட, வாச - மணம் மிக்க, பொகுட்டு - கொட்டையையுடைய, மலர் - தாமரைப் பூ, அலைய - அசைந்து அலையும்படி, தன் உடனே மூழ்கி - தன்னோடு கூடத் தடாகத்தில் மூழ்கி, தனித்து எழுந்த - தான் எழும் முன் தனியே மேல் எழுந்திருந்த, மின் உடைய பூணுள் - ஒளி பொருந்திய ஆபரணங்கள் அணிந்த தன் தலைவியின், திருமுகத்தை - அழகிய முகத்தை, புண்டரிகம் என்று அயிர்த்து - தாமரை மலர் என்று ஐயமுற்று, காணாது அயர்வானை - அவளைக் காணாதவனுய் மயங்கி வருந்துகின்றவனை, காண் - நீ பார்!' (என்று நளன் தமயந்திக்குக் கூறினன்.)

பொகுட்டு - கொட்டை; இஃது ஒரு பீடம்போல் உயர்ந்து மேலே தட்டையாக உள்ள தாமரைக்காய்; இதனைக் கர்ணிகா என்பர் வடமொழியில்; இது பொன் போன்ற மஞ்சள் நிறமாய், உள்ளே தாமரை விதைமணிகளை யுடையதாகும். தடாகத்தில் மலர்ந்த பல தாமரைகளுக்கிடையே விளங்கிய தன் தலைவியின் முகமும் ஒரு தாமரை மலரென மயங்கி அவளைக் காணுமல் வருந்தினன் தலைவன் என்பதாம். இது மயக்க அணி.

பி-ம். 1. பொன்னுடை வாச; மலர்ந்த.
2. பொகுட்டு மலர்மலை, பொகுட்டு மலரயலே, மூழ்கித் தனித் தெழுந்த, தனியெழுந்த மின்னிடை.
3. பூரிமதி முகத்தை; பூரை வாண்முகத்தை; புண்டரிக மென் றெண்ணிக். (13)

182. சிறுக்கின்ற வாண்முகமுஞ் செங்காந்தட் கையால்
முறுக்குநெடு மூரிக் குழலும்—குறிக்கில்
கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட காட்சி
அரும்பாம் பணிமுலையா யாம்.

'அரும்பு ஆம் பணி முலையாய் - அரும்பு போல் உரு அமைந்த பருத்த தனங்களை யுடையவளே! சிறுக்கின்ற வாள் முகமும் - சுருங்குகின்ற ஒளி பொருந்திய முகத்தையும், செம் காந்தள் கையால் - செங்காந்தள் பூப்போன்ற தன் கைகளால், முறுக்கு - முறுக்கி நீரைப் பிழிகின்ற, மூரி நெடு குழலும் - பெரிய நீண்ட கூந்தலையும், குறிக்கில் - குறிப்பிட்டுக் கூறுமிடத்து, கரும் பாம்பு - கரிய இராகு என்னும் பாம்பு, வெண் மதியை - வெண்நிறமான சந்திரனை, கை கொண்ட காட்சி ஆம் - (விழுங்கப்) பற்றிக் கொண்ட தோற்றமாகும்.

மகளிர் கொங்கைக்கு அரும்பு; அதன் உருவ ஒப்புமையால்; அரும்பு: தாமரை மலரரும்பு. 'அருப்பேந்திய கலசத்துணை யமுதேந்திய மதமா மருப்பேந்திய தெனலா முலை மழையேந்திய குழலாள்' (கம்ப. அயோத்: கங்கைப்: 6). சிறுக்குதல் - சுருங்கச் செய்தல்; கூந்தலின் நீரைப் பிழியும் போது முகம் சுருக்கங் கொள்ளல். காந்தள் மலர் கைக்கு உவமை; 172. மூரி - பெருமை; (பிங்.) சந்திர சூரியர்களை இராகு கேதுக்கள் என்னும் பாம்புகளாகிய கோள்கள் பற்றும் என்ற புராணக் கதையை ஒட்டி இங்கு உவமிக்கப் பெற்றது. இங்குக் கூந்தலுக்குக் கரும்பாம்பும் முகத்திற்கு மதியும் உவமைகள்; ஒப்பு. கம்ப. சுந்தர. 339; உரை.

பி - ம். 2. முறுக்குகின்ற மூரிக்குழலும்; குறிக்கொள்.
4. அரும்பார் முலையா யறி; அரும்பாம் முலையா யறி; பணி முலையா ளாங்கு. (14)

183. சோர்புனலின் மூழ்கி யெழுவாள் சுடர்நுதன்மேல்
வார்குழலை நீக்கி வருந்தோற்றம்—பாராய்
விரைகொண் டெழுந்தபிறை மேகத் திடையே
புரைகின்ற தென்னலாம் பொற்பு.

சோர் புனலில் மூழ்கி எழுவாள் - ஓடுகின்ற நீரில் முழுகி மேல் எழுகின்ற ஒரு பெண், சுடர் நுதல் மேல் வார் குழலை - தன் ஒளி வீசும் நெற்றியின் மீது படிந்த நீண்ட கூந்தலை, நீக்கி வரும்

தோற்றம் - விலக்கிக் கொண்டு நீரினின்று எழுந்து வருகின்ற காட்சி, மேகத்து இடையே - மேகத்தினிடையே இருந்து, விரை கொண்டு - வேகமாக, எழுந்த - எழுந்து வெளிப்பட்டு வந்த, பிறை புரைகின்றது என்னல் ஆம் பொற்பு - பிறைமதியை ஒக்கின்றது என்னும் அழகையுடையது ஆகும். பாராய் - இதனை நீ காண் பாயாக!'

சோர்தல் - தளர்தல் அல்லது வடிதல் என்னும் நீருக்கு உரிய தன்மையும் ஆம். புரைதல் - ஒத்தல்: புரைய - உவமை உருபு. இனி, விரை கொண்டு எழுந்த பிறை வேகமாக மேற் கிளம்பி வந்த பிறை, மேகத்து இடையே - மேகத்தின் நடுவே, புரைகின்றது - மறைகின்றது, என்னலாம். பொற்பு - என்று கூறத்தக்க அழகை, பாராய் - நீ காண்பாயாக, என்று பொருள் கூறலும் ஒன்றும். புரைதல் - மறைதல்; சிலப். 14 : 76–82; அடியார்க். உரை. கூந்தல் - மேகத்திற்கும், நெற்றி - பிறைக்கும் உவமைகள். வார்குழல் - நீண்டு தொங்கும் குழலும் ஆம்.

பி - ம். 3. விரைகொண் டெழுந்தபிறை, விரைதன்று கோதையாய்; கூந்தலாய் மேகத் திடைமின்.

4. புரைகின்ற வாண்மதியாம் பொற்பு; வாண்மதியம் போல்.

184. செழுநீல நோக்கெறிப்பச் செங்குவளை கொய்வாள்
முழுநீல மென்றயிர்த்து முன்னர்க்—கழுநீரைக்
கொய்யாது போவாளைக் கோல்வளைக்குக் காட்டினான்
வையாரும் வேற்றடக்கை மன்.

வை ஆரும் வேல் தடகை மன் - கூர்மை பொருந்திய வேலேந்திய நீண்ட கையையுடைய அரசனை நளன், செம் குவளை கொய்வாள் - செங்கழுநீர் மலர்களைக் கொய்யும் ஒரு பெண், நோக்கு - தனது கண்கள், செழு நீலம் எறிப்ப - செழுமையான நீல நிற ஒளியை அம்மலர்மீது வீச, முழு நீலம் என்று அயிர்த்து - அச்செங்கழு நீர் மலர்களைக் கருங்குவளை மலர்கள் என்று ஐய முற்று, முன்னர் கழு நீரை - தன் எதிரில் இருந்த அச் செங்கழு நீர் மலர்களை, கொய்யாது - பறிக்காமல், போவாளை - அப்புறம் செல்கின்றவளை, கோல்வளைக்கு காட்டினான் - அழகிய அல்லது நிரண்ட வளையல்கள் அணிந்த தமயந்திக்குக் காட்டினான்.

தன் கண்களின் கரு நிற ஒளி போய்ப் பாய்ந்ததால் செங் குவளை மலர்கள் கருங்குவளை மலர்கள் போல் ஒளிமாறி விளங்கக் கண்டு அவற்றைக் கருநீல மலரென்று கொய்யாமல் அகன்றாள்

என்க. முன் 'நித்திலத்தின் பொற்றேடு' என்ற (127-ம்) செய்யுளையும் அதன் உரையையும் ஒப்பு நோக்குக. இதுவும் மயக்கவணியின் பாலதே. கோல்வளை : சித்திர வேலைப்பாடமைந்த வளையல் அணிந்த தமயந்தி; இது அன்மொழித் தொகை; 'கொச்சை மாந்தரைக் கோல்வளை மகளிருங் கூசார்'; 'தேர்மிசை கோல்வளையாள், கண்டாள் தனதாருயிர் கண்டிலளாள்'; (கம்ப. ஆரணிய.: 503, 879).

பி - ம். 3. முன்னிற் கழுநீரை. 4. வையாரும் வேற்றுளை மன். (16)

நளன் தமயந்தியுடன் பல நதி முதலியவற்றில் நீராடியது

185. காவி பொருநெடுங்கட் காதலியுங் காதலலும்
ஆவியு மாறுங் குடைந்தாடித்—தேவின்
கழியாத சிந்தையுடன் கங்கைநதி யாடி
ஒழியா துறைந்தா ருவந்து.

காவி பொரு நெடும் கண் காதலியும் - நீலோற்பலம் போன்ற நீண்ட கண்களையுடைய காதலியாகிய தமயந்தியும், காதலனும் - காதலனாகிய நளனும், ஆவியும் ஆறும் குடைந்து ஆடி - பல தடாகங்களிலும் நதிகளிலும் மூழ்கி நீராடி, தேவின் கழியாத - கடவுளிடத்து நீங்காத, சிந்தையுடன் - மனத்தோடு, கங்கை நதி ஆடி - கங்கை ஆற்றில் நீராடி, ஒழியாது - ஒருவரை யொருவர் விட்டு நீங்காது, உவந்து - மனம் மகிழ்ந்து, உறைந்தார் - தங்கி வாழ்ந்திருந்தார்.

காவி - நீலோற்பலம் என்னும் குவளை மலர்; கண்ணுக்குக் குவளை மலர்; இஃது, இந்நூலிற் பரக்கக் காணலாம். ஆவி - பொய்கை அல்லது தடாகம். கம்ப. சுந்தர : 707, கிட்கிந்தா. பம்பைப் : 26; திருவெங்கைக் கோவை; 24. இது வாவி என்பதன் திரிபு : வாபி : வடமொழி. பல நதிகளில் ஆடிக் கங்கை நதி ஆடினர்; கங்கைக்குள்ள தனிச் சிறப்பு நோக்கித் தனியே பிரித்துக் கூறப்பெற்றது.

இச் செய்யுள் ஓர் ஏட்டுப் பிரதியில் அடியிற் காணுமாறு மாறியுள்ளது;

காவி பொருநெடுங்கட் காரிகையுங் காவலனும்
ஆவி குடைந்தாடு மாதரவாற்—றேவிற்
கழியாத நீரோடுங் கங்கைநதி யாடி
ஒழியா துவந்தா ரொருங்கு. (17)

186. நறையொழுக வண்டுறையு நன்னகர்வாய் நாங்கள்
உறையு மிளமரக்கா வொக்கும் - இறைவளைக்கைச்
சிற்றிடையாய் பேரின்பத் தேமொழியாய் மென்முறுவல்
பொற்றெடியாய் மற்றிப் பொழில்.

'இறை வளை கை - வரிகள் அமைந்த வளையல்கள் அணிந்த கைகளையும், பேர் இன்ப - பெரிய இன்பத்தை அளிக்கும், தே மொழியாய் - தேன் போன்ற சொற்களையும், மெல் முறுவல் பொன் தொடியாய் - மென்மையான புன் சிரிப்பையும் பொன்னாலான தோள் வளைகளையுமுடையவளே! இ பொழில் - இந்தச் சோலை, நறை ஒழுக - தேன் ஒழுகி வர, வண்டு உறையும் - வண்டுகள் அத் தேனில் மொய்த்திருக்கும், நல் நகர்வாய் - அழகிய அல்லது வளமிக்க மாவிந்தம் என்னும் எங்கள் நகரத்தில், நாங்கள் உறை யும் - நாங்கள் வந்து தங்கியிருக்கும், இள மர கா ஒக்கும் - இளமை யான மரங்கள் நிறைந்த சோலையை ஒத்திருக்கின்றது;' (என்று நளன் தமயந்திக்கு ஒரு சோலையைக் காட்டிக் கூறினான்.) மற்று : அசை.

இறைவளை - முன் கையில் அணிந்த வளைகள், அல்லது சிறந்த வளைகளும் ஆம்; இறை : பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல். தொடி : மற்ற வளைகள் கழலாமல் இருக்க, முன் கையில் பதிந்தாற் போல் அணியும் வளையும் ஆம்.

பி - ம். 1. வண்டிரையும்.
3. பேரல்குற் றேமொழியாய்; பேரின்பத் தேன்மொழியாய். (18)

தமயந்தியின் ஊடல்

187. கன்னியர்தம் வேட்கையே போலுங் களிமழலை
தன்மணிவா யுள்ளே தடுமாற—மன்னவனே
இக்கடிகா நீங்க ளிறையு மிளமரக்கா
ஒக்குமதோ வென்ரு ளுயிர்த்து.

கன்னியர் தம் வேட்கையே போலும் - அரசனுக்கு மகளிர் பால் கொண்ட ஆசையையே இது குறிக்கின்றது போலும் எனக் கருதி, (அதனால்) தன் மணி வாய் உள்ளே - தமயந்தி தன் பவழம் அல்லது மாணிக்க மணி போன்ற சிவந்த வாயின் உள்ளே, களி மழலை தடுமாற - மகிழ்ச்சியை உண்டாக்கும் தனது மழலை மொழிகள் பேசமுடியாமல் கோபத்தால் தடுமாற்ற மடைய, உயிர்த்து.

பெரு மூச்சுவிட்டுக்கொண்டு, 'மன்னவனே - அரசனே! இ கடி கா - இந்த மணமிக்க சோலை, நீங்கள் உறையும் - நீங்கள் வந்து தங்கியிருந்து மகிழும், இள மர கா ஒக்கும் அதோ - இள மரச்சோலையை ஒப்பு ஆகும் போலும்?' என்றுள் - என்று வினவினாள்.

இனி, கன்னியர்தம் வேட்கையே போலும் என்பதற்கு, கன்னிமார்கள் தம் ஆசையை வெளிப்படக் கூறமாட்டாதது போன்ற கழிமழலை தன் மணிவா யுள்ளே தடுமாற வெளிக்காட்டாது எனப் பொருள் கொண்டாரும் உளர். ஆனால், தமயந்தியின் கோப முதிர்ச்சி பின் வரும் இரு (187, 188) செய்யுள்களால் விளங்குவதாலும், பின் (189)-இல் நளன், அவள் கொண்ட கோபந்தணிவிக்க எடுத்துக்கொண்ட செயலாலும் அவள், நளன் பிற மகளிர்பாற் கொண்ட வேட்கையை உணர்ந்தவளாய்ச் சினந்து கூறிய தே ஆகும் என்பது தெளிவாகும்.

இஃது, அகப்பொருட் டுறைகளுள் புலவி நுணுக்கம் எனப்படும்.

'யாரினுங் காதல மென்றேனு னூடினுள்
யாரினும் யாரினு மென்று'; என்ற (1314) குறட்பாவும்,

"செம்மாந்த தெங்கின் னிளநீரையொர் செம்மனேக்கி
அம்மாவிவை மங்கையர் கொங்கைக ளாகுமென்ன
எம்மாதர் கொங்கை யிவையெப்பன வென்றுரேழை
விம்மா வெதும்பா வெயராமுகம் வெய்துயிர்த்தாள்"

என்ற (கம்ப. பால, பூக்கொய் : 17) பாசுரமும் இக்கருத்தைத் தழுவி அமைந்தமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கனவாம்.

பி - ம். 2. யுள்ளே தடுமாறி. 4. ஒக்கும்மே ரென்று ளுவர்ந்து ; ளுணர்ந்து.

188. தொண்டைக் கனிவாய் துடிப்பச் சுடர்நுதன்மேல்
வெண்டரள மென்ன வியர்வரும்பக்—கெண்டைக்
கடைசிவப்ப நின்றுள் கழன்மன்னர் வெள்ளைக்
குடைசிவப்ப நின்றுன் கொடி.

கழல் மன்னர் வெள்ளை குடை சிவப்ப நின்றுன் கொடி - வீரக் கழல்கள் அணிந்த பகை அரசர் தம் வெண்ணிறக் குடைகள் அவர்களுடைய இரத்த வெள்ளம்பட்டுச் சிவந்து போகும்படி போரிற் பொருது வெற்றிகொண்டு நின்ற வீமராஜன் மகளான கொடி போன்ற தமயந்தி, தொண்டை கனி வாய் துடிப்ப - ஆதொண்டைக் கனி போன்ற தன் வாய் இதழ் துடிக்கவும், சுடர் நுதல் மேல் - ஒளி

வீசும் தன் நெற்றிமீது, வெண் தரளம் என்ன - வெண்முத்துக்கள் என்று சொல்லத்தக்கனவாய், வியர்வு அரும்ப - வியர்வை நீர் தோன்றவும், கெண்டை கடை சிவப்ப - கெண்டை மீன்கள் போன்ற தன் கண்களின் நுனி சிவப்பாகவும், நின்ருள் - சினங்கொண்டு நின்ருள்.

உதடு துடித்தலும், வியர்வை அரும்பலும், கட்கடை சிவப்பா தலும் வெகுளியிற் ருேன்றும் மெய்ப்பாடுகள். இச் செய்யுளில், பல நிறபேதங்கள் மயங்கித் தொடர்ந் துள்ளமையால் இது முரண் தொடையில் வந்த மயக்கவணியாகும். தொண்டை : ஆ தொண்டை என்பதன் முதற்குறை, கெண்டை : உவமை ஆகுபெயராய் கண் ணேக் குறிப்பது. அரும்பிய வியர்வை நீருக்கு முத்துக்கள் உவமை ; ' நித்திலக் குறுவியர் பத்தியிற் றுடைக்கும் '; (பெருங். 4 : 12 : 233). மகளிருக்குக் கொடி உவமை ; 52, 188, 277. (20)

189. தங்கள் புலவித் தலேயிற் றனித்திருந்த
மங்கை வதன மணியரங்கில்—அங்கண்
வடிவாண்மேற் கால்வளேத்து வார்புருவ மென்னும்
கொடியாடக் கண்டானேர் கூத்து.

தங்கள் புலவி தலேயில் - தங்களுள் ஏற்பட்ட ஊடற் பிணக்கத் தின் இடமாய், தனித்து இருந்த - ஒன்றியாய் விலகியிருந்த, மங்கை - தமயந்தியின், வதன மணி அரங்கில் - முகமாகிய அழகிய மேடையி னிடத்து, அம் கண் வடி வாள் மேல் - அழகிய தன் கண்களாகிய கூரிய வாட்களின் மீது, வார் புருவம் என்னும் கொடி - நீண்ட புருவங்கள் என்னும கொடி போன்ற இரு பெண்கள். கால் வளேத்து - தம் காலகளே வளேத்து, ஓர் கூத்து ஆட கண்டான் - ஒரு கூத்தாடியது போன்ற காட்சியை நளன் கண்டான்.

தமயந்தியின் முகம் கூத்தாடும் அரங்கமாகவும், புருவங்கள் கூத்தாடும் கன்னியராகவும், அவள் கண்களே வாள்களாகவும் உருவக அணியிற் கூறப்பெற்றன. தமயந்தியின் ஊடலின் உச்ச நிலேயில் உண்டான வெகுளியின் மெய்ப்பாடுகளே, இரு கன்னியர் கள் வாள்மீது நின்று ஆடும் நிலேயில் சித்திரிக்கப் பெற்றது.

பி - ம். 1. புலவித் தயரிற் றனியிருந்த, புலவித் தலேகொள்ள லீற்றிருந்த, புலவித் தலேயி லினிதிருந்த.
2. தங்க, அங்கை. 3. வடிவான்மேற் காலெடுத்த. (21)

தமயந்தி புலவி தவிர்ந்தது

190. சில்லரிக் கிண்கிணிமென் றெய்வமலர்ச் சீறடியைத்
தொல்லை மணிமுடிமேற் சூட்டினன்—வல்லை
முழுநீலக் கோதை முகத்தே மலர்ந்த
செழுநீல மாறிச் சிவப்பு.

சில் அரி - சிறிய பருக்கைக் கற்களை உள்ளேயுடைய, கிண்கிணி - சதங்கைகளை யணிந்துள்ள, மென் - மென்மையான, தெய்வ மலர் சீறடியை - தெய்வத் தன்மையுடைய செந்தாமரை மலர் போன்ற தமயந்தியின் சிற்றடிகளை, தொல்லை மணி முடிமேல் - தன் மூதாதையர் மரபில் தொன்று தொட்டு அணிந்து வரும் தன் இரத்தின கிரீடத்தின் மீது, சூட்டினன் - புனைந்து கொண்டான்; வல்லை - உடனே அல்லது விரைவில், முழு நீல கோதை - முழுவதும் கருமையான கூந்தலையுடைய தமயந்தியின், முகத்தே - முகத்தினிடத்தே யுள்ள, செழு நீலம் - செழிப்பான குவளை மலர் போன்ற கண்கள், சிவப்பு மாறி மலர்ந்த - முன் கோபத்தால் உண்டான சிவப்பு நிறம் மாறி, இயற்கையான கருநிற மடைந்து பிரகாசித்தன.

கிண்கிணி: ஒலி காரணமாக வந்த பெயர்; துந்துபி, டங்கா, டமாரம் என்பன போல. தெய்வ மலர் - தெய்வத் தன்மை பொருந்திய பரிசுத்தமான தாமரை மலர்; தெய்வத் தாமரைத் திருமகள் (பெருங். 1: 34: 149) என்றதும் நோக்குக. திருமகட் செல்வியும், சதுர்முகத் தேவனும் விரும்பி இடமாகக் கொண்டிருக்கும் தாமரை யென்றும், தேவ பூஜைக்குச் சிறந்த மலரான தாமரை யென்றுங் கொள்ளலாம். சிறடி: சிறுமை அடி; சிறடியை.....சூட்டினன். அவள் பாதத்தில் தன் முடிபட வணங்கினன். இது, ஊடலில் தலைவனது தாழ்ந்த நிலையைக் குறிப்பதாகும். தலைவன் ஊடல் தணியத் தலைவியை வணங்குவது; 'பொம்மென்பரி புரநாண்மலர் பொற்சென்னியில் வைத்தும்' (வி. பா. அருச்சுனன் தீர்த்த: 9). ஊடலினும் வணங்கா வொருபது முடியோன் என்று இராவணனையும், வணங்குதல் மகளிர் ஊடல் நாளினு முளதோ' என்ற இரணியனையும், 'வணங்காத் தன்மைக்கு உச்சநிலையில் வைத்துக் கூறியுள்ள சிறப்பால், ஊடல் தணிவிக்கத் தலைவியைத் தலைவன் வணங்குவது உண்டு என்பது பெறப்பெற்றமை காண்க; ஒப்பு: கப்பற் கோவை: 241 நோக்குக.

பி - ம். 1. கிண்கிணிக்காற் தெய்வச் சிறுபூவை.
2. நல்ல, அல்லி. 3. முகத்தே இடந்த.
4. செழுநீல மாறுச் சிவப்பு, செழுநீல மார்த்த சிவப்பு. (22)

ஊடல் நீங்கித் தமயந்தி நளனுடன் கூடி மகிழ்ந்தது

191. அங்கைவேல் மன்ன னகல மெனுஞ்செறுவில்
கொங்கையோர் பூட்டிக் குறுவியர்நீர் — அங்கடைத்துக்
காதல் வரம்பொழுக்கிக் காமப் பயிர்விளைத்தாள்
கோதையரின் மேலான கொம்பு.

கோதையரின் மேல் ஆன கொம்பு - மகளிருள் மேம்பட்ட வளரும், பூம் கொம்பு போன்றவளு மான தமயந்தி, அம் கை வேல் மன்னன் - அழகிய தன் கையில் வேல் ஏந்திய அரசனான நளனுடைய, அகலம் எனும் செறுவில் - மார்பு என்னும் வயலிடத்து, கொங்கை ஏர் பூட்டி - தனது தனங்கள் என்னும் ஏர்களைப்பூட்டி உழுது, குறுவியர் நீர் அங்கு அடைத்து - தன் சிறு வியர்வையாகிய நீரை அதனில் பாய்ச்சித் தேக்கி, காதல் வரம்பு ஒழுக்கி - காதல் என்னும் வரப்புக்களை நேராய் அமைத்து, காமம் பயிர் விளைத்தாள் - காமமாகிய ஒரு பயிர் விளையுமாறு செய்தாள்.

'ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம், கூடி முயங்கப் பெறின்' (குறள் : 1330) என்றபடி, முன், 187 முதல் 189 வரை கூறப்பெற்ற ஊடலின் விளைவாகக் கூடலின்பம் இங்குக் கூறப்பெற்றது. கோதையரின் மேலான கொம்பு என்றது : தமயந்தி, கற்பின் அருந்தெய்வமாகிய சீதாப்பிராட்டியே பாராட்டும் பெருமை வாய்ந்தவள் ஆதலின் என்க; (வான்மீக ராமாயணம், சுந்தரகாண்டம், சர்க்கம் 24.) முன், வீரனகலச் செறுவின் என்ற தொடக்கத்து (166) செய்யுளின் கருத்தின் தொடர்புடையதாய் இச்செய்யுள் அமைந்துள்ளமை காண்க.

இனி,

இன்சொல் விளைநிலனு ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டி வாய்மை யெருவொட்டி
அன்புநீர் பாய்ச்சி யறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய் ; (அறநெறிச்சாரம் : **112**);

மெய்ம்மையா முழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப்
தன்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச் [பாய்ச்சி
செம்மையு ணிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே.

(திருநாவுக். தேவாரம் : பதிகம் 76 : 2.)

என்பன பயிர்த்தொழின் முறையின் சிறப்பை விளக்குவனவாகச் சித்திரிக்கப் பெற்றமை இங்கு ஒப்பு நோக்குதற் குரியனவாம். (23)

நள தமயந்தியர் கங்கை கண்டது

192. வேரி மழைதுளிக்கு மேகக் கருங்கூந்தல்
காரிகையுந் தானும்போய்க் கண்ணுற்ருன்—மூரித்
திரையேற மென்கிடங்கிற் சேலேற வாளை
கரையேறுங் கங்கைக் கரை.

மூரி - வலிய, திரை - அலைகள், ஏற - ஏறிப்பாய்வதால், மென் கிடங்கில் - அருகேயுள்ள சிறு பள்ளங்களில், சேல் ஏற - சேல் என்னும் சிறிய கெண்டை மீன்கள் ஏற விழவும், வாளை - வாளை என்னும் பெருமீன்கள், கரை ஏறும் - கரைகளின்மீது துள்ளி ஏறு வனவுமான, கங்கை கரை - கங்கை நதிக் கரையை, வேரி மழை துளிக்கும் - தேனுகிய மழையைச் சொரியும், மேகம் கரும் கூந்தல் - மேகம் போன்ற கரிய கூந்தலையுடைய, காரிகையும் - தமயந்தியும், தானும் - நளனுகியதானும், போய் கண்ணுற்ருன் - போய்க் கண்டான்.

காரிகையும் தானும் கண்ணுற்ருன் என முடிவுற்றது ; கண் ணுற்ருன் என்றது, நளன் தமயந்தி இருவருள் நளன் தலைவன் என்ற சிறப்புப்பற்றி என்க. இது பால் வழுவமைதியும் ஆகும். முன் 'வாணுதலுந் தானும் புணர்ந்தான் நெடுங்காலம் புக்கு' (168) என்றதைப் போன்றது ; அச்செய்யுளையும் அதன் உரையையும் நோக்குக. சேல்கள் மீன் வகையிற் சிறியனவாதலின், அவை அருகே யிருந்த பள்ளங்களிலும், வாளை பெரிய மீனினம் ஆதலின், அவை உயரமான கரைமீதும் பாய்ந்து சென்றன என்பதாம். வேரியை மழை என்றதற்கு ஏற்பக் கூந்தலை மேகம் என்னப்பட்டது, (24)

அவர்கள் ஒரு பொழிலை அடைந்தது

193. சூதக் கனியூற லேற்ற சுருள்வாழை
கோதி னறவேற்குங் குப்பியென—மாதரார்
ஐயுற்று நோக்கு மகன்பொழில்சென் றெய்தினுன்
வையுற்ற வேற்ருனை மன்.

வை உற்ற வேல் தானை மன் - கூர்மை பொருந்திய வேற்படைச் சேனையையுடைய அரசனுன நளன், சூத கனி ஊறல் - மாம்பழங் கள் கனிந்து ஒழுகிய சாற்றை, ஏற்ற - தாங்கிய, சுருள் வாழை - வாழைக் குருத்துக்கள், கோது இல் நறவு ஏற்கும் குப்பி என - குற்றமற்ற மதுவைத் தாங்கியிருக்கும் புட்டில்கள் என்று எண்ணி,

மாதரார் - மகளிர், ஐ உற்று நோக்கும் - சந்தேகப்பட்டுப் பார்க்கும், அகன் பொழில் - இடமகன்ற ஒரு சோலையில், சென்று எய்தினன் - போய் அடைந்தான்.

சூதம் - மா ; வடசொல். ஊறல் - ஊறிக்கனிந்த சாறு.

பி - ற். 1. கனித்தேற. 2. நறவேற்ற குப்பியென.
3. ஐயுற்று நாணு மகன்பணி சென்று. (25)

நளன் தமயந்திக்குத் தன் வளநகரைக் காட்டியது

194. வான்றோய் நீண்டுயர்ந்த மாடக் கொடிநுடங்கத்
தான்றோன்று மற்றித் தடம்பதிதான்—வான்றோன்றி
வில்விளக்கே பூக்கும் விதர்ப்பனு டாளுடையான்
நல்விளக்கே யெங்க ணகர்.

'விதர்ப்ப நாடு ஆள் உடையான் - விதர்ப்ப நாட்டை ஆளுதலை யுடைய வீமராஜனது, நல் விளக்கே - அழகிய விளக்குப் போன்ற பெண்ணை தமயந்தி ! வான் தோய் - வானத்தைப் போய்த் தொடும் படி, நீண்டு உயர்ந்த - நீளமாய் உயர்ந்துள்ள, மாட - மாடங்களில் கட்டப்பெற்ற, கொடி - கொடிகள், நுடங்க - காற்றில் மடங்கி அசைந்து கொண்டிருக்க, தோன்றும் - விளங்குகின்ற, இ தடம் பதி தான் - இந்த விசாலமான நகரந்தான், வில் - அதன் ஒளியால் வான் தோன்றி - ஆகாயத்தில் விளங்கி, விளக்கே பூக்கும் - விளக்குக்கள் போல மலர்ந்து விளங்கும், எங்கள் நகர் - எங்கள் மாவிந்த நகரமாகும்.' (என்று நளன் தமயந்தியை நோக்கிக் குறிப் பிட்டுக் கூறினன்.)

வான்தோன்றி வில்விளக்கே பூக்கும் என்பதை விதர்ப்ப நாட்டிற்கு இயைத்து, வான்தோன்றி - சிறந்த தோன்றி என்னும் செங்காந்தள் மலர்கள் வில் - தம் ஒளியினால், விளக்கே பூக்கும் - விளங்குக்கள் போலப் பூக்கும் என்றும், கொள்வர். தமயந்திக்கு விளக்கு ; 71, 292.

பி - ம். 1. தான்றோபு மற்றத் தடம்பொழில்வாய் ; மீன்றோன்றும்.
3. வில்விளக்கே பூத்த. (26)

நளன் பன்னிரண்டாண்டுகள் தமயந்தியோடு மகிழ்ந்திருந்தது

195. பொய்கையும் வாசப் பொழிலு மெழிலருவிச்
செய்குன்று மாறுந் திரிந்தாடித்—தையலுடன்
ஆறிரண்டாண் டெல்லை கழித்தா னடையலரைக்
கூறிரண்டாக் கொல்யானைக் கோ.

அடையலரை - பதைவரை, கூறு இரண்டு ஆ - இரு பகுதி களாக, கொல் - கிழித்துக் கொல்லும், யானை - யானையையுடைய, கோ - அரசனை நளன், தையல் உடன் - தமயந்தியோடு, பொய்கை யும் - தடாகம் முதலிய நீர் நிலைகளிலும், வாசம் பொழிலும் - மண மிக்க சோலைகளிலும், எழில் அருவி செய் குன்றும் - அழகிய அருவி கள் ஓடும்படி அமைக்கப்பெற்ற செய்குன்றுகளிலும், ஆறும் - நதிகளிலும், திரிந்து ஆடி - ஆங்காங்குச் சென்று நீராடியும் தங்கி யிருந்தும், ஆறு இரண்டு ஆண்டு எல்லை கழித்தான் - பன்னிரண்டு வருடகாலம் வரை மகிழ்ந்திருந்தான்.

பொய்கை - இயற்கையாய் அமைந்த நீர் நிலை, எனினும் இங்கு, தடாகம், ஏரி முதலியனவற்றையும் குறித்து நின்றது என்னலாம். செய்குன்று - பொழுது போக்கு விளையாட்டுக்காக அமைக்கப் பெற்ற செயற்கை மலை. அருவிச் செய்குன்று என்றமையால், செயற்கை யால் அருவிகள் ஓடும்படி அமைக்கப் பெற்ற செய்குன்று என்க.

பி-ம். 2. நினைத்தாடித் தையலோ(டு)
3. கடந்தா னடையலரைக் ; கழிந்தா னடையார்.
4. கூறிரண்டாக் கொல்லியானைக் கோ. (27)

தமயந்தியின் மக்கட் பேறு

196. கோல நிறம்விளர்ப்பக் கொங்கை முகங்கருக
நீல நிறமயிர்க்கா லின்றெறிப்ப—நூலென்னத்
தோன்றுத நுண்மருங்கு ருேன்றச் சுரிகுழலாள்
சான்றாள் குழவி யிரண்டு.

கோல நிறம் விளர்ப்ப - அழகிய உடலின் நிறம் வெளுப்படைய, கொங்கை முகம் கருக - தனங்களின் முகமாகிய காம்புகள் கருநிற மடைய, மலர் கால் நீல நிறம் எறிப்ப - கூந்தலின் அடி நீலநிற மாய் ஒளிவீச, நூல் என்ன - மெல்லிய நூல் என்று சொல்லும் படி, தோன்றுத நுண் மருங்குல் - பார்ப்போர்க்குத் தெரியாத நுட்ப மான இடை, தோன்ற - ஒருவாறு காணும்படி விளங்க, சுரி குழலாள்-

சுருண்ட கூந்தலையுடைய தமயந்தி, இரண்டு குழவி ஈன்றாள். இரு குழந்தைகளோ அப்பன்னிரண்டாண்டுகளுக்கிடையில் பெற்றாள்.

இச் செய்யுள் கருவுற்ற மகளிர் தம் உடலில்தோன்றும் மாறு பாடுகள் விளக்கப்பெற்றன. ஒப்பு : சீவக. 231 ; நைடத. சூதாடு : 2 ; பிரபுலிங்க. மாயையுற் : 27. ஈன்றாள் குழவி யிரண்டு என்றமை யால் ஒரே பிரஸவத்தில் இரு குழந்தைகளைப் பெற்றாள் எனக் கொள்ளற்பால தன்று. இது.

'மழகளி றனைய நம்பி பிறையென வளரு நாளிற்
கழைபுரை தோளி பின்னோர் கன்னியை யுயிர்த்தாள் ;'

என நைடத நூலுங் கூறுவதால் விளங்குவது காண்க ; (நைடதம் சூதாடு படலம் : 4) குழவி - குழந்தை.

பி-ம். 1. நிறம் வெளுப்ப ; கருகி. 2. தாலன்ன.
3. தோன்றத் தணைமுலையாள், தோன்றப் புணர்முலையாள். (28)

கலி நளனைச் சார முடியாதிருந்தது

197. ஆண்டிரண்டா றெல்லை யளவுந் திரிந்தேயும்
காண்டகைய வெங்கலியுங் காண்கிலான்—நீண்டபுகழ்ச்
செந்நெறியாற் பார்காத்த செங்கோ லிலவேந்தன்
தன்னெறியால் வேறோர் தவறு.

காண் தகைய - (பிறர் பால் குற்றங் காண்பதில்) திறமையுள்ள வெம் கலியும் - கொடிய கலியும், இரண்டு ஆறு ஆண்டு எல்லை அளவும் - பன்னிரண்டு ஆண்டு அளவு வரைக்கும், திரிந்தேயும் - நளன் உடன் சென்று பார்த்துக்கொண்டு வந்தும், நீண்ட புகழ் செம் நெறியால் - வளர்ந்தோங்கிய புகழ்பெற்ற சிறந்த நீதி நெறிப்படி, பார் காத்த - பூமியைக் காத்து ஆண்டு வந்த, செம் கோல் - செங் கோலையுடைய, நில வேந்தன் தன் - புவிக்கு அரசனை நளனுடைய, நெறியால் - ஒழுக்கத்தால், வேறு - மாறுபட்ட, ஓர் தவறு - ஒரு குற்றத்தை, காண்கிலான் - காண முடியாதவன் ஆனன்,

கலியும் : உம்மை, உயர்வு சிறப்பினது ; அளவும் - உம்மை, எடுத்துக்கொண்ட முயற்சியின் மிகுதியையும் குறித்து நின்றது. வேறோர் தவறு, என்பதற்கு அடுத்த செய்யுளில் கூறப்பெறும் ஒரு சிறு குற்றமின்றி வேறு ஓர் தவறு என வருவித்து உரை கூறினரும் உளர்.

பி - ம். 1. ஆண்டீரா றெல்லை.
3. சென்னெறியாற், செந்நெறியிற் பார்க்குஞ் செங்கோனில வேந்தன். 4. தன்னெறியில். (29)

கலி நளனைச் சேர்ந்தது

198. சந்திசெயத் தாள்விளக்கத் தாளின்மறுத் தான்கண்டு
புந்தி மகிழப் புகுந்துகலி—சிந்தையெலாம்
தன்வயமே யாக்கித் தமைய னுடனிருந்தான்
பொன்னசல மார்பற் புகைந்து.

சந்தி செய - (ஒரு நாள் நளன்) சந்தியாவந்தனம் செய்வதற்கு முன்னே, தாள் விளக்க - தன் கால்களைக் கழுவிச் சுத்தஞ் செய்துகொள்ள, கலி - கலி புருடனை சனி, தாளின் மறு தான் கண்டு - நளனது பாதத்தில் ஒரு சிறு பகுதி கழுவாமல் அசுத்த மாக இருந்தது கண்டு, பொன் அசல மார்பற் புகைந்து - பொன் மலை அதாவது மேரு மலைபோன்ற மார்பையுடைய நளன்பாற் பகைமை கொண்டு, புந்தி மகிழ புகுந்து - தன் மனம் களிப்புற அந்த நளனிடம் பிரவேசித்து, சிந்தை எல்லாம் தன் வயமே ஆக்கி - அவன் மனம் முழுவதும் தன் வலிக்குள் அடங்கச் செய்து, தமயன் உடன் இருந்தான் - தனக்குத் தமயன் முறையில் உள்ள துவாபரனுடன் சேர்ந்திருந்தான்.

நளன் ஜல மோசனம் செய்த பிறகு கால் கைகளைச் சுத்தஞ் செய்து கொள்ளாமையால் அசுத்தி ஏற்படக் கலி அந் நளனிடத் திற் பிரவேசித்து அவன் மனத்தைத் தன் வசப்படுத்திக் கொண் டான் என வடமொழி பாரத நளோபாக்யானமும், சேவடி கழுவலின் றிச் செய்கடன் கழித்தல் நோக்கி' என்றுங் (தமிழ் நைடதம்) கூறு வன காணலாம். அசலம் - சலிக்காதது என்னும் பொருளில் மலைக்குப் பெயராயிற்று; இது வடசொல். சந்தி: இரவும் பகலும் சேரும் நேரங்களில் செய்யும் அனுட்டானம். இது கால ஆகுபெய ராய் அவ்வேளையிற் செய்யுஞ் சடங்குக்கு ஆயிற்று. சந்தி நோக்கி னிருந்தது; 'என இராமபிரானைக் குறித்துக் கூறியதும் காண்க. கம்ப. ஆரணிய: 309.) தமயனுடனிருந்தான்: நளனுக்குப் புட்கரன் இளைய சகோதர முறையுள்ளவன் என்று நைடதம் கூறுவதால், முதனூல் வடமொழி மகாபாரதம் நளோபாக்யானத்தில் உள்ளபடி, கலி தன்னுடன் வந்திருந்த துவாபரன் என்ற தன் தமையனுடன் இருந்து நளனுக்குத் தீங்கிழைக்கும் தருணத்தை எதிர்நோக்கித் தங்கியிருந்தான் எனக்கொள்வதே பொருந்தும். இவ்வாறே பின், (211) இல், தமயனுடன் கூடி என்பதற்கும் கொள்ளவேண்டும்.

குறிப்பு :— இச்செய்யுளில், 'தாளின்மறு' என்பது வெண்டளை பிறழ்ந்துள்ளது; இவ்வாறு வருவதை ஒற்று நீக்கி வெண்டளை யாகக் கொள்வது வழக்கு. இது, இந்நூல் நிலையப்பதிப்பு, யாப்பருங்கலக்காரிகை, 38 ஆம் காரிகையின் அடிக்குறிப்பால் அறிய லாம். ஆனல், தாளின்மறு என்பது, தாண்மறுவைத் என இருந் திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

199. நாராய ணைய நமவென் றவனடியில்
சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்—பாராளும்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி.

நாராயணைய நம என்று - நாராயணனுக்கு நமஸ்காரம் என்று, அவன் அடியில் - அத்திருமால் திருவடிகளில், சேராரை - சேர்ந்து பணிந்து வணங்காதவரை, வெம் துயரம் சேர்ந்தால் போல் - கொடுந் துன்பங்கள் வந்தடைவன போல, பார் ஆளும் கொற்றவனை - புவியை ஆளும் அரசனும், பார் மடந்தை கோமானை - பூமியாகிய தேவிக்குத் தலைவனும், வாய்மை நெறி கற்றவனை - சத்தியத்தின் வழியைக் கடைப்பிடித்து நடப்பவனுமான நளனை, கலி - சனி என் னும் அக் கலிபுருஷன், சேர்ந்தான் - போய்ப் பற்றிக்கொண்டான்,

நாராயணைய நமஃ : இதனோடு ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை முதலிற் சேர்த்து ஜபம் செய்வது முறை : அவ்வாறு சேர்ந்த அந்த எட்டு எழுத்துக்களும் அஷ்டாக்ஷரம் என்னும் மஹாமந்திரமாகும். இம்மந்திரத்தைச் சொல்லி வழிபடுவோர்க்குத் துயரம் வாரா என் பது இதனல் அறியப் பெறுவதாகும். இந்த மந்திரச் சிறப்பு, ஆழ்வார் திருமங்கை மன்னன் அருளிய 'வாடினேன் வாடி' என்று தொடங்கும் பெரிய திருமொழி முதற் பதிகத்தாலும், பொய்கை யாழ்வார் அருளிய 'நாவாயிலுண்டே' என்று தொடங்கும் பாசுரத் தாலும் விளங்குவன காணலாம்; இந்த அஷ்டாக்ஷரத்தைப் பெரிய திருமந்திரம் என வைஷ்ணவர்கள் சிறப்பித்துக் கூறுவர். தமிழி லும் வடமொழியிலும் உள்ள நெடுங்கணக்கு என்னும் எழுத்துக் களைக் கற்றுக்கொடுக்கத் தொடங்குமுன் ஆசிரியர் மாணவனுக்கு இந்த எட்டு எழுத்துக்களையே, முதலில் உபதேசித்து அதனை எழுதச்செய்வதும் நம்மனேரில் ஒரு சாரார் மரபு. பிரஹ்லாத ஆழ்வா னுக்கும் துருவனுக்கும் நாரத முனிவர் இந்த மஹாமந்திரத்தையே உபதேசித்தார் என்றும், அதன் சிறப்பாலேயே அவர்கள் தமக்கு நேர்ந்த இன்னல்களை அனைத்தையும் கடந்து திருவருள் எய்தப்

பெற்றூர் என்றும் ஸ்ரீபாகவத புராணம் கூறுவது காணலாம். இந்த மந்திரச் சிறப்பு நோக்கியே ஔவைப் பிராட்டியாரும், ' எண் ணெழுத் திகழேல் ' என்று ஆத்திசூடியில் அருளினர் என்பாரும் உளர். இனி, இச் செய்யுளால் ஆசிரியர் புகழேந்தியார், திருமாலிடங் கொண்ட பக்திச் சிறப்பு விளக்கமுறுவது காணலாம். (31)

பி - ம். 3. பூமடந்தை கோமானே மெய்ந்நெறிகள்.

கலி புட்கரனை நளனிடை சூதாட அழைத்தது

200. நன்னெறியில் சூதா னளனைக் களவியற்றித்
தன்னரசு வாங்கித் தருகின்றேன்—மன்னவனே
போதுவா யென்னுடனே யென்ருன் புலைநரகுக்
கேதுவாய் நின்ரு னெடுத்து.

புலை நரகுக்கு ஏதுவாய் நின்ருன் - (மாந்தர்) இழிந்த நரகம் அடை வதற்கு ஒரு காரணனாகி இருக்கும் அக் கலிபுருஷன், (புட்கரனை நோக்கி), ' மன்னவனே ! ஏ அரசனே ! நல் நெறி இல் சூதால் - நன் மார்க்க மற்ற சூதாட்டத்தால், நளனை களவு இயற்றி - நளனிடத்தில் திருட்டுச்செயல் புரிந்து, தன் அரசு வாங்கித் தருகின்றேன் - அவனுடைய அரசுரிமையை அபகரித்து உனக்குத் தருகின்றேன் ; என் உடனே போதுவாய் - என்னோடு நீ வருவாயாக !' என்ருன் எடுத்து - என்று எடுத்துக்கூறி அழைத்தான்.

நன்னெறியில் சூது - பாவத்திற்கே ஏதுவான சூது என்பதாம். களவியற்றித் தருகின்றேன் : நன்னெறி முறையில் கிடைக்காது ஆதலின், திருட்டுத்தனமாய் வஞ்சகமியற்றித் தருவதாகக்கூறினன் என்க. சூதாட்டம் திருட்டுச்செயலால் ஆவது ஆதலின், அஃது ஆன்ருேர்களால் விலக்கப்பட்டது ; ' உள்ளத்தாலுள்ளினுந் தீதே பிறர் பொருளைக், கள்ளத்தாற் கள்வே மெனல் ' (குறள் 282) என் பதையும் நோக்குக. மேலும், இச் சூதாட்டமே, மற்றைத் தீவினை களில் ஊக்கி ஒருவனைக் கொடிய நரகுக்குக் காரணமாக்கும் என்பதும் பொருந்தும். போதுதல் - செல்லுதல் ; பின், ' நாம் போது மென்ருன் நளன் ' (218) என்றதுங் காண்க. புலை நரகுக் கேதுவாய் நின்ருன் என்றது, கலி, உலகில் மானிடர் நரகடையக் காரணனாய் இருப்பவன் என்பதாம். புலை நரகு - இழிந்த தன்மையதான நரகம் ; இது பண்புத் தொகை.

குறிப்பு :— இச்செய்யுளின் பின்னிரண்டு அடிகள் பின்வரும் 293-ஆம் செய்யுளின் பின்னிரண்டுகளாய் அமைந்து இருப்பன நோக்கத்தக்கது.

பி - ம். 1. சூழ் னளனைக். 2. பின்னவனே.
4. எதுவா யஞ்சா திருவோ மூடனெருவீ போதுவா யென்றுன் புகழ்ந்த ; புரிந்த. (32)

புட்கரன் உடன்பட்டுக் கலியுடன் சென்றது

201. புன்னை நறுமலரின் பூந்தா தினையொதுங்கும்
கன்னி யினமேதிக் காற்குளம்பு—பொன்னுரைத்த
கல்லேய்க்கு நாடன் கவருடப் போயினுன்
கொல்லேற்றின் மேலேறிக் கொண்டு.

நறு புன்னை மலரின் - மணமிக்க புன்னைப் பூக்களின், பூம் தாது இடை - அழகிய மகரந்தப் பொடிகளின் நடுவே, ஒதுங்கும் - தங்கியிருக்கும், கன்னி இள மேதி - கன்னித் தன்மை மாறுத அதாவது ஈனுத இளமைப் பருவத்து எருமைகளின், கால் குளம்பு - காலின் குளம்புகள், பொன் உரைத்த கல் ஏய்க்கும் - பொன்னை மாற்றுப் பார்க்க உரைக்கப் பெறும் உரை கல்லை ஒப்பாக விளங்கும், நாடன் - வளநாட்டையுடைய புட்கரன், கொல் ஏற்றின் மேல் ஏறி கொண்டு - கொல்லும் ஒரு கொடிய எருதின்மீது ஏறிக்கொண்டு, கவறு ஆட போயினுன் - சூதாடுவதற்கு நளனது மாவிந்த நகரத்தை நோக்கிச் சென்றுன்.

புன்னை மலர்களின் மிகுதியைக் கூறியதால் அது அந்நாட்டின் நெய்தல் நிலவளமும், எருமைகளைக் குறிப்பிட்டதால் மருத நிலவளமும் ஆகிய திணை மயக்கம் கூறியது ஆகும். எருமையின் காற் குளம்புகள் உரைகல் போலக் கருநிறமாயும் வழவழப்பாயும் இருப்பதாலும், அவற்றில் புன்னைப் பூந்தாதுகள் படிந்திருப்பதாலும், அக் குளம்புகள் மாற்று அறியப் பொன்னை உரைத்துப் பார்க்கும் உரைகற்களுக்கு உவமையாக்கப்பெற்றன. ஏய்தல் - ஒத்தல் ; ஏய: உவமை உருபு. ஒப்பு : 'பொன்னுரைகற் போன்ற குளம்பு'; (முத்தொள்ளாயிரம்). இஃது, 'உருண்ட வாய்தொறும் பொன்னுரை ஞரைத் துரைத்தோடி, இருண்ட கல்லையுந் தனிறை மாக்கிய விரதம்' (கம்ப. பால. வரைக்காட்சிப் : 8) என்றதை நினைப்பூட்டுகின்றது. கன்னி இள : இளமையின் சிறப்பை உணர்த்திய ஒரு பொருட் பன்மொழி என்னலும் ஒன்றும். புட்கரன் நளன் ஆட்சிக்குட்பட்ட ஒரு சிற்ற

ரசன் எனவும், அந்நளனுக்குத் தம்பிமுறையுள்ள ஒரு தாயாதி எனவும் அறியப்பெறும்; (நைடதம். சூதாடு : 15). புட்கரனைக் கலியே ஓர் எருதாக இருந்து தாங்கிச் சென்றான் என நைடதம் கூறும்.

பி - ம். 1. பூந்தா டிடைமிதிக்க, மிதித்த; யொழுகும்.
2. காற்குளம்பின்; பொன்னுரைக்கும். (33)

புட்கரன் நிடத நாடடைந்தது

202. வெங்கட் சினவிடையின் மேலேறிக் காலேறிக்
கங்கைத் திரைநீர் கரையேறிச்—செங்கதிர்ப்பைம்
பொன்னெழியப் போதும் புறம்பணைசூழ் நன்னாடு
பின்னெழியப் போந்தான் பெயர்ந்து.

வெம் சின கண் விடையின் மேல் ஏறி - புட்கரன் கொடிய கோபங் கொண்ட கண்களையுடைய எருதின் மீது ஏறிக்கொண்டு, கங்கை திரை நீர் - கங்கை நதியின் அலைகளோடு கூடிய வெள்ளம், கால் ஏறி - வாய்க்கால்களின் ஏறிச் சென்று, கரை ஏறி - வயல்களில் கரைகளில் ஏறிப்பாய்ந்து, செங்கதிர் பைம் பொன் ஒழிய - அவ்வயல் களில் அவ்வெள்ளத்தில் அடித்துக் கொண்டுவந்த சிறந்த ஒளிவீசும் பசிய பொன்களைத் தங்கியிருக்கச் செய்து, போதும் - மேலும் ஓடிச் செல்லும், புறம் பணை சூழ் நல் நாடு பின் ஒழிய - புறவயல்கள் சூழ்ந்த தன் வளநாடு பின்னிருக்க, பெயர்ந்து - அதனைக்கடந்து, போந் தான் - நிடத நாட்டில் போய்ச் சேர்ந்தான்.

கங்கை நதிப்பிரவாகம், வாய்க்கால்களிற் பாய்ந்து, அவற்றின் புறத்தேயுள்ள வயல்களின் கரையின் மீது ஏறி, அவ்வயல்களில் புகுந்து, அங்குத் தன்னுடன் கொண்டுவந்த பொன்களை வண்டல் களாகத் தங்கவிட்டு ஓடும் சிறப்புடைய புட்கரன் நாடு பின்னுக, அவன் நிடத நாட்டைப்போய் அடைந்தான் என்பதாம். காலேறி - காற்றுத் தாக்குவதால் மேற்சென்று என்று பொருள் கூறினுமாம். செங்கதிர்ப் பைம் பொன் ஒழிய என்பதற்குச் சிவந்த நெற்கதிர்களாகிய பசிய பொன் அவ்விடம் தங்க எனப் பொருள் கூறலும் ஆம்; இது, 'சடைச் செந்நெல் பொன் விளைக்கும்' என்று முன் (67) கூறியது போன்றது என்னலாம். இனி புட்கரன், சின விடையின் மேல் ஏறி, கால் - வாய்க்கால்களின் கரையேறித் தன்னாடு

பின் ஒழியப் போந்தான் எனப் புட்கரனுக்கே இயைத்துப் பொருள் கூறினரும் உளர்.

பி - ம். 1. மேலேறிக் காலேறக்.
2. பொன்னகப் போதகம்புறம் பணிசூழ்.
3. பொன்னெழியப் போந்த ; புறம்பணிசூழ் நன்னுடு.
4. பின்னகப் போந்தான் பெயர்ந்த.; (34)

நளன் புட்கரனைக் கண்டு வினவியது

203. அடற்கதிர்வேன் மன்ன னவனேற்றின் முன்போய்
எடுத்தகொடி யென்னகொடி யென்ன—மிடற்சூது
வெல்லுங் கொடியென்ருன் வெங்கலியா லங்கவன்மேல்
செல்லுங் கொடியோன் றெரிந்து.

அடல் கதிர் வேல் மன்னன் - பகைவரை அழிக்கும் ஒளி பொருந்திய வேல் ஏந்திய அரசனை நளன், அவன் ஏற்றின் முன் போய் - அந்தப் புட்கரன் ஏறி வந்த எருதின் முன்னே போய் நின்று, 'எடுத்த கொடி என்ன கொடி என்ன - நீ தூக்கி எடுத்து வந்துள்ள கொடி எதைக் குறிக்கும் கொடி?' என்று அவனைக் கேட்க, வெம் கலியால் அங்கு அவன் மேல் செல்லும் கொடியோன் - கொடிய கலியின் தூண்டுதலால் அங்கு அந்த நளன்மீது பகை கொண்டு சூதாடச்சென்ற கொடியவனை அப்புட்கரன், தெரிந்து - கலி தனக்கு உதவி யளிப்பதால் தான் வெற்றியுறுவதை அறிந்து கொண்டு, 'மிடல் சூது வெல்லும் கொடி என்ருன் - வலிய சூதாட்டத்தில் வெற்றி கொள்ளும் கொடி யான் தாங்கி வந்துள்ளது' என்று மறுமொழி கூறினன்.

ஒரு சிற்றரசன் பேரரசனை நளனிடம் அஞ்சாது சூதாட்டத்தில் வெல்லும் கொடி என்று கூறியது, கலி தனக்கு வெற்றி தருவதாகக் கூறி அழைத்து வந்த வலிமை மேற்கொண்டு என்க. எடுத்த கொடி என்ன கொடி என்றதால், அரசர்கள் தாம் கருதிய செயலுக்கு ஏற்றதாகக் கருதப் பெறும் கொடியை எடுத்துச் செல்லும் மரபுபற்றியும், இதற்குமுன் சூதாட்டத்தை அறியாதவனதலின், அக்கொடி இன்னதென்று அறியாது வினவினன் நளன் என்பதும் அறியப்பாலனவாம்.

பி - ம். 1. அடற்சினவேல், மன்னவனீ யானேற்றின் முன்னே; ஆனேற்றின் முன்னே. 2. எடுத்தகொடி யென்னென் றியம்ப.
3. வெங்கலியின் வஞ்சனையால்.
4. சொல்லுங் கொடியோன் றுணிந்து. (35)

நளன் புட்கரனுடன் சூதாட இசைந்தது

204. ஏன்ரே மிதுவாயின் மெய்ம்மையே யெம்மோடு
வான்ரேய் மடற்றெங்கின் வான்றேறல்—தான்றேக்கி
மீதாடி வாளைவயல் வீழ்ந்துழக்கு நன்னுடன்
சூதாட வென்ருன் றுணிந்து.

வாளை - வாளை மீன்கள், வான் தோய் - ஆகாயமளாவி உயர்ந்த, தெங்கின் - தென்னை மரத்தின், மடல் - பாளையில் உள்ள, வான் தேறல் தான் தேக்கி - சிறந்த கள்ளைத் தன் வயிறு நிரம்பக் குடித்து, மீது ஆடி - அந்தக் கள்ளில் விழுந்து விளையாடி அல்லது அதில் குளித்து, வயல் வீழ்ந்து உழக்கும் - கீழே அருகேயுள்ள வயலில் விழுந்து நீரைக் கலக்கும், நல் நாடன் - நல்ல வளமிக்க நிடத நாட்டையுடைய நளன், 'இது ஆயின் என்ரேம் - இது உனக்கு விருப்பம் ஆனால் அவ்வாறே ஏற்றுக்கொள்கிரேம்; (ஆதலின்) எம் ஓடு - எம்முடனே, சூது ஆட என்ருன் துணிந்து - நீ சூது ஆட வருவாயாக' என்று துணிந்து கூறினன்.

வாளை மீன் தெங்கின் கள்ளைக் குடித்து விளையாடும் நீர்நாடன் என்றதில் நளனும் கள் குடித்தவன போல் மதிமயங்கிச் சூதாட உடன்பட்டான் என்பது உள்ளுறை உவமாக அமைந்திருப்பது நோக்கத்தக்கது. ஆட - ஆடுவாயாக! இது வியங்கோள் வினை முற்று. ஏன்றேன் என்பது ஏன்ரேம் எனச் சிறப்பின் பாலாய்த் தன்மை, பன்மை விகுதிபெற்றது.

பி - ம். 2. மடற்றெங்கின் வார்தேறல்.
3. மாதாடி வாளை வயலுழக்கு நன்னுடன். (36)

நளனுக்கு அமைச்சர் முதலினோர் சூதின் தீமைகளை உரைத்தது

205. காதல் கவருடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
சூதன் மறுத்த லிவைகண்டாய்—போதில்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி.

(அஃதறிந்த மந்திரிகள் முதலினோர் நளனை நோக்கி), 'போதில் சினை ஆமை வைகும் திரு நாடா - தாமரை மலர்களில் கருவுற்ற ஆமைகள் போய்த் தங்கியிருக்கின்ற அழகிய வளம் பொருந்திய நாட்டையுடைய அரசனே! காதல் - பிற மாதரிடத்து ஆசை வைத்தல், கவறு ஆடல் - சூது ஆடுதல், கள் உண்டல் - கட்

குடித்தல், பொய் மொழிதல் - பொய் சொல்லுதல், ஈதல் மறுத்தல் - ஒருவர் பிறர்க்குக் கொடுப்பதை இடை நின்று தடுத்தல், இவை - இவ்வைந்து பாபச் செயல்களும், செம்மை நினையாமை - சிறந்த காரியங்களை எண்ணுமையை, பூண்டார் - மேற்கொண்ட கீழோர் அல்லது பாவியர்களின், நெறி - நடத்தைகளாம்'.

பிறனகடை நின்றூரிற் பேதையரில்'; (குறள் : 142) என்றமை யால், மற்ற தீச் செயல்களிலும் அது கொடிது என்பது நோக்கிக் காதல் என்பது முன்னர்க் கூறப்பெற்றது. கவரூடல் மற்ற துர்க்குணங்களுக்கும் தீச் செயல்களுக்கும் உறைவிடமாதலால் காத லுக்கு அடுத்து அது கூறப்பெற்றது. கள் உண்பான் பிறர்க் குக் கேடு சூழத் துணிவதோடு, முடிவில் தனக்குங் கேடு விளை வித்துக் கொள்வானதலின், அதுவும் ஒரு பெருந் தீவினையாகும். ஈதன் மறுத்தல் என்பது வேறு எந்தப் பிராயச்சித்தத்தாலும் நீக்க முடியாத மகாபாதகம் ஆதலால், அதுவும் கொடும் பாவமே என்க. இதலுல் மேற்கூறிய காதல் முதலிய ஐந்தும் பஞ்ச மகா பாதகங்கள் என்பர். இவை செம்மை நினையாத துர்க்குணர்தம் செயல்களாம். இவ்வைந்து பாவங்களால் உண்டாகும் கேட்டினை, 148, 936, 926, 297, 166 என்னும் எண்கள் கொண்ட குறட் பாக்கள் இடித்துரைத்து அறிவூட்டுவன காணலாம். இங்குச் செம்மை என்பது சிறந்த அறநெறியைக் குறிப்பது. ஐம்பெரும் பாதகம்; இந்நூல்நிலைய வெளியீடு : கம்ப. ஆரணிய : 1146 ஐயும் அதன் உரையையும் நோக்குக. இது முதல் 207 முடிய உள்ள பாடல்கள் அமைச்சர் முதலினோர் நளனுக்குச் சூதாடுவதால் நேரிடும் தீங்குகளை எடுத்துக் கூறியவை ஆம்.

பி - ம். 2. ஈதல் விலக்க. 4. நினையாமை பூண்டார் நினைவு. (37)

206. அறத்தைவேர் கல்லு மருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்ரூர் தெரிந்து.

(மேலும் இச் சூதாடுதல்), 'அறத்தை வேர் கல்லும் - தருமங் களை எல்லாம் வேரோடு பறித்து அழிக்கும்; அரு நரகில் சேர்க்கும் - அநுபவிக்க முடியாத கொடிய நரகத்தில் கொண்டு சேர்த்து விடும்; திறத்தையே கொண்டு - வலிமையை மேற்கொண்டு, அருளை தேய்க்கும் - உள்ள நல்ல இரக்கம் என்னும் குண நலத்தையும்

அழித்துவிடும்; மறத்தையே பூண்டு - கொலை முதலிய கொடுஞ் செயல்களையே ஏற்று, விரோதம் செய்யும் - யாவரிடத்தும் பகை யையே உண்டாக்கும்; (ஆதலின்) மிக்கோர்கள் - மேலோர்கள், தீண் டுவரோ - இச் சூதாட்டத்தைத் தொட்டு ஆடுவரோ;' என்ருர் தெரிந்து - என்று உண்மையை அறிந்து கூறினர் அவ்வமைச்சர் முதலினேர்.

தீண்டுவரோ - தீண்டமாட்டார் என்றபடி: ஓ: எதிர்மறைவினு.

அறம்: நல்லவை இவை, தீயவை இவை என நீதிநூல்களால் ஆன்ருேர் வரையறை செய்தருளிய கட்டளைகள். பொய்ச்சூது - பொய்யை அடிப்படையாய்க் கொண்ட சூது; அதாவது சூதாட் டத்தில் பொய்யே தலேதூக்கி நிறைந்து விளங்கும் என்பதாம். தீண்டுதல் - தொட்டுப் பார்த்தல்; அதனே ஒரு தரம் தொட்டு ஆடினலுங் கேடாம் என்பது குறிப்பு.

பி - ம். 1. மருஉரகஞ் சேர்த்து. 2. நிறத்தையே கொன்றருளே. (38)

207. உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.

(மேலும் இச் சூதாட்டம்), 'உருவு அழிக்கும் - ஆடுவோர் உருவ அழகின் சிறப்பை அழித்துவிடும்; உண்மை உயர்வு அழிக்கும் - மெய்யின் சிறப்பை அழித்துவிடும்; வண்மை திரு அழிக்கும் - பிறர்க்கு அளிக்கும் ஈகைச் சிறப்பைக் கொண்ட பெருஞ் செல்வத் தையும் பாழாக்கும்; மானம் சிதைக்கும் - தனக்குள்ள பெருமையை அழித்துவிடும்; மருவும் ஒருவரோடு அன்பு அழிக்கும் - தன் னுடன் சேர்ந்து பழகும் ஒத்த நண்பருடைய அன்பையும் அழித்து நாசஞ்செய்யும்; ஒன்று அல்ல - இப்படி அச் சூதால் வரும் கேடுகள் ஒன்று அல்லாது மேலும் பலவாம்; ஆதலின், தக்கோர் - மேலோர், புரிந்து - இணங்கி, சூது பொருவரோ - சூது ஆடுவார்களோ? (மாட்டார் என்றபடி).

சூது உருவழித்தல்: சூதாடுவோர் இரவு பகல் என்பதின்றி, ஊண் உறக்கமற்று அதில் ஈடுபடுவராதலின்; உண்மை உயர்வு அழிக்கும் - சூதாட்டத்தில் பொய்யே மிகுந்திருக்கும் ஆதலின்; வண்மைத் திரு - செழிப்பான பெருஞ் செல்வமும் ஆம். நண்பராய் இருந்தோர் சூதாட்டத்தில் புகுந்து, அன்னேர் ஒருவர்க்கொருவர்

பகைவராய் மாறுவர் ஆதலின், மருவும் ஒருவரோடு அன்பழிக்கும் என்றார். சூது இத்தகைய தீய செயல்களுக்கு இடமாதலால், 'கோதாட்டொழி,' 'சூது விரும்பேல்' என அறிவுறுத்தினர் நம் தமிழ் மூதாட்டியாகிய ஒவைப்பிராட்டியாரும். மேலும்,

சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினைக்கிலை யாயினும்
ஏத மென்பன யாவையு மெய்துதற்
கோது மூல மவையென வோர்தியே.

(கம்ப. அயோத். மந்தரை சூழ்ச்சிப் : 12)

என்பதும் இதனைவிளக்குவது காண்க. மேலும், ஒருவனிடம் எத்தகைய நற்குணங்கள் இருப்பினும், அவன் சூதாடுதலை மேற்கொள்வானேல், அது அந்நற்குணங்கள் யாவற்றையும் அழித்து, அவனைக் கொடிய நரகத்துள் புகுத்தும் என்பது, பின்வரும் அறநெறிச்சாரச் செய்யுளாலும் விளங்கும்.

ஓதலு மோதி யுணர்தலுஞ் சான்றோரால்
மேதை யெனப்படு மேன்மையும்—சூது
பொருமென்னுஞ் சொல்லினுற் புல்லப் படுமேல்
இருளா மொருங்கே யிவை.

பி - ம். 2. ஞானஞ் சிதைக்கும். 3. ஒன்றல்லாச் சூது. (39)

208. ஆயம் பிடித்தாரு மல்லற் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்ல ரென்றுரைப்ப தன்றே
வடித்தாரின் னூலோர் வழக்கு.

ஆயம் பிடித்தாரும் - சூதாடுங் கருவியாகிய பாய்ச்சிகையைக் கையிற் பிடித்து ஆடுவோரும், அல்லல் பொது மகளிர் நேயம் பிடித்தாரும் - துன்பத்தையே உண்டாக்கும் பொதுப் பெண்டிராகிய வேசியர்பால் பற்றுடையவரும், நெஞ்சு இடையே - தம்மனத்தினிடத்தே, மாயம் பிடித்தாரின் - மயக்கம் கொண்டவரை விட, வேறு அல்லர் - வேருகக் கருத இடமில்லாதவர் ஆவர்; என்று உரைப்பது அன்றே - என்று சொல்வது அல்லவோ, வடித்து ஆர் இன் நூலோர் வழக்கு - தெளிவுற விளங்கும் நன்மைதரும் சாஸ்திரங்கள் அறிந்த மேலோரின் வழக்கம் அல்லது நடை முறை ஆகும்.

ஆயம் - சூதாடுகருவி ; பிங் ; குறள் : 933, சீவக. 2873 ; பெரியபுராணம். மூர்க்க : 8 ; வி. பா. சூது. 189. அல்லற் பொது மகளிர் நேயம், கொடிது ; இது, துன்பத்திற்கே இடமாம் என்பதை,

தாம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ராலவரும்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாம மில்லை நரகமு மில்லையே.

(கம்ப. அயோத் : மந்தரை சூழ்ச்சி : 21)

என்றதிலும் காணலாம்.

பி - ம். 1. அஞ்சொற் பொதுமகளிர். 2. தாயம்.
3. பிடித்தாரின் வேறலரே யென்றுரைத்தார் தெய்வ ; வேறல்ல வென்றுரைத்தார் கண்டாய்.
4. வடித்தார்நன் னூலோர் வழக்கு,
வடித்தார்முன் னூலோர் வழக்கு. (40)

நளனது மறுப்புரை

209. தீது வருக நலம்வருக சிந்தையால்
சூது பொரவிசைந்து சொல்லினேம்—யாதும்
விலக்கலிர்நீ ரென்றருன் வராலேற மேதி
கலக்கலைநீர் நாடன் கனன்று.

(இவ்வாறு அமைச்சர் முதலினோர் கூற), வரால் ஏற - வரால் மீன்கள் மேலே பாய்ந்து செல்லும்படியாக, மேதி - எருமை மாடுகள், கலக்கு அலை நீர் நாடன் - கலக்குகின்ற அலை வீசும் நீர் நிலைகளையுடைய நிடதநாட் டரசனை நளன், கனன்று - அவர்களை நோக்கி வெகுண்டு, 'தீது வருக - இச் சூதாட்டத்தில் எனக்குக் கேடே வரட்டும் ! நலம் வருக - அல்லது நன்மையே உண்டாகட்டும் ! சிந்தையால் இசைந்து - மனம் ஒப்பி, சூது பொர சொல்லினேம் - சூது ஆடுவதாக யாம் சொல்லிவிட்டோம் ! நீர் யாதும் விலக்கலிர் என்றன் - நீவிர் ஒன்றும் தடை செய்யாதீர் !' என்று கூறினன்.

விலக்கலிர் - முன்னிலை எதிர்மறை ஏவற்பன்மை வினைமுற்று. வரால் - மங்கிய பசுமை நிறங்கொண்டு மூன்றடி வரை நீண்டும் வளரும் ஒரு வகை மீன் ; 350 ; புறநா. 399 : 5 ; பெரும். 1.51 : 72. வராலேற மேதி கலக்கலை நீர்நாடன் என்ற குறிப்பால், நளன் உள்ளம் கலங்கிச் சூதாட உடன்பட்டது, உள்ளுறை உவமமாய் அமைந்த சிறப்பு நோக்கற் பாலதாம். மேதி - எருமை ; 26, 137 ; 364.

பி - ம். 4. கலக்கலைநீர் நாட்டார் களிறு. (41)

புட்கரன் நளனைப் பந்தயம் யாதென்று கேட்டது

210. நிறையிற் கவருட னீநினைந்தா யாகில்
திறையிற் கதிர்முத்தஞ் சிந்தத்—துறையில்
கரும்பொடியா மள்ளர் கடாவடிக்கு நாடா
பொரும்படியா தென்றுனிப் போது.

'திறையில் கதிர் முத்தம் சிந்த - சுருங்குதல் இல்லாத ஒளிகளையுடைய முத்துக்கள் தெறித்துக் கீழே சிந்தி விழும்படி, மள்ளர் - உழவர், துறையில் - அருகான இடத்தில் உள்ள, கரும்பு ஒடியா - கரும்பை ஒடித்து எடுத்து, கடா அடிக்கும் நாடா - எருமைக் கடாக்களை அடித்து ஓட்டுகின்ற வளமிக்க நிடத நாடுடைய மன்னனே! நிறையில் - துலையில் நிறுப்பதுபோன்று நெறி பிறழாதபடி, கவறு ஆடல் நீ நினைந்தாய் ஆகில் - சூதாடலை நீ எண்ணினால், இ போது பொரும் படி யாது என்றான் - இப்பொழுது அச் சூதாட்டத்திற்கு நீ வைக்கும் பந்தயப் பொருள் யாது?' என்று நளனைப் புட்கரன் கேட்டான்.

நிறையில் கவருடல் என்றதினால், புட்கரன் தான நேர்மை மாறுதவன் என்பதை அறிவித்து, நளன நம்புமாறு செய்தான் என்பதாம். திரை என்ற சொல் எதுகை நோக்கித் திறையென வலித்தது; தரை என்பது தறை என வருவது போல; 'தறையிற் கிறிடிற் றச்சருங் காய்வரோ' (கம்ப. பால. பாயிரம்) துறையில் கடாவடிக்கும்: களத்தில் கதிர்களை அடித்துத் தானியங்களை எடுத்துக்கொண்டபின், குவித்து வைத்த தாள்களைப் பரப்பி, அவற்றின் மீது கடாக்களைப் பிணைத்துப் பலமுறை குறுக்கும் நெடுக்குமாக ஓட்டித் துவைக்கச் செய்து, அதனால் கதிர்களில் முன் ஒட்டியிருந்த தானியங்கள் உதிர, அவற்றை மீண்டும் சேகரிக்கும் செயலுக்குக் கடாவடி அடித்தல் என்பர். அத் தொழிலை இங்குக் குறிப்பிட்டது எனக் கொள்ளல் ஏற்கும். துறை - இடம்; இது இங்குக் களம் என்னும் இடத்தைக் குறிப்பது.

பி - ம். 1. நிறையில் கவருடல்.
4. பொரும்படியாதென்றுனிப் போர்.

நளன் சூதாடியதும் யாவும் தோற்றதும்

211. விட்டொளிர்வில் வீசி விளங்குமணிப் பூணரம்
ஒட்டினே னுன்பணைய மோதென்ன—மட்டவிழ்தார்
மல்லேற்ற தோளானும் வான்பணைய மாகத்தன்
கொல்லேற்றை வைத்தான் குறித்து.

'விட்டு ஒளிர் வில் வீசி - விட்டு விட்டுப் பிரகாசித்து ஒளி பரப்புகின்ற, மணி விளங்கு பூண் ஆரம் - இரத்தினங்கள் விளங்கப் பெற்ற ஆபரணங்களாகிய மாலைகளே, ஒட்டினேன் - பந்தயமாக வைத்துள்ளேன்! உன் பணையம் ஒது என்ன - நீ வைக்கும் பந்தயப் பொருளைச் சொல்' என்று நளன் புட்கரனைக் கேட்க, மட்டு அவிழ் தார் - தேன் சிந்துகின்ற மாலையை அணிந்த, மல் ஏற்ற - மற்போரில் சிறந்த, தோளானும் - தோள்களையுடைய புட்கரனும், வான் பணையம் ஆக - சிறந்த பந்தயப் பொருளாக, கொல் ஏற்றை - தான் ஊர்ந்து வந்த எதிரியைக் கொல்லும் வலியுள்ள தன் எருதை, குறித்து வைத்தான் - பந்தயமாகக் குறிப்பிட்டு வைத்தான்.

ஒட்டம் வைத்தல் - பந்தயம் வைத்தல்; 'ஒட்டிய வொட்ட முணராதே.' (விக்ரமசோழனுலா: 217); வி. பா. சூதுபோர்ச்: 182. கொல்லேறு: புட்கரன் ஏறுமீது ஏறிவந்தான் என்பது முதனூலாதலின், அதையே பணையமாக வைத்தால் வென்றி அடையலாம் என்ற கருத்தில் அதையே குறித்துக் கூறினன் என்று அறியப்பாலதாம். கொல்லேறு: விணைத்தொகை;

பி - ம். 1. விட்டுகோர் வீசி; விட்டு நீர் விசும்; விட்டு வெயில் வீசும்.
2. நின்பணையம்: மொட்டென்ன.

212. காரேயுங் கூந்தலார் காரிகைமேற் காதலித்த
தாரேயுந் தோளான் றனிமனம்போல்—நேரே
தவருய்ப் புரண்ட தமையனெடுங் கூடிக்
கவருய்ப் புரண்டான் கலி.

கார் ஏயும் கூந்தல் ஆர் - மேகத்தை ஒத்த கரிய கூந்தல் விளங்கும், காரிகை மேல் - தமயந்தி மீது, காதலித்த - அன்பு கொண்ட, தார் ஏயும் தோளான் - மாலை பொருந்திய தோள்களையுடைய நளனது, தனி மனம் போல் - ஒப்பற்ற மனம் சூதாட்டத்தில் மாறியது போல, நேரே - எதிரே, தவருய் புரண்ட - நெறி முறை தவறி மாறுபட்ட, தமையன் உடன் கூடி - தன் தமையன் முறை

யான துவாபரனுடன் சேர்ந்து, கலி - கலிபுருஷனை சனி, கவறு ஆய் புரண்டான் - பாச்சிகையாய் இருந்து உருண்டு ஆடுவனைனன்.

நளன் மனம் நிலை மாறியதுபோல், கலியும் பாச்சிகையிற் புகுந்து மாறி உருள்வானைனன்; புரள்தல் - நிலைமாறி உருளுதல். நளன் மனம் மாறியதற்கு முன் (198) இல் குறிப்பிற் கண்டபடி, 'தமயனுடன் கூடி' என்பதற்கு, முதனூலிற் கண்டவாறு கலி தன்னுடன் வந்த தன் தமயனை துவாபரனுடன் கூடி என்றே பொருள் கொள்ளப்பட்டது. இஃது ஆராய்ந்து நோக்கத்தக்கது.

பி - ம். 1. காரேந்து கூந்தலாள் கொங்கைமேற் காதலித்த, காரேற்ற கூந்தலாள்.
2. தாரேந்து தோளான், தாரேற்ற தோளான்.

குறிப்பு : ஒரு பிரதியில் இச்செய்யுள் இல்லை. (44)

213. வைத்த மணியாரம் வென்றேன் மறுபலகைக்
கொத்த பணைய முரையென்ன—வைத்தநிதி
நூரு யிரத்திரட்டி நூறுநூ றுயிரமும்
வேருகத் தோற்றனவ் வேந்து.

'வைத்த மணி ஆரம் வென்றேன் - நீ பணையமாக வைத்த இரத்தினமாலையை நான் வென்று கொண்டேன்; மறு பலகைக்கு ஒத்த பணையம் உரை என்ன - மறு ஆட்டத்திற்கு ஏற்றதான பந்தயப் பொருளைச் சொல்' என்று புட்கரன் நளனை கேட்க, அ வேந்து - அந்த அரசனை நளனும், வைத்த - மறுபடி பந்தயமாக வைத்த நூறு ஆயிரத்து இரட்டி நிதி - இரண்டு லக்ஷம் பொன்னையும், நூறு நூறுயிரமும் - பின் ஒரு கோடிப் பொன்னையும், வேறு ஆக தோற்றன் - ஆட்டத்தில் தனித்தனியே தோற்று விட்டான்.

வைத்த மணியாரம் - முதல் ஆட்டத்தில் பந்தயமாக வைத்த இரத்தின மாலை; (213) இல் காண்க. பலகை - சூதாடும் பலகை; இஃது இடவாகு பெயராய் அதன்மீது ஆடும் ஆட்டத்தைக் குறித்து நின்றது; சீவக. 927. இதிற் குறிப்பிடும் பொன்னின் தொகைகள், அளவின் மிகுதியைக் குறிப்பன ஆம். இதில் பின் நிகழ்ந்த இரண்டு ஆட்டங்கள் குறிக்கப் பெற்றன,

பி - ம். 2. உய்த்த பணைய. 3, நூறு நூருயிரம் பொன். (45)

214. பல்லா யிரம்பரியும் பத்துநூ ருயிரத்துச்
சொல்லார் மணித்தேருந் தோற்றதற்பின்—வில்லாட்கள்
முன்ரேற்று வானின் முகிரேற்கு மால்யானை
பின்ரேற்றுத் தோற்ருன் பிடி.

(அதன் பின்), பல் ஆயிரம் பரியும் - பல ஆயிரக்கணக்கில் குதிரைகளையும், பத்து நூறு ஆயிரத்து - பத்து லக்ஷம், சொல் ஆர் மணி தேரும் - புகழ் நிறைந்த அழகிய இரதங்களையும், தோற்றதன் பின் - தோற்ற பிற்பாடு, முன் வில் ஆள்கள் தோற்று - முதலில் விற்படை வீரர்களைத் தோற்று, பின் - அதன் பிறகு, வானின் முகில் தோற்கும் - வானின் உள்ள மேகங்கள் உருவில் தோற்பனவான, மால் யானை தோற்று - பெரிய ஆண் யானைகளைத் தோற்று, பிடிதோற்ருன் - பெண் யானைகளையும் நளன் அச் சூதாட்டத்தில் தோற்றுவிட்டான்.

ஆள் : வீரன்; அல்லது காலாள் என்பதாம். 'பிள்ளை கடுப்பப் பிணம் பிறங்க ஆளெறிந்து', (பு. வெ. 28); கம்ப. சுந்தர : 314. மூன் செய்யுளில் உள்ளவைபோல, இதனுளும் அளவைக் குறிக்கும் எண்கள் மிகுதியைக் குறிப்பனவாம். சொல் - புகழ்; அல்லது கீர்த்தி; 'தன் சொலாற் ருன்கண்ட தனைத்து', (குறள் : 387). இதில் நளன் தன் சதுரங்க சேனைகளையும், பிடிகளையும் தோற்றமை குறிக்கப்பெற்றது. மணித்தேர், ஒலிக்கும் மணிகள் கட்டப்பட்ட தேர்கள் என்றேனும், இரத்தினங்களால் அமைந்த தேர்கள் என்றேனும் கொள்ளலாம், யானைக்கு மேகம் ஒப்பு, அதன் கருநிறத்தாலும், உருவாலும். வில்லாட்கள் : உபலக்ஷணத்தரல் மற்றை வேற்படை, வாட்படை வீரர்களையுங் கொள்ளலாம்.

பி - ம். 2. தொல்லா யிரத் தேரும் தோற்றதற்பின் - வல்லாட்கள் தொல் லார் மணித்தேரும்.
3. வானமுகி ரேற்றும். (46)

215. சாதுரங்கம் வென்றேன் ருரும்பணைய மேதென்ன
மாதுரங்கம் பூணு மணித்தேரான்—சூதரங்கில்
பாவையரைச் செவ்வழியாழ்ப் பண்ணுமொழிப் பின்னுகுழல்
பூவையரைத் தோற்ருன் பொருதும்.

(பின் புட்கரன் நளனை நோக்கி) 'சாதுரங்கம் வென்றேன் - உன் நால்வகைப் படைகளையும் வென்று கொண்டேன், தரும் பணையம்

ஏது என்ன - (இனி அடுத்த ஆட்டத்திற்கு) நீ தரக்கூடிய பந்தயப் பொருள் யாது?' என்று கேட்க, மா துரங்கம் பூணும் மணி தேரான் - மாட்சியுற்ற குதிரைகள் பூட்டப்பெற்ற உயர்ந்த தேரையுடைய நளன், சூது அரங்கில் - அச்சூதாட்டத்தில், பொருது - பின்னும் எதிரிருந்து ஆடி, பாவையரை - பாவை போன்ற தனக்குரிய பரிசன மகளிரையும், செவ்வழி யாழ் பண்ணுமை மொழி - செவ்வழி என்ற யாழில் இசைக்கும் பண்போன்ற இனிய மொழி பேசும், பின்னு சூழல் - சடையாகப் பின்னிய கூந்தலையுமுடைய, பூவையரை - தன்னுரிமை மகளிர்களையும், தோற்றான் - இழந்தான்.

சாதுரங்கம்: சதுர் அங்கம் என்பது ஆகி நீண்டது: இது வடமொழித் தொடர். கலிங்கத்துப்: 349, 501; சாதுர்வர்ணம், சாதுர் மாஸ்யம் என்பன போல. எது என்பது ஏது என நீண்டது. துரங்கம் - குதிரை. (பிங்); இது துரகம் எனவும் வழங்கும். அரங்கு - மேடை அல்லது சூதாடும் இடம்; 'அரங்கின்றி வட்டாடி யற்றே' (குறள். 401). இங்குப் பாவையர், பூவையர் என்பன பெண்கள் என்ற அளவில் பொதுப் பெயர்களாய் வந்தன என்க. பண்ணுமை - இசைத்தன்மை; மை கெட்டது இனி, சூது - அச்சூதாட்டத்தில், அரங்கிற் பாவையரை, மேடையில் நடிக்கும் நாடக மகளிரை என்றும், செவ்வழி.....பண்ணுமொழிப் பூவையர், என்பதற்கு, இசையில் சிறந்த பாடன் மகளிர் என்றும் பிரித்துப் பொருள் கொள்ளலும் பொருந்தும். 'தரும் பணயம் ஏது என்றது - பெரும்பாலும் நளனுக் குரியனவாய் இருந்த அனைத்தையும், வென்ற பெருமிதந் தோன்ற இகழ்ச்சிக் குறிப்பில், இனி என்ன இருக்கிறது?' என்று கூறியதாகப் பொருள் தொனிக்க நிற்பது காண்க. செவ்வழி யாழ்: நால்வகை யாழ்களில் ஒன்று. இது முல்லைத் திணைக்கு உரியது; (புற. நா. 144).

பி - ம். 1. தரும்பணயம் யாதென்ன.
2. பூண்ட மணித்தோளான், பூண்ட மணித்தேரான்.
3. பண்ணின்மொழி. (47)

216. கற்பின் மகளிர்பா லின்றுந் தமைக்கவட்டின்
விற்கு மகளிர்பான் மீண்டாற்போல்—நீற்கும்
நெறியானை மெய்ம்மைவாய் நின்றானை நீங்கிச்
சிறியானைச் சேர்ந்தா டிரு.

கற்பின் மகளிர் பால் நின்றும் - கற்பு நெறியில் நிற்கும் தன் மனைவியிடம் நின்றும், தமை கவட்டின் விற்கும் - தம்மை வஞ்சக

மாய்ப் பெரிதாக நாடி உண்மையின்றி விலைப்படுத்துவது பேரல ஆசை காட்டும், மகளிர் பால் - வேசையர் இடத்து, மீண்டால் போல் - ஒருவன் சென்றது போல, திரு - செல்வத்திற்கு உரிய திருமகள், நிற்கும் நெறியாளை - நிலைபெற்றிருக்கும் நன்னெறி யுடையவனும், மெய்மை வாய் நின்றாளை - உண்மையினிடம் உறுதி யாய் நம்பிக்கை கொண்டு நின்றவனுமான நளனை, நீங்கி - விட்டுப் பிரிந்து, சிறியாளை - குணங்களாலும் செயல்களாலும் குறைந்த புட்கரனை, சேர்ந்தாள் - போய் அடைந்தாள்.

இதனால், நளன், தன் செல்வம் அனைத்தும் இழந்து வறிய னென்பதாம். திரு சேர்ந்தாள்; செல்வம், வீரம், வென்றி, கல்வி முதலிய வற்றைப் பெண்பாலாகக் கூறுவது மரபாகும். திரு, இங்குத் கற்புடை மனைவியைத் துறந்து வஞ்சமும் பொய்யும் மிகுந்த வேசியைக் காமுற்றுச் செல்லும் கயவனுக்கும், நளனுக் கற்பின் மனைவிக்கும் உவமிக்கப் பெற்றது.

பி - ம். 3. நின்றாளை விட்டு: மேன்மையாய் நின்றாளை; வாய்மையால் நின்றாளை. (48)

புட்கரன் தமயந்தியைப் பந்தயமாக வைக்கக்கேட்டது

217. மனைக்குரியா ரன்றே வருந்துயரந் தீர்ப்பார்
சினைச்சங்கின் வெண்டலையைத் தேனல்—நனைக்கும்
குவளைப் பணைப்பைந்தாட் குண்டுநீர் நாடா
இவளைப் பணையந்தா வின்று.

(அதன் பின் புட்கரன் நளனை நோக்கி) 'சினை சங்கின் வெண் தலையை - பருத்த சங்கின் வெண்ணிறமான தலையோட்டை, தேனல் நனைக்கும் - தன்னிடமுள்ள தேனல் நனையச் செய்யும், பைம் தாள் குவளை குண்டு நீர் நாடா - பசுமையான தண்டினையுடைய நீலோற் பல மலர்கள் நிறைந்த ஆழமான நீர் நிலைகளையுடைய நிடத நாட்டை யுடையவனே! வரும் துயரம் மனைக்கு உரியார் அன்றே தீர்ப்பார் - வரக்கூடிய துன்பத்தை அவரவர் வீட்டுக்கு உரிய மனைவியரன்றே தீர்ப்பவராவர்? ஆதலின், இன்று இவளை பணையம் தா - இத் துன்ப நிலையில் நீ உன் மனைவி தமயந்தியாகிய இவளைப் பந்தயமாக வைத்துச் சூதாடுவாயாக!' என்று கூறினன்.

சினை சங்கின வெண்டலை என்பதற்கு, கருவுற்ற சங்கின் வெண்ணிறமான தலை எனப் பொருள் கொண்டார் பலர்; கருவுற்று உயிருடன் வாழும் சங்கின் தலை வெண்ணிறமாய் இராமையால்

இறந்த சங்கின் மண்டையோட்டில் தேனைச் சொரிதலே நீர் நில வளங்களின் சிறப்பை விளக்குவதாகும், எனப் பொருள் கொள்ளப் பெற்றது. வெண்டலை - மண்டையோடு. 'வெண்டலையுட்கச் சிரித்து (நாலடி. 50); வெண்டலையிற் பலிகொண் டுழல்வீர்' (தேவாரம்). குண்டு - ஆழம் அல்லது பள்ளம்; 'குண்டு நீரிலஞ்சி' (மணி. 8 : 8). 'இவளைப் பணையந் தா', என்றதால் அப்போது தமயந்தி அங்கு அருகே யிருந்தாள் எனத் தெரிகிறது; முதனூல்காகிய வடமொழி நளோபாக்யானத்தில் தமயந்தி நகரமாந்தர் முறையிட்டதைக் கேட்டு நளனிடம் சென்று அவனைச் சூதாட்டத்தி னின்றும் விலக்குமாறு கேட்டுக்கொண்டாள் என்று கூறியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. (49)

நளன் சூதாட்டத்தை விட்டு நீங்கியது

218. இனிச்சூ தொழிந்தோ மினவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே—பனிச்சூதப்
பூம்போ தவிழ்க்கும் புனலுடன் பொன்மகளே
நாம்போது மென்ரு னளன்.

(புட்கரன் அவ்வாறு கூறவும், தமயந்தியை நோக்கி நளன்), கனி சூத வார் பொழிலின் கண் - பழங்களைத் தரும் பெரிய மாமரச் சோலையினிடத்து, இன வண்டு - கூட்டமாக வண்டுகள், கிண்டி - குடைந்து, பனிச்சு ஊத - அசைத்து ஊதுவதால், பூம் போது அவிழ்க்கும் - அச்சோலையில் உள்ள பூ அரும்புகளை விரித்து மலரச் செய்யும், புனல் நாடன் பொன்மகளே! - நீர் வளமிக்க விதர்ப்ப நாட்டரசன் அழகிய பெண்ணே! இனி சூது ஒழிந் தோம் - இனி யாம் சூதாட்டத்தை விட்டு நீங்கினோம்; (ஆதலின்) நாம் போதும் என்ரு ன் - நாம் இவ்விடம்விட்டுச் செல்வோம்' என்று கூறினன்.

சூதம் - மாமரம்; இது வடசொல். பனித்து என்பது பனிச்சு என வந்தது போலி. பூம் போது - பூக்கும் தருணத்தில் உள்ள பூக்களை; அழகிய பூ அரும்புகளை என்றும் கொள்ளலாம். பொன் மகள் - பொன் போன்ற மகள் என்னலும் ஆம். பனித்தல் - அசைத்தல்; அல்லது நடுங்கிச் செய்தல்; 'மயில் பனிக்கு மென் றருளிப் படாஅ மீத்த' (புறநா. 145); 'பதைத்தனர் பனிப்பவும்' (பெருங். 1. 46 : 54); பனிக்கற் சுரத்துக் கரன் முதலோர் (கம்ப. சுந்தர: 544). போதும் - போவோம்; தன்மைப் பன்மை வினைமுற்று.

பி - ம். 1. தொழிந்தோம்யா. (50)

நளன் நகரைவிட்டுச் சென்றது

219. மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகங் கொள்ளத்தான் போனீற்போல்—தங்கால்
பொடியாடத் தேவியொடும் போயினனன்றே
கொடியானுக் கப்பார் கொடுத்து.

மெல் கால் சிறை அன்னம் - மென்மையான கால்களையும் மென்மையான சிறகுகளையுமுடைய அன்னப்புள், வீற்றிருந்த மெல் மலரை - தங்கியிருந்த மென்மையான தாமரைப் பூவை, புல் காகம் கொள்ள - சிறப்பற்ற அதாவது இழிந்த ஒரு காகம் பற்றிக் கொள்ள, தான் போனால் போல் - அவ்வன்னம் தான் அதைவிட்டு நீங்கிச் சென்றது போல, கொடியானுக்கு அ பார் கொடுத்து - கொடிய வனான புட்கரனுக்கு அந்த நாட்டைக் கொடுத்துவிட்டு, தன் கால் பொடி ஆட - தன் கால்களில் சிறு நுண்மணற் பொடிகள் பற்றிச் சுட, தேவி ஒடும் - தன் தேவியாகிய தமயந்தியோடும், அன்றே போயினனன் - அன்றைக்கே நளன் (அந்நகர்விட்டு) வெளியே சென்றான்.

தான், அன்று, ஏ என்பன அசைகளாகக் கொண்டாரும் உளர். நளனுக்கு அன்னமும், புட்கரனுக்குக் காகமும், கிடத நாட்டிற்குத் தாமரை மலரும் உவமைகள். தன் காற் பொடியாட; என்பதற்குத் தன் கால்களிற் தூசிகள் படிய நடந்து எனினும் பொருள் கொள்ளலாம்; 'பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ' (சிலப். 19 : 40,. மென்கால் - தோலடியுடைமையால். அன்னம் தாமரை மலரில் வீற்றிருப்பது : 25, 39; மூதுரை. 24.

பி - ம். 4. கொடியாரும் மால்யானைக் கோ. (51)

220. கடப்பா ரெவரே கடுவினையை வீமன்
மடப்பாவை தன்னுடனே மன்னன்—நடப்பான்
வனத்தே செலப்பணித்து மாயத்தாற் சூழ்ந்த
தனைத்தே விதியின் வலி.

வீமன் மட பாவை தன் உடனே - வீமராஜனுடைய அழகிய அல்லது இளமை வாய்ந்த பதுமை போன்ற தமயந்தியோடு, மன்னன் - அரசனான நளன், வனத்தே நடப்பான் செல பணித்து - காட்டினிடம் நடந்து செல்ல ஏவி, விதியின் வலி - விதியின் வலிமை, மாயத்தால் சூழ்ந்தது அனைத்து - வஞ்சனையால் சூழ்ந்து கொண்டதே போன்றதாயிற்று; ஆதலின், எவரே கடு வினையை கடப்பார் -

விதியின் கொடிய செயலே யாரே தப்பிச் செல்லக் கூடியவ ராவர்! (ஒருவராலும் முடியாது என்றபடி.)

மடமை என்பது, இளமை, அறியாமை, அழகு எனப்பல பொருள்களைக் கொண்ட ஒரு சொல். இச் செய்யுளால் விதியின் வலிகொடிது என்பதும், அதனைக் கடப்பதற்கு யாவராலும் முடியாது என்பதும் விளங்குவன காண்க. ஒப்பு. 'ஊழிற் பெரு வலி யாவுள மற்றொன்று, சூழினும் தான்முந் துறும்; (குறள். 380); 'உறற் பால நீக்க லுறுவர்க்கு மாகா'; (நாலடி. 104); 'வென்றவ ருளரோ மேலை விதியினை'; (கம்ப. அயோத்: தைலமாட்டுப்: 56). எவரே: ஏகாரம் பிரிதொன்று இல்லை என்னும் தேற்றப் பொருளில் வந்தது. பணித்தல் - கட்டளையாக விதித்தல் என்னலும் ஒன்றும். இனி, மாயத்தாற் சூழ்ந்தது; அனைத்தே விதியின் வலி, எனப் பிரித்தும் பொருள் கொள்ளலாம். அவ்வாறாயின், விதியின் வலிமைக்கு, இந்நளசரிதம் ஒரு தக்க சான்றாகும் என்னலாம்.

பி - ம். 2. மடப்பாவை யோடெங்கண் மன்னன்.
3. வனத்தே செலப்பிணித்த மாயத்தாற் சூழ்ந்த, வனத்தே செலப் புனைந்த; தணிந்த 4. இனைத்தே விதியி னியல்பு. (52)

நகரமாந்தரின் வேண்டுகோள்

221. ஆருயிரின் ரூயே யறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்றூர் தங்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று.

(நளன் தமயந்தியுடன் அந்நகர் விட்டு வனம் நோக்கிச் செல்வது கண்ட அந்நகர மாந்தர் நளனை நோக்கி), தம் கண்ணின் நீர் வார்த்து - தம் கண்ணீரைச் சொரிந்து, கால் கழுவா நின்று, அது நளனின் கால்களைக் கழுவுமாறு வணங்கி நின்று, 'அருமை உயிரின் தாயே - எங்கள் அரிய உயிர்களுக்குத் தாய் போன்றவனே! அறத்தின் பெரும் தவமே - புண்ணியஞ் செய்த தவப்பயன் போன்றவனே! பேர் அருளின் கண்ணே - பெரிய அருளுக்கு இருப்பிடம் ஆனவனே! பெருமானே - எங்கள் தலைவனே! பார் இடத்தை - இப்புவியை, யார் காக்க - யாரோ காப்பது? நீ போவது யாங்கு - நீ செல்வது எங்கே?' என்றூர் - என்று வருந்திக் கூறினர்.

தம் கண்ணின்.....நின்று : தம் கண்ணின் நீரையே நீராகக் கொண்டு அவன் கால்களில் வார்த்து அவற்றைக் கழுவின வர்களாய் நின்று என்பதாம். இதனால், அந்தகரமாந்தர் நளன் கால்களில் விழுந்தழுது கண்ணீர் விட்டு வருந்தினர் என்க. ஆருயிரின் தாயே : தாயே என்றது அன்பின் மிகுதியால் வந்த மரபு வழுவமைதியாகும்; இதனால் நளன் மன்னுயிர் ரக்ஷகத்திற்கும் தாய்போன்ற அன்புடையவன் என்பதாம். அறத்தின் பெருந் தவமே : அறம் செய்த தவமாக வந்தவன் என்பதாம். அறம் இவனைத் தவஞ் செய்து பெற்றது என்னலும் ஆம். பேரருளின் கண்ணே - பெரும் அருளுக்குக் கண் போன்றவன்; கண் உறுப் புக்களுள் அருமையும் சிறப்பும் அமைந்தது ஆதலின்;

> 'கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்;
> கண்ணோட்டமில்லவர் கண்ணிலர்' (குறள், 575, 577)

என்பனவற்றாலும், அருளே கண்ணுடைமைக்கு ஏற்ற தகுதியது என்பது விளங்கும். கண்ணீர் வார்த்துக் கால் கழுவுதல்; ஒப்பு :- பெரும். 4. 7 : 213. இச் செய்யுளில் தசரத சக்கரவர்த்தியை, 'தாயோர்க்கு மன்பிற் றவமொக்கும் நலம் பயப்பிற்' (கர்ப. பால. அரசியற் : 4) என்ற ஒப்புமை அறிக. இதனால், நளனிடத்து அந்தகர மாந்தர் கொண்ட அன்பும், பெருமதிப்பும் வெளியாகின்றமை காணலாம். நளன், தாய், அறத்தின் பெருந்தவம், பேரருளின் கண் என்பன திணைவழுவமைதிகளும் ஆம். இவை முறையே, அன் பினாலும், பெருமையாலும் கூறியவை என்க.

பி - ம். 1. அறத்தின் பிறந்தகமே.
2. பேரருட்குங் கண்ணே ; பார்முழுதும்,
3. ஆளப் போகின்ற ராங்கென்ற ; யார்காக்கப் போகின்றாய்.
4. நீரால் கழல்கழுவா நின்று. (53)

222. வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞால முழுது நடுவிழந்தால்—சீலம்
ஒழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர்.

வேலை கரை இழந்தால் - கடல் கரை புரண்டு எழுந்தாலும், வேத நெறி பிறழ்ந்தால் - மறை யொழுக்கம் மாறுபட்டாலும், ஞாலம் முழுதும் நடுவு இழந்தால் - உலகமக்கள் அனைவரும் நடு

நிலைமை தவறி நடந்தாலும், செம் கோல் அவர் - நீதிமுறை கோணாது ஆளும் அரசர், சீலம் ஒழிவரோ - தம் ஒழுக்கத்தை விட்டு நீங்குவரோ? செம்மை உரை திறம்பா செய்கை அழிவரோ - நீய செயல்களைப் புரிந்து கெடுவாரோ? (மாட்டார் என்றபடி.)

இச்செய்யுளும் நகர மாந்தர் கூற்றாகவே பலர் கொள்வர்; ஆனால் இச்செய்யுள், சரித நிகழ்ச்சிக்கு ஏற்ப, மேலோரின் உயரிய கொள்கையை அனைவர்க்கும் அறிவுறுத்தும் நிலையில், கவிக்கூற்றாக அமைந்தது எனவே கொள்வது பொருத்த முடைத்தாகும். வேலை கரை கடந்து போதலும் வேத நெறி பிறழ்தலும், உலகில் வாழ்வோர் அனைவரும் நடுநிலைமாறி நடத்தலும் பெரும்பாலும் நிகழா என்பதாம். ஒருகால், அவை மாறினாலும், செங்கோன் மன்னர் தம் ஒழுக்கத்தில் மாறார் என்ற உறுதியைப் புலப்படுத்தினார் நம் நூலாசிரியர் என்க. இங்கு நளன் தன் நெறியில் மாறான் என்பது, தான் தோற்ற நாட்டைப் புட்கரனுக்குக் கொடுக்காமல் முறைக்கு மாறாகத் தானே இருந்து அரசாளவில்லை என்பதை அறிவித்தபடி. இச்செய்யுளில், இழந்தால், பிறழ்ந்தால், நடுவிழந்தால் என்பவற்றின் ஈற்று எண்ணும்மைகள் தொக்கி நின்றன.

பி-ம். 1. வேலை கரையழிந்தால்; வேந்தர் நெறிபிறழ்ந்தால்; வேத மொழியிழந்தால், வேத முறையிழந்தால். (54)

223. வடியேறு கூரிலைவேல் மன்னுவோ வன்றன்
அடியேங்கட் காதரவு தீரக்—கொடிநகரில்
இன்றிருந்து நாளை யெழுந்தருள்க வென்றுரைத்தார்
வென்றிருந்த தோளான்றாள் வீழ்ந்து.

'மேலும் அந்நகர மாந்தர் நளனை நோக்கி), வென்று இருந்த தோளான் தாள் வீழ்ந்து - வெற்றிதங்கிய தோள்களையுடைய நளன் பாதங்களில் விழுந்து வணங்கி, 'வடி எறு கூர் இலை வேல் மன்னுவோ - உருவிற் சிறந்து கூரிய அலகை யுடைய வேல் ஏந்திய அரசனே! உன் தன் - உனக்குரிய, அடியேங்கட்கு - அடியார் களாகிய எங்களுக்கு, ஆதரவு தீர - உன் அபிமானம் ஒருவாறு நிறைவு அடையும்படி, கொடி நகரில் - கொடிகளால் அலங்கரிக்கப் பெற்ற இந்த நகரில், இன்று இருந்து - இன்றைக்கு மட்டுமாவது தங்கியிருந்து, நாளை எழுந்தருள்க - நாளை செல்வீராக' என்று உரைத்தார் - என்று குறையிரந்து கேட்டுக் கொண்டனர்.

வென்றி - வெற்றி. வென்றிருந்த, தொகுத்தல் விகாரம், வென்றிருந்த தோள், என்றது, நளனின் தோளின் பெருமை

கூறியது. பின் கூர் இலை வேல் என்றமையால், முன்னுள்ள வடி என்ற சொல்லுக்கு உரு எனப் பொருள் கொள்ளப்பட்டது; வடி - வடிவம்; 'கரியது வடிகொடு' (நேவாரம்); கூரிலைவேல்: இலைபோலக் கூரிய நுனியையும் அகன்ற அலகையுமுடைய வேல்: மன்னுவோர்: விளியில் ஓகாரம் மிகுந்தது; 116 உரையிற் காண்க. ஆதரவு - அன்பும் ஆம். தாள் வீழ்ந்து கேட்டுக்கொள்ளுதல், தம் வணக்கத்தின் முதிர்ச்சியையும், உம்மையன்றி எமக்கு வேறு புகல் இல்லை என்பதையும் புலப்படுத்துஞ் செயல். அடியேங்கள் எம் கள், என்பன விகுதி மேல் விகுதி; செய்தனகள் என்பது போல, (பெரியதிருமொழி. 5. 5.)

பி - ம். 2. கடிகாவில். 3. யெழுந்தருளு மென்றுரைத்தார்.
4. தோளான்பால் வீழ்ந்து. (55)

224. மன்றலிளங் கோதை முகநோக்கி மாநகர்வாய்
நின்றுருகு வார்கண்ணி னீர்நோக்கி—இன்றிங்
கிருத்துமே யென்ரு ளிளங்குதலை வாயாள்
வருத்தமே தன்மனத்தில் வைத்து.

நின்று - தன் எதிரே நின்று, உருகுவார் - மனமுருகி நின்ற அந்நகர மாந்தர்தம், கண்ணின் நீர் நோக்கி - கண்ணீர்ப் பெருக்கைக்கண்டும், இளம் குதலை வாயாள் வருத்தம் தன் மனத்தில் வைத்து - இளமை வாய்ந்த குதலை மொழி பேசும் தமயந்திக்கு உண்டான துன்ப நிலையைத் தான் தன் மனத்திற் கொண்டவனுமாகி, இளம் மன்றல் கோதை முகம் நோக்கி - இளமைப் பருவத்தினளும் மணம் பொருந்திய கூந்தலுடையவளுமான அவளுடைய முகத்தைப் பார்த்து, 'இன்று இங்கு இருத்துமே, என்ரூன் - இந்நகரமாந்தர் விருப்பப்படி) இன்று நாம் இங்கு இருந்து பின வெளிச் செல்வோமே' என்று நளன் கூறினன்.

மன்ற விளங்கோதை - மணம் பொருந்திய மாலையணிந்த இளம் பெண்ணான தமயந்தி என்னலும் ஆம். இன்றிங் கிருந்துமே; இது முன் செய்யுளில் (223) நகரமாந்தர் நளனை, 'இன்றிருந்து நாளை யெழுந்தருள்க' என்றமை மேற் கொண்டு கூறியது. கோதை முக நோக்கியது, அவளது அபிப்பிராயத்தை அறிய. குதலை: பொருள் காணமுடியாத குழந்தைகளின் பேச்சு. மழலை - மகளிர் அல்லது சிறுவரின் திருந்தாத பேச்சு. குதலையும் மழலையும் வேறு பாடின்றிப் பெண்கள் பேச்சுக்கு வழங்கப் பெறுவது செய்யுள்

களிற் காணலாம்; 'கோகிலஞ் செற்ற தன்ன குதலையள்' (கம்ப. அயோத். நகர்நீங்கு: 231) வருத்தமே; ஏ, முதலது, அசைநிலை; பின்னது இசைநிலை.

பி - ம். 1. மன்றலந்தார்க் கோதை; மன்றல் கமழ்கோதை. 3. இருத்தமோ. 4. வருத்தமோ; தம்மனத்தே வைத்து. (56)

புட்கரன் நளனை ஆதரிப்பார் கொல்லப்படுவர் என முரசறைவித்தது

225. வண்டாடுந் தார்நளனை மாநகரில் யாரேனும்
கொண்டாடி னர்தம்மைக் கொல்லென்று—தண்டா
முரசறைவா யாங்கென்ரு ன்னே முனிந்தாங்
கரசறியா வேந்த னழன்று.

ஆங்கு - அப்பொழுது, அரசு அறியா வேந்தன் - அரசாட்சி முறை அறியாத புட்கர ராசன், அழன்று முனிந்து - நெருப்புப் போலச் சினங்கொண்டு, 'வண்டு ஆடும் தார் நளன் - வண்டுகள் தேனையுண்டு மகிழ்ந்து விளையாடும் மாலை யணிந்த நளனை, மா நகரில் - இந்த மாவிந்தமென்னும் பெரு நகரில், யாரேனும் கொண் டாடினர் தம்மை - யாராவது பாராட்டி ஆதரித்தார் அவர்களை, அங்கு கொல் என்று - அவ்விடத்திலேயே கொன்று விடுக!, என்று தண்டா முரசு அறைவாய் என்ரு ன் - தடையின்றி அதாவது இடைவிடாமல் தொடர்ந்து முரசம் முழக்கி அறிவிப்பாயாக!' என்று கட்டளையிட்டான்.

முனிந்தாங்கு - முனிந்து, என்ற பொருளில் ஆங்கு என்பதை அசையாகவும் கொள்ளலாம். 'ஊடலி னுண்டாங்கோர் துன்பம்' (குறள். 1307.) என்றது போல.

பி - ம். 1. வையகத்தில் யாரேனும்; 2. கொல்கவென்று. 3. முரசறைய வேவினன், முரசறைக வாங்கென்ரு ன். (57) 4. அரசறிய.

226. அறையும் பறையரவங் கேட்டழிந்து நையும்
பிறைநுதலாள் பேதைமையை நோக்கி—முறுவலியா
இந்நகர்க்கீ தென்பொருட்டா வந்த தெனவுரைத்தான்
மன்னகற்றுங் கூரிலைவேல் மன்.

மன் அகற்றும் கூர் இலை வேல் மன் - பகையரசர்களைப் போரில் அஞ்சியோட அகற்றும் கூரிய இலைபோன்ற அலகையுடைய வேல் ஏந்திய அரசனை நளன், அறையும் பறை அரவம் கேட்டு -

(அவ்வாறு) பறை முழக்கி அறிவித்த ஓசை கேட்டு, அழிந்து நையும்-மனமழிந்து வருந்திய, பிறை நுதலாள் - பிறைபோன்ற நெற்றியுடைய தமயந்தியின், பேதைமையை நோக்கி - அறியாத பயந்த தன்மையைக் கண்டு, முறுவலியா - புன்னகை கொண்டு, 'இ நகர்க்கு - இந்த நகரமாந்தர்களுக்கு, என் பொருட்டால் - என் காரணமாக, ஈது வந்தது என உரைத்தான் - இந்தக் கொடிய தண்டனையான துன்பம் வந்தது' என்று கூறினான்.

கூரிலை வேல் (223). வேந்து என்பது உயர்திணையில் வந்த அஃறிணைச் சொல், முறுவலியா: செய்யா என்னும் வாய் பாட்டு உடன்பாட்டு வினை.

பி - ம். 1. கேட்டழிந்த நைந்த. 3. தென்பொருட்டால். (58)

நளன், தமயந்தியும் மக்களும் தொடர நகர் நீங்கியது

227. தன்வாயின் மென்மொழியே தாங்கினனென்குநகர்ப்
பொன்வாயில் பின்னகப் போயினன்—முன்னளில்
பூமகளைப் பாரிடமும் புல்லினன் றன்மகனைக்
கோமகளைத் தேவியொடுங் கொண்டு.

முன் நாளில் - அற்றைக்கு முந்திய நாளில், பூமகளை பாரின் ஒடும்-தாமரையில் வாழும் திருமகளைப் புவிமாதுடன் சேர்ந்து, புல்லினன்-தழுவியிருந்தவனை நளன், தன் வாயில் மெல் மொழியே தாங்கினன் - வருந்தும் அந்நகர மாந்தர்க்குத் தன் வாயின் இனிய மென்மையான சொற்களைக் கொண்டு ஆறுதல் கூறி அவர்களைத் தேற்றுவித்து, தன் மகனை - தனது மைந்தனை இந்திரசேனன் என்பானையும், கோமகளை - அரச குமாரியான தன் புதல்வி இந்திரசேனை என்பாளையும், தேவி ஒடும் - தன் தேவியாகிய தமயந்தியோடும், கொண்டு - அழைத்துக் கொண்டு, நகர் ஒங்கு பொன் வாயில் - அந்நகரில் ஓங்கி விளங்கும் அழகிய கோட்டைவாயில், பின் ஆக - பின்னே இருக்குமபடி, போயினன் - அந்நகரைவிட்டுச் செல்வானனன்.

தன் வாயின்...தாங்கினன் என்பதற்கு தன் வாயில் மென் மொழி பேசுவதைக் கொண்டுள்ளவனும் என்று கொண்டு, முன்னளில்...புல்லினன் என்பதோடு இயைத்து, அவன் குணச் சிறப்புக்களைக் கூறியதாகவே கொள்வாரும் உளர். அரசன், செல்வத்திற்கும், புவிக்கும் தலைவன் என்ற முறையில் அவனைப் பூமகள் புவிமகள் ஆகிய இருவர்க்கும் தலைவனை திருமாலாகச் சிறப்

பிக்கும் கவிமரபு நோக்கி, நளனைப் பூமகளைப் பாரினெடும் புல்லினன் என்றதாம். ஒங்கு பொன் வாயில் - உயர்ந்தோங்கி விளங்கும் பொன்னால் அமைந்த நகரவாயில் என்னலும் ஒன்றும். பொன் வாயில் பின்னுக: முன், 'சடைச்செங்கெல் பொன் விளைக்குந் தன்னாடு பின்னுக்' (67), 'சேலுற்றவாவித் திருநாடு பின்னெழிய' (245) என்றமை போன்றது. தேவி - தெய்வத்தன்மை வாய்ந்த கலைவி; இஃது அரசன் முதலிய சிறப்பமைந்தோர் மனைவியர்க்கு அரசனால் அளிக்கப்பெற்றுவந்த ஒரு சிறந்த பட்டப் பெயராகும்; சித்திரத் தேவிப் பட்டம் திருமகன் நல்கினனே' (சீவக. 2567) என்பது காண்க.

பி - ம். 1. நன்மொழியே; ஞங்குத்தன். 2. முன்னைப். (59)

நகரின் துயர நிலை

228. கொற்றவன்பாற் செல்வாரைக் கொல்வான் முரசறைந்து
வெற்றியொடு புட்கரனும் வீற்றிருப்ப—முற்றும்
இழவு படுமாபோ லில்லங்க டோறும்
குழவிபா லுண்டிலவே கொண்டு.

கொற்றவன் பால் செல்வாரை - நளராஜனிடத்துப் போவார் தம்மை, கொல்வான் - கொன்றுவிடும்படி, முரசு அறைந்து - முரசு அடித்து யாவர்க்கும் அறிவித்து, வெற்றி ஒடு புட்கரனும் வீற்றிருப்ப - ஜயம் பெற்றவனாகப் புட்கரனும் அரசாட்சியில் அமர்ந்திருக்க, இல்லங்கள் தோறும் - அந்நகரில் உள்ள வீடுகள் ஒவ்வொன்றிலும், இழவு படும் ஆ போல் - சாவு ஏற்பட்டது போல, குழவி - சிறு குழந்தைகளும், பால் கொண்டு உண்டில - தம் தாயின் பாலையும் ஏற்று உண்ணாதன ஆயின. (அதாவது உண்ணவில்லை.)

இழவு - இழத்தல்; இங்குச் சாவு என்பதைக் குறிப்பது. சாவு ஏற்பட்ட வீட்டில் அன்று குழந்தை முதல் ஒருவரும் உண்ணாதிருப்பது கண்கூடு. துக்கத்தால் தாய்மார் தம் சிறு குழந்தைக்கும் பாலைக் கொடுக்கவில்லை என்பதாம். இனி, தாய்மார் தம் தனங்களில் துக்கத்தால் பால் சுரவாமையால் குழவிகள் சுவைத்துப் பார்த்தும் பால் அடையவில்லை என்றும், அச்சிறு குழந்தைகளையும் அத்துக்கம் வருத்த அவைதம் தம் தாயின் பாலை உண்ண நாடவில்லை என்றுங் கொள்ளலாம். இதே கருத்து நைடதத்தும் கூறப் பெற்றுள்ளமை காண்க; நைடதம். நகர்நீங்கு: 44. இஃது, இராமபிரான பிராட்டியோடும், இளைய பெருமானோடும் வனஞ்

செல்லத் துணிந்த போது அவ்வயோத்தி நகரடைந்த துயர நிலையை,

கிள்ளையொடுபூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுணர்வறியா
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவா னென்றுரைத்த மாற்றத்தால்.

ஆவு மழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த
பூவு மழுதபுனற் புள்ளழுத கள்ளொழுகும்
காவு மழுத களிறழுத கால்வயப்போர்
மாவு மழுதனவம் மன்னவனே மானவே.

(கம்ப. அயோத். நகர்நீங்கு : 100 ; 102.)

என விளக்கியுள்ளாமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

பி - ம். 1. பறையறைந்த.
2. வெற்றியுடன் புட்கரனும் வீற்றிருந்தான்.
3,4. குழவிபா லுண்ணுத கோகரி லெல்லோரும் ; இழவுபா டுற்றவாபோ லின்று.

நளனுடைய மக்களின் துயரநிலை

229. சந்தக் கழற்ரு மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரு நோவப் பதைத்துருகி—எந்தாய்
வடந்தோய் களிற்ருய் வழியான தெல்லாம்
கடந்தோமோ வென்ருர் கலுழ்ந்து.

சந்தம் கழல் தாமரையும் - அழகிய சிலம்பு அணிந்த மைந்தன் தாமரை மலர் போன்ற பாதங்களும், சதங்கை அணி பைம் தளிரும் - கிண்கிணி அணிந்த புதல்வியின் பசிய தளிர்கள் போன்ற மென்மையான பாதங்களும், நோவ - வலியுண்டாக, பதைத்து உருகி - அவ்வருத்தம் தாங்காமல் அவர்கள் துடித்துத் தளர்ந்து, (நளனை நோக்கி) கலுழ்ந்து - அழுதுகொண்டு, 'எந்தாய் - தந்தையே! வடம் தோய் களிற்ருய் - புரசை என்னும் கயிற்றின் வடங்கள் படிந்துள்ள களிறுகளை யுடையவனே! வழி ஆனது எல்லாம் - நாம் நடந்து செல்ல வேண்டிய வழியாக உள்ள எல்லாம், கடந்தோமோ என்ருர் - நாம் கடந்து வந்துவிட்டோமோ?' என்று வினவினர்.

அக்குழந்தைகள் இருவரும் அதுவரையில் அவ்வாறு நடந்த வரல்லர் ஆதலின், அந்தச் சிறு தூர நடையாலும் தம் பாதங்கள் நோவ, உடல் பதைத்து வருந்தி, 'வழியான தெல்லாம் கடந்தோமோ'

என்று தம் தந்தையாகிய நளனை நோக்கிக் கேட்டனர். எந்தாய் என்பதை, எம் தாயே என்று தமயந்தியையும், வடந்தாய் களிற்றாய் என்பதை, நளனையும் தனித்தனி குறித்து வினவினர் எனப் பொருள் கொண்டாரும் உளர். சந்தம் - அழகு (சூடா). கழற்றுமரை என்றதில் கழல் என்ற குறிப்பால் கழலணிவது ஆண்மகன் என்பது பற்றி, நளனது அரசகுமாரனையும், சதங்கை என்றதால் அரச குமாரியையும் குறிப்பன ஆயின. கழற்றுமரை, சதங்கை யணி தளிர் என்பன இல் பொருள் உவமைகளை ஏற்றுவந்த உருவகங் களுமாம். இச்செய்யுள், 'ஆண்டைநக ராரையொடு வாயிலக லாமுன், யாண்டையது காவனை விசைத்தது மிசைப்பாய்' (கம்ப. சுந்தர : 550) என்று பிராட்டி அநுமனிடங் கூறியதாக உள்ள அடையாளச் செய்தியையும், புகார் நகரை நீங்கி ஒருகாவத தூரஞ் சென்றதும் கண்ணகி, கோவலனை நோக்கி, 'மதுரை மூதூர் யா' தெனக், கேட்ட செய்தியையும், (சிலப். நாடுகாண் : 38-41) இங்கு நினைப்புறுத்துகின்றது. (61)

230. தூயதன் மக்க டுயர்நோக்கிச் சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி—யாதும்
தெரியாது சித்திரம்போ னின்றிட்டான் செம்மை
புரிவான் றுயராற் புலர்ந்து.

செம்மை புரிவான் - நீதி முறைப்படி செங்கோல் நடத்திய நளன், (அவ்வாறு வினவிய), தூய தன மக்கள் துயர் நோக்கி-உலக அனுபவ மில்லாத களங்கமற்ற தன் மக்களின் துன்பத்தை மனத்திற்கொண்டு, சூழ்கின்ற - தம்மைத் தொடர்ந்து வருகின்ற, விதியின் வலி நோக்கி - விதியின் வலிமையுங் கருதி, துயரால் புலர்ந்து - துன்பத்தால் வாடி, யாதும் தெரியாது - ஒன்றும் செய்வது அறியாமல், சித்திரம் போல் - உயிரற்ற ஒரு சித்திரம் போல, நின்றிட்டான் - செயலற்று ஒய்ந்து நின்றவனானான்.

தூய மக்கள் - உலகில் நிகழும் கள்ளங் கபடம் முதலிய தீய குணம்பயிலப் பெறாத சுத்தமான மனமும் செயலுங் கொண்ட மக்கள்; சிறு குழந்தைகள் இயற்கையில் தூர்க்குணங்கள் அற்ற மனமுடையவர்கள் என்ற உண்மை இங்குப் புலப்படுவது அறிக. மாய விதியின் வலி : விதி, நாம் அறியவொண்ணாது நம்மின் வலிதாய் வந்து, நம்மைச் சூழும் தன்மையது என்பதாம். புரிதல் - எப்பொழு

தும் செய்தல்; 'புகழ்புரிந்தார் மாட்டு' (குறள் : 5.) என்றது போல. சித்திரம், அசைவற்ற நிலைக்கு. நின்றிட்டான்; இடு, துணைவினை.

பி - ம். 2. சாயல்.
3. தெரியாத சித்திரம்போல்; நின்றிட்டான் செம்மை.
4. புரிவான் றுயரிற் புதைந்து, புரிவாள் துயரால். (62)

நளன் தமயந்தியை மக்களுடன் குண்டினபுர மேகக் கூறியது

231. காத லிருவரையும் கொண்டு கடுஞ்சுரம்போக்
கேத முடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்
வீமன் திருநகர்க்கே மீளென்ருன் விண்ணவர்முன்
தாமம் புனைவாளைத் தான்.

(நளன் பின் ஒருவாறு தேறி), விண்ணவர் முன் - இந்திரன் முதலிய தேவர்களின் முன்னே, தாமம் புனைவாளை - அவர்களை நீக்கித் தனக்கே சுயம்வர மணமாலை சூட்டிய தமயந்தியை, (நோக்கி), 'மாதராய் - பெண்ணே! காதல் இருவரையும் கொண்டு - நம் அன்பிற் குரிய இம்மக்கள் இருவரையும் நாம் உடன் கொண்டு, கடும் சுரம் போக்கு - கொடிய பாலை நிலவழியே போவது, ஏதம் உடைத்து - துன்பத்தை அல்லது குற்றத்தைச் செய்வதாகும்; (ஆதலின்) வீமன் திருநகர்க்கே - உன் தந்தையாகிய வீமராஜன் குண்டினபுரி என்னும் அழகிய அல்லது செல்வம்மிக்க நகரத்திற்கே, இவரை கொண்டு நீ மீள்க என்ருன் - இவர்களை நீ அழைத்துக் கொண்டு திரும்பிச் செல்வாயாக!' என்று கூறினன்.

மாதர்; அர் போலி; மாதராள் என்பது விளியில் மாதராய் எனத்திரிந்தது என்னலும் ஒன்றும். மாதர் - அழகுடைய பெண் என்னலும் ஆம். திருநகர் - செல்வச் சிறப்புடைய நகர். அங்குச் சென்ருல் உனக்கும் நம் மக்களுக்கும் குறைவுக்கிடமிராது எனற குறிப்பை உணர்த்தியதுமாம். புனைவாளை : இது காலவழுவமைதி. நகர்க்கே : ஏகாரம் பிரிநிலைப் பொருளது. தான : அசை.

பி - ம். 3. மீளென்ருன். 4. புனைந்தானைத் தான். (63)

தமயந்தியின் மறுமொழி

232. குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக்கொளலாம் பெறலாமோ—கொற்றவனே
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கான் மழைபொழியா நொந்து.

(அது கேட்ட தமயந்தி), நோக்கால் மழை பொழியா நொந்து - தன் கண்களால் மழை சொரிவது போல நீர் பொழிய வருந்தி நின்று, 'கொற்றவனே - அரசனே! குலமகளுக்கு - நற்குலத்துதித்த ஒரு கற்புடைய மகளுக்கு, குற்றம் இல் காட்சி - குற்றமில்லாத தோற்றப் பொலிவும், குதலை வாய் - திருந்தா இளஞ்சொற்களையுமுடைய, மைந்தரையும் - புதல்வர்களையும், பெற்றுகொளல் ஆம் - மீண்டும் பெற இடம் ஏற்படும்; கோ காதலனை - (ஆனால்) தலைவனை கணவனை, பெறல் ஆமோ - இழந்து விட்டால் பின் அந்தக் குல மகள் மீண்டும் பெற முடியுமோ?' (முடியாது என்றபடி) என்று உரைத்தாள் - என்று கூறினள்.

நோக்கு - கண்; நோக்கப்படுவது; இது நோக்கம் எனவும் வழங்கும். மழை - உவமை ஆகுபெயராய்க் கண்ணீர் சொரிதலுக்கு ஆயிற்று. 'குலமகளுக்குக் கணவன் இருந்தால், பின்னர்ப் புதல் வரை அடைய இடமுண்டு; கணவனே போய்விட்டால் மீண்டும் வேறு கணவனையடைதல் கூடாததாகும் என்றதைக் குறிப்பிட்டு, தான் உன்னைப் பிரியேன்' என்பதை நளனுக்கு அறுதியிட்டுக் கூறினள் தமயந்தி என்பதாம். குலமகளுக்கு, என்ற குறிப்பால், நற்குலமகளிர் அல்லாத இழிகுல மகளிரே மீண்டும் வேறு கணவனை அடைவர் என்றதைப் புலப்படுத்தினள் என்க. இனி, பின் தமயந்தி இரண்டாம் சுயம்வரத்தை நாடினள் என்றது, தன் கணவனைத் தேடிக் கண்டடையச் செய்த ஓர் உபாயமே அது என்பதை நாம் ஒருவாறு ஊகித்து உணர்ந்து கொள்ளவும், அவளது அசையாத கற்பின் உறுதியை முன்னறிக்கையாக ஆசிரியர் தமயந்தி வாக்காலேயே குறிப்பில் நம்மனோர்க் கிங்கு அறிவுறுத்தி வைத்தாரெனவுங் கொள்ள இடந்தருவது காண்க. குல மகள் - உயரிய மகளும் ஆம்.

பி - ம். 1. குதலைச் சொன் மக்களையும்.

4. நோக்கா விழிப்பனிப்ப நொந்து; விழிபனியா. (64)

நளன் மக்கட் பேற்றின் சிறப்பைக் கூறியது

233. கைதவந்தா னீக்கிக் கருத்திற் கறையகற்றிச்
செய்தவந்தா மெத்தனையுஞ் செய்தாலும்—மைதீர்
மகப்பெரு மானிடர்கள் வானவர்த மூர்க்குப்
புகப்பெருர் மாதராய் போந்து.

(அது கேட்ட நளன் தமயந்தியை நோக்கி), 'மாதராய் - பெண்ணே! கருத்தில் கைதவம் நீக்கி - மனத்தில் வஞ்சனையை

அகற்றி, கறை அகற்றி - தன்னிடமுள்ள மற்ற குற்றங்களையும் போக்கி, செய்தவம் எத்தனையும் தான் செய்தாலும் - செய்யத்தக்க சிறப்பான தவத்தை ஒருவர் எவ்வளவும் செய்தாரேனும், மை தீர் - குற்றங்கள் நீங்குவதற்கு இடமான, மகவு பெரு மானிடர்கள் - மக்களை அடையா மனிதர்கள், வானவர் தம் ஊர்க்கு - தேவர்களுடைய ஊராகிய சுவர்க்கத்திற்கு, போந்து - போய், புக பெறார் - புகுந்து வாழும் சிறப்பை அடையமாட்டார்கள்'.

இச் செய்யுளின் கருத்து, மேலும் இரு செய்யுள்களிலும் தொடர்ந்து வலியுறுத்தப் பெறுவது காண்க. கறை - குற்றம் அல்லது மாசு; (பிங்.); 'இங்கள் கறையிருளை நீக்கக் கருதாது' (நன்னெறி; 10). செய்தவம் - செய்யத்தக்கதான சிறந்த தவம்; 'செய்தவ மீண்டு முயலப் படும்' (குறள். 265); 'செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே' (கம்ப. பால. பாயிரம்; 5). மை - குற்றம்; மையறு படிவத்து மாதவர்; (மணி. 5:54); 'மகப் பெரு மானிடர்.....புகப் பெறார்'; 'மயக்குறு மக்களை யில்லோர் பயக்குறை யில்லை தாம் வாழு நாளே' (புற.நா. 188) என்றமையுங் காண்க. புத் என்னும் நரகத்தில் விழாமற் காப்பவன் என்ற காரணத்தால் புத்திரன் என்ற பெயர் வந்தது என்பதும் இங்கு நோக்கற்பாலது. தான் என்பது சரிடங்களிலும் அசைகளாகவும் கொள்ளலாம். (65)

பி - ம். 2. பொய்தீர். 3. மானிடவர். 4. மாதராய் போய்.

234. பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லாத வர்.

'இன் அடிசில் - இனிய (சுவையுடைய) சோற்றினுள், புக்கு அளையும் - நுழைத்துத் துழாவிக் குழப்பும், தாமரை கை - தாமரை மலர்போலச் சிவந்து அழகாயும் மென்மையாயும் விளங்கும் கைகளையும், பூ நாறும் - அத் தாமரை மலர்போல மணங்கமழும், செய்ய வாய் - சிவந்த வாயையு முடைய, மக்களை இங்கு இல்லாதவர் - குழந்தைகளை இவ்வுலகில் பெறுத மானிடர்; பொன் உடையர் ஏனும் - பொன்னை (அதாவது பொருளைப் பெரிதும்) அடைந்தவராயினும், புகழ் உடையர் ஏனும் - (பிறரால் பாராட்டப்பெறும்) கீர்த்தியையுடையவராயினும், உடையரோ - அடையத்தக்க பேறு அடைந்தவர்கள் ஆவரோ?' (ஆகார் என்றபடி).

இச் செய்யுளுக்கு ஒப்பு : செவ்வைச் சூடுவார் பாகவத புராணம் விருந்தாவன : 9. இச்செய்யுளால், மக்கட் செல்வமே மற்றைச் செல்வங்களிலும் மேலானது என்பது பெறப்படும். குறிப்பு : ஒரு சுபகாரியத்தின் முடிவில் தம்பதிகளுக்கு, அதாவது கருத்தாக்களான தலைவன் தலைவியருக்குப் பெரியோர் மந்திரமுறையில் ஆசீர்வாதங்கள் பல கூறுமிடத்து, முடிவில் அவை அனைத்தினுஞ் சிறப்புள்ளதான நற்புத்திரப்பேறு மேலும் அடையவேண்டுமெனக் கூறும் மரபும் இங்குக் கூர்ந்து நோக்கத், தக்கதாகும். இதனாலன்றே,

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற' (குறள் : 61)

என்று மக்கட் செல்வத்தின் ஏற்றங் கூறினார் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார். இனி, பூ நாறும் செய்ய வாய் என்பதற்குப் பூப் போல் அழகாய் விளங்கும் சிவந்த வாய் எனலும் ஒன்றும்; நாறுதல் - தோன்றுதல். இச்செய்யுள் 'படைப்புப் பல படைத்து' எனத் தொடங்கும் புறப்பாட்டு, (188)ஐத் தழுவி அமைந்தது என்னலாம், (66)

235. சொன்ன கலையின் நுறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தா மின்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி.

'இன் முகத்து - காண இனிமைதரும் முகத்தை யுடையவர்களும், முன்னம் குறுகு தலை - முன்னே குறுகிய தலைப்பக்கத்தையுமுடைய, கிண்கிணி கால் - சதங்கை அணிந்த பாதங்களையும் உடையவர்களுமான கோ மக்கள் - (தம்) சிறந்த குழந்தைகளின், பால் வாய் சிறு குதலை - பால் மணம் கமழும் வாயில் இருந்து பிறக்கும் சிறிய குதலை மொழிகளை, கேளா செவி - கேட்கப் பெறுத மானிடரின் காதுகள், சொன்ன கலையின் துறை அனைத்தும் தோய்ந்தாலும் - ஆன்றோர்களான ஆசிரியர்கள் சொல்லிக் கற்பித்த, அறிவு நூல்களின் வகைகள் யாவற்றையும் கேட்டு அறிந்துணர்ந்தாலும், என்ன பயன் உடைத்து ஆம் - யாது நல்ல பயனை அடைந்தது ஆகும்?' (சிறந்த பயன் ஆகாது என்றபடி).

சதங்கை, தலைப்புறங் குறுகி அடிப்புறம் அகன்று பருத்திருப்பதால், 'முன்னங் குறுகுதலைக் கிண்கிணி' என்னப் பெற்றது. கிண்கிணி ; கிண்கிண் என ஒலிக்கும் ஓசை காரணமாக வழங்கும்

பெயர்; டமாரம், துந்துபி, பம்பரம் என்பது போல. சொன்ன கலை-ஆன்றோர்களாற் சிறப்பித்துச் சொல்லப்பெற்ற கலைகள் என்று பொருள் கூறினுமாம். துறை - வழி அல்லது பகுதியும் ஆம். துறை என்றதற்கேற்ப, தோய்ந்தாலும் என்று கூறிய நயம் உணரப் பாலது; தோய்தல் அதிற் புகுந்து பயின்று ஆராய்ந் துணர்தல். குதலை - பொருள் விளங்காச்சொல்; 232; ஒப்பு: திருச்சிற். 104 உரை. பால்வாய்: 'பால்நல் வாயொரு பாலனிங்கிவ னென்று நீபரி வெய்திடேல்' (திருஞான. தேவாரம். திருவாலவாய்ப் பதிகம்).

பி - ம். 1. துறையறிந்த.

2. என்ன பயனுடைத்தா மென்பரால், என்ன பயனுடைய வெம் பாவம், என்ன பயனுடைத்த தென்பாவம்; பொன்னின்.

தமயந்தி நளனைத் தன் தந்தை நகருக்கு வருமாறு அழைத்தது

236. போற்றரிய செல்வம் புனலுட் டொடும்போகத்
தோற்றமையும் யாவர்க்குந் தோற்றுதே—ஆற்றலாய்
எம்பதிக்கே போந்தருளு கென்று ளெழிற்கமலச்
செம்பதிக்கே வீற்றிருந்த தேன்.

எழில் கமல செம் பதிக்கே வீற்றிருந்த தேன் - அழகிய செந் தாமரை மலரான கோயில் அல்லது இடத்திலே எழுந்தருளியுள்ள தேன் போன்ற திருமகள் என்னத் தக்க தமயந்தி, (நளனை நோக்கி), 'ஆற்றலாய் - வல்லமை வாய்ந்தோய்! போற்று அரிய - காப்பதற்கு அரிதான (அதாவது) அளவு மிகுந்த, செல்வம் - செல்வங் களை, புனல் நாடு ஓடும் - நீர் வளம் நிறைந்த நிடத நாட்டினூடும், தோற்றமையும் - நாம் இழந்ததும், யாவர்க்கும் தோற்றுது - அங்குள் ளார் ஒருவருக்கும் பெரிதாகத் தோன்றுது; (ஆதலின்) எம் பதிக்கே - எங்கள் தந்தையின் அந்தக் குண்டினபுரத்திற்கே, போந்து அருள்க என்றுள் - நீங்கள் வந்தருள்வீராக!' என்று கேட்டுக் கொண்டாள்.

தமயந்திக்குத் தேன் என்றது, தேன் போன்ற சொல் இனிமை யும் அருமையும் நோக்கி என்க. (173). தேன், இங்குச் சொல் லுக்கு உவமையாகுபெயராய், அதனை மொழியும் தமயந்திக்கு ஆகிய தாதலின் இஃது இருமடி ஆகுபெயராம். (68)

பி - ம். 1. புனலுடோ டெத்தனையும்; ஞெடொடும் கூடத்.

2. தோற்றதவு மன்னர்க்குத் தோற்றுமோ; தோற்றதவும் வேந்தற்குத் தோற்றுமோ—ஆற்றலாம்.

3. போந்தருள்க வென்று.

நளன் அதற்கு உடன்படா துரைத்தது

237. சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
எனக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள்.

(நளன் தமயந்தியை நோக்கி), 'சின கதிர் வேல் கண் மடவாய் - கோபிப்பது போன்று இரணங்களை வீசும் வேல் ஒத்த கண்களை யுடைய பெண்ணே! செல்வர் பால் சென்று - (ஏழ்மை நிலையில்) பொருள் பெற்றவர்களிடம் போய், ஈ எனக்கு என்னும் இ மாற்றம் - எனக்குப் பொருள் கொடுப்பாயாக! என்று சொல்லும் இச்சொல், தனக்கு உரிய - ஒருவனுக்குரியதான, தானம் துடைத்து - நிலையை அடியோடு ஒழித்து, தருமத்தை வேர் பறித்து - அறத்தை வேரோடு களைந்தெடுத்து, மானம் - தன் மதிப்பு ஆகிய பெருமைக் குணத் தையும், துடைப்பது ஓர் வாள் - அழித்து ஒழிப்பதான ஒப்பற்ற ஒரு வாளை போன்றது ஆகும்'. கண்டாய்: முன்னிலை அசை.

தானம் என்பதனை, ஈகை என மயங்கிப் பொருள் கூறினரும் உளர்; தானம், ஸ்தானம் என்பதன் திரிபு. இனி, தருமம் என் பதும் தன் கடமை என்பதை உணர்த்தும் ஓர் அரிய பொருளை யுடையது என்க. அதனையும் மயங்கி, பிறர்க்கு அளிப்பதைக் குறிப்பர் ஒரு சிலர். மானம் - (இங்குத்) தன் மதிப்பு அல்லது கௌரவம்; 'நன்றேகாண், மானமுடையார் மதிப்பு,' (நாலடி. 294) என்றதுபோல. சினக்கதிர் வேல்; கோபத்தில் கண்ணெளி சீறி எழும்போது அது கண்ணிற் றீப்பொறி தெறிப்பது போன்று தோன்றும். ஈ: ஈதல் - இழிந்தோனுக்கு இரங்கி உயர்ந்தோன் அளிப்பது; இஃது, 'ஈ தா, கொடு, எனு மூன்று முறையே, இழிந்தோ னெப்போ மிக்கோ னிரப்புரை' (நன். 407) என்ப தால் அறியக்கிடக்கும். இரத்தல் இழிவானது என்பது;

"ஆவுக்கு நீரென் றிரப்பினும் நாவிற்
கிரவி னிளிவந்த தில்" (குறள். 1066);
இரந்துமுயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக வுலகியற்றி யான். (குறள். 1062);

'ஈயென விரத்த லிழிந்தன்று' (புறநா. 204) என்பனவற்றாலும் பிற நீதி நூல்களாலும் விளங்குவன காணலாம். இதனாலன்றோ தமிழ் மூதாட்டியாரும், 'ஏற்பதிகழ்ச்சி' எனக் கட்டளையிட் டருளினர்

கண்டாய் - நீ இதனை அறிந்து கொள்வாயாக! எனப் பொருள் கொள்ளலும் தகும்.

பி - ம். 1. கண்மடவாய் செல்வர்பாற் சென்றங் கெனக்கென்னு மேமாப்புக் கண்டாய் — தனக்கரிய.
3. தருமத்தை வேரிந்த ; வேரறுத்த.
4. மானஞ் சிதைப்பதோர் யாள். (69)

238. மன்னராய் மன்னர் தமையடைந்து வாழ்வெய்தி
இன்னமுதந் தேக்கி யிருப்பரேல்—சொன்ன
பெரும்பே டிகளலரேற் பித்தரே யன்றே
அரும்பேடை மானே யவர்.

(மேலும் நளன் தமயந்தியைநோக்கி), 'அரும்பேடை மானே-சிறந்த பெண் மான் போன்ற பெண்ணே! மன்னர் ஆய் - தாமும் அரசர்களுள் ஒருவராய் இருந்தும், மன்னர் தமை அடைந்து - தம்மை ஒத்த மற்றொரு மன்னரைப் போய்த் தஞ்சம் போல அடைந்து, இன் அமுதம் தேக்கி - அவர் அளிக்கும் இனிய சுவையுள்ள உணவை உண்டு தம் வயிற்றை நிரப்பிக் கொண்டு, வாழ்வு எய்தி இருப்பர் எல் - தம் உயிர் வாழ்க்கையைப் பெற்று இருப்பாரானால், அவர் - அத்தன்மையில் உள்ள அவர், சொன்ன - ஆன்றோர் அறிந்து கூறிய, பெரும் பேடிகள் - ஆண் தன்மையற்ற பெரிய பேடிகளே ஆவர், அலர் எல் - அவ்வாறல்லரேல், பித்தரே அன்றே - அவர்கள் பித்தர்களே ஆவர் அல்லவோ?

பேடை : இச்சொல் பெரும்பாலும் பறவையின் பெண்ணுக்கு வழங்கும் மரபுப் பெயர். இது, சில விலங்குகளுக்கும் வருவதும் உண்டு ; '' எருமையாகிய பேட்டின் கொம்போடே: (கலித். 114 உரை). அமுதம் - உணவு அல்லது சோறு ; (பிங்) ; அமிர்தம் என்னும் வடசொல்லின் திரிபு ; உணவு உயிரைக் காப்பதற்கு உதவுதலால், சிறப்பின்பாலாய் என்றும் இறவாத் தன்மையை அளிக்கவல்ல தேவர் அமிர்தத்திற்கு ஒப்பாகக் கூறப்பெறுவதாகும். தான் தேடிய, அல்லது தனக்கு உரிய உணவை உண்ணுதல் என்னும் சிறப்பின்றி அருந்துதலால், மானமின்றி வயிற்றை நிரப்பிக் கொள்ளுதல் ஆம் என்னும் இழிவுகூறல் தோன்ற, ' இன்னமுதந் தேக்கி ' என்ற சொற்களாற் குறிப்பிடப்பெற்றது. பேடி : ஆணுக்குரிய அங்க அமைப்புக்கள் குன்றிப் பெண்ணுறுப்பு மிகுந்து தோன்றும் ஓர் அவலப் பிறவி.

மிக்க வெஞ் சமத்திடை வெருவி யோடினர்,
ஒக்கதுன் புறத்தனி யுலகில் வாழுநர்,
புக்குவேட் டகத்தினி லுண்ணும் புன்மையோர்
மக்களுட் பதடியென் றுரைக்கும் வையமே ; என,

(நைடதம்) நகர்நீங்கு : 17 இல் நளன் கூற்றுக அமைந்துள்ளதும் இங்கு நோக்கற் பாலதாம்.

பி - ம். 1. மன்னரை மன்ன ரடைந்தவர்கள் வையத்துள்,
மன்னராய் மன்னர் தமையடைய வாழ்வுகொண்.

2. டின்னடிசி லுண்டாங் கிருப்பார்கள்,
இன்னமுதங் கொண்டாங் கிருப்பரேல்.

3. பெரும்பே டியரலரேற் பித்தரே கண்டாய்,
பெரும்பேடி யல்லாவாற். (70)

தமயந்தி மக்களேயேனும் தன் தந்தையிடம் அனுப்பவேண்டிக்கொண்டது

239. செங்கோலா யுன்றன் றிருவுள்ள மீதாயின்
எங்கோன் விதர்ப்ப னெழினகர்க்கே—நங்கோலக்
காதலரைப் போக்கி யருளென்ருள் காதலருக்
கேதலரைப் போல வெடுத்து.

(அவ்வாறு நளன் கூறத் தமயந்தி), காதலர்க்கு - தன் அன்பிற் குரிய மக்களுக்கு, ஏது அலரைப் போல - ஆதரவு அற்றோர், அதாவது அனுதையரைப் போல, எடுத்து - அவர்கள் நிலையைத் தான் முன்னிட்டு எடுத்துக்கொண்டு, 'செங்கோலாய் - செங்கோல் மன்னனே ! உன் தன் திரு உள்ளம் ஈது ஆயின் - உமது திருவுளப் பாங்கு இதுவே ஆனால், எம் கோன் விதர்ப்பன் எழில் நகர்க்கே - எங்கள் தந்தையான விதர்ப்ப மன்னன் செல்வச்சிறப்புடைய நகராகிய குண்டின புரிக்கே, நம் கோல காதலரை - நமது அழகிய அன்புக்குரிய குழந்தைகளை. போக்கி அருள் என்ருள் - போகச் செய்தருள்வீராக !' என்று நளனைக் கேட்டுக்கொண்டாள்.

ஏதலர் : ஏது அலர் எனப்பிரிக்க ; துணையற்ற அனாதையர் ; ஏதிலர் - அயலார் அல்லது பகைவர் என்ற பொருள் கொண்டார் சிலர் ; ஏதலன் - அயலான் ; பெரியதிருமொழி. 17 : 4 ; 5.8 : 1. ஏது - துணைக்காரணம் ; (திவா) ; என்றமைபோல. திருவுள்ளம் : திரு என்பது அரசர் முதலிய பெரியோர்க்கும் தெய்வத்திற்கும் வழங்கும் சிறப்புச் சொல் ; 'மன்னன் திருமுன்னர் வைத்தலுமே' என்று முன் (28)-இல் கூறியுள்ளதையும் நோக்குக.

பி - ம். 4. எதிலரைப்போல. (71)

நளன் தன்மக்களை அனுப்ப உடன்பட்டது.

240. பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன்—தாதைக்குக்
காட்டுநீ யென்றான் கலங்காத வுள்ளத்தை
வாட்டுநீர் கண்ணிலே வைத்து.

(அது கேட்ட நளன்), கலங்காத உள்ளத்தை - எதற்கும் கலங்காது திடங்கொண்ட தன் மனத்தை, வாட்டும் - வருத்தி வாடச் செய்யும், நீர் - நீர்ப் பெருக்கை, கண்ணிலே வைத்து - தன் கண்களிலே வெளிக்காட்டாமல் அடக்கி வைத்துக்கொண்டு, 'பேதை - தமயந்தியானவள், பிரிய - பிரிய நினைத்தும், பிரியாத - அவளை விட்டுப் பிரியாத தான, பேர் அன்பின் - பெரிய அன்பினுக்குரிய, காதலரை - எம் மக்களை, கொண்டு போய் - அழைத்துக் கொண்டு போய், காதலி தன் தாதைக்கு - என் காதலியாகிய இத்தமயந்தியின் தந்தைக்கு, நீ காட்டு என்றான் - நீ காட்டுவாயாக'; என்று தன்னருகிருந்த ஓர் அந்தணனுக்குக் கூறினன்.

பிரியப் பிரியாத பேரன்பு: தமயந்தி தன் மக்களைப் பிரியக் கருதினாலும், அவள் அன்பு அவர்களைவிட்டு நீங்காது என்பதை நளன இங்கு உணர்ந்து கூறியது. கலங்காத.....நீர் கண்ணிலே வைத்து: இது தன் செல்வப் பெருக்கைப் பிரிந்தும் அதனால் சிறிதுங் கலங்காத வலிய உள்ளமுடைய நளன், தன் மக்களைப் பிரிவதில் அடைந்த துயரநிலையைப் புலப்படுத்துகின்றது. இது, 'கடந்து நேர்களும் கடப்பரோ மக்கள் மேல் காதல்' (நைடதம் தேவியைக் கண்ணுற்ற: 15) என்ற பாடலை நினைப்பூட்டுகின்றது. தமயந்தியும் நளனும் தன் மக்களிடத்துப் பிரியாத பேரன்புடையவர் என்பது பின், 242, 243, 244-ஆம் பாடல்களால் விளங்குவன காணலாம். நளன் தன்மக்களை விதர்ப்பன் நகருக்கு அழைத்துச் செல்லுமாறு ஓர் அந்தணனை ஏவினன் என்பது பின்வரும் (243)ஆம் பாடலால் அறியலாம், ஆனால், முதனூலாகிய நளோபாக்யானத்தும், தமிழ் நைடதத்திலும் நளன் தன் மக்களைத் தன் தேர்ப்பாகன் மூலம் அனுப்பினன் எனக் காணப்பெறுகின்றது. இது, 242-ஆம் பாட்டுக்கு அடியிற் குறிப்பிட்டுள்ள மிகைப்பாடலாலும் விளங்குவது காண்க. அத்தேர்ப்பாகன் பெயர் வார்ஷ்ணேயன் எனவும், அவன் நளன் மக்களைக் குண்டினபுரத்தில் பீமராஜனிடம் விடுத்துப்

பின், அயோத்தி மன்னன் ருதுபன்னனை அடைந்து அவனிடம் வேலையில் அமர்ந்தான் எனவும் அந்நூல்கள் கூறும்.

பி - ம். 1. பேதை பிரியப் பிரியாதே யான்புக்க.
2. கொண்டுபோய்க் காரிகை தன்.
3. கலங்காத வெள்ளத்தை. (72)

மக்களின் பிரிவாற்றாத் துயரநிலை.

241. தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை யெதிர்நோக்கி—எந்தம்மை
வேருகப் போக்குதிரோ வென்ருர் விழிவழியே
ஆருகக் கண்ணீ ரழுது.

(அதுகண்ட அம்மக்கள் இருவரும்), தந்தை திருமுகத்தை நோக்கி - தம் தந்தையாகிய நளன் திருமுகத்தைப் பார்த்து, தமை பயந்தாள் - தம்மைப் பெற்றெடுத்தவளான தமயந்தியின், இந்து முகத்தை - முழு மதிபோன்ற பொலிவுடைய முகத்தையும், எதிர் நோக்கி - நேரிட்டுப் பார்த்து, விழி வழியே கண்ணீர் ஆறு ஆக - தம் கண்களின் வழியாகக் கண்ணீர் ஆறுபோலப் பெருக, அழுது - அழுது கொண்டு, 'எம் தம்மை - எங்களை, வேறு ஆக போக்குதிரோ என்ருர் - நீவிர் வேருக விட்டுப் பிரிந்து போகிறீர்களோ?' என்று கேட்டனர்.

துக்கத்தில் அழுகை வருவதும் கண்ணீர் பெருகுவதும இயல்பு. இங்கு ஆருக என்றது, அக்கண்ணீர்ப் பெருக்கின் மிகுதி குறிப்பதாம். பயந்தாள் - பெற்றவள்; நற்ருய் என்பதாம். 'எழு தரிய திருமேனிக் கருங்கடலைச் செங்கனிவாய்க் கோசலை யென்பாள் பயந்தாள்'; (கம்ப. பால. குலமுறை : 20); 'தூணம் பயந்த மாணமர் குழவி'; (கல்லாடம் 5 : 16). தமயந்தியின் முகத்திற்கு இந்து; 293.

பி - ம். 1. தந்தை மலர்முகத்தை. 2. இந்து முகத்தி னெழிலோக்கி.
3. வேருக்கிப் போதிரோ. 4. ஆருக்கிக். (73)

242. அஞ்சனந்தோய் கண்ணீ ரருவிநீ ராங்கவர்க்கு
மஞ்சனநீ ராக வழிந்தோட—நெஞ்சுருகி
வல்லிவிடா மெல்லிடையாண் மக்களைத்தன் மார்போடும்
புல்லிவிடா நின்ருள் புலர்ந்து.

வல்லி விடா மெல் இடையாள் - பூங்கொடி உவமையில் விட்டு நீங்காத, அதாவது பூங்கொடி போன்ற மென்மையான இடையுடைய தமயந்தி, அஞ்சனம் தோய் கண்ணில் - மை எழுதப் பெற்ற தன் கண்களிலிருந்து, அருவி நீர் - அருவிபோற் பெருகிய கண்ணீர், ஆங்கு - அப்போது, அவர்க்கு - அம்மக்களுக்கு, மஞ்சன நீராக - குளிப்பாட்டு நீர்போ லாகி, வழிந்து ஓட - அவர்கள் உடல்களில் விழுந்து வடிந்து ஓடும்படி, மக்களோ அக்குழந்தைக்களோ, தன் மார்பு ஓடும் - தன் மார்பினூடும், புலர்ந்து - வாடி, புல்லிவிடா நின்றுள் - தழுவிக்கொண்டு நிற்பாளாயினள்.

மஞ்சனம் - நீராட்டம் அல்லது அபிடேகம். வல்லிவிடா: இங்கு விடா என்பது பெயரெச்சம். புல்லிவிடா: இங்கு விடா என்பது வினையெச்சம். கண்ணினீரினுற் கழுவுதல்; (கம்ப. அயோத். குகப்: 39; ஆரணிய, 1114.

ஒரு பிரதியில் இதன்பின் அடியிற்காணும் ஒரு பாடல் அதிக மாக உள்ளது.

மலர்க்குழலி தோழியால் மந்திரிக டம்மால்
விலக்கத் தவிராத வேந்தன் — நலக்கணுறக்
கண்டுபோய்ச் சூதன்வசங் காட்டித்தன் காதலரைக்
கொண்டுபோ கென்றுன் குறித்து.

பி - ம். 3. வல்லிவிடா மெல்லியறன்; நண்ணிடையாள். (74)

மக்களோ ஒரு மறையோன் அழைத்துச் சென்றது.

243. இருவ ருயிரு மிருகையான் வாங்கி
ஒருவன்கொண் டேகுவா னெத்து—வுமறையோன்
கோமைந்த னேடிளைய கோதையைக்கொண் டேகினன்
வீம னகர்க்கே விரைந்து.

வரு மறையோன் - அவர்களுடன் போந்த ஓர் அந்தணன், இரு வர் உயிரும் இருகையரல் வாங்கி - அந்த நள தமயந்தியர் இருவர் உயிர் களையும் தன் இருகைகளாலும் பற்றி எடுத்துக் கொண்டு, ஏகுவான் ஒருவன் ஒத்து - செல்லும் ஒருவனைப் போன்று, கோ மைந்தன் ஓடு இளைய கோதையை - அவ்வரச குமாரனோடு அவனுக்கு இளைய சகோதரியான பெண்ணை, வீமன் நகர்க்கு - வீமராஜன் தலைநகரான

குண்டினபுரிக்கு, விரைந்து கொண்டு ஏகினன் - விரைவாக அழைத்துக்கொண்டு சென்றான்.

மக்களைத் தாய் தந்தையர் தம் உயிர் போலக் கருதுதல்; ஒப்பு. 'மன்ன னின்னுயிர் வழிக் கொண் டாலென' (கம்ப. பால. கையடைப்: 20); 'தேவரும் தொழுகழற் சிறுவன் முன் பிரிவதோர் ஆவிவந் தென்னவந் தரசன்மா டணுகினன்' (கம்ப. பால. எதிர்கோட்: 22). ஒருவன் கொண்டேகுவா னைத்து; இங்கு ஒருவன் என்பது உயிரைக் கவர்ந்து செல்லும் காலனைக் குறிப்பது போன்று தொனிக்க நிற்பது காண்க. அருமறையோன், என்று பாடங் கொண்டாரும் உளர். அது வெண்பாவுக்குரிய சீர்குறைந்து தளை தட்டுதலால் அது பாடம் அன்று. நளதமயந்தியரின குமாரனுக்கு இந்திரசேனன் என்பதும், குமாரிக்கு இந்திர சேனை என்பதும் பெயர்கள் என்பன முதனூலால் அறியப்பெறுவன.

பி - ம். 2. —பிரிகின்ற. 4. வீமன் நிருபர்க்கு மீண்டு, வீமன் நிருபர்க்கே மீட்டு. (75)

244. காத லவர்மேலே கண்ணைடை விண்ணைடும்
ஊதை யெனநின் றுயிர்ப்போட—யாதும்
உரையாடா துள்ள மொடுங்கினன் வண்டு
விரையாடுந் தாரான் மெலிந்து.

வண்டு விரையாடும் தாரான் - வண்டுகள் தேனிற் குளித்து நீராடும் மாலையுடைய நளன், காதல் அவர் மேலே - தன் அன்பிற் குரிய அம்மக்கண் மீது, கண் ஓட - தன் கட்பார்வை செல்லவும், உயிர்ப்பு - பெரு மூச்சு, விண் ஓடும் ஊதை என ஓட - வானில் ஓடும் பெருங்காற்று என்னும்படி ஓடவும், நின்று - அவ்விடத் திலேயே ஏங்கி நின்று, யாதும் உரை ஆடாது - ஒன்றும் பேசாமல், உள்ளம் மெலிந்து ஒடுங்கினன் - மனம் ஒடுங்கிச் சோர்ந்து போனன்.

இது மக்களைப் பிரிந்ததால் நளன் கொண்ட துயர நிலையைத் தனியே கூறியது. நின்று என்பதை ஊதை யென என்றதோடு இயைத்து ஊதைக் காற்று என்று சொல்லும் நிலையில் இருந்து என்றும், உரையாடாது நின்று உள்ளம் ஒடுங்கினன் என்று இயைத்தும் பொருள் கொள்ளலாம். ஒடுங்குதல் - சுருங்குதல்,

ஊதை - வாடைக்காற்று; (117). உரை ஆடாது - பேசாமல்; 'சொல்லாடா நின்ருள்' (சிலப். 18 : 9) என்பது போல.

பி - ம். 1. காதலார் தம்பின் கண்ணே டவின்ணேடே,
காத லவரோடே கண்ணேடே வின்ணூடே.
3. உரையாடா துள்ளங் கலங்கினுன்; துள்ள மடங்கினுன். (76)

நளதமயந்தியர் ஒரு பாலைநிலத்தைக் கண்ணுற்றது

245. சேலுற்ற வாவித் திருநாடு பின்னெழியக்
காலிற்போய்த் தேவியொடுங் கண்ணுற்ருன்—ஞாலஞ்சேர்
கள்ளிவே கத்தரவுங் கண்மணிக டாம்பொடியாய்த்
துள்ளிவே கின்ற சுரம்.

(நளன்) சேல் உற்ற வாவி திருநாடு பின் ஒழிய - சேல் என்னும் கெண்டை மீன்கள் உள்ள தடாகங்கள் நிறைந்த அழகிய அல்லது செல்வம் மிகுந்த தன் நிடதநாடு தன் பின்னே நிற்பதாக, தேவி ஒடும் - தன் மனையாளாகிய தமயந்தியோடும், காலில் போய் - கால் நடையாக நடந்து, கள்ளி வேகத்து - கள்ளி மரங்களின் வெப்பத்தின் கடுமையால், அரவும் - அங்கு வாழும் பாம்புகளும், கண் மணிகள் தாம் பொடியாய் - அவற்றின் கண்களில் உள்ள மணிகள் போன்ற விழிகள் தாம் பொடியாகத் தெறித்து விழ, துள்ளி வேகின்ற - துடித்து உடல் வெந்து போகின்ற, ஞாலம் சேர் - நாட்டையடுத்த, சுரம் - ஒரு பாலைநிலத்தை, கண் உற்ருன் - கண்டான்.

திருநாடு பின்னெழிய : ஒப்பு; 'சடைச் செந்நெல் பொன் விளைக்கும் தன்னாடு பின்னுக' (67); 'பொன்வாயிற் பின்னுகப் போயினன்' (227). கள்ளி : பாலை நிலத்திற்குரிய வெப்பம் மிகுந்த ஒருமரம்; கம்ப. பால. தாடகைவதைப் : 8. கலிங்கத்துப்பரணி : காடுபாடியது : 3. பாலை நிலத்தில் கொடிய வெப்பமுடைய கள்ளி மரங்கள் அடர்ந்திருக்கும்; அந்நில வெம்மையாலும், அம்மரங்களின் வெப்பத்தாலும் அங்கு வாழும் பாம்புகள் தம் கண்மணிகள் பொடித்து உக, அவை துள்ளித் துடித்து வெந்து அழியும் நிலையை யடையும் என்பன இதனுல் அறியப் பெறுவதாம்.

பி - ம். 1. சேலுலவும் வாவித் திருநாடுந் தான்கடந்து.
3. கள்ளிவே கத்தரவின் கண்மணிகள், கள்ளிவே கத்தரவின். (77)

கலி ஒரு பொற்புள்ளாய் அங்குத் தோன்றியது

246. கன்னிறத்த சிந்தைக் கலியுமவன் முன்பாகப்
பொன்னிறத்த புள்வடிவாய்ப் போந்திருந்தான்—நன்னெறிக்கே
அஞ்சிப்பா ரீந்த வரசனையுந் தேவியையும்
வஞ்சிப்பான் வேண்டி வனத்து.

நல் நெறிக்கே அஞ்சி - நல்ல நீதி நெறிக்கே பயந்து, பார் ஈந்த - தன் நாட்டைப் புட்கரனுக்கு அளித்த, அரசனையும் தேவியையும் - நளனையும் அவன் தேவியாகிய தமயந்தியையும், வனத்து - அக்கானிடத்து, வஞ்சிப்பான் வேண்டி - வஞ்சனையால் மேலுங் கேடிழைக்க விரும்பி, கல் நிறத்த சிந்தை - கல்போன்ற வலிய தன்மையான இதயமுடைய கலிபுருடனும், அவன் முன்பு ஆக - அந்த நளன் எதிராக, பொன் நிறத்த புள் வடிவு ஆய் - பொன்னிறங் கொண்ட ஒரு பறவை வடிவாக, போந்து இருந்தான் - அங்கு வந்திருந்தான்.

நன்னெறிக்கே.....ரீந்த : சூது ஆடுவதாக இயைந்து தோற்ற பின், தான் இழந்த நாட்டைக் கொடாதிருந்தால் அது சொன்ன சொல்தவறிய ஒழுக்கக் குறைவை உண்டாக்கும் ஆதலால், அவ் வாறு மாறி நடக்க அஞ்சிச் சூதில் இழந்த நாட்டையும் மற்ற உரிமைகளையும் புட்கரனுக்கு அளித்தான் என்பதாம். கன்னிறத்த சிந்தை - கல்போல ஈரப்பசை இல்லாத அதாவது இரக்கமற்ற இதயம். நிறம் என்பது மார்பு ; அம்மார்பினுள் உள்ள இதயத் திற்கு இடவாகு பெயராயிற்று. பொன்னிறத்த புள் - பொன் னிறமான ஒருவகைப் பறவை. நைடதத்திலும் இந்நூலிலும் சிலர், இப்புள் அன்னப் புள் என்று தம் உரையாற் கூறியுள்ளார். அவ்வாறு கொள்ள, இந்நூல், நளோபாக்யானம், நைடதம் ஆகிய மூன்றிலும் ஆதாரம் ஒன்றும் இல்லாமையால், அது பொன்னிற மான ஏதோ ஒரு பறவை எனவே கொள்ளப்பெற்றது. போந்து என்பதற்கு வந்தடைந்து என்றும் கொள்ளலாம் ; போதல் - வந்தடைதல், சேறல் ; (பிங்.) ; போதர் - வா என்ற முன்னிலையில் வருதலுங் காண்க. இப்பாடலின், பிரதி பேதமாகக் 'கருங்கலி யின் முன்னேனும்.....போந்திருந்தான்' என்ற பாடம் இருப்ப தால், அது மூதனுலாகிய நளோபாக்யானத்தில் உள்ளபடி, முன்னேனும் என்பதற்குத் துவாபரனும் எனக்கொள்ள இட மாதல் இங்கும் நோக்கத்தக்கது ; மேலும், 212இல் 'தமயனுடன் கூடி' என்றதில் தமயன் என்பது அத்துவாபரனே என்பதாம் ;

இதனுல் முன் (159) உரையிற் குறிப்பிட்டபடி அச்செய்யுள், கலியி னுடன் வந்த துவாபரன் என்பவனையே குறித்துக் கூறியது என்பது இதனுல் வலியுறுவதும் காண்க.

பி - ம். 1. சிந்தைக் கடுங்கலியின் முன்னேனும்.
2. புள்ளாகிப் போந்திருந்தான்—நன்னெறிக்.
3. கஞ்சிப்பார் காத்த. (78)

அப்பொற்புள்ளைத் தமயந்தி விரும்பியது

247. தேன்பிடிக்குந் தண்டுழாய்ச் செங்கட் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல்—தான்பிடிக்கப்
பொற்புள்ளைப் பற்றித்தா வென்ருள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயா டொழுது.

தேன் பிடிக்கும் - வண்டுகள் பற்றிக் கொண்டிருக்கும், தண் துழாய் - குளிர்ந்த துளசிமாலை அணிந்த, செம் கண் கரு முகிலை - சிவந்த கண்களையுடைய கரிய மேகம் போன்ற இராமபிரானை, மான் பிடிக்க சொன்ன - (மாய மாரீசனை) பொன் மானைப் பிடித்துத் தரச்சொன்ன, மயிலே போல் - மயில் போன்ற அழகிய சாயலையுடைய சீதாப்பிராட்டியைப் போல, புது மழலை சொல் கிள்ளை வாயாள் - புதிய மழலைச் சொல் பேசும் கிளிப்பிள்ளை போன்ற வாய்ச் சொற்களையுடைய தமயந்தி, தொழுது - (தன் கணவனுனை நளனை) வணங்கி, தான் பிடிக்க - தான் கையாற் பிடித்து விளையாட, 'பொன் புள்ளை - பொன்னிறமான இப்பற வையை, பற்றி தா என்ருள் - பிடித்து எனக்குத் தருவீராக!' என்று கேட்டுக் கொண்டாள்.

தேன்.....துழாய் : நறுமணத்தை நாடி வண்டுகள் மொய்த் துக் கொண்டிருக்கும் துளசி என்பதாம். செங்கட் கருமுகில் - இது இல் பொருள் உவமையில் முரண்தொடையில் வந்த உருவக அணி. மயில் - உவவையாகு பெயராய்ச் சீதாப்பிராட்டியைக் குறிப் பது. தேன் - வண்டு; 'தேன்பாடுந் தார்நளன்' (2). சொற் கிள்ளை வாயாள் : கிள்ளைச் சொல் வாயாள் என மாற்றியும் உரை கொள்ளலாம். இராமபிரான் திருமாலின் அவதாரம் ஆதலின், அத்திருமாலின் துழாய் மாலை இராமபிரானுக்கும் கொள்ளப் பெறுவதாகும். இனி இராமபிரான், 'சென்றவழி யின்றளவுந் துளவநாறும்' (வி. பா. அருச்சுனன்றீர்த்த : 45) எனச் சிறப்பிக்கப் பெற்றமை இங்கு நோக்கத்தக்கது. இந்நூலைப் போல, தமயந்தி

அந்தப் பொற்புள்ளைப் பற்றி விளையாட விரும்பியதாகவே தமிழ் நடைதழுவு கூறும். ஆனால், நளோபாக்யானத்தில் நளன் அப் புள்ளைப்பற்றி உண வாக்கிப் பரிதீர்த்துக் கொள்ளவே விரும்பிப் பிடிக்கச் சென்றதாகக் கூறுவது காணலாம்.

குறிப்பு :—இராம சரிதம் இந்நள சரிதத்திற்குக் காலத்தாற் பெரிதும் பிற்பட்டதே எனினும், அது நம் நாட்டிற் பிரசித்தமாக வழங்கப்பெறும் சிறப்பு நோக்கி, பிராட்டி, மான் பிடிக்கச் சொன்ன நிகழ்ச்சியை இங்கு நம்மனோர்க்கு ஓர் எடுத்துக்காட்டாக அழகுற அமைத்து ஆசிரியர் அறிவுறுத்தினர் என்க.

பி - ம். 1. செங்கட் டிருமாலே. 2. மயில்போலத்—தான்பிடித்தப். 3. சொற்கிள்ளை யன்ன டொழுத. (79)

நளன் அப்பறவையைப் பிடிக்க முயலுதல்

248. பொற்புள் ளதனைப் பிடிப்பா னளன்புகுதக்
கைக்குள்வரு மாபோற் கழன்றோடி—எய்க்கும்
இளைக்குமா போல விருந்ததுகண் டன்றே
வளைக்குமா றெண்ணினன் மன்.

பொன் புள் அதனை - பொன்னிறமான அப்பறவையை, பிடிப்பான் - பிடிக்கும் பொருட்டு, நளன் - நளச்சக்கரவர்த்தி, புகுத - அதன் அருகிற் செல்ல, (அது) கைக்கு உள் - அவன் கைகளுக்குள்ளே, வருமா போல் - வந்து அகப்படுவது போலே இருந்து, கழன்று ஓடி - அங்கிருந்து விலகி ஓடி, எய்க்கும் இளைக் கும் ஆ போல - மெய்வருந்தி இளைப்புற்றது போல, இருந்தது கண்டு - அது பின் ஓரிடத்தில் இருந்ததைப் பார்த்து, மன் - அவ்வரசன், வளைக்கும் ஆறு எண்ணினன் - அதனை வளைத்துப் பிடிக்கும் உபாயத்தைக் கருதினன். அன்று, ஏ : அசைகள்.

புள்ளதனை : அதனை - பகுதிப் பொருள் விகுதி, எய்த்தல் - மெய் வருந்துதல் ; 'எய்யாமை யெல்லா வறமுந் தரும்' (குறள். 296) ; 'எய்ப்பினுள் வைப்பென் பது' (பழமொழி. நானூறு. 358). அது, கலியாகிய வஞ்சகப்பறவையாதலின், மெய்வருந்தியது போலும், களைப்புற்றது போலும் பாசாங்கு செய்தது. இப்புள் ளின் செயல்கள், மாய மானுக வந்த மாரீசன் செயல்களை ஒருவாறு ஒத்துள்ளமை காண்க. (கம்ப. ஆரணிய. 795).

குறிப்பு : இச்செய்யுள் சில ஏட்டுப் பிரதிகளில் இல்லை. (80)

249. கொற்றக் கயற்கட் கொடியே யிருவேமும்
ஒற்றைத் துகிலா லுடைபுனைந்து—மற்றிந்தப்
பொற்றுகிலாற் புள்வீழக்கப் போதுவோ மென்றுரைத்தான்
பற்றகலா வுள்ளம் பரிந்து.

(அப்போது நளன்), பற்று அகலா உள்ளம் பரிந்து - தமயந்தி யிடம் ஆசை நீங்காத மனம் முற்பட்டு, 'கொற்றம் - வலிய அல்லது வெற்றி தங்கிய, கயல் கண் - கயல் மீன் போன்ற கண்களையுடைய, கொடியே - கொடி போன்றவளே! இரு வேமும் - நாம் இருவரும், ஒற்றைத் துகிலால் - நீ உடுத்திருக்கும் உன்னுடைய ஒற்றை ஆடையால், உடை புனைந்து - உடையாக உடுத்துக் கொண்டு, மற்று இந்த பொன் துகிலால்-யான் உடுத்திருக்கும் வேறான இந்த என் பொன்னுடையால், புள் வீழக்க - இந்தப் பறவையை வீழத் துப் பிடிக்க, போதுவோம் - நாம் போவோம்' என்று கூறினன்.

பற்றகலா வுள்ளம் பரிந்து: அது எய்ப்பதும் இழைப்பதுமா யிருந்தது கண்டு அப்புள்ளைப் பிடிப்பதில் ஆசை நீங்காமல், அதனை நாடி எனவும் பொருள் கொள்ளலாம். ஒற்றைத் துகி லால் - தமயந்தி யுடுத்திருந்த ஒற்றை ஆடையால் எனக் கொள்ளப் பெற்றது. தமயந்தி ஆடை, நளன் ஆடையினும் நீளமாக இருக் கும் ஆதலால் அதனை இருவரும் இருதலைப்பிலுமாக உடை புனைந்து கொள்ளக்கருதினர். நளன் நாடிழந்து வந்த காலை, ஒற்றைத் துகிலோடே தான் வந்தான் என்பதும், மற்றை மேலாடை முதலியன சூதாட்டத்தால் அபகரிக்கப்பெற்றன என்பதும் புலனாகும். பாண்டவர் சூதாடி நாடு முதலியன தோற்ற காலை, அன்னோர் மேலாடையும் கவரப் பெற்றனர் என்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாம்; (வி. பா. சூதுபோர்: 246). போது வோம்: எதிர்கால உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று.

பி - ம். 1. யிருவோரும்.
3. புள்வீழக்க மெனன் றுரைத்தான் புனைந்தொளிரும்,
புள்வீழக்க வாவென்று ரைத்தான் புரிந்தேறும்.
4. வெள்வீழக்கை நல்லாளே வேந்து. (81)

நளன் தன் ஆடையால் புள் வீழ்த்தது

250. எற்றித் திரைபொரநொந் தேறி யிளமணலில்
பற்றிப் பவழம் படநிழற்கீழ்—முத்தீன்று
வெள்வீழத்தா யோடுநீர் வேலைத் திருநாடன்
புள்வீழத்தா னுடையாற் போந்து.

வெள் வளை தாய் - வெண்ணிறமான தாய்ச் சங்கு, திரை எற்றி பொர - அலைகள் வீசி மோத, நொந்து - அதனால் துய ருற்று, இள மணலில் ஏறி - நுண்ணிய மணல் மிக்க கரைமீது ஊர்ந்தேறி, பவழம் பற்றி - அங்கிருந்த ஒரு பவழக் கொடியைப் பற்றிக்கொண்டு, படர் நிழல் கீழ் - அப்பவழக் கொடியின் படர்ந் துள்ள நிழலின் கீழே, முத்து ஈன்று - முத்துக்களைத் தன் வயிற்றி னின்று ஈன்றுவிட்டு, ஓடும் - திரும்பி ஓடும் சிறப்பமைந்த, நீர் வேலை - நீரையுடைய கடல் சூழ்ந்த, திருநாடன் - செல்வம்மிக்க நிடதநாடுடைய நளன்; போந்து - அருகே சென்று, ஆடையால் - தன் ஆடையினால், புள் வளைத்தான் - அப்பறவையை வளைத்துப் பிடிக்கலானான்.

கருவுற்ற தாய்ச் சங்கு கடலின் அலைகள் மோதுவதால், அதனைத் தாங்காது துயரமுற்று, அக்கடலினின்றும் கரையேறி அங்கிருந்த பவழக் கொடியின் படர்ந்த நிழலின் கீழ் தங்கி, அங்கு முத்துக்களை ஈன்றுவிட்டுத் திரும்பிக் கடலில் போய்ச் சேரும் செல்வச் சிறப்புடைய நிடதநாடு என்பதாம். முத்துக்கள் சங்கு வயிற்றில் உற்பத்தியாகு மெனினும், அவை அச்சங்கு இறந்த பிறகே அதன் வயிற்றினின்றும் வெளிவருவது இயல்பு. ஆதலின் சங்குகள் முத்துக்களைத் தாமே கருவுயிர்க்கும் என்பது கற்பனை யால் எழுந்த கவிமதம் என்க. பவழமும் கடலில் தாவரவர்க்கம் போல வளரும் ஒருவகைப் பூச்சிக்கூடே. அதனைக் கடலில் மூழ்கி எடுத்து அதன் மேல் தோல், நிணம் முதலியவை அழுகிய பின், அதன் எலும்புகளைக் கழுவி எடுத்துக் கொள்வர். அவ்வாறு சுத்தஞ்செய்த எலும்புகளே பவழம் எனப்படும் என்பது உயிர்நூற் புலவர் கண்டறிந்து கூறிய உண்மையாகும். அப்பவழப் பூச்சிகள் தாவரம் போலப் பல கொடிகள் விட்டு அழகாகப் படர்வன ஆதலின், அவற்றைக் கொடிவகையில் நம்மனோர் கொண்டார் போலும். பவழக் கொடி நிழல்விட்டுக் கரை மணலில் படர்ந் திருந்ததென்பதும், அங்குச் சென்று சங்குமுத் தீன்றது என் பதும் அதிசயோக்தி என்னும் உயர்வு நவிற்சி அணியின் பாற் படும். இச்செய்யுள் நிடதநாட்டின் நெய்தற் நிணையின் வளங் கூறியதும் ஆகும்.

பி - ம். 1. ஒற்றித் திரைபொரநொந் தோடி யிடந்தேடிப்.
4. புள்வளைத்தா னுடையாற் போய்.

(82)

அப்புள் வாலில் அவ்வாடையுடன் எழுந்து கூறியது

251. கூந்த லிளங்குயிலுங் கோமானுங் கொண்டணைத்த
பூந்துகில்கொண் டந்தரத்தே போய்நின்று—வேந்தனே
நன்னாடு தோற்பித்தோ னனேகா ணென்றதே
பொன்னாடு மாநிறத்த புள்.

பொன் நாடும் மா நிறத்த புள் - பொன்னும் அதன் நிறத்தை விரும்பி நாடும் சிறந்த நிறமமைந்த அப்பறவை, கூந்தல் இளம் குயிலும் - கூந்தலையுடைய இளமைப் பருவத்துக் குயில் போன்ற (குரலுடைய) தமயந்தியும், கோமானும் - அரசனாகிய நளனும், கொண்டு அணைத்த - (வலிபோலப்) பிடித்துக் கொண்டு வளைத்த, பூம் துகில் கொண்டு - அழகிய அவ்வாடையைப் பற்றிக் கொண்டு, அந்தரத்தே போய் நின்று - (பறந்து) ஆகாயத்தே சென்று, (அங்கு நின்று கொண்டு), 'வேந்தனே - அரசனே! நல் நாடு தோற்பித்தோன் - உன் நல்ல நிடதநாடு முதலியவற்றை நீ தோற்குமாறு செய்தவன், நானே காண் என்றது - நானே தான்; இதனை நீ தெரிந்து கொள்' என்று கூறிற்று.

கூந்த லிளங்குயில்: இல் பொருள் உவமையில் அடையடுத்த உவமையாகு பெயர். அணைத்தல் - வளைத்துப் பிடித்தல். காண் என்பதை முன்னிலை அசையாகவுங் கொள்ளலாம். புள் - புள் வடிவாய் வந்த கலி. கலிபாக்யானத்தில் புள்வடிவாய் வந்து ஆடையைக் கவர்ந்தவன், கலியோடு வந்த அவன் தமயனை துவாபரன் என்று கூறும். துவாபரன் செய்திகளை (246) உரையிற் காண்க.

பி - ம். 1. கூந்த லிளமயிலுங், கூந்தலிளங் கொடியும்; கோமானுங் காண; கண்ணுறவே.
3. நன்னாடு தோற்பித்தோம் நாங்கள் காண்;
தோற்பித்தோன் நான்காணு மென்றதே.
4. பொன்னாடு மேனிறத்த புள்; மானிறத்த புள். (83)

நளதமயந்தியர் இருவருக்கும் ஓராடையே கொண்டமை

252. காவிபோற் கண்ணிக்குங் கண்ணியந்தோட் காளைக்கும்
ஆவிபோ லாடையுமொன் றனதே—பூவிரியக்
கள்வேட்டு வண்டுழலுங் கானத் திடைக்கனகப்
புள்வேட்டை யாதரித்த போது.

பூ விரிய - மலர்கள் விரிந்து மலர, கள் வேட்டு - அவ்ற்றில் உள்ள தேனை விரும்பி, வண்டு உழலும் - வண்டுகள் சுற்றித் திரியும், கானத்து இடை - அவ்வனத்தினிடத்து, கனக புள் வேட்டை ஆதரித்த போது - பொன்னிறத்த அப்பறவையைப் பிடிப்பதான வேட்டையை (நளன் தமயந்தி இருவரும்) விரும்பிச் செய்தபோது, காவி போல் கண்ணிக்கும் - குவளை மலர் போன்ற கரிய கண்களையுடைய அத்தமயந்திக்கும், கண்ணி அம் தோள் காளைக்கும் - மாலை யணிந்து அழகிய தோள்களையுடைய இடபம் போன்ற நளனுக்கும், ஆவி போல் - அவ்விருவருக்கும் உயிர் ஒன்றே என்பது போல, ஆடையும் ஒன்று ஆனது - அப்பொழுது அவ் விருவர்க்கும் உடுத்தும் ஆடையும் ஒன்றாக ஆகிவிட்டது. ஏ: ஈற்றசை.

ஆதரித்தல் - விரும்புதல்; 'ஆதரித்தார் தம்மோ..... எழுந்தருள்க என்றாள்' (88) என்றது போல. கண்ணி: மாலை வகையில் ஒன்று. 'கண்ணி கார் நறுங் கொன்றை'; (புறநா. 1). ஆவிபோலாடையு மொன்றானது: இருவர்க்கும் ஒரே உயிர் என்று சொல்லத்தக்கது. தமயந்தி, முன் அன்னத்தினிடம், 'ஆவி யுவந்தளித் தாயாதி' (51) என்றதும், நளன் வீமன் திருமகளாம் நல்லுயிரும் (67) என்றதும் இங்கு நோக்கி யுணரத்தக்கனவாம். மேலும், ஒத்த அன்புடைய உத்தம காதலன் காதலியர்க்கு உயிர் ஒன்றே என்று அகப்பொருள் இலக்கணம் அறுதியிட்டதும் நோக்குக.

பி - ம். 1. காவிசேர் கண்ணிக்கும்; கண்ணியந்தார்க் காளைக்கும், காவியந்தார்க் காளைக்கும்.
2. மாடையுமொன் றுயிற்றே—பூவிரிந்த.
4. புள்வேட்டை காதலித்த போது. (84)

தமயந்தி கலியைச் சபித்தது

253. அறம்பிழைத்தார் பொய்த்தா ரருள்சிதைத்தார் மானத்
திறம்பிழைத்தார் தெய்வ மிகழ்ந்தார்—பிறன்கடையில்
சென்றூர் புகுநரகஞ் சேர்வாய்கொ லென்றழியா
நின்றுள் விதியை நினைந்து.

(தமயந்தி அக்கலியை நினைத்து), 'அறம் பிழைத்தார் - அற நெறிக்குத் தவறி நடந்தவர்களும், பொய்த்தார் - பொய் உரைத் தோர்களும், அருள் சிதைத்தார் - இரக்கம் என்பதையே அழித்

தோர்களும், மான நிறம் பிழைத்தார் - தம் மதிப்பு தவறி இழிந்த செயல் புரிந்தோர்களும், தெய்வம் இகழ்ந்தார் - கடவுள் நிந்தனை செய்தோர்களும், பிறன் கடையில் சென்றார் - அயலான் மனைவியை விரும்பி அவ்வயலானது வீட்டு வாயிலிற் போனவர்களும், புகு நரகம் சேர்வாய் - (ஆகிய இக் கொடியோர்கள்) போய்ச் சேரும் நரகத்துள் (நீ) போவாய்' என்று விதியை நிந்தித்து - அவனைச் சபிக்க நேர்ந்த தன் விதியையும், தன் விதியையும், மனத்தில் எண்ணி, அழியா நின்றாள் - மனமழிந்து வருந்தி நின்றாள். கொள் : அசை.

அறம் பிழைத்தார், முதல் பிறன்கடையிற் சென்றார் வரையில் உள்ளன ஆறும் வினையாலணையும் பெயர்கள். பிறன் கடையிற் சென்றார் என்பது சில பிரதிகளில் புறன் கடையிற் சென்றார் என உள்ளது. புறன்கடை என்பது வாயிலின் புறம் என்ற பொருளிற் பிச்சை ஏற்கும் தொழிலைக்குறிப்பதால், அது இங்குக் கூறப் பெற்ற மற்ற பாவங்களைப் போல அத்துணைக் கொடியதும் தீயதன்மையுடையதும் அன்றாகலானும், சில சுவடிகளிற் பிறன் கடையிற் சென்றார் என்றே உள்ளமையாலும், 'பிறன் கடை நின்றாரிற் பேதையாரில்;' திருக்குறளும், (142) உள்ளமையாலும் அதுவே ஏற்ற பாடமெனக் கொள்ளப்பட்டது. இச்செய்யுள் கலியை நோக்கித் தமயந்தி கூறிய சாபமொழி என்பர். நளோபாக்யானத்தில் தமயந்தி நளனைக் காணிற் பிரிந்து வருந்திய போது, கலியின் தீங்கை நிந்தித்து அவனைச் சபித்ததாகவும் அது முதல், கலியை அவளது சாபத்தீ பற்றி எரித்து வந்தது என்றும், அக்கலி நளனைப்பற்றி யிருந்தபோது நளனைக் கார்க்கோடகன் கடித்ததால் நளனுக்கு உண்டான அம்பாம்பின் விஷமும் அக்கலியைப் பற்றவே அதனாலும்: அக்கலி வருந்தி வந்தான் என்றும், பின் கலியினின்று விடுபட்ட நளன் அக்கலியைச் சபிக்கத் தொடங்கவே, அக்கலி நளனை வணங்கி, 'நான் முன்னமே தமயந்தியால் சபிக்கப் பெற்றுப் பெரிதும் வருந்தி வருகிறேன்; என்னை நீயும் சபிக்கவேண்டாம் என் பிழைகளைப் பொறுத்தருள்; நீ விரும்பும் வரன்களைத் தருகின்றேன்' எனக் கேட்டுக்கொண்டான் என்றும் உள்ளமை காணலாம்.

பி - ம். 1. ஞானத் திறம். 2. புறங்கடையிற்.
3. சேர்வ ரெனவுரைத்து. 4. நின்றுன் விதியை. (85)

தமயந்தி, தாம் அவ்விடம்விட்டு நீங்க விரும்பியது

254. வையந் துயருழப்ப மாயம் பலசூழ்ந்து
தெய்வங் கெடுத்தாற் செயலுண்டோ—மெய்வகையே
சேர்ந்தருளி நின்றதனிச் செங்கோலா யிங்கொழியப்
போந்தருளு கென்றுள் புலர்ந்து.

(பின் தமயந்தி நளனை நோக்கிப்), புலர்ந்து - வாடிச் சோர்ந்து, 'மெய் வகையே சேர்ந்து - உண்மையின் வழியே சேர்ந்து, அருளி நின்ற - யாவர்க்கும் நல்லருள் புரிந்து வந்த, தனி செங்கோலாய் - ஒப்பற்ற சிறந்த செங்கோலரசனே! வையம் துயர் உழப்ப - உலகத்திலுள்ளார் துன்பத்தில் வீழ்ந்து வருந்த, மாயம் பல சூழ்ந்து - பல வஞ்சகங்களை எண்ணிச்செய்து, தெய்வம் கெடுத்தால் - தெய்வமே கேடு செய்யுமானால், செயல் உண்டோ - அதைத் தடுக்கும் வழி நமக்கு உள்ளதோ? (இல்லை என்றபடி) (ஆதலால்) இங்கு ஒழிய - இவ்விடத்தை நாம் விட்டு நீங்கும்படி, போந்து அருள்க - வந்தருள் வீராக!' என்றுள் - என்று கேட்டுக் கொண்டாள்.

வையம் : மக்கள் : இடவாகு பெயர். உழத்தல் - வீழ்ந்து தத்தளித்தல். அருள்கென்றுள் : அருள்கவென்றுள் என்பதன் தொகுத்தல் விகாரம்.

பி - ம். 2. தெய்வம் பிழைத்தாற்; மெய்வகையில்.
3. செங்கோலாய் நீயிங்கே.
4. போந்தருள வென்றுள் புலர்ந்து. (86)

சூரியாத்தமயம்

255. அந்த நெடுஞ்சுரத்தின் மீதேக வாங்கழலும்
வெந்தழலி யாற்றுவான் மேற்கடற்கே—எந்தை
குளிப்பான்போற் சென்றடைந்தான் கூரிருளாற் பாரை
ஒளிப்பான்போற் பொற்றே ருடன்.

எந்தை - எங்கள் தந்தை போன்ற சூரியன், அந்த நெடும் சுரத்தின் மீது ஏக - அந்த நிண்ட பாலை நிலத்தின் மேலாக வானிற் செல்ல, ஆங்கு அழலும் வெம் தழலி - அங்குத் தன்னை சுட்டெரித்த கொடிய சூட்டை, ஆற்றுவான் - தணித்துக் கொள்ளும் பொருட்டு, மேல் கடற்கே குளிப்பான் போல் - மேற்குக் கடலில் போய் குளிப்பவன் போலவும், கூர் இருளால் பாரை ஒளிப்பான்

போல் - மிக்க இருளினுல் பூமியை மறைப்பவன் போலவும், பொன் தேர் உடன் - தனது பொன்னுல் அமைந்த அல்லது அழகிய தேருடன், சென்று அடைந்தான் - போய்ச் சேர்ந்தான்; அதாவது அத்தமித்தான்.

மேற்கடற்கே: ஏகாரம் தேற்றப் பொருளது. எந்தை - உலகில் பொருள்கள் உயிர்கள் பலவும் உண்டாகி வளர்வதற்குச் சூரியன் மூல காரணன் ஆதலால், பரமசுவாமி என்ற பொருளில் அவனை எந்தை எனக் கூறப்பெற்றது. இவ்வாறின்றி எந்தை என்பதற்கு மற்றும் பலவாறு பொருள் கூறினுரும் உளர். எல்லாப் பொருள்களையும் தன் வெங்கிரணங்களால் எரிக்கவல்ல சூரியனையே எரித்து அழலச் செய்தது அச்சுரம் என்பதாம். இது தற்குறிப்பேற்றவணி; 'எரி சுடர்க் கடவுளுங் கருதில்வே 'முள்ளமுங் காணில்வேம் நயனமும்', 'சூரியன் தேருமோ டாது' (கம்ப. பால. தாடகை: 5, 9.) எனவும்,

இருபொழுது மிரவிபசும் புரவிவிசும்
பியங்காத தியம்பக் கேண்மின்
ஒருபொழுதுந் தரித்தன்றி யூடுபோ
கரிதணங்கின் காடென் றன்ரே.

(கலிங்கத்துப்: 85)

எனவும் கூறியுள்ளவை இங்கு ஒப்பு நோக்கத்தக்கன.

பி - ம். 1. மீதேகி யாய்குழலின், மீதேகி யாண்டுழலும். (87)

நளதமயந்தியர் இருளூடே கானிற்சென்றது

256. பானு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததற்பின்
கான வடம்பின் கவட்டிலைகண் — மானின்
குளம்பேய்க்கு நன்னுடன் கோதையொடுஞ் சென்ருன்
இளம்பேய்க்குந் தோன்ரு விருள்.

கான அடம்பின் கவடு இலைகள் - காட்டில் உள்ள அடப்பங் கொடிகளின் பிளவுபட்டு விளங்கும் இலைகள், மானின் - மானினுடைய, குளம்பு ஏய்க்கும் - குளம்புகளை ஒத்திருக்கும், நல் நாடன் - நல்ல வளம் பொருந்திய நிடத நாட்டையுடைய நளன், பானு நெடுந் தேர் - சூரியனது நெடிய தேர், படுகடலில் - ஆழ்ந்த கடலில், போய் - சென்று, பாய்ந்ததற் பின் - புகுந்து மறைந்த பிறகு, இளம் பேய்க்கும் - இளமைப்பருவத்து வலிமிக்க பேய்களுக்கும், தோன்ரு - வழி தெரிந்து கொள்ளமுடியாத, இருள் - அவ்விருட் போதில்,

கோதை ஒடும் - தமயந்தியோடும், சென்றான் - (அக்காட்டினிடையே) போயினன்.

படுகடல் : படு ; பெரிய, ஒலிக்கின்ற, ஆழ்ந்த, மோதுகின்ற எனப்பல பொருள் களையுடையது ; படுகடல் சகரர்களால் தோண்டப்பட்ட கடலும் ஆம். இளம் பேய்க்கும் தோன்று விருள் ; ஒப்பு : 'கழுதும் வழிதேடுங் கங்குல்'; (122). கோதை : சினையாகு பெயராய்த் தமயந்தியைக் குறித்தது. இளம் பேய்க்கும் : உம்மை உயர்வு சிறப்பினது. அடம்பின் இலை மானினடிபோன்று இரு பிளவாக விளங்கும் ; இச்சொல், அடும்பு எனவும் வழங்கும் ; 'மானடி யன்ன கவட்டிலை யடும்பின்' (குறுந். 243 : 1.); 'ஒண்பன் மலர கவட்டிலை யடும்பு : (அகநா ; 80 : 8).

இதன்பின் ஒரு சுவடியில்,

வேட்டந் திரிந்துழலும் வேழத்தை யும்விழுங்கி
வாட்டந் தணியாத வன்பசியால்—மீட்டுமோர்
மாநாகஞ் சேரும் வழியென் றறியாதே
ஆனது சேர்ந்தா ரழுது.

என்றொரு பாடல் உள்ளது.

பி - ம். 1. படுகடலிற் பாய்தலுமே.
3. குளம்பேய்க்கும் நீர்நாடன் கோதையொடும் போனான். (88)

ஒரு பாழ்மண்டபம் அடைந்தது

257. எங்காம் புகலிடமென் றெண்ணி யிருள்வழிபோய்
வெங்கா னகந்திரியும் வேலைதனில்—அங்கேயோர்
பாழ்மண் டபங்கண்டான் பால்வெண் குடைநிழற்கீழ்
வாழ்மண் டபங்கண்டான் வந்து.

பால் வெண் குடை நிழல் கீழ் - பால் போலும் வெண்மையான தன் கொற்றக் குடையின் நிழலின் கீழே, வாழ் மண் தபம் கண்டான் - வாழும் உலகின் மக்களது தவமாகிய தருமத்தை நிலைநிறுத்திய நளன், புகல் இடம் எங்கு ஆம் என்று எண்ணி - போய் தங்கும் இடம் எங்கு ஏற்படும் என்று நினைந்து, இருள் வழி போய் - இருளில் அவ்வழியே நடந்து சென்று, வெம் கானகம் திரியும் வேலை தனில் - கொடிய காட்டில் திரிந்து அலையும் போழ்தில், அங்கே - அக்காட்டில் ஓரிடத்திலே, ஓர் பாழ் மண்டபம் கண்டான் - ஒரு பாழடைந்த மண்டபத்தைக் கண்டான்.

மண்டபம் கண்டான்: முன்னியது, மண் தபம் கண்டான் எனப் பிரிக்கப்பெற்றது; தபம் - புண்ணியம் அல்லது தருமம்; (நாநார்த்த தீபிகை); தவந்தீர் மருங்கிற் றனித்துய ருழந்தோய்; (சிலப். 14. 26) என்றதும் நோக்குக. 'நற்றவஞ் செய்வார்க் கிடந்தவஞ் செய்வார்க்கு மஃதிடம்' (சீவக. 77) என்றதற்கு, தவம் - இல்லற தருமம் என்றும், நற்றவம் என்பது வீடுபேறடையச் செய்யும் தவம் என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் வகைப்படுத்தி எழுதியுள்ளமையுங் காண்க. தபம் என்ற வடசொல் தவம் எனத்திரிந்து வரப்பாலது, எதுகையின் திரிபுநயம் நோக்கித் தபம் என்றே இயல்பாய் நின்றது.

பி - ம். 1. எங்கே புகலிடமென் றெண்ணி யிடையிருளில்; றெண்ணியிடந்தேடி.
2. வெங்கா னகத்தலையும், வெங்கா னடைந்தருளும்; வேலைக்கண்.
4. வாழ்மண் டபங்கண்ட மன். (89)

258. மூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதால்
சாரு மிடமற்றுத் தானில்லை—சோர்கூந்தல்
மாதராய் நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதரா யென்ருன் புலர்ந்து.

(அப்போது நளன் தமயந்தியை நோக்கி), 'சோர் கூந்தல் மாதராய் - தளர்ந்து அவிழ்ந்த கூந்தலையுடைய பெண்ணே! இரவும் - இந்த இராத்திரியும், மூரி - வலிய, முற்று இருளாய் போய் - முற்றிய நள்ளிரவாக ஆகி, மூண்டது - முன் அடர்ந்துள்ளது; சாரும் இடம் மற்றும் தான் இல்லை ஆல் - நாம் போய் அடையக்கூடிய வேறிடம்தான் ஒன்றும் இல்லை; (ஆதலின்), நாம் இந்த மண்டபத்தே கண்துயில - நாம் இந்த மண்டபத்தினிடத்திலே படுத்துக் கண்ணுறக்கங் கொள்ள, போதராய் என்ருன் புலர்ந்து - வருவாயாக' என்று வருந்திக் கூறினன்.

முற்றிருள் - இருளின் முதிர்ச்சியாகிய நள்ளிருள் மூண்டது; மூள்தல் - வலிகொண்டு முன் வருதல்; 'மூண்ட சினத்தவர் மூவர் முனிந்தார்' (கம்ப. சுந்தர: 920) முன்னிருள் வரவரப் பெருகியும், பின்னிருள் வரவரக்குறைந்தும் போகும் இயல்பின வாதலின், முற்றிருள் என்றது இருள் முற்றிய நள்ளிரவு ஆயிற்று. கண்துயில்தல் - கண்களை மூடிக்கொண்டு உறங்குதல். சோர்கூந்தல் - தளர்ச்சியும் மென்மையும் உடைய கூந்தல்.

பி - ம். 1. மூரியிரு ளும்போய் மூற்றிருளாய் மூண்டக்கால், மூற்றிருளாய் மூடியதால், மூற்றிருளாய் மூளுதலும்.
4. போதரா யென்ருன் புரிந்து,
போதுவா யென்ருன் புரிந்து. (90)

தமயந்தியின் துயரநிலை

259. வையமுடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல்—இவ்விரவில்
கேட்டவா வென்றழுதாள் கெண்டையங்க ணீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து

தோட்ட வார் கோதையாள் - தொடுத்துப் பின்னப்பட்ட நீண்ட கூந்தலையுடைய தமயந்தி, 'வையம் உடையான் - உலக முழுதும் தனக்கு உரிமையாகவுடைய சக்ரவர்த்தியான நளனது, மகரயாழ் கேட்டு அருளும் - (பள்ளியறையில்) மகர வீணையின் இசையைக் கேட்டு இன்புறும், தெய்வ செவி - சிறப்புடைய காதுகள், இ இரவில் - இற்றைக்கு இந்த இரவுப்போதில், கொதுகின் சில் பாடல் - கொசுகுகளின் (வெறுப்பைத் தரும்) சிறு பாடல்களை, கேட்ட ஆ என்று - கேட்டவாறு நேர்ந்ததே!' என்று, கெண்டை அம் கண் நீர் சோர - கெண்டை மீன்கள் போன்ற தன் கண்களி னின்றும் நீர்வடிய, சோர்ந்து அழுதாள் - தளர்ந்து அழுவாளானாள்.

மகரயாழ்: மகர மீனின் உரு தலையில் அமையப்பெற்ற யாழ். தெய்வச்செவி: திருச்செவியும் ஆம்; தெய்வம் என்றது அரசனது சிறப்பை உணர்த்த வழங்கும் மரபுச் சொல்; மன்னன் றிருமுன்னர் வைத்தலுமே; (28) என்றது போல. "யாவ ராயினும் நால்வரைப் பின்னிடில், தேவ ரென்பது தேறுமிவ் வையகம்" (சீவக. 249) என்ரு ராகலின். கொதுகு - கொசுகு; (பிங்). தோட்டவார் கோதையாள் - மலர்கள் வைத்துத் தொடுக்கப்பெற்ற நீண்ட மாலையுடையவள் என்றலும் ஒன்றும். மகளிர் கண்ணுக்குக் கெண்டை (260); "கெண்டைத் தடங்கண்ணு ளுள்ளே, கிளுகிளுத்தாள்"; (கம்ப. உயுத்த. மாயாசனகப்: 87); 'தண்டு லாவிய தாமரைப் பொய்கையில், மொண்டு நீரை முகத்தரு கேந்தினுள், கெண்டை கெண்டையென் றக்கரை யேறினுள், கெண்டை காண்கிலள் நின்று தயங்கினுள்'; (விவேக சிந்தாமணித் தனிப்பாடல்.)

பி - ம். 3. கேட்டவா வென்றுரைத்துக்.
கெண்டையங்கண் ணீர்சோர்ந்தாள். (91)

நளன் தமயந்தியைத் தேற்றியது

260. பண்டை வினைப்பயனைப் பாரிடத்தி லார்கடப்பார்
கொண்ட னிழலிற் குழைதடவும்—கெண்டை
வழியனீ ரென்ரூன் மனநடுங்கி வெய்துற்
றழியனீ யென்ரு னரசு.

அரசு - அதுகண்ட அரசனை நளன், 'பண்டை வினை பயனை பார் இடத்தில் ஆர் கடப்பார் - முன்னைச் செய்த தீவினையின் விளைவை உலகில் யாவரே அநுபவிக்காமல் விலகிச் செல்வார்; (ஒருவரும் இலர் என்றபடி); கொண்டல் நிழலில் - மேகம் போன்ற உன் கூந்தலின் நிழலிலே உள்ள, குழை - காதுகளில் அணிந்துள்ள குழைகள் என்னும் குண்டலங்களை, தடவும் - தடவுவனபோல நீண்டு விளங்கும், கெண்டை - சேல் மீன்கள் போன்ற கண்களில், நீர் வழியல் என்ரூன் - (நீ) நீர்வழிய விடாதே' என்றும், 'மனம் நடுங்கி - மனநடுக்க முற்று, வெய்து உற்று - துன்பமுற்று, நீ அழியல் என்ரூன் - நீ வருந்தாதே' என்றும் கூறித்தமயந்தியைத் தேற்றினன்.

முன்செய்த வினைப்பயன் யாவரையும் விடாது தொடர்ந்து வந்து பற்றும் என்பதையும், அதனை அனுபவித்தே ஆகவேண்டு மென்பதையும் நளன் கூறித் தமயந்தியைத் தேற்றினன் என்பதாம். கொண்டல் - நீருண்ட மேகம்; அது தமயந்தி கூந்தலுக்கும், கெண்டை - சேல்மீன்; அது தமயந்தியின் விழிகளுக்கும், உவமை ஆகுபெயர்களாகவும், குழை என்பது, இடவாகு பெயராய்ச் செவி களையும் குறித்து நின்றன. கூந்தலுக்கு மேகம்; **165**, **309**, மகளிர் விழிகளுக்குக் கெண்டை; **259** உரை.

பி - ம். 2. கொண்ட லருகே குழைதடவும்.
3. வழியனீர் கொண்டு மனநடுங்கி வைதற், வழியனீர் கொள்ள.
4. றழியனீ. **(92)**

மீண்டும் தமயந்தி வருந்தியது

261. விரைமலர்ப்பூ மெல்லணையு மெய்காவல் பூண்ட
பரிசனமும் பள்ளி யறையும்—அரசேநான்
காணேனிங் கென்னுக் கலங்கினுள் கண்பனிப்பப்
பூணேர் முலையாள் புலர்ந்து.

பூண் நேர் முலையாள் - ஆபரணங்கள் தாங்கிய தனங்களை யுடைய தமயந்தி, புலர்ந்து - வாடி, 'அரசே - மன்னவனே! விரை

மலர் பூம் மெல் அணையும் - மணமுடைய பூக்களா லமைந்த அழகிய மென்மையான படுக்கைகளையும், மெய் காவல் பூண்ட பரிசனமும் - (நம்) உடற்காவலை ஏற்றுள்ள ஏவற்பணி மக்களும், பள்ளி அறையும் - படுக்கை அறையும், இங்கு நான் காணேன் என்ன - இங்கு நான் காணவில்லையே' என்றுகூறி, கண் பனிப்ப-கண்ணீர் துளிக்க, கலங்கினள் - மனக்குழப்பமுற்று வருந்தினள்.

பூண் ஏர் முலையாள் எனப்பிரித்து பூண்கள் அழகையடையும் முலையாள் என்னலும் ஒன்றும்; 'பூணுக் கழகளிக்கும் பொற்றொடி' (148) என்றதையும் நோக்குக; கண்பனித்தல் - கண்ணீர் துளித்தல்; 'நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்குஞ் சோரும்" (திருநெடுந்தாண்டகம். 12)

பி - ம். 1. விரிமலர்ப்பூ மெல்லணையும், மென்காவல்.
2. பரிகலமும் பள்ளியறையும்—அரசனே.
3. காணேனே யென்னக் கலங்கினள், காணேனே யென்னக், காணேனே யென்றாள், காணேனிங் கென்னக்; மின்னி மைக்கும்.
4. பூணர் முலையாள் புலர்ந்து. (93)

நளன் தமயந்தியைக் கண்ணுறங்குமாறு கூறியது

262. தீய வனமுந் துயின்று திசைதுயின்று
பேயுந் துயின்றதாற் பேர்யாமம்—நீயுமினிக்
கண்மேற் றுயில்கை கடனென்றான் கைகொடுத்து
மண்மேற் றிருமேனி வைத்து.

(நளன் அவ்வாறு வருந்திய தமயந்தியை நோக்கி), கை கொடுத்து - தன்கையைக் கொண்டு தாங்கி, மண்மேல் திருமேனி வைத்து - அம்மண்டபத்திலிருந்த புழுதி மண்மீது அவள் அழகிய அல்லது சிறப்பமைந்த உடலை கிடத்திப் படுக்க வைத்து, 'தீய வனமும் துயின்று - கொடிய இக்காட்டில் உள்ள பிராணிகள் யாவும் துயில் கொண்டு, திசை துயின்று - அப்பால் உள்ள திசையாகிய இடங்களில் உள்ளனவும் துயில்வுற்று, பேயும் துயின்றதால் - (இரவில் அதிகம் தூங்காத) பேய்கள் கூடத் தூங்கின; ஆதலால், பேர் யாமம் - இப்பொழுது பெரும் நள்ளிரவு ஆயிற்று; இனி நீயும் - இனிமேல் நீயும், கண்மேல் துயில் கை கடன என்றான் - கண்மூடித் தூங்குவது முறை அல்லது ஏற்ற செயலாகும்' என்று கூறினன்.

இனி, கை கொடுத்து மண்மேற் றிருமேனி வைத்து என்பதைத் தமயந்திக்கே ஏற்றி உரைத்தலும் ஆம்; இஃதன்றி நளன் தன் கையைத் தமயந்திக்குத் தலையணையாக நீட்டிக்கொடுத்து, அவளை மண்மேற் திருமேனி வைத்துப் படுக்க வைத்து என்றும் பொருள் கூறினுமாம். வனம் துயின்று, திசை துயின்றதால் என்பன வற்றில், வனம், திசை என்பன இடவாகு பெயர்களாம், அங்கங்கு வாழும் பிராணிகளைக் குறித்து நின்றன. பேயும்; உம்மை உயர்வு சிறப்பினது; இரவில் தூங்காமல் அலையும் பேயும் துயின்றன என்ற தால் நள்ளிரவுப் போழ்தில் ஒரு சிறு நேரம் பேயும் துயில் கொள் ளும் என்பதாம்; (கப்பற். 151.)

பி-ம். 1. திசைமயங்கிப்.
2. பேயுந் துயின்றனவாற் பேரிரா; பேயுந் துயின்ற பெருயாமம்.
3. கண்மேற் றுயிலக், கண்மேற்படுக்கை கடனென்னுன் கை மடித்து, கைப்பிடித்து. (94)

நளனது துயரம்

263. புன்கண்கூர் யாமத்துப் பூழிமேற் ருன்படுத்துத்
தன்கண் டுயில்வானைத் தான்கண்டும்—என்கண்
பொடியாதா லுள்ளாவி போகாதா னெஞ்சம்
வெடியாதா லென்ருன் விழுந்து.

விழுந்து - (நளன் சோகத்தாற் கீழே) விழுந்து, 'புன் கண் கூர் - துன்பம் மிகுந்த, யாமத்து - அந்த நள்ளிரவில், பூழி மேல் தான் படுத்து - அப்பாழ் மண்டபத்துப் புழுதி மேலே தான் படுத்துக் கொண்டு, தன் கண் துயில்வானை - தன் கண்களை மூடித் தூங்கிய தமயந்தியை, தான் கண்டும் - நான் பார்த்தும், என் கண் பொடியாதால் - எனது கண்கள் பொடியாய் வெந்து உதிராமல் உள்ளனவே! உள் ஆவி போகாதால் - என் உடலுள் இருக்கும் உயிர் போகாது இருக்கிறதே!, நெஞ்சம் வெடியாதால் - என் மனம் வெடித்துப் போகாது இருக்கிறதே!' என்ருன் - என்று கூறி வருந்தினன்.

புன்கண் - துன்பம்; 'புறங்கடை நின்று புன்கண் கூர்ந்து' (மணி. 11 : 112); 'புரப்போர் புன்கண் கூர விரப்போர்க் கீயான்'; (புறநா. 72 : 17). கூர், மிகுதிப் பொருளை யுணர்த்தும் உரிச் சொல்; நன். உரியியல் : 15. பூழி - புழுதி; 'பூழி பூத்த புழற் காளாம்பி' (சிறுபாண். 134). பூழிமேற் ருன்படுத்து : அந்த மண்ட

பம் பாழடைந்து புழுதி படிந்திருந்தது என்பது, முன் (262) இல் 'மண்மேற் றிருமேனி வைத்து' என்றதால் விளங்கும். கண்டுயில் தல் - கண்மூடித் தூங்குதல்; முன் (262) இல் 'கண்மேற் றுயில் கை கடன்' என்றமையும் நோக்குக. பொடித்தல் - தூளாய் வெந்து உதிர்தல். பொடி - தூள்; 103, 219. இதனால், தமயந்தியின் அத்துயரநிலையை மனம் பொறுத்துக் கொண்டிருப்பதிலும் தன் கண் பொடிந்து போவதும், தன் ஆவி போய் அழிவதும் மேல் என்று நளன் கருதினன் என்பதாம்.

பி - ம். 1. பூமிமேற் முன்படுத்த, பூழிமேற் றோள்படுத்த.
2. துயில்வானேத்.
3. போகாதா யாமம், போகாதோ, பொடியாதோ மேலாவி, போகாதோ யாமம்.
4. விடியாதா, விடியாதோ, வென்முன் மெலிந்த, விடியாதோ வென்முன் விரைத்த, விழித்த வென்முன் மெலிந்த. (95)

தமயந்தியின் துயரம்

264. முன்றிறனின் மேற்படுக்க முன்ரு னையுமின்றி
இன்று துயில வினைவனுக்கே—என்றனது
கைபுகுந்த தென்னுடைய கால்புகுந்த தென்றழுதாள்
மைபுகுந்த கண்ணீர் வர.

(துயின்ற தமயந்தி பின் விழிப்புற்று நளன் துயில்வது கண்டு), முன்தானையும் இன்றி - ஆடையின் மேற்றலைப்பும் இல்லா மல், இன்று - இற்றைக்கு, முன்றில் தனில் படுக்க - இம் மண்டப முற்றத்தில் படுத்துக் கொள்ளுமாறு ஏற்பட, என் தனது - என் னுடைய கை புகுந்தது - அரசன் பாணிக்கிரஹணம் செய்து கொள்ள என் கை புகுந்து நீட்டிய என் செயலின் பயனாகவும், கால் புகுந்தது - ஸப்தபதியில் என் கால் இவன் பிடித்து அம்மி மேல் வைக்கப்புகுந்ததாகிய செயலின் பயனாகவுமே ஆகும்' என்று - எனக்கூறி, மை புகுந்த கண் நீர் வர - மை தங்கப்பெற்ற தன் கண்களி னின்றும் நீர் பெருகி வர, அழுதாள் - அழுதனள்.

முன்தானை இன்றி: தமயந்தி உடுத்திருந்த ஒரு புடவையின் மற்றொரு தலைப்புப் புறத்தையே நளன் உடுத்திருந்தா னென்க. கால் புகுந்த: அவன் மனைவியாகத் தமயந்தி, நளன் அரண்மனை யிற் புகுந்ததாகிய துரதிர்ஷ்ட வசமாக, என்றும் கொள்ளலாம். நளன் சூதாடி அவனுக்குரிய பதவி, செல்வம் அனைத்தையும்

தோற்றதைத் தன் பாக்கியக்குறைவால் ஏற்பட்டதாகக் கருதிய தமயந்தியின் குணச்சிறப்பு இங்குப் பாராட்டற் குரியது. தானை - வஸ்திரம் அல்லது ஆடை, 'தானை யைவர் கொடிக்களித்தவர் தானை கொண்ட தளிக்கிலார்' (திருவரங்கக் கலம்பகம் 72); 'திரௌபதி தன் தானையுங் காத்து' (தனிப்பாடல்). முன்றில்: இல்முன் என்பதன் இலக்கணப்போலி; வாய்க்கால், வாயில் என்பனபோல.

பி - ம். 1. முன்றுகளின் மேற்படுக்க.
2. இன்று துயிலு மிறைவனுக்கே,
இன்றுயில் கொள்ளு மிறையவற்கு—வன்றுயரம்
3. கால்புகுந்த தென்றுரைத்தாள். (96)

மீண்டும் நளனது துயரம்

265. வீமன் றிருமடந்தை வின்னவரும் பெற்றிலாத்
தாம மெனக்களித்த தையலாள்—யாமத்துப்
பாரே யணையாப் படைக்கண் டுயில்கின்ருள்
ஆரே துயரடையா ராங்கு.

(பிறகு நளன் விழித்து நோக்கத் தமயந்தி தூங்கக் கண்டு), 'வீமன் திருமடந்தை - வீமராஜன் செல்வத்திருமகளும், விண்ண வரும் - தேவர்களாகிய இந்திரன் முதலியவர்களும், பெற்று இலா - அடைய விரும்பியும் பெறுத, தாமம் - சுயம்வர மணமாலையை, எனக்கு அளித்த - எனக்கே சூட்டியளித்தருளிய, தையலாள் - பெண்ணுவாளுமான இத்தமயந்தி, யாமத்து - இந்த நள்ளிரவில், பாரே அணையாய் - இப்பாழ்பட்ட தரையே படுக்கையாகக் கொண்டு, படைகண் துயில்கின்ருள் - வேல் வாள் என்னும் படை போன்ற தன் கண்களை மூடித் துங்குவாளாளுள்; (ஆதலின்) ஆரே துயர் அடையார் - வேறு யார் தாம் துன்பத்தை அடையாதவர் உள்ளார்!' (ஒருவருமிலர் என்றபடி). (என்று வருந்தினன் என்ப தாம்.) ஆங்கு: அசை.

'பெருஞ்செல்வச் சிறப்பிற் பிறந்து, துயரமென்பதையே யறி யாது வளர்ந்து வாழ்ந்து வந்த இந்தப் பீமராஜ குமாரியான தமயந்தியே இவ்வாறு இக்கானில் துயின்ருள் ஆதலின், உலகில் இனி யாரைத் துயரம் என்பது விட்டது, என்று எண்ணி வருந்தி னன் நளன். (262 முதல் 265 வரை) யுள்ள பாடல்களால், மாறி மாறிச் சிறிது தூங்குவதும் பிறகு விழித்துக் கொண்டு வருந்து

வதுமாக அவ்விரவில் அவ்விருவரும் வருந்திய நிலை கூறப்பெற் றது. இதனால் நளன், சக்கரவர்த்தியாய் ஒரு கோலோச்சிய செல்வ சிறப்பைத் தான் இழந்த வருத்தத்தை விடத் தமயந்தியின் துயரநிலையே அவனைப் பெரிதும் வருத்தியது என்பதாம். படைக் கண் : உவமைத்தொகை.

பி - ம். 3. பாரே துணையாய்; துயின்றுண்மற்.
4. யாரே துயரடையா தாராரே. (97)

கலி நளன் மன உறுதியைக் கலைத்தது

266. பெய்மலர்ப்பூங் கோதை பிரியப் பிரியாத
செம்மை யுடைமனத்தான் செங்கோலான்—பொய்ம்மை
விலக்கினை னெஞ்சத்தை வேருக்கி நின்று
கலக்கினன் வஞ்சக் கலி.

பிரியாத செம்மை உடை மனத்தான் - தன்னை விட்டு நீங்காத சிறப்புக் குணமமைந்த மனத்தையுடையவனும், செங்கோலான் - நீதி தவறாது நேராக ஆட்சி செலுத்தியவனும், பொய்மை விலக்கி னன் - பொய்யை விலக்கி மெய்மையே கொண்டு ஒழுகுபவனுமான நளனது, நெஞ்சத்தை - மனத்தை, பெய் மலர் பூங்கோதை பிரிய - சூட்டப்பெற்ற மலர்களையுடைய அழகிய கூந்தலையுடைய தமயந்தி யைப் பிரியுமாறு, வேருக்கி நின்று - மாறுபாடு அடையச் செய்து அவனிடம் புகுந்து நின்று, வஞ்ச கலி - கொடிய கலிபுருடன், கலக்கினன் - குழப்பமடையச் செய்தான்.

பிரியாத செம்மையுடை மனத்தான் செங்கோலான், பொய்மை விலக்கினன் என்ற நளனது சிறப்புக்கள் யாவும் முன், 'செம் மனத்தாள்' என்று தொடங்கும் 47-ஆம் செய்யுளில் கூறிய வற்றை இங்கு மீட்டும் தந்துரைத்து, உறுதிப்படுத்தினர் ஆசிரியர் என்க. பெய்மலர்ப் பூங்கோதை : கோதை - மாலையையுடைய தமயந்தி எனக் கொள்ளலும் ஒன்றும்; இனி கோதை போன்ற வளும் ஆம். மனத்தான், செங்கோலான் என்பன குறிப்பு வினை யாலணையும் பெயர்கள். விலக்கினன் - இறந்த காலத்தைக் காட் டும் தெரிநிலை வினையாலணையும் பெயர்.

பி - ம். 2. செம்மை யுடைய திருமனத்தான், செம்மையுடைய திரு மனத்தை, செய்கை யுடைய திருமனத்தை—மெய்மை (விலக்கிலா).
3. விலக்கிலா நெஞ்சத்தை வேருக நின்று. (98)

267. வஞ்சக் கலிவலியான் மாகத் தராவீனக்கும்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல்—விஞ்ச
மதித்ததேர்த் தானை வயவேந்த னெஞ்சத்
துதித்ததே வேறே ருணர்வு.

(அவ்வாறு கலி கலக்கியதால்), மாகத்து - ஆகாயத்திலே, அரா வீனக்கும் - இராகு என்னும் பாம்பாகிய கோளினால் வீனக்கப்பெறும், செம்சுடரில் - சிவந்த ஒளியுடைய சூரியனிடத்து, வந்த - வந்தடைந்த, கரும் சுடர் போல் - கரிய ஒளி போல, விஞ்ச - மேன்மையாக, மதித்த - யாவரும் கருதிய, தேர் தானை - தேர்ப்படையையுடைய, வய வேந்தன் நெஞ்சத்து - வெற்றியுடைய அரசனை நளன் மனத்தில், வஞ்ச கலி வலியால் - கொடிய கலி புருடன் வலிமையினால், வேறு ஓர் உணர்வு - மாறுபட்ட ஓர் உணர்ச்சி, அல்லது எண்ணம் உதித்தது - தோன்றியது. ஏ : ஈற்றசை.

மாகம் : மகா கம் என்பதன் விகாரம், கம் - ஆகாயம்; இது வடசொல். அரா - அரவு. செஞ்சுடரில் வந்த கருஞ்சுடர் : இது, முரணணி; கருஞ்சுடர் என்ற குறிப்பால்; கரியநிறமுடைய இராகு என்னும் அரவாகிய கோள் எனலாயிற்று; சிவந்த ஒளியுடைய நெருப்பிற் கரிய புகைப்படலம் உண்டானைற் போல என்னலும் ஒன்றும். விஞ்ச - மிகுதிப்பட 29, 82 ஆம் பாடல்களை நோக்குக.

பி - ம். 1. மாதரா ரில்வளர்க்கும், மாகாரரா வீனக்கும்.
2. வந்த சிறுசுடர் போல்.
4. உதித்ததே வொன்று வுணர்வு; வேறு முணர்வு. (99)

268. காரிகைதன் வெந்துயரங் காணமை லீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—நேரே
இருவர்க்கு மோருயிர்போ லெய்தியதோ ராடை
அரிதற் கவனினைந்தா னங்கு.

(அதனால்) அவன் - அந்த நளன், காரிகை தன் - அழகிய அத்தமயந்தியடைந்துள்ள, வெம் துயரம் - கொடும் துன்பத்தை, காணுமல் - தான் நேரில் இருந்து பார்க்காமல், நீத்து - அவளை விட்டுப் பிரிந்து, அந்த கூர் இருளில் - அந்த மிகுந்த இருட்டிலே, போவான் குறித்து எழுந்து - போவதாகக் கருதி எழுந்து நின்று, நேரே - ஒப்பாக, இருவர்க்கும், அவனுக்கும் தமயந்தியாகிய அவ்விருவர்க்கும், ஓர் உயிர் போல் எய்தியது - ஒரே உயிர்போலப்

பொருந்தி இணைந்திருந்ததான, ஓர் ஆடை - அவ்வொற்றை ஆடையை, ஆங்கு - அப்பொழுது, அரிதற்கு - அரிந்து வேருக்கு வதற்கு, நிணைந்தான் - எண்ணினான்.

கூர் - மிகுதிப் பொருளையுணர்த்தும் ஓர் உரிச்சொல்; 'புன் கண் கூர்யாமத்து (263) என்றதும் நோக்குக. நள தமயந்தியர் இருவர்க்கும் உயிர் ஒன்றே யென்பது; 252. ஆங்கு: அவ்விடத்தில் என இடத்தைச் சுட்டியதாகவுங் கொள்ளலாம். (100)

269. எண்ணிய வெண்ண முடிப்ப விகல்வேந்தன்
கண்ணி யதையறிந்து காய்கலியும்—பண்ணினுக்குக்
கேளான தேமொழியை நீக்கக் கிளரொளிசேர்
வாளாய் மருங்கிருந்தான் வந்து.

இகல் வேந்தன் கண்ணியதை அறிந்து - போரிற் சிறந்த அரசனை நளன் கருதியதை அறிந்து கொண்டு, காய் கலியும் - அந்நள தமயந்தியரிடம் பகைமை கொண்ட கலி புருடனும், எண்ணிய எண்ணம் முடிப்ப - அந்நளன் தமயந்தியை விட்டுப் பிரிந்து போகக் கருதிய அவ்வெண்ணத்தை முற்றுவிக்க, பண்ணினுக்கு கேள் ஆன தே மொழியை - இசைக்கு உறவுபோல ஒப்பு ஆக உள்ள இனிய சொல்லையுடைய அத்தமயந்தியை, நீக்க - நளன் விட்டுப்பிரிக்க, மருங்கு வந்து - அந்நளன் அருகே வந்து, கிளர் ஒளி சேர் வாளாய் இருந்தான் - விளங்கும் ஒளியுடைய ஒரு வாளாகக் கிடந்திருந்தான்.

கண்ணுதல் - கருதுதல்; மணி. 2 : 25 : கம்ப. சுந்தர : 323. எண்ணிய எண்ணம் : தமயந்தியைப் பிரிய நளன் எண்ணியது; 268 இல் 'காரிகை தன்.....போவான் குறித்து' என்றதிற் காண்க; இனி, 157, 159 இல் கூறியபடி கலி அந்நள தமயந்தியர் கூடப் பிரித்து அவர்களுக்குக் கேடு சூழக் கருதிய எண்ணமும் ஆம். அதாவது, கலி முன் அவர்கூடப் பிரித்து வருத்துவதாகச் சங்கற்பித்த தன் எண்ணத்தை இப்பொழுது நளனைக் கொண்டே முடிக்க அதற்கு உதவியாக, ஒரு வாளாய் மருங்கு இருந்தான் எனக் கொள்ளலும் ஏற்புடைத்தாதல் காண்க.

பி - ம். 1. முடிப்ப வியல் வேந்தன், முடிப்பான்; இகல் வேந்து.
2. கண்ணிற் பதைப்பக் கலியும்போய்க்; யறிந்த காய்கலியும்.
3. கேளாய மென்மொழியை, கேளா மொழியின் கிளரொளிசேர் வான்கலியும்.
4. வாளாய்க் கிடந்தான் மருங்கு, வாளா விருந்தான் மருங்கு.

நளன் ஆடையை அரிந்தது

270. ஒற்றைத் துகிலு முயிரு மிரண்டாக
முற்றுந்தன் னன்பை முதலோடும்—பற்றி
அரிந்தா னரிந்திட் டவணிலைமை நெஞ்சில்
தெரிந்தா னிருந்தான் றிகைத்து.

ஒற்றை துகிலும் உயிரும் இரண்டு ஆக - அவர்கள் உடுத் திருந்த ஒற்றை ஆடையும், ஒன்றுபோற் சேர்ந்திருந்த அவ்விருவர் உயிரும் இரண்டாய்ப் பிரியுமாறு, தன் அன்பை - நளன் தான் தமயந்திபாற் கொண்டிருந்த அன்பை, முதலோடும் முற்றும் பற்றி அரிந்தான் - அடிவேரோடும் முழுவதும் பிடித்து அறுத்தான்; அரிந்திட்டு - அவ்வாறு அறுத்து விட்டு, அவள் நிலைமை - அத் தமயந்திக்கு இனித் தனியே இருப்பதால் ஏற்படும் துயரநிலை மையை, நெஞ்சில் தெரிந்தான் - மனத்தில் தெரிந்துணர்ந்தவனாகி, திகைத்து இருந்தான் - வேறு செயலின்றி அங்கு மயக்கமுற்று இருந்தான்.

முன் அவ்விருவருக்கும் ஆவிபோல் துகிலும் ஒன்றாயிருந்தது (252); இப்பொழுது அவை இரண்டாகி வேறுபட்டன என்க. முதல் - வேர் அல்லது அடி. தெரிந்தாணிருந்தான்: முற்றெச்சம். நளன் அவ்விருவரும் உடுத்திருந்த ஒற்றைத்துகிலை அறுத்தா னல்லன்; அவன், தமயந்திபாற் கொண்டிருந்த அன்பின் வேரையே அறுத்தான் என்று ஆசிரியர் கூறியது, வாலி இராமபிரானை நோக்கி, 'வாலியைப்படுத்தாயலை மன்னற, வேலி யைப் படுத் தாய்விறல் வீரனே' (கம்ப. கிட்கிந்தா. வாலிவதைப்: 89) என்று கூறியதை நினைப்பூட்டுகின்றது.

பி - ம். 1. முடலு மிரண்டாக. 2. னன்பின் முதலோடும்.
3. அரிந்தா னரியா டவணிலையை யெல்லாம்.
4. தெரிந்தான் றிரிந்தான். (102)

நளனது பிரிவுத்துயர்

271 போயொருகான் மீளும் புகுந்தொருகான் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த வடுபாலின்—தோயல்
கடைவார்தங் கைபோலு மாயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம்.

காலன் வடிவு ஆய - யமனே ஓர் உருக்கொண்டது போன்ற, வேலான் - வேற்படையையுடைய நளனது, மனம் - மனமானது, ஒரு கால் போய் மீளும் - ஒருமுறை தமயந்தியை விட்டு அப்புறம் சென்று மீண்டு அவள் படுத்திருக்கும் இடத்திற்கு வரும்; புகுந்து - அவ்வாறு திரும்பி வந்து, மீண்டு ஒருகால் ஏகும் - மறுபடியும் ஒரு தடவை அப்பாற் செல்லும்; (இது), ஆயர் கொணர்ந்த அடு பாலின் - இடையர் கொண்டுவந்த காய்ச்சிய பாலின், தோயல் - தோய்ந்த தயிரை, கடைவார் தம் - கடைகின்ற ஆய்ச்சியர்களுடைய, கை போல ஆயிற்று - கைகளைப்போல மாறிமாறி முன்னும் பின்னுமாக செல்லும் நிலையை யுடையதாயிற்று. ஏ : ஈற்றசை.

மனம், தோயல் கடைவார் தம் கை போல ஆயிற்று என முடிவு செய்க. காலன் வடிவாய வேல் : யமனே ஓர் உருவெடுத்து நளனது வேலாக வந்துள்ளனன் என்பதாம்; வேலுக்குக் காலனை ஒப்பிட்டது, அது பகைவர் உயிர்களைக் கவரும் கொடுமை பற்றி. நளன் மனம் தமயந்தியைப் பிரிந்து போகவும் துணியாது, இருக்கவும் விரும்பாது கொண்ட தடுமாற்ற நிலைக்குத் தயிர் கடையும் ஆயர்மகளிர் கைகள் உவமை ஆயின.

பி - ம். 3. கைபோலு நின்றுழலுங்,
கைபோலுங் காட்டிற்றே காலன், காட்டிற்றே காதல்.
4. வடிவான வேந்தன் மனம். (103)

272. சிந்துரத்தாட் டெய்வ முனிவன் றெரிந்துரைத்த
மந்திரத்தாற் றம்பித்த மாநீர்போல்—முந்த
ஒலித்ததேர்த் தானை யுயர்வேந்த னெஞ்சம்
வலித்ததே தீக்கலியால் வந்து.

சிந்துரம் தாள் - சிவந்த பாதங்களையுடைய, தெய்வ முனிவன் - தெய்வத்தன்மை வாய்ந்த முனிவராகிய ஆபஸ்தம்பர் என்பார், தெரிந்து உரைத்த - அறிந்து கூறிய, மாநீர் மந்திரத்தால் - மாட்சியுற்ற நீருடன் மந்திரத்தின் சக்தியினால், தம்பித்த போல் - ஓடாது அசையாது தடுத்து நிற்கச் செய்ததுபோல, முந்த - யாவற்றினும் முன்னிட்டதாக, ஒலித்த தேர்தானை - ஓசையை யுண்டாக்கிய தேர்ப்படைகளையுடைய, உயர் வேந்தன் நெஞ்சம் - சிறந்த அரசனை நளனது மனம், தீ கலியால் - கொடிய கலிபுருடனின் வலிமையால், வந்து வலித்தது - (தமயந்தியைப் பிரிந்து செல்ல எண்ணிய எண்ணம்) வந்து உறுதியுற்றது.

ஆபஸ்தம்பர் என்பவர் பண்டைக்காலத்துச் சிறந்து விளங்கிய இருடிகளில் ஒருவர். ஒரு சமயம் இம்முனிவரது பெருமையைச் சோதிக்கக் கருதிய இந்திராதி தேவர்களிற் சிலர், சிராத்த தினத்தில் வேதியர் உருவில் இம்முனிவர் இருப்பிடத்தை அடைய அவர்களை இம்முனிவர் சிராத்தப் பிராமணர்களாக வரித்து ஆராதிக்கவே, அத்தேவர்கள், இடையே தம் தெய்வசக்தியால் மேலெழுந்து செல்லத் தொடங்கவும் அம்முனிவர், சிராத்த கருமம் தடை பெறுவதற்கு அஞ்சித் தன் கமண்டல பாத்திரத்தில் இருந்த நீரால் மந்திரித்து அவர்களைச் சுற்றி வளைத்து ஸ்தம்பிக்கச்செய்து அப்பாற் செல்ல வொட்டாமல் தடைப்படுத்தி விட்டார். அது கண்ட அத்தேவர், அவரது சக்திக்கு வியந்து அடங்கி யிருந்து, சிராத்தத்தை நிறைவேற்றிக் கொடுத்துத் தம் தெய்வ உருவையுங் காட்டி அம்முனிவர்க் கருள் செய்து சென்றனர் என்ற செய்தி ஸ்ரீமகாபாரதத்தில் கூறப்பெற்றுள்ளது. நீரால் அத்தேவர்களை ஸ்தம்பிக்கச் செய்த காரணத்தால், அம்முனிவருக்கு ஆபஸ்தம்பர் எனும் பெயர் நிலை பெறுவதாயிற்று. இம் முனிவரால் செய்யப் பெற்றதான வைதிக விதிகள் அடங்கிய நூல், ஆபஸ்தம்பஸ்மர்த்திரம் என்னப்படும். இஃதன்றி, வசிஷ்டமுனிவர் உபதேசித்த மந்திர வலியால் அவர் மாணாக்கரில் ஒருவர் கங்கை நீரை ஓடாமல் தம்பிக்கச் செய்து அக்கரை கடந்து சென்றதான மகாபாரதத்தில் உள்ள வேறொரு வரலாற்றையும் இதற்கு ஆதாரமாகக் கூறுவாரும் உளர். இவையன்றி விநாயகக்கடவுள் அருளால் நாரதமுனிவர் கங்கைநீரை அடக்கியதாக ஒரு வரலாற்றினை இதற்கு ஆதாரமாகச் சிலர் தம் உரையிற் காட்டியுள்ளார். அதில் சிந்துரத்தாள் என்பதற்கு யானைமுக விநாயகர் என்று பொருள் வலிந்து கொள்ள நின்றதாதலின் அது பொருத்தமாகத் தோன்றவில்லை. இதற்கு அகஸ்தியர் கடல்நீரை யடக்கியுண்ட வரலாற்றைக் கூறினுமாம் உளர்.

ஒரு சுவடியில் இப்பாடல் பின் வருமாறு காண்கிறது.

சிந்துரக் காற்றெய்வ முனிவன் சிறந்தளித்த
மந்திரத்தாற் றம்பித்த மாநீர்போல்—செந்தேன்
ஒலித்ததார் வேந்தற் குருகுகின்ற வுள்ளம்
வலித்ததே தீக்கலியால் வந்து.

பி - ம். 1. சிந்துரத்தாற் றேவ, சிந்துரக்காற் றேவ, சிந்துரத்தாட்டேவ, முனிவன்: சினந்துரைத்த, சிறந்துரைத்த.
2. —செந்தேன், முந்தி. 4. வன்கலியால் வந்து. (104)

273. தீக்கா னகத்துறையுந் தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதலன்போற் போகின்றேன் யான்.

'தீ கானகத்து உறையும் - கொடிய இக்காட்டில் வாழ்கின்ற, தெய்வம்காள் வன தேவதைகளே! வீமன் தன் - வீமராஜனது, கோ காதலியை - (அன்பிற்குரிய) அரசகுமாரியும், நீக்காத காதல் அன்பு மிக்காளை - என்பால் நின்றும் நீக்காத ஆசையும் அன்பும் மிகுந்தவளுமான தமயந்தியை, கார் இருளில் - கரிய இந்த இருட்டில், கை விட்டு - துறந்து, இன்று - இப்பொழுது, ஏதலன் போல் - ஓர் அயலான்போல, யான் போகின்றேன் - நான் செல்கின்றேன்; குறி கொண்மின் - நீவிர் இவளைக் குறிப்பாய்ப் பாதுகாத்துக் கொள் வீராக!' (என்று நளன் கூறிச் சென்றான் என முடிவு செய்க.)

நளன் தமயந்தியை இங்குத் தன் காதலியை என்று கூறுது வீமன் தன் கோக்காதலியை என்றது, அவள்பால் தன் அன்பைத் துறந்து செல்லத் துணிந்தமையால், தன் அன்பிற்குரியவளை என்று கூற மனக்கூச்சமுற்றும், மூன் 269 இல் முற்றும் தன் னன்பை முதலோடு அரிந்ததுபோல ஆடையை அரிந்தான் ஆதலானும் என்க. குறிக்கொள்ளுதல் உன்னிப்பாய்ப் பார்த்துக் கொள்ளுதல்; 'குறிக்கொண்டு காத்தி' (கம்ப. ஆரணிய: 423.) ஏதலன்; 239 உரை.

பி - ம். 1. தீக்கானத் துள்ளுறையுந். 2. —மீக்காதல்.
3. கைவிட்டிங் கேதனியே.
4. ஏதிலன்போ லேகின்றேன் யான். (105)

நளன் தமயந்தியை நீத்துச் சென்றது

274. ஏந்து மிளமுலையா ளின்னுயிருந் தன்னருளும்
பூந்துகிலும் வேருகப் போயினான்—தீந்தேன்
தொடைவிரவு நாண்மாலை சூட்டினா டன்னை
இடையிருளிற் கானகத்தே யிட்டு.

(நளன்) தொடை விரவு - பலவிதமாய்த் தொடுக்கப்பெற்ற, தீம் தேன் நாண் மாலை - இனிய தேன் பொருந்திய புதிய சுயம்வர மணமாலையை, சூட்டினாள் தன்னை - தனக்கே தேர்ந்து சூட்டிய தமயந்தியை, இடை இருளில் - அந்நள்ளிரவுப் போதில், கான கத்தே - அக்காட்டினிடத்தே, இட்டு - தனியே இருக்க விட்டு,

விட்டு, ஏந்தும் இளமுலையாள் - நிமிர்ந்த இளமையான தனங்களை யுடைய அத்தமயந்தியின், இன் உயிரும் - இனிய உயிரும், தன் அருளும் - தன்னுடைய இரக்கக்குணமும், பூம் துகிலும் - அழகிய ஆடையும், வேறு ஆக - தனித்தனியே பிரிய, போயினன் - சென்றான்.

ஏந்துமிள முலையாள் - (பாரத்தைத்) தாங்கி நிற்கும் இளமை யான தனத்தினள் என்னலும் ஏற்கும். முன் அவர்களுக்கு ஆடையு முயிரும் ஒன்றாக இருந்தன: இப்பொழுது அவை இரண்டு என்று சொல்லும்படி வேறுயின என்பதாம். தன்னருளும் - இதுகாறும் தனக்கு உரியது என்ற பேதமற்று அவள்பால் நளன் கொண்டிருந்த ஒன்றுபட்ட அருள்; இப்பொழுது தன் நலனை நாடுவானாக அவளைத் துறந்தானதலின், அவ்வருள் கூட வேறாகி யது என்க. இருவர்க்கும் ஒன்றாயிருந்த ஆடையை அரிந்த செயல், ஒன்றாயிருந்த அவ்விருவர் உயிரையும் அன்பையும் கூட அரிந்ததாயிற்று. 'இன்னுயிருந் தன்னருளும் பூந்துகிலும் வேறாக' இஃது உடனவிற்சியணியாகும்; ஒப்பு. கம்ப. சுந்தர: 544. இதில் உள்ள உம்மைகள், எண்ணும்மைகள்.

பி - ம். 1. ஏந்து முலையாட னின்னுயிரும், இன்னுயிரும் தன்னுயிரும்.
2. வேறாக்கிப் போகினான்.
3. தொடைவிரவு தார்மாலை; தொடைபரவு தார்மாலை.
4. இடையிரவிற்.

(106)

275. தாருவெனப் பார்மேற் றருசந் திரன்சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போல்—கூரிருளிற்
செங்கா னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினான்
வெங்கா னகந்தனிலே வேந்து.

வேந்து - அரசனான நளன், பார்மேல் - இப்பூமியின்மீது, தாரு என - (விண்ணில் உள்ள) கற்பகத் தருப்போன்று, சந்திரன் சுவர்க்கி - சந்திரன் சுவர்க்கி என்னும் பெயருடைய, மேரு வரை தோளான் - மேருமலை போன்ற (நிமிர்ந்துயர்ந்த) தோள்களையுடைய வனை, விரவார் போல் - சேராத பகைவர்களைப்போல, கூர் இருளில் - மிகுந்த அவ்விருட் போதில், வெம் கானகம் தனிலே - அக்கொடிய காட்டிலே, செம் கால் நகம் சிதைய - தனது சிவந்த பாதத்தின் நகங்கள் தேய அல்லது தெறித்துப் பிளவுபட, தேவியை விட்டு ஏகினான் - தன் மனைவியாகிய தமயந்தியை விட்டுச் சென்றான்.

தரு என்பது தாரு என நீண்டது விகாரம். பார் மேல் தாரு : இல் பொருள் உவமை; கற்பகம் கேட்போர் விரும்பியதை யளிக்கும் ஒரு மரம். இது தேவலோகத்தில் உள்ள ஐந்தருக்களில் ஒன்று ;

ஐந்தருக்கள் :—

சந்தான மோடரிச் சந்தனங் கற்பகம்
மந்தாரம் பொன்னெய் மலர்ந்திலகுங்—கொந்தாரும்
பாரிசாத மாகப்படர் விசும்பிலார் கோமான்
சிரிலகு மைந்தருவாய்த் தேர்'

என்பதால் அறியலாம். விரவார் - பகைவர்; (விரவுதல் - கலந்து பழகுதல்); அதில்லாது விலகியவர் பகைவர்; அடையார், ஒன்னார் நேரார் என்பனபோல. செங்கால் நகம் சிதைய : இருட்டில், கல்லும் முள்ளுமடர்ந்த காட்டில் வழியறியாது சென்றதால் கால்இடறி நகங்கள் பெயர்ந்து சிதைவுற்றன என்பதாம். ஆசிரியர் புகழேந்தியார் தம்மை யாதரித்த சந்திரன்சுவர்க்கி என்பானை உபகாரஸ்மிருதியாகத் தம் கடப்பாட்டின் சிறப்பை நிலைநாட்டிய பல செய்யுள்களில் இதும் ஒன்றாகும்.

பி - ம். 2. விரவலர்போல், விரைவான்போல்,—ஆரிரவில், ஆரிருளில்.
4. வெங்கானகத்தனியே வேந்து. (107)

தமயந்தி விழித்துக்கொண்டு நளனைக் காணாது வருந்தியது

276. நீல மளவே நெகிழ நிரைமுத்தின்
கோல மலரின் கொடியிடையாள்—வேல்வேந்தே
எங்குற்ரு யென்ன வினவனைக்கை நீட்டினாள்
அங்குத்தான் காண தயர்ந்து.

நிரை முத்தின் - வரிசையாக அமைக்கப்பெற்ற முத்துக்களைப் போல, கோல மலரின் - அழகிய மலர்களையுடைய, கொடி இடையாள் - கொடி போன்ற இடையையுடைய தமயந்தியின், நீலம் அளவே நெகிழ - நீலோற்பலம் போன்ற கண்கள் தூக்கத்தினின்றும் சற்று நெகிழ்ச்சியடைந்து திறக்க, அங்கு தான் காணாது - (நளனை) அங்குக் காணாமல், அயர்ந்து - தளர்ச்சியுற்று வருந்தி, 'வேல் வேந்தே - வேலேந்திய அரசனே! எங்கு உற்றாய் என்ன - நீ எங்கு இருக்கின்றாய்?' என்று, இன வளை கை நீட்டினாள் - (கூட்டமான) பல வளையல்களை அணிந்த தன் கைகளை நீட்டித் தடவிப் பார்த்தாள்,

நிரைமுத்தின்.....கொடியிடையாள் : தமயந்தி முத்துக்களால் அமைந்த மேகலாபரணம் அணிந்திருந்த இடை பூக்கள் நிரையாய்ப் பூத்து விளங்கிய ஒரு பூங்கொடிக்கு உவமை யாக்கப் பெற்றது எனலும் ஆம். நீலம் - நீலோற்பல மலர்; இவை இங்குத் தமயந்தியின் கண்களுக்கு உவமை ஆகுபெயராக உள்ளன. நீலமலவே - நீலோற்பலம் போல; அளவே என்பது இங்குச் சொல்லுருபாகவும் கொள்ளலாம். இனவீர : இனம், இங்குக் கூட்டம் அல்லது மிகுதி என்னும் பொருளில் உள்ளது; ஒரே வகையான பல வீயல்கள் எனக் கூறினுமாம்.

"நீடிய துயில்சிறி துணர்ந்த நேரிழை
ஆடகத் தொடிக்கையா லணைக்கக் காண்கிலாள்
ஊடினள் பதைத்தன ளுயிர்ப்பு வீங்கினள்
தேடினள் காந்தளுஞ் செங்கை நீட்டியே"

(நைடதம் பிரிவுறு : 10) இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

இதன்பின், அச்சுப்பிரதிகளிலும், சில ஏட்டுப்பிரதிகளும்,

உடுத்த துகிலிரிந்த தொண்டொடியாள் கண்டு
மடுத்த துயிலான் மறுகி—அடுத்தடுத்து
மன்னே யெனவழைத்தாண் முற்றுமவ னேக்காணு
தென்னேயிஃ தென்னேயிஃ தென்று.

என்று ஒரு பாடல் காணப்பெறுகின்றது. ஆனால் இது பழைய ஏடுகளில் இல்லை.

பி - ம். 1. நீல மெனவே நெகிழ்ந்த.
2. கோல மணிய கொடியிடையாள்; கோலமருவுங் கொடியிடையாள்; குமிழங் கையாள், குளிர் நகையாள்; வேல் வேந்தன்.
3. எங்குற்ரு னென்ன.
4. அங்கேதான் காணு தயர்ந்து. (108)

277. வெய்ய தரையென்னு மெல்லமளி யைத்தடவிக்
கையரிகொண் டெவ்விடத்துங் காணுமல்—ஐயகோ
என்னப்போய் வீழ்ந்தா லினமேதி மென்கரும்பைத்
தின்னப்போ நாடன் றிரு.

மேதி இனம் - எருமைக் கூட்டங்கள், மெல் கரும்பை - மென்மையான கரும்புகளை, தின்ன போம் - தின்னச்செல்லும், நாடன்

திரு - வளம் பொருந்திய விதர்ப்ப நாட்டையுடைய வீமராஜன் செல்வ மகளான தமயந்தி, மெல் அமளி என்னும் - மென்மையான படுக்கை என்னத் தான் படுத்திருந்த, வெய்ய தரையை - கொடிய தரையை, கை அரி கொண்டு தடவி - கைகளால் சுற்றிலும் தடவிப் பார்த்து, 'ஐயகோ என்ன போய் வீழ்ந்தாள் - ஐயோ!' என்று வாய்விட்டு அலறிக் கீழே விழுந்தாள்.

இனமேதி : மேதியினம் என மாற்றுக. கையரி கொள்ளல் - தடவி அரித்துப் பார்த்தல்; 'பிள்ளீமீன் புள்ளரிக்கும்' (93) என்றமை நோக்குக. ஐயகோ : ஐயோ என்பதின் இடையே, ககரம் எழுத்துப்பேறு; இஃது ஐயவோ எனவும் வரும்.

பி - ம். 2. டோரிடத்துங் காணுமல், காணுளாய்.
3. என்னுப் போய் வீழ்ந்தாள்; இளமேதி.
4. தின்னுப்போம் நாடன் றிரு. (106)

278. அழல்வெஞ் சிலேவேட னம்புருவ வாற்ரு
துழலுங் களிமயில்போ லோடிக்—குழல்வண்
டெழுந்தோட வீழ்ந்தா லிருகுழைமேற் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி.

வீமன் கொடி - வீமராஜன் பெற்ற கொடி போன்ற தமயந்தி, வெம் சிலே வேடன் - கொடிய வில்லையுடைய ஒரு வேடனது, அழல் அம்பு உருவ - நெருப்புப் போன்ற கொடிய அம்பு தன் மீது ஊடுருவிப்பாய, ஆற்றாது - அதனைத் தாங்க முடியாமல், உழலும் - அங்கு மிங்கும் தள்ளாடி அலையும், களி மயில் போல் - மயக்கமுற்ற ஒரு இளமயிலே போல, ஓடி - அங்கு மிங்கும் ஓடி, குழல் வண்டு எழுந்து ஓட - கூந்தலில் மொய்த்திருந்த வண்டுகள் அதிர்ச்சியுற்று மேலே எழுந்து ஓடவும், இரு குழைமேல் கண்ணீர் கொழுந்து ஓட - தன் காதுகளில் அணிந்திருந்த குழைகளின் மீது கண்களினின்றும் நீர்த்துளிகள் பெருகி விழுந்து ஓடவும், வீழ்ந்தாள் - கீழே விழுந்து அழுவாளாயினள்.

அம்பால் அடிபட்ட மயில்; 'ஏவுறு மஞ்ஞையி னடுங்கி,' (முல்லைப். 84); 'ஏவுறு மஞ்ஞையி னினைந்தடி வருந்த' (மணி. 7 : 127). களி மயில் - செழுமையாய் வளர்ந்த மயிலும் ஆம். குழைமீது கண்ணீர் விழுதல்; ஒப்பு : 'ஊசற் குழைமீது வெள்ள வாணீர் சோர

விட்டு' (84). குழல் வண்டு எழுந்தோடினமை, தமயந்தி துயரால் ஓடி விழுந்து அழுத அதிர்ச்சியால் வெருண்டு.

பி - ம். 2. தழலுந் தனிமயில்போல்.
4. கொழுந்தோட வீழ்ந்தாள் குலைந்து ; குழைந்து. (110)

279. வான்முகிலு மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல்
தானுங் குழலுந் தனிவீழ்ந்தாள்—ஏனம்
குளம்பான் மணிகீளக்குங் குண்டுநீர் நாடன்
இளம்பாவை கைதலைமே லிட்டு.

ஏனம் - பன்றிகள், குளம்பால் மணி கிளைக்கும் - தம் காற் குளம்புகளால் கிழேயுள்ள இரத்தினங்களைக் கிளறி மேலே வரச் செய்யும், குண்டு நீர் நாடன் - ஆழமான நீர் நிலைகளை யுடைய விதர்ப்ப நாட்டரசனை விமனது, இளம் பாவை - பாவை போன்ற இளமைப் பருவத்துப் புதல்வியான தமயந்தி, கை - தனது கைகளை, தலைமேல் இட்டு - தன் தலைமீது வைத்துக் கொண்டு, வான் முகிலும் மின்னும் - வானில் உள்ள (கரு) மேகமும் மின்னலும், வறு நிலத்து வீழ்ந்தது போல் - வறண்ட தரைமீது வீழ்ந்த தோற்றம் போல, தானும் குழலும் தனி வீழ்ந்தான் - அவளும், அவள் கூந்தலுமாக ஒரு தனிப்பட்ட (துயர) நிலையில் கிழே விழுந்தாள்.

ஏனம் குளம்பால் மணி கிளைக்கும்; பன்றிகள் தம் காற் குளம்புகளாலும், தம் வலிய முகவாய்ப் பற்களாலும் சேற்றைக் கீழ்மேலாகக் கிளறும் தன்மையன; அவ்வாறு அவை சேற்றைக் கிளறும்போது இயல்பாய் அடியிற் படிந்துள்ள இரத்தினங்கள் மேலே வந்து மிளிரும் தன்மையுடையது அவ்விதர்ப்பநாடு என அந்நாட்டின் வளத்தைச் சிறப்பித்தது. குண்டு நீர் - ஆழ்ந்த நீரையுடைய இடம்; 'குண்டு நிரிலஞ்சி'; (குறுந். 91 : 2); 'குண்டுநீர்க் குமரித் தெண்டிரை யாடி' (பெருங். 2 : 20 : 82); 'குண்டுபடு பேரகழி' (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். 55) .வான்முகிலும் மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோல; முகில் தமயந்தியின் கூந்தலுக்கும், மின் அவளது திருமேனிக்கும் உவமைகள்; குழலுந் தானும் எனப்பாலது, தானுங் குழலும் என மாறிவந்தமையால், இஃது எதிர் நிரனிறையணி; 'தானுங் குழலுந் தனிவீழ்ந்தாள்' சிறப்பின்பாலாய், குழல், விழுந்தாள் என உயர்திணையில் முடிந்தது; இங்கு வினை முதல் சினையைக்கொண்டு முடிந்தது; (நன். வினையியல் : 26) இஃது எதிர் நிரனிறையணியும், திணைவழுவமை

தியும் ஆம். தனி வீழ்ந்தாள்; தானெரு புறமும், குழல் ஒரு புறமுமாகச் சோர்ந்து கிடக்க விழுந்தாள் என்னலும் ஆம். கைதலைமே லிட்டு; கை தலைமேலிடுதல்; சோக நிலையை யுணர்த்தும் மெய்ப்பாடு. கூந்தலொடு விழுந்தாள். கம்ப. 'கோதையோடு மொசிகொம்பென விழுந்தனள்' (கம்ப. ஆரணிய : 39).

பி - ம். 1. வீழ்வதுபோல். 2. தரைவீழ்ந்தாள்.
3. கோதறுசீர் நாடன். (111)

பொழுது புலர்ந்தமை

280. தைய லுயர்க்குத் தரியாது தஞ்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனே
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்.

கோழி குலம் - கோழியின் கூட்டம், தையல் துயர்க்கு தரியாது - தமயந்தியின் துன்பங் கண்டு அதற்கு மனம் தாளாமல், தம் சிறகு ஆம் கையால் வயிறு அலைத்து - தமது சிறகுகள் என்னும் கைகளால் தம் வயிறுகளில் அடித்துக் கொண்டு, வெய்யோனே - சூரியனே, 'வாவு பரி தேர் ஏறி - தாவியோடும் குதிரைகள் பூட்டிய தேர்மீது ஏறி, வா என்று - வருவாயாக!' என்று, அழைப்பன போல் - கூப்பிடுவனபோல, கூவின - கத்தின.

கோழிக் குலம் என்று பொதுவாகக் கூறப்பெற்றாலும் கூவுவது சேவல்களே ஆதலால் இஃது ஒன்றைழி பொதுச்சொல் எனக. ஆபத்து வேளையில் கூவுவோர் தம் வயிற்றில் கைகளால் அடித்துக் கொள்ளும் இயல்பை உணர்த்தியது; பறவைகளுக்கு அவற்றின் சிறகுகளே கைகளாகக் கொள்ளப்பட்டன; கோழிகள் விடியற்காலையிற் கூவும் இயல்பை இங்குச் சரித்திரத்திற்கு இயைய, அவை சூரியனைக் கூவி தமயந்திக்கு உதவிபுரிய அழைத்தன என்று கூறியது தற்குறிப்பேற்ற அணி.

ஒப்பு :

1. எண்ட ருங்கடை யென்ற யாம
மியம்பு கின்றன வேழையால்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன்
மயங்கி விம்மிய வாறெலாம்

கண்டு நெஞ்சு கலங்கி யஞ்சிறை
யான காமர் துணைக்கரம்
கொண்டு தம்வயி றெற்றி யெற்றி
விளிப்ப போன்றன கோழியே.

(கம்ப. அயோத். கைகேசி சூழ்வினைப் : 47)

'மருவினிய குணத்தவரை யிருசிறகா லுறத்தழுவி' (கம்ப. ஆரணிய. 203).

2. மையலுங் கங்குலு மதியும் வாட்டவிவ்
வையனே வெளியனென் றணிவ யிற்றினில்
கையினு லறைந்துகூய்க் காமர் வாரணம்
வெய்யவா விரையவா வெனவி ளித்தவே.

(அரிச்சந். விவாக : 89)

பி - ம். 3. வாவென் றழைப்பது போற்,
வாவினதே ராணவருகென் றழைப்பன போற்.
4. கூவினதே கோழிக் குரல். (112)

சூரியோதயம்

281. வான நெடுவீதி செல்லு மணித்தேரோன்
தான மடந்தைக்குத் தார்வேந்தன்—போனநெறி
காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்கக் கானூடே
நீட்டுவான் செங்கரத்தை நின்று.

வான நெடு வீதி செல்லும் மணி தேரோன் தான் - வானுகிய நெடிய வழியே செல்லும் அல்லது சிறந்த தேரை யுடைய சூரியன் தானும், அ மடந்தைக்கு - தமயந்தியாகிய அப்பெண்ணுக்கு, தார் வேந்தன் - மாலையணிந்த அரசனை நளன், போன நெறி - சென்ற வழியை, காட்டுவான் போல் - குறிப்பிட்டுக் காட்டுபவனைப் போல, இருள் போய் கை வாங்க - இருட்டானது பின்னிட்டு ஓட, செம் கரத்தை - தனது சிவந்த கிரணங்களாகிய கைகளை, நின்று நீட்டு வான் - உதயமாகி நின்று நீட்டிக் காட்டுவானனன்.

வீதி - வழி : 'வீதி யெலாந் தென்றன் மதுநீர் தெளித்து' (23) என்றமை நோக்குக.

மணித்தேரோன்தான்: தான் என்பதை அசையாசவும் கொள்ளலாம். அ + மடந்தைக்கு : அம்மடந்தைக்கு எனப்பாலது, செய்

யுளின் எதுகை ஓசை நயம் நோக்கி இயல்பாய் நின்றது. கைவாங்குதல் - விட்டு நீங்கிப்போதல். நீட்டினுன் செங்கரத்தை: சூரியனுக்குக் கரங்களாவன அவன் கிரணங்களே யாம். நின்று என்பதற்கு உதயகிரிமேல் நின்று எனவும் கொள்ளலாம்.

இதன்பின் அச்சுப் பிரதிகளில்,

'செய்தபிழை யேதென்னுந் தேர்வேந்தே யென்றழைக்கும்
எய்து துயர்க்கரைகா ணெனென்னும்—பையவே
என்னென்னு தென்னென்னு மிக்கானில் விட்டேகு
மன்னென்னு வாடு மயர்ந்து.

என்றொரு பாடல் காணப்பெறும். இது பழைய ஏடுகளில் இல்லை.

மேலும், ஒரு பிரதியில் இதன்பின் அடியிற் காணும் ஓர் அதிகப்பாடல் உள்ளது.

'கன்னி யிளமான் கணையோ டுழல்கின்ற
தென்ன வருவா ளிடைநெறியில்—மன்னன்
அடிக்கண்டாள் காண்டலுமே யவ்வடிமேல் வீழ்ந்தாள்
வடிக்கண்டான் நீர்சோர வந்து.

பி - ம். 2. போனவிடங். 3. காட்டுவான் பேரிருள் போய்க்.....
4. நீட்டினுன் செங்கரத்தை, நீட்டினுன் செங்கதிர்க்கை. (113)

தமயந்தி நளன் அடிச்சுவடு கண்டு வருந்தியது

282. அல்லியந்தார் மார்ப னடித்தா மரையவடன்
நல்லுயிரு மாசையும்போ னுறுதலும்—மல்லுறுதோள்
வேந்தனே யென்னு விழுந்தாள் விழிவேலை
சாய்ந்தநீர் வெள்ளத்தே தான்.

அல்லி அம் தார் மார்பன் - அகவிதழ்கள் அமைந்த பூக்களால் ஆன அழகிய மாலை யணிந்த மார்பையுடைய நளனின், அடி தாமரை - திருவடிகளான தாமரை மலர்களின் சுவடுகள், அவள் தன் - அத்தமயந்தியின், நல் உயிரும் ஆசையும் போல் - சிறந்த உயிரும் மேம்பட்ட அந்நளனிடத்து வைத்த ஆசையும் போல, நாறுதலும் - ஆங்கு ஓரிடத்தே தோன்றியதும், விழி வேலை - அவளுடைய விழிகளாகிய கடலினின்றும், சாய்ந்த - சரிந்து விழுந்த, நீர் வெள்ளத்தே - கண்ணீர் வெள்ளத்திடத்தே, 'மல் உறு தோள் வேந்தனே என்னு - மற்போரில் தேர்ச்சியுற்ற தோட்களையுடைய

ஏ அரசனே!' என்று கூவி அழைத்து, போய் விழுந்தாள் - போய்க் கீழே விழுந்தழுதாள். தான் : அசை.

அல்லி - அகவிதழ்; பூந்தாதுக்களும் ஆம்; (பிங்.); 'அல்லியம் பூம் மலர்க் கோதாய்' (பெரியாழ்வார். 3. 10 : 2); 'அல்லியங்கமலமே யனைய செங்கணேர் வில்லி" (கம்ப. சுந்தர : 1116). அடித்தாமரை : இங்கு உபமேயம் உபமானத்தை வென்றது. விழிக்கு வேலை; 'கடலினும் பெரிய கண்கள்' (கம்ப. ஆரணிய : 623); 'விழி வேலையு மாங்கிருப்ப' (வெங்கைக்கோவை. 20.)

பி - ம். 3. வேந்தவோ வெண்ணப் போய். (114)

தமயந்தி, மயில் முதலியவற்றை நோக்கி 'நளன் சென்ற வழி காட்டீர்' எனக் கூறியது

283. வெறித்த விளமான்காண் மென்மயில்கா ளிந்த
நெறிக்க ணெடிதூழி வாழ்வீர்—பிறித்தெம்மைப்
போனரைக் காட்டுதீரோ வென்னப் புலம்பினாள்
வானடர் பெற்றிலா மான்.

வான் நாடர் பெற்று இலா மான் - வான நாட்டினரான இந்திரன் முதலிய தேவர்களும் அடையப் பெறுத, மான் போன்ற தமயந்தி, (அவ்வனத்திலிருந்த மான் முதலிய விலங்குகளை நோக்கி), 'வெறித்த இள மான்காள் - அச்சத்தால் திகைத்து வெறிப்புற்று நிற்கும் இளம் மான்களே! மென் மயில்காள் - மென்மை பொருந்திய மயில்களே! இந்த நெறி கண் - இந்த வழியிடத்தே, நெடிது ஊழி வாழ்வீர் - நெடுங்காலமாக நீங்கள் வாழ்கின்றவர் ஆவீர்; (ஆதலால்), எம்மை பிறித்து போனரை - என்னையும் என் மக்களையும் தனியே விட்டுப் பிரிந்து போன எம் தலைவரை, காட்டுதிரோ - எனக்குக் காட்டுவீரோ?' என்னு புலம்பினாள் - என்று புலம்பி அழுதனள்.

வெறித்தல் - அச்சத்தால் தம்பித்து நிற்றல்; 'வெறித்து நின்றுலக மெல்லாம் விம்முறுகின்ற வேலை' (கம்ப. ஆரணிய : 1007); 'கோலவெறிப்பினல் மாலை வண்டினம் மாலைக்கண் கொண்டவே' (சீவக. 2397). நெடி தூழி : இங்கு ஊழி என்பதற்குக் காலத்தின் நெடுமையை மிகுதிப்படுத்திக் கூறியது. பிறித்து : வேருக்கி; அதாவது பிறிதாகச் செய்து என்பதாம். இச்செய்யுள் போல நைடதத்திலும் தமயந்தி,

"வாவு மிளமான்கள் மயில்காண் மடப்பிடிகள்
கூவுங் கரிய குயில்காண்மென புள்ளினங்கள்
ஆவி யெனமேவி யகலே மெனையகன்ற
காவலன்ருன் போனவழி யெனக்குக் காட்டீரோ"

(நைடதம் பிரிவுறு : 18) என வருந்திக் கூறியதாக உள்ளமை நோக்குக. இவ்வாறே பிரிவுறு துயரால் வருந்தும், தலைவன் தலைவியர், தம் எதிர்ப்பட்ட அஃறிணைப் பொருள்களையும் விளித்துக் கூறும் இயல்பு கம்பராமாயணத்தும் பிற காப்பியங்களிலும் பரக்கக் காணலாம்.

பி - ம். 3. போனுரைக் காண்டுதிரோ ; காட்டீரோ,ரா
போனுரைக் காணீரோ ; என்னப் புலம்பினுள். (115)

ஒரு பாம்பு தமயந்தியைப்பற்றி விழுங்கலுற்றது

284. வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியால்
மோட்டு வயிற்றரவு முன்றேன்ற—மீட்டதனை
ஓரா தருகணைந்தா ளுண்டே னறற்கூந்தல்
போரார் விழியாள் புலர்ந்து.

தேன் உண் அறல் கூந்தல் - வண்டுகள் வந்து தேனை உண்ணும் நுண்ணிய கருமணல் படிந்தன போன்று படிப்படியாய் உள்ள கூந்தலையும், போர் ஆர் விழியாள் - எதிர்ப்பட்டோரோடு போரிடுவதுபோல் கூர்மையும் ஒளியும் பொருந்தி விளங்கும் விழிகளையுடைய தமயந்தி, புலர்ந்து - வாட்டமுற்று, வேட்ட - வேட்டையாடி வளைத்துப் பற்றிக்கொண்ட, கரியை விழுங்கி - யானையை விழுங்கி, மோட்டு வயிற்று அரவு - அதனால் உயர்ந்து விளங்கும் வயிற்றையுடைய ஒரு மலைப்பாம்பு, முன் தோன்ற - தன் முன்னே வர, அதனை மீட்டு ஓராது - அப்பாம்பை இன்னது என்று திரும்பிப் பார்த்து அறிந்து கொள்ளாமல், அருகு அணைந்தாள் - அதன் அருகே சென்றுள்.

வேட்ட கரியை : தான் விரும்பிய யானையை என்றுரும் உளர். கரியை விழுங்கிப்.....மோட்டு வயிற்றரவு : பெரிய யானையை விழுங்கியும் தணியாத பெரும் பசியையுடைய உயர்ந்த வயிற்றையுடைய பாம்பு என்றமையால், அப்பாம்பின் பசியின் மிகுதியையும் அதன் வலிமையையும் குறிப்பிட்டதாகும், இவ்விதம் பாம்புகள் முதலிய சில பிராணிகள் உருவில் தம்மினும் பெரியதான விலங்குமின் முதலியவற்றைப் பற்றித் தம் வயிற்றுள் அடக்கும் விதமாய்

அவற்றின் உடல்கள் அகன்று விரிந்து கொள்ளும் இயல்புடையன என்பதும், அவ்வாறு உண்டவற்றை அவை மெதுவாகப் பின் சிரணஞ் செய்யும் என்பதும், பின் பல நாட்கள் பசியெடுக்காமலே அசைவற்றுக் கிடந்து உறங்கும் என்பதும் உயிர்நூற் புலவர்கள் அறிந்து வெளியிட்டுள்ளமை ஆம்.

இத்தகைய நிகழ்ச்சிகள்,

"புழுங்குவெம் பசியொடு புரளும் போரரா
விழுங்கவந் தெழுந்ததிர் விரித்த வாயின்வாய்
முழங்குதிண் கரிபுகு முடுகி மீமிசை
வழங்குவெங் கதிர்சுட மறைவு தேடியே"

(கம்ப. பால. தாடகைவதைப். 11); 'மழைமுதமா வடங்கு பேரெயிற் றரவு' என, (அயோத். சித்திரகூடப்: 4) இவற்றுல் விளங்குவன காண்க.

ஒரு பிரதியில் இச்செய்யுள் அடியிற் காணுமாறு திரிந்து காண்கிறது.

வேட்டந் திரிந்துழலும் வேழத்தை யும்விழுங்கி
வாட்டந் தணியாத மாண்பசியால்—மீட்டுமுரு
மாஞைஞ் சேரும் வனமென் றறியாதே
ஆஞது சேர்ந்தா ளணங்கு.

பி-ம். 1. உண்டேனைக் கூந்தல். 4. நறைகமழ; புரிந்து. (116)

285. அங்கண் விசும்பி னவிர்மதீமேற் சென்றடையும்
வெங்க ணரவுபோன் மெல்லியலீக்—கொங்கைக்கு
மேலெல்லாந் தோன்ற விழுங்கியதே வெங்கானின்
பாலெல்லாந் தீயுமிழும் பாம்பு.

வெம் கானின் பால் எல்லாம் - அக்கொடிய காட்டின் இடமெங்கும், தீ உமிழும் பாம்பு - தீப்போன்ற கொடிய விஷத்தைக் கக்கும் அப்பாம்பு, அம் கண் விசும்பின் - அழகிய இடமுடைய ஆகாயத்தினிடத்து, அவிர் மதி மேல் சென்று அடையும் - ஒளி விளங்கும் சந்திரன் மீது அதனைப்பற்றி விழுங்கச்செல்லும், வெம் கண் அரவு போல் - கொடிய கண்களையுடைய இராகு என்னும் பாம்பைப் போல, மெல்லியலை - மென்மையான தமயந்தியை, கொங்கைக்கு மேல் எல்லாம் தோன்ற விழுங்கியது - கொங்கைகளுக்கு மேலுள்ள கழுத்து முகம் முதலிய பாகங்கள் மட்டும் தெரிய மற்ற அங்கங்களையெல்லாம் விழுங்கி விட்டது. ஏ: அசை.

அங்கண் விசும்பு : 'அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்'; (நாலடி. 151). மெல்லியல் : பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. பாம்புக்கு இராகு என்னுங் கருங்கோளும், அவிர்மதிக்குத் தமயந்தியின் முகமும் உவமைகள்.

பி - ம். 1. னவிர்மதியென் றையுற்று ; சென்றடைந்த.
2. வெங்க ணரவந்த மெல்லியல்தன்,
வெங்கணர வந்தான்.
4. பாலெல்லாம் நஞ்சுமிழும் பாம்பு. (117)

தமயந்தி நளன் உதவிநாடி யழுதது

286. வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவநின்
தாளடைந்து வாழுந் தமியேனைத்—தோளால்
விலக்காயோ வென்றழுதாள் வெவ்வரவின் வாய்க்கங்
கிலக்காகி நின்ரு ளெடுத்து.

அங்கு - அவ்வனத்தில், வெம் அரவின் வாய்க்கு - கொடிய அந்தப் பாம்பின் வாய்க்கு, இலக்கு ஆகி நின்ருள் - குறியாகி இருந்த அத்தமயந்தி, 'மன்னவ - (நளனைக் குறிப்பிட்டு), ஏ அரசனே! நின் தாள் அடைந்து வாழும் - உன் திருவடிகளை அடைந்து நீயே கதி என்று வாழும், தமியேனை - இப்பொழுது அநாதரவாய்த் தனியே உள்ள என்னை, வாள் அரவின் வாய் பட்டு மாளா முன் - (வாள் போன்ற) கொடிய இப்பாம்பின் வாயினிடம் அகப்பட்டு இறந்து போகும் முன்னம், தோளால் விலக்காயோ என்று எடுத்து அழுதாள் - நின் தோள் வலிமையால் அதனிட மிருந்து பறித்து இத்துயரினின்றும் விலக்கி என்னை ஆளமாட் டாயோ?' என்று உரத்துக் கூறி அழுதாள்.

தாளடைந்து வாழும் தமியேன்; 'கண்டா ரிகழ்வனவே காதலன்ரு செய்திடினுங் கொண்டானை யல்லாலறியாக் குல மகள்' (பெருமாள்திருமொழி. 5 ; 2) என்றதுபோல உத்தமக்கற்பிற்கு -அருங்கலமான தமயந்தி அக்கொடிய பாம்பின் வாய்ப்பட்டு ஆவி இழக்கும் நிலையிருந்த அந்நேரத்திலும், 'உன்பற்றே யல்லாற் பிறி தோர் பற்றில்லை யுடையவனே' என்றவாறு, அந்நளனையே பற்றுக் கொண்டு அவனை வேண்டி முறையிட்டாள் என்க. இதனாலன்ரே, மிதிலைநாடியாகிய பிராட்டியாரும், தமயந்தி போன்ற கற்பின் நெறி தனக்கு அமைய வேண்டுமென இவளது கற்பின் சிறப்பை ஏற்றிப் போற்றுவாளாயினள்; (வான்மீகம். சுந்தர

காண்டம் சருக்கம் : 24 இல் காண்க) வாளரவு - கொடிய அரவு; வாளரக்கன் என்பது போல. இனி ஒளி தங்கிய அரவு என்றுரும் உளர். இவ்வரவு, கரும்பாம்பாகிய இராகுவுக்கு உவமை ஆக்கப் பெற்றதால், (285) உரை ; வாள் என்பதற்கு, ஒளி பொருந்தியது என்பதைவிடக் கொடுமையுடையது என்பதே இங்குச் சிறக்கும்.

பி - ம். 1. மாளாமுன் மன்னுநின், மாளாமுன் வண்கமலத் ; மாயமே மன்னவனின்.
3. வென்றுரைத்தாள் வெவ்வரவின் றீவாய்க்.
4. இலக்காக நின்றுள். (118)

287. வென்றிச் சினவரவின் வெவ்வா யிடைப்பட்டு
வன்றுயராற் போயாவி மாள்கின்றேன்—இன்றுன்
திருமுகநான் காண்கிலேன் றேர்வேந்தே யென்றுள்
பொருமுகவேற் கண்ணாள் புலர்ந்து.

பொருமுக வேல் கண்ணாள் - போரிடத்து விளங்கும் வேல் போன்ற ஒளியும் உருவும் அமைந்த கண்களையுடைய தமயந்தி, புலர்ந்து - வாடிச் சோர்ந்து, 'தேர் வேந்தே - தேரைச் செலுத்தும் மகாவீரனை அரசனே ! வென்றி சின அரவின் - வெற்றி கொள்ளும் தன்மையுடைய கோபமிக்க இந்தப் பாம்பின், வெம் வாய் இடைப்பட்டு - கொடிய வாயினிடத்தே அகப்பட்டு, வன் துயரால் - கொடிய துன்பத்தால், ஆவி போய் மாள்கின்றேன் - உயிர் போய் அழியும் நிலையில் இருக்கின்றேன், இன்று - இன்றைக்கு (அதாவது) இத்தருணத்திலும், உன திருமுகம் நான் காண்கிலேன் - உன் திருமுகத்தை நான் காணக் கொடுத்து வைத்தேன் அல்லேன்', என்றுள் - என்று கூறி வருந்தியழுதாள்.

பொருமுக வேல் - போரிட வல்ல கூரிய முகமாகிய நுனி அலகை யுடைய வேல் என்னலும் அமையும். தேர் வேந்தே - தேர்ப்படையை யுடைய அரசனே என்னலும் ஆம். வென்றிச்சின வரவு ; யானையையும் தன் வலியால் வென்று தன் வயிற்றுள் அடக்கும் வெற்றியுடைய சினமிக்க அரவு (284). இடைப்படுதல் - இடத்தில் அகப்பட்டுக் கொள்ளுதல் ; இடை - இடம். தன் உயிர் போக இருந்த அந்நிலையிலாவது தன் கணவனை நளனது திருமுக தெரிசனம் கிடைக்காதா என்று ஏங்கிய தமயந்தியின் கற்பின் உறுதியையும் அன்பின் மேம்பாட்டையும் உணர்த்துகின்ற அவளது பெருமை நோக்கத்தக்கதாம். கணவன் முன்னிலையில்

தன் ஆவி விடுதல் கற்பின் மகளிர் உயர் நோக்கமும் நெறியும் ஆகும்.

பி - ம். 3. திருமுகங் காண்கிலேன், திருமுகமே காண்கிலேன் (119)

தமயந்தி தன் மக்களை நினைந்து வருந்தியது

288. மற்றெடுத்த தோள்பிரிந்து மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள் பிரிந்தேகும்—கொற்றவனை
நீரேனுங் காண்குதிரோ வென்றழுதா ளீள்குழற்குக்
காரேனு மொவ்வாள் கலுழ்ந்து.

நீள் குழற்கு - நீண்ட தன் கூந்தலுக்கு, கார் ஏனும் ஒவ்வாள் - கரிய மேகங்கூட ஒப்பாகாத் தன்மையுடைய அத்தமயந்தி, 'மல் தொடுத்த தோள் பிரிந்து - மல்யுத்தங்களில் தொடர்புகொண்டு (பருத்து) விளங்கிய மன்னனுடைய தோள்களின் அணைப்பிலிருந்து பிரிந்தும், மாயாத வல் வினையேன் - இறந்து போகாது உயிர் வைத்துக் கொண்டிருக்கும் கடுமையான தீவினையையுடைய யான், பெற்று எடுத்த மக்காள் - பெற்று வளர்த்து வந்த என் மக்களே! பிரிந்து ஏகும் கொற்றவனை - உங்களையும் என்னையும் பிரிந்து செல்லும் உங்கள் (தந்தையாகிய) அரசனை, நீர் ஏனும் - நீவிராவது, காண்குதிரோ - காணக் கூடியவராவீரோ?' என்று கலுழ்ந்து அழுதாள் - என்று கூறி அழுது கலங்கி வருந்தினாள்.

கூந்தலுக்கு மேகம்: 145, 165, 167, 288. பிரிந்துமாயாத வல்வினையேன்: அன்பின் மிக்க தலைவி தன் தலைவன் பிரிவை ஆற்றமுடியாது உயிர் துறப்பாள்; 'செல்லாமை யுண்டே வெனக்குரை மற்றுநின், வல்வரவு வாழ்வார்க் குரை' (குறள். 1151) என்றதால் அறியப்பெறுதலின், அவ்வாறின்றி இன்னும் உயிர் தாங்கி யிருந்ததால், வல்வினையேன் எனத் தன்னைப் பெரிதும் நிந்தித்துக்கொண்டாள் தமயந்தி என்க. 'மற்றெடுத்த தோள்' என்பதைச் சினையாகு பெயராய் நளனுக்கே ஆக்கி, அவனைப் பிரிந்து என்றும் பொருள் கொள்ளுதலும் ஒன்றும். பிரிந்தேகும் மன்னவனை; ஏகும் என்பதை முக்காலத்திற்கும் உள்ள பொதுவினையாகக் கொண்டு, பிரிந்து சென்ற மன்னவனை என இறந்த காலத்திற் பொருள் கொள்ளலும் ஆம்.

பி - ம். 1. தோளினையை நீங்கியுயிர் மாயாதேன், மாயாமுன்.
3. நீங்கள்தான் கூடுதிரோ வென்று னெடுவாளி.
4. வாங்குதோள் வீமன் மகள், வீங்குதோள் வீமன் மகள்; லேலான் மகள். (120)

தமயந்தி தன் உயிர் நீங்கு நிலையில் நளனை நினைந்து வணங்கிக் கூறியது

289. அடையுங் கடுங்கானி லாடரவின் வாய்ப்பட்
டுடையுமுயிர் நாயகனே யோகோ—விடையெனக்குத்
தந்தருள்வா யென்னுத்தன் ருமரைக்கை கூப்பினுள்
செந்துவர்வாய் மென்மொழியா டேர்ந்து.

செம் துவர் வாய் மென் மொழியாள் - சிவந்த பவழம் போன்ற வாயையும் மென்மையான மொழிகளையுமுடைய தமயந்தி, 'நாயகனே - என் தலைவனே! அடையும் - உன்னைத்தேடி நானடைந்த, கடும் கானில் - கொடிய இந்தக் காட்டினிடத்தே, ஆடு அரவின் வாய்பட்டு - கொல்லும் வலியுடைய பாம்பின் வாயினுள் அகப்பட்டு, உயிர் உடையும் - என் உயிர் உடைந்து தளர்கின்றது! விடை எனக்கு தந்து அருள்வாய் என்னை - நான் இறந்துபோக எனக்கு உத்தரவு அளிப்பாயாக!' என்று, தேர்ந்து - முடிவாகத் தீர்மானித்து, தன் தாமரை கை கூப்பினுள் - தன் தாமரை மலர்கள் போன்ற கைகளை குவித்து (நளனை நினைந்து) வணங்கினுள்.

ஓகோ; இது நிலைகடந்த பேராபத்தில் எழும் கூக்குரல். செந்துவர்வாய் மென்மொழியாள்; சிவந்த பவழம் போன்ற வாயினின்றும் மென்மையான மொழி பேசும் தமயந்தி எனக் கூட்டிப் பொருள் கொள்ளலும் ஒன்றும். இனி, துவர் என்பதற்கும் சிவப்பு எனும் பொருள் கொண்டு, செந்துவர் - மிகச் சிவப்பு எனவும் கொள்ளலாம்; துவர் - சிவப்பு (பிங்); செந்துவர்: ஒருபொருட் பன்மொழி. ஆடரவு - வலிய அரவும் ஆம்; இனி, ஆடும் அரவு எனப் பொருள் கொண்டாரும் உளர். படம் எடுக்கும் நாகப் பாம்பே ஆடும் தன்மையுடையது; இது மலைப்பாம்பு ஆதலால் படம் எடுத்தாடும் இயல்பினதன்று. ஆதலின், ஆடரவு என்பதற்கு வலிமை அல்லது வென்றியுடைய பாம்பு என்பதே ஏற்றதாகும். முன் (287)-இல் 'வென்றிச் சினவரவு' என்றமையுங் காண்க. இனி அடும் அரவு ஆடரவு என நீண்டதாகக் கொள்ளலும் ஒன்றும்; அடு அமர் ஆடமர், அடுஎரி ஆடெரி என வருவன போல. தாமரைக்கை: உவமைத்தொகை; தாமரைமலர் நிறத்தாலும் மென்மையாலும் ஒப்பு.

பி - ம். 3. தந்தருளா யென்றுரைத்துத், தந்துரையா யென்றுரைத்துத்.
4. செந்தரள வெண்ணகையா, செந்தரள மென்மொழியா. (121)

ஒரு வேடன் அங்கு வந்தது

290. உண்டோ ரழுகுரலென் ருேற்றி வருகின்ற
வெண்டோடன் செம்பங்கி வில்வேடன்—கண்டான்
கழுகுவாழ் கானகத்துக் காரரவின் வாயில்
முழுகுவா டெய்வ முகம்.

ஓர் அழுகுரல் உண்டு என்று - ஓர் அழுகைக் குரல் உண்டா கின்றது என்று, ஒற்றி வருகின்ற - அவ்வொலி உண்டான இடத்தை உற்றுக்கேட்டு வந்து கொண்டிருந்த, வெண் தோடன் - வெண்மையான சங்கு அல்லது பாசிமணிகளில் ஆன தோடு என் னும் காதணியை யுடையவனும், செம் பங்கி - சிவந்த தலைமயிரை யும், வில் - வில்லையும் யுடையவனுமான, வேடன் - வேடன் ஒருவன், கழுகு வாழ் கானகத்து - கழுகுகள் வாழ்கின்ற அக் கொடிய காட்டிடத்தில், கார் அரவின் வாயில் - கரிய பாம்பின் வாயினில், முழுகுவாள் - முழுகி இறக்கும் தருணத்தில் இருந்த தமயந்தியின், தெய்வ முகம் - தெய்வத் தன்மை வாய்ந்த திருமுகத்தை, கண் டான் - பார்த்தான்.

தோடன் : தோடு என்னும் காதணியை ஆடவரும் அணிதல் பண்டை வழக்கமாகும் ; 'தோடுடைய செவியன்' எனச் சிவ பிராணைக் கூறியுள்ளதும் காண்க ; (ஞானசம்பந்தர் தேவாரம்). பங்கி - ஆடவர் தலைமயிர் ; (பிங்.) ஒற்றுதல் - சார்ந்து அணுகுதலும் ஆம் ; இதிலிருந்து தான் ஒற்றர் என்ற பெயரும் வந்தது என்ன லாம். வெண்டோடன் - வெண்ணிறமான பூமாலை அல்லது பூக்களை அணிந்தவனும் என்னலாம் ; தோடு - பூவிதழ் அல்லது பூமாலை ; காரரவு - பெரிய மலைப்பாம்பும் ஆம் ; (கருமை - பெருமை).

பி - ம். 1. ருேற்றித் திரிகின்ற. (122)

தமயந்தி அவ்வேடனை வேண்டிக் கொண்டது

291. வெய்ய வரவின் விடவாயி னுட்பட்டேன்
ஐயன்மீ ருங்கட் கபயம்யா—னுய்ய
அருளீரோ வென்ன வரற்றினு ளஞ்சி
இருளீரும் பூணு ளெடுத்து.

இருள் ஈரும் பூணுள் - இருட்டை அறுத்து அதனை ஓட்டு கின்ற ஆபரணங்களை அணிந்த தமயந்தி, (அவ்வேடனது வரவு கண்டு) 'ஐயன்மீர் - ஐயாவே ! வெய்ய அரவின் - கொடிய இப்

பாம்பின், விட வாயின் உள்பட்டேன் - கொடிய விஷம் பொருந்திய வாயினுள் அகப்பட்டுள்ளேன், யான் உங்கட்கு அபயம் - யான் உங்களுக்கு அடைக்கலம் ஆவேன், உய்ய அருளீரோ - யான் பிழைத்து உயிர் வாழுமாறு அருள் செய்வீரோ?' என்ன - என்று கூறி, அஞ்சி எடுத்து அரற்றினள் - பயந்து உரத்து வாய்விட்டுக் கதறினள்.

ஐயன்மீர்: மீர், சிறப்பை உணர்த்தும் முன்னிலைப் பன்மைப் பெயர்விகுதி. அபயம் - பயமின்மையைச் செய்வாயாக என்னும் பொருளது; இஃது இங்கு அடைக்கலம் என்ற பொருளில் வந்தது; 'மன்னு வுனக்கபய மென்ன' (317) என்றது காண்க. அருளீரோ அருளீர் + ஓ: புலம்பலில் ஓகாரம் மிக்கது.

பி - ம். 1. விடவா யகப்பட்டேன். 2. —ஐயமீர். (123)

வேடன் தமயந்தியைப் பாம்பின் வாயினின்று மீட்டது

282. சங்க நிதிபோற் றருசந் திரன்சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலகை மீட்டாற்போல்—மங்கையைவெம்
பாம்பின்வாய் நின்று பறித்தான் பகைகடிந்த
காம்பின்வாய் வில்வேடன் கண்டு.

பகை கடிந்த - வேட்டையில் தன்னை எதிர்த்த, பகை யான விலங்கு முதலியவைகளை அழித்த, காம்பின் வாய் - மூங்கிலால் அமைந்த, வில் வேடன் - வில்லையுடைய அவ்வேடன், கண்டு - (தமயந்தியை அங்ஙிலையில்) பார்த்து, சங்க நிதிபோல் தரு சந்திரன் சுவர்க்கி - சங்கநிதியை போலத் தன்னையடைந்தோர்க்கு உதவும் சந்திரன் சுவர்க்கி என்னும் அரசன், உலகை - இவ்வுலக மக்களை, வெம் கலிவாய் நின்று மீட்டால் போல் - கொடிய வறுமை அல்லது பஞ்சத்தினின்று மீட்டு ஆண்டருள் புரிந்ததுபோல, மங்கையை - அத்தமயந்தியை, வெம் பாம்பின் வாய் நின்று பறித் தான் - கொடிய அந்தப் பாம்பின் வாயினின்றும் பறித்து வெளிப் படுத்தி மீட்டான்.

சங்க நிதி: இது நவநிதியங்களுள் ஒன்று. சங்க உருவில் அமைந்து விளங்குவ தாதலின் சங்கநிதி எனப்படுவது. சங்க நிதி பதுமநிதி யென்பவை, பேரளவான எண்களைக் குறிப்பன. இவை தெய்வத்தன்மை வாய்ந்த பெரும் நிதியங்களும் ஆம். நவநிதிகள்:—கச்சம், கற்பம், சங்கம், பதுமம், நந்தம் நீலம், மகாநிதி, மகாபதுமம், முகுந்தம் என்பன; 'சங்கநிதி பதும

நிதி யிரண்டுந் தந்து' (திருநாவுக். தேவாரம்). கலி-பஞ்சம், வறுமை. 'கலியிருள் பரந்தகாலை' (கலிங்கத்துப். அவதாரம்: 30). ஆசிரியர் தம்மை ஆதரித்த இந்தச் சந்திரன் சுவர்க்கிபால் கொண்ட நன்றி மறவாமையைக் குறிப்பனவாக தக்க இடங்களில் அமைந்துள்ள மற்றும் சில பாடல்களை இந்நூலிற் காணலாம்.

பி - ம். 1. கங்கை பயந்த, கங்கை பயந்தான் கழலிணையைக் கைதொழுது.
2. நின்றுலகை மீட்டாற்போல், நின்றுலகை மீட்டார்போல்.
3. பகைதடிந்த, பகைதடியும், பகைகடியும், பகைகடந்த. (124)

தமயந்தி வேடன் உதவிக்கு நன்றி கூறியது

293. ஆருயிரு நானு மழியாம லீயாவிப்
பேரரவின் வாயிற் பிழைப்பித்தாய்—தேரில்
இதற்குண்டோ கைம்மா றெனவுரைத்தாள் வென்றி
விதர்ப்பன்ருன் பெற்ற விளக்கு.

வென்றி விதர்ப்பன் பெற்ற விளக்கு - வெற்றிச் சிறப்புடைய விதர்ப்ப ராஜனை விமன் பெற்ற விளக்கு ஒளி போன்ற தமயந்தி, அவ்வேடனை நோக்கி), 'ஐயா - ஐயனே! ஆர் உயிரும் நானும் அழியாமல் - அரிய என் உயிரும் உடலும் அழிந்து போகாமல், இ பேர் அரவின் வாயில் பிழைப்பித்தாய் - இந்தப் பெரிய பாம்பின் வாயினின்றும் மீட்டு என்னை நீ பிழைத்து (அதாவது தப்பி) வாழச் செய்தாய்; தேரில் - ஆராய்ந்து நோக்குமிடத்து, இதற்கு கைமாறு உண்டோ என்று உரைத்தாள் - இந்த உன் அரிய உபகாரச் செயலுக்கு நான் செய்யக்கூடிய பிரதி உபகாரம் வேறு ஒன்று உண்டோ?' என்று (நன்றியுணரும்) உபசாரமொழி கூறினள். (உண்டோ என்பது எதிர்மறை வினுவில், இல்லை என்ற படி) தான்: அசை.

ஆருயிரும் நானும்: அரிய உயிரும் என் உடலும்; உடலினும் உயிரின் சிறப்புத் தோன்ற ஆருயிர் என்று இடையே உம்மை கொடுத்துப் பிரிக்கப் பெற்றதும் ஆம். இவ்வும்மைகளை எண்ணும்மை எனக்கொள்வாரும் உளர். நான் என்றது இங்கு உடலை, உடலை நான் என்பது யாவர்க்கும் இயல்பாய்த் தோன்றும் ஒரு மயக்க வுணர்ச்சி. பிழைப்பித்தல் - தவறி மாறச்செய்தல்; 'நல்லவை புரியும் மாந்தர் நாந்தகம் பிழைத்து வீழ'; (சீவக. 815); 'அன்பி ழைத்த மனத்தர சற்குநீ, என்பி ழைத்தனை யென்று நின் றேங்குமால்' (கம்ப. அயோத். நகர்நீங்கு: 15). தமயந்திக்கு

விளக்கு; 'வீமன் குலத்திற்கோர் மெய்த்தீபம்' (71) என்றது போல.

பி - ம். 1. ஆருயிரும் நாணு மழியாமல்.
2. பிழைப்பித்தீர். 3. றெனவுரைத்து நின்ருள். (125)

வேடன் தமயந்தியை விரும்பித் தன்னுடன்வர அழைத்தது

294. இந்து நுதலி யெழினேக்கி யேதோதான்
சிந்தை கருதிச் சிலைவேடன்—பைந்தொடிநீ
போதுவா யென்னுடனே யென்ருன் புலைநரகுக்
கேதுவாய் நின்ரு னெடுத்து.

புலை நரகுக்கு ஏதுவாய் நின்ருன் - இழிந்த நரகிற் செல்வதற்குக் காரணமாக நின்ற, சிலை வேடன் - வில்லையுடைய அவ்வேடன், இந்து நுதலி எழில் நோக்கி - (பிறை) மதி போன்ற நெற்றியையுடைய அத்தமயந்தியின் அழகைப் பார்த்து, ஏதோ தான் சிந்தை கருதி - (சொல்லத்தகாத) எதையோ ஒன்றைத் தன் மனத்தில் எண்ணிக் கொண்டு, (அவளை நோக்கி) 'பைந்தொடி - பசிய வளையல்களை அணிந்த பெண்ணே! நீ என்னுடனே போதுவாய் என்ருன் எடுத்து - நீ என்னோடு வா' என்று எடுத்துத் துணிந்து கூறினன்.

இந்து நுதலி எழில் நோக்கி, என்றமையாலும், புலை நரகுக் கேதுவாய் நின்ருன் என்றமையாலும், அவன் தமயந்தி பால் கொண்ட கெட்ட எண்ணத்தைப் புலப்பட வைத்ததாம். 'ஏதோ தான் சிந்தை கருதி' என அவ்வேடன் கொண்ட தீய எண்ணத்தை வெளிப்படையாய்த் தாம் சொல்ல விரும்பாது இடக்கரடக்கரில் ஆசிரியர் குறிப்பிட்டதோடு 'புலைநரகுக் கேதுவாய்' நின்ருன் என்றதால், அவன் கொண்ட கெட்ட எண்ணத்தை முடிவில் புலப்பட வைத்த திறம் உற்று நோக்கத் தக்கதாம். ஆசிரியரின் இவ்வுயரிய நோக்கம், 'கீழ்மக்கள் கிழாய சொல்லியக்கால் சொல்பவோ, மேன்மக்கள் தம்வாயான் மீட்டு'; (நாலடி. 70) என்றதை நினைப்பூட்டுகின்றது.

பி - ம். 1. ஏதோதன், ஏதென்றுஞ்.
3. போதுவா யென்று, (126)

தமயந்தி வேடனிடம் தப்பியோட முயன்றது

295. வேட னழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
ஆடன் மயில்போ லலமரா—ஓடினுள்
தூறெல்லா மாகச் சுரிகுழல்வேற் கண்ணினீர்
ஆறெல்லா மாக வழுது.

வேடன் அழைப்ப - அவ்வேடன் தன்னெடு வா என்று அழைக்க, விழி பதைத்து - கண்கள் அச்சத்தால் துடித்து நடுக்கி, வெய்து உயிரா - பெருமூச்சு விட்டு, ஆடல் மயில் போல் - வேட்டையில் அடிபட்ட மயிலே போல, அலமரா - தியக்கமுற்று வருந்தி, சுரி குழல் - தனது சுருண்ட கூந்தல், தூறு எல்லாம் ஆக - அவ்விடத்தே உள்ள புதர்களிலெல்லாம் சிக்கிக் கொள்ள வும், கண்ணின் நீர் - தன் கண்களினின்றும் பெருகி வழிந்த நீர், ஆறு எல்லாம் ஆக - வழியெல்லாம் வீழ்ந்து சுவர்ந்து ஈனியவும், அழுது ஓடினுள் - அழுது கொண்டு அவ்வேடனுக்குப் பயந்து ஓடலானுள்.

ஆடன் மயில்போல்:'தோகை விரித்தாடும் மயில் எனப் பொருள் கூறினரும் உளர். மயில் ஆடுவது அதன் மகிழ்ச்சியுற்ற நிலையில் ஆதலின், துன்புற்ற நிலையைக் கூறுமிவ்விடத்து அஃது ஒவ்வாது. ஆதலின் ஆடன் மயில் என்பதற்கு வேட்டை யில் அடிபட்டுத் துன்புறுத்தப்பட்ட மயில் என்றே பொருள் கொள்ளப்பெற்றது; 'அழல்வெஞ் சிலைவேட னம்புருவ வாற்ரு துழலுங் களிமயில்போ லோடி' (278) என்றமையும் ஒப்பு நோக் குக. அடல் என்பது இங்கு நீண்டு ஆடல் எனவாயிற் றென்க. சுரிகுழல் தூறெல்லா மாக; தமயந்தி கூந்தல் சுருண்டும் மென்மை பொருந்தி யுமுள்ளதாதலின் வழி அறியாது வெருண்டோடிய நிலையில் அவள் கூந்தல் ஆங்குள்ள புதர்களிற் சிக்கிக்கொண்டது என்பதாம். கண்ணினீர் எல்லாம் ஆருக என இயைத்து கண்ணீரெல்லாம் பெருகித் திரண்டு ஓர் ஆறுபோல ஓட என்ன லும் ஆம்.

பி - ம். 1. வேட னழைப்ப விழிபதறி வெய்துயிர்த்து.
2. லலமரவே, லலறிவே.
3. தூறெல்லா மாகிச் சுரிகுழறன் கண்ணினீர்; கண்ணநீர்.
4. ஆறெல்லா மாகி. (127)

தமயந்தி சீறிவிழிக்க வேடன் எரிந்து நீருனது

296. தீக்கட் புலிதொடரச் செல்லுஞ் சிறுமான்போல்
ஆக்கை தளர வலமந்து—போக்கற்றுச்
சீரு விழித்தாள் சிலைவேட னவ்வளவில்
நீருய் விழுந்தா னிலத்து.

தீ கண் புலி தொடர - நெருப்பைப் போலச் சுடர் விட்டு ஒளி ரும் கண்களையுடைய ஒரு புலி பின்பற்றித் துரத்திவர, செல்லும் அதற்கு அஞ்சி ஓடும், சிறு மான் போல் - வலியற்ற சிறிய மானைப் போல, ஆக்கை தளர - தன் உடல் தள்ளாட, அலமந்து - நிலை கெட்டு வருந்தி, போக்கு அற்று - அதன்மேல் ஓடும் வலிமை இன்றி, சீரு விழித்தாள் - சின மேலிட்டுச் சீறி விழித்து நோக்கி னாள்; அ அளவில் - அப்படி நோக்கிய அவ்வளவிலே, சிலை வேடன் - வில்லேந்திய அவ்வேடன், நிலத்து - தரையில், நீருய் விழுந்தான் - எரிந்து சாம்பராய் விழுந்து ஒழிந்தான்.

அலமந்து : அலமா பகுதி. கற்புடை மகளிர் கோபமே தீயாய் எழுந்து எரித்தழிக்கும்; இஃது, 'அல்லன் மாக்க ளிலங்கைய தாகுமோ, எல்லை நீத்த வுலகங்கள் யாவுமென் சொல்லி னுற்சுடு வேனது தூயவன், வில்லி னுற்றற்கு மாசென்று வீசினேன்' (கம்ப. சுந்தர : 624) என்று சீதாப்பிராட்டியார் தம் கற்பி னுற்றலின் சிறப்பை அநுமனுக்கு எடுத்துரைத்தாலும், கண்ணகி, சினந்து தன் கற்பின் திறத்தால் மதுரை நகரை அழலாற் சுட்டெரித்த தாலும் அறியலாம். சீரு விழித்தாள், நீருய் விழுந்தான் என தமயந்தியின் கற்பாகிய தீக்குள்ள ஆற்றலை ஆசிரியர் சுருங்கச் சொல்லி விரைவில் விளக்கிய திறம் நோக்கற்பாலது.

இதன்பின் சில பிரதிகளில்,

வண்டமிழ்வா ணர்ப்பிழைத்த வான்குடிபோற் றீத்தழன்மீ
மண்டு கொடுஞ்சுரத்தோர் மாடிருந்து—பண்டையுள
வாழ்வெல்லாந் தானிழந்து மற்றழுதாண் மன்னிழைத்த
தாழ்வெல்லாந் தன்றலைமேற் றந்து.

என்றொரு பாடல் உள்ளது. ஆனால், இது பழைய ஏடுகளில் இல்லை.

பி - ம். 1. செல்லு மிளமான்போல்.
2. ஆக்கை தளரா; வலம்வரவே.
4. நீருக வீழ்ந்தா னிலத்து.

தமயந்தியை ஒரு வணிகன் கண்டு விளவியது

297. அவ்வளவி லாதிப் பெருவழியி லாய்வணிகன்
இவ்வளவு தீவினையே னென்பாடன்—மெய்வடிவைக்
கண்டானை யுற்றுன் கமலமயி லேயென்றுன்
உண்டாய வெல்லா முணர்ந்து.

அ அளவில் - அப்போது, ஆதி பெரு வழியில் - பண்டைக் காலம் முதல் உள்ளதான ஒரு பெரும் பாட்டையில், ஆய் வணிகன் - எதையும் நன்கு ஆராய்ந்து அறியும் ஒரு வியாபாரி, 'இ அளவு தீ வினையேன் என்பாள் தன் - இவ்வளவு பாவத்திற்கு யான் இடமானேனே' என்று கூறி வருந்திய தமயந்தியின், மெய் வடிவை கண்டான் - உடலழகைக் கண்டு, ஐ உற்றுன் - இவள் யாரோ என்று சந்தேகங் கொண்டு, உண்டாய எல்லாம் உணர்ந்து - அவளுக்கு ஏற்பட்ட துன்பங்களை யெல்லாம் ஒருவாறு அறிந்து, 'கமல மயிலே என்றுன் - தாமரையில் வாழும் திருமகள் போன்றவளே!' என்று அவள்பால் அன்புமொழி கூறினன்.

ஐயுற்றுன் - அவள் வடிவை நோக்கி அவள் ஓர் உயர்குலச் செல்வி ஆவள் என்று. கமல மயில்: இல் பொருளுவமை. தமயந்தி தன் வரலாறுகளை ஒருவாறு அவ்வணிகனுக்குக் கூறினள் என்பது முதனூல் நளோபாக்யானத்தால் அறியப் பெறும்.

இச்செய்யுள் சில ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

பி - ம். 4. உண்டாய தெல்லாம். (129)

298. எக்குலத்தா யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற் கென்னிமித்தம்—மைக்குழலாய்
கட்டுரைத்துக் காணென்றுன் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து.

கார் வண்டு - கரிய வண்டுகள், காந்தாரம் விட்டு உரைக்கும் - காந்தாரம் என்னும் பண்ணை வாய் விட்டு ஆலாபனம் செய்யும், தார் வணிகர் வேந்து - மாலை அணிந்த அவ்வணிகர் தலைவன், (தமயந்தியை நோக்கி), 'மை குழலாய் - கரிய கூந்தலுடைய பெண்ணே! எ குலத்தாய் - நீ எந்தக் குலத்திற் பிறந்தவள்? யார் மடந்தை - யாருடைய பெண்? யாது உன் ஊர் - உன் ஊர் யாது? யாது உன் பேர் - உன் பெயர் என்ன? நெக்கு உருகி நீ அழுதற்கு

என் நிமித்தம் - நீ மனம் உடைந்து உருகி அழுவதற்குக் காரணம் என்ன ? கட்டுரைத்து காண் என்றான் - இவற்றை யெல்லாம் தெளிவாய் எடுத்துரைப்பாயாக !' என்று வினவினான்.

காந்தாரம் : ஒருவகைப் பண் ; 54 உரையை நோக்குக. விட்டுரைத்தல் - அந்த ராகம் சஞ்சாரம் செய்ய விட்டு விளம்பிப் பாடுதல். வணிகர் வேந்து : இங்கு வேந்து என்பது தலைவன் என்பதை உணர்த்தி நின்றது. நெக்கு ; நெகு, பகுதி ; நெகுதல் - உடைதல் ; 'நெட்டிருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசு மரத்து வேருக்கு நெக்கு விடும்' (நல்வழி. 33) ; நெகிழ்தல் என்பது வேறு ; அது தளர்தல் என்னும் பொருளது. நிமித்தம் - காரணம் அல்லது பொருட்டு ; புணர்தலும் புணர்த னிமித்தமும் ; (தொல். பொருள். 13 உரை). இது, நிமித்து எனவும் வரும் ; காண் : முன்னிலை அசையும் ஆம்.

பி - ம். 1. எக்குலத்திர். 3. கட்டுரைத்துக் காட்டென்றான்.
4. விட்டுரைக்குந் தாரான் ; தாரான் விரைந்து. (130)

299. முன்னை வினையின் வலியான் முடிமன்னன்
என்னைப் பிரிய விருங்கானில்—அன்னவனைக்
காணு தழுகின்றே னென்றுள் கதிரிமைக்கும்
பூணரம் பூண்டாள் புலர்ந்து.

கதிர் இமைக்கும் பூண் ஆரம் பூண்டாள் - (அது கேட்டு) சுடர் விட்டொளிரும், பூணத்தக்க ஆபரணங்களாகிய மாலைகளைத் தரித்த தமயந்தி, புலர்ந்து - வாட்டமுற்று, 'முன்னை வினையின் வலியால் - முற்பிறப்பில் நான் செய்துள்ள தீவினைகளின் வலிமையினால், முடி மன்னன் என்னை இரும் கானில் பிரிய - முடியணிந்த வேந்தனை என் கணவன், என்னை இக்கானில் தனியே விட்டுப் பிரிந்து செல்ல, அன்னவனை காணாது - அவ்வேந்தனை நான் காணாமல், அழுகின்றேன் என்றுள் - நான் இங்கு அழுது கொண்டிருக்கின்றேன்' என்று கூறினாள்.

பூணரம் - ஆரமாகிய பூணும் ஆம் ; 'தேவர்கோன் பூணரந் தென்னர்கோன் மார்பினவே', (சிலப். 17 : 30). தமயந்தி வணிகர் வேந்தினிடம், தான் விதர்ப்பராஜன் புதல்வியென்றும் நளச்சக்கரவர்த்தியின் தேவி என்றும் தெரிவித்ததாக முதனூல் நளோபாக்யானம் கூறும். இதன்பின் அவ்வணிகக் குழுவுடன் சென்ற தமயந்தி, இடையில் காட்டில் இரவில் அவ்வணிகருடன் ஓரிடத்தில்

தங்க, அங்கு மதயானைகள் புகுந்து வெருண்டு அவ்வணிகருள் பலரைக் கொன்று அவர்கள் பொருள்களையும் அழித்துச் சென்ற செய்தியும் பிறவும் அதில் கூறப்பெற்றுள்ளன.

பி-ம். 1. முன்னை விதியின் வலியால். 3. காண தலமருவேன்.
4. பூரர் மூலையாள் புணர்ந்த. (131)

வணிகன் தமயந்தியைச் சேதிநகரில் விட்டுச் சென்றது

300. சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டப்
போதிற் கொடைவணிகன் போயினான்—நீதி
கிடத்துவான் மன்னவர்தங் கீர்த்தியினைப் பார்மேல்
நடத்துவான் வட்டை நடந்து.

நீதி கிடத்து - நீதி முறை தங்கியிருக்கச் செய்யும், வான் மன்னவர் தம் கீர்த்தியினை - உயர்ந்த அல்லது சிறப்பமைந்த அரசர்களுடைய புகழை, பார் மேல் நடத்துவான் - உலகின்மீது தன் வாணிபத்தொழிலால் விளங்க நடைபெறுமாறு செய்பவனை, கொடை வணிகன் - கொடைத் தொழிலையுடைய அவ்வணிகர் தலைவன், சேதி நகர்க்கே திருவை செல விட்டு - சேதி நாட்டுத் தலைநகர் இடத்தே திருமகள் போன்ற அத்தமயந்தியைச் செல்லுமாறு அனுப்பி விட்டு, அ போதில் - அப்பொழுதே, வட்டை நடந்து - தான் போக வேண்டிய இடத்திற்கு வழி நடந்து, போயினான் - சென்றான்.

வான் மன்னவர்: வான் - சிறப்பு அல்லது உயர்வு; (பிங்). 'வயவர் தந்த வான்கேழ் நிதியம்'; (சிறுபாண். 249); 'வான்பொற் பல் பூண்' (சீவக. 1868); 'மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும்' (திரிகடுகம்: 16). நீதி கிடத்துவான்.....நடத்துவான்: அரசனது நீதி தங்கும் சிறப்பைத் தம் வாணிபச் செயலால் நடத்திக் காட்டுவர் வணிகர் என்பது இதனால் பெறப்பெற்றது: வணிகர்கள் பேராசை கொண்டு பொருள் வளவாது, ஏற்ற முறையில் வாணிபஞ் செய்து அதனாற் கிடைத்த ஆதாயத்தையும் தம் கொடையினால் அளித்து வருபவர் ஆதலின், உலக மக்களின் வாழ்க்கை வறுமையின்றி இனிது நடைபெறும்; அதனால் எங்கும் தருமம் செழித்தோங்கும். அவ்வாறின்றி வணிகர்கள் பேராசை கொண்டால் தம் வாணிபத் தொழிலுங் கெடும்; அரசநீதியும் அழியும்; மக்கள் வறுமையில் வருந்துவர் என்பதாம். இதனால், உலக வாழ்க்கையின் சிறப்பு இங்கு வணிகர்மேல் வைத்து ஏற்றிக்

கூறப்பெற்றமை உணரத்தக்கது. இனி நடத்துவான் - நடத்தும் பொருட்டு எனக்கொள்ளலும் ஒன்றும். வட்டை - வழி (பிங்.); 'வல்லுயிர் தாங்கும் வட்டை வந்தனே' (கல்லாடம். 40 : 13).

பி - ம். 1. திருவைச் செலவிட்டுப்.
2. போதைக் கொடை வணிகர் போயினர்.
4. நடத்துவார் வட்டை நடந்து,
நடத்துவார் நாட்டை நடந்து. (132)

தமயந்தியைக் கண்ட பணிப்பெண்கள் சேதியரசன் தேவிக்கு அறிவித்தது

301. அற்ற துகிலு மருதொழுகு கண்ணீரும்
உற்ற துயரு முடையளாய்—மற்றொருத்தி
நின்றுளாக் கண்டே நிலவேந்தன் பொற்றேவி
என்றுர் மடவா ரெடுத்து.

மடவார் - பணிப்பெண்களிற் சிலர் (அச்சேதி நாட்டரசன் தேவியிடம் சென்று), 'நில வேந்தன் பொன் தேவி - நாட்டின் இராசமாதேவியே! அற்ற துகிலும் - பாதி அறுபட்டுப் போன ஆடையும், அரிது ஒழுகு கண் நீரும் - இடையரிது பெருகி ஒழுகுகின்ற கண்ணீரும், உற்ற துயரும் - அடைந்த துக்கமும், உடையவள் ஆய் - உள்ளவளாகி, மற்று ஒருத்தி - இதுவரையில் யாங்கள் கண்டிராத புதியவளான ஒரு பெண், நின்றுளா - இங்கர் வீதியில் நின்று கொண்டிருந்தாளை, கண்டோம் - நாங்கள் பார்த்தோம்;' என்றுர் எடுத்து - என்று விளங்கக் கூறினர்.

அற்ற துகில் - ஒரு பகுதி நளன் அரிந்து சென்றது போகப் பாதியாயுள்ள ஆடை. இந்தப் பாதி யாடையையே யன்றிப் பிறி தொன்றைத் தமயந்தி மீண்டு நளைக் காணுமளவும் மாற்றாது உடுத்தியிருந்தாள் என்பது (384) பாடலால் அறியப்பெறுவது காண்க. இது சீதாப்பிராட்டியார், இராவணனால் அபகரிக்கப்பட்டு இலங்கை அசோக வனத்தில் சிறையிருந்த நாளெல்லாம்,

"ஆவி யந்துகில் புனைவதொன் றன்றிவே றறியாள்
தூவி யன்னமென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்
தேவு தெண்கட லமிழ்துகொண் டனங்கவேள் செய்த
ஓவி யம்புகை யுண்டதே யொக்கின்ற வுருவாள்";

(கம்ப. சுந்தர : 340) என்றதை நினைப்பூட்டுவதோடு, அதிற் கூறியுள்ளவாறு, தமயந்தியும் புனலாடல், முதலிய உடல் நலம் பேணு

தலையும் தவிர்ந்திருந்தாள் எனக் கொள்ளற்பாலதாம். அற்ற துகிலும்; அற்ற துகிலு மருதொழுகு கண்ணீரும்; இது முரண் மொழை. மற்றொருத்தி; மற்று என்பதை அசை யென்று ஒதுக்கினுமாம் உளர்.

பி - ம். 3. நின்னுனைக் கண்டோம்; கண்டேன்.
4. என்னுள் மடவா ளெடுத்த. (133)

சேதிராசன் தேவி தமயந்தியை அழைத்துவரச் செய்தது

302. போயகலா முன்னம் புனையிழையாய் பூங்குயிலே
ஆய மயிலே யறியவே—நீயேகிக்
கொண்டுவா வென்றுடன் கொவ்வைக் கனிதிறந்து
வண்டுவாழ் கூந்தன் மயில்.

வண்டு வாழ் கூந்தல் மயில் - வண்டுகள் (அதன் இயற்கை மணத்தை விரும்பி) வந்து தங்கி வாழும் கூந்தலையுடைய மயில் போன்ற சேதிராசன்தேவி, தன் கொவ்வை கனி திறந்து - தனது கொவ்வைப்பழம்போலும் உருவும் சிவந்த நிறமுமுடைய வாயைத் திறந்து, (ஒரு பணிப்பெண்ணை நோக்கி), 'புனை இழையாய் - ஆபரணங்கள் அணிந்த பெண்ணே! பூம் குயிலே ஆய மயிலே - அழகிய குயில் போன்றவளும், அழகிய மயில் போன்றவளுமான அப் பெண்ணே, அறிய - நாம் இன்னாள் என்று அவள் நிலையை கேட்டு அறிந்துகொள்ள, நீ ஏகி கொண்டுவா என்றாள் - நீ போய் (அவளை இங்கு) அழைத்துக்கொண்டுவா' என்று கூறினாள். ஏ: தேற்றத்தை யுணர்த்தும் இடைச்சொல்.

வண்டு வாழ் கூந்தல் மயில்: உத்தமச்சாதி மகளிர் கூந்தலில் இயற்கை நறுமண முண்டென்பதும் அதனை நாடி வண்டுகள் வந்து தங்கியிருக்கும் என்பதும் நூன்மரபு. (குறுந். 2); 'வண்டின் பொதியிருந்த மெல்லோதிப் பொன்' என்று முன் தமயந்தியைக் குறிப்பிட்டுள்ளது (49) நோக்குக. வண்டு வாழ் குழலி என்று வட திருவாலங்காட்டில் எழுந்தருளியுள்ள அம்பிகைக்கும், திரு ஈங்கோய்மலை என்னும் திருப்பதியில் எழுந்தருளியுள்ள அம்பிகைக்கும் வழங்கும் திருநாமம் என்பது இங்கு நோக்கத்தக்கது. பூங்குயிலே ஆய மயிலே: குயில்போன்ற அழகிய மொழியையும், மயில்போன்ற அழகிய சாயலையுமுடைய பெண்ணே என்க. ஆய்-அழகு; பொருந: 16. உரை.

மயில் மயிலைக் கொண்டுவா என்றதில் உள்ள இன ஒற்றுமை நயம் ஓர்க.

பி - ம். 1. புனைவனைக்கைப் பூங்குழலாய். 2. ஆய மயிலு மறியாமல். 3. கொவ்வைச்செவ் வாய்நிறந்து ; என்றுளக் கொவ்வைக் கனியிதழ்வாய். 4. வண்டுவார் கூந்தன் மயில்.

இதன்பின் அச்சுப்பிரதி ஒன்றில் பின்வரும் பாடல் ஒன்று உள்ளது.

ஆங்கவளு மேக வரசன் பெருந்தேவி
பூங்கழலின் மீதே புரண்டழுதாள்—தாங்கும்
இனவளையா யுற்றதுய ரெல்லா மெனது
வினவலிகா ணென்றுள் மெலிந்து. (134)

சேதியரசன் தேவி தமயந்தியை விளவது

303. அந்தா மரையி லவளோவென் றையுற்றுச்
சிந்தா குலமெனக்குத் தீராதால்—பைந்தொடியே
உள்ளவா றெல்லா முரையென்று ளொண்மலரின்
கள்ளவார் கூந்தலாள் கண்டு.

கள்ள ஒள் மலரின் வார் கூந்தலான் - தேனையுடைய ஒளி பொருந்திய பூக்களோடு கூடிய நீண்ட கூந்தலையுடைய சேதிராசன் தேவி, கண்டு - தமயந்தியை அங்குப் பணிமகள் அழைத்து வரப் பார்த்து, அம் தாமரையில் அவளோ என்று ஐ உற்று - (அவளை) அழகிய செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் அந்த லக்ஷ்மி தேவியோ என்று சந்தேகம் கொண்டு, (அத்தமயந்தியை நோக்கி), 'பைந் தொடியே - பசிய பொன்னிலான வளையல்களையுடைய பெண்ணே! சிந்தாகுலம் எனக்கு தீராது ஆல் - எனக்கு உன்னைப்பற்றிய மனக் கவலை நீங்காதாதலின், உள்ள ஆறு எல்லாம் உரை என்றுள் - உள்ளபடி உன் வரலாற்றையெல்லாம் சொல்லுவாயாக!'' என்று கேட்டாள்.

சிந்தாகுலம் : வடசொற்றொடர் ; தீர்க்கசந்தி : மனத் துயர் என்னும் பொருளது ; 'சிந்தா குலமுற்றென் னெவென்னை வாட்டந் திருத்துவதே' (திருச்சீற். 12). ஒள் மலரின் கள்ள வார் கூந்தலாள் - ஒளி பொருந்திய பூக்களின் தேனையுடைய நீண்ட கூந்தலையுடைய வள் என்னலும் ஆம். அவளோ : ஓகாரம் ஐயப் பொருளது. பைந் தொடியே : ஏகாரம் விளிப்பொருளது.

பி - ம். 1. லவளேயென் றையமுற்றுச். 2. வந்தபடி. 3. மாமலரின். 4. கள்ளவார் கோதையாள் கண்டு ; கோதைதனைக் கண்டு. (135)

தமயந்தியின் மறுமொழி

304. என்னைத் தனிவனத்திட் டென்கோன் பிரிந்தேக
அன்னவனைக் காணு தலமருவேன்—இந்நகர்க்கே
வந்தே னிதுவென் வரவென்றுள் வாய்புலராச்
செந்தேன் மொழிபதருத் தேர்ந்து.

(அதுகேட்ட தமயந்தி), வாய் புலரா - (துயரத்தால்) தன் வாய் உலர்ந்து போகவும், செந்தேன் மொழி பதரு - சிறந்த தேன் போன்ற சுவை அளிக்கும் தன் வாய்ச்சொற்கள் பேசமுடியாமல் தடுமாற்ற முறவும், தேர்ந்து - அவ்விரண்டு நிலையினின்றும் பின்பு ஒருவாறு தெளிவுற்றவளாகி, 'என் கோன் - என் கணவன், என்னை வனத்து தனி இட்டு - என்னைக் கானில் தனியே இருக்கவிட்டு, பிரிந்து ஏக - என்னைப் பிரிந்து செல்ல, அன்னவனை காணாது - அவனைக் காணமல், அலமருவேன் - வருந்தித் தியங்கும் யான், இ நகர்க்கே வந்தேன் - இந்த நகருக்கே வந்து சேர்ந்தேன்; இது என் வரவு என்றுள் - இது என் வரலாறு' என்று கூறினள்.

செந்தேன் - சிவந்த நிறமான தேன் எனலுமாம். இந்நகர்க்கே வந்தேன்: காட்டில் பல இன்னல்களுக் கிடமாய் வருந்தி முடிவில் இந்நகருக்கே வந்து சேர்ந்தேன் என்பதைக் குறிப்பிட்டபடி. வரவு-வரலாறு; "இதன்வர விதுவென் றிருந்தெய்வ முரைப்ப" (மணி. 6 : 205). வரவு; இது யான் இங்கு வந்த காரணமாகும் என்னலும் ஒன்றும். தமயந்தி, சேதியரசன் தேவியிடம், "யான் ஒரு சைரந்திரி; யான், பிறர் காலைக் கழுவமாடேன; பிறர் எச்சிலை உண்ணமாட்டேன்; பிற புருடனுடன் பேசமாட்டேன்; கணவனைத் தேடும் பணியில் அந்தணரைக் காண்பேன்" என்று கூறி, அவள் பெண் சுந்தை என்பாளுக்குத் தோழியாக அமர்ந்து அந்தப்புரத்தில் இருந்தனள் என நளோபாக்யானம் (பூளைப்பதிப்பு) கூறும்.

பி - ம். 1. என்னை வனத்திற் றனிவிட்டென், என்னை வனத்தேவிட்டெங்கோன்.
3. வந்தேன் வழிகாணு தென்றுடன் வாய்புலர்ந்து.
4. செந்தேன் மொழிபதறத் தேர்ந்து,

தமயந்தி அரண்மனையில் தங்கியிருந்தது

305. உன்றலைவன் றன்னை யொருவகையா லுடியே
தந்து விடுமளவந் தாழ்குழலாய்—என்றனுடன்
இங்கே யிருக்க வினிதென்ரு னேந்திழையைக்
கொங்கேயுந் தாராள் குறித்து.

கொங்கு ஏயும் தாராள் - நறுமணம் பொருந்திய மலர்மாலை யணிந்த அந்தச் சேதிராசன் தேவி, ஏந்திழையை குறித்து - அத் தமயந்தியைக் குறிப்பிட்டு நோக்கி, 'தாழ்குழலாய் - தாழ்ந்து தொங்கும் கூந்தலையுடைய பெண்ணே! உன் தலைவன் தன்னை ஒரு வகையாய் நாடியே - உன் கணவனை நாங்கள் ஒருவிதமாய்த் தேடிக் கண்டுபிடித்து, தந்து விடும் அளவும் - அவனிடம் உன்னைக் கொடுத்து அனுப்பும் வரையில், என்றன் உடன் - என்னுடனே கூட, இனிது - (கவலையன்றி) நன்ருக, இங்கே - இவ்வரண்மனை அந்தப் புரத்திலேயே, இருக்க என்ருள் - இருப்பாயாக!' என்று (அன்புடன்) கூறினள்.

ஏந்திழை : அன்மொழித்தொகை ; இங்குப் பெண் என்ற அளவில் பொருள் கொள்ளப்பாலது. தந்துவிடுமளவும் - உன்னிடம் அவனை ஒப்புவிக்கும்வரை என்று பொருள் கொண்டாரும் உளர். சேதிராசன் தேவி தமயந்தியை இன்னள் என அறியாதிருந்தும், அவளுக்கு உற்ற துயரப்பாடுகளையும், அவளோர் உயர்குல மங்கை எனபதையும் அறிந்து, அவளைத் தன் அந்தப்புரத்திலே தங்கியிருக்குமாறு ஆதரவு அளித்தாள் என்பதாம்.

இதன்பின் சில அச்சுப் பிரதிகளில்

ஈங்கிவளிவ் வாறிருப்ப வின்னலுழுந் தேயெகிப்
பூங்குயிலும் போர்வேற் புரவலனும்—யாங்குற்ரூர்
சென்றுணர்தி யென்று செலவிட்டான் வேதியனைக்
குன்றுறழ்தோள் வீமன் குறித்து.

என்ரோர் செய்யுளும் அதன்பின் வேறு சில பிரதிகளில்,

நாடி யொருவகையால் நற்றேர் நளன்றன்னைத்
தேடி வருகவெனத் திசைமுழுதும்—நாடுதற்குத்
தேர்க்கோலங் கொண்டெழுந்தான் திண்டிறலோன்
போர்க்கோலச் சாரதிதான் போய். [றன்பணியால்

என்ரொரு பாடலும் காணப்பெறுகின்றது.

பி - ம். 1. உன்கணவன் றன்னை. 2. தாழ்குழலாய்.
3. இங்கே யிருத்தி. 4. கொங்கேர் மூலையாள். (137)

வீமராசன் நளனையும் தமயந்தியையும் தேடிவர ஒரு மறையவனை ஏவியது

306. சங்கிவளிவ் வாறிருப்ப வின்னலுழந் தேயேகிப்
பூங்குயிலும் போர்வேற் புரவலனும்—யாங்குற்றூர்
சென்றுனர்தி யென்று செலவிட்டான் வேதியனைக்
குன்றுறழ்தோள் வீமன் குறித்து.

சங்கு இவள் இ ஆறு இருப்ப - இச் சேதியரசன் அரண்மனையில் இத்தமயந்தி இவ்விதம் இருக்க, குன்று உறழ் தோள் வீமன் - மலை ஒத்த தோள்களையுடைய வீமராசன், பூம் குயிலும் போர் வேல் புரவலனும் - அழகிய குயில் போன்ற இனிய சொல்லுடைய தமயந்தியும் போரிடவல்ல வேலேந்திய அரசனை நளனும், இன்னல் உழந்து - துன்புற்று வருந்தி, ஏகி - தம் நாட்டை விட்டுச் சென்று, யாங்கு உற்றூர் - எங்குச் சென்றார்கள்? சென்று உணர்தி என்று - போய்த் தேடிப்பார்த்து அறிவீராக!' என்று, வேதியனை-ஓர் அந்தணரை, குறித்து - குறிப்பிட்டுக் கூறி, செலவிட்டான் - போகச் செய்தான்.

சங்கு ; இங்கு என்பதன் நீட்டல் விகாரம். குயில் - உவமையாகு பெயர். உணர்தி : முன்னிலை ஏவல் வினைமுற்று. உறழ், உவமையைக் குறிக்கும் சொல்.

இச் செய்யுள் சில ஏட்டுப் பிரதிகளில் இல்லை. (138)

மறையோன் சேதிநாடு சென்று தமயந்தியைக் கண்டது

307. ஓடும் புரவித்தேர் வெய்யோ னொளிசென்று
நாடு மிடமெல்லா நாடிப்போய்க்—கூடினன்
போதிற் றிருநாடும் பொய்கைத் திருநாடாம்
சேதித் திருநாடு சென்று.

(வீமராசனால் தேடவிட்ட அந்தணர்) ஓடும் புரவி தேர் வெய்யோன் - விரைந்தோடும் குதிரைகள் பூட்டப்பெற்ற தேரையுடைய சூரியனது, ஒளி சென்று - வெளிச்சம்போய், நாடும் இடம் எல்லாம் - நாடிச் செல்லும் இடங்கள் எங்கும், நாடி போய் - தேடிப் போய்ப் பார்த்து, போதில் திரு நாடும் - செந்தாமரை மலரில் விளங்கும் திருமாது ஆகிய லக்ஷ்மிதேவி தங்கி வாழ விரும்பும், பொய்கை திரு நாடு ஆம் - தடாகங்கள் நிறைந்த அழகிய அல்லது செல்வமிக்க நாடாகிய, சேதி திரு நாடு சென்று - சேதி என்னும் செல்வமிக்க நாட்டில் சென்று, கூடினன் - (அந்தக் அரண்மனையை) அடைந்தார்.

போதில் திரு : போது - அப்பொழுது மலரும் நிலையில் உள்ள பூ: இனி, போதிற் றிருநாடும் பொய்கைத் திருநாடு என்பதற்கு, திருமகளே விரும்பத்தக்க தடாகங்கள் நிறைந்த வளமிக்க நாடு எனனலும் ஒன்றும். அடைந்த அந்தணர் பெயர் ஸுதேவர் என்பதும், அவர் தமயந்தியின் சகோதரனுக்கு உற்ற நண்பர் என்பதும், அவர் தமயந்தியை நன்கு அறிந்தவர் என்பதும் நளோபாக்யானத்தால் அறியப்பெறும்.

பி - ம். 2. —தேடும் நீர்ப்.

3. போதிற் றிருமாதும் போற்றுந் திருநாடும்; போற்றும் புனலுடார்ச்; போதிற் றிருநாடும் பொன்னித் திருநாடும்.

4. சேதித் திருநாடும் சென்று.

இச் செய்யுளும் சில ஏடுகளில் இல்லை. (139)

308. தாமஞ்சே ரோதித் தமயந்தி நின்றூஉ
ஆமென் றறியா வருமறையோன்—வீமன்
கொடிமேல் விழுந்தழுதான் கொம்புமவன் செம்பொன்
அடிமேல் விழுந்தா ளழுது.

அரு மறையோன் - தமயந்தியைத் தேடிவந்த அரிய வேதங்களை யுணர்ந்த அந்தச் சுதேவர் என்னும் அந்தணர், நின்றூஉ - அவ்வரண்மனைக் கன்னிமாடத்தில் ஒருபுறம் நின்றவளை, தாமம் சேர் ஓதி தமயந்தி ஆம் என்று அறியா - மாலை அணிந்த கூந்தலையுடைய தமயந்தியேயாம் என்று அறிந்துகொண்டு, வீமன் கொடிமேல் விழுந்து அழுதான் - பீமராஜன் பெண்ணை கொடிபோன்ற அத் தமயந்திபால் விழுந்து துக்கத்தால் அழுதார்; கொம்பும் - பூங்கொம்பு போன்ற அத் தமயந்தியும், அவன் செம் பொன் அடிமேல் - அவ்வந்தணர் பொன்போற் சிவந்த பாதங்களில், அழுது விழுந்தாள் - அழுது கொண்டு வீழ்ந்து வணங்கினள்.

வீமராஜன் அரண்மனையில் நெடுநாள் பழக்கமுள்ள அந்தணர் ஆதலின், அவர், தமயந்தியை எளிதில் அடையாளங் கண்டு தெரிந்துகொண்டதோடு, தமயந்தியும் அவரைத் தன் பழக்கத்தால் நன்கு அறிந்துகொண்டு அவரை வணங்கித் தனக்கு நேர்ந்த

இன்னல்களே எண்ணி அழுதாள் என்க. மகளிரைப் பூங்கொம்புக்கும், கொடிக்கும் உவமையாகக் கூறுவது கவிமரபு.

பி - ம். 1. காமஞ்சேர் கோதை தமயந்தி யென்னுமே.
3. கொடிமேலே வீழ்ந்தான் கொடியு மவன்றன், கொம்புமவன் செய்ய.
4. அடிமேலே வீழ்ந்தா ளழுது. (140)

இதன் பின் சில அச்சுப் பிரதிகளிலும், சில ஏட்டுப் பிரதிகளிலும்,

மங்கை விழிநீர் மறையோன் கழல்கழுவ
அங்கவன்றன் கண்ணீ ரவளுடன்மேல்—பொங்கக்
கடல்போலுங் காதலார் கையற்றூர் தங்கள்
உடல்போலு மொத்தா ருயிர்;

என்றொரு பாடல் காணப்படுகின்றது. இது பழைய ஏடுகளில் இல்லை.

மறையோன் சேதியரசியிடம் தமயந்தியின் நிலை அறிவித்ததும் அவள் துயரும்

309. மாரி பொருகூந்தன் மாதராய் நீபயந்த
காரிகைதான் பட்டதுயர் கண்டாயோ—சோர்குழலும்
வேணியாய் வெண்டுகிலும் பாதியாய் வெந்துயருக்
காணியாய் நின்ரு ளயர்ந்து.

(அவ்வந்தணர் சேதியரசன் தேவியை நோக்கி), 'மாரி பொரு கூந்தல் மாதராய் - மேகத்தை ஒக்கும் (கரிய) கூந்தலையுடைய தேவியே! நீ பயந்த - நீ பெற்ற, காரிகை தான் - பெண்ணான இவள் தான், சோர் குழலும் வேணி ஆய் - மெனமையால் தளர்ந்திருக்கும் இயல்புடைய இவள் கூந்தலும் சடைபோல ஆகி, வெண் துகிலும் பாதி ஆய் - வெண்மையான ஆடையும் பாதியாகத் துணிக்கப்பெற்ற தாகி, வெம் துயருக்கு ஆணி ஆய் - கொடுந் துன்பங்களுக்கு ஒரு கடையாணி போல ஆகி, அயர்ந்து நின்ரு ள் - வருந்தி நின்றவ ளானாள்; பட்ட துயர் - (இவள்) அடைந்த துன்பங்களே, கண்டா யோ - நீ தெரிந்து கொண்டாயோ?' (என்று கூறினர் என முடிக்க).

கூந்தலுக்கு மேகம்; 288. நீ பயந்த காரிகை என்றது, தன் தமக்கை பெற்ற மக்களைத் தம் மக்களே எனப் பாராட்டும் மரபு பற்றிக் கூறியது. வேணி - சடை; சடையானமை, தமயந்தி நளனைப் பிரிந்த காலம் முதல் தன் கூந்தலைத் திருத்தி முடியாமலும்,

குளிக்காம்லும் இருந்தமையால். வெண்டுகிலும் பாதியாய்; இதனால் வேறு உடையும் அவள் புனையவில்லை என்பதாம். வெண் துகில் - தூய துகிலும் ஆம். துயருக்கு ஆணி: துயரம் நீங்குவதற்கிடமின்றி ஆணியால் உறுதியாய் அடித்து நிறுத்தப் பெற்றதுபோல் இருந்தது என்பதாம்; ஆணி - அச்சாணி அல்லது கடையாணியும் ஆம்.

பி - ம். 2. பட்டதெல்லாங் கண்டாயே, பட்டனவும்; காரிகையாள் பட்டதையர்; சோர்கூந்தல்.
3. வெந்தயரும்.
4. காணிவாய் நின்றுள் கரைந்த; நின்று எழுத. (141)

310. தன்மக ளாவ தறியாத் தடுமாறுப்
பொன்வடிவின் மேலழுது போய்வீழ்ந்தாள்—மென்மலரைக்
கோதிப்போய் மேதி குருகெழுப்புந் தின்பணைசூழ்
சேதிக்கோன் றேவி திகைத்து.

மேதி - எருமைகள், மென் மலரை கோதி போய் - மென்மையான தாமரை முதலிய நீர்ப்பூக்களைக் கடித்து மென்றுகொண்டே சென்று, குருகு எழுப்பும் - அங்குள்ள கொக்கு முதலிய நீர்வாழ் பறவைகளை எழுப்பி ஓடச் செய்யும், தண் பணை சூழ் - (நீர் நிறைந்து) குளிர்ந்த வயல்கள் சூழப்பெற்ற, சேதி கோன் தேவி - சேதிநாட்டிறைவன் தேவியாகிய தமயந்தியின் சிற்றன்னை, தன் மகள் ஆவது அறியா - (அவள்) தன் மகள் ஆகியுள்ள நிலைமை அறிந்து, திகைத்து தடுமாறு - மயக்கமும் தடுமாற்றமும் அடைந்து, அழுது பொன் வடிவில் மேல் போய் விழுந்தாள் - அழுகை மேலிட்டு, பொன் போன்ற தமயந்தியின் உடலின்மீது போய் விழுந்தாள்.

தன் மகளாவது அறியா: அந்த அந்தணன் சொன்ன அடையாளமாகிய, தமயந்தி நெற்றியில் உள்ளதும், அதுகாறும் அவள், குளித்துச் சுத்தஞ் செய்துகொள்ளாமல் இருந்ததால் மறைந்திருந்ததுமான மறுவைச் சேதிராசன் தேவி கண்டு, என்பதாம். அவளும் தமயந்தி பிறந்தபோது, அம் மறு இருந்ததைப் பார்த்தவளாதலின், ஐயமின்றித் தன் மகள்தான் என்று அறிந்தாள் என நளோபாக்யானம் கூறும். தமயந்தியைப் பொன் என்பது, இந் நூலில் பல இடங்களிற் காணலாம். அறியா, தடுமாறு: இவை செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினைகள்.

பி - ம். 1. தன்மக ளாமென் றறியாத்.
2. பொன்னின் கொடிமேலே போய்வீழ்ந்தாள், பொன்னடியில் வீழ்ந்த புலம்பினுள்; பொன்மலரைக். (142)

சேதிராசன் தமயந்தியை அவள் தந்தை நகர்க் கனுப்பியது

311. கந்தனையுங் கன்னியையுங் கண்டா யினுஞ்சிறிது
தன்றுயரந் தீர்ந்து தனியாறத்—தந்தை
பதியிலே போக்கினன் சேதியர்கோன் பண்டை
விதியிலே போந்தாளை மீண்டு.

சேதியர் கோன் - (அஃதறிந்த) சேதிநாட் டரசன், பண்டை விதியிலே போந்தாளை - முன் செய்த வினையாகிய விதி வசமாகத் தன்னிடம் வந்து சேர்ந்த அத் தமயந்தியை, கந்தனையும் கன்னியையும் கண்டு ஆயினும் - தன் மைந்தனையும் பெண்ணையும் பார்த்த பின்னுவது, சிறிது தன் துயரம் தீர்ந்து - தனக்கு ஏற்பட்டுள்ள துன்பம் ஒரு சிறிது நீங்கி, தனி ஆற - ஒருவாறு தணிய, தந்தை பதியிலே மீண்டு போக்கினன் - அவள் தந்தை வீமராஜன் நகராகிய குண்டின புரத்திற்கே திரும்பிச் செல்லுமாறு அனுப்பினன். ஏ : அசை.

கந்தன் : இது ஸ்கந்தன் என்னும் முருகப் பிரான் பெயரான வடசொல்லின் தமிழ்த் திரிபு. இங்கு அம் முருகப் பிரானது பெயர்களுள் ஒன்றுனதும், மைந்தன் என்னும் பொருளில் உலகில் வழங்கப் பெறுவதுமான குமாரன் என்ற சொல்லின் பரியாயப் பெயராகக் கொள்ளப்பட்டது என்க. தன் கணவனுகிய நளனைக் கண்டாலன்றி அவள் துயரம் தீராது ஆதலால், தன் மைந்தனையும் மகளையும் கண்டால், அத்துயர் ஒருவாறு குறையும் என்று கருதி, 'சிறிது தன் துயரந் தீர்ந்து தனியாற', என்னப்பட்டது; இது, "குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தனையும், பெற்றுக் கொளலாம் கொளலாமோ-கொற்றவனே! கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள் நோக்கான் மழைபொழியா நொந்து" (232) என்ற அத் தமயந்தி முன் கொண்டுரைத்த கருத்தை வலியுறுத்துவது காண்க. பண்டை விதியிலே போந்தாளை ; தானும் அவளும் எதிர்பாராமலே, பண்டை விதி கூட்டுவிக்க அங்கு வந்து சேர்ந்தவள் என்பதாம்.

பி - ம். 1. கண்டாலுஞ். 3. பார்வேந்தன் பண்டை.
4. விதியிலே போந்தாளை. (143)

தமயந்தியைக் கண்ட குண்டினபுர மக்களின் துயரம்

312. கோயிலு மந்தப் புரமும் கொடிநுடங்கும்
வாயிலு நீன்று மயங்கியவே—தீயகொடும்
கானுள மக்களையுங் கைவிட்டுக் காதலன்பின்
போனுள் புகுந்த பொழுது.

மக்களையும் கைவிட்டு - தன் அருமை மக்களான புதல்வனையும் புதல்வியையும் விட்டு நீங்கி, காதலன் பின் - தன் கணவனே மேலானவன் என்று அவனைத் தொடர்ந்து, தீய கொடும் கான் ஆள போனள் - தீப்போன்ற கொடிய காட்டில் போய் வாழச்சென்ற (உத்தம பத்தினியான) அத் தமயந்தி, புகுந்தபொழுது - (அக் குண்டினபுரி என்னும் தன் தந்தை நகரில்) சேர்ந்தபொழுது, கோயிலும் - அரண்மனையில் உள்ளாரும், அந்தப்புரமும் - அரசன் தேவி முதலிய மகளிர் சுற்றம் வசிக்கும் தனியிடங்களில் உள்ளவர்களும், கொடி நுடங்கும் வாயிலும் - கொடிகள் மடங்கிப் பறந்து ஆடிக் கொண்டிருக்கும் மற்றை மாளிகைகளின் வாயிற்புறங்களில் உள்ள நகர மாந்தர்களும், நின்று மயங்கிய - நின்று மயக்கமுற்று வருந்தினர். ஏ: ஈற்றசை.

கோயிலும் அந்தப்புரமும் கொடி நுடங்கு வாயிலும்: உள்ள உம்மைகள், எண்ணுப் பொருளன. கோயில், அந்தப்புரம், வாயில், என்பன இடவாகுபெயர்களாய் ஆங்குக் குழுமி இருந்து வருந்திய மக்களைக் குறித்து நின்றன. "கண்டா ரிகழ்வனவே காதலன்றன் செய்திடினுங் கொண்டானே யல்லால் அறியாக் குலமகள்போல்" (பெருமாள் திருமொழி. 5 : 2) என்று ஆழ்வார் ஸ்ரீ குலசேகரப் பெருமான் உறுதியிட்டுக் கூறிய அருளிப்பாட்டிற்கு ஏற்ற எடுத்துக்காட்டாக விளங்கும் அறக்கற்பு பூண்ட அருங்குல மகளாதலின், 'தீய கொடுங் கானுளை மக்களையுங் கைவிட்டுக் காதலன்பின் போனள்' என இங்கு அத் தயயந்தியின் ஏற்றங் கூறினர் நம் புலவர் பெருமான் என்க. மக்களையும்; உம்மை மக்கட்பேற்றின் உயர் தனிச்சிறப்பை விளக்குவதாகும்.

தி - ம். 3. நின்று மயங்கிற்றே. (144)

313. அழுவார் விழுவா ரயிர்ப்பா ருயிர்ப்பார்
தொழுவார் தமரெங்குஞ் சூழ்வார்—வழுவாத
காமநீ ரோதக் கடல்கிளர்ந்த தொத்ததே
நாமவேல் வீம னகர்.

தமர் - தமயந்தியின் உறவினரான அரச குடும்பத்தைச் சார்ந்தோர்கள், எங்கும் சூழ்வார் - தமயந்தியை எப்புறமும் சூழ்ந்து கொண்டவர்களாய், அழுவார் - (அவள் பட்ட துயரங்களுக்கு ஆற்றாது) வாய்விட்டு அழுதனர்; விழுவார் - கீழே (சோர்ந்து) விழுந்தனர்; அயிர்ப்பார் - அவளை நளன் நீத்துப் போனதற்குக் காரணம்

யாதோ என்று ஐயுறுவாராயினர்; உயிர்ப்பார் - (ஏக்கத்தால்) பெரு மூச்சு விட்டனர்; தொழுவார் - இத்தகைய துன்பங்களினின்றும் தம்யந்தியைக் காப்பாற்றி அங்கு வந்து சேரும்படி அருளிய கடவுள் கருணையை நினைந்து அவரைத் தொழுது வணங்கினர்; (இவ்வாருன நிலையில்), காம வேல் வீமன் நகர் - கண்டோர்க்கு அச்சத்தை உண்டாக்கும் வேலை ஏந்திய வீமராஜன் தலைநகரமான அந்தக் குண்டின புரம், வழுவாத - தன் நிலையிற் றவறாத, காம - அழகிய, நீர் - நீரை யுடைய, கடல் - கடலானது, கிளர்ந்தது ஒத்தது - ஓசையுடன் கொந்தளித்து எழுந்தது போன்று விளங்கிற்று. ஏ: ஈற்றசை.

தொழுவார்: தமயந்தியை அடைந்த மகிழ்ச்சியின் மிகுதியால் தமர் அவள் தம்மிற் சிறியவள் என்ற நிலையையுங் கடந்து அவளைத் தொழுதனர் என்னலும் ஒன்றும். இஃது, அநுமன் மூலம், இராமபிரான் அயோத்திக்குத் திரும்பிவரும் செய்தியைக் கேட்ட பரதாழ்வான் செயலை ஒருவாறு நினைப்பூட்டுகின்றது; (கம்ப. யுத்த. மீட்சிப்: 250, 253). இனி எங்குஞ் சூழ்வார் தமர் என இயைத்து, எங்குஞ் சூழ்ந்து நின்ற தமர், தமயந்தி வந்தடைந்ததால் அடைந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளும் முறையில் ஒருவருக் கொருவர் தொழுவாராயினர் எனக் கொள்ளலும் ஒரு வாறு ஏற்கும்; அரசகுமாரி ஆதலின், அவள் பெருமை நிலையைக் கருதி வணக்கத்தைத் தெரிவிக்கும் முறையில் அவளைத் தொழு வார் எனலும் ஒன்றும். காமம் - அழகு; காஞ்சி நகரில் கோயில் கொண்டருளும் அம்பிகை காமக்கண்ணி (அதாவது காமாக்ஷி) என்ற பெயரால் விளங்குவதுங் காண்க. தமர், பரிசனங்களும் ஆம்.

பி - ம். 3. கடல் கிளர்ந்தா லொத்ததே. (145)

314. தந்தையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீர்சொரியச்
சிந்தை கலங்கித் திகைத்தலமந்—தெந்தாயான்
பட்டதே யென்னப்போய் வீழ்ந்தாள் படைநெடுங்கண்
விட்டநீர் மேலே விழ.

தந்தையை முன் காண்டலுமே - (தமயந்தி தன், தந்தையாகிய வீமராஜனைக் கண்டவுடனே, தாமரை கண் நீர் சொரிய - செந் தாமரை மலர்போன்ற தன் கண்களினின்றும் நீர் பொழிய, சிந்தை கலங்கி - மனம் கலக்கமுற்று, திகைத்து - மயங்கி, அலமந்து - வருந்தி, 'எந்தாய் யான் பட்டதே என்ன - தந்தையே யான் பட்ட பாட்டை என்னென்று சொல்வேன்?' என்று கூறி, படை நெடும்

கண் - வாள், வேல், அம்பு என்னும் படைக்கருவிகள் போன்ற தன் நீண்ட கூரிய கண்கள், விட்ட நீர் - பொழிய விட்ட கண்ணீர், மேலே விழ - அவ் வீமன் மேலே விழுந்து ஓட, போய் வீழ்ந்தாள் - அவன் அருகே போய் வீழ்ந்து அழுதாள்.

பட்டதே : என்றது, தான் பட்ட துன்பமாகிய அவல நிலையைச் சொல்ல முடியாது துயரம் தடுத்த நிலையை உணர்த்தியது மாகும்.

பி - ம். 2. சிந்தை புலர்ந்து நிகைத்தலுமே, சிந்தை புலர்ந்து நிகைத்திட—
எந்தாயான், வந்தேன்யான், அந்தோ நான்.
3. பட்டனஞ வென்னப் பயந்தாள், பட்டவா வென்னப்போய் வீழ்ந்தாள் ; பசுநெடுங்கண் ; பட்டபா டென்னப்போய் வீழ்ந்தாள். (146)

தமயந்தியைக் கண்ட தாய்தந்தையரும் சுற்றத்தாரும் கொண்ட துயரம்

315. செவ்வண்ணை வாயாளுந் தேர்வேந் தனுமவளை
அவ்வண்ணங் கண்டக்கா லாற்றுவரோ—மெய்வண்ணம்
ஓய்ந்துநா நீர்போ யுலர்கின்ற தொத்ததமர்
நீந்தினர் கண்ணீரி னின்று.

செம் வண்ண வாயாளும் - சிவந்த நிறமான வாயையுடைய தமயந்தியின் அன்னையும், தேர் வேந்தனும் - தேர்ப்படையையுடைய (தந்தை) வீமராஜனும், மகளை - தம் புதல்வியான அத் தமயந்தியை, அ வண்ணம் - அவ்வித நிலையில், கண்ட கால் - கண்டார்கள் ஆனால், ஆற்றுவரோ - அத் துயரத்தைத் தாங்கும் வலியுடையராவரோ? (ஆகார் என்றபடி) ; மெய் வண்ணம் ஓய்ந்து - (அத் தாய் தந்தையரின்) உடல் மேனி ஓய்வுற்றுத் தளர்ந்து, நா நீர் போய் உலர்கின்றது ஒத்த - நாவின் நீர் உலர்ந்து போனது ஆயின ; தமர் - மற்ற உறவினர்களும், நின்று - துயரால் வாய் பேச முடியாமல் அவ்விடத்தில் நின்று, கண்ணீரில் நீந்தினர் - தம் கண்ணீர் வெள்ளத்தில் ஆழ்ந்து அதில் நீந்துவார்போலத் தத்தளிப்பாராயினர்.

இச் செய்யுளில், வண்ணம் என்ற சொல்,

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரில் மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ண மங்குக் கண்டேன் கால்வண்ண மிங்குக் கண்டேன்.

(கம்ப. பால. அகலிகைப் : 82). என்ற பாடலை ஒத்து ஒருவாறு பல பொருள்களிற் பயின்று வந்துள்ளமை காண்க.

பி - ம். 2. காண்டலுமே.
3. ஒய்த்தநீர் நாவு முலர்கின்ற போதத்து
4. கண்ணீரில் நின்று. (147)

316. பனியிருளிற் பரம்மண் டபத்திலே யுன்னை
நினையாது நீத்தகன்ற போது—தனியேநின்
றென்னினைந்தா யென்செய்தா யென்னைப் புலம்பினுள்
பொன்னினைத்தாய் நோக்கிப் புலர்ந்து.

பொன்னினை - பொன்னை போன்ற சிறப்புடைய அல்லது அருமையான தமயந்தியை, தாய் - அவள் அன்னை, நோக்கி - பார்த்து, 'பனி இருளில் - பனியினால் சூழ்ந்தமேவும் இருட்டில், பாழ் மண்டபத்திலே - காட்டில் உள்ள அப் பாழ்பட்ட மண்டபத்திலே, உன்னை நினையாது - உன் நிலைமையைச் சிறிதுங் கருதாமல், நீத்து அகன்றபோது - உன் கணவன் உன்னைவிட்டு (இரக்கமின்றி) நீங்கிச் சென்றபோது, தனியே நின்று - அங்கு அப் பொழுது தன்னந் தனியளாய் நீ நின்று, என் நினைந்தாய் - என்ன எண்ணினாய்? என் செய்தாய் - என்ன செய்தாய்?' என்னை புலம்பினுள் - என்று பலவாறு கூறிப் புலம்பி வருந்தினாள்.

பனியிருள் - அச்சத்தை அல்லது நடுக்கத்தைத் தரும் இருள் என்னலும் ஒன்றும். இதில் தாய்மையின் அன்பும் பரிவும் தழைந்து ஒளிர்வன காண்க.

பி - ம். 2. நினையாம னீத்தகன்ற போது.
3. என்னினைத்தாய், யன்னேநீ. (148)

கலிதொடர் காண்டம் முற்றும்.

3. கலிநீங்கு காண்டம்

தமயந்தியைப் பிரிந்து சென்ற நளன் தீயிடைப்பட்ட ஒருவன் துயர்க்குரல் கேட்டது

317. மன்ன வனக்கபய மென்ன வனத்தீயில்
பன்னக வேந்தன் பதைத்துருகிச்—சொன்ன
மொழிவழியே சென்றான் முரட்கலியின் வஞ்சப்
பழிவழியே செல்கின்றான் பார்த்து.

முரண் கலியின் - வலிமை அல்லது பகைமையுடைய கலி யாகிய சனிச்சரனின், வஞ்ச பழி வழியே செல்கின்றான் - வஞ்சனை கொண்ட நிந்தனைச் செயலின் வழியே செல்கின்ற நளன், வன தீயில் - அக் காட்டில் உண்டான நெருப்பில் அகப்பட்டு, பன்னக வேந்தன் - கார்க்கோடகன் என்னும் பாம்புகளுக்கு அரசன், பதைத்து உருகி-துடித்து மனம் தளர்ந்து, 'மன்ன உனக்கு அபயம் என்ன - அரசனே உனக்கு நான் அடைக்கலம்!' என்று, சொன்ன - கூறிய, மொழி வழியே - சொல் ஓசை வந்த வழியிலேயே பார்த்து நோக்கி, சென்றான் - போனான்.

செல்கின்றான் சென்றான் என முடிக்க. அபயம் - பயமில்லாது காத்தலைக் குறிக்கும் செயல்; 'ஐயன்மீ ருங்கட் கபயம் யான்' (291) என்றமையும் நோக்குக. முரட்கலியின் வஞ்சப் பழிவழியே செல் கின்றான்: நளன் மனத்தைத் தன்வயமாக்கிக் கலி ஆட்டிவைத்தா னதலின்; முன், 'சிந்தையெலாந் தன்வயமே யாக்கித் தமயனுட னிருந்தான் பொன்னசல மாற்பற் புகைந்து' (198) என்றமையும், "வஞ்சக்கலி வலியால்.....வயவேந்த னெஞ்சத் துதித்தசே வேறோ ருணர்வு" (267) என்றமையும் காண்க. பன்னகம் என்ற சொல் இங்கு எதுகை ஓசை நயம் நோக்கிப் பன்னகம் என விரிந்தது. இப் பன்னக வேந்தன் கார்க்கோடகன் என்பது இந்நூல் (326) ஆம் செய்யுளால், அறியப்பெறும். கார்க்கோடகன் குல நாகங்கள் எட்டினுள் ஒன்று; மற்றவை, அநந்தன், வாசுகி, தக்ஷன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் என்பன (பிங்). பழி: தீச் செயலும் ஆம்.

அச்சுப் பிரதிகளிலும், சில ஏட்டுப் பிரதிகளிலும் இதற்குமுன் கடவுள் வாழ்த்தாக அடியிற் காணும் இரு பாடல்கள் உள்ளன.

திருமால்

மூலப் பழமறைக்கு முன்னேயுங் காணலாம்
காலிக்குப் பின்னேயுங் காணலாம்—மால்யானை
முந்தருளும் வேத முதலே யெனவழைப்ப
வந்தருளுஞ் செந்தா மரை.

சிவபிரான்

போதுவார் நீறணிந்து பொய்யாத வைந்தெழுத்தை
ஓதுவர் முள்ள மெனவுரைப்பார்—நீதியார்
பெம்மா னமரர் பெருமா னிருமான்கை
அம்மானின் ரூடு மரங்கு.

ஆனால் இவை பழைய ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

பி - ம். 1. கபய மென்று வனத்தழலும்; மென்ன வனத்தேயப்.
2. பன்னக வேந்தன் பதைத்தோனும்; பன்னக வேந்தன்.
3. முரண் கலியின்; முடக் கலியின்.
4. பழிவழியே சென்ருன் பதைத்து; சென்ருன் பரிந்து. (1)

நளன் ஒரு பாம்பைத் தீயிடைக் கண்டது

318. ஆருந் திரியா வரையிருளி னங்ஙனே
சோர்குழலே நீத்த துயரோடும்—வீரன்
திரிவானத் தீக்கானிற் செந்தீயின் வாய்ப்பட்
டெரிவானைக் கண்டா னெதிர்.

ஆரும் திரியா - யாரும் துணிந்து செல்ல முடியாத, அரை இருளின் - நடு இருட் போதில், அங்ஙனே - அப் பாழ்மண்டபத்திலே அவ்வாறு, சோர் குழலே நீத்த துயர் ஒடும் - தளர்ந்த கூந்தலையுடைய தமயந்தியை விட்டு நீங்கி வந்த துயரத்தோடும், திரிவான் - திரிந்து வருபவனை, வீரன் - வீரத்தன்மை வாய்ந்த நளன், அத் கானில் - அந்த நெருப்புப் பற்றி எரியும் கொடிய காட்டில், செந் தீயின் வாய் பட்டு எரிவானை - சிவந்த நெருப்பின் இடம் அகப்பட்டுப் பற்றி எரியும் நிலையில் இருந்த அக் கார்க்கோடகன் என்னும் பாம்பரசனை, எதிர் கண்டான் - தன் எதிரே பார்த்தான்.

சோர் குழல் : அன்மொழித்தொகை ; இங்குத் தமயந்தியைக் குறிப்பது ; (108), திரிவான், எரிவான் என்பன விணையாலணையும் பெயர்கள்.

பி - ம். 1. ஆரும் தெரியா.
2. சோராது நீத்த வயரோடும் ; சோர் குழலி நீத்த வகிலோடும்,
3. திரிவானக் கானகத்தைச். (2)

நளன் தீயிடம் சென்றது

319. தீக்கடவு டந்த வரத்தைத் திருமனத்தில்
ஆக்கி யருளா லரவரசை—நோக்கி
அடைந்தா னடைதலுமே யாரழலோ னஞ்சி
உடைந்தான் புகுந்தா னுவந்து.

தீ கடவுள் தந்த வரத்தை - நெருப்புக்கு உரிய தெய்வமாகிய அக்கினி தேவன் முன் தனக்கு நெருப்பு சுடாது என்று கொடுத்த வரத்தை, திரு மனத்தில் ஆக்கி - (நளன்) தன் சிறந்த மனத்தில் எண்ணி, அருளால்-இரக்கத்தோடு, அரவு அரசை நோக்கி-அந்தப் பாம்புகளுக்கு அரசனை கார்க்கோடகனை நோக்கி, அடைந்தான் - அவன் இருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தான், அடைதலுமே - அவ்வாறு நளன் அங்குச் சென்றவுடனே, ஆர் அழலோன்-நிறைந்த அத்தீக் கடவுள், அஞ்சி - அந் நளன் பெற்றிருந்த வரத்திற்கு அஞ்சினவனாகி, உடைந்தான் - தன் வலியுடைந்து அடங்கி விலகிப் போனான் ; உவந்து புகுந்தான் - அது கண்டு நளனும் மனமகிழ்ந்து அவ்விடத்தில் புகுந்து சென்றான்.

குறிப்பு : தீக் கடவுள், நளனுக்கு இனி நெருப்புக் சுடாது என்று வரன் கொடுத்ததாக இந்நூலிலும், நளோபாக்யானத்தும், நைடதத்தும் கூறப்பெறவில்லை. - இது வேறு எந்த ஆதாரங்கொண்டு கூறப் பெற்ற தென்பது ஆராய்ந்தறியத் தக்கது.

பி - ம். 1. வரத்தைத் திருமனத்தே ; நிருமனத்(தாக்கி).
2. ஆக்கி யயரா வரவரசை, ஆக்கி யருளா லரவைத்தான்.
4. உடைந்தான்போய்ப் புக்கா னுவந்த ; னுடன்று. (3)

பாம்பு தனது வரலாறு கூறித் தன்னை விடுவிக்க வேண்டியது

320. வேத முனியொருவன் சாபத்தால் வெங்கானின்
ஆதபத்தின் வாய்ப்பட் டழிகின்றேன்—ஆதலால்
வந்தெடுத்துக் காவென்றான் மாலை மணிவண்டு
சந்தெடுந்த தோளானைத் தான்.

(அவ்வரவரசன்), மாலை மணி வண்டு - மாலையில் உள்ள நீல மணிகள் போன்று அழகான வண்டுகள், சந்து எடுத்த - இசை எடுத்துப் பாடிய, தோளாலே - தோள்களையுடை அந்நளனே நோக்கி, 'வேதமுனி ஒருவன் சாபத்தால் - மறைகளையுணர்ந்த ஒரு முனிவர் சாபத்தால், வெம் கானில் - கொடிய இக்காட்டில், ஆதபத்தின் வாய்பட்டு - எரிக்கும் நெருப்பினிடம் அகப்பட்டு, அழிகின்றேன் - அழிந்து போகும் நிலையில் இருந்து வருந்துகின்றேன்; ஆதலால் - ஆகையால், வந்து எடுத்துகா - நீ இங்குவந்து என்னை இந்நெருப்பினின்றும் எடுத்துக் காப்பாற்றுவாயாக', என்றான் - என்று வேண்டிக் கொண்டான். தான் : அசை.

கார்க்கோடகன் நெருப்பிடைப்பட்டு வருந்துமாறு பெற்ற சாபமிட்டவர், அகாகலர் என்னும் ஒரு முனிவர் என்பதும், அம் முனிவருக்கு அவன் இழைத்த ஒரு வஞ்சனைச் செயலால் அச்சாபம் ஏற்பட்டதென்பதும் வடமொழி மகாபாரதத்திற்கு ஸ்ரீ நீலகண்டர் என்பவர் எழுதிய குறிப்புரையால் அறியப் பெறுவதாகும். ஆதபம்; தபிக்கச்செய்வது என்னும் பொருளில் இங்கு நெருப்பைக்குறிப்பது. இது பொதுவாகத் தன வெப்பமான கதிர்களால் தவிக்கச் செய்கின்ற காரணத்தால் சூரியனை ஆதபன் என்னும் பெயரால் கூறுவதும் மரபு. ஆதபன் என்பது தமிழில் ஆதவன் எனத்திரிந்து வழங்குவதும் காண்க. சந்து - இசை; 'சந்துலாந் தமிழ்' (தேவாரம்).

பி - ம். 2. நீதியாய், காதலால்.
3. காவென் றழுதான் மலைக்கோட்டு மாதர் முலைக்கோட்டின்.
4. சந்தெடுத்த தோளாளைத் தான். (4)

321. சீரியாய் நீயெடுப்பத் தீமை கெடுகின்றேன்
கூரும் தழலவித்துக் கொண்டுபோய்ப்—பாரில்
விடுகென்றான் மற்றந்த வெந்தழலால் வெம்மைப்
படுகின்றான் வேல்வேந்தைப் பார்த்து.

அந்த வெம் தழலால் வெம்மை படுகிறான் - அதைக் காட்டுத் தீயால் வேகின்ற நிலையிலிருந்த அக்கார்க்கோடகன், வேல் வேந்தை பார்த்து - வேலேந்தும் அரசனை நளனை நோக்கி, 'சிரியாய் - மேன்மையுடையோனே! நீ எடுப்ப - நீ வந்து என்னை எடுப்பாயானால், தீமை கெடுகின்றேன் - எனக்கு ஏற்பட்ட கொடிய துன்பம் தீர்கின்றவனாவேன்; (ஆதலின்) கூரும் தழல் அவித்து - மிகுதியான இத்தீயை அழித்து அடங்கச் செய்து, கொண்டுபோய் -

நீ என்னை எடுத்துக் கொண்டுபோய், பாரில் விடு என்றான் - அப் பால் தரையில் விடுவாயாக!' என்று கேட்டுக்கொண்டான். மற்று : அசை.

கெடுகின்றேன். அழிந்து போகின்றவனாவேன் என எதிர்காலப் பொருளில் கொள்ளலும் ஆம். கூரும் : கூர்; மிகுதிப் பொருளை உணர்த்தும் ஒரிடைச்சொல்; 'கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்' (தொல். உரியியல் : 16). விடுகென்றான் : விடுகவென்றான் என்பதின் தொகுத்தல் விகாரம்.

பி - ம். 1. சிந்தை கெடுகின்றேன்.

2. கூரும் தழல்கடப்பக் கொண்டுபோய்ப் பெரிதழலால் வெம்மை, வெறிதழல்வாய் வெம்மை. (5)

322. என்றுரைத்த வவ்வளவி லேழுலகுஞ் சூழ்கடலும்
குன்றுஞ் சுமந்த குலப்புயத்தான் - வென்றி
அரவரசைக் கொண்டகன்ற ரணியந் தன்னின்
இரவரசை வென்ற னெடுத்து.

என்று உரைத்த அ அளவில் - என்று அக்கார்க்கோடகன் கூறிக் கேட்டுக்கொண்ட அப்பொழுதே, ஏழ் உலகும் - ஏழு கண்டங் களாய்ப் பிரிவுற்ற இவ்வுலகத்தையும், சூழ் கடலும் - அவ்வேழு உலகங்களையும் சூழ்ந்துள்ள ஏழு கடல்களையும், குன்றும் - அவற்றுள் அடங்கிய ஏழு குலமலைகளையும், சுமந்த - தான் ஆளும் முறையில் தாங்கிய, குல புயத்தான் - சிறந்த தோள்களையுடைய வனும், ஆரணியம் தன்னில் - காட்டில், இரவு அரசை வென்றான் - வலிய இரவைப் பொருட்படுத்தாது வெளிக்கிளம்பி தனியே வந்து அதில் வெற்றிகொண்டவனுமான நளன், வென்றி அரவு அரசை - தனக்குண்டான சாபத்தினின்றும் நீங்குவதாகிய வெற்றியை அடைந்த அந்த அரவுகளுக்கு அரசனான கார்க்கோடகனை, எடுத்து அகன்றான் - தன் கைகளால் தூக்கி எடுத்துக்கொண்டு அத்தீயி னின்றும் அப்பாற் சென்றான்.

நளன் ஏழுலகும் சூழ்கடலும் குன்றும் சுமந்தது : அவன் உலக முழுதும் ஒரு கோலோச்சிய சக்கரவர்த்தியாய் இருந்த நிலையில். இரவரசு - கொடிய நள்ளிரவும் ஆம்; இனி, இரவரசை வென்றான் என்பதற்கு இரவுக்கு அரசனான சந்திரனைத் தன் ஒளியால் வென்ற நளன் எனக் கூறலும் அமையும். இரவரசு - நிசாபதி. அரசு

என்றது இங்கு, சிறப்பை உணர்த்தும் வினைமையைக் குறித்தபடி. ஆரணிமம் - பெரும்வனம்.

பி - ம். 3. ஞரழலே நீக்க, ஞரலலே நீக்கு.
4. விரைவுட னேகினுன் வேந்த. (6)

323. மண்ணின்மீ தென்றனேநின் வன்ருளா லொன்றுமுதல்
எண்ணித் தசவென் றிடுகென்ருன்—நண்ணிப்போர்
மாவலான் செய்த வுதவிக்கு மாருக
ஏவலாற் றீங்கிழைப்பே னென்று.

போர் மா வலான் - குதிரைகளைச் செலுத்திப் போர் புரிவதில் வல்லவனை நளன், நண்ணி - தன்னிடம் வந்து, செய்த உதவிக்கு - தன்னைத் தியினின்றும் காப்பாற்றியதான உபகாரத்திற்கு, மாறு ஆக - பிரதியாக, ஏவலால் - அந்நளன் இட்ட கட்டளைப்படியே, தீங்கு இழைப்பேன் என்று - அவனுக்கு இப் பொழுது தீமையான ஒரு செயலைப் புரிவேன் என்று தீர்மானித்து, (அக்கார்க்கோடகன் நளனை நோக்கி), 'என் தனை - என்னை, நின் வன் தாளால் - உனது வலிய பாதங்களால், ஒன்று முதல் எண்ணி - ஒன்று முதலாக எண்ணி நடந்து சென்று,, தச என்று - பத்து என்று சொல்லி, மண்ணின் மீது இடுக என்ருன் - (அபபால்) தரைமீது என்னை விடுவாயாக!' என்று கேட்டுக்கொண்டான்.

உதவிக்கு மாருக: நளன் செய்த உதவிக்குப் பிரதி உபகாரமாக, தீங்கிழைப்பேன்; இப்பொழுது தீங்குபோலத் தோன்றும் ஒரு (நற்) காரியத்தைச் செய்வேன், எனப் பொருள் கொண்டார் சிலர், தசவென் றிடுக என்பது, தச என்பதற்கு பத்து என்ற எண்ணுப் பொருளும், நீ என்னைக் கடி என்ற ஏவல் வினைப் பொருளும் உண்மையால், இஃது இரட்டுற மொழிதலாய் அமைந்தமையை அவனிட்ட ஏவலாகக்கொண்டு கூறினன் கார்க்கோடகன் என்பதாம். நளன் அச்வசாஸ்திரம் என்னும் குதிரைகளின் இலக்கண நூலில் தேர்ந்து அவற்றை நடத்துவதில் வல்லவனுதலின், மாவலான் என்னப்பட்டான். இது, பின், 339, 356. பாடல்களாலும் அறியப் பெறுவது காண்க,

பி - ம். 1. மணணின்மீ தென்றன்னை மன்னவனீ, மண்ணின்மிசை யென்னை நீ வானருளா லொன்றுமுதல்.
2. நண்ணிரிய. 3. மாவலாய் நீசெய்த மாரு வுதவிதனக்.
4. கேவலாய்த் தீங்கிழைப்ப தென்று. (7)

324. ஆங்கவன்ரு னவ்வா றுரைப்ப வதுகேட்டுத்
தீங்கலியாற் செற்ற திருமனத்தான்—பூங்கழலே
மண்ணின்மேல் வைத்துத் தசவென்ற வாய்மையால்
எண்ணினுன் வைத்தா னெயிறு.

ஆங்கு அவன் அ ஆறு உரைப்ப - அப்போது அக் கார்க் கோடகன் அவ்விதம் கூற, அது கேட்டு - அதைக் கேட்டு, தீ கலியால் செற்ற திருமனத்தான் - கொடிய கலிபுருடனால் வென்று அபகரிக்கப்பட்ட தன்திரு மனத்தையுடைய நளன், பூம் கழலே - அழகிய கழல் அணிந்த தன் பாதங்களை, மண்ணின் மேல் வைத்து - தரைமீது வைத்து, வாய்மையால் - அவ்வரவரசன் சொன்ன வாய்ச் சொற்படி, தச என்று எண்ணினுன் - நடந்து பத்து என்று எண்ணி முடித்தான்; (அவ்வாறு பத்து என்று நளன் எண்ணி முடித்த அப்பொழுதே) எயிறு வைத்தான் - அக்கார்க்கோடகன் தன் நச்சுப் பல்லை நளன் காலில் வைத்துக் கடித்தான். தான் அசைச்சொல்.

தீக்கலி என்னற்பாலது எதுகை ஓசை நயம் நோக்கித் தீங்கலி என மெலிந்தது செய்யுள் விகாரம். தீங்கலியாற் செற்ற திரு மனத்தான்: நளன் மனம் கலியினால் கவரப் பட்டுத் தன்னுரிமை யிழந்திருந்தான் என்பது; 198, 266, 317, 356. செய்யுள் களால் விளங்குவது காண்க. தச என்ற சொல்லின் பொருள் இங்கு 'கடி' என்ற ஏவல்வினைப் பொருளில் கார்க்கோடகன் கொள்ள இடமானது இங்கு நோக்கத்தக்கது.

பி - ம். 3. தச வென்றான் வாய்மையினால். (8)

325. வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா
வாம நெடுந்தோள் வறியோருக்—கேமம்
கொடாதா ரகம்போற் குறுகிற்றே மெய்ம்மை
விடாதான் றிருமேனி வெந்து.

மெய்மை விடாதான்-உண்மை வழியே நடப்பதை விடாதவனான நளன், திரு மேனி - அழகிய உருவமைந்த உடல், வெந்து - அக் கார்க்கோடகன் கடித்த விஷத்தால் வேக்காடு உற்று, வீமன் திருமடந்தை - வீமராஜன் செல்வக் குமாரியாகிய தமயந்தி, விழி முடியக் கண்டு அறிபா - தன் விழிகள் முழுதும் கண்டும் கரை

காண முடியாத, வரம்ம் நெடும் தோள் - அவனுடைய அழகிய நீண்ட தோள்கள், வறியோர்க்கு - தரித்திரர்களான இரவலர் களுக்கு, ஈமம் கொடாதார் - பொருள் கொடுத்துதவாதவர், அகம் போல் செல்வம் - குறைவுற்று மனம் அழிவது போல, குறுகிற்று - குறைந்து கருகிச் சுருங்கி அழகிழந்தது.

நளன் மெய்மை விடாதான்; 47, 216. 'வீமன் திருமடந்தை விழிமுடியக் கண்டறியா வாம நெடுந்தோள்'; இது, முன் 'உஞ்சு கரையேற வொட்டுங்கொல்' என்று தொடங்கும், (82.) செய்யு ளில் விளக்கப் பெற்றமை காண்க. ஈமம் - பொன், இது ஹேமம் என்றும் வடசொல்லின் திரிபு; இங்குப் பொருள் என்னும் அளவில் நின்றது; ஈமம் கொடாதா ரகம்; பிசசையிடாதார் மனம், என்றுங் கொள்ளலாம்.

பி - ம். 2. வறியவர்க்குத் தாமே.
3. கொடாதார் தனம்போற் குறுகிற்றே செம்மை. கொடாதார் மனம்போற். 4. திருமேனி மிக்கு. (9)

அரவை நோக்கி நளன் உரைத்தது

326. ஆற்ற லரவரசே யாங்கென் னுருவத்தைச்
சீற்றமொன் றின்றிச் சினவெயிற்றுல்—மாற்றுதற்கின்
றென்கா ரணமென்று னேற்றமரிற் கூற்றழைக்கும்
மின்கா லயின்முகவேல் வேந்து.

அமரில் ஏற்று - போரில் எதிர்நின்று தாங்கி, கூற்று அழைக் கும், பகைவரைப் பற்றிச்செல்ல யமனை அழைப்பதுபோல, மின்கால்- மின்னல் ஒளியைக் கக்கும், அயில் - கூர்மையான அல்லது அரத் தால் அராவப்பெற்ற, முக வேல் - கூரிய அலகாகிய முகத்தைக் கொண்ட வேலையுடைய, வேந்து - அரசனை நளன், (அக்கார்க் கோடகனை நோக்கி)' ஆற்றல் அரவு அரசே - வலிமைமிக்க அரவுக் கரசனே! சிற்றம் ஒன்று இன்றி - என்மீது பகை ஒன்றும் இல்லா திருக்கவும், ஆங்கு என் உருவத்தை - முன்னிருந்த என் உருவை, இங்கு மாற்றுதற்கு காரணம் என் என்றான். இப்பொழுது நீ மரற்று வதற்குக் காரணம் யாது? என்று கேட்டான்.

ஆங்கு, என்பது இங்குக் காலத்தைக் குறித்து வந்தது. ஒன்றுமின்றியே என்பது உம்மை தொக்கி நின்றது, வேல் மின்

கால்வதைக் கூற்றுவனைத் தன் ஒளிகாட்டி அழைப்பதற்கு ஒப்பிடப் பெற்ற நயம் ஓர்க.

பி-ம் : 1. ஆற்ற ரவரசை.
2. சீற்றமொன் றெண்ணிச் ; மாற்றுதலுக், மாற்றுதற்கிங்.
3: கென்காரண ; கூற்றழைத்த, கூற்றனைய,
4. அயின்முனைவேல், மின்கால் வெயின்முகவேல். (10)

அரவின் மறுமொழியும் அது அளித்த வரமும்

327. காயுங் கடகளிற்றுய் கார்க்கோ டகனென்பேர்
நீயிங்கு வந்ததி யாவினைந்து—காயத்தை
மாருக்கிக் கொண்டு மறைந்துறைதல் காரணமா
வேருக்கிற் றென்ருன் விரைந்து.

(கார்க்கோடகன் நளனை நோக்கி), 'காயும் கட களிற்றுய் - சினங் கொள்ளும் இயல்புடைய மதங்கொண்ட யானை போன்றவனே ! என்பேர் கார்க்கோடகன் - என் பெயர் கார்க்கோடகன் என்பதாகும், நீ இங்கு வந்தமை யான்அறிந்து - நீ இங்கு வந்த நிலைமையை நான் தெரிந்து கொண்டு, காயத்தை மாறு ஆக்கிக் கொண்டு - உன் உட்ல் வடிவை நீ வேருக மாற்றிக்கொண்டு, மறைந்து உறைதல் காரண மாய்-மறைந்து இருக்கவேண்டும் என்பதைக் காரணமாகக்கொண்டு, வேறு ஆக்கிற்று என்ருன் விரைந்து - வேற்று வடிவமாக்கியது ஆகும்' என்று விரைவாய் மறுமொழி கூறினன்.

கார்க்கோடகன் விரைந்து கூறியது நளன் தன்மீது சினங் கொள்ளாமல் உண்மையான தன் நல்ல எண்ணத்தை அறிந்து கொள்ளக் கருதி என்க.

பி-ம். 1. காயுங் களிற்றுய்யான் கார்க்கோ டகனென்பேன்.
2. நீயுற்ற வெல்லாம் மிகநிணைந்து,
3. மாருக்கி யெங்கும்.
4. வேருக்கி னேனென்ருண் மீண்டு. (11)

328. கூனிருல் பாயக் குவளை தவளைவாய்த்
தேனிருல் பாயுந் திருநாடா—காலில்
தணியாத வெங்கனலைத் தாங்கினயிந்த
அணியாடை கொள்கென்று னங்கு.

மேலும் அக்கார்க்கோடகன் நளனை நோக்கி), அங்கு - அப் பொழுது, கூன் இருல்-வளைந்த உடலுடைய இருல் மீன்கள், பாய -

நீர்நிலைகளில் துள்ளிப் பாய்வதால், குவளை இருள் தேன்-நீலோற்பல மலர்களின் தேனால் நிரம்பிய தேனடைகளிலே இருந்த தேன், தவளை வாய் பாயும் - ஆங்குள்ள தவளைகளின் (இறந்த பெரிய) வாய்களிற் போய்ப் பாய்ந்து சொரியும், திரு நாடா - வளமிக்க அழகிய நிடத நாட்டையுடைய மன்னனே ! கானில்-காட்டினிடத்தே, தணியாத வெம் கனலை - ஆறுத கொடிய தீயை, தாங்கினாய் - எனக்காகப் பொறுத்துக் கொண்டு ஏற்று என்னை அத்தீயினின்றும் மீட்டுவித்தாய், இந்த அணி ஆடை கொள்க என்றான் - இந்த அழகிய அல்லது அணியத்தக்க ஆடைகளை நீ ஏற்றுக்கொள் வாயாக !' என்று கூறினன். (கூறி அவற்றைக் கொடுத்தான் என முடிவு செய்க.)

இருல் : — முன்னது மீனின் ஒருவகை ; பின்னது, தேனடை, இருல் மீனின் புறம் கூனி வளைந்தது ; 'முடக்கா லிறவின் முடங்கு புறப் பெருங்கிளை' (குறுந். 109.) இருல் - தேனடை ; "ஒண்கொம் பின் றேனிரு லூர்பிறைக்கோட் டாலுடைந்து, விண்கும்பம் வாய் நிறைக்கும் வேங்கடமே" (திருவேங்கடமாலை. 23.) கொள்கென்றான் ; தொகுத்தல் விகாரம், ஆங்கு என்பதைச் சிலர் அசை நிலையாகக் கொண்டனர். ஆங்கு என்பது ஒரு விணையைத் தொடர்ந்து, சென்றாங்கு, கண்டாங்கு என வந்தால்லன்றித் தனித்து வருமிடத்து அசைநிலை யாகாது ; ஆதலின், ஆங்கு என்பதற்கு அப்பொழுது எனப் பொருள் கொள்ளப்பட்டது.

பி - ம் : 3. வெவ்வழலைத் ; தாங்கினாய் மற்றிவ்.
4. கொள்ளென்றான் ஆங்கு. (12)

329. சாதி மணித்துகிளர் சாத்திலைற் றண்கழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரால்—தாதின்
துளிக்குநா நீட்டுந் துறைநாடர் கோவே
ஒளிக்குநா ணீங்கு முரு.

'தண் கழுநீர் போதின் கீழ் - குளிர்ச்சி பொருந்திய செங்கழு நீர் ஆகிய அப்பொழுது மலர்ந்த பூக்களின் கீழே, மேயும் - நீர் நிலையில் மேய்ந்துகொண்டிருக்கும், புது வரால் - அழகிய வரால் மீன்கள், தாதின் துளிக்கு - அச் செங்கழு நீரின் (மகரந்தங்களோடு கலந்த) தேன் துளிக்கு, நா நீட்டும் - தம் நாக்குக்களை நீட்டும், துறை - நீர்த்துறைகளையுடைய, நாடர் - நிடத நாட்டினர்தம், கோவே -

அரசனே! சாதி மணி துகில் நீ சாத்தினால் - உயர்ந்ததும் அழகியதுமான இந்த ஆடைகளை நீ உடுத்துக்கொண்டால், நாள் நீங்கும் உரு- இந் நாள் நீங்கிய உன் உருவம், ஒளிக்கும் - (முன்னிருந்தபடி) ஒளியுடன் விளங்கும்.

புது - அழகிய; 'புதுமயி லூர்பரன்' (கந்தபுரா. அவையடக்கம், 13.) வரால் - ஒருவகை மீன்; 'வராலேற மேதி கலக்கலை நீர்ஊடன்' (209); 'வாளையும் வராலும் நாளிரை யாக'. (பெருங். 1:51;72) காது-தேன், மகரந்தமும் ஆம், சாதி :—உயர்வு; சாதி மாணிக்கம், சாதி மல்லிகை என்பன காண்க. ஒளிக்கும் - ஒளியொடு விளங்கும்; இனி, துகில் சாத்தினால் ஒளிக்கும் உரு நீங்கும் நாள், என இயைத்து ஆடையை நீ உடுத்துக்கொண்டால், இப்பொழுது உள்ள இம் மாறுபட்ட உரு நீங்கும் நாள் ஆகும் எனல் பொருள் கொண்டாரும் உளர்.

பி - ம். 1. மணித்துகிலைச் சாத்தினற் றண்கமல. 2. புனைவரால். 4. ஒளிக்கும்நா ணீங்கு முனக்கு. (13)

330. வாகு குறைந்தமையால் வாகுகனென் றுன்னுமம்
ஆக வயோத்தி நகரடைந்து—மாகனகத்
தேர்த்தொழிற்கு மிக்கானீ யாகென்றுன் செம்மனத்தால்
பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து.

(அக் கார்க்கோடகன் பின்னும்) செம் மனத்தால் பார் தொழிற்கு மிக்கானை பார்த்து-நேரான நடுநிலையுடைய மனத்தினால் உலகாளும் தொழிலில் மேம்பட்ட நளனை நோக்கி, 'வாகு குறைந்தமையால் - உன் தோள்களின் உருவும் அழகும் குறைந்துபோனதால், உன் நாமம் - (இனி) உன் பெயர், வாகுகன் என்று ஆக - வாகுகன் என்ற படியாக, அயோத்தி நகர் அடைந்து - நீ அயோத்தி நகரத்தில் போய்ச் சேர்ந்து, மா கனக தேர் தொழிற்கு - மாட்சிமையுள்ள பொன்னு லமைந்த தேர் ஓட்டும் தொழிலுக்கு, மிக்கான் ஆகுக' என்றுன் - சிறந்தோனாய், ஆவாயாக!' என்று கூறினன்.

வாகு: இது பாகு என்னும் வடசொல்லின் திரிபு. வாகு குறைந்தமையால் வாகுகன் என்று பெயர்கொண்டது; இமையா விழியுடையோரை இமையோர் என்றது போன்றது. நளன் உருக் குறைந்து சுருங்கினமை; 324, 394. வாகு: இது ஆடவர் அங்கங்களுள் சிறந்த தோளின்மேலேற்றிக் கூறப்பெற்றது; இனி வாகு என்பதற்கு அழகு எனவும் பொருள் உண்டு; (சூடா.) கனகத்தேர் என்றமையால், அந்நகர் அரசனிடத்தில் தேரோட்டும் தொழிலில்

அமர்வாயாக' என்று கூறினன். செம்மனத்தால் என்றதைக் கார்க்கோடகனுக்கும் கூட்டிக்கொள்ளலாம்.

பி - ம்: 1. வாகுவனென். 2. ஆகி யயோத்தி.
3. தேர்த்தொழிற்கு மிக்காஞ்சச் செல்கென்றான் தொல்புகழ்ப்.

நளன் அக்கான்கடந்து சென்றது

331. இணையாரு மில்லா னிழைத்த உதவி
புணையாகச் சூழ்கானிற் போனான்—பணையாகத்
திண்ணை மோரெட்டுந் தாங்குந் திசையனைத்தும்
எண்ணை வேந்த னெழுந்து.

பணை ஆகம் ஓர் திண் நாகம் எட்டும் - பருத்த உடலமைப் புள்ள ஒப்பற்ற வலிய திசை யானைகள் எட்டும், தாங்கும் - சுமக் கும், திசை அனைத்தும் - உலகின் திசைகளில் உள்ளோர் யாவரும், எண் ஆகும் அ வேந்தன் - மதிப்பதற்கு உரிய அந்த அரசனை நளன், எழுந்து - அவ்விடம் விட்டு எழுந்து, இணை ஆரும் இல்லான்-ஒப்பு ஒருவர்(தனக்கு) இல்லாத சிறந்த அக்கார்க்கோடகன், இழைத்த உதவி புணை ஆக - தனக்குச் செய்த அவ்வுதவியை ஒரு பற்றுக்கோடாகக் கொண்டு, சூழ் கானில் போனான் - நாற்புறமும் சூழ்ந்து வளர்ந்துள்ள அவ்வடர்ந்த காட்டின் வழியே செல் வானானான்.

நாகம்: பலபொருள் குறித்த ஒரு பெயர்த்திரிசொல்; இஃது இங்கு யானையைக் குறித்தது. இணை - சேர்க்கை அல்லது ஒப்பு. புணை - உதவியும் ஆம். திசையனைத்தும்; திசை இடவாகுபெயராய் எல்லாத்திசைகளிலும் வாழும் மக்களைக் குறித்து நின்றது. உல கத்தை எட்டுத் திக்கயங்கள் தாங்குகின்றன என்பது நம் நூன் மரபு; இனி, எண் நாகவேந்தன் எனக் கொண்டு, கருதற்குரிய நாகராஜனை கார்க்கோடகன் என்றும், இழைத்த உதவி, என் பதற்கு, நளன் தீயினின்றும் அவனைக் காப்பாற்றிய உதவி என்றும் பொருள் கொள்ளலும் ஒன்றும். எண் ஆகு அ வேந்தன் எனப் பிரித்து, அவேந்தன் என ஒற்று இரட்டிக்காமல் எதுகை நோக்கி இயல்பாய் நின்றது எனக்கொள்ளலும் ஆம். இனி, திசை அனைத் தும் எண் ஆக வேந்தன் எனப் பிரிவு செய்து, திசை எங்கும் உள் ளோர், மதிக்கக்கூடியவாறு வேந்தனான நளன் எனவுங் கொள்ளலாம்.

பி - ம். 2. இணையாகத், இணையாதத்,
3. திண்ணை மோரெட்டுந் தாங்குந் திசைமுழுதும்.
4. எண்ணுகும் வேந்த னெழுந்து, எண்ணுகும் வேந்தே. (15)

நளன் கடற்கரையைக் கண்டது

332. நீனைப்பென்னுங் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளும்
கனற்புகைய வேகின்ருன் கண்டான்—பனிக்குருகு
தண்படா நீழற் றனிப்பேடை பார்த்திரவு
கண்படா வேலைக் கரை.

பனி குருகு - குளிரால் நடுங்கும் அன்றில் என்னும் பறவை, தண் படா நீழல் - குளிர்ந்த படா என்னும் ஒருவகை மரத்தின் நிழலில் தங்கியிருந்து, தனி பேடை - தன்னை விட்டுப் பிரிந்து தனியிருக்கும் தன் பெட்டையை, பார்த்து - வரவு பார்த்து, இரவு கண்படா - இரவு முழுதும் கண் மூடாமல் விழித்திருந்து வருந்தும், வேலை கரை - கடற்கரையை, நினைப்பு என்னும் காற்று அசைப்ப - (தன் அன்பிற்குரிய மனைவியான தமயந்திபால் உள்ள) நினைவு என்னும் காற்று அசைத்துத் தன்னைத் தள்ளாடச் செய்ய, நெஞ்சு இடையே மூளும் - (அவளை விட்டுப் பிரிந்து வந்ததால், தன் மனத்தினிடத்து மூண்டு பற்றி எரியும், கனல் புகைய - துன்பத்தீ புகைந்து எரிய, வேகின்ருன் - அதனால் புழுங்கும் நிலையில் இருந்த நளன், கண்டான் - பார்த்தான்.

வேகின்ருன்; வேலைக்கரை கண்டான் என இயைக்க.

குருகு; நாரை, கொக்கு, அன்றில் முதலிய நீர் வாழ் பறவைகளுக்குப் பெயராயினும், இரவில் தன் துணைப் பறவையைப் பிரிந்து வருந்தும் இயல்பினதாகப் பெரிதும் நூல்களிற் பயிலப் பெறும் சிறப்பு நோக்கி, இங்கு அன்றில் எனப் பொருள் கொள்ளப் பெற்றது; 'குருகுப் பெயர் குன்றம்'; (மணி. 5 : 13); குருகுப் பெயர் குன்றங் கொன்ற நெடுவேல் (சிலப். 24 தெய்வம்பராயது). என்பன நோக்குக, குருகுப் பெயர் குன்றம்—கிரௌஞ்ச கிரி; குருகு - கிரௌஞ்சம் அதாவது அன்றில் (பிங். திவா.) குருகு கண்படா நிற்றல்; அன்றிலொருகண் டுயின்றொருகண் ணூர்வத்தால், இன்றுணைமேல் வைத்துறங்கும்'' (115) என்றதும் நோக்குக. படா ஒருவகை மரம்; 'கார்க்கொள் படாக்கள் நின்று கதறிச்சிரிக்க,' (நாச்சியார் திருமொழி 9: 2) படா என்பது பிடவு, பிடவம், பிடா எனவும் வழங்கப்பெறும் என்பர்.

பி - ம். 1. நெஞ்சிடை மூளும், மூள்கும், மீளும்.
2. கனற்புகையால், கனற்புகையே.
3. நீழலிலே தன்பெடையைப் பார்த்திருத்த.

நளன் கடற்கரையில் பலவற்றைக்கண்டு புலம்பல்

333. கொம்ப ரிளங்குருகே கூரு திருத்தியால்
அம்புயத்தின் போதை யறுகாலால்—தும்பி
திறக்கத்தே னூறுந் திருநாடன் பொன்னே
உறக்கத்தே நீத்தேனுக் கொன்று.

(கடற்கரை சென்ற நளன் அங்கிருந்த குருகு என்னும பறவையைக் கண்டு), 'கொம்பர் இளம் குருகே - மரக்கிளையில் தங்கியிருக்கின்ற இளமைப் பருவத்துக் குருகே! தும்பி - வண்டுகள், அம்புயத்தின போதை - தாமரையின் மலரக்கூடிய நிலையில் உள்ள அரும்புகளே, அறுகாலால் திறக்க - தம் ஆறு கால்களாலும் கிளறி நன்ருய் விரியும்படி திறந்துவிட, தேன் ஊறும்—அதனுல் அம்மலர்களினின்று தேன் பெருக்கெடுத்து ஊறிவரும், திருநாடன் பொன்னே, வளம் மிக்க விதர்ப்பநாட் டரசன் பொன்போன்று உயர்வுள்ள மகளே, உறக்கத்தே - அவள் தூங்கும் நிலையிலே, நீத்தேனுக்கு விட்டுத் துறந்து வந்து வருந்தும் எனக்கு, ஒன்று - ஆறுதலாக ஒரு வார்த்தை, கூறுது சொல்லாமல், இருத்தி-இருக்கின்றுய்.' (இது உனக்குத் தகுமோ என்றபடி) ஆல்: அசை.

கொம்பர்: அர், ஈற்றுப்போலி. அம்புயம்: அம்புஜம் என்ற வடசொல்லின் திரிபு: நீரில் பிறப்பது என்னும் பொருளது. நீரில் தோன்றி வளரும் செடி கொடிகள் பல உள்ளனவேனும், அவற்றுள் சிறப்பு நோக்கிக் காரண இடுகுறிப் பெயராய்த் தாமரைக்கே வழங்குவதாகும். தும்பி - வண்டுகளுக்கு மூக்கின் நுனியில் நீண்ட தும்பி என்னும்; ஓர் உறுப்பு உள்ள சிறப்பரல் வழங்கப்பெறும் பெயர். இது போல் யானைக்கும் அதன் நீண்ட துதிக்கை நுனியில் ஒரு சிறு உறுப்பு உள்ளமை காரணமாகத் தும்பி எனப்படுவதும் நோக்குக. தும்பி ஆறு கால்களே யுடையன: அதனுல் அறுகால் என்று வழங்கப் பெறும்; 'அறுகாற் சிறு பறவை' (36)ல் காண்க. பிரிந்த நிலையில் வருந்தும் காதலர் இவ்வாறு, பறவைகள், விலங்குகள், மரஞ் செடிகள் முதலான பல அஃறிணைப்பொருள்களே நோக்கி வருந்திப் புலம்புவதாகக் காப்பியங்களிற் பயிலப் பெறுவது காணலாம்; இதுபோல், 334, 335-ம் ஆம் பாடல்களும் அமைந்துள்ளமை காண்க.

பி - ம். 1. கொம்பா ரிளங்குருகே; கூருது நீரிருத்தீர்.
3. திறக்கத்தேன் பாயும் திருநாடன் மானே.
4. நீத்தானுக் கொன்று. (17)

334. புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு
கன்னிப் பெடையுண்ணைக் காத்திருக்கும்—இன்னருள்கண்
டஞ்சினன் ஞெவி யழிந்தா னறவுயிர்த்து
நெஞ்சினன் லெல்லா நீனைந்து.

பொறி வண்டு - பல புள்ளிகள் தன்மீது (அழகாய்) அமையப் பெற்ற ஆண் வண்டு, புன்னை நறும் தாது கோதி - புன்னை மலர்களின் மணம்நிறைந்த மகரந்தங்களைக் கிளறிவிட்டு, கன்னி பெடை உண்ண காத்து இருக்கும் - தன் காதலியான, இளம் பெண்வண்டு அதனை உண்ணச்செய்து தான் உண்ணுது காத்துக்கொண்டிருக்கும், இன் அருள் கண்டு - அதன் இனிய பேரன்பினைப்பார்த்து, அஞ்சினன் - (நளன் அன்பிற்குரிய மனைவியை இரக்கமின்றி நள்ளிரவில் நடுக் காட்டில் விட்டு வந்த தன் அன்பற்ற செயலை நினைந்து) அச்சங் கொண்டவனாகி, அற உயிர்த்து-பெரிதும் பெருமூச்சு விட்டு, நெஞ்சினல் எல்லாம் நினைந்து - தன் கொடுஞ் செயலையும், அவளுக்கு நேரக் கூடிய ஆபத்துக்கள் பலவற்றையும் தன் மனத்தில் எண்ணிஎண்ணி, ஆவி அழிந்தான் - உயிர் அழிந்துபோகு நிலையிற் சோர்வுற்றான்.

காதலர் பிரிந்துறு துயரை உணர்த்தும் இச்செய்யுளுக்கு ஒப்பு : பாலைக்கலி, 11 ; ஐந்திணை ஐம்பது. 38 ; கம்ப. கிட்கிந்தா. மராமரப். 34 ;.

இச்செய்யுள் நினைப்பணியின் பாலது.

பி - ம். 3. ,யழிந்தா னயர்வுயிரா ; னரையுயிராய். (18)

335. காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றே—நாதம்
அளிக்கின்ற வாழிவா யாங்கலவ வோடி
ஒளிக்கின்ற தென்னை வுரை.

(நளன் அங்கு எதிர்ப்பட்ட ஒரு நண்டை நோக்கி, ' அலவ - ஏ நண்டே ! காதலியை - தன் அன்பிற்குரிய மனைவியை, கார் இருளில் - கரிய நள்ளிரவில், கானகத்தே கைவிட்ட-காட்டினிடத்தே நீக்குத் தனியே விட்டுத் துறந்துவந்த, பாதகனை - பாவச்செயலைப் புரிந்த என்னை, பார்க்க படாது என்றோ - பார்க்கத் தகாது எனக் கருதியோ ? நாதம் அளிக்கின்ற ஆழிவாய் - ஓசையைத் தருகின்ற கடலினிடத்தே, ஆங்கு - அவ்விடத்து, ஒளிக்கின்றது - நீ ஒளித்துக் கொள்கின்றது போலும் ! என்னை உரை - வேறு எக்காரணங் கொண்டோ ? உரை - எனக்குத் தெளிவாய் நீ உரைப்பாயாக !'

மனிதனையோ வேடுருரு பிராணியையோ கண்டால், வெளியே உலவும் நண்டுகள், அஞ்சி, நீரிலோ அல்லது தம் வளைகளிலோ ஒடி ஒளிந்துகொள்ளும் இயல்பின. இது, "நாணின வென்பவை வாணிலா வேய்க்கும், வயங்கொளி யெக்கர்மேல், ஆணுப்பரிய வலவ னளபுகூடும்"; (கலி. நெய்தல்: 14) என்பதால் விளங்குவது காண்க. நண்டு அவ்வாறு ஒடி ஒளிவதைக் கண்ட நளன், 'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்னும், தன்னெஞ்சே தன்னைச்சுடும் என்பனபோலத் தான் செய்த பிழையைக் கருதி, அந்நண்டு தள்ளிய செயலை வெறுத்து என்னைக் காணவும் விரும்பாது ஒடி ஒளிக்கின்றது' என்று எண்ணி வருந்தினன் என்பதாம். ஆங்கு - அப்படி எனலும் ஆம்; ஆங்கினி தொழுகு மதி' (புற. 24: 33); வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்' (குறள். 50) என்றமையும் நோக்குக. இச் செய்யுளில், முதல் இரண்டடிகளின் சீர்கள் முற்றுமோனையாக அமைந்த அழகு நோக்கத்தக்கதாகும்.

பி - ம். 1. கானகத்தே விட்டகன்ற.
2. பார்க்கப் படாதென்னை; பாதகனைக் காணப்.
3. அனைகின்ற வேலையாய் அளிக்கின்ற வேலையாய்.
4. ஒளிகின்ற தென்னை. (19)

336. பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவும்
கானலே வேலைக் கழிக்குருகே—யானுடைய
மின்னிமைக்கும் பூணிளவ் வீங்கிருள்வா யாங்குணர்ந்தால்
என்னினைக்குஞ் சொல்வீ ரெனக்கு.

(மேலும் நளன்), 'பானலே - கருங்குவளை மலர்களே! பசும் தென்றல் வந்து உலவும் சோலை கானலே - புதிய அல்லது குளிர்ச்சியான தென்றல் காற்று வந்து அலைந்து, உலாவும் கானல் என்னும் கடற்கரைச் சோலையே! வேலை கழி குருகே - கடலை அடுத்த உப்பங்கழியில் இருக்கும் நாரையே! (யான் உடைய மின் இமைக்கும் பூணுள் - என்னுடைய ஒளி வீசும் அணிகலன்கள் அணிந்த தமயந்தி, ஆங்கு அ வீங்கு இருள்வாய் - நான் அவளைத் துறந்து வந்த அப்பேரிருளிடத்தே, உணர்ந்தால் - விழித்துக்கொண்டால், என்னை நினைக்கும் - என்னைப்பற்றி என்ன எண்ணங்கொள்வாள்? எனக்கு சொல்வீர் - அதனை எனக்கு நீவிர் சொல்வீராக!

பானல் - கருங்குவளை; (பிங்.) பசுந்தென்றல்: பசுமை-புதுமை. கானல் - கடற்கரை யடுத்த சோலை, 'கானல் வேலிக் கழிசூழ் நாகை'. (திருஞான தேவாரம்). குருகு-நீர்வாழும் பறவைகளின் பொதுப்பெயரும்

ஆம்; (332, 333) யானுடைய - என்னுடைய; 'நானுடை தூய்மை காட்டவு மித்துணை தூங்கினேன்'; (கம்ப. சுந்தர: 629) என்றதுபோல. என்னினைக்கும் - என்னென்ன எண்ணிவருந்துவாள் என்றலும் ஆம்.

பி - ம். 1. கான்ற பசுந்தென்றல். 2. தேனினமே.
4. என்னிழைக்குஞ்; சொல்லீ ரெமக்கு. (20)

இதன்பின், அச்சுப்பிரதிகளில்,

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்— தீவாய்
அரவகற்று மென்போல வார்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொ லின்று.

என்ற ஒரு பாடல் உள்ளது. இது நளனுக்கும் கடலுக்கும் சிலேடையாக அழகுற அமைந்துள்ள தெனினும், பிரிவுறு துயரிற்பட்ட தலைவன் தலைவியரை இவ்வாறும் பிறவாறும் கடலுக்கு உவமித்துள்ளமை பல நூல்களில் காணப்பெறுவன வுள எனினும், யாம் ஆராய்ந்த பல அரிய பழைய ஏட்டுச்சுவடிகளில் இச்செய்யுள் இல்லாமையால் இங்குப் பாடவரிசையிற் சேர்க்கும் துணிவின்றித் தனியே குறித்துக் காட்டப்பெற்றது.

நளன் அயோத்தி நகரைடைந்து

337. முன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப
நன்னீ ரயோத்தி நகரடைந்தான்—பொன்னீர்
முருகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
அருகுடைக்கு நன்னாட் டரசு.

பொன் நீர் முருகு உடைக்கும் - பொன்னின் நிறமுடைய தேன், உடைக்கும் - தானே இயல்பாக உடைத்து வெளிவரச் செய்யும், தாமரையின் மொய் மலரை - தாமரையின் நெருங்கிய இதழ்கள் அமைந்த மலர்களை, தும்பி - வண்டுகள், அருகு உடைக்கும் - சிறிது உடைத்து வழி உண்டாக்கும், நல் நாட்டு அரசு - (வளஞ்செறிந்த) அழகிய நிடத நாட்டையுடைய நளன், முன்னீர் மடவார் - கடலிலச் சார்ந்த நெய்தல் நில மகளிர், முறுவல் திறள் குவிப்ப - தம் பற்கள் போன்ற முத்துக்களைப் பொறுக்கித் திரட்டிக் குவித்துக்கொண்டிருக்க, (அவ்வளச் சிறப்பைப் பார்த்துக்கொண்டு, நல் நீர் அயோத்தி நகர் அடைந்தான் - நல்ல நீர் மிகுந்த அயோத்தி நகரைப் போய்ச் சேர்ந்தான்.

தாமரைப் போதுகளுள் உள்ள பொன்னிறமான தேன், பெருகி அம்மலர்களே உடைத்துக்கொண்டு தானாக வெளிவரும் இயல்புடையதை வண்டுகள் சென்று சிறிது உடைத்து வெளிவரச் செய்யும் சிறப்புடைய நிடத நாடு என்பதாம். பொன் நீர் முருகு, என்பதை தேனுக்குக் கூட்டாமல் தாமரைக்குக் கூட்டினரும் உளர். தாமரை மலரினும் அதன் தேன் பொன் நிறமானது என்பதே சிறக்கும், அருகு - சிறிதாக; 'மாதர் அருகூட்டும் பைங்கிளி - என்று முன்னர்க் (21) கூறியுள்ளமையும் நோக்குக. வண்டுகள், மலரக் கூடிய போதுகளைத் தம் தும்பிகளால் உடைத்துத் தேனை வெளிப்படுத்தும் இயல்பு, முன், பீடாருஞ் செல்வப் பெடைவண்டோ-டோ - முருகுடைய' என்றமையாலும் அறியலாம். அருகுடைக்கும் என்பதற்கு, ஓரத்தில் உடைத்துவிடும் என்றார் ஒரு சாரார். முன்னீர் மடவார் முறுவல் திரள் குவிப்ப - கடலிலச்சார்ந்த நெய்தனில மகளிர், கடற்கரையில் முத்துக்களைக் குவித்து அவற்றால் வீடு கட்டி விளையாடுவதும், மற்ற பண்டங்களோடு சிதறிக் கலந்து கிடக்கும் முத்துக்களைக் கொழித்து எடுப்பதுமான சிறப்பு,

'குற்ற பாகு கொழிப்பவர் கோணெறி
கற்றி லாத கருங்க ணுளச்சியர்
முற்றி லார முகந்து தம்முன்றிலின்
சிற்றில் கோலிச் சிதறிய முத்தமே.'

என்று கல்வியிற் பெரியார் கூறியுள்ளமையால் விளங்குவது காண்க. (கம்ப. பால. நாட்டுப். 29). இச் செய்திகள் கோவை, பிள்ளைத் தமிழ் ஆகிய பிரபந்தங்களிற் பயிலப்பெறுவனவும் உள. இனி, முன்னீர் - கடல், மடவார் முறுவல் திரள் குவிப்ப - தன் அலைகளால் மகளிர் பற்களைப் போன்ற முத்துத் திரள்களை கரையில் குவித்து ஒதுக்க; எனப் பொருள் கொண்டாரும் உளர். இச்செய்யுளால் நளன், கார்க்கோடகனைத் தீயினின்றும் விடுவித்து, அக்காட்டினின்றும் வெளிப்போந்து, கடற்கரையை அடைந்து பின் நன்னீர் அயோத்தி நகரை அடைந்தான் என அறியற்பாலதாம். முன்னீர்:—உலகம் தோன்றிய முன்னர் தோன்றிய கடல்; இது ஆற்று நீர், ஊற்று நீர், வானீர் எனும் மூன்று வகை நீர்களைத் தன்னிடங் கொண்ட கடல் எனும் பொருளில் மூன்நீர் என வழங்கி வருவது முண்டு; சிலப், அடியார்க். உரை. முறுவற்றிரள்; உவமை ஆகுபெயர்.

பி - ம். 1. நிரட்கொழிக்கும், நிரள் குவிக்கும்.
2. .....மன்னும்.

(21)

நளன் அயோத்தி மன்னனை அடைதல்

338. மான்றேர்த் தொழிற்கு மடைத்தொழிற்கு மிக்கோனென்
றூன்றேய்க்கும் வேலா னுயர்நறவத்—தேன்றேய்க்கும்
தார்வேந்தற் கென்வரவு தானுரைமி னென்றுரைத்தான்
தேர்வேந்தன் வாகுகனுய்ச் சென்று.

ஊன் தேய்க்கும் வேலான் - பகைவர்களுடைய உடல்களின் மாமிசம் தேய்க்கப்பெற்றது போலப் படிவுற்றிருக்கும் வேலேந்தியவனும், தேர் வேந்தன் - தேர் ஓட்டுவதில் வல்லவனுமான நளன், வாகுகனுய் சென்று - வாகுகன் என்னும் பெயருடையவனுகப்போய் அவ்வயோத்திநகர் அரண்மனையை யடைந்து, உயர் நறவம் தேன் - சிறந்த மனமுடைய தேனை, தேய்க்கும் - உடலில் தேய்த்துப் படியும்படி செய்யும், தார் வேந்தற்கு - மாலை யணிந்துள்ள அரசனை இருதுபன்னனுக்கு, மான் தேர் தொழிற்கும் - குதிரைகள் பூட்டப் பெற்ற தேர் ஓட்டும் சாரதித் தொழிலுக்கும், மடை தொழிற்கும் - சமையல் வேலைக்கும், மிக்கோன் என்று - நான் சிறந்தவனென்று என் வரவு தான் உரைமின் என்று உரைத்தான் - யான் இங்கு வந்துள்ளதைப் போய்ச் சொல்லுங்கள்' என்று (அங்கிருந்த வாயிற் காவலரிடம்) கூறினன்.

மான் தேர்; மான் - குதிரை, 'வாவு மான் றேரிற் செல்வான்'; (கம்ப, பால, உலாவியல். 6,) ஊன் தேய்க்கும் வேல்: 'ஊன் செய்த வடிவேலான்' (கம்ப. பால. திருவவதாரப்; 60), 'ஊன் சேர் கடுவே லுதயணன்'; (பெருங். 2 : 8 : 116) என்பன போல.

பி - ம். 2. வேலா னுளமுருகித்; தேன்றேய்பூம், தான்றேய்க்கும்; வெள்வே னுயர்த்தாற்குச்.
3. கென்னிலைமை தானுரைமின்; சாற்றுமினென், சாற்றுலீர்.
4. வாகுவனுய்ச்.

இதன்பின் அச்சுப் பிரதிகளில் அடியிற் காணும் ஒரு பாடல் உள்ளது:—

அம்மொழியைத் தூத ரரசற் கறிவிக்கச்
செம்மொழியாத் தேர்ந்ததனைச் சிந்தித்தே—இம்மொழிக்குத்
தக்கானை யிங்கே தருமி னெனவுரைத்தான்
மிக்கானுஞ் சென்றுன் விரைந்து.

இச்செய்யுள் பழைய ஏட்டுப் பிரதிகளில் இல்லை. (22)

339. பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தன்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன்—ஐயநீ
எத்தொழிற்கு மிக்கானீ யாதுன் பெயரென்ருன்
கைத்தொழிற்கு மிக்கானைக் கண்டு.

தேர்வேந்தன் - தேரையுடைய அரசனை இருதுபன்னன், பொய் அடையா சிந்தை - பொய் சேராத மனமுடைய, புரவலனை - அரசனும், கை தொழிற்கு மிக்கானை - தன் கைத்தொழில்களால் சிறப்புற்றவனுமான நளனை, கண்டு - தன் எதிரில் வரக்கண்டு, தன் செய்ய முகம் மலர்ந்து நோக்கி - தன் அழகிய முகம் (மகிழ்ச்சியால்) மலர்வுற்று அவனைப் பார்த்து, 'ஐய - ஐயனே! நீ எ தொழிற்கு மிக்கான் - நீ எந்தத் தொழிலில் தேர்ந்தவன்? யாது உன் பேர் - உன் பெயர் யாது?' என்ருன் - என்று கேட்டான் கொல்: அசைநிலை.

நளன் பொய்யடையா மனத்தன், அதாவது உண்மையுரைப் பவன்; (47) உரை நோக்குக. அரசனைக் கூறும்பொழுது அவனது தசாங்கங்களின் ஒன்றை முன்னிட்டுச் சிறப்பிப்பது கவி மரபு ஆதலின், இங்கு இருதுபன்னனைத் தேர்வேந்தன் என்ருர் ஆசிரியர். அரசனது தசாங்கமாவன:— யானை, நாடு, குதிரை, ஊர், ஆறு, மலை, தானை, முரசு, தார், கெர்டி. (பிங். நூடா.); பிறவாறும் கூறப்பெறும். இருதுபன்னனுக்குப் பாகஸ்வரி என்று ஒரு பெய ருண்டென்பது, நளோபாக்யானத்தால் அறியப்பெறும்.

பி - ம். 2. செய்ய மனமுருகித்;
3. எத்தொழிற்கு மிக்காய்நீ யாரென்ருன் பேரென்ருன்,
எத்தொழிலின் மிக்கனை கொல்.
4. மிக்கானைக் கண்டு. (23)

340. அன்ன மிதிப்ப வலர்வழியுந் தேறல்போய்ச்
செந்நெல் விளைக்குந் திருநாடர்—மன்ன
மடைத்தொழிலுந் தேர்த்தொழிலும் வல்லன்யா னென்ருன்
கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து.

கொடைத் தொழிலின் மிக்கான் - ஈகைச் செயலில் மேம்பட்டவனை நளன், (இருதுபன்னனை நோக்கி), 'அன்னம் மிதிப்ப - அன்னப் பறவைகள் ஏறி மிதிப்பதால், அலர் - தாமரை மலர்களினின்றும், வழியும் - வழிந்து ஓடும், தேறல் - தேன், போய் - பெருகி ஓடிச்சென்று, செம் நெல் விளைக்கும் - சிவப்புச் சம்பா நெற்பயிர்களை நன்ருய் விளையும்படி உரம் ஊட்டும், திருநாடர் மன்ன - அழகி

கோசல நாட்டவர் அரசனே! மடை தொழிலும் - சமையல் தொழிலிலும், தேர் தொழிலும் - தேரோட்டுஞ் சாரதித் தொழிலிலும், யான் வல்லன் - நான் தேர்ந்தவன்,' என்றான் குறித்து - என்று குறிப்பிட்டுக் கூறினான்.

நளன் கொடையில் மிக்கவன்; 366, 377, 390. இருதுபன்னன் நாடான கோசல நாடு செந்நெல் வளம் மிக்கது; (140).

பி - ம். 1. அன்னமிதித்த; வலர்கழியப் பைந்தேன்போய்ச்.
2. செந்நெலெலாம் மூழ்குந் திருநாடா—மன்னும்.

இதன்பின் அச்சுப்பிரதி ஒன்றில், "குறித்துரைத்த வாறக் குலவேந்த னேன்று, மறித்துரையா னுங்கவனும் வைக - வெறித்த விள, மான்போல் விழியாண் மகிழ்நனிலை யேதெனவே, ஊன்போ லுயங்குவா ளோர்ந்து". என்றோர் பாடல் உள்ளது. (24)

தமயந்தி நளனைத்தேடப் புரோகிதனை விடுத்தது

341. என்னை யிருங்கானி னீத்த விகல்வேந்தன்
தன்னை நீ நாடுகெனத் தண்கோதை—மின்னுப்
புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக் கிந்த
உரைபகர்வ தாலு ணர்ந்து.

தண் கோதை - குளிர்ந்த கூந்தலையுடைய தமயந்தி, மின்னு புரை - மின்னலை ஒத்த, கதிர் வேல் வேந்தன் - சுடர் வீசும் வேலேந்திய அரசனை பீமராஜனுடைய, புரோகிதனுக்கு - புரோகிதரான அந்தணரிடம், 'என்னை இரும் கானில் நீத்த இகல் வேந்தன் தன்னை - என்னை பெருங் காட்டில் தனியே விட்டுச் சென்ற, போர்மன்னனை நளனை, நீ நாடுக என - நீவிர் போய்த் தேடிக் கண்டறிவீராக!' என்று, உணர்ந்து - ஆலோசனை செய்து, இந்த உரை பகர்வது ஆனள் - பின்வருமாறு உள்ள இந்தச் சொற்களைச் சொல்லலானாள், (சொன்னவை அடுத்த செய்யுளிற் காண்க.)

நாடுகென: நாடுகவென என்பதின் தொகுத்தல் விகாரம். தண் கோதை: குளிர்ந்த மாலையணிந்த தமயந்தி என்றலும் ஒன்றும்; இது பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இனி, கோதை என்பதற்குக் கூந்தலையுடைய தமயந்தி எனக் கொண்டால் அது சினையாகுபெயர் என்பதாம். புரோகிதன்:— இது புரோஹிதர் என்ற வடசொற் றிரிபு; அலுவல்களை முன்னின்று நடத்துபவர் என்னும் பொருளது. இது வைதிக காரியங்களை நடத்திவைக்கும் அந்தணருக்கு வழங்கப்பெறுவதாகும்.

புரோகிதன் அரசனது ஐம்பெருங் குழுவினுள் ஒருவனும் ஆவன். (தினகரம்); மனி. 1 : 17 உரையிலுங் காண்க. தமயந்தி நளனைத் தேடி யறிந்துவர அனுப்பிய புரோகிதர் பர்ணாதன் என்னும் பெயரினர் என நளோபாக்யானமும் நைடதமும் கூறும். மின்னு : உகரம் சாரியை; கல்லு, சொல்லு என்பன போல.

பி - ம். 4. உரைபகர்வ தாரு ளுவந்த. (25)

342. காரிருளிற் பாழ்மண் டபத்தேதன் காதலியைச்
சோர்துயிலி னீத்த றுணிவன்றே—தேர்வேந்தற்
கென்றறைந்தா னேர்நின் றெதிர்மாற்றந் தந்தாரைச்
சென்றறிந்து வாவென்ரு டேர்ந்து.

'கார் இருளில் - கரிய இருட்டிலே, பாழ் மண்டபத்தே - (கானி விருந்த) பாழடைந்து போன மண்டபத்திலே, தன் காதலியை - தன் அன்பிற்குரிய மனைவியை, சோர் துயிலில் - அயர்ந்த உறக் கத்தில், நீத்தல் - விட்டுச் சென்ற செயல், தேர் வேந்தற்கு துணிவு அன்றே - தேரையுடைய அரசனுக்குத் துணிவு கொண்ட செயல் அல்லவோ? என்று அறைந்தால் - என நிவிர் போய்ச் சொல் வீரானால், எதிர் மாற்றம் தந்தாரை - அதற்கு மறுமொழி சொன் னவரை, சென்று - நீவிர் தேடிச் சென்று, தேர்ந்து அறிந்து வா என்ருள் - ஆராய்ந்து அறிந்து வருவீராக' என்று கூறினுள்.

கார் இருள்; மிகுந்த இருளும் ஆம்; கருமை - பெருமை. சென்று தேர்ந்து அறிந்து வா என்றது; அதற்கு மறுமொழி கூறினவரைப் போய்ப் பார்த்து அவரது செயல், உருவம் பேசிய உணர்ச்சி, முதலியவற்றை நன்ருய் ஆராய்ந்து அறிந்து வருவீராக! என்பதாம்.

பி - ம். 1. பாழ்மண்ட பத்திற்றன்.
2. நீத்தல் தொலைவன்றே; துணிவன்றே.
4. வாவென்ருன் தேன். (26)

புரோகிதன் அயோத்தி யடைந்தது

343. மின்னுடு மால்வரையும் வேலியும் வேலிசூழ்
நன்னுடுங் கானகமு நாடினன்—மன்னு
கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
அடைந்தா னயோத்தி நகர்.

மின் ஆடும் மால்வரையும் - மின்னல்கள் அசைந்து விளங்கும் பெரிய மலைப்பிரதேசங்களிலும் வேலையும் - கடல் இடங்களிலும், வேலை சூழ் நல் நாடும் - கடல் சூழ்ந்த நல் வளமிக்க நாடுகளிலும், கானகமும் - காடுகளிலும், நாடினன் - (நளனைத்) தேடிச்சென்ற அந்தப் புரோகிதர், மன்னும் - பொருந்திய, கடம் தாழ் - மதம் ஒழுகுகின்ற, களி யானை காவலனை - செருக்குற்ற யானை போன்ற அரசனை நளனை, தேடி - தேடிச்சென்று, அயோத்தி நகர் அடைந்தான் - அயோத்தி என்னும் நகரத்தைப் போய்ச் சேர்ந்தார்.

அப்புரோகிதர், வரை, வேலைசூழ் நன்னாடு, கானகம் ஆகிய குறிஞ்சி, நெய்தல், மருதம், காடு என்னும் நானிலப் பகுதிகளிலும் தேடிச் சென்றார் என்பதாம்; பாலை மனிதர் தங்கியிருக்கத் தக்க நிலம் அன்றாதலின் அது விலக்கப் பெற்றது. நன்னாடு - வளமிக்க மருதநில நாடு. நாடினன்: வினையாலணையும் பெயர்.

ஒரு பிரதியில் இச்செய்யுள் அடியிற் காணுமாறு மாறியுள்ளது:—

மின்னுடு மாலயமும் வேலையும் மால்வரையும்
நன்னுடுங் கானகமு நாடிப்போய்—பின்னுள்
கடந்தான் களியானைக் காவலனைத் தேடி
நடந்தா னயோத்தி நகர்.

பி-ம். 1. மன்னுடு மால்வரையும் வேலையுமாலயமும்.
2. கானகமு நாடிப்போய். 3. காவலனைத் தேர்வான். (27)

புரோகிதன் கூறிய மொழிகேட்டு நளன் கூறிய மறுமொழி

344. கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ—தானென்று
சாற்றினனந் தவுரை தார்வேந்தன் றன்செவியில்
ஏற்றினன் வந்தா னெதிர்.

(அயோத்தி நகரில் அப்புரோகிதர்), 'காதலியை - அன்பிற்குரிய தன் மனைவியை, கானகத்து கார் இருளில் கைவிட்டு - காட்டில் கரிய நள்ளிரவில் தன்னந்தனியளாய் இருக்க விட்டு நீங்கி, போனவும் - போன செயலும், வேந்தற்கு போதுமோ - அரசனுக்கு ஏற்ற செயலாகுமோ?' என்று சாற்றினன் - என்று கூறினர்; தார் வேந்தன் - மாலை அணிந்த அரசனை நளன், அந்த உரை - புரோகிதர் கூறிய அந்த வார்த்தைகளை, ஏற்றி

ஞன் - தன் செவியில் ஏறத் தாங்கப்பெற்றவனுகி, எதிர் வந்தான் - புரோகிதர் எதிரே வந்தனன்.

புரோகிதர் கூறிய அம்மொழிகள் தன் செவியிற்ருங்கி எதிர் வந்தான் என்பதாம். நளன் தமயந்தியைப் பிரிந்து வாகுகனுய் அயோத்தி மன்னனிடம் தேர்த்தொழிலும் மடைத்தொழிலும் புரிந்து மறைந்து வாழ்ந்து வந்தானெனினும், இரவெல்லாம் துயிலாது தமயந்தியை நினைந்து வருந்தினனென நளோபாக்யானத்தாலும், நைடதத்தாலும் அறியப் பெறுவதால், அப்புரோகிதர் மொழி கேட்டதும் ஆற்ருது வருந்தி முன் வந்தான் என்பதாம்.

பி - ம். 1. கானகத்திற் காதலியைக்.
2, போனதூஉம்; வேந்தற்குப் போதமதோ—தானின்று. (28)

345. ஒண்டொடி தன்னை யுறக்கத்தே நீத்ததூஉம்
பண்டை விதியின் பயனேகாண்—தண்டரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தானென் றையுறே னீ.

(வாகுகனுகிய நளன் அப்புரோகிதரை நோக்கி), 'தண் தரள பூ தாம வெண்குடையான் - குளிர்ச்சியுடைய முத்துக்களால் அமைந்ததும் பூமாலைகளையுடையதுமான வெள்ளைக்குடையையுடைய நளன், பொன் மகளை - திருமகள் போன்ற அத்தமயந்தியை, வெம் வனத்தே - கொடிய காட்டினிடத்தே, நீத்தான் என்று - விட்டுத் துறந்து சென்ருன் என்று, நீ ஐயுறேல் - நீவிர் (அவன்மீது குற்றஞ்சாட்டி) சந்தேகப்படாதீர்! ஒண்மை தொடி தன்னை - ஒளியுடைய வளையல்கள் அணிந்த அத்தமயந்தியை, உறக்கத்தே - அவள் தூங்கும்போது, நீத்ததூஉம் - அவன் விட்டுச் சென்றதும், பண்டை விதியின் பயனே - முன் செய்த வினையின் விளைவே ஆகும், காண் - இதனை நீவிர் அறிந்து கொள்வீராக!' (என்ருன் நளன்).

ஒண்டொடி - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. பண்டை: ஐயீற்றுக்குற்றுகரம். தண் தரள பூ தாம வெண் குடை - குளிர்ந்த முத்துக்களாலமைந்த அழகிய மாலைகளையுடைய வெண்குடை என்னலும் அமையும்; எனினும், முத்துக்களால் அமைந்த குடையே தண்ணிழல் தருவதாதலின், தரளக்குடை எனவும் பூ தாமக்குடை எனவும் பொருள் கொள்ளப்பெற்றது. வெண்குடையான் என்பதை

வீமராஜனுக்கு ஆக்கி, அவனது பொன் மகள்: அதாவது - திரு மகள் போன்ற மகள் என பொருள் கொண்டாரும் உளர். அரசன் குடையில் மாலை விளங்குதல்: 'தலைத்தாமம் தொக்க கவிகைக் குலோத்துங்க சோழனே' (குலோத்துங்க. உலா: 128-29).

இதன்பின் அச்சுப்பிரதி ஒன்றில்,

"அம்மொழிகேட் டந்தணனு மையுற் றுறநோக்கி
விம்பு கருங்குழலை மீண்டடைந்தான்—தெம்மன்னர்
ஊன்றேரூய் வடிவேல் விதர்ப்ப ணெண்ணகர்க்கே
வான்றேரூய்பொற் கோயிலிடை வந்து"

என்றொரு பாடல் உள்ளது.

பி-ம். 1. ஒண்டொடியா டன்னை; நீத்ததுவும்.
2. பண்டை வினையின் பயனேதான். (29)

தமயந்தி வந்த புரோகிதனை விளவியது

346. எங்க ணுறைந்தனைகொ லெத்திசைபோய் நாடினைகொல்
கங்கைவள நாட்டார்தங் காவலனை—அங்குத்
தலைப்பட்ட வாறுண்டோ சாற்றென்றாள் கண்ணீர்
அலைப்பட்ட கொங்கையா ளாங்கு.

கண் நீர் அலைபட்ட கொங்கையாள் - கண்ணீர் (பெருகி வழிய அதனால்) அலைக்கப்பெற்ற கொங்கைகளையுடைய தமயந்தி, ஆங்கு - அப்பொழுது, (மீண்டு வந்த புரோகிதரை நோக்கி), 'எங்கண் உறைந் தனை - நீவிர் எங்கெங்குப் போய்த் தங்கினீர்? எ திசை போய் நாடினை - எந்த எந்தத் திசைகளெல்லாம் போய்த் தேடிப் பார்த்தீர்? கங்கை வளநாட்டார் தம் காவலனை - கங்கையின் நீர் வளம் பொருந்திய நிடத நாட்டு மக்களுடைய அரசனை நளனை, அங்கு தலை பட்ட ஆறு உண்டோ - அவ்விடங்களில் எங்கேனும் நீவிர் நேரில் கண்டவிதம் ஏதேனும் உள்ளதோ! சாற்று என்றாள் - கூறுவீராக!' என்று வினவினாள். கொல்: ஈரிடங்களிலும் அசை நிலைகள்.

தலைப்படுதல் - எதிர்ப்படுதல்; 'தாங்கரிய பேராற்றற் ருட கையே தலைப்பட்டாள்; (கம்ப. பால. குலமுறை: 25).

பி-ம். 1. எங்கெங் கறிந்தனைகொ லெத்திசைக்கே நாடினைகொல்.
4. அலைப்பட்ட கோதையா ளாங்கு. (30)

புரோகிதன் பறுமொழி

347. வாக்கினுன் மன்னவனே யொப்பான் மறித்தொருகால்
ஆக்கையே நோக்கி னவனல்லன்—பூக்கமழும்
கூந்தலாய் மற்றக் குலப்பாக னென்றுரைத்தான்
ஏந்துநூன் மார்ப னெடுத்து.

ஏந்து நூல் மார்பன் - அணிந்துள்ள பூணூலையுடைய மார்ப னுமிய அப்புரோகிதர், (தமயந்தியை நோக்கி) 'பூ கமழும் கூந்த லாய் - பூக்கள் மணம் வீசும் கூந்தலையுடைய தமயந்தியே! அ குல பாகன் - (அயோத்திநகரில் யான் கண்ட) சிறந்த தேர்ப்பாகன் ஒருவன், வாக்கினுல் மன்னவனே ஒப்பான் - சொற் சிறப்பினுல் நளராஜனே ஒத்திருக்கின்றான்; மறித்து ஒருகால் - திரும்பி ஒரு முறை, ஆக்கையே நோக்கின் - அவன் உடம்பைப் பார்த்தால், அவன் அல்லன் - அவன் அம்மன்னனுக்கு ஒப்பு ஆகான்; (அதா வது முற்றும் வேருக உள்ளான்,') என்று எடுத்து உரைத்தான் - என்று எடுத்துக் கூறினர். மற்று : அசை.

வாக்கு : பேசும் ஒலியும், முறையும் ஆம். குலவேந்தன் உயர்ந்த அரசன்; குலத்தேர் (354) என்றது போல. பீமனைக் குலவேந்தன் (55) என்று முன் கூறியதும் நோக்குக. மறித்து - திரும்பி.

பி - ம். 1. யொக்கும் மறித்தொருபால்.
2. நோக்கி லவனல்லன்—பூக்கமழ்ந்த. (31)

தமயந்தி தன் இரண்டாஞ் சுயம்வரச் செய்தி அறிவிக்கச் செய்தது

348. மீண்டோர் சுயம்வரத்தை வீமன் றிருமடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைத்தால்—நீண்ட
கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்கோலங் கொள்வான்
படைவேந்த னென்றுள் பரிந்து.

(அதுகேட்ட தமயந்தி), 'அந்தண - மறையோய்! வீமன் திரு மடந்தை - பீமராஜனுடைய அழகிய பெண்ணை தமயந்தி, மீண்டு ஓர் சுயம்வரத்தை பூண்டாள் என்று - மறுபடியும் ஒரு சுயம்வரத் திருமணத்தை மேற்கொண்டாள் என்று, நீ போய் உரைத்தால் - நீவிர் அவ்வயோத்தி நகர்க்குப் போய்ச் சொல்லுவீரானுல், படை வேந்தன் - போர்ப்படைகளையுடைய (என் தலைவனை) நளராஜன், நீண்ட கொடை வேந்தற்கு - கொடைத்தொழிலால் புகழ் பரவிய

அரசனை அவ்விருதுபன்னனுக்கு, இ தூரம் - இவ்வளவு தூரம் உள்ள இங்கு, தேர் கோலம் கொள்வான் - பாகனுகித் தேர் செலுத்தி வருவான்,' என்றுள் பரிந்து - எனப்பற்று மேலிட்டுக் கூறினுள்.

பி - ம். 3. படைவேந்தற் கித்தூரம் பாய்பரித்தேர் கொன்வான்; கொற் றத்தே ரூர்வான்.
4. னென்றுள் பதைத்து; கொடைவேந்த னென்றுள் குழைத்து.

இரண்டாஞ் சுயம்வரச் செய்தி கேட்டு இருதுபன்னன் கூறியது

349. எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் முரச மறைவித்தான்—செங்கோலாய்
அந்நாளு நாளை யளவென்று னந்தணன்போய்த்
தென்னுளுந் தாரானைச் சேர்ந்து.

அந்தணன் - அதைக்கேட்ட புரோகிதனை அம்மறையவன், போய் - அவ்வாறே அயோத்தி நகருக்குச் சென்று, 'எம் கோன் மகளுக்கு - எங்கள் இராசனை பீமராஜன் புதல்வி தமயந்திக்கு, இரண்டாம் சுயம்வரம் என்று - இரண்டாவது சுயம்வர மணம் நடக்கப்போகிறதென்று, அங்கு - அந்நகரில், ஓர் முரசம் அறை வித்தான் - ஒரு முரசு முழக்கித் தெரிவித்து, தென் ஆளும் தாராளைப் பார்த்து - வண்டுகள் வந்து தங்கித் தம்மிடமாகக் கொண்டு வாழும் மாலை அணிந்த இருதுபன்னராஜனைப் போய்ப் பார்த்து, 'செங்கோலாய் - நேரான ஆட்சியுடைய அரசனே! அ நாளும் - அந்தச் சுயம்வர நாளும், நாளை அளவு - நாளையே குறிப்பிட்ட காலத்தின் அளவாகும்;' என்றுள் - என்று கூறினன்.

தென் - தேன்; அதாவது வண்டு; குறுக்கல் விகாரம்; "தென் னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்" (கம்ப. பால. மிதிலைக்காட்சி: 23); தென்னுளுந் தார் - தேன்பாடுந் தார். இவ்வா றின்றி, தென்னுளும் தாரான் என்பதற்கு - அழகிருந்து ஆளும் மாலையுடைய இருதுபன்னன் எனப் பொருள் கொள்ளலும் ஆம். இந்த இரண்டாம் சுயம்வரம் நடப்பது என்ற செய்தியைப் பீமராஜ னுக்குத் தெரிவிக்காமலே, தமயந்தி இருதுபன்னனுக்கு மட்டும் போய் அறிவிக்குமாறு செய்ய, அந்தணன் அவ்வாறு அறிவித் தான் என்க. அவ்வயோத்தி நகரில் அவ்வரசனுக்குத் தேர்ப்பாக னும் சமையற்காரனுமாக அமைந்துள்ளவன் நளன் என ஊகித்து, அவ் வொருநாட் பொழுதுக்குள் அவ்விருதுபன்னனுக்குத் தேர்

நடத்திக்கொண்டு அங்கு வரக் கூடியவன் அந்நளனே ஆவன் என்றும் தீர்மானித்துக் கூறினள் ஆதலின் என்க. வீமராஜனுக்கு இச் செய்தி தெரியாமல் நடந்தது என்பது, பின் அங்குவந்த இருதுபன்னனே வீமராஜன், "நீ யென்பா லெய்தற் கவாவிய வாறென்" (363) என்று வினவியதால் விளக்கமுறுவது காண்க; நளோபாக்யானமும் இவ் விரண்டாம் சுயம்வரச் செய்தி, தமயந்தி தன் தாய்க்கு மட்டும் தெரிவித்திருந்த இரகசியச் செயல் எனக் கூறுவதும் இங்கு நோக்கத் தக்கது. ஆதலின், வீமராஜனே இரண்டாம் சுயம்வரம் குண்டினபுரியில் ஏற்பாடு செய்துள்ளான் எனப் புரோகிதன் இருதுபன்னனிடம் கூறினன் எனப் பொருள் கொள்வது சரித இயைபுக் குரியதன்று. எனவே, அறைவித்தான் என்பதை முற்றெச்சமாகக் கொண்டு, அறைவித்து எனப் பொருள் கொள்ளப் பெற்றது.

பி-ம். 3. அந்தணர்கோன். 4. தென்னூடுந் தாராணைச். (33)

350. வேத மொழிவாணன் மீண்டுஞ் சுயம்வரத்தைக்
காதலித்தாள் வீமன்றன் காதலியென்—ரோதினன்
என்செய்கோ மற்றிதனுக் கென்ரு னிகல்சீறு
மின்செய்த வேலான் விரைந்து.

இகல் சீறும் மின் செய்த வேலான்-பகைவரைப் போரிற் சிறித்தாக்கும் ஒளி வீசும் வேலேந்திய இருதுபன்னன், விரைந்து-(புரோகிதன் கூறிய மொழிகேட்டு) விரைவுள்ளவனுகி, 'வேத மொழிவாணன்-வேதங்களே ஓதும் அந்தணன், வீமன் தன் காதலி-வீமராஜன் மகளான தமயந்தி, மீண்டும் சுயம்வரத்தை காதலித்தாள் என்று-மறுபடியும் (இரண்டாம் முறை) ஒரு சுயம்வர மணத்தை விரும்பினுள் என்று, விளம்பினன்-கூறினன்; இதற்கு என் செய்கோ என்ருன்-இதற்கு நான் என்ன செய்வேன்!' என்று கூறி வருந்தினன்.

வேத மொழி வாணன் என்ற குறிப்பால், அவ் வந்தணன் பொய் சொல்ல மாட்டான் என்று இருதுபன்னன் நம்பினதும் ஆம். என் செய்கோ! என்றது, நானே சுயம்வரம் என்றமையால் மிகவும் தூரத்தில் உள்ள குண்டினபுரிக்குப் போகமுடியாதே என்ற ஏக்கத்தால் என்க.

இச் செய்யுள் சில ஏட்டுச் சுவடிகளில் இல்லை.

பி-ம். 1. வேத முனிவன் விரைந்தோர் சுயம்வரத்தை.
2. —ரோதுவது. (34)

நளன் அதுகேட்டுக் கூறியது

351. குறையாத கற்பிளுள் கொண்டானுக் கல்லால்
இறவாத வேந்தீழையா ளின்று—பறிபீறி
நெல்லிற் பருவரா லோடு நெடுநாடா
சொல்லப் படுமோவிச் சொல்.

(அதுகேட்ட வாகுகனை நளன் இருதுபன்னனை நோக்கி), 'பறி பீறி - மீன் பிடிக்க உபயோகிக்கும் பறி என்னும் ஒரு வகைக் கூட்டைப் பிளந்துகொண்டு, நெல்லில் - நெற்பயிர் வளரும் வயல் களில், பரு வரால் ஓடும் - பருத்த வரால் மீன்கள் குதித்து அப்பால் தப்பியோடும், நெடு நாடா - நெடிய கோசல நாட்டையுடைய அர சனே!, குறையாத கற்பினுள் - கற்பு நெறியிற் குறையாதவளும், கொண்டானுக்கு அல்லால் – தன்னை மணந்துகொண்ட நளனுக்கு அல்லாமல், இறவாத - (கற்பு நெறி) கடவாத அல்லது நீங்காத, ஏந்திழையாள் - பெண்ணுகிய தமயந்தி ஆவள்; (ஆதலின்), சொல் லப்படுமோ இ சொல் - இரண்டாம் சுயம்வரம் அவள் காதலித் தாள் என்ற இவ்வார்த்தை சொல்லக்கூடியது ஆகுமோ?' என்று கூறினன். (சொல்லலாகாது என்றபடி.)

பறி - மீன் பிடிக்க வயலில் வலைபோல் வைத்திருக்கும் ஒரு வகைக் பொறி; நாலுர்ந்ததீபிகை; 'பறியுடை முன்றிற்' (பெரும்பாண். 265). வரால்; 209. இறவாத - கடவாத; 'புலவரை யிறந்த புகழ் சால் தோன்றல்'; (புறநா. 21), "பகைபாவம்.....மில்லிறப்பான் கண்" (குறள். 146); இறப்பருங் குன்ற மிறந்த யாமே" (குறுந். 209:3).

இச் செய்யுளும் சில ஏட்டுப் பிரதிகளில் இல்லை.

பி - ம். 2. —பறையறைய.
3. என்கொலோ மற்றிதனுக் கென்ரு னிகலகற்று.
4. மின்செய்வேல் வேந்தன் விரைந்து. (35)

இருதுபன்னன் கூறிய சமாதானம்

352. என்மே லெறிகின்ற மாலை யெழினளன்றன்
முன்னே விழுந்ததுகாண் முன்னுலில்—அன்னதற்குக்
காரணந்தா னீதன்றே வென்ரூன் கடாஞ்சொரியும்
வாரணந்தா னன்னுன் மதித்து.

(அதுகேட்ட) கடாம் சொரியும் வாரணம் அன்னுன் - மத நீரைப் பொழியும் யானை என்று உவமை கூறத் தக்க அவ் விருது

பன்னன், 'முன் நாளில் என் மேல் எறிகின்ற மாலை - தமயந்தி முன் நடந்த சுயம்வர நாளில் என்மீது எறிந்ததான மணமாலை, எழில் நளன் தன்மேல் விழுந்தது - அழகிய நளன் மீது போய்த் (தவறி) விழுந்துவிட்டது; அன்னதற்கு - அவ்வாறு தவறிப் போனது என்பதற்கு, காரணம் தான் ஈது அன்றே - இந்த இரண்டாம் சுயம்வரம் என்ற ஏற்பாடு தக்க காரணமாகும் அல்லவோ?' என்றுன் மதித்து - என்று தன் பெருமையைப் பெரிதாக எண்ணிக் கூறினன். வாரணந்தான்: அசை.

எறிகின்ற மாலை:-இது இறந்த காலம் நிகழ் காலத்தில் வந்த கால வழுவமைதியாகும். எழில் நளன்: நளனே ஆடவரிற்சிறந்த அழகுடையவன் என்பதை, அவன் கருதாமலே அவன் நா மொழிந்தது என்க. மதித்து என்பதற்கு - ஆலோசித்து என்றும் பொருள் கொள்வர்.

அயோத்தி நகர் கோசல நாட்டின் தலைநகராதலின் இந்த இருதுபன்னன், முன் தமயந்தி சுயம்வரத்திற்குச் சென்றிருந்தான் என்பது, அங்கு வந்திருந்த அரசர்களுள், 'கோசல நாடன்' என்று (140)இல் குறிப்பிடப் பெற்றவன் ஆவன் எனக் கொள்வது பொருந்து மாறறிக.

பி - ம். 1. லிடுகின்ற மாலை; யிகனளன்றன்.
2. முன்னே விழுந்ததது முன்னுளில், முன்னே விழுந்ததுபோன் — அந்நாளில், அன்னதற்குக். (36)

நளனது தியக்கம்

353. முன்னை வினையான் முடிந்ததோ மொய்குழலாள்
என்னைத்தான் காண விசைந்ததோ—தன்மரபுக்
கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ விது.

(அதுகேட்ட நளன்), 'முன்னை வினையால் முடிந்ததோ - இந்நிகழ்ச்சி, முன் நான் செய்த தீவினைகளின் பயனுக வந்து முடிவுற்றதோ? (அல்லது), மொய் குழலாள் - அடர்ந்த கூந்தலையுடைய தமயந்தி, என்னை தான் காண இசைந்ததோ - என்னைக் கண்டு பிடித்து அடைவதற்குச் சொல்லியனுப்பிய தந்திரமாக அமைந்ததோ? தன் மரபுக்கு ஒவ்வாத வார்த்தை - தன் உயர்குல நெறிக்கு ஏற்காத (இரண்டாம் சுயம்வரம் என்ற) இந்தச் சொல், உலகத்து உரைப்பட்டது - உலகத்தில் சொல்லப் படுவதாயிற்று!

இது எ ஆறு கொல்லோ - இது என்ன காரணமோ? (எனக்குத் தெரியவில்லையே!' என்று மனத் தடுமாற்றங்கொண்டு வருந்தினன் என்பதாம்.)

முன்னேவினேயான் முடிந்ததோ, என்பதைத் தமயந்தி மேலும் ஏற்றிக் கூறலாம். தன் மரபுக்கொவ்வாத வார்த்தை: 'குற்றமில் காட்சிக்கு தலேவாய் மைந்தரையும் பெற்றுக் கொளலாங் கொள லாமோ - கொற்றவனே, கோக்கா தலனேக் குலமகளுக்கு', என்று (232) முன் கூறியவள், இப்பொழுது இப்படித் தன் குல தருமம் மாறி நடப்பலோ? என்று மனம் வருந்தினன் என்க. கொல்: இங்கு ஐயப்பொருளது.

பி - ம். 1. வினேயின் முடிந்ததோ, விதியின் முடிவிதுவோ.
3. வுலகத் துரைப்பதோ, வுலகுக் குரைப்பட்ட.
4. எவ்வாறு கொல்லோ. (37)

நளன் இருதுபன்னனுக்குத் தேரோட்டிச்செல்ல உடன்பட்டது

351. காவலனுக் கேவற் கடன்பூண்டேன் மற்றவன்றன்
ஏவன் முடிப்ப னினியென்று—மாவைக்
குலத்தேரிற் பூட்டினன் கோதையர்தங் கொங்கை
மலர்த்தேன் றுளிக்குந்தார் மன்.

கோதையர் தம் - (அருகிருந்த) மகளிரின், கொங்கை - தனங் களின்மீது, மலர் தேன் துளிக்கும்-மலர்களினின் றும் தேனைத் துளி களாகச் சிந்தி விழச்செய்யும், தார் - மாலேயணிந்த, மன் - அரசனை நளன் (ஒருவாறு மனந்தேறி), 'காவலனுக்கு ஏவல் கடன் பூண் டேன் - நான் அரசன் ஏவும் பணியைச் செய்யும் கடமையை மேற் கொண்டவன் ஆனேன், அவன் தன் ஏவல் இனி முடிப்பேன் என்று - (ஆதலின்) அவன் ஏவும் காரியத்தை நான் இனிச் செய்து முடிப்பேன்' எனத் தீர்மானித்து, மாவை - குதிரைகளே, குல தேரில் பூட்டினன் - சிறந்த தேரில் பூட்டிக்கொண்டு வந்தான்.

'கோதையர்தம்.....தார்மன்'; ஒப்பு: 20. மா - குதிரை; 65, 323, 354, 357.

பி - ம். 1. மற்றவனுக்.
2. கேவன் முடிப்பன்; முடிப்பென், முடிப்பேன், எவற் றெழின் முடிப்பேன் யானென்—மாவைக்.
3. குலத்தேரைப்; கோதையர்தங் கோதை.
4. மலர்த்தே னுழக்குந்தார் மன். (38)

355. ஒற்றைத் தனியாழித் தேரென்ன வோடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன்—மற்றிதற்கே
போந்தேறு கென்றுரைத்தான் பொம்மென் முளிமுரலத்
தீந்தேறல் வாக்குந்தார்ச் சேய்.

பொம் என்று அளி முரல - பொம் என்னும் ஓசையுடன் வண்டுகள் மொய்ப்பதும், தீம் தேறல் வாக்கும் - இனிப்பான தேனைப் பொழிகின்றதுமான, தார் சேய் - மாலை அணிந்த அரசனுடைய நளன், (இருதுபன்னனை நோக்கி), 'தனி ஒற்றை ஆழி தேர் என்ன - ஒப்பற்ற ஒற்றைச் சக்கரத்தை யுடைய சூரியனது தேரைப் போல, ஓடுவது - விரைந்து ஓடுவதான, ஓர் கொற்ற நெடும் தேர் - ஒரு வெற்றியைத் தரும் பெரும் இரதம், கொடு வந்தேன் - கொண்டு வந்திருக்கிறேன் : இதற்கே - இந்தத் தேரிலேயே, போந்து ஏறுக என்று உரைத்தான் - வந்து ஏறிக்கொள்வீராக!' என்று கூறினன். மற்று : அசை.

சூரியன் உருவம் ஒரு தேர்ச்சக்கரம் போல் வட்டமாய் இருத்தலால், அதனை ஓராழித்தேர் என்பது நம் புராண வழக்கு என்னலாம்; ஓராழித்தேர் - சூரியன்தேர் (பிங்.); கம்ப. பால. கடிமணப், : 71. ஒற்றை : இஃது ஐயீற்றுக்குற்றுகரம். கொடு : கொண்டு என்பதின் இடைக்குறை. பொம் : ஒலிக்குறிப்பு. வாக்குதல் - ஊற்றுதல்; 'அடர்பொற் சிரகத்தால் வாக்கி;' (கலித். : 51 : 7); 'வள்ளத்து வாக்கிய பசுநரு.'; (கம்ப. பால. உண்டாட்டுப் : 6.) இது வார்க்குதல் எனவும் வழங்கும்.

பி - ம். 2. கொற்றத் தனித்தேர், கொற்ற மணித்தேர்,
4. தின்தேன் றுளிக்குந்தார்ச் சேய்; வார்க்குந்தார்ச் சேய். (39)

நளன் தேர் ஓட்டிய சிறப்பு

356. முந்தை வினைகுறுக மூவா மயல்கொண்டான்
சிந்தை யினுங்கடுகச் சென்றதே—சந்தவிரைத்
தார்குன்ரு மெல்லோதி தன்செயலைத் தன்மனத்தே
தேர்கின்ரு னூர்கின்ற தேர்.

சந்த விரை தார் குன்ரு - அழகும் நறுமணமுமுடைய மாலை குறைவுபடாத, மெல் ஓதி - மென்மையான கூந்தலையுடைய தமயந்தி, தன் செயலை - அவள் இரண்டாம் சுயம்வரம் நாடிய செயலை, தன் மனத்தே தேர்கின்ரு ன் - தன் மனத்திற் பலவிதமாய்க் கருதுகின்ற நளன், ஊர்கின்ற தேர் - செலுத்திச் செல்கின்ற தேர்,

முந்தை வினை குறுக - முன் செய்த பண்டைவினை அணுகிப் பற்றிக்கொள்ள, மூவா மயல் கொண்டான் - அழியாது வளர்கின்ற காம மயக்கம் கொண்ட ஒருவனுடைய, சிந்தையினும் - மன வேகத்தினும், கடுக சென்றது - விரைவாகச் சென்றது. ஏ: ஈற்றசை.

ஓதி: பெண்பால் கூந்தல்: இஃது இங்குச் சினையாகு பெயராய்த் தமயந்தியைக் குறிப்பது. முந்தை: ஐயீற்றுக்குற்றுகரம்; 355, 355 இல் வந்துள்ள, பண்டை, ஒற்றை என்பனபோல. ஊர்தல் - செலுத்துதல்; 'தச்சன் செய்த சிறுமா வையம், ஊர்ந் தின்புறுராயினும்' (குறுந். 61). மயல் கொண்டான் என்பதை இருதுபன்னனுக்கே இயைத்துங் கூறலாம்.

பி - ம். 1. முந்தை நெறிதவறி மூளா மயல்கொண்டார்.
3. கார்கொண்ட மெல்லோதிக் கற்புகீலை தன்மனத்தே.
4. தேர்கொண்டான் வென்றித் திறம். (40)

357. மேலாடை வீழ்ந்த தெடுவென்ரு னவ்வளவில்
நாலாறு காத நடந்ததே—தோலாமை
மேல்கொண்டா னேறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா.

தோலாமை மேல் கொண்டான் ஏறி வர - தமயந்தியை அடைவதில் தோல்வியில்லாத ஊக்கம் மேற்கொண்ட இருதுபன்னன், ஏறி வர - அத்தேரில் ஏறிக் குண்டினபுரம் நோக்கி வருகையில், 'மேல் ஆடை வீழ்ந்தது எடு என்ரு ன் - (அவன்), என்மேல் உத்தரீயம் கீழே தவறி விழுந்து விட்டது அதனை நீ எடுத்துத் தருவாயாக!' என்று நளனை நோக்கிக் கூறினன்; அ அளவில் - அப்படி அவன் மொழிந்த நேர அளவுக்குள், வெம்மை கலி சூதின் மால் கொண்டான் - கொடிய கலிபுருடன் வஞ்சனையால் சூதாட்டத்தில் மயங்கித் தோற்ற நளன், கோல் கொண்ட மா - சாட்டை அல்லது சவுக்குக் கோல் கொண்டு ஓட்டப்பெற்ற குதிரைகள், நால் ஆறு காதம் நடந்தது - அவ்விடங் கடந்து பத்துக்காத தூரம் சென்று விட்டன. ஏ: வியப்பை யுணர்த்திய இடைச்சொல்.

நாலாறு: உம்மைத்தொகை; 24 காதம் எனக்கூறவும் இடந்தரும். ஆனல் நைடதத்து, அதற்குள் 10 யோசனை தூரம் சென்று விட்டதாகவும், நளோபாக்யானத்தில் ஒரு யோசனை தூரம் சென்று விட்டதாகவும் கூறப்பெற்றுள்ளது. இதனல்,

இங்கு நாலாறு என்பது எதுகை நோக்கி, ஒரு நெடுந்தூரத்தைக் குறிப்பிட்டது எனவே கொள்ளத்தகும். கோல்: குதிரைச் செம் மட்டி; (சூடா.); 'பனிவரு மலர்க்கணப் பரதன் கோல்கொள' (கம்ப. பால. கடிமணப்: 73); 'தேரிற் சென்றெதிர் கோல்கொள் வானுயிர் தின்றுன்' (கம்ப. சுந்தர: 964). மேல் கொண்டான்: எதுகை நோக்கி இயல்பாய் நின்றது. மா நடந்தது: இங்கும் பன்மை ஒருமையில் வந்தது.

இதன்பின் ஓர் அச்சுப் பிரதியில்,

ஆய தறிந்த வயோத்தியர்கோ னுங்கதற்கு
மேயவிறும் பூதினனுய் வேட்கைமிகத்—தூயதிறல்
அன்னவன்பா லவ்விஞ்சை யாயுமா றியாதென்ன
உன்னுவான் றன்னுள்ளே யோர்ந்து.

என்றொரு பாடல் உள்ளது.

பி-ம். 2. தோலாத, தோலாது. (41)

இருதுபன்னனது கணிதச் சிறப்பு

358. இத்தாழ் பணையி லிருந்தான்றிக் காயெண்ணில்
பத்தா யிரங்கோடி பாரென்ன—உய்த்ததனில்
தேர்நிறுத்தி யெண்ணினுன் றேவர் சபைநடுவே
தார்நிறுத்துந் தோள்வேந்தன் றன்.

(இருதுபன்னன் நளனை நோக்கி), 'இ தாழ் பணையின் - இந்தத் தாழ்ந்து விளங்கும் கிளைகளோடுகூடிய, இரும் தான்றி காய் எண்ணில் - பெரும் தான்றி மரத்தின் காய்களை எண்ணிக் கணக்கிட்டுப் பார்த்தால், பத்து ஆயிரம் கோடி - பதினுயிரம் கோடி ஆகும்; பார் என்ன - நீ இதைப்போய் எண்ணிப்பார்' என்று கூற, தேவர் சபை நடுவே - இந்திரன் முதலிய தேவர்கள் கூடி யிருந்த சுயம்வர மண்டபச் சபையினிடையே, தார் நிறுத்தும் தோள் வேந்தன் - தமயந்தியின் மணமாலை தங்கும்படி நிறுத்திக் கொண்ட தோள்களையுடைய அரசனை நளன், தேர் அதனின் உய்த்து - அத்தேரை அத்தான்றி மரத்தின் அருகே செலுத்தி நிறுத்தி, எண்ணினுன் - அதன் காய்களை எண்ணிக் கணக்கிட்டுப் பார்த்தான். தான்: அசை.

இருதுபன்னன், அக்ஷ ஹ்ருதயம் என்னும் கணித நூலிற் றேர்ந் தவனுதலின், தூரத்தில் தேரில் இருந்தபடியே அத்தான்றி மரக் காய்களை எளிதில் கணக்கிட்டுக் கூறினன் என்பது நளோபாக்யா

னத்தால் அறியப்பெறும். தான்றிக்காய்களைக் கணக்கிட்ட தொகை இங்குப் பத்தாயிரங் கோடி என்றிருக்க, நைடதத்து மூன்று கோடியே மூப்பத்திரண்டு என்றும், நளோபாக்யானம், இரண்டாயிரத்துத் தொண்ணூற் றைந்து என்றும் மாறுபட்டுள்ளன. ஆதலின், இது முன், 'நாலாறு காதம் நடந்ததே (357) எனக்கூறியதே போலும், இராமாயணத்தில், ஜனகராஜன் ஸபையில் இராமபிரான் முன் கொண்டு வந்த வில்லை அறுபதினாயிரம் பேர் தூக்கி வந்தனர் என்றது போலும் ஒரு பெரும் எண்ணைக் குறிப்பது எனக்கொள்வதே தகுதியுடைத்தாகும்; இது கவிமரபு எனற் பாலதாம். நளோபாக்யானத்தில் இச்செய்தி மேலும் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது.

பி - ம். 1. இத்தாழ் பணையி லிருங்கனிகாய் பூவெண்ணிற்.
2. —உய்த்ததன்பால், ஒத்தபடி,
3. கண்டு வியந்துரைத்தான் காவலனைக் காமருதேர்.
4. கொண்டுவீண செய்வான் குறித்து; தார்கிறுத்தம் தோவி ஞன் முன். (42)

இருதுபன்னன் நளனிடம் கூறியது

359. ஏரடிப்பார் கோலெடுப்ப வின்றேன் ரெடைபீறும்
காரடுத்த சோலைக் கடலுடன்—தேரெடுத்த
மாத்தொழிலு மீத்தொழிலு மாற்றுதியோ வென்றுரைத்தான்
தேர்த்தொழிலின் மிக்கானைத் தேர்ந்து.

ஏர் அடிப்பார் - ஏர் உழுபவர், கோல் எடுப்ப - எருதுகளை ஓட்டத் தம் தாற்றுக்கோலை எடுத்து ஓங்க, (அத்தாற்றுக்கோல்), இன் தேன் தொடை பீறும் - (தன்னிடமுள்ள) இனிய சுவையுள்ள தேன் அடைகளைப் பிறித்துத் தேனெழுகச் செய்யும், கார் அடுத்த சோலை - மேகங்கள் வந்து தங்கியுள்ள சோலைகளைச் சார்ந்த, கடல் நாடன் - கடலைத் தன்னிடங் கொண்ட கோசல நாட்டரசனை இருதுபன்னன், தேர் தொழிலின் மிக்கானை - தேரோட்டுந் தொழிலிற் சிறந்த வாகுகனை நளனை, தேர்ந்து - அவன் திறமையை மதித்து, 'தேர் அடுத்த மா தொழிலும் - தேரிற் பூட்டிய குதிரைகளை நடத்தும் நீ அறிந்த இச்சாரதித் தொழிலாகிய அச்வ சாஸ்திரத்தையும், இ தொழிலும் - யான் அறிந்துள்ள இந்த அக்ஷஹ்ருதயம் என்னும் கணித சாஸ்திரத்தையும், மாற்றுதியோ - நீ மாற்றிக் கொள்வாயோ?' என்று கேட்டான். (அதாவது அவ்விரு

தொழில்களையும் நாம் அறியும்படி மாற்றிக் கொள்வோம் என்றனன் என்பதாம்). கடலுடன் : இது கரைநாடன் என இருக்க லாம் எனத் தோன்றுகிறது ; கரை - நிலப்பகுதி. குறிப்பு :—அவ் வாறே அவ்விருவரும் அவ்வருங் கலைத்தொழில்களை மாற்றிக் கொண்டனர் என முதனூலில் உள்ளபடி இங்கும் கொள்ளற் பாலதாம்.

பி - ம். 1. கோலடிப்ப ; முடைகூறும், முடைபீறிக்.
2. சோலைக் கடலுட.
3. மாத்தொழிலுக் கித்தொழிலை ; மாறுதியோ.
4. தோத்தொழிற்கு மிக்கானைத், தோத்தொழிற்கு மிக்கான் தெளிந்து. (43)

கலி நளனை விட்டு நீங்கியது

360. வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பா னின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பா னின்ற கலி.

(அப்போது), காவலன்பால் நின்ற கலி-அரசனை நளனிடத்து அதுகாறும் தங்கியிருந்த, (அவனை வருத்தி வந்த) கலி புருடன், வண் - அழகாகவும், தார் - ஒழுங்காகவும் அமைந்த, வள வயல் சூழ் - நீர்வளம் நிலவளங்கள் நிறைந்த வயல்கள் சூழப்பெற்ற, மள்ளுவ நாட்டு எம் கோமான் - மள்ளுவ நாட்டை ஆளும் எங்கள் தலைவனை, தண் தார் புனை - குளிர்ந்த பூமாலை அணிந்த, சந்திரன் சுவர்க்கி - அரிச்சந்திரன் சுவர்க்கி என்னும் அரசன், கொண்டாடும் - பாராட்டும், பாவலன் பால் நின்ற - பாவாணனிடத்துத் தங்கி யிருந்த, பசி போல - பசி நீங்கியது போல, நீங்கிற்று - விட்டகன் றன. ஏ : ஈற்றசை.

வண்மை - அழகு. தார் - ஒழுங்கு ; பதிற்றுப்பத்து 64 : 7 ; இனி, ஏரி உள்வாயிலுள்ள நிலமும் ஆம். வண்டார் வளவயல் : வண்டு கள் நிறைந்து விளங்கும் வளம்பொருந்திய வயல்கள் என்பாரும் உளர். இது, சந்திரன் சுவர்க்கி தமிழ்ப் பாவாணர்களை ஆதரித்த வன் என்பதோடு, தன்னை அவ்வரசன் ஆதரித்த உதவிச் சிறப் பைப் படர்க்கையிடமாகப் பிறிதொரு பாவலன் மேலேற்றி இங்குக் கூறியதும் ஆம். பசி : இங்கு வறுமையாகிய பசி என்னலும் ஆம்.

குறிப்பு :—அதுகாறும் அத்தான்றி மரத்தில் கலி தங்கி யிருந்தானதலின், தான்றி மரத்தடியிற் போய்த் தங்குவதோ,

அதன் அருகே ஏகுவதோ தகாது என, அது நம்மனோரால் விலக்கப் பெற்றதாகும். இவ்விடத்தில் கலி நளனுக்கு வரன்கள் அருளிச் சென்றதாக நளோபாக்யானம் கூறும். கலி நளனுக்கு வரமளித்த செய்தி இந்நூலிற் பின்னர் நிகழ்ந்ததாக, (389, 390) ஆம் செய்யுள்களால் விளங்குவது காண்க.

ஒரு பிரதியில் இச்செய்யுள், அடியிற் காணுமாறு மாறி யுள்ளது.

தக்கோர் பரவுஞ் சதுர்வேதஞ் சான்றுகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே—இக்காலம்
மாவலனுய் நின்று மடைத்தொழிலே செய்கின்ற
காவலன்பா னின்ற கலி.

பி - ம். 1. வள்ளுவனாட் டெங்கோமான். (44)

இருதுபன்னன் குண்டினபுரி அடைந்தது

361. ஆமை முதுகி லலவன் றுயில்கொள்ளும்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்றன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெழுங்கூற்றம்
அன்னகரி யொன்றுடையா னங்கு.

போர் வேட்டு - போரை விரும்பி, எழும் - மேல் எழுந்து வரும், கூற்றம் அன்ன - யமனை ஒத்த, கரி ஒன்று உடையான் - ஒரு யானையையுடைய இருதுபன்னன், ஆங்கு - அப்பொழுது, ஆமை முதுகில் அலவன் துயில் கொள்ளும் - ஆமையின் முதுகிலே நண்டு படுத்து உறங்கும், காமர் - அழகிய, நெடு நாடு கைவிட்டு - நீர் வளம் நிறைந்த தன் நெடிய கோசல நாட்டை விட்டு நீங்கி, வீமன் தன் பொன் நகரி சென்று அடைந்தான் - வீமராசனது அழகிய குண்டினபுரி என்னும் அழகிய நகரைப் போய்ச் சேர்ந்தான்.

ஆமையும் அலவனும் நீரில் வாழும் பிராணிகள் ஆதலின், அந்நாட்டு நீர்வளம் குறிப்பிட்டபடியாகும். காமர் - அழகு : 'காமர் கயல்புரள' (3) 'காமர் வண்ண மார்பிற் றருங் கொன்றை; (புறநா. 1). நகரி - நகரம் (சூடா.). 'காமர் நெடுநாடு கைவிட்டு'; ஒப்பு : 67, 202. கூற்றம் - உடலிலிருந்து உயிரைப் பிரித்தெடுத்துச் செல்வோன்' என்னும் பொருளது; இது கூற்று எனவும் வழங்கும். கரி ஒன்று - பட்டத்து யானை ஒன்றும் ஆம்.

பி - ம். 1. ஆமை முதுகின்மே லன்னந் துயில்கொள்ளும்.
3, பொன்னகரின் முன்னடைந்தான். (45)

இருதுபன்னன் வீமராசனுக்குத் தன் வரவு அறிவித்தது

362. வெற்றித் தனித்தேரை வீமன் பெருங்கோயில்
முற்றத் திருத்தி முறைசெய்யும்—கொற்றவற்குத்
தன்வரவு கூறப் பணித்துத் தனிப்புக்கான்
மன்விரவு தாரான் மகிழ்ந்து.

மன் விரவு தாரான் - நன்கு பொருந்தி விளங்கும் மாலையை யுடைய இருதுபன்னன், வெற்றி தனி தேரை - வெற்றி பொருந்திய தன் ஒப்பற்ற தேரை, வீமன் பெரும் கோயில் முற்றத்து இருத்தி - வீமராசனது பெரிய அரண்மனை முன்புறத்தில் நிறுத்தி விட்டு, முறை செய்யும் கொற்றவற்கு - நீதி முறைப்படி ஆட்சி செய்யும் அவ்வரசனுக்கு, தன் வரவு கூற பணித்து - தன் வருகையை முன்னே தெரிவிக்கும்படி (அங்குள்ள ஏவலாளர்க்குக்) கட்டளை யிட்டு, மகிழ்ந்து தனி புக்கான் - மகிழ்ச்சியோடு தான் தனியே அரண்மனையினுட் சென்றான்.

மகிழ்ந்து: தமயந்தியைத் தான் அடையப்போகும் மகிழ்ச்சி மேற்கொண்டு என்க. தனிப்புக்கான்: தேரோட்டி வந்த வாகு கனைத் தன்னுடன் அரண்மனையுள் அரசனிடம் அழைத்துச் செல்வது முறை அன்று ஆதலின், தான் மட்டும் தனியே சென் றான் என்பதாம்.

பி - ம். 4. வெற்றித் தனித்தேரில், 2. முற்றத் திழிந்து.
3. கூறிச் சலித்துத் தனிப்புக்கான்.
4. மன்விரவு தாரினான் வந்து, மன்வரவு கூற மகிழ்ந்து, (46)

வீமராசன் இருதுபன்னனை வினவியது

363. கன்னி நறுந்தேறன் மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
நெய்தற் கவாவு நெடுநாட நீயென்பால்
எய்தற் கவாவியவா றென்.

(வீமராசன் இருதுபன்னனைக் கண்டு), 'கமலத்தின் கன்னி நறும் தேறல் மாந்தி - தாமரை மலரில் உள்ள புதிய நன்மணமுள்ள தேனைப்பருகி, மன்னி துயின்ற - அம்மலரிலே பொருந்தித் தூங்கிய, வரி வண்டு - தன் மீது பல அழகிய கொடுகள் அமையப்பெற்ற வண்டுகள், பின்னையும் (அதோடு ஆசை விடாமல்) மேலும், போய் - அவ்விடம் விட்டுச்சென்று, நெய்தற்கு அவாவும், நெய்தற் பூவின்

தேனுக்கு விரும்பிச் செல்லும், நெடு நாட - நீண்ட கோசல நாட்டையுடைய அரசனே! நீ என்பால் எய்தற்கு - நீ என்னிடம் அடைதற்கு, அவாவிய ஆறு - விரும்பிய காரணம், என் - என்ன?' (என்று கேட்டான் என முடிவு செய்து கொள்க).

கமலத்தின் நறுந்தேறல் மாந்தி அம்மலரில் இருந்து துயின்ற வண்டுகள் அதோடு ஆசை ஒழியாமல், மேலும், நெய்தல் மலர்த் தேனை நாடிச் சென்றது என்பதில், நாட்டின் நிலை மயக்கமான வளங் கூறியதாக உள்ளதோடு, இருதுபன்னன் தன் தேவியோடு அதுகாறும் துய்த்துவந்த இன்பத்தோடு அடங்காமல், தமயந்தி யையும் அடையத் துராசை கொண்டு வந்த அவனது பேதைமைக் குணத்தை ஆசிரியர், வீமராஜன் முகமாய் உள்ளுறை உவமக் குறிப்பில் அமைய வைத்த அழகு நோக்கத் தக்கது. வரி வண்டு: வரி, புள்ளியும் ஆம். என், ஏன்; என்பதின் குறுக்கம்.

பி - ம். 1. மன்னித் தயிலும், மன்னி யுறங்கும். (47)

இருதுபன்னனது மறுமொழி

364. இன்றுன்னைக் காண்பதோ ராதரவால் யானிங்ஙன்
மன்றன் மலர்த்தாராய் வந்தடைந்தேன்—என்ருன்
ஒளியார்வேற் கண்ணெண்மே லுள்ளந் துரப்பத்
தெளியாது முன்போந்த சேய்.

ஒளி ஆர் வேல் கண்ணுள் மேல் - ஒளி நிறைந்த கண்களை யுடைய தமயந்தியிடத்து, உள்ளம் துரப்ப - மனம் (தன்னை) தூண்டிச் செலுத்த, தெளியாது - அதை ஆய்ந்து தெளிவடை யாமல், முன் போந்த சேய் - முன்வந்த அரசனை இருதுபன்னன், (வீமராஜனை நோக்கி), 'மன்றல் மலர் தாராய் - மணம் கமழும் மலர்மாலை அணிந்த அரசனே! இன்று உன்னை காண்பது ஓர் ஆதரவால் - இன்று உன்னைக் காணவேண்டும் என்ற ஓர் ஆசை யால், யான் இங்ஙன் வந்து அடைந்தேன் - நான் இவ்விடம் வந்து சேர்ந்தேன்;' என்ருன் - என்று ஒருவாறு உண்மையை மறைத்துக் கூறினன்.

தெளியாது முன் போந்த சேய்: தமயந்தி நளனை அடையச் செய்த தந்திரம் என்று தெரிந்து கொள்ளாது முன்வந்த இருது பன்னன் என்னலும் அமையும். ஆதரவு - ஆசை; 'ஆதரித்தார் தம்மோடு...எழுந்தருள்க'; (85) என்றமையும் காண்க. இங்ஙன்: இங்ஙனம் எனபதின் கடைக்குறை; 377.

பி - ம். 1. இன்றுண்ணக் காணவெழும், இன்றுணையான் காண்பதோர்; இப்போது.
2. மன்றல் கமழ்தாராய், மன்றல் புனைதாராய்.
4. தெளியாது போந்திருந்த. (48)

நளன் மடைவாயிற் புக்கது

365. ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதி லடிசிற் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயிற் கார்நீலங் கண்விழிக்கு நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து.

மேதி கடை வாயில் - எருமையின் கடைவாயி னிடத்தே, (அது தின்ன மெல்லும்போது), கார் நீலம் - தான் மேய்ந்து அடக்கிய கரிய நீலோற்பல மலர், கண் விழிக்கும் - கண் விழிப்பது போல தோன்றும், நாடன் - நிடத நாட்டையுடைய நளன், ஆதி - முதலில், நெடும் தேர் பரி விட்டு - தான் செலுத்தி வந்த இருதுபன்னனது பெரிய தேரினின்றும் குதிரைகளை அவிழ்த்து விட்டு, அவை ஆற்றி - அவற்றைத் தேய்த்துத் துடைத்து, வந்த இளைப்பு ஆற்றி, கோது இல் அடிசில் குறை முடிப்பான் - குற்ற மற்ற சமையல் வேலையாகிய தொழிலைச் செய்து முடிக்கும் பொருட்டு, மதித்து - எண்ணி, மடைவாயில் புக்கான் - மடைப் பள்ளி என்னும் சமையல் அறை இடத்தில் புகுந்தான்.

ஆதி நெடும் தேர் - முதன்மையான பெரும் தேர் என்றுரும் உளர். கோதிலடிசிற் குறை - குற்றமற்ற சமையல் வேலை; நளன் சமையற் றொழிலாகிய பாக சாஸ்திரத்தில் தேர்ந்தவனாதலின், நள பாகம் எனச் சிறப்பிக்கப் பெறுவதும் நோக்குக; குறை - வேலை, காரியம்; 'அகத்தியற் காண்பதோர், குறைகிடந்த தினியெனக் கூறினன்' (கம்ப. ஆரணிய: 149); 'வேண்டுங் குறையெனக் குரிசில் நோந்தான்' (சீவக. 1647). மேதிக் கடைவாயிற்.....கண் விழிக்கும் நாடன்; ஒப்பு:—'கன்று குதட்டிய கார்நீலம் - முன்றிற் குறுவிழிக்கு நேர்நாடன்;' (126). நளன், தான் ஒரு சக்கரவர்த்தியாய், ஒரு குடைக்கீழ் உலகோங்கத் தனிச் செங்கோலோச்சிய தன் உயர் நிலையைக் கருதாது, தான் ஏற்றுக்கொண்ட வேலைகளை இழிவென்று நோக்காமல் செய்து முடிக்கும் கடமையை மேற் கொண்டான் என்பதாம்; இது, கண்ணபிரான், பாரதப்போரில் பார்த்தனுக்குத் தேர் ஓட்டியதோடு, ஒவ்வொரு நாளும் போர் நின்ற பிறகு, அக்குதிரைகளை அவிழ்த்துத் தேய்த்துத் துடைத்து

மணலிற் புரளச்செய்து இளைப்பாற்றினர் என ஸ்ரீவியாஸ மகா பாரதம் கூறுவது இங்கு நினைப்பூட்டுகின்றது. மடை - சோறும் ஆம்; (பிங்.)

பி - ம். 3. கடைவாயிற் செங்கழுநீர் கண்விரிக்கு நாடன். (49)

நளன் புக்க மடைவாயிற் சிறப்பு

366. ஆதி மறைநூ லனைத்துந் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்—யாதும்
நிரப்பாம லெல்லா நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை.

பொன் தேர் வர பாகன் புக்க மனை - அழகிய தேர் ஓட்டும் சாரதியிற் சிறந்த அவ்வாகுகனை நளன் புகுந்த மடைப்பள்ளி யாகிய இடம், ஆதி மறை நூல் அனைத்தும் தெரிந்து உணர்ந்த - மூதன்மைபெற்ற வேதசாத்திரங்கள் யாவற்றையும் கற்று ஆராய்ந் துணர்ந்த, நீதி நெறி ஆளர் - நீதிமுறை தவறுத உயர்வழியே கடைப்பிடித்து நடப்படவரான பெரியோர்கள் தம், நெஞ்சம் போல் - அறிவினால் நிறைந்து விளங்கும் மனம்போல, யாதும் நிரப்பா மல் - சமையலுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் தானே பிறரோ தேடிச் சேர்க்காமல், எல்லாம் நிரம்பிற்று - யாவும் தாமாகவே அங்கு வந்து நிரம்பின.

பொற்றேர் - பொன்னாலமைந்த தேரும் ஆம். ஆதி மறை நூல் : வேதம் யாவற்றினும் முற்பட்ட நூல் என்பதாம். ஆதி - பழமையும் ஆகும்; ஆதிமறை நூல்.....நீதி நெறியாளர் : வேதங்கள் முதலான நூல்களைக் கற்றுத் தேர்ந்து அவற்றிற் கூறியுள்ள முறைகள் தவறுது நடப்பவர்; இஃது 'அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்'; (நறுந்தொகை); 'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக' (குறள். 391); 'கசடறக் கற்றலின் பயன் கற்றவழி நிற்றலே யாம்' என்பன போல. வாகுகனை நளன் புகுந்த மடைப்பள்ளி, அங்கு வேண்டிய பொருள் யாவும் பிறர் நிரப்பாமலே நிரம்பி நின்ற சிறப்புக்கு, ஆதி மறை நூலனைத் தும் தெரிந்துணர்ந்த நீதிநெறியாளர் நெஞ்சம் உவமையாக்கப் பெற்ற அழகு ஈடுயர் வற்றதாகும். நிரம்பிய இது நளன் தேவர் கள்பால் பெற்ற வரங்களுள் அடங்கும்.

பி - ம். 1. லனைத்துந் தெரிந்துரைத்த. 2. நீதி மறையோர்கள்.
3. நிரப்பாமல் நின்று நிரம்பியதே. (50)

தமயந்தி நளன் செய்யும் மடைந்தொழிலே அறிந்துவரச் செய்தது

367. இடைச்சுரத்திற் றன்னை யிடையிருளி லீத்த
கொடைத்தொழிலா னென்றயிர்த்தக் கோமான்—மடைத்தொழில்கள்
செய்கின்ற தெல்லாந் தெரிந்துணர்ந்து வாவென்றுள்
நைகின்ற நெஞ்சா னயந்து.

நைகின்ற நெஞ்சாள் - தன் கணவனை நளனது பிரிவினால் வாடி வருந்தும் மனமுடைய தமயந்தி, 'இடை சுரத்தில் - நடுக் காட்டில், இடை இருளில் - நடு இரவின் இருட்டில், தன்னை நீத்த - தன்னைத் தனியே விட்டு அகன்ற, கொடை தொழிலான் என்று அயிர்த்து - ஈகையைத் தன் தொழிலாகக் கொண்ட நளன் என்று ஐயங்கொண்டு, அ கோமான் - அவ்வரசன், மடை தொழில் செய்கின்றது எல்லாம் - சமையல் செய்கின்ற வித மனைத்தையும்' தெரிந்து உணர்ந்து வா என்றுள் நயந்து - நீ போய்ப் பார்த்து அறிந்து வருவாயாக!' என்று தன் சேடியருள் ஒருத்திக்கு விருப்புடன் சொல்லி அனுப்பினாள்.

நளன், அங்கி யமுத நீர் முதலியன நினைத்தபோதே அவ் விடத்தே அடையப்பெறும் வரமுடையவனாதலாலும் (91), அவன் செய்யும் உணவு முதலியன ஒரு தனி நறுமணமுஞ் சுவையு முடையது என்பதை முன் அறிந்தவளாதலாலும் தமயந்தி அச் சிறப்புக்களை அறிந்து வந்து தெரிவிக்குமாறு ஒரு சேடியை அங்கு அனுப்பினாள் என்பதாம். இவ்வாறு சேடியை அனுப்பி அவள் மூலம் நளன் சமைத்த உணவிற் சிறிது பெற்று அதன் சுவை யாலும் அவன் நளனே எனத் தமயந்தி அறிந்து கொண்டாள் எனப் பிற நூல்கள் கூறும்.

பி - ம். 1. கொடைத்தொழில னென்றயிர்த்துக் கொண்டு.
2. தயிர்த்த கோமான்;—மடைத்தொழிற்குச்.
3. செய்கின்ற தெல்லாம். (51)

தமயந்தி தன் மக்களை நளன்பால் விடுத்தது

368. கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையும்
ஆதி யரச னருகாகப்—போத
வினையாட விட்டவன்றன் மேற்செயலு டென்றுள்
வளையாடுங் கையாண் மதித்து.

வளை ஆடும் கையாள் - வளையல்கள் அசைந்து ஆடிக்கொண் டிருக்கும் கைகளையுடைய அத்தமயந்தி, மதித்து - (ஒருவாறு)

தீர்மானித்து, 'கோதை நெடு வேல் குமரனையும் - மாலை அணிந்த நீண்ட வேலேந்திய தன் மைந்தன் இந்திரசேனன் என்பானையும். தங்கையையும் - அவன் தங்கையாகிய இந்திரசேனை என்னும் தன் மகளையும், ஆதி அரசன் அருகு ஆக - அரசரில் முதன்மைபெற்ற வனும் அவ்வாகுகனுமான நளன் அருகிலே, போத விளையாட விட்டு - போய் விளையாடும்படி விட்டு, அவன் தன் - அவனது, மேல் செயல் - மேல் நிகழும் செய்கைகளை, நாடு என்னுள் - ஆராய்ந்து பார்!' என்று சேடியருள் மற்றொருத்தியிடம் சொல்லி அனுப் பினாள்.

கோதை நெடுவேற் குமரனை : மாலை யணிந்தவனும் நீண்ட வேல் ஏந்தியவனுமான குமரக் கடவுள் போன்ற தன் மகனையும் எனவும் கொள்ளலாம்; அவ்வாறு கொண்டால், குமரன் - உவமை யாகுபெயர். ஆதி அரசன் என்றது இப்பொழுது அரசுரிமை இழந்துள்ளமையாலும் என்னலாம்.

பி - ம். 1. குமரனையுங் கோதையையும்.
2. ஆதி மடையற் கருகாக—மாதே. 4. கையாண் மறித்து.

தன் மக்களைக் கண்ட நளன் அவர்களோடு உரையாடியது

369. மக்களைமுன் காணு மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காணீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்க ளென்றுரைத்தான்
வன்மக் களியானை மன்.

வன்ம களி யானை மன் - பகைமையும் மதச்செருக்கும் கொண்ட யானைபோன்ற மன்னனை நளன், மக்களை முன் காணு - தன் குழந்தைகளை எதிரே கண்டு, மனம் நடுங்கா - மனம் பதைத்து, வெய்து உயிரா - வெப்பமான பெருமூச்சு விட்டு, புக்கு எடுத்து வீர புயத்து அணையா - புகுந்து சென்று அவர்களை எடுத்துத் தன் வீரமிக்க தோள்களில் அணைத்துக்கொண்டு, 'மக்காள் - குழந்தைகளே! நீர் என் மக்கள் போல்கின்றீர் - நீவிர் என் குழந்தைகளைப்போ லிருக்கிறீர்கள்! யார் மக்கள் என்று உரைத்தான் - நீங்கள் யாருடைய குழந்தைகள்?' என்று அவர் களை வினவினான்.

காணு, நடுங்கா, உயிரா, அணையா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு, உடன்பாட்டு வினையெச்சங்கள். நளன் தன்

மக்களைக் கண்டதும், நடுங்கிப் பெருமூச்சு விட்டு வருந்தியது, அதுகாறும் அவர்களைத் தான் பிரிந்திருந்த துயரமேலீட்டால். மன உறுதியும், எதற்கும் அஞ்சாத வீரமும் வாய்ந்தவனையும் மக்கட் பாசம் வருத்தி நிலைதளரச் செய்யும் என்பது 'வண்மைக் களியானை மன்' என்ற தொடரால் விளங்கவைத்த தாகும்.

பி - ம். 1. மக்களைமுன் கண்டு மனநடுங்கி வெய்துயிர்த்தப்.
2. புக்கெடுத்த வாமப் புயத்தணைத்த—மக்களீர்.
3. என்மக்கள் போலிருந்தீர் யார்மக்கள் நீரென்முன். (53

370. மன்ன னிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றே மெங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்று னென்று ரழுது.

(அது கேட்ட அக்குழந்தைகள்), 'யாம் - நாங்கள், நிடதத்தார் மன்னன் - நிடத நாட்டினர்க்கு அரசனும், வாழ்வேந்தன் - வாழ்விற் சிறந்த வேந்தனுமான நளச்சக்கரவர்த்தியின், மக்கள் - மக்கள் ஆவோம்; அவன் அன்னை தனை கான் விட்டு ஏக - அவ்வேந்தன் எங்கள் தாயைக் காட்டில் தனியே விட்டுப் பிரிந்து செல்ல, இ நகர்க்கு ஏ வாழ்கின்றோம் - இந்த நகரத்திலேயே நாங்கள் இருந்து வசித்து வருகின்றோம்; எங்கள் வள நாடு - எங்களது வளம் பொருந்திய நிடத நாட்டை, மற்றொருவன் - வேறு ஒருவன், ஆள்கின்றான் - இப்பொழுது ஆண்டு வருகின்றான்;' என்றார் அழுது - என்று அழுதவண்ணங் கூறினர்.

நிடதத்தார் வாழ் வேந்தன் - நிடத நாட்டினர் இன்புற்று வாழ அரசாண்ட வேந்தனை நளன் என்னலும் ஒன்றும். இந் நகர்க்கு: உருபு மயக்கம். மற்றொருவன் ஆள்கின்றான் என்றது, அவன் பெயர் சொல்ல விரும்பாததைக் குறித்தபடி. என்றார் அழுது: தம் தாய் காணிற் பிரிந்து தனியே வருந்திய துயரும், தம் தந்தையைக் காணாத துயரும், தாம் நாடிழந்து வேறு இடத்தில் வாழ்ந்துவரும் துயரும் தம் நினைவிற் புக அதனால் அழுகை மேலிட வருந்திக் கூறினர் என்க.

பி - ம். 1. மன்னியலும் வேனளன்றன் மக்கன்யாம் வல்வினையால்.
2. அன்னைதனைக் காட்டி லவன்போக்க—இந்நகரில்.
4. னென்று ரயர்ந்து. (54)

371. ஆங்கவர் சொன்ன வுரைகேட் டழிவெய்தி
நீங்கா வுயிரோடு நின்றிட்டான்—பூங்காவின்
வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாடன்
உள்ளம்போற் கண்ணீ ருகுத்து.

பூம் காவின் - பூஞ்சோலைகளில், வள்ளம் போல் கோங்கு மலரும் - கிண்ணங்கள் போலக் கோங்கு அரும்புகள் மலர்ந்து விளங்கும், திரு நாடன் - அழகிய நிடத நாட்டையுடைய நளன், ஆங்கு அவர் சொன்ன உரை கேட்டு - அவ்வாறு அக் குழந்தைகள் அழுது மொழிந்த துயரச் சொற்களைக் கேட்டு, உள்ளம் போல் கண் நீர் உகுத்து - தன் மனம் உருகி அழிவதுபோல் கண்ணீரையுஞ் சிந்தவிட்டுக்கொண்டு, அழிவு எய்தி - உடலும் சோர்வுற்று, நீங்கா உயிரோடு - போகமாட்டாது தத்தளிக்கும் தன் உயிரை ஒருவாறு தாங்கிக் கொண்டு, நின்றிட்டான் - செயலற்று நின்று விட்டான்.

ஆங்கு : அவ்விடத்து அல்லது அப்பொழுது என்னலும் ஆம். நின்றிட்டான் : இடு ; துணைவினை. வள்ளம் - கிண்ணம் ; (பெருங். *1·33 : 70* ; கம்ப. பால. உண்டாட்டுப் : *6*). கண்ணீர் உகுவது - உள்ளத் துயரை அறிவிக்கும் மெய்ப்பாடாகும். கோங்கு மலர் உட்குழிந்து விளங்கும் ஆதலின், கிண்ணத்திற்கு உவமிக்கப் பெற்றது.

பி - ம். 1. மொழிகேட் டழிவுற்று ; டயர்வுற்று.
3. வெள்ளம் போய்ப் பள்ளம் மிதக்குந் திருநாடன், வள்ளம்போற் புன்னை மலரும்.
4. வெள்ளம்போற் கண்ணீர்விழ, உள்ளம்போற் கண்ணீருக.

372. உங்க ளரசொரு வளைநீ ரோடிப்போந்
தீங்க ணுறைத லிழுக்கன்றே—செங்கை
வளவரசே யென்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து.

(வாகுகனை நளன்), மா தவத்தால் பெற்ற - பெரிய தவப் பயனால் பெற்றடைந்த, இள அரசை நோக்கி - தன் மகனை அந்த இந்திரசேனன் என்னும் இளவரசனைப் பார்த்து, 'செம் கை வள் அரசே - சிவந்த கைவலியுடைய அரசனே! உங்கள் அரசு ஒருவன் ஆள - உங்களுடைய அரசாட்சியை வேறு ஒருவன் பற்றிக்கொண்டு ஆட்சி செய்துவர, நீர் ஓடி போந்து - நீங்கள் அவ்விடம் விட்டு ஓடி வந்து, இங்கண் - இவ்விடத்தே, உறைதல் - அடைந்து தங்கியிருப்பது, இழுக்கு அன்றே - உங்கள் பெருமைக்குக்

குறைவு அல்லவோ? என்று எடுத்து உரைத்தான் - என்று அவன் மனத்திற் படும்படி எடுத்துக் கூறினன்.

ஒருவன் - அற்பனை அயலான் ஒருவன், என இழிவுப் பொருளை யுணர்த்தி நின்றது. இங்கண் : இ + கண்; எதுகை நோக்கி ககரம் ஙகரமாய்த் திரிந்தது. இழக்கு - தாழ்வும் ஆம். செங்கை வள அரசே - செம்மையான கைவலி அமைந்த அரச குலத் துதித்தவனுகியும் இங்கணுறைதல் இழுக்கன்றே என்று இடித்துக் கூறியதும் ஆகும்; செங்கை வளம், வள்ளற் றன்மை யைக் குறிப்பதும் ஆம்.

பி - ம். 1. ஜேடிப்போய். 2. இங்க ணுறைவ திழிவன்றே.
3. வளவரசர்க் கென்றுரைத்தான். (56)

373. நெஞ்சாலிம் மாற்ற நினைந்துரைக்க நீயல்லா
தஞ்சாரோ மன்ன ரடுமடையா—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலா யெங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.

(அது கேட்ட அவ்வரசிளஞ் செல்வன் அவனை நோக்கி), 'அடு மடையா - சமையற்றொழில் புரிவோனே! எஞ்சாது - குறையாது, தீமையே கொண்ட - பாவம் அல்லது குற்றமே மேற்கொண்ட, சிறு தொழிலாய் - தாழ்ந்த தொழிலை யுடையோனே! நெஞ்சால் இ மாற்றம் நினைந்து உரைக்க - மனத்தினுல் இவ் வார்த்தைகளை எண்ணிச் சொல்ல, நீ அல்லாது - உன்னை அல்லாமல், மன்னர் அஞ்சாரோ - அரசர்களும் சொல்லப் பயப்பட மாட்டார்களோ? எம் கோமான் - எங்கள் அரசனை நளனது, வாய்மையே - உண்மை நெறியே, வலி கண்டாய் - எங்களுக்கு உறுதி அளிப்பதாகும், இதனை நீ அறிவாயாக!' (என்று கூறினன்).

அஞ்சாரோ : வினு; அஞ்சுவர் என்ற உடன்பாட்டுப் பொருளைக் குறிப்பது. மன்னர் : மன்னரும் என்ற உம்மை தொக்கது. தீமையே : ஏகாரம் தேற்றப் பொருளையும், வாய்மையே : ஏகாரம் பிரிநிலையாகிய தனி உயர்வுப் பொருளையும் உணர்த்தி நின்றன. தீமையே கொண்ட சிறு தொழிலாய் என்றது; மடைத்தொழிலும், தேரோட்டுந் தொழிலும் இழிந்த தொழில்களாகக் கருதும் வழக்கு நோக்கி என்க.

பி - ம். 1. நினைந்துரைத்தாய். 2. ரடிமடையா.
3. தீமையே பூண்ட சிறுதொழிலாய் செங்கோலான்.
4. கண்டாய் வழக்கு. (57)

374. எந்தை கழலிணையி லெம்மருங்குங் காணலாம்
கந்து சுளியுங் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள்
மணிமுடியிற் றேய்ந்த வடு.

(மேலும்), "பணி முடியில் பார் காக்கும் - ஆதிசேடன் என்னும் பாம்பின் முடியின்மீது உள்ள இப்புவியைக் காத்து ஆட்சி புரியும், பார் வேந்தர் - உலக மன்னர்கள், கந்து சுளியும் கடா களிற்றின் வந்து - கட்டுத் தறியைக் கோபித்து ஓடித்தெறிய வல்ல மதயானை களின் மீது ஏறி வந்து (வணங்கும்போது), தங்கள் மணி முடியில் தேய்ந்த வடு - தம்முடைய இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற கிரீடங் களால் தேய்ந்து உண்டான தழும்புகளை, எந்தை கழல் இணையில் - எங்கள் தந்தையாகிய நளச்சக்கரவர்த்தியின் வீரக்கழல்கள் அணிந்த பாதங்களில், எ மருங்கும்-எப்பக்கங்களிலும், காணலாம்- இருப்பனவற்றை யாரும் பார்க்கலாம்.' (என்று கூறினன் இள வரசனை இந்திரசேனன் என முடிக்க).

பூமியை ஆதிசேடன் என்னும் பாம்பு தன் முடிமீது கொண்டு தாங்குகின்றது என்பது நம் புராணக் கொள்கை. 'புவியோ அரவுக் கொருதலைப் பாரம்' (ஔவையார்); 'அரவாகிச் சுமத்தி யால்'; (கம்ப. ஆரணிய : 58); கம்ப. பால திருவவதாரப் : 33. நளன், அரசர்கள் நாளும் வந்து வணங்குவதால் அன்னோர் மணி முடிகள் பட்டுத் தேய்ந்த வடுக்களையுடைய பாதத்தவன் என்பதாம்; நளனை, 'ஒன்னலர் மணிமுடி யுரிஞ்சுந் தாளினன்' என (நைடதம் நகரப் : 39) கூறுவதும் காண்க; மேலும், ஒப்பு : 'கோவுடை நெடு மணி மகுட கோடியால், சேவடி யடைந்தபொற் கழலுந் தேயுமால்' (கம்ப. பால. அரசியற் : 8);

"மாந்தையிலே வாழும் மகுடத் தியாகியுனக்
கேந்துந் தழும்போ விரண்டுளவால்—வேந்தர்
முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும்
படித்தழும்புன் கையிலே பார்" —(தனிப்பாடல்)

கம்ப. ஆரணிய : 559; முத்தொள்ளாயிரம் 67 என்பனவும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கன.

பி - ம். 3. பார்தாங்கும்; பார்வேந்தர் தாமும்.
4. தேய்த்த வடு, பட்ட வடு. (58)

375. மன்னர் பெருமை மடைய ரறிவரோ
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருள லென்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண்.

(அவ்விளவரசனை வாகுகனை நளன் நோக்கி), 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ - அரசர்களுடைய சிறப்புக்களை மடைத் தொழில் செய்பவர் அறிவாரோ?, (அறியமாட்டார் என்ற படி) 'உன்னை அறியாது உரை செய்த என்னை - உன் பெருமை அறியாது பேசிய என்னை, முனிந்து அருளல் - கோபித்துக் கொள்ள வேண்டாம்,' என்று சொல்லி, கனிந்து உருகி கண் நீர் வார - தளர்ந்து மனம் உருகித் தன் கண்களினின்றும் நீர் பெருகி வர, முடி சாய்த்து நின்றான் - தன் தலை வணங்கி நின்றான்.

மடையர் என்பது இங்கு சமையல் செய்வோர் என்பதோடு அறிவில்லாத மூடர் என்ற பொருளும் பட இரட்டுறமொழிதலாகக் கூறியதாகும், மடை - சோறு, 365 உரை காண்க. அறிவரோ - ஓகார வினா எதிர்மறைப் பொருளது. முனிந்தருளல் - முனியாதே என்னும் பொருளில் வந்த வியங்கோள் வினைமுற்று. அல் - விகுதி இங்கு எதிர்மறைப் பொருளது; 'பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்' (குறள். 196) என்றமைபோல. கனிந்துருகி நீர் வார கண் - தான் தன் மக்களது பெருந்தன்மையையும், தன் பால் அவர்கள் கொண்டுள்ள பெருமதிப்பையும் கண்ட நளன், தான் அறியாது கூறிய மொழிகளுக்கு மனம் வருந்தியதோடு, அம் மக்கள்பால் அன்பு மீதூரப் பெறவே, அவனுக்குக் கண்ணீர் பெருக்கெடுத்து வெளிப்பட்டது. இஃது 'அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர், புன்கணீர் பூச றரும்' (குறள். 71) என்ற பொய்யாமொழிக்கு ஏற்ற ஓர் எடுத்துக்காட் டாயிற்று என்னலாம்.

பி - ம். 2. வுரைசெய்தேன். 3. முடிதுளக்கி நின்றான்.
4. கனிந்துருகிக் கண்ணீர் கலுழ்ந்து, கனிந்தருளிக் கண்ணீர் கலுழ்ந்து.

(59)

அச்செய்தியைக் கேட்ட தமயந்தியின் துயரம்

376. கொற்றக் குமரனையுங் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்ரு லுங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தாரம் மாற்ற மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தா ளழுது.

(முன் அனுப்பிய சேடியர் தமயந்தியிடம் வந்து) அவன் - அந்த மடைத் தொழில் செய்து கொண்டிருந்த வாகுகன், கொற்ற குமரனையும் - (மன) வலிமை கொண்ட மைந்தனையும், கோதையையும் - புதல்வியையும், கண்டு - பார்த்து, மற்று - அதன்மேல், அவன் ஆங்கு உரைத்த வாசகத்தை - அந்த வாகுகன் அங்கே பேசிய பேச்சுக்களை, முற்றும் மொழிந்தார் - முழுவதும் கூறினர்; அ மாற்றம் மொழியாத முன்னே - அந்த வார்த்தைகளை அச்சேடியர் சொல்லி முடிக்கும் முன்னமே, அழிந்தாள் - (தமயந்தி) உணர்வு அழிந்தவளாகி, அழுது விழுந்தாள் - அழுதுகொண்டு கீழே விழுந்தாள்.

கொற்றக் குமரன் - அரசகுமாரன் என்னலும் ஆம், மற்றவன் தான் - இதில் மற்று, தான் என்பன அசைகள். அழிந்தாள், விழுந்தாள் : அழிந்தாள் என்ற வினைமுற்று எச்சப் பொருளில் நின்றது.

பி - ம். 2. வாசகமும்—முற்று. 3. மொழிவதற்கு முன்னே.
4. விழுந்தா ளயர்ந்த. (60)

**377. கொங்கை யளைந்து குழறிருத்திக் கோலஞ்செய்
அங்கை யிரண்டு மடுபுகையால்—இங்ஙன்
கருகியவோ வென்றழுதாள் காதலனை முன்னுள்
பருகியவேற் கண்ணுள் பதைத்து.**

காதலனை முன் நாள் பருகிய வேல் கண்ணுள் - தன் காதலனாகிய நளனது அழகை பிரிவதற்கு முன்னுட்களில் தன் கண்களால் பார்த்துப் பருகுவதுபோன்ற மகிழ்ச்சியடைந்த அத்தமயந்தி, பதைத்து - இப்பொழுது இருந்த உருவ வேறுபாட்டைக்கண்டு மனம் பதைத்து வருந்தி, 'கொங்கை அளைந்து - வாசனைப் பொருள்களைக் குழைத்துத் தடவி, குழல் திருத்தி - என் கூந்தலை வாரி, கோலம்செய் - அழகு படுத்திய, அம் கை இரண்டும் - அழகிய உமது கரங்கள் இரண்டும், அடு புகையால் - சமையல் வேலையில் ஏற்பட்ட புகையினால், இங்ஙன் - இவ்விதம், கருகியவோ - கருமையுற்றனவோ?' என்று அழுதாள் - எனக்கூறி வருந்தி அழுதாள்.

கொங்கு - மணம் : 'கொங்கு விம்மு பூங்கோதை': (சீவக. 2680) அடுபுகை - அடுதல் - சமைத்தல், இங்ஙன் - இங்ஙனம் என்பதன் இடைக்குறை; 364. காதலனை முன்னுட் பருகிய வேற்கண்ணுள்; 'உய்ஞ்சு கரையேற வொட்டுங்கொல்' என்னும் (82) செய்யுளால்

நன்கு விளங்குவது காண்க. பருகிய வேற்கண்ணுள் : வாயின் செயலான பருகுதலை இங்குக் கண்களுக்கு ஏற்றிக் கூறியது இலக்கணை என்பர்; 'நாற்றங் கேட்டலுந் தின்ன நயப்பதோர்' (கம்ப. பால. தாடகை வதைப். 64) என்று, நாசியின் முகர்தற் றொழிலைச் செவிக் கேற்றியதையும், 'செவிக்குண வில்லாத போழ்து' (குறள். 412) வயிற்றிற்கு உணவளிப்பதுபோலச் செவிக்கு உணவாகக் கேள்வியைக் கூறியதும் ஒப்பு நோக்குக; இனி, காதலனைப் பருகியது என்பது காதலன் அழகைப் பருகியது என்னும் பொருளில் இலக்கணையே ஆகும்.

பி - ம். 1, கொங்கை வருடிக் குழைதிருத்திக்; குழலிருத்திப் பூவணியும். 2. —தங்கிக், எங்கன். 4. கண்ணுள் பரிந்து. (61)

உள்ள நிலைமையைத் தமயந்தி தன் தந்தைக்கு அறிவித்தது

378. மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேரும் கொண்டணைந்து—மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்கா ணெங்கள்
கொடைத்தொழிலா னென்றுள் குறித்து.

'மற்று - இதன்பின்' இ திருநகர்க்கே - இந்த அழகிய குண்டின புரியாகிய நகரத்திற்கே, வந்து அடைந்த மன்னவற்கு - வந்து சேர்ந்துள்ள இருதுபன்ன மன்னனுக்கு, கொற்ற தனி தேரும் கொண்டு அணைந்து - வெற்றி தரும் ஒப்பற்ற தேரையும் செலுத்திக் கொண்டு இங்கு அடைந்து, மற்றும் - மேலும், மடை தொழிலே செய்கின்ற - சமையல் தொழிலையே செய்கின்ற, மன்னவன் - அரசனே, எங்கள் கொடை தொழிலான் - ஈகையைத் தன் தொழிலாகக் கொண்ட எங்கள் நளமன்னன் ஆவன்;' என்றுள் குறித்து - என்று குறிப்பிட்டு உறுதியாய்த் தமயந்தி கூறினள்.

முன்னர் உள்ள மற்று என்பதை அசையாகக் கொண்டாரும் உளர். திருநகர்க்கே, மடைத் தொழிலே என்பனவற்றில் உள்ள ஏற்றேகாரங்கள் தேற்றப் பொருளன. காண் : முன்னிலையசை, நளன் கொடைத் தொழிலான்; 340, 367.

பி - ம். 2. தனிதெடுந்தேர் கொண்டணைந்து—மற்றும்,
3. மடைத்தொழிலாய் வாகுவனுய் வந்தவன்றா னெங்கள்.
4. கொடைத்தொழில னென்றுள் குறைந்து; குலைந்து. (62)

வீமராசன் நளனைத் தோற்றத்தால் அறிய முடியாது வாக்கினால் அறிந்தது

379. போதலருங் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றான்—ஓதம்
வரிவளைகொண் டேறும் வளநாடன் றன்னைத்
தெரிவரிதா நின்றான் றிகைத்து.

போது அலரும் கண்ணியான் - அரும்புகள் மலரும் மாலையணிந்த வீமராசன், போர் வேந்தர் சூழ போய் - போர்த் தொழிலிற் றேர்ந்த அரசர்கள் பலர் தன்னைச் சூழ்ந்துவரச் சென்று, காதலி தன் காதலனை - தன் அன்பிற்குரிய குமாரியான தமயந்தியின் காதற் கணவனை நளனை, கண்ணுற்றான் - பார்த்தான்; (பார்த்ததும்) ஓதம் வரிவளை கொண்டு ஏறும் - அலைகள் பல கோடுகள் போன்ற சுழிகளையுடைய சங்குகளை வாரி எடுத்துக்கொண்டு கரைமீது ஏறிவரும், நீர் நாடன் தன்னை - கடல் நீர் சார்ந்த நிடத நாட்டரசனை நளனை, தெரிவு அரிதா திகைத்து நின்றான் - அடையாளம் தெரிந்து கொள்வது முடியாமல் மயங்கி நின்றான்.

போது - மலருந்தருணத்தில் உள்ள அரும்பு. கண்ணி - மாலை, ஓதம் - பலபொருட் டிரிசொல்; இங்கு அலை என்னும் பொருளில் வந்தது; 'கடலோதங் காலலைப்ப' (பொய்கையார்வார் முதற்றிருவந்தாதி : 16); 'ஓதந் தொகுத்த வொலிகடற்றண் முத்தம்' (ஐந்திணையைம்பது : 46).

பி - ம். 1. வரிவளை கண்டேறும். (63)

380. செவ்வாய் மொழிக்குஞ் செயலுக்குஞ் சிந்தைக்கும்
ஒவ்வாது கொண்ட வுருவென்னை—எவ்வாயும்
நோக்கினா னெக்கித் தெளிந்தா னுணங்கியதோர்
வாக்கினான் றன்னை மதித்து.

(வீமன் வாகுகனைக் கண்டு), கொண்ட உரு - இவன் கொண்டுள்ள இந்த உருவம், வாய் செம் மொழிக்கும் - (இவன்) வாயினின்று பிறக்கும் சிறந்த சொற்களுக்கும், செயலுக்கும் - இவன் செய்யும் மடைத் தொழிலுக்கும், ஒவ்வாது என்னை - பொருந்தினதன்று என்று, எ வாயும் நோக்கினான் - எல்லா விதமாகவும் ஆராய்ந்து பார்த்தான்; நோக்கி - அவ்வாறு பார்த்து, நுணங்கியது ஓர் வாக்கினான் தன்னை - நுட்பமான ஒப்பற்ற பேச்சுக்களையுடைய அவ்வாகுகனை, மதித்து - நளன் என்றே நிர்மானித்து, தெளிந்தான் - சந்தேகம் நீங்கித் தெளிவடைந்தான்.

வாக்கினில் மதிப்பது; 'காட்டுங் குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்'; (குறள். 959). நுணங்கிய வாக்கு - நுண்ணிதாகிய கல்வி கேள்விகளின் கருத்தமைந்த வாக்கு. இராமபிரான் அநுமன் திறத்து, 'இவன் சொல்லாலே இவன் கல்வியின் சிறப்பு விளங்குகின்ற'தென்று இலக்குவனுக்குக் குறிப்பிட்டுக் காட்டிப் பாராட்டியது நோக்குக; கம்ப. கிட்கிந்தா: மராமரப்: 20. நுணங்கு தலாவது: கூர்மையும் வளைந்து கொடுக்கும் தன்மையும் உடைய தாதல். 'நுணங்கிய கேள்வியர்' (குறள். 419); 'நோக்கின ரிருவரு நுணங்கு கேள்வியார்' (கம்ப. ஆரணிய: 1150).

பி - ம். 1. திருகைக்குஞ் செய்கைக்கும்.
2. வருவமென.
3. நோக்கினு னேக்கித் தெளிந்தா னுடங்கினான். (64)

வீமராசன் நளனைத் தன் உருக்காட்ட வேண்டியது

381. பைந்தலைய நாக பணமென்று பூகத்தின்
ஐந்தலையின் பாளைதனை யையுற்று—மந்தி
தெளியா தீருக்குந் தீருநாடா வுன்னை
ஒளியாது காட்டுன் னுரு.

(வீமராசன் வாகுகனை நோக்கி), 'மந்தி - பெண் குரங்கு, பூகத்தின் ஐம்தலையின் பாளைதனை - கமுக மரத்தின் தகடுபோல் அகலமாய் உள்ள பாளையை, பைம் தலைய - பசுமையான தலையையுடைய, நாக பணம் என்று ஐயுற்று - நாகப் பாம்பின் படம் என்று சந்தேகங் கொண்டு, தெளியாது இருக்கும் - மனம் தெளிவுறாது அஞ்சி அம் மரத்தின் மேல் ஏறாமல் இருக்கும், 'திருநாடா - வளஞ் சிறந்த நிடத நாட்டையுடைய அரசனே! உன் உரு ஒளியாது - உன் உருவை மறைக்காமல், உன்னை காட்டு - உன்னை எங்களுக்குக் காட்டு வாயாக!' (என்றான் என்றபடி).

பூகம் - பாக்கு மரமும் ஆம். ஐம்தலை; ஐம்மை + தலை; ஐம்மை-தகட்டு வடிவு (பிங்); ஐந்தலை என்பதற்கு அழகிய தலை என்றும், குறுகிய தலை என்றும் பொருள் கொண்டாரும் உளர். மந்தி, பூகத்தின் பாளையை நாகத்தின் படம் என்று எண்ணி அஞ்சித் தெளியாதிருக்குந் திருநாடா என்றது, நாங்கள் உன் உருவத்தைத் தெளியாது அஞ்சி இருக்கின்றோம் என்ற உட்பொருளும் அமைந்துள்ளமை காண்க.

பி - ம். 2. ஐந்தலைய.
3. திருநாடர் கோவே, திருநாடா செம்மை. (65)

நளன் கார்க்கோடகன் தந்த ஆடைகளை யுடுத்ததும் சுய உருப்பெற்றதும்

382. அரவரசன் ருன்கொடுத்த வம்பூந் துகிலின்
ஒருதுகிலை வாங்கி யுடுத்தான்—ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்டளிக்கும்
கோத்தாய முன்னிழந்த கோ.

(அவ்வாறு வீமன் கேட்டுக்கொண்டதும்), பொரு கலியின் வஞ்சனையால் - பகைமை கொண்ட கலிபருடனின் வஞ்சகக் கொடுஞ் செயலால், பூண்டு அளிக்கும் - தனக்கு உரிமை பூண்டு அன்புடன் ஆண்டுவந்த, கோ தாயம் - அரசுரிமையை, முன் இழந்த கோ - முன் சூதாட்டத்தில் இழந்த அரசனை நளன், அரவ அரசன் தான் கொடுத்த - பாம்பரசனை கார்க்கோடகன் முன் தனக்குக்கொடுத்த அம் பூம் துகிலின் - அழகானவும் பூப்போல் மென்மையுள்ளனவுமான ஆடைகளுள், ஒரு துகிலை வாங்கி உடுத்தான் - ஓர் ஆடையை எடுத்துத் தன் அரையில் உடுத்திக்கொண்டான்; ஒரு துகிலை போர்த்தான் - மற்றோர் ஆடையை மேலே போர்த்துக்கொண்டான்.

நளனுக்கு அரவரசன் ஆடைகள் அளித்தது; 328, 329. அரவரசன் நளனுக்கு முன் கொடுத்தது ஒற்றை ஆடையே எனவும், இங்கு இரண்டு ஆடைகள் கூறப்பெற்றமை எவ்வாறு பொருந்தும் எனவும் மயங்கினரும் உளர். ஒற்றையாடை அளிப்பது நம்மனோர் வழக்கன்று; இரட்டை ஆடைகள் அளிப்பதே மரபும் மரியாதையும் ஆகும். ஆதலால் கார்க்கோடகன் நளனுக்கு இரண்டு ஒன்று சேர்ந்த ஒரு ஜோடி துகிலை கொடுத்தான் எனக் கொள்ளற் பாலதாம்.

பி - ம். 1. வம்பொற் றுகிலின்.

3. போர்த்தா னிருங்கலியின் வஞ்சனையாற் பூண்டதன்.

383. மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே—அக்காலம்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையும்
மானகத்தேர்ப் பாகன் வடிவு.

(அவ்வாறு நளன் ஆடைகளை அணிந்தவுடன்), அ காலம் - முன்னம், காதலியை கானகத்தே நீத்து - தன் அன்பிற்குரிய மனைவியைக் காட்டிடையே விட்டுத் துறந்து, கரந்து உறையும் - உருமாறி வசித்து வந்த, மான் அகம் தேர்ப்பாகன் வடிவு - குதிரை

கனைத் தன்னிடம் பூட்டப்பெற்ற தேர்ப்பாகனை வாகுகன் உருவம், மிக்கோன் - திரிவிக்கிரமனுய் உயர்ந்த திருமாலின், உலகு அளந்த மெய் அடியே - உலக முழுவதும் ஓரடியால் அளந்த என்றும் பெருமை கெடாத ஸ்ரீபாதங்களையே, சார்வு ஆக - தமக்கு ஒரு பற்றுக்கோடாக, புக்கோர் - போய்ச் சரணடைந்தோர்தம், அருவினை போல் - தீராத வினைகள் நீங்குமாப் போல், போயிற்று - அவனை விட்டு நீங்கியது. ஏ : ஈற்றசை.

உலகளந்த மெய்யடி - உலகம் முழுவதும் தன் ஓரடியில் அடக்கியளந்த திருவடி, மெய்யடியே : ஏகாரம் தேற்றப்பொருளது; அதாவது, வேறொரு நாட்டமுமின்றி என்பதாம். அக்காலம் - பண்டறிசுட்டு; (பிங்). இனி, மானகத்தேர் என்பதை, மால் நக தேர் எனக்கொண்டு, பெரிய மலை போன்ற தேர் எனப் பொருள் கொள்ளலும் ஏற்கும்; நகம் - மலை; இது நாகம் என்பதன் குறுக்கல் விகாரம்; நகாதிராஜன் என இமயமலையைக் கூறுவதும் காண்க. கலி நளனை முன் அடைந்தபோது, 'நாராயணைய நமவென்றவனடியைச் சேராரை வெந்துயரஞ் சேர்ந்தாற்போல்' (199) என்றதற் கிணங்கக் கலி அவனை விட்டு நீங்கும் இவ்விடத்தும் 'மிக்கோனுலகளந்த...போயிற்றே' என்று கூறுந் திறத்தால், திருமால் திருவடிகளைச் சாராதார் அடையுந் துயர்களையும், சார்ந்தோர் தம் வினைகள் நீங்கி அடையும் நலன்களையும், முறையே எதிர்முகமாகவும், நேர்முகமாகவும் கூறி ஆசிரியர், தாம் திருமாலிடங் கொண்ட சிதையாப் பக்தி மேம்பாட்டை இச்சரித்திரத்தில் இவ்விரு ஏற்ற இடங்களில் நிலைநாட்டியுள்ளமை ஓர்ந்து உணரத் தக்கதாகும்.

பி - ம். 1. சார்வாகிப்,
2. புக்கா ருருவினை ; நிருவினைபோற் ; போந்ததே. (67)

நளன் மக்கள், அவனைச் சுயவடிவிற் கண்டு மகிழ்ந்து வணங்கியது

384. தாதையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீரும்பப்
போதலருங் குஞ்சியான் புக்கணைந்து—கோதிலாப்
பொன்னடியைக் கண்ணிற் புனலாற் கழுவினன்
மின்னிடையா ளோடும் விழுந்து.

போது அலரும் குஞ்சியான் - நாள் அரும்புகள் மலர்ந்து விளங்கும் சிகையையுடைய இந்திரசேனன், தாதையை முன் காண்டலும் - தன் தந்தையாகிய நளனைச் சுயவடிவுடன் தன்னெதிரே கண்டவுடனே, தாமரை கண் நீர் அரும்ப - தாமரை மலரிதழ்

போன்ற தன் கண்களில் நீர் தோன்ற, மின் இடையாள் ஓடும் - மின்னல் போன்ற இடையுடைய தன் தங்கையாகிய இந்திரசேனை என்பாளோடும், புக்கு அணைந்து - புகுந்து (தன் தந்தையைத்) தழுவிக்கொண்டு, விழுந்து - கீழே விழுந்து, கோது இலா பொன் அடியை - குற்றமற்ற (அவன்) அழகிய பாதங்களை, கண்ணில் புனலால் - தன் கண்களிற் பெருகி வழிந்த நீரால், கழுவினன் - அலம்பினன்.

போது - மலரும் தருணத்து அரும்பு; 379. குஞ்சி - ஆடவர் தலைமயிர். காண்டலுமே: உம் எச்சப் பொருளைத் தழுவிய இடைச் சொல்: ஏ - அசை நிலை. பெரியோர்களைக் கண்டவிடத்து, நமஸ்கரித்து கால் கழுவ நீர் முதலிய உபசாரம் செய்யும் முறையை இங்குக் கண்ணீர் புனல்கொண்டு கழுவியதாகச் சிறப்பித்துக் கூறப்பெற்றது. கண்ணீராற் கழுவுதல்; 221, 242, கம்ப. அயோத். குகப்: 39; ஆரணிய: 549.

பி - ம். 1. நீர் சொரியப், நீர் ததும்பத்.
2. போய்ப் பணிந்து—கோதிலான்.
3. பொன்னடியிற். 4. விழுந்து. (68)

தமயந்தி நளனடியில் வீழ்ந்து வணங்கியது

385. பாதித் துகிலோடு பாய்ந்தீழியுங் கண்ணீரும்
சீதக் களபதனஞ் சேர்மாசும்—போத
மலர்ந்ததார் வேந்தன் மலரடியில் வீழ்ந்தாள்
அலர்ந்ததே கண்ணீ ரவற்கு.

(தமயந்தி நளனைச் சுயவடிவிற் கண்டதும்), பாதி துகிலோடு - நளன் அரிந்து நீத்த அப்பாதி ஆன உடையோடு, பாய்ந்து இழியும் கண்ணீரும் - கீழே பாய்ந்து வழிந்தோடும் கண்ணீரோடும், தனம் சேர் சீத களப மாசும் - தனங்களின் முன் பூசப்பெற்ற குளிர்ந்த வாசனைப் பூச்சோடு கூடிய அழுக்கும், போத - நீங்க, மலர்ந்த தார் வேந்தர் - அலர்ந்த மாலையணியும் அரசனான அந்நளனுடைய, மலர் அடியில் வீழ்ந்தாள் - தாமரை மலர்கள்போன்ற பாதங்களின்மேல் விழுந்து அழுது வணங்கினாள்; அவற்கு - அப்போது அந்நளனுக்கு, கண் நீர் அலர்ந்தது - கண்ணீர் ததும்பிப் பெருக்கெடுத்து ஓடியது. ஏ, ஈற்றசை.

இதனால், தமயந்தி, நளனைப் பிரிந்தது முதல் இதுவரை, தான் உடுத்திருந்த பாதியாடையோடும், குளித்துத் தன்னைச் சுத்தஞ்

செய்துகொள்ளாமலும் இருந்தாள் என்பது விளங்குவது காண்க. மேலும் அவள் தன் சிற்றன்னையான சேதியரசன்தேவி அரண்மனையிலும் இக்கோலம் மாறுமலே இருந்தாள் என்பது (309-ம்) பாடலாலும் விளங்குவது காண்க. இனி, சீதாப்பிராட்டியார் அசோகவனத்தில் சிறையிருந்தகாலை, 'ஒரு சடையாகிய குழலாள்' (கம்ப. சுந்தர. 339) எனவும், 'ஆவி யந்துகில் பூணவதொன் றன்றிவே றறியாள்' எனவும் 'தேவு தெண்கட லமிழ்துகொண் டனங்கவேள் செய்த, ஓவி யம்புகை யுண்டதே யொக்கின்ற மெய்யாள்' (கம்ப. சுந்தர. 340) எனவுங் கூறப்பெற்றமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கன. இதனால் அறக்கற்புடைய அருங்குல மகளான தமயந்தி தன் கணவனை அடையும் நிலையிற் கொண்டிருந்த, தன் உடல் நலனும்பேணுத் தவநெறியின் உறுதி புலப்படுவது காண்க.

பி - ம். 1. பாய்த்தொழுகுங், போர்த்திழியும் பண்பினுள்.
2. —போதின்.
3. மலிந்ததோண் மன்னன் ; மலர்ந்ததேர் மன்னன்.
4. அலைந்ததே, அலைந்ததேன் ; கொங்கையா ளாங்கு. (69)

தமயந்தியின் துயரநிலை

386. வெவ்விடத்தோ டொக்கும் விழியிரண்டும் வீழ்துயில்கொள்
அவ்விடத்தே நீத்த வவரென்றே—இவ்விடத்தே
வாரார் முலையாளம் மன்னவனைக் காணுமல்
நீரான் மறைத்தனவே நின்று.

வெம் விடத்தோடு ஒக்கும் - கொடிய விஷத்தை ஒத்ததான, விழி இரண்டும் - கண்கள் இரண்டும், வீழ் துயில்கொள் - சோர்ந்து அடங்கிய தூக்கம் கொண்ட, அ இடத்து ஏ - அந்த நடுக்காட்டினிடத்திலே, நீத்த அவர் என்றே - விட்டுப் பிரிந்த அவரே இவர் என்று, வார் ஆர் முலையாள் - கச்சினால் நிறைந்து விளங்கும் தனங்களையுடைய தமயந்தி, அ மன்னவனை காணுமல் - அந்த மன்னனை நளனைக் காணமுடியாதபடி, இ இடத்தே நின்று - இங்கு, தமயந்திக்கும் நளனுக்கும் இடையே தடையாக நின்று, நீரால் மறைத்தன - தன் கண்ணீரால் மறைத்துவிட்டன. ஏ : வியப்பை உணர்த்தும் ஈற்று இடைச்சொல், அசை நிலையும் ஆம்.

மகளிர் கண்களுக்கு விடம் ; கம்ப. பால. உண்டாட்டுப். : 10; கடிமணம் : 37 ; அபோத். சித்திரகூடப். : 38 ; கலிங்கத்துப் : 48. விழியிரண்டும் மறைத்தன என முடிவு செய்க. தமயந்தி நளனைப்

பார்க்க விரும்பினாலும், அவள் விழிகள் காணவிடாமல் நீரால் மறைத்துத் தடுத்தன. வீழ்துயில் - தன் கேட்டுக்குக் காரண மான துயிலும் ஆம். முன் கன்னிமாடத்தில் தூதனுக வந்த தன் காதலனை நளனைத் தமயந்தி கண்டு, அவனைத் தழுவி மகிழ விரும்பிய விடத்து, நாணந்தறி அவளைத் தடுத்ததுபோல (85), இங்கு அவள் கண்ணீர் அவனைக் காணவிடாது தடுத்தது என்று கூறிய நயம் பாராட்டற் பாலதாம். முன் நாணம் தடுத்தது, இப் பொழுது கண்ணீரால் துயரம் தடுத்தது. இது தற்குறிப்பேற்ற அணி. (70)

வானவர் நளனை வாழ்த்திப் பூமாரி பெய்தது

387. உத்தமரின் மற்றிவனை யொப்பா ரொருவரிலை
இத்தலத்தி லென்றிமையோ ரெம்மருங்கும்—கைத்தலத்தில்
தேமாரி பெய்யுந் திருமலர்த்தார் வேந்தன்மேல்
பூமாரி பெய்தார் புகழ்ந்து.

(அப்போது வானில் நின்று) இமையோர் - தேவர்கள், இ தலத் தில் - இப்புவியில், உத்தமரில் இவனை ஒப்பார் - மேலோரில் இந் நளனை ஒப்பாக உள்ளார், மற்று ஒருவர் இலை என்று - வேறு ஒரு வரும் இல்லை என்று, தேமாரி பெய்யும் திருமலர் தார் வேந்தன் மேல் - தேன் மழைபோலச் சொரியும் அழகிய மலர் மாலை அணிந்த நளச்சக்கரவர்த்தியின்மீது, எ மருங்கும் - எப்புறமும் சூழ்ந்து கொண்டு, கை தலத்தில் - தம் கைகளிற் கொண்ட, பூமாரி - மலர் களின் மழையை, பெய்தார் - பொழிந்து புகழ்ந்தனர்.

மற்றிவனை : மற்று என்பதை அசையாகக் கொண்டாரும் உளர். இலை : இல்லை என்பதின் இடைக்குறை. இமையோர் : இமை யாத கண்களையுடைய தேவர். 330இல் கூறிய உரையை இங்கு நோக்குக. தே - தேன்; கடைக்குறை; 'தேநீ ரளித்தருகு செங்நெற் கதிர் வினைக்கும் மாநீர் நிடதத்தார் மன்' (393) என்றமை காண்க.

பி - ம். 1. உத்தமருள் மற். 2. —கைத்தலத்தால்.
4. பெய்தார் புகுந்து. (71)

கலி, நளனைத் தன்பால் வரம் கொள்ள வேண்டியது

388. தேவியிவள் கற்புக்குஞ் செங்கோன் முறைமைக்கும்
பூவுலகி லொப்பாயார் போதுவார்—காவலனே
மற்றென்பால் வேண்டும் வரங்கேட்டுக் கொள்ளென்ருன்
முற்றன்பாற் பாரளிப்பான் முன்.

(அப்போது அங்குவந்த கலி), முற்று அன்பால் பார் அளிப் பான் முன் - முழுதும் நிறைந்த அன்பினால் உலகைப் பாதுகாக்கும் நளன் முன் வந்து, 'தேவி இவள் கற்புக்கும் - உன் தேவியாகிய இந்தத் தமயந்தியின் கற்புநெறிக்கும், செம் கோல் முறைமைக்கும் - உனது முறை தவறுத ஆட்சிக்கும், பூ உலகில் - இந்தப் புவியினி டத்து, ஒப்பாய் - நேராய், யார் போதுவார் - யாரே (இனி) தோன்றக் கூடியவர் ஆவர்? (ஒருவருமிலர் என்றபடி); காவலனே - அரசனே! மற்று - இனி, என்பால் வேண்டும் வரம் கேட்டுக்கொள் என்றான் - என்னிடம் நீ விரும்பும் வரத்தைக் கேட்டுக் கொள்வாயாக!' என்று கூறினன்.

யார் போதுவார் - யாரே போதுமான தகுதி உடையவராவர்? என்னலும் அமையும். மற்று : என்பதை அசையாக விடுத்தாரும் உளர். ஒப்பாயார் போதுவார்; என்றமையால் உங்களிருவருக்கும் ஒப்பு முன்னும் இல்லை இனிப் பிறகும் ஒருவர் உண்டாகப் போவ தில்லை; என்பதாம். இங்கு நளன்முன் கலி வந்து வரமளித்த தாகக் கூறும், இந்நூலின் தனிச்சிறப்பு, அடுத்த 360 ஆம் செய்யு ளின் உரையில் குறிப்பாய் எடுத்துக் காட்டியுள்ளமை நோக்குக.

பி - ம். 1. தேவியிவன் கற்பென்னுஞ் செந்தீ சுடுமன்றே.
2. லொப்பாரார் போதுவார்; ஆவிமிக நடுங்கி யஞ்சினேன்.
3. வரன்வேண்டிக் கொள்ளென்றான்.
4. முற்றன்பா னீற்பான்றன் முன். (72)

நளன் கேட்ட வரம்

389. உன்சரிதஞ் செல்ல வுலகாளுங் காலத்து
மின்சொரியும் வேலாய் மிகவிரும்பி — என்சரிதம்
கேட்டாரை நீயடையே லென்றான் கிளர்மணிப்பூண்
வாட்டானை மன்னன் மதித்து.

கிளர் மணி பூண் வாள் தானை மன்னன்-ஒளிவீசும் இரத்தினங் களாலான ஆபரணங்களை அணிந்தவனும் வாளேந்திய படைகளை யுடைய அரசனுமான நளன், மதித்து-கலி கூறியதை நன்கு ஆலோ சித்து, (அக்கலியை நோக்கி) 'மின் சொரியும் வேலாய் - மின்னொளி யைப் பொழியும் வேல் ஏந்தியவனே! உன் சரிதம் செல்ல - உன் ஆட்சியான காலம் நடைபெற, உலகு ஆளும் காலத்து - நீ இவ் வுலகத்தை ஆண்டு வரும் உன் தசை அல்லது உன் கோசர நிலையான காலத்து, என் சரிதம் கேட்டாரை - என் சரித்திரத்தை

விருப்புடன் கேட்டவர்களே, நீ அடையேல் என்றான் - நீ அடைந்து வருத்தா திருப்பாயாக!' என்று கேட்டுக் கொண்டான்.

சரிதம் - சஞ்சாரம்; ஆட்சியும் ஆம். நளன் தருமம் அதிகம் கெடாத, தான் வாழ்ந்து வந்த அத்துவாபர யுகத்திலேயே தன்னைப் பெரிதும் வருத்திய கலி, இனி அதருமம் மிக்கோங்குவதும், அக்கலியின் ஆட்சிக்கு உரியதுமான கலியுகத்தில் அக்கலியால் உலகுக்கு என்ன கேடு ஏற்படுமோ என்று அஞ்சியும், தான் அடைந்த துன்பம் இனிப் பிறர் அடையாமல் இருக்க வேண்டும் எனும் பெருங்கருணை மீதூரப் பெற்றும், 'உன் சரிதஞ் செல்ல .....நீ யடையேல்' என்று கலியை வரங்கள் கேட்டுக் கொண்டான் எனக் கொள்க. இதுவே ஆன்றோர் உயர் நெறியும் ஆகும் என்பது; 'தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம் வெங்குறை தீர்க் கிற்பார் விழுமியோர்' (நன்னெறி 10) என்பதாலும் விளக்கமுறுவது காண்க. இதனை ன்றோ, ஆன்றோர்கள், புண்ய ச்லோகிகளுள் இந்நளனை முதலில் வைத்துப் பாராட்டுவாராயினர்* (புண்யச்லோகி: அவருடைய சரித்திரத்தைக் கேட்பதால் புண்ய பலன் உண்டாகக் கூடிய பெருமையுடையவர்.) கலிகாலங் கொடிது என்பது; 'ஒலிகட லுலகந் தன்னி லூர்தரு குரங்கின் மாடே, கலியது காலம் வந்து பரந்ததோ' (கம்ப. கிட்கிந்தா. வாலிவதைப். : 80) என்று இராமபிரானை நோக்கி வாலி கூறியவாற்றால் விளங்க வைத்தமை அறிக. கேட்டாரை: உபலக்ஷணத்தால், தன் சரிதத்தைப் படித்தாரையும், படிக்கக் கேட்டாரையும் என உடன் கூட்டிக் கூறியதாகும். மதித்து - பாராட்டி என்னலும் ஒன்றும்.

பி - ம். 1. உன்சரிதை செரல்லி. 2. —என் சரிதை
3. நீயடைய வென்றான். 4. வாட்டானை மன்னன் மகிழ்ந்து.

கலி நளனுக்கு வரமளித்து மீண்டது

390. என்காலத் துன்சரிதங் கேட்டாரை யானடையேன்
மின்கா லயில்வேலாய் மெய்யென்று—நன்காலின்
மட்டுரைக்குஞ் சோலை வளநாடன் முன்னின்று
கட்டுரைத்துப் போனான் கலி.

*புண்ய ச்லோகோ நளோ ராஜா
புண்ய ச்லோகோ யுதிஷ்டிர:
புண்ய ச்லோகா ச வைதேஹி
புண்ய ச்லோகோ ஜனார்தன:

கலி - கலியாகிய சனிபகவான், (நளனை நோக்கி), 'மின் கால் அயில் வேலோய் - மின்னல் போன்ற ஒளியைப் பொழிகின்ற கூரிய வேலையுடைய நளனே! என் காலத்து - எனது ஆட்சிக் காலத்தில், உன் சரிதம் கேட்டாரை - இந்த உன் சரித்திரத்தை விருப்புடன் கேட்டவர்களை, யான் அடையேன் - நான் அடைந்து துன்புறுத்த மாட்டேன்; மெய் என்று - இஃது உண்மை' என்று, நல் காலின் - நல்ல குளிர்ந்த காற்றினால், மட்டு - தம்மிடம் உள்ள தேனை, உரைக்கும் - எங்கும் பூசிப்படியச் செய்யும், சோலை வள நாடன் - சோலைகள் நிறைந்த வளம் பொருந்திய நிடத நாட்டையுடைய நளனது, முன் நின்று - எதிரே நின்று, கட்டுரைத்து போனன் - உறுதிமொழி கூறிச் சென்றான்.

நளன் வேல் ஏந்தியவன்; 'மின் சொரியும் வேலான்' (389); என்றது போல; கேட்டாரை என்பதற்கு முன் (389) இல் கூறியது போல இங்கும் பொருள் விரித்துக் கொள்க.

குறிப்பு :— இக்காலை, தேவர்கள் பூமாரி பெய்து நளனையும், தமயந்தியையும் கொண்டாடி வாழ்த்தினர் என்றும், கலியும் அங்கு வந்திருந்து வாழ்த்தி நளனுக்கு வரம் அளித்துச் சென்றான் என்றும், அழகுற மங்களகரமாகச் சரிதத்தை ஆசிரியர் அமைத்து முடிக்கு முறை, மற்றைய நளோபாக்யானத்திலும் நைடதத்திலும் இல்லாத ஒரு தனிச் சிறப்பை இந்நூலுக்கு அளிப்பதாகும்.

பி - ம். 1. உன்சரிதை சொல்லி.
2. மின்காலும் வேலா யெனவிரும்பி; நன்காவி.
3. மட்டுறைக்குஞ் மட்டிறைக்குஞ், தாரார் வளநாடன். (74)

வீமராசன் நளன் முதலியோர்க்கு விருந்தளித்தது

391. வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கண்
கோதையையு மக்களையுங் கொண்டுபோய்த்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து.

தாது புதைய - (கீழே உதிர்ந்து கிடக்கும்) மகரந்தங்கள் உள்ளே புதைந்து மறையும்படி, தேன் பாய்ந்து ஒழுகும் - தேன் பாய்ந்து ஓடும், பூம் சோலை வேலி - பூக்கள் நிறைந்த சோலைகளைச் சுற்றிலும் வேலிகளாகக் கொண்ட, விதய கோன் - விதர்ப்ப நாட்டரசனான வீமராசன், வேத நெறி வழுவா - வேதங்கள் கூறும் முறையினின்றும் தவறாத ஒழுக்கமுடைய, வேந்தனையும் - அரச

னை நளனையும், பூம் தடம் கண் கோதையையும் - தாமரை மலர் போன்ற விசாலமான கண்களையுடைய தமயந்தியாகிய தன் புதல்வியையும், மக்களையும் அவள் குழந்தைகளையும் கொண்டு போய் - தன் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு சென்று, விருந்து செய்தான் - விருந்து செய்து உபசரித்தான்.

பூந்தடங்கண் - அழகிய அகன்ற கண் எனலும் ஒன்றும். கோதை : உவமை ஆகுபெயர்; கோதை என்பதற்குக் கூந்தல் எனப்பொருள் கொண்டால் சினையாகு பெயராகும். தாது புதையத்தேன்.....பூஞ்சோலை வேலி விதையம்; விதயம் என்பது எதுகை நோக்கித் திரிந்தது. முன், 'பசுங் குவளை ஏரடித்த கட்டி கரையத் தேனூறுங் கடலுடன்' (66) என்றதை ஒப்பு நோக்குக. சோலை வேலி - சோலை சூழ்ந்த வயல் நிலம் என்னலும் ஆம்; வேலி - நிலம் (பிங்.); 'சாலி வேலியுந் தழீஇய வைப்பும்' (கம்ப. பால. நாட்டுப். : 12); இனி வேலி என்னும் அளவுபடுத்தப்பெற்ற நிலங்களையுடைய என்னலும் ஆம்; 'வேலி யாயிரம் விளையுட் டாக' (பொருந. : 246–7); வேலி - இருபது மாக்கள் கொண்ட நிலம்.

பி - ம். 4. விதையத்தேன் செய்தான். (75)

இருதுபன்னன் நளனிடம் தன் பிழை பொறுக்க வேண்டிப் பின் தன் நகர்க்கேகியது

392. உன்னையா னென்று முணரா துரைத்தவெலாம்
பொன்னமருந் தாராய் பொறுக்கென்று—பின்னைத்தன்
மேனீர்மை குன்று வெறுந்தேர் மிசைக்கொண்டான்
மானீ ரயோத்தியார் மன்.

மால் நீர் அயோத்தியார் மன் - பெரிய நீர்வளம் பொருந்திய அயோத்தி நகரத்தார் அரசனை இருதுபன்னன், (நளனை நோக்கி), 'பொன் அமரும் தாராய் - அழகு பொருந்திய மாலையுடையோனே! யான் உன்னை ஒன்றும் உணராது - நான் உன்னை இன்ன னென ஒரு சிறிதும் அறிந்து கொள்ளாமல், உரைத்த எலாம் - ஒரு வேலைக்காரன் என்ற முறையில் கூறிய கடுஞ்சொற்கள் யாவற்றையும், பொறுக்க என்று - நீ பொறுத்துக் கொள்ள வேண்டும்' என்று குறை நயந்து கேட்டுக் கொண்டு, பின்னை - பிறகு, தன் மேல் நீர்மை குன்று - தனது மேன்மைத் தன்மை யாவும் ஒடுங்கிக் குறைந்து, வெறும் தேர் மிசை கொண்டான் - தனது அலங்கரிக்கப் பெறுது பொலிவற்றிருந்த தேர் மீது ஏறித் தன் நகர் நோக்கிச் செல்லலானன்.

பொன் அமரும் தார் - பொன்னால் அமைந்த மாலை எனலும் ஆம். பொறுக்கவென்று எனப்பாலது பொறுக்கென்று எனத் தொகுத்தல் விகாரம் ஏற்றது. மேல் நீர்மை குன்றியது: பிறன் மனைவியை மறுமுறையாக மணக்கக் கருதி வந்த குணக்குறைவால் என்க. மே நீர்மை; மே - மேம்பாடு எனக் கொள்வர்; வெறுந் தேர் - அலங்காரம் செய்யாத தேர்.

பி - ம். 2. பொன்மருவு தரராய், பொன்னமரு மார்ப; பொறுத்தியென— பின்னைத்தன், அந்நிலையே.
3. மேர்மை குன்ற. 4. மாநீர். (76)

நளன் தன் மனைவி மக்களுடன் நிடதநாடு சென்றது

393. விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேற் றேவியொடும் போயினன்—முற்றும்பல்
தேநீ ரலித்தருகு செந்நெற் கதிர்விளைக்கும்
மாநீர் நிடதத்தார் மன்.

ஆம்பல் - அல்லி மலர்கள், தே நீர் - தம் தேனுகிய நீரை, முற்று அளித்து - முழுவதும் பாய அளித்து, அருகு - தன் அருகே வளரும், செம் நெல் கதிர் விளைக்கும் - சிவந்த சம்பா நெற்பயிரின் கதிர்களை நன்கு விளையச் செய்யும், மா நீர் நிடதத்தார் மன் - பெரிய நீர் வளமுடைய நிடத நாட்டினர்க் கரசனை நளன், வில் தானை முன் செல்ல - வில்லேந்திய வீரர்கள் அடங்கிய சேனை தன் முன்னே செல்லவும், வேல் வேந்தர் பின் செல்ல - வேல் ஏந்திய மற்றை அரசர்கள் தன்னைத் தொடர்ந்து பின் வரவும், பொன் தேர் மேல் - பொன்னலமைந்த தேரின்மீது, தேவியொடு - தன் மனைவியாகிய தமயந்தியோடும், போயினன் - தன் மாவிந்த நகர் நோக்கிச் சென்றான்.

தே - தேன்; 'தேமரு தார்க்காளை', (136). மாநீர் நிடத்தார்: 'மாநீ ரயோத்தியார் மன்' (392) என்றது போல. தேவியொடும், உபலக்ஷணத்தால், தன் மக்களோடும் எனக் கூட்டிக் கொள்க. பொற்றேர் - அழகிய தேரும் ஆம்.

பி - ம். 2. —முற்றுடல். 3. தேனீரளித். 4. மானீர். (77)

394. தானவரை வெல்லத் தரித்தநெடு வைவேலாய்
ஏனதெறி தூரமினி யெத்தனையோ—மானேகேள்
இந்த மலைகடந் தேழுமலைக் கப்புறமா
விந்தமெனு நம்பதிதான் மிக்கு.

(அவ்வாறு செல்லும்போது தமயந்தி நளனை நோக்கி), 'தான வரை வெல்லத் தரித்த - அசுரர்களைப் போரில் வென்று அழிக்கத் தன் கையில் தாங்கிய, நெடு வை வேலாய் - நீண்ட கூரிய வேலேந் திய முருகன் போன்ற மன்னனே! ஏனை நெறி தூரம் இனி எத்தனையோ - மற்றும் நாம் போக வேண்டிய வழியின் தூரம் இனி எவ்வளவு உள்ளதோ?' (என்று கேட்க நளன்), 'மானே கேள் - மான் போன்றவளே நீ கேட்பாயாக! இந்த மலை கடந்து ஏழு மலைக்கு அ புறம் ஆ - இதோ தெரியும் இந்த மலையை நாம் கடந்து இதன்பின் உள்ள ஏழுமலைகளுக்கு அப்பாலே, மாவிந்தமெனும் நம் பதி தான் மிக்கு - மாவிந்தம் என்னும் நம் நகரம் சிறந்து விளங்குவதாகும்' (என்று கூறினன் என்க).

தானவரை வெல்ல.....வை வேலாய்; நளன் அசுரர்களை வென்ற செய்தி எங்கும் அறியப் பெருமையால், இத்தொடர் முருகப்பிரானைக் குறிப்பதாகக் கொண்டு அவன் போல் வீரமிக்க நளன் என இயைத்துப் பொருள் கொள்ளப் பெற்றது. தூர மெத்தனையோ: இது இந்நூல், (229) ஆம் செய்யுளையும் கம்ப. சுந்தா: 550 ஆம் செய்யுளையும், சிலப். 10.42–3 அடிகளையும் ஒருவாறு பின்பற்றி யமைந்தது என்னலாம்,

குறிப்பு :—இச்செய்யுளின் அமைப்பையும், சொற்பொருளையும் நோக்குமிடத்தும், சரிதம் போகும் சுருக்க முறையைக் கருதுமிடத் தும் இஃது, ஆசிரியர் வாக்கு அன்று எனவும், இடைச்செருகல் எனவும் தோன்றுகின்றது. ஆனல், நாம் ஆராய்ந்த பல பழைய சிறந்த ஏடுகளிலெல்லாம் இது உள்ளமையால், துணிந்து விலக்க முடியாமல் இது பாடவரிசையிற் சேர்த்துக் கொள்ளப்பெற்றது.

பி - ம். 1. தனியெடுத்த வைவேலாய். (78)

சூரியோதயம்

395. இக்கங்குல் போக விகல்வே னளனெறிநீர்
செய்க்கங்கு பாயுந் தீருநாடு—புக்கங்
கிருக்குமா காண்பான்போ லேறினன் குன்றில்
செருக்குமான் றேர்வெய்யோன் சென்று.

இகல் வேல் நளன் - போர்க்குரிய வேலேந்திய நளன், எறி நீர்-தாக்கிப் பெருகும் நீர், செய் கங்கு பாயும் - அங்குள்ள வயல்களின் வரம்புவரை நிறைந்து பாயும்படியான, திருநாடு - நீர்வளச் செல்வ மிக்க நிடதநாட்டில், இ கங்குல் போக - இந்த இரவு கழிய, புக்கு அங்கு இருக்கும் ஆ - போய்ச் சேர்ந்து அங்கு மகிழ்ந்து இருக்கும் சிறப்பு நிலையை, காண்பான் போல் - காண வருபவன் போல, செருக்கு மான் தேர் வெய்யோன் - பெருமிதம் அல்லது ஆண்மை மிக்க குதிரைகள் பூட்டப்பெற்ற தேரையுடைய சூரியன், குன்றில் சென்று ஏறினன் - உதயகிரி என்னும் மலைமீது ஏறி உதயம் செய் வானனன்.

செய்க்கு அங்கு எனப் பிரித்தும் பொருள் கொள்ளலாம். இருக்குமா : 'கைக்குள் வருமாபோற் கழன்றோடி" எய்க்கும், இனைக்குமா போல' (248); என்பன போல. இங்கு, சூரியோதயத்தை, சூரியன் நளனைக் காணச் சென்றதுபோல, தற்சிறப்பேற்ற வணியாக அமைக்கப்பெற்றது. இனி, குன்றேறி நோக்குவார் நெடுந்தூரத்தில் உள்ளவற்றை நன்கு காணலா மாதலால், நளனைப் பார்க்கும் விருப்போடு சூரியன் மலைமிது ஏறினன் எனக்கொள்ள இடமாவதுங் காண்க. 'குன்றேறி யானைப்போர் கண்டற்றால்' (குறள். 758) என்றதைப்போல. மான்றேர் : சூரியனது ஏழு குதிரைகள் பூட்டப்பெற்றதும், ஒரே சக்கரமுடையதுமான தேர்.

பி - ம். 3. இருக்குமா வென்பான்போல். (79)

நளன், மாவிந்த நகரைச்சார்ந்த ஒரு சோலையில் தங்கியது

396. மன்றலிளங் கோதையொடு மக்களுந் தானுமொரு
வென்றி மணிநெடுந்தேர் மேலேறிச்—சென்றடைந்தான்
மாவிந்த மென்னும் வளநகரஞ் சூழ்ந்தவொரு
பூவிந்தை வாழும் பொழில்.

(நளன்) மன்றல் இளம் கோதை ஒடு - மணம் கமழும் மென்மையான கூந்தலையுடைய தமயந்தியோடு, மக்களும் தானும் - தன் (மைந்தன் புதல்வி ஆகிய) இரு மக்களோடு தானும், ஒரு வென்றி மணி நெடும் தேர் மேல் ஏறி - ஒப்பற்ற வெற்றியைத் தரும் அழகிய பெரும் இரதமீது ஏறி, மாவிந்தம் என்னும் வளநகரம் சூழ்ந்த ஒரு - மாவிந்தம் என்று சொல்லப்பெறும் செழுமை பொருந்திய நகரத்தைச் சூழ்ந்திருந்த ஒரு, பூ விந்தை வாழும் பொழில் - தாமரைப் பூவில் அமரும் வெற்றித் திருமாது வாசம் செய்யும் பூஞ்சோலையில், சென்று அடைந்தான் - போய்ச் சேர்ந்தான்.

நளன் என்னும் எழுவாய் வருவிக்கப் பெற்றது. இளம் மன்றல் கோதை என இயைத்து இளமைப்பருவமும், மணங்கமழும் கூந்த லுடைவளுமான தமயந்தி என்றேனும், மென்மையான மணங் கமழும் மாலையணிந்த தமயந்தி என்றேனும் கொள்ளலாம். இனி, கோதை - மாலை போன்ற தமயந்தி என உவமை ஆகுபெய ராகவும் கொள்ள இடமாகும். விந்தை, வெற்றித் திருவான சயமகள்; இவள் விந்தமலையில் வாசஞ்செய்வதாகக் கூறுவர். விந்தை வாழும் பொழில் சென்றடைந்தான் என்றமை, இது நளன் அடையப்போகும் வெற்றித்திருவை முன்கூட்டிக் குறிப்பிட்டதும் ஆகும்.

பி - ம். 2. தேர்மேற் கொண்டு. 3. வளாகரி சூழ்ந்ததொரு.
4. பூவிந்தை சேரும் பொழில். (80)

நளன் புட்கரனுக்கு அறிவித்தது

397. மற்றவனுக் கென்வரவு சொல்லி மறுசூதுக்
குற்ற பணைய முளதென்று—கொற்றவனைக்
கொண்டணைவீ ரென்று குலத்தூ தரைவிடுத்தான்
தண்டெரியற் றேர்வேந்தன் ரூன்.

தண் தெரியல் தேர் வேந்தன் - குளிர்ந்த மாலையணிந்தவனும் தேர் வேந்தனுமான நளன், 'மற்றவனுக்கு - தன்னில் வேறுபட்ட வனை புட்கரனுக்கு, என் வரவு கூறி - நான் வந்திருப்பதைச் சொல்லி, மறு சூதுக்கு உற்ற பணையம் உளது என்று - மறுபடியும் சூதாடுவதற்குப் போதுமான பந்தயப் பொருள் என்னிடம் உள் ளது என்று கூறி, கொற்றவனை - அரசனை அவனை, கொண்டு அணைவீர் என்று - அழைத்துக் கொண்டு இங்கு வருவீராக!' என்று, குல தூதரை விடுத்தான் - சிறந்த தூதர்களை அப் புட்கரன்பால் போகவிட்டான்.

தண் தெரியல் தேர் - குளிர்ந்த மாலைகளால் அலங்கரிக்கப் பெற்ற தேர் என்னலும் அமையும். மற்றவன்:—தன்னின் மாறு பட்ட பகைவன்; அவன் பெயர் கூறவும் விழையாது குறிப்பிட்ட தும் ஆம். குலத்தேர்: (354) குலமகள் (232) குலப்பாகன் (347) என்றமை போல.

பி - ம். 2. பணைய முளவென்று. 3. கொண்டணைமி.
4. வண்டிரியும் தாரான், வண்டணியும் தாரான்; மதிக்க. (81)

புட்கரன் நளனைக் கண்டது

398. மாய நெடுஞ்சூதில் வஞ்சித்த வன்னெஞ்சன்
தூய நறுமலர்ப்பூஞ் சோலைவாய்—ஆய
பெருந்தானை சூழப் பிடிநடையா ளோடும்
இருந்தானைக் கண்டா னெதிர்.

மாய நெடும் சூதில் - வஞ்சகம் மிக்க பெரும் சூதாட்டத்தில், வஞ்சித்த - நளனை ஏமாற்றி அவனுடைய நாடு முதலிய செல்வ மனைத்தையும் அபகரித்த, வல் நெஞ்சன் - வலிய நெஞ்சமுடைய புட்கரன், தூய நறும் மலர் பூம் சோலை வாய் - பரிசுத்தமான மணம் கமழும் பூக்களையுடைய அழகிய சோலையினிடத்து, ஆய - பொருந்திய, பெரும் தானை சூழ - பெரிய சேனைகள் சூழ்ந்திருக்க, பிடி நடையாள் ஓடும் - பெண்யானை போன்ற (அழகிய) நடையையுடைய தமயந்தியோடும், இருந்தானை - தங்கியிருந்த நளனை, எதிர் கண்டான் - நேரில் போய்ப் பார்த்தான்.

நெடும் மாயச் சூதில் என இயைத்துக் கொள்ளலும் ஆம். வல் நெஞ்சு - இரக்கமற்ற கொடிய மனமும் ஆம். மகளிர் நடைக்குப் பிடிநடை; 'பிடியின் மென்னடைப் பெண்ணேடு' (கம்ப. பால. மிதிலைக் : 77); 'பிடிமென்னடை மங்கையர்' (நைடதம். அன்னத்தைத் தூது : 52.)

பி - ம். 1. வஞ்சித்தான் சென்றெய்தித். 2. —மேவிப்.
3. பெடைநடையா ளோடும். (82)

புட்கரன் நளனை நலம் விழுவியது

399. செங்கோ லரசன் முகநோக்கித் தேர்ச்சியிலா
வெங்கோ லரசன் வினவினான்—அங்கோலக்
காவற் கொடைவேந்தே காதலர்க்குங் காதலிக்கும்
யாவர்க்குந் தீதிலவே யென்று.

தேர்ச்சி இலா வெம் கோல் அரசன் - தெளிவில்லாத கொடுங் கோல் அரசனை புட்கரன், செம் கோல் அரசன் முகம் நோக்கி - நேர்மையாக ஆட்சி செய்யும் அரசனை நளன் முகத்தை உற்று நோக்கி, 'அம் கோல் காவல் குடை வேந்தே - மிக்க அழகு வாய்ந்தும், குடிகளை அன்போடு காத்து நிழல் அருளுவதுமான வெண் கொற்றக் குடையையுடைய அரசனே! காதலர்க்கும் - அன்பிற் குரிய உமது மக்களுக்கும், காதலிக்கும் - உமது அன்புடைய

மனைவிக்கும், யாவர்க்கும் - மற்றை உறவினர் முதலானோர் எல்லோர்க்கும், தீது இலவே - தீமை ஒன்றும் இல்லையே' (அதாவது நலம்தானே) என்று வினவினன் - என க்ஷேமம் விசாரித்தான்.

புட்கரனைத் தேர்ச்சியிலா வெங்கோ லரசன் என்றது, 'அர சறியா வேந்தன்' 225 என்றமையால் விளங்குவது காண்க.

பி - ம். 1. விளம்பினன்.

2. காவலற்குங் காதலற்கும் காதலிக்குங் கன்னிக்கும், காதலற்குங் காதலிக்கும்.

4. தீங்கிலவே. (83)

நளனும் புட்கரனும் மறு தூது ஆடியது

400. தீது தருகலிமுன் செய்ததனை யோராதே
யாது பணைய மெனவியம்பச்—சூதாட
மையாழி யிற்றுயிலு மாலனையான் வண்மைபுனை
கையாழி வைத்தான் கழித்து.

தீது தருகலி - கேட்டை உண்டாக்கும் கலிபுருடன், முன் செய்தது அதனை - முன் தனக்கு வெற்றியுண்டாகும்படி செய்த உதவியை, ஓராதே - (புட்கரன்) உணராமல், 'சூது ஆட யாது பணையம் என இயம்ப - இப்பொழுது சூதாடுவதற்கு நீ என்னப் பந்தயப் பொருள் வைக்கிறாய்?' என்று நளனை கேட்க, மை ஆழியில் துயிலும் மால் அனையான் - கரிய கடலில் யோக நித்திரை செய்யும் திருமாலே ஒத்த சிறப்புடைய நளன், வண்மை புனை - கொடைத் தன்மை பூண்டுள்ள, கை ஆழி - தன் கைவிரலி லணிந்திருந்த மோதிரத்தை, கழித்து வைத்தான் - கழற்றி அச்சூதாட்டத்திற்குப் பந்தயப் பொருளாக வைத்தான்.

தீது தருகலி முன் செய்ததனை ஓராதே - முன் தான் சூதில் வெல்ல வில்லை, கலி வென்று கொடுத்தான் என்றதை உணராமல், அதாவது தானே வென்றது என்ற அகம்பாவம் மேலிட்டு என்ப தாம். இனி, தீமை புரியும் கலி, நளன் முன் தோன்றி வரமளித்துப் போன உண்மை உணராமல், என்னலும் அமையும்; 'மையாழி யிற் றுயிலும் மாலனையான்'; 'செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ'; என்றதும் (48) ஒப்பு நோக்குக. மை ஆழி - மேகங் கள் படிந்து விளங்கும் கடலும் ஆம். இனி, திருமால் கருங் கடலிற் பள்ளிகொண்டவர் என்ற கூற்றுக்கு இஃது ஓர் சான்றும் ஆகும்;

"மாலுங் கருங்கடலே யென்னேற்றுய் வையகமுண்
டாலி னிலைத்துயின்ற வாழியான்—கோலக்
கருமேனிச் செங்கண்மால் கண்படையு ளென்றும்
திருமேனி நீதிண்டப் பெற்று"

(முதற்றிருவந்தாதி : 19)

"கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினுற் பேசல் வேண்டுமோ"

(கம்ப. பால. மிதிலைக்காட்சிப் : 38)

என்பனவும் ஒப்பு நோக்குக.

பி - ம். 1. யோராமல்.
2. யாதபணிய மியம்பென்னச் ; ஏதபணியம்—சூதரங்கில்.
3. மையாழி யிற்றுயிலும் மால்பராய்க்.
மையாழி யிற்றுயிலு மாலண்ணல். (84)

நளன் தன் நாடு முதலியன வென்று கொண்டது

401. அப்பலகை யொன்றி னருகிருந்தார் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் தீருநகரும்—ஒப்பரிய
வன்ருனை யோடு வளநாடும் வஞ்சனையால்
வென்ருனை வென்ருனவ் வேந்து.

அ வேந்து - அந்த நளன் என்னும் அரசன், அ பலகை ஒன்றில் - அந்தச் சூதாட்டப் பலகையில் ஓர் ஆட்டத்திலேயே, அருகு இருந்தார் - அருகில் இருந்து பார்த்தவர்கள், மதிக்க - வியந்து பாராட்ட, செப்ப அரிய - சொல்லுதற்கு அரிய, (அதாவது மதிப் பிட்டுக் கூற முடியாத), செல்வ திரு நகரும் - செல்வம் நிறைந்த அழகிய மாவிந்தம் என்னும் நகரத்தையும், ஒப்பு அரிய - ஒப்புமை கூற முடியாத, வன் தானை ஓடு வள நாடும் - வலிய நால்வகைப் போர்ப் படைகளோடு நீர்நில வளங்கள் மிக்க அந்நிடத நாட்டையும், வென்ருனை - முன் சூதில் வென்றுகொண்ட புட்கரனை, வென்ருன் - வென்று மீட்டுக்கொண்டான்.

பலகை - சூதாடும் பலகை ; இங்கு சூதாட்டத்திற்கே ஆயிற்று ; இது சீட்டாட்டத்தை மேசை என்பது போன்றது ; பலகை இடவாகு பெயர்.

பி - ம். 2. திருநாடுந்—தப்பமைந்த.
3. வளநாட்டை வஞ்சனையால். (85)

புட்கரன் யாவும் இழந்து தன் நாடு சென்றது

402. அந்த வளநாடு மவ்வரசு மாங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான்—செந்தமிழோர்
நாவேய்ந்த சொல்லா னளனென்று போற்றிசைக்கும்
கோவேந்தற் கெல்லாங் கொடுத்து.

செம் தமிழோர் - சிறந்த தமிழ் மொழியிற் தேர்ந்த புலவர்கள், நா - தம் நாவுக்களால், வேய்ந்த - அழகாகப் புனைந்து அமைத்த' சொல்லால் - சொற்கள் அமைந்த பாக்களால், நளன் என்று - நளன் என்ற பேர்கொண்டு, போற்று இசைக்கும் - துதிகள் பாடும், கோ வேந்தற்கு - அந்த அரசர்க்கரசனுக்கு, அந்த வள நாடும் அ அரசும் எல்லாம் - அந்த வளம் மிக்க நிடதநாட்டையும், அவ்வர சுரிமையுமான யாவற்றையும், ஆங்கு ஒழிய - அங்குத் தன்னே விட்டு நீங்க, கொடுத்து - திரும்பக் கொடுத்துவிட்டு, வந்தபடியே - முன் வந்தவிதம் போலவே (வெற்றுளாக), வழி கொண்டான் - (புட்கரன்) தன் (பழைய) இருப்பிடம் நாடி வழிமேற் சென்றான்.

நா வேய்ந்த சொல் : நாவினுல் அழகுறப் புனைந்தமைத்த பாடல் ;

" பல்வகைத் தாதுவி னுயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட் கிடனுக வுணர்வினில்
வல்லோ ரணிபெறச் செயவன செய்யுள் "

(நன். சூ. 268)

என்றுராகலின், இனி நா ஏய்ந்த சொல் எனக் கொண்டார் ஒரு சாரர். போற்று - துதி அல்லது காப்பு ; இனி, போற்றிசைக்கும் என்பதைப் போற்றியிசைக்கும் என்றதின் தொகுத்தல் விகார மாகக் கொண்டாரும் உளர். செந்தமிழோர் என்றது மொழிகளைக் குறிக்கும் பொதுப் பெயராகக் கொண்டு, வடமொழி முதலிய பிற மொழிகளில் வல்ல கவிவாணர்களையும் கூட்டிக்கொண்டு ; புண்ய ச்லோகோ நளோராஜா என்ற வடபொழி சுலோகம் முதலாம் பல வற்றையுங் கூட்டியுரைக்க, இனி,

" நாவிரி கீர்த்தி யாள னளனெனு நாம வேந்தன்
காவிரி யென்னத் தப்பாக் கருணையான் "

(வி. பா. அருச்சுனன்றவநிலைச் : 24)

என ஸ்ரீவில்லிபுத்தூ ராழ்வார் பாராட்டி யுள்ளமையும், இந்நூலா

சிரியர் காலத்திற்குப் பிற்பட்டதெனினும் கருத்து ஒற்றுமை கருதி இங்குக் கூட்டிக்கொள்ளலாம்.

பி - ம். 3. நாவேந்த ரெல்லாம், நாவேந்த. (86)

நளன் தன் நகரை அடைந்தது

403 ஏனை முடிவேந்த ரெத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி—ஆனபுகழ்ப்
பொன்னகர மெய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கா னளன்.

ஏனை முடிவேந்தர் - மற்றை முடிபுனைந்த அரசர்கள் எல்லாரும், எ திசையும் போற்று இசைப்ப - நான்கு திசைகளிலும் சூழ்ந்து (நளனை) துதித்துப் பாடவும், சேனை புடை சூழ - படைகள் பக்கங்களிற் சூழ்ந்து வரவும், தேர் ஏறி - தன் தேர் மீது ஏறி, புகழ் ஆன பொன் நகரம் எய்தும் - புகழுக்கு உரியதான அல்லது இருப்பிடமான பொன்னுல் அமைந்த அமராபதி என்னும் தேவ தலைநகரத்தைப் போய் அடையும், புரந்தரனை போல் பொலிந்து - இந்திரனைப் போல விளங்கி, நளன் - நளச்சக்கரவர்த்தி, நல் நகரம் புக்கான் - அழகிய அல்லது சிறந்த மாவிந்தம் என்னும் தன் தலைநகரிற் போய் அடைந்தான்.

ஏனை முடிவேந்தன்: நளனைப் பின் தொடர்ந்து வந்த மற்ற முடிமன்னர்கள். 'வேல்வேந்தர் பின்செல்ல' (393) என்றமை நோக்குக. இனி, ஏனை முடிவேந்தர் என்பதற்குப் புட்கரன் நீங்கலாக உலகில் உள்ள மற்ற முடிமன்னர்கள் என்னலும் ஒன்றும். போற்றிசைப்ப; 'நளனென்று போற்றிசைக்கும்' (402) என்றமை போல. பொன்னகரம் எய்தும் புரந்தரன்: சூரபன்மன் முதலிய அசுரர்களால் அபகரிக்கப்பெற்று இழந்த தன் சுவர்க்கநாடு முதலிய அனைத்தையும் பின் முருகப்பிரான் அருளால் மீண்டும் அடைந்து தன் அமராவதி என்னும் நகரிற்போய்ச் சேர்ந்த இந்திரனைப்போல் எனவும் விரித்துப் பொருள் கொள்ளலாம்.

பி - ம். 1. ரெம்மருங்கும்.
3. பொன்னுலகம் போற்றும் புரந்தரன்போற், புரந்தரனே போற்.

நகர மாந்தரின் மகிழ்ச்சி நிலை

404 கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர்.

பார் பெற்று - முன் தான் இழந்த நாடு முதலியவற்றை மீண்டு பெற்றுக்கொண்டு, மன்னன - அரசனை நளன், மாது ஓடு வர கண்ட - தன் மனைவி தமயந்தியோடு திரும்பி வருவதைப் பார்த்த, மா நகர்க்கு - அந்த மாவிந்த நகரில் உள்ளார் அடைந்த மகிழ்ச்சி நிலைக்கு, எதிர் - ஒப்பாக, கார் பெற்ற தோகையோ - நெடுங் காலங் காணுதிருந்த மேகத்தின் வரவை அடைந்த மயிலையோ? கண் பெற்ற வாள் முகமோ - முன் இழந்திருந்து மீண்டும் கண் ஒளி பெற்றுப் பொலிவுறும் முகத்தையோ? நீர் பெற்று உயர்ந்த - நீர் இல்லாதிருந்து வாடியிருந்து பின் நீரை யடைந்து தலைநிமிர்ந்து உயர்ந்து விளங்கிய பயிரையுடைய, நிறை புலமோ - விளைவால் நிறைந்த வயல்களையோ? ஏதோ உரைப்பன் - எதை யான் எடுத் துக் கூறுவேன். (அம் மூன்றும் ஒப்பாம் என்றபடி).

மா நகர்க்கு : இடவாகு பெயராய் அங்கிருந்த மக்களுக்கு ஆயிற்று. கார்பெற்ற தோகை மகிழ்விற் சிறக்கும்; 'மஞ்ஞைமாயி னங் காலமாரி பெய்தென வதனெதி ராலலு மாயின' (குறுந். 251); 'தோகை..... ..கார்கால மானதெனக் களிக்கு மாதோ' (வி. பா. வசந்தகாலச் : 5); (நைடதம். நாட்டுப் : 16. கண்பெற்ற வாண்முகம்; 'ஒழிந்தவிழி பெற்றதோ ருயிர்ப்பொறையு மொத்தாள். (கம்ப. சுந்தர : 554); என்று திருவாழி பெற்ற பிராட்டியின் நிலை கூறப் பெற்றமையால் அறியலாம். நீர் பெற்றுயர்ந்த நிறைபுலமோ : 'நீர்வாய்த் தண்பணை தழீஇய தளரா விருக்கை' (பொருந. 168—9) 'கழனி வாய்நதி வார்புனல் பெருகவும்' (கம்ப. அயோத். மந்திரப் : 82) எனச் சிறப்பித்தமை காண்க. ஏதோ வுரைப்ப னெதிர் : ஓகார இடைச்சொல் இங்கு வியப்பை யுணர்த்துவது.

பி - ம். 2. நிறைபயிரோ, தொருநிலமோ.
4. ஏதோ வுரைப்பா ரெதிர். (88)

[பின்னுரை]

405. வென்றி நிடதத்தார் வேந்தன் சரிதையீ
தென்றுரைத்து வேத வியன்முனிவன்—நன்றிபுனை
மன்னு பருவரலை மாற்றுதியென் றுசிமொழி
பன்னு நடந்திட்டான் பண்டு.

பண்டு - முன் வேத இயல் முனிவன் வேத சாஸ்திரங்களை நன்குணர்ந்த அந்தப் பிருகதசுவர் என்ற முனிவர், ஈது வென்றி நிடதத்தார் வேந்தன் சரிதை என்று உரைத்து - இது வெற்றி

மிக்க நிடத நாட்டினர்க்கு அரசனை நளனது சரித்திரம் என்று யுதிட்டிரருக்குக் கூறி, 'மன்ன - (அவரை நோக்கி) அரசனே! பருவரலை மாற்றுதி - நீ கொண்டுள்ள உன் துன்பத்தை விட்டு நீங்கு', என்று - என உறுதி கூறி, ஆசி மொழி பன்னு - மேலும் பல ஆசீர்வாத வாழ்த்துரைகளை வழங்கி, நடந்திட்டான் - தம் இடம் நோக்கிச் சென்றார்.

இப்பாடல் பல பிரதிகளில் இல்லை. ஆயினும், சில அச்சுப் பிரதிகளில் காணப்பெறுவதாலும், நூல் தொடக்கத்தில் மகாபாரதக் கதைத் தொடர்பைத் தோற்றுவாயாகக் கூறியதற்கிணங்கப் பின் நூன் முடிபின் அத் தோற்றுவாய்க்கு ஒரு முடிவுரை இருக்க வேண்டும் என்னும் துணிவு கொண்டும் இப் பாடல் இங்குக் கூட்டிக்கொள்ளப் பெற்றது. இதன்பின், சில அச்சுப் பிரதிகளில் அடியிற் காணும் ஒரு வாழ்த்துப் பாடலும் உள்ளது.

'வாழி யருமறைகள் வாழிநல் லந்தணர்கள்
வாழியிக் காதை வழுத்துவோர்—வாழியரோ
மள்ளுவநாட் டாங்கண் வருசந் திரன்சுவர்க்கி
தெள்ளுறுமெய்க் கீர்த்தி சிறந்து'.

கலி நீங்கு காண்டம் முற்றும்.

நளவெண்பா மூலமும் உரையும் முற்றும்.

செய்யுள்முதற்குறிப்பகராதி

[எண் - செய்யுள் எண்]

அங்கண் விசும்பி ... 285
அங்கி யமுதநீ ... 91
அங்கை நெடுவேற் ... 146
அங்கை வரிவீர ... 144
அங்கைவேன் மன்ன ... 191
அஞ்சனந் தோய் கண்ணி ... 242
அஞ்சன் மடவனமே ... 29
அஞ்சாயன் மானே ... 137
அடற்கதிர்வேன் மன்ன ... 203
அடையுங் கடுங்கானி ... 289
அந்த நெடுஞ்சுரத்தின் ... 255
அந்த வளநாடு ... 402
அந்தாமரையி ... 303
அப்பலகை யொன்றி ... 401
அம்பொற் கயிலீக்கே ... 8
அரவரசன்றன்கொடுத்த ... 382
அல்லியந்தார் மார்ப ... 282
அலர்ந்த மலர்சிந்தி ... 176
அவ்வளவி லாதிப் ... 297
அழகு சுமந்தீனத்த ... 71
அழல் வெஞ்சிலை ... 278
அற்ற துகிலு ... 301
அள்ளிக் கொளலா ... 111
அறங்கிடந்த நெஞ்சு ... 48
அறத்தைவேர் கல்லு ... 206
அறம் பிழைத்தார் ... 226
அறையும் பறையவங் ... 253
அன்றி லொருகண் ... 115
அன்னக் குலத்தி ... 61
அன்னங்கா ணீங்களு ... 101
அன்னந் தனைப்பிடித்தங் ... 28
அன்னந் துயிலெழுப்ப ... 140
அனை மிதிப்ப ... 340
அன்ன மூரைத்த ... 44
அன்னமே நீயுரைத்த ... 38
அன்ன மொழிந்த ... 52
ஆங்கவர் சொன்ன ... 371
ஆங்கவன்றா ... 324
ஆடவரிவண் ... 107
ஆண்டிரண்டா றெல்லை ... 197
ஆதித் தனிக்கோல ... 1
ஆதி நெடுந்தேர்ப் ... 365
ஆதி மறைநூ ... 366
ஆமை முதுகி ... 361
ஆயம் பிடித்தாரு ... 208
ஆரும் திரியா ... 318
ஆருயிரின் ரூயே ... 221
ஆருயிரு நானு ... 293
ஆவ துரைத்தா ... 77
ஆற்ற லரவரசே ... 326
இக்கங்குல் போக ... 395
இசைமுகுந்த வாயு ... 79
இடைச்சுரத்திற் றன்னை ... 367
இணையாரு மில்லா ... 331
இத்தாழ் பணையி ... 358
இந்து நுதலி ... 294
இயமரின் றூர்ப்ப ... 87
இருவ ருயிரு ... 243
இவ்வளவிற் செல்லுங் ... 42
இற்றது நெஞ்ச ... 40
இன்றுன்னைக் காண்பதோ 364
இன்னுயிர்க்கு நேரே ... 161
இனிச்சூ தொழிந்தோ ... 218
ஈங்கிவளிவ் வாறிருப்ப ... 306
ஈங்குவர வென்னென் ... 155
ஈரமதியே ... 108
உங்க ளரசொருவ ... 372
உண்டோ ரழுகுரலென் ... 290
உத்தமரின் மற்றிவளை ... 387
உய்ஞ்சு கரையேற ... 82
உருவழிக்கு மூண்மை ... 207
உள்ளம்போய் நாண்போ ... 93
உன்சரிதஞ் செல்ல ... 389
உன்றலிவன் றன்னை ... 305
உன்னையா லென்று ... 392
ஊக்கிய சொல்ல ... 112

ஊழி பலவோ ... 106
ஊன்றின் றுவகையா ... 114
எக்குலத்தா ... 298
எங்க ணுறைந்தனை ... 346
எங்காம் புகலிட ... 257
எங்கோன் மகளுக் ... 349
எண்ணிய வெண்ண ... 269
எந்தை கழலிணை யி ... 374
எழுந்திருக்கு மேமாந்து ... 118
எழுவடுதோண் மன்னு ... 33
எற்றித் திரைபொர ... 250
என்காலத் துன்சரிதங் ... 390
என்மே லெறிகின்ற ... 352
என்று நுடங்கு ... 36
என்றுரைத்த வவ்வளவி ... 322
என்னுரையை யாதென் ... 86
என்னைத் தனிவனத்திட் ... 304
என்னை யிருங்கானி ... 341
ஏந்து மிளமுலையா ... 274
ஏரடிப்பார் கோலெடுப்ப .. 359
ஏழுலகுஞ் சூழிருளா ... 116
ஏற்ற முலையார்க் ... 175
ஏன்றே மிதுவாயின் ... 204
ஏனை முடிவேந்த ... 403
ஒண்டொடி தன்னை ... 345
ஒருவ ருடலி ... 164
ஒற்றைத் தனியாழித் ... 355
ஒற்றைத் துகிலு ... 270
ஓடாத தானை ... 20
ஓடும் புரவித்தேர் ... 307
கடப்பா ரெவரே ... 220
கண்ணிமைத்த லாலடிகள். 150
கண்ணிழந்து மாயக் ... 12
கணிமொழிந்த நாளிற் ... 162
கந்தனையும் கன்னியையும் ... 311
கருங்குழலார் செங்கையினில். 53
கருவிக்கு நீங்காத ... 117
கற்பின் மகளிர்பா ... 216
கன்னி நறுந்தேறன் ... 363
கன்னியர்தம் வேட்கை ... 187
கன்னிறத்த சிந்தைக் ... 246
காண்டா வனந்தீக் ... 9
காதல் கவருடல் ... 205
காதலவர் மேலே ... 244
காதலியைக் காரிருளிற் ... 333
காதலிருவரையுங் ... 231
காமர் கயல்புரளக் ... 14
காயுங் கடகளிற்றுய் ... 327
கார்பெற்ற தோகையோ ... 404
காரிகைதன் வெந்துயரங் ... 268
காரிருளிற் பாழ்மண் ... 342
காரேயுங் கூந்தலார் ... 212
காவல் கடந்தெங்கள் ... 84
காவலரைத் தன்சேடி ... 147
காவலன்றன் தூதர் ... 65
காவலனுக் கேவற் ... 354
காவற் குடைவேந்தைக் ... 74
காவி பொருகெடுங்கட் ... 185
காவிபோற் கண்ணிக்குங் ... 252
காலகத்துக் காதலியைக் ... 344
கானுந் தடங்காவுங் ... 103
குழைமேலுங் கோபா ... 165
குற்றமில் காட்சிக் ... 232
குறையாத கற்பினுள் ... 351
கூட்டுமை போற்சிறந்த ... 100
கூந்த லிளங்குயிலும் ... 251
கூன்சங்கின் பிள்ளை ... 142
கூனிருல் பாயக் ... 328
கெட்ட சிறுமருங்குற் ... 66
கேட்ட செவிவழியே ... 63
கேடில் விழுச்செல்வங் ... 11
கைவந்தா னீக்கிக் ... 233
கொங்கை முகங்குழையக் ... 167
கொங்கை முகத்தணையக் ... 177
கொங்கை யலைந்து ... 377
கொம்ப ரிளங்குருகே ... 333
கொய்த குவளை ... 178
கொய்த மலரைக் ... 174
கொழுநன் கொழுந்தாரை. 179
கொள்ளாபோ கின்ற ... 104
கொற்றக் கயற்கட் ... 249
கொற்றக் குமரனையுங் ... 376
கொற்றவன்பாற் செல்வா ... 228
கொற்றவன்றன் றேவிக்குச். 52
கொற்றவன்ற னேவலினுற். 62
கொற்றவேற் றானைக் 5

கோதை சுமந்த ... 54
கோதை சுயம்வரநாள் ... 64
கோதை நெடுவேற் ... 368
கோதை மடவார் ... 15
கோயிலுந் மந்தப் ... 312
கோல நிறம்விளர்ப்பக் ... 196
சங்க நிதிபோற் ... 292
சடைச்செந்நெல் பொன் ... 67
சந்தக் கழற்ரு ... 229
சந்திசெயத் தாள்விளக்க ... 198
சாதி மணிற்துகி ... 329
சாதுரங்கம் வென்றேன் ... 215
சிந்துரத்தாட் டெய்வ ... 272
சில்லரிக் கிண்கிணி ... 190
சிறுக்கின்ற வாண்முக ... 182
சினக்கதிர்வேற் கண் ... 237
சீத மதிக்குடைக்கீழ்ச் ... 21
சீரியாய் நீயெடுப்பத் ... 321
சூதக் கனிபூற ... 193
செங்கண் மதயானைத் ... 75
செங்கோ லரசன் ... 399
செங்கோலா யுன்றன் ... 239
செந்திருவின் கொங்கை ... 163
செந்தேன் மொழியாள் ... 37
செப்பிளங் கொங்கைமீர் ... 102
செம்மனத்தரன் றண்ணளி 47
செய்ய கமலத் ... 30
செருக்கதிர்வேற் கண்ணி ... 159
செழுநீல நோக்கெறிப்பச் ... 184
செவ்வண்ண வாயாஞ் ... 315
செவ்வாய் மொழிக்குஞ் ... 380
சேதி நகர்க்கே ... 300
சேமங் களிறுபுகத் ... 113
சேமவேன் மன்னற்குச் ... 13
சேலுற்ற வாவித் ... 245
சேவல் குயிற்பெடைக்குப். 43
சொன்ன கலையின் ... 235
சோர்புனலின் மூழ்கி ... 183
தங்கள் புலவித் ... 189
தந்தை திருமுகத்தை ... 241
தந்தையைமுன் காண்ட ... 314
தவளத் தனிக்குடை ... 169
தன்மக ளாவ ... 310
தன்வாயின் மென்மொழியே. 227
தாங்கு நிலவின் ... 109
தாதையைமுன் காண்டலு. 384
தாமஞ்சே ரோதித் ... 308
தாருவெனப் பார்மேற் ... 275
தானவரை வெல்லத் ... 394
திசைமுகந்த வெண் ... 31
திண்டோள் வயவேந்தர் ... 152
தீக்கட் புலிதொடரச் ... 296
தீக்கடவு டந்த ... 319
தீக்கா னகத்துறையுந் ... 273
தீது தருகலிமுன் ... 400
தீது வருக ... 209
தீய வனமுந் ... 262
தீராத காமத் ... 85
தூதுவந்த காதலனைச் ... 92
தூயதன் மக்க ... 230
தெரியவனூ லென்றுந் ... 18
தெரிவை யிவன்கண்டாய். 135
தேங்குவளை தன்னிலே ... 80
தேமருதார்க் காளை ... 136
தேரிற் றுகளைத் ... 24
தேவர் பணிதலைமேற் ... 76
தேவியிவள் கற்புக்குஞ் ... 388
தேன்பிடிக்குந் தண்டுழாய். 247
தைய றளிர்க்கரங்க ... 168
தைய றுயர்க்குத் ... 280
தொண்டைக் கனிவாய் ... 188
நறையொழுகு வண்டுறையு. 186
நன்னெறியில் சூதா ... 200
நாட்டினகண் வாழ்வைத் ... 4
நாடிமட வன்னத்தை ... 27
நாராய ணைய நம ... 199
நாற்குணமு நாற்படையா ... 34
நித்திலத்தின் பொற்றூடு. 127
நிறையில் கவருட ... 210
நின்று புயல்வானம் ... 16
நினைப்பென் னுங் காற்ற ... 332
நீண்ட கமலத்தை ... 81
நீல மளவே ... 276
நெஞ்சாலிம் மாற்ற ... 373
நெற்றித் தனிக்கண் ... 68
பண்டை வினைப்பயனைப் ... 260

பல்லா யிரம்பரியும் ... 214
பனியிருளிற் பாழ்மண் ... 316
பாண்டவரின் மூன்றோன் றல். 3
பாதித் துகிலோடு ... 385
பாவையர்கை தீண்டப் ... 171
பானலே சோலைப் ... 336
பாணு நெடுந்தேர் ... 256
புண்டரிகந் தீயெரிவ ... 141
புள்ளின் மொழியிலுடு ... 49
புள்ளுறையுஞ் சோலைகளும் 58
புற்கென்ரு ரந்தி ... 98
புல்லும் வரிவண்டைக் ... 173
புன்கண்கூர் யாமத்துப் ... 263
புன்னை நறுந்தா துை ... 334
புன்னை நறுமலரின் ... 201
பூசுரர்தங் கைம்மலரும் ... 123
பூணுக் கழகளிக்கும் .. 148
பூமனைவாய் வாழ்கின்ற ... 39
பூவின்வாய் வாளி ... 94
பெய்ம்மலர் பூங்கோதை ... 266
பேதை பிரியப் ... 240
பேதை மடமயிலைச் ... 128
பேதை மடவன்னந் ... 26
பேரரசு மெங்கள் .. 10
பேரழகு சோர்கின்ற ... 55
பைந்தலைய நாக ... 381
பைந்தெரியல் வேல்வேந் ... 73
பைந்தொடியா ளாவி ... 99
பொய்கையும் வாசப் ... 195
பொய்தற் கமலத்தின் ... 180
பொய்யடையாச் சிந்தைப்... 339
பொற்புள் ளதனைப் ... 248
பொன்னி யமுதப் ... 132
பொன்னுடைய சேனும் ... 234
பொன்னுடைய வாசப் ... 181
போதரிக்கண் மாதராள் ... 88
போதலருங் கண்ணியான்... 379
போயகலா முன்னம் ... 302
போயொருகான் மீளும் ... 271
போர்வாய் வடிவேலாற் ... 133
போற்றரிய செல்வம் ... 236
மக்களோ முன் காணு ... 369
மங்கை சுயம்வரநா ... 56
மங்கையர்கள் வாச ... 170
மங்கை யொருத்தி ... 172
மண்ணின்மீ தென்றனை ... 323
மயங்கும் தெளியு ... 120
மல்லன் மறுகின் ... 153
மல்லிகையே வெண்சங்கா... 97
மற்றவனுக் கென்வரவு ... 397
மற்றித் திருநகர்க்கே ... 378
மற்றெடுத்த தோள்பிரிந்து. 288
மறைமுதல்வ நீயிங்கே ... 6
மன்றலந்தார் மன்னர் ... 126
மன்றலிளங் கோதை ... 224
மனறலிளங் கோதையொடு. 396
மன்னர் குலமும் ... 131
மன்னர் பெருமை ... 375
மன்னர் விழித்தா ... 129
மன்னராய் மன்னர் ... 238
மன்னவரில் வைவே ... 156
மன்னன் மனத்தெழுந்த ... 50
மன்னன் விடுத்த ... 46
மன்ன னிடத்தார் ... 370
மன்னுகத் துள்ளழுந்தி ... 83
மன்னு வுனக்கபய ... 317
மனைக்குரியா ரன்றே ... 217
மாநீர் நெடுங்கயத்து ... 145
மாமனுநூல் வாழ ... 19
மாமுத்த வெண்குடையான். 57
மாய நெடுஞ்சூதில் ... 398
மாயிரு ஞாலத் ... 96
மாரி பொருகூந்தன் ... 309
மால்வரையை வச்சிரத்தா. 72
மான்றேர்த் தொழிற்கு ... 338
மிக்கோ னுலகளந்த ... 383
மின்னுடு மால்வரையும் ... 343
மின்னுந்தார் வீமன்றன் ... 149
மீண்டோர் சுயம்வரத்தை ... 348
முகம்பார்த் தருணேக்கி ... 60
முந்தை வினைகுறுக ... 356
முரைசெறிந்த நாளோழு ... 125
முன்றிறனின் மேற்படுக்க. 264
முன்னீர் மடவார் ... 337
முன்னை வினையான் ... 353
முன்னை வினையின் ... 299

மூரி யிரவும்போய் ... 258
மெய்த்திருவந் துற்றாலும் ... 7
மென்காற் சிறையன்னம் ... 219
மேலாடை வீழ்ந்த ... 357
மையிட்ட கண்ணருவி ... 110
மோட்டிளங் கொங்கை ... 35
வஞ்சக் கலிவலியான் ... 267
வடங்கொள் வனமுலையாள். 130
வடியேறு கூரிலைவேல் ... 223
வண்டாடுந் தாரான ... 225
வண்டார் வளவயல்சூழ் ... 360
வண்ணக் குவளை ... 138
வழிமேல் விழிவைத்து ... 59
வாக்கினன் மன்னவன் ... 347
வாகு குறைந்தமையால் ... 330
வாங்குவளைக் கையார் ... 22
வாய்மையுஞ் செங்கோல் ... 158
வார்வெஞ் சிலையொழிய ... 78
வாரணியுங் கொங்கை ... 45
வாவி யுறையு ... 51
வாளரவின் வாய்ப்பாட்டு ... 286
வான்முகிலு மின்னும் ... 279
வான்றோய நீண்டுயர்ந்த ... 194
வான நெடுவீதி ... 281
வானவர்கோ னேவல் ... 89
விட்டொளிர்வில் வீசி ... 211
விடக்கதிர்வேற் காளை ... 139
விண்ணரசர் நிற்க ... 157
விண்ணரச ரெல்லாரும் ... 151
விண்ணவர்த மேவலுடன். 90
விரிகின்ற மெல்லமலி ... 119
விரைமலர்ப்பூம் மெல்லணையு. 261
வில்லி கணையிழப்ப ... 124
விழுது படத்திணிந்த ... 122
விற்றூண் முன்செல்ல ... 393
வீமன் மடந்தை ... 70
வீமன் மடந்தை விழி ... 325
வீமன் றிருமகளாம் ... 41
வீமன் றிருமடந்தை ... 265
வீரர் விறல்வேந்தர் ... 69
வீரனக லச்செறுவின் ... 166
வெங்கட் சினவிடையின் ... 202
வெங்கதிரோன் றன்னை ... 105
வெங்கதிரோன் ருனும் ... 160
வெங்விடத்தோ டொக்கும். 386
வெஞ்சிலையே கோடுவன ... 17
வெந்தறுகண் வேழத்தை. 2
வெய்ய தரையென்னு ... 277
வெய்ய வரவின் ... 291
வெள்வாளைக் காளை ... 143
வெற்றித் தனித்தேரை ... 362
வெறித்த விளமான்காண். 283
வென்றிச் சினவரவின் ... 287
வென்றி நிடதத்தார் ... 405
வென்றி நிலமடந்தை ... 134
வெனறி மதவேடன் ... 23
வேட்ட கரியை ... 284
வேட னழைப்ப ... 295
வேத நெறிவழுவா ... 391
வேத முனியொருவன் ... 320
வேத மொழிவாணன் ... 350
வேரி மழைதுளிக்கும் ... 192
வேலை கரையிழந்தால் ... 222
வேலை பெருவமுதம் ... 154
வைத்த மணியாரம் ... 213
வையந் துயருழப்ப ... 254
வையம் பகலிழப்ப ... 95
வைய முடையான் ... 259

முற்றும்.

இந்நூலில் வந்துள்ள அரும்பதம் முதலியவற்றின் அகராதி

[எண் — செய்யுள் எண்]

அகலம் - மார்பு, 165, 166, 191.
அங்கி - நெருப்பு, 91.
அசலம் - மலை, 198.
அஞ்சனம் - மை, 242.
அடம்பின் இலைக்கு மான் குளம்பு, 256.
அடம்பு - ஒருகொடி, 256.
அடியைக் கண்ணிற் புனலாற் கழுவுதல், 384.
அடுதல் - அழித்தல், 30, 33,
அடையலர் - பகைவர், 195.
அடையாத வாயில், 64.
அடைவு - சேர்க்கை, 38.
அணங்கு - தெய்வப்பெண், 31
அந்தரம் - ஆகாயம், 251.
அந்தி-அழகுடையவள் (அந்தம்-அழகு), 31.
அந்திமலையின் வரவு, 97.
அந்தோ - இரக்கச் சொல், 142.
அப்பு - நீர், 25.
அமளி - படுக்கை, 119, 175, 277.
அமளிக்கு வெண்ணிலவு, 119.
அமை - மூங்கில், 31.
அயில் - கூர்மை, 390,
அரங்கு - மேடை, 96, 189, 215.
அரசர்கள் சூதாடுவது இயல்பு, 11.
அரசனைப் பார்மடந்தை கோமான் என்பது, 32.
அரசர்கள் தமயந்தியை மகளிர் மருங்கின் இடைவெளி வழியே நோக்கியது, 128.
அரவின் தலைக்குச் செங்கழுநீர் மொட்டு, 135.
அரற்றுதல் - வாய்விட்டுப் புலம்புதல், 17.
அரி – கோடு, 88, பருக்கைக்கல், 190.
அரிச்சந்திரன் சுவர்க்கி, 57,
அரித்தல் - தடவி எடுத்தல், 93.
அருகூட்டுதல், 21.
அருச்சுனன் காண்டவவனம் எரித்தது, 9.
அருச்சுனன தன் தோள்களன்றித் துணை வேறு இல்லாதவன், 9.
அருச்சுனன் பாசுபதம் பெறக் கயிலை சென்றது, 8.
அல் - இருள், 81, 165, 176.
அல்லி - அகவிதழ் அல்லது பூந்தாது, 282.
அலசுதல் - தளர்ந்து தள்ளாடுதல், 44.
அலமரல் - அஞ்சி வருந்துதல், 295.
அலவம் - நண்டு, 335, 361.
அவனி - பூமி, 3.
அவர் - ஆசை, 7.
அவை - சபை, 88.
அழகு சுமந்திளைத்த ஆகம், 71.
அளகபந்தி, 37.
அறல் - கடல் முதலிய நீர் நிலைக் கரைகளில் அலைகளால் ஒதுக்கப்பெற்று வரிவரியாய்ப் படிந்து விளங்கும் கருமணல், 284.
அறுகாற் சிறுபறவை, 36.

அன்றில் வாய் சிவப்பானது 95, துணையைப் பிரிந்திராது 115.
அனங்கன் - மன்மதன், 32.
ஆகண்டலன் - இந்திரன், 91.
ஆகம் - உடல். 71.
ஆடல் - வலிமை, போரிடுதல், 21.
ஆண்டகை - புருடோத்தமன், 3.
ஆணி - அச்சாணி, 310.
ஆதபம் - சூடு, தீ, 320.
ஆதரித்தல் - விரும்புதல், 88, 223.
ஆதித்தன் - சூரியன், 101.
ஆம்பல் - அல்லி, 177.
ஆமை முதுகில் அரிவாள் தீட்டுதல், 140.
ஆயம் - சூதாட்டம், 208.
ஆயர் - இடையர், 281.
ஆரணம் - வேதம், 96.
ஆலித்தல் - ஒலித்தல், 24.
ஆவம் - அம்புப் புட்டில், 130, 141.
ஆவி - தடாகம், 185.
ஆவிபோனாலும் ஆசை போகாது 94.
ஆழி - கடல், 400, சக்கரம் 6, மோதிரம், 400.
ஆழியான் - திருமால் (கண்ணபிரான்), 6.
இசை - கீர்த்தி, 31, 79, பொருத்தம், 31.
இந்திரன் மலைகளின் சிறகரிந்தது, 69, 72, 78.
இந்திரன் யானை வெண்ணிறமானது, 156.
இந்து - சந்திரன், 37, 241, 294.
இயமரம் - ஒருவகை வாத்தியம். 87.
இயல் - சாத்திரம், 79, 405.
இயலணங்கு - கலைமகள், 131.
இரத்தலின் இழிவு, 237.
இரப்போர் நிலைமை, 60.
இரவு - இரத்தல் (யாசித்தல்), 18;
இரவு பொதுமகளிர் இதயத்திற்கு, 111.
இருதுபன்னன் கணித சாஸ்திரத்தில் வல்லன்; 359, பாகஸ்வரி என்னும் பெயரினன், 339; நளனிடம் பிழை பொறுக்க வேண்டியது, 391.
இருள் - அஞ்ஞானம், 5.
இளமுறுவல் - புன்சிரிப்பு, 161.
இறத்தல் - கடந்துபோதல், 351.
இரும்பல் - ஒருவகை மீன், தேன் அடை; 328.
இளவேனிற் சிறப்பு, 23.
இன்னல் - துன்பம், 306.
ஈட்டம் - கூட்டம், 4.
ஈர்தல் - பிளத்தல், 108, 291.
உதட்டுக்குக் கொவ்வைக்கனி, 302.
உயங்குதல் - வாடுதல், 120.
உரவோன் - வலியோன், 7.
உரைதிறம்பல் - சொல் மாறுதல், 222.
உள்ளம் ஊசலாடுதல், 147.
உழத்தல் - துயரில் ஆழ்ந்து வருந்துதல், 12.
உறழ் - ஒப்பு, 306.
ஊடல் - தலைவன் தலைவியரிடைத் தோன்றும் சிறுபிணக்கம், 20.
ஊதை - காற்று, 117, 244.
ஊறல் - சாறு, 193.
எக்கர் - நீரால் ஒதுங்கிக் குவிந்த மணல் தொகுதி, 175.
எதிர் மாற்றம் - மறுமொழி. 342
எழில் - அழகு. 4.
எழு - தூண், 33.
ஏ - அம்பு, ஏவுதல், தூண்டுதல், 37, 130
ஏங்குதல் - ஒலித்தல், 53, 87.
ஏடு - இதழ், மடல், 11.
ஏதம் - நீங்கு, குற்றம், 231.

ஏதலன் - அயலான், அன்னியன், பகைவன், 239, 273.
ஏது - காரணம், 200.
ஏம் - மனச்செருக்கு, 61.
ஏமம் - பொன், பொருள், 325.
ஏய்தல் - ஒப்பாதல், 164.
ஏவாளி, 130, 377.
ஏறு - இடபம், 201, 211.
ஏனம் - பன்றி, 279.
ஏனல் - தினை, 23.
ஐம்பால் - கூந்தல், 16.
ஐம்புலன், 34.
ஐராவதம் - வெண்ணிறமானது, 156.
ஒசிதல் - வளைதல், சாய்தல், 176.
ஒட்டுதல் - பந்தயமாக வைத்தல், 211.
ஒளிக்கும் - ஒளி விளங்கச் செய்யும், 329.
ஒற்றை ஆழித்தேர் - சூரியன் தேர், 355.
ஓட்டை மனம், 63.
ஓடாத தானை, 20.
ஓதி - கூந்தல், 49, 54, 166, 308, 356.
ஓவுதல் - ஒழிதல், நீங்குதல், 10.
கங்குல் - இரவு, 117, 122.
கஞ்சம் - கைத்தாளம், நீரும் ஆம், 17.
கடம் - மதம், 229, 327.
கடல் இரவில் மிக ஒலிக்கும், 13.
கடாம் - மதம், 352.
கடாயானை - மதங்கொண்டயானை, 138.
கடாவடித்தல், 210.
கடி - மணம், 187.
கடு - விஷம், 178.
கண்ணகன் ஞாலம், 151.
கண்ணபிரான் பாண்டவர் தூதனுப்பச் சென்றது, 3, 6.
கண்ணி - ஒருவகை மாலை, 108, 252, 379.
கண்ணியது - கருதியது, 269.
கண்ணீர் மஞ்சனநீராதல், 242.
கண்ணீரால் கால் கழுவுதல், 221.
கண்ணுதல் - கருதுதல், 269.
கண்படுத்தல் - உறங்குதல், 332.
கணி - சோதிடன், 162.
கபோலம் - கன்னம், 110.
கயம் - குளம், 145.
கரவு - வஞ்சனை, 18.
கரி - சாட்சி, 109, யானை, 361.
கருப்புவில்லி - மன்மதன், 97.
கருவிக்கு நீங்காக் காரிருள், 117.
கருவுற்ற மகளிற் தோற்றம், 196.
கலிக்கு விட நாகம், 159.
கலி நளனுக்கு வரமளித்தது, 388.
கலி நளனைப் பிடிக்கப் பன்னிரண்டாண்டுகள் காத்திருந்தது, 195, 197.
கலியின் தமயன் துவாபரன், 198, 212.
கலுழ்தல் - அழுதல், 229, 288.
கவருடல் - சூதாடல், 12, 201, 205, 210.
கவிகை - குடை, 31, 36.
கழி - கடலிலிருந்து தரையுட் செல்லும் ஒடுக்கமான நீர்ப் பகுதி, 95, 142.
கழுது - பேய், 114, 122.
கழைக் கோதையர், 145.
களபம் - வாஸனைப் பூச்சு, 15, 385.
கற்பின் தாழ், 81.
கறை - குற்றம், 233.
கன்னி - புதுமை, 363.
கன்னிமாடம், 84.
கா - சோலை, 51, 187.
காசினி - பூமி, 123, 150.
காண்டாவனம், 9.
காதல் எனும் ஆறு, 166.
காந்தாரம் - ஒருபண், 54, 298.
காம்பு - மூங்கில், 292.

காமத்தழல், 85.
காமத்தைச் செம்மைக் குணமே தணிக்க வல்லது, 85.
காமநீர் ஆழி, 77.
காம நோய் கொண்டோர் குணம், 44.
காமர் - அழகு, 14, 136, 361.
காமன் தமயந்தியின் அந்தப்புர மகளிரிடம் தன் படைகற்றவன், [39.
கார் - மேகம், 359, 404.
கார்க்கோடகன், 327; கார்க்கோடகன். நளனுக்கு ஆடைகள் அளித்தது, 328.
கார்க்கோடகனை ஒரு முனிவர் சபித்தது, 320.
காரிகை - அழகிய பெண், 17, 164, 309.
கால் - காற்று, 53.
கால் புகுந்தது, 264.
காவி - நீலோற்பலம், 14, 185, 252.
காலுதல் - உமிழ்தல், 106.
கிள்ளை - கிளி, 247.
கிளை - சுற்றம், 28.
குடபால் வரை - அத்தகிரி, 96.
குண்டு - ஆழம், பள்ளம், 217, 279.
குணம் - கிழக்கு, 124.
குணவாயிற் குன்று - உதயகிரி, 124.
குதட்டுதல் - மெல்லுதல், 126.
குமுதம் - அல்லி, 123, 160.
குருகு - நீர்வாழ் பறவை, 135, 332, 333.
குருநாடன் - தருமன், 5.
குலதீபம், 71.
குலம் - கூட்டம், 26, உயர்வு, 68, 140, 347, 354.
குவளை - நீலோற்பலம், 22, 33, 80, 138, 169, 178, 217.
குழவி - சிறு குழந்தை, 196, 228.
குழாம் - கூட்டம், 27, 57.
குழியிற் படுகரி, 63.
குன்று நில மடந்தை கொங்கைக் கும், அதன்மேல் விளங்கும் அருவி மென் துகிலுக்கும், 134.
கூந்தலுக்குக் கழகு முதலியவற் றின ஓலை, 56, அறல், 284, இருள், 81; மழை, 145, 165, 167, 288, 309.
கூர் - மிகுதி, 111, 263, 268, 275, 321.
கூனிரும்பு - அரிவாள், 140.
கெட்ட சிறு மருங்குல், 66.
கெடுத்தல் - இழத்தல், 73.
கெண்டை - ஒருவகை மீன், 188
கெழுமுதல் - நிறைதல், முதிர் தல், 179.
கேழ் - ஒளி, 127.
கேள் - உறவு ஒற்றுமை, நட்பு, 269.
கேள்வன் - கணவன், 157.
கேளார் - பகைவர், 60,
கைதவம் - வஞ்சனை, 233.
கை புகுந்தது, 264.
கையறிகொள்ளல். 277.
கை யறு தல் - செயலற் றுப் போதல், 309.
கைவரை - யானை, 144.
கைவிடுதல் - விட்டு நீங்குதல், 312.
கொங்கு - மணம், 305, 377.
கொங்கைக்குச் செப்பு, 102.
கொடுங்கை - வளைந்த முன்கை, 174, 177.
கொதுகு - கொசுகு, 259.
கொழுநன் - கணவன், 179.
கொள்ளிக்கும் விள்ளாத கூர் இருள், 111.
கோ - அரசன், 27.
கோட்டுமண் கொள்ளல், 100.
கோடுதல் - கோணுதல், 17.

கோதை - பெண், 64, மாலை, 15, 123, 128, கூந்தல், 35, 54, 145.
கோல்வளை - அழகிய வளை, 72, 184.
கோலம் - பன்றி. 1, அழகு, 196, 276.
கோழிகூவப் பொழுது விடிதல், 280.
கோளரவு - கொடிய பாம்பு, கோளாகிய ராகு என்னும் அரவு, 104.
சங்கநிதி, 292.
சடைச் நெற்நெல், 67.
சந்தம் - அழகு, 229.
சந்திரன் சுவர்க்கி, 19, 57, 275, 292, 360.
சரிதம் - சரித்திரம், 389, 390.
சாகரம் - கடல், 14.
சாதுரங்கம் - நால்வகைச் சேனை, 215.
சாம்புதல் - ஒய்ந்தடங்குதல், 115.
சாலி - சம்பாப்பயிர், 137.
சிந்தாகுலம் - மனத்துயர், 303.
சிந்துரம் - சிவப்பு, 272.
சிலையுயர்த்தவன், சேரன், 134.
சிவபிரான் அரவை அணிந்தவர், 8.
சீதை இராமபிரானை மான் பிடித்து தரச் சொன்னது, 247.
சீலம் - ஒழுக்கம், 222.
சுணங்கு - தேமல், 132.
சுரம் - பாலைவனம், 245, 255, 367.
சுளிதல் - சினத்தல் , 374.
சூதக்கனி - மாம்பழம், 193.
சூதம் - மாமரம், 193, 218.
சூதரங்கு - சூதாடுமிடம், 215.
சூதாட்டத்தால் வரும் தீமைகள், 204—208.
சூதினால், அழியாப் பெருஞ் செல்வமும் அழியும், 11.
சூர் - கொடுமை, 133.
சூரியாத்தமயம், 95.
சூரியனைக்கண்ட அல்லி குவியும், 160.
சூரியோதயம், 124, 160, 395.
செங்கண் மகரம், 144.
செஞ்சுடர் - சூரியன், 267.
செஞ்சுடரில் வந்த கருஞ்சுடர், 267.
செண்டு - ஓர் ஆயுதம், 133.
செம்மாத்தல் - களிப்பின் மிகல், 153.
செம்மை நினையாமை பூண்டார் நெறி, 205.
செய் - வயல், 395.
செய்குன்று, 195.
செய்ய கமலம் - செந்தாமரை, 30.
செவ்வழி - ஒருபண், 113, 215.
செறு - வயல், 166, 191.
சென்னி - தலை, உச்சி. 132.
சேமம் - நலம், 13.
சேய் - அரசன், தலைவன், 126, 133, 141, 364.
சேல் - ஒருவகைச் சிறுமீன், 144.
சேவல் - ஆண் பறவை, 43.
சேனைக்குக் கடல், 67.
சோலைக்கு இருள், 176.
ஞாலம் - புவி, 5, 48, 151, 154, 222, 245.
தண்டுதல் - தடை படுதல், 225.
தந்து - நூல், 2.
தமயந்தி அழகு சுமந்து இளைத்தவள், 71.
அன்னத்தை நடையால் வென்றவள், 38.
ஒடுங்கிய இடையாள், 41, நெஞ்சு தடவும் நெடுங்கண்ணாள், 82, பூணுக்கு அழகளிப்பவள், 148; வண்டு பழகுங் கூந்தலாள், 71.
தமயந்திக்கு அன்னம், 129, கொம்பு, 33,

கோதை சுமந்த கொடி, 54 ;
திருமகள், 150,
பொற்பாவை, 129 ;
பொன், 151, 316 ;
விளக்கு, 71, 194, 293 ;
கடல் பெருத அமுதம் போன்றவள், 154 ;
கலியைச் சபித்தது, 253 ;
காமன் திருவுக்குக் காப்பு, 71.
சொற்கிள்ளை வாயாள், 247,
தோளுக்கு மூங்கில், 31 ;
நடையில் அன்னம் போன்றவள், 43 ;
பூணுக்கு அழகளிப்பவள், 148;
பிடி நடையாள், 398 ;
முகத்திற்குச் சந்திரன், 156, 241 ;
தமயந்தியிடம் அன்னங்கள் நடை கற்றது, 39 ; அன்னம் நள னைச் சிறப்பித்துக் கூறியவை, 47, 48.
பெண்மை இருந்து அரசாள்வது, 34 ;
தமயந்தியின் இடைக்குத் துடி, 161.
தமயந்தியின் அழகை அணிகள் மறைத்தது, 161.
உருவத்திற்கு மின்னல், 279 ;
கண்ணுக்கு கெண்டை அல்லது கயல், 26, 167, 249, 259 ; வேல், 152, 287 ;
கூந்தலுக்கு இருள், 119, மழை, 165, 192, 279, 288 ;
சொல்லுக்கு யாழ் ஓசை, 94;
நுதலுக்கு இந்து, 37, 294;
முகத்திற்குச் சந்திரன், 34 ;
மொழிக்குத் தேன், 37 ;
விழிக்குக் கடல், 282 ;
தமயந்தியைத் தவஞ்செய்வார்க்கு ஒப்பிட்டது, 110.
தமர் - உறவினர், 315,
தமியன் - துணையின்றித் தனியானவன், 8.
தரளம் - முத்து, 88, 118, 188.
தருமன் திருமாலை ஏவல் கொண்டது, 6 ; உயர் திருவிலும் துயர் வாழ்விலும் ஒத்தமன முடையவன், 7 ; நீது ஒழியப் பார் காத்தவன், 10 ; மானிடரிலும் தேவரிலும் வாக்குநேர் இல்லாதவன், 8.
தவளம் - வெண்மை, 169.
தவிசு - பீடம், 118.
தழலிற் படுதளிர், 63.
தளவு - முல்லை, 23.
தளை - கட்டு, 14.
தறி - கணமரம், 83.
தறுகண் - அஞ்சாமை, 2.
தாது - மகரந்தம், 21, 201, 391.
தாமம் - மாலை, 70, 109, 231, 265, 308, 345.
தாமரை மலர்க்கு நெருப்பும் அதன்மேல் சுற்றும் வண்டுக்குப் புகையும், 141.
தாமரையாள் - திருமகள், 19.
தாயம் - உரிமைப் பொருள், 382.
தாழ்வரை - மலை யடிவாரம், 23.
தான்றி - ஒருவகை மரம், 358.
தானவர் - அசுரர், 394.
தானை - ஆடை 274, சேனை, 3, 5, 6, 8, 20, 398, 401.
திசை முகந்த தெரு, 79.
திமிர்தல் - பூசுதல், 15.
திரு - சங்கநிதி, 28.
திருந்தார் - பகைவர், 61.
திருமகள் செந்தாமரையில் வசிப்பவள், 30.
திருமணி - சிந்தாமணி, 68.
திருமால் ஆழியிற்றுயில்வது, 400.
உலகளந்தது, 383 ;
கசேந்திரனுக்கு அருள்செய்தது, 1, 2 ; தூணில் தோன்றியது, 1.
நரசிங்காவதாரம், எடுத்தது, 1.

பன்றி வடிவெடுத்தது, 1.
பிரகலாதனுக்கு அருள்புரிந்தது, 1.
வராகாவதாரம் எடுத்தது, 1.
வேதத்திற்கு முன்னனவள், 1.
துகள் - தூசி, பொடி, 24.
திறம்புதல் - மாறுதல், 222.
துடி - உடுக்கை, 112, 161.
தும்பி - வண்டு, 86, 337.
துரங்கம் - குதிரை, 215.
துவர் - பவழம், 289.
துழாய் - துளசி, 247.
துன்னர் - பகைவர், 132.
தூங்குதல்-அடர்ந்திருத்தல், 24.
தூறு - புதர், 295.
தெய்வங் கெடுத்தாற் செயலில்லை, 254.
தெய்வத் தரு - கற்பகம், 68.
தெய்வமலர் - தாமரை மலர், 190.
தெரியல் - மாலை, 73, 143. 397.
தெரிவை - பெண், 135.
தெவ் - பகைவர், 144.
தென் - அழகு, தேன், 349.
தே - அழகு, தேன், 75, 387, 393 ; வண்டு, 89, 247.
தேவர்கள் அருச்சுனனுக்குத் தோற்றோடியது, 9.
தேவர்களுக்குக் கண் இமையா, அடிகள் தரையிற் படியா, மலர் மாலைகள் வாடா, 150.
தேறல் - தேன், 146, 204, 340, 363.
தேன் - வண்டு. 2.
தொடக்கு - கொக்கி அல்லது பூட்டுவாய், 139.
தொடை - மாலை (தொடுக்கப்பட்டது) 2, 86, 274.
தொண்டைக்கனி - ஆதொண்டை கனி, 188.
தோயல் - தோய்ந்த தயிர், 271.
தோன்றல் - தோன்றினவன், தலைவன், 3.
நகம் - மலை, 383.
நடுயாமத்தில் பேயும் துயிலும், 262.
நரகம் புகுவோர் இன்னர் என்பது, 253.
நளசரித்திரம் கலியால் விளைந்த கதை, 13,
நள தமயந்தியர் இருவருக்கும் உயிர் ஒன்றே, 252;
ஒப்பில்லாத் தலைவனும் தலைவியும் ஆவர், 162
நள தமயந்தியர்க்கு உயிர்போல் ஆடையும் ஒன்றானது, 252.
நளன அடையாத வாயிலான், 64,
அறம் தங்கிய குடையான், 21,
ஓடாத தானையான், 20;
கலியிடம் பெற்றவரம, 388,
கவிவாணர்களால் புகழ்பெற்றவன், 402;
கிளியும் பருந்தும் ஒரு கூட்டில்வாழ உலகாண்டவன் 21.
குடை பூவின் நிழல் போன்றது, 76 ;
குணச்சிறப்புகள், 47, 48.
குதிரைகளைச் செலுத்துவதில் வல்லவன், 323.
கொடைத் தொழிலான், 340, 367, 378, 399;
சரித்திரம் கலியால் விளைந்தது, 13;
சரித்திரம் தெய்வத்தன்மை வாய்ந்தது, 2.
கேட்டாரைக் கலி அடையான், 390.
திருமாலுக்கு ஒப்பானவன், 48, 400.
தேர்தொழிலில் மிக்கவன், 359, 366, 383 ;
பொன்னசல மார்பன், 198 ;
மீது தேவர்கள் பூமாரி பெய்து துதித்தது, 387.
மெய்மையன, 47 ;
வரவு கண்ட மாவிந்த நகர மகிழ்ச்சி, 403.

நளனுக்குத் தேவர்கள் வரம்ருளியது, 91.
நளனைக் கலிபற்றியது, 199.
கலி நீங்கியது, 359.
நறவு - தேன் அல்லது கள், 193.
நறை - தேன், 186.
நாகம் - மலை, பாம்பு, யானை, 331.
நாகு - இளம்பசு, 153.
நாட்டம் - கண், 14.
நாணமே மகளிர் வேட்கையைத் தடுக்கும் தறி, 83.
நாணெடு நின்றழிதல், 118.
நாமம் - அச்சம், 13, 163.
நாரதர் தவசிகட் கரசு, 70;
பொய்யாத வாயினர், 70;
யாழின் சிறப்பு, 68.
நாற்குணம் - அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் மகளிர் குணங்கள், 34.
நாறுதல் - தோன்றுதல், 282.
நிடத நாடு உலகில் முன்வைக்கும் சிறப்புடையது, 14.
நித்திலம் - முத்து, 127.
நிலாவை நெருப்பு என்பது, 100.
நிறம் - மார்பு, 25, இயல்பு அல்லது தன்மை, 246.
நீர்மை - தன்மை, 392.
நீரைத் தம்பிக்கச்செய்தவர், 272.
நுடங்குதல் - சலித்தல், மடிந்து சாய்தல், 36, 45.
நுதி - நுனி, 33.
நூபுரம் - சதங்கை, 35.
நூல் - பூணூல், 11, 12, 347.
நெஞ்சு தடவும் நெடுங்கண், 82.
நோக்கு - கண், பார்வை, 184, 232.
பங்கி - ஆடவர் மயிர், 290.
பஞ்ச மகா பாவங்கள 205.
படர - ஒருவகை மரம். 332.
படாம் - திரை அல்லது போர்வை, 96.
படி - பந்தயப் பொருள், அளவு, 210.
படு கடல் - ஆழமான கடல், 256.
படுகர் - படுகை (போலி), 136.
பணி - பாம்பு, 374.
பணை - பருமை, 182, கிளை, 358.
பணையம் - பந்தயப் பொருள், 211, 213, 217, 397, 400.
பத்திரம் - இலை, 136.
பரிசனம் - ஏவல் செய்வோர், 261
பரிசு - விதம் அல்லது தன்மை, 131.
பருவரல் - துன்பம், 405.
பலகை - சூதாடும் பலகை, 213, 401.
பழனம் - வயல், 136.
பறி - மீன் பிடிக்கும் கூடை போன்ற ஒருவகை கருவி, 351
பன்னுதல் - புகழ்தல், 405,
பாண் - பாட்டு, 78.
பாண்டியன் மேருமலையைச் செண்டால் திரித்தது, 133.
பாவின்குழல் - நெசவுத்தறியில் குறுக்கே செல்லும் நூற்குழல், 76.
பாவு - நெசவில் நீண்ட நூல் பரப்பு, 76.
பாம்பு விஷத்தேரடு பிறப்பது, 159.
பாழி - பருமன், 116.
பானல் - குவளை, 336.
பானு - சூரியன், 256.
பிணை - பெண் விலங்கு, 128.
பிரிந்த காதலர்க்கு நிலா நெருப்புப் போன்றது, 100, 109.
பிரிந்தோர்க்குக் கடல் ஓசை துயர் தருவது, 106.
பிழைத்தல் - தவறுதல், 26, 253.
பீடு - பெருமை, 20.
புடைத்தல் - மேல் தோன்றியெழுதல், 112.
புண்டரிகம் - தாமரை, 141, 181.
புந்தி - மனம், புத்தி, 198.
புயல் - மேகம், 16.
புரந்தரன் - இந்திரன், 403.
புரவலன் - அரசன், 86, 306, 339.

புரைதல் - மறைதல், ஒத்தல், 183.
புரோகிதன், 341.
புல் - அற்பம், 176,
புலர்தல் - வாடுதல், 3, 104, 176, 230, 242 ; விடிதல், 123.
புலவி - ஊடல், 175, 189,
புள் - பறவை, 58, 95.
புற்கு - கபில நிறம், 98.
புனம் - காடு, 173.
புனற்கே புனல் கலந்தது 164.
பூசல், ஒலி, போர், 167.
பூசுரர் - அந்தணர், 123
பூணூலுக்கு மின், 12.
பூமடந்தை - திருமகள், 14.
பூவாளி - மலர் அம்பு, 37, 65, 93, 94, 113, 130.
பூவாளி வேந்தன் - மன்மதன், 37, 130.
பூவிந்தை - திருமகள், வெற்றித் திரு, 396.
பூவையர் - மகளிர், 171, 176.
பூழி - புழுதி, 263.
பெண்மை அரசாள்வது, 34.
பேடைமான், 238
பேய்க்குந் தோன்று இருள், 256.
பேயுந்துயிலும் யாமம், 262,
பைம் - புதுமை, அல்லது பசுமை, 173.
பைய - மெதுவாக, 95.
பொகுட்டு - தாமரைக்காய், 181
பொடி - நுண்மணல், 219.
பொதுமகளிர் உள்ளம் ஆழமானது, 111.
பொய்கை - தடாகம், நீர் நிலை, 25, 95, 129.
பொய்தல் - உட்டுளை, 180.
பொழில் - சோலை, 24.
பொன்னகரம் - அமராபதி, 403.
பொன்னுடு - சுவர்க்க நாடு, 79. 85.
பொன்னி - காவிரிநதி, 132.
போகட்ட - போட்ட, 117.
போழ்தல் - பிளத்தல், 133.
மக்கட் பேற்றின் சிறப்பு, 232, 233.
மக்களைப் பெறுதவர் வானுலகம் அடையார், 233.
மக்களை யில்லாதவர் என்னுடைய ரேனும இலரே ஆவர், 234.
மகரயாழ், 259.
மகரம் - சுறுமீன், 144.
மகளிர்க்குக் கற்பு தாழ் போன்றது, 81.
மகளிர் கண்ணுக்கு வேலும் வாளும், 34.
மகளிர் கைக்குக் காந்தள் மலர், 172, 182.
மகளிர் முகத்திற்குச் சந்திரன், 34.
மகிழ்தூங்கல் - மகிழ்ச்சியில் ஆழ்ந்திருத்தல், 168.
மஞ்சன நீர் - ஆடும் நீர், 242.
மஞ்சு - மேகம், 59.
மடைத்தொழில் - சமையல் தொழில், 338, 340, 378.
மணி நீர் - நீல மணி போலுந் தெளிந்த நீர், 143.
மதர் - செழிப்பு, 133.
மதவேள் - மன்மதன், 23.
மதியம் காண்ற வெயில், 106.
மந்தி - பெண் குரங்கு, 381.
மருங்கு - இடை, பக்கம், 18, 53, 66, 68, 127, 128.
மருங்குல் - இடை, 196.
மல்லல் - வளம், 153.
மல்லிகையை வெண்சங்காக வண்டு ஊதுவது, 1, 97.
மலங்குதல் - மயக்க முறுதல், 28.
மலர் வாளி ஐந்து, 163.
மழ - இளமை, 71, 153.
மள்ளுவநாடு, 360.
மறுகு - வீதி, 153,
மறையெல்லாம் தந்தான் - பிரமன், வியாத முனிவரும் ஆம், 5.

மன்மதன் கரும்பு வில்லியுடையவன், 97, 103 ; கொடியாடை கடல், 103, கோதண்டசாலை உலகம், 103, தேர் வீதி, வான், 103, படைவீடு, காணும் சோலையும், 103.
மலர்க்கணைகள் ஐந்து, 163.
மனுநூல் - மனுதரும சாத்திரம், 19.
மா - குதிரை, 65, 323, 359.
மாடு - பக்கம், 33.
மாண் - சிறப்பு, 29.
மாரன் - மன்மதன், 108.
மால் - மயக்கம், 357.
மாவிந்த நகர்ச்சிறப்பு, 15 - 19.
மாவிந்தம் நீடத நாட்டின் தலை நகர், 15.
மாற்றம் - சொல், உரை, 30, 237, 273, 373, 376.
மாற்றூர் - பகைவர், 180.
மான் - குதிரை, 338.
மான் - பெருமை தங்கிய, 15, 134.
மிடுக்கு - வலிமை, 121. [
மீ - மேல், 8.
முகில் - மேகம், 9.
முகிழ்தல் - குவிதல், 123.
மூகை - மொட்டு, அரும்பு, 14.
முந்நீர் - கடல், 113.
மும்மதம், 42.
முரணை நகர், சந்திரன் சுவர்க்கி ஆண்ட மள்ளுவ நாட்டின் தலைநகர், 19.
முரலுதல் (வண்டுகள்) ஓசை செய்தல், 89.
முருகு - தேன், 20, 337.
முளரி - தாமரை, 25.
முறி - துண்டு, 37.
முறுவல் - பல், 161, 186, 337.
முறுவலித்தல் - புன்சிரிப்புச் செய்தல், 99, 226.
முன்னீர் - கடல், 337.
மூரி - அடர்ந்த, 182, வலிமையுள்ள, 104, 258.
மூன்று கண்ணன், சிவபிரான், 178.
மெய்த்திரு - அழியாச் செல்வம், மோட்சமும் ஆம், 7.
மேதி - எருமை, 26, 157, 143, 201, 209, 277.
மேதினி - பூமி, 12.
மேருவைச் செண்டால் திரித்த பாண்டியன், 133.
மை - கருமை, 400, குற்றம், 233.
மைநாகமலை யொழிய மற்ற மலைகளின் சிறகுகளை இந்திரன் அறுத்தது, 78.
மோகத்துயர் அடங்காதது, 107.
வச்சிராயுதன் - இந்திரன். 89, 158.
வசை - குற்றம், 31, 79.
வஞ்சி - சிந்திற்கொடி, 29.
வட்டை - வழி, 300.
வடி - கூர்மை, 133, 189, 223 ; உரு, 223.
வடித்தல் - தெளிந்துரைத்தல், 208.
வதனமதி, 22, 34.
வயம் - வெற்றி, 87, 151, 152 ; வேட்கை, 127.
வரம் - உயர்வு, 366.
வரால் - ஒருவகை மீன், 209, 329, 351.
வல் - சூதாடு கருவி, 165.
வல்லி - கொடி, 242.
வள்ளம் - இண்ணம், 371.
வள்ளை - ஒரு கொடி, 135.
வளை - சங்கு, 87, 125, 250, 379.
வன்மம் - தீராப்பகை, 369.
வனம் - அழகு, 130.
வாகு - தோள், அழகு, 330.
வாமம் - அழகு, 41.
வார் - கச்சு, 45, 83, 386.
வாரணம் - யானை, 352.
வாவி - தடாகம், 51, 58, 146, 245.
வாவுதல் - தாவுதல், 280.

விஞ்சை - வித்தை, 84.
விஞ்சைக் கிறைவன் - வித்தியாதர்ரக் கரசன், 84.
விடை - எருது, 153, 202.
விதயம் - விதர்ப்பநாடு, 391.
விதியின் மன்னவன், 149.
விதி வலிது, 220.
விரவார் - பகைவர், 275.
விரை - தேன், மணம், 70, 244, 261.
விழுச்செல்வம் - பெருஞ்செல்வம், 11.
விழுது - மா, நெய் முதலியவற்றின் தொகுதி, 122.
விழைவு - ஆசை, 165.
வினையைக் கடப்பவர் இல்லை, 220.
வீரர், பகைவரை வென்ற தன் வாளை நோக்கி மகிழ்தல், 180.
ஏழ்த்தல் - ஆழப் பதியச்செய்தல், 81.
வெண்டலை - தலை மண்டை ஓடு, 217.
வெய்ய - கொடிய, 30.
வெய்யோன் - சூரியன், 24.
வெறி - வாசனை, 157.
வேட்ட - விரும்பிய, 284.
வேடன் அம்புபட்ட மயில், 278.
வேணி - சடை, 309.
வேதம், ஆசிரியர் சிடர் முறையில் ஓதி வருவது, 5.
வேய்தல் - புனைதல், 402.
வேரி - தேன், 2, 24, 192.
வேலுக்குக் காலன், 271.
வேலை - கடல், 154, 222, 282, 332, சமயம், 257.
வேழம் - யானை, 2.
வேனல் - வேனில், 23.
வை - கூர்மை, 156, 184, 193.
வையம் - உலகம், 95, 254.

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
20	11	கோதையர்தம்மன்	ஒப்பு. கோதையர் தம்மன், 353.
30	19	ஏறு	கலியாகிய ஏறு
106	9	ளிரிகின்ற	விரிகின்ற
182	32	பொருதும்	பொருது
189		1. கலிதொடர்	2. கலிதொடர்
193	1	1. கலிதொடர்	2. கலிதொடர்
,,	4	தங்கால்	தன்கால்
204	32	மெத்தனையுஞ்	னெத்தனையுஞ்
223	18	திருக்குறளும்	திருக்குறளும்
,,	,,	யுள்ளமையா	உள்ளமையா
286	30	இங்கு	இன்று

பிற வெளியீடுகள் :

ரூ. கை.

1. திருவாசக வியாக்கியானம் -- காழித் தாண்டவராயர் இயற்றிய திருவாசக அநுபூதி உரை; 1000 பக்கங்கள். 13—00

2. சூளாமணி—குறிப்புரையுடன்; 900 பக்கங்கள் .... 12—00

3. திருக்குற்றாலநாதருலா — நீரிகூடராசப்பக் கவிராயர் இயற்றியது .... 2—50

4. மகாபரத சூடாமணி என்னும்—பாவ, ராக, தாள, சிங்காராதி அபிநய தர்ப்பண விளக்கம்—1, 2, 3 அத்தியாயங்கள் .... 10—00

5. மகாபரத சூடாமணி என்னும் சங்கீதாதி ராக, மேள, லக்ஷணம் .... 5—62

6. அபிநயதர்ப்பணம்—வடமொழி நூலின் தமிழ் மொழி பெயர்ப்புச் செய்யுட்கள் உரையுடனும், வடமொழி மூலத்துடனும், படங்களுடனும் .... 5—50

7. பரதசேனாபதீயம் .... 1—25

8. சுவடிகளின் நாமாவளி .... 0—37

9. தக்கயாகப்பரணி 568 பக்கங்கள் .... 6—50

10. கம்பராமாயணம்—பல மூலச்சுவடிகளை ஆராய்ந்து, தேர்ந்தெடுக்கப்பெற்ற மூலபாடங்கள், பதவுரை, விளக்கவுரை, மேற்கோள் ஒப்புமைக்குறிப்புகள், பாடபேதக்குறிப்புகள், அரும்பத முதலியவற்றின் அகராதி, ஆராய்ச்சி நூன்முகம் முதலியவற்றுடன்:

ஆரணியகாண்டம் (1157 பக்கங்கள்) .... 12—00

சுந்தரகாண்டம் (1084 பக்கங்கள்) .... 12—00